
# 1982 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 37</u>

02.01.1982 உலக மாற்றத்திற்கான பொறுப்பு சங்கமயுக பிராமணர்களுடையது!

04.01.1982 சத்குருவின் முதன் முதல் வரதானம் 'மன்மனாபவ'!

06.01.1982 சங்கமயுக பிராமண வாழ்க்கையில் தூய்மையின் மகத்துவம்!

08.01.1982 லண்டன் குரூப்புடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு!

10.01.1982 சுய ராஜ்ய அதிகாரி ஆத்மாக்களின் ஆசனம் -கர்மாதீத் நிலை!

12.01.1982 உலகிற்கு நன்மை ஏற்படுவது ஆதாரமூர்த்தி ஆத்மாக்களை பொறுத்தது!

14.01.1982 கர்மேந்திரியங்களை வெல்பவர் தான் உலக ராஜ்ய அதிகாரி!

16.01.1982 என்னுடைய தந்தை வந்து விட்டார் என்ற இந்த ஓசை நாலா புறங்களிலும் சப்தமாக

ஒலிப்பதற்காக நாலாபுறங்களிலும் ஃபரிஷ்தா ரூபத்தில் பரவி விடுங்கள்!

18.01.1982 18-ஜனவரி பொறுப்பு கிரீடத்தின் முடிசூட்டு விழாவின் தினம்!

20.01.1982 அன்பின் உறவை சீராக வைத்துக் கொள்வதற்கான சகஜ முறை -பாடுவது மற்றும் ( நடனம் ) ஆடுவது!

22.01.1982 வாழ்த்துக்கள் வழங்குவதோடு, விடை கொடுத்தலையும் செய்யுங்கள்!

07.03.1982 எண்ணத்தில் பொறுமையாக இருப்பதினால் லாபம்!

09.03.1982 ஹோலி கொண்டாடுவதின் மற்றும் ஹோலி ஆக்குவதின் அலௌகீக (ஆன்மீக) முறை!

12.03.1982 சைத்தன்ய மலர்களில் வண்ணம், ரூபம், நறுமணத்தின் ஆதாரம்!

14.03.1982 பாப்தாதா மூலமாக பாரதம் மற்றும் வெளிநாடுகளின் செய்தி!

17.03.1982 சங்கமயுகத்தின் விசேஷ வரதானம் -அமரர் ஆகுக!

**19.03.1982 செய்யும் காரியம் ஆத்மாவை தரிசனம் செய்விக்கும் கண்ணாடி!**

**22.03.1982 அரசியல்துறை மற்றும் மதத்துறை அதிகாரி குழந்தைகளோடு பாப்தாதாவின் சந்திப்பு!**

**24.03.1982 பிராமண வாழ்க்கையின் விசேஷம் தூய்மை!**

**27.03.1982 விதை ரூப நிலை மற்றும் ஆன்மீக அனுபவங்கள்!**

**29.03.1982 உண்மையான வைஷ்ணவன் என்றால் எப்பொழுதும் குணத்தை கிரஹிப்பவர்!**

**01.04.1982 பாக்கியத்தின் ஆதாரம் தியாகம்!**

**03.04.1982 அனைத்தையும் விட முதன்மையான தியாகம் -தேக உணர்வின் தியாகம்!**

**06.04.1982 தாசன் மற்றும் அதிகாரி ஆத்மாக்களின் லட்சணம்!**

**08.04.1982 உலகத்து (லௌகீக) மற்றும் ஆன்மீக (அலௌகீக) சம்மந்தத்தின் தியாகம்!**

**11.04.1982 வீணானதை தியாகம் செய்து சக்திசாலி ஆகுங்கள்!**

**13.04.1982 தியாகி, மஹாதியாகியின் விளக்கம்!**

**16.04.1982 சங்கம யுகத்தின் சுயராஜ்ய தர்பார்தான் அனைத்தையும் விட உயர்ந்த தர்பார்!**

**18.04.1982 உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமண குலத்திற்கு மரியாதை வையுங்கள்!**

**26.04.1982 பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரி ஆவதற்கு அனைவருக்கும் சமமான அதிகாரம் இருக்கிறது!**

**28.04.1982 அனைத்தையும் தியாகம் செய்தவரின் அடையாளங்கள்!**

**30.04.1982 விஸ்தாரத்தை புள்ளியில் உள்ளடக்குங்கள்!**

**02.05.1982 விசேஷ சுய சரிதையை (வாழ்க்கை கதை) உருவாக்குவதற்கான ஆதாரம் -எப்பொழுதும் முன்னேறும் கலை!**

**13.06.1982 ஒன்றின் மந்திரம் நினைவு இருக்கிறது என்றால் அனைவரிலும் ஒருவர் தென்படுவார் (டீச்சர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு)!**

**25.12.1982 சட்டம், விதி மற்றும் வரதானம்!**

**28.12.1982 எப்பொழுதும் ஒரே ரசனையில், சம்பூர்ணமாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம் ஆகுங்கள்!**

**31.12.1982 பாப்தாதாவின் அனைத்து ஆன்மீக நண்பர்களுக்கு வாழ்த்துக்கள்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 02.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக மாற்றத்திற்கான பொறுப்பு சங்கமயுக பிராமணர்களுடையது!

பாப்தாதா தன்னுடைய பிராமண குல தீபங்களைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். சைத்தன்ய தீபங்களின் மாலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தீபமும் உலகை ஒளிமயமாக்கும் சைத்தன்ய தீபம். அனைத்து தீபங்களின் சம்மந்தம் நிரந்தரமாக ஒளிவீசிக் கொண்டிருக்கும் ஒருவருடன் இருக்கிறது. ஒவ்வொரு தீபத்தின் பிரகாசத்தின் மூலம் உலகின் இருள் அகன்று கொண்டே பிரகாசத்தின் ஜொலிட்பு வந்து கொண்டிருக்கிறது. ஒல்லொரு தீபத்தின் கிரணங்களும் நாலா றமும் பரவி உலகின் மேல் பிரகாச ஒளியின் குடைநிழலாக உருவாகியிருக்கிறது. தீபங்களின் அந்த மாதிரி காட்சியை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைவரும் கூட அனைத்து தீபங்களிலிருந்தும் கிடைத்திருக்கும் ஒளியின் குடைநிழலைப் பார்க்கிறீர்களா? லைட், மைட் சொரூபத்தை அனுபலம் செய்கிறீர்களா' சுயசொரூபத்திலும் நிலைத்திருந்து மேலும் கூடவே உலகின் சேவையும் செய்து கொண்டிருக்கிறீர்கள். சுயசொரூபம் மற்றும் சேவையின் சொரூபம் இரண்டையும் சேர்த்தே அணு பவம் செய்கிறீர்களா? இதே சொரூபத்தில் நிலைத்திருங்கள். இது எவ்வளவு சக்திசாலியான சொரூபம். உலகிலுள்ள ஆத்மாக்கள் பிரகாசமாக இருக்கும் தீபங்கள் உங்கள் பக்கம் எவ்வளவு அன்போடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் வெளிச்சத்திற்காகக் கூட எத்தனை ஆத்மாக்கள் இருளில் அலைந்து கொண்டே சிறிதளவு வெளிச்சத்திற்காக துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்களா? துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் தென்படுகிறார்களா? ஒருவேளை தீபங்கள் உங்களுடைய வெளிச்சம் அணைந்து அணைந்து எரிகிறது என்றால், சில நேரம் எரிகிறது, அடுத்த நேரம் அணைகிறது என்றால், அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களின் நிலைமை என்னவாகும்? எப்படி இங்கே இருள் சூழ்ந்து விட்டது என்றால்

வெளிச்சம் வர வேண்டும் என்று அனைவரும் விரும்புகிறோம் இருக்கிறது இல்லையா? அணைந்து அனைந்து எரியும் லைட்டை யாரும் விரும்பமாட்டார்கள். அப்படி எரிந்து கொண்டிருக்கும் தீபங்களாகிய உங்கள் ஒவ்வொருவரின் மேல் உலகின் இருளை அகற்றுவதற்கான பொறுப்பு இருக்கிறது. இந்த அளவு பெரிய பொறுப்பை அனுபவம் செய்கிறீர்களா?

நாடகத்தின் இரகசியத்தின் அனுசாரம் பிராமணர்கள் நீங்கள் விழித்துள்ளீர்கள் என்றால், அனைவரும் விழித்து விடுவார்கள். பிராமணன் விழித்தார் என்றால் பகல், வெளிச்சமாகி விடுகிறது. மேலும் பிராமணர்களின் ஜோதி அணைந்திருக்கிறது என்றால், உலகிலும் இருள். இரவாகி விடுகிறது. அப்படி நீங்கள் பகலை இரவாகவும், இரவைப் பகலாக்கவும் ஆக்கக்கூடிய சைத்தன்ய தீபங்கள். அந்த அளவு பொறுப்பு உங்கள் ஒவ்வொருவர் மீது உள்ளது. ஒவ்வொருவரும் தன்னுடைய பொறுப்பை உணர்ந்திருப்பதின் சார்ட்டை பாப்தாதா பார்க்கிறார். ஒவ்வொருவரும் தன்னை எவ்வளவு பொறுப்பாளர் என்று நினைக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறார். உலக மாற்றம் செய்வதின் பொறுப்பு கிரீடத்தை அணிந்திருக்கிராரா அல்லது இல்லையா? இதில் கூட வரிசைக்கிரமமாக கிரீடம் அணிந்தவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். தன்னுடைய கிரீடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? எப்பொழுதும் அணிகிறீர்களா அல்லது சில நேரம் மட்டும் அணிகிறீர்களா? அலட்சியமானவராகவோ இருப்பதில்லையே? பொறுப்பு பெரியவர்களுடையது, நமக்கென்ன என்று நினைக்கவில்லையே? உலகத்தின் கிரீடத்தை பெரியவர்களுக்கு மட்டும் கொடுக்கலாமா அல்லது நீங்களும் பெறுவீர்களா? நீங்கள் அனைவரும் உலகத்தின் இராஜ்ய அதிகாரி என்று நினைக்கிறீர்கள். ஒருவேளை யாராவது நீங்கள் பிரஜையாகவே ஆகி விடுங்கள் என்று கூறினார் என்றால், அதை விரும்புவீர்களா? அனைவரும் உலக மகாராஜா ஆவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா? அல்லது பிரஜை ஆவதும் விருப்பமா? என்ன ஆவீர்கள் உங்களில் யாராவது பிரஜை ஆவதற்குத் தயாரா நீங்கள் அனைவரும் லட்சுமி நாராயணன் ஆவதற்காகக் கையை உயர்த்துகிறீர்கள். இராஜ்யத்தின் கிரீடத்தை அணிய வேண்டும் என்றால், அந்த கிரீடத்தின் ஆதாரம் சேவையின் பொறுப்பு கிரீடத்தின் மேல் இருக்கிறது. எனவே என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்?

## 1982 அவ்யக்த முரளி

இப்பொழுதிலிருந்தே கிரீடம் அணிந்தவராக ஆவதின் சம்ஸ்காரத்தை தாரணை செய்ய வேண்டியதாக இருக்கும். எந்த கிரீடம்? பொறுப்பிற்கான கிரீடம்!

இன்று பாப்தாதா அனைவரின் கிரீடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்படியானால் இது எந்த சபை? கிரீடம் அணிந்திருப்பவர்களின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அனைவரும் இந்த முடிசூட்டும் நாளைக் கொண்டாடினீர்களா? கொண்டாடினீர்களா அல்லது இனி மேல் தான் கொண்டாட வேண்டுமா? எப்படி உங்களுடைய நினைவுச் சின்னமான ஸ்ரீகிருஷ்ணரின் படத்தில் குழந்தை பருவத்திலிருந்தே அவர் கிரீடம் அணிந்திருப்பவராக காண்பிக்கிறார்கள். பெரியவராக ஆன பிறகோ அவசியம் கிரீடம் அணிவார் ஆனால் குழந்தை பருவத்திலிருந்தே கிரீடம் அணிந்திருப்பதாகக் காண்பிக்கிறார்கள். உங்களுடைய படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? இரட்டை வெளிநாட்டினர் தங்களுடைய படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? இது யாருடைய படம்? பிரம்ம ஒருவருடைய ப அல்xலது உங்கள் அனைவரின் படமா? ஸ்ரீகிருஷ்ணரின் படத்தில் குழந்தை பருவத்திலிருந்தே கிரீடம் அணிந்திருப்பதாக காண்பிக்கிறார்கள். அதே போலவே சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்களும் உடலிலிருந்து இறந்து மறுபிறவி எடுத்திருக்கிறீர்கள், பிராமணன் ஆகியிருக்கிறீர்கள். மேலும் பொறுப்புக் கிரீடத்தை அணிந்திருக்கிறீர்கள். எனவே பிறந்ததிலிருந்தே கிரீடம் அணிந்திருப்பவராக ஆகிறீர்கள். எனவே நினைவு சின்னத்திலும் பிறந்ததிலிருந்தே கிரீடத்தைக் காண்பித்திருக்கிறார்களோ, அப்படி பிராமணன் ஆவது என்றால், கிரீடம் அணிவிக்கும் முடிசூட்டும் விழா கொண்டாடுவது அப்படி நீங்கள் அனைவரும் தன்னுடைய முடிசூட்டு விழாவைக் கொண்டாடி விட்டீர்கள் இல்லையா? இப்பொழுது நிரந்தரமாக இந்த உலக சேவையின் பொறுப்புக் கிரீடம் அணிந்தவராகி சேவையில் ஈடுபட்டு கொண்டிருக்கிறேனா என்று மட்டும் பார்க்க வேண்டும். என்ன தென்படுகிறது? கிரீடம் அணிந்திருப்பவராகவோ அனைவரும் தென்படுகிறார்கள் ஆனால் சிலருக்கு திட எண்ணம் என்ற ஃபிட்டிங் (பொருந்துவது சரியாக இருக்கிறது மேலும் சிலருடையது லூசாசு (தொய்வாக) இருக்கிறது. லுசாக இருக்கும் காரணத்தினால் கிரீடம் சில நேரம் இறங்கி விடுகிறது, மேலும் சில நேரம் அணிகிறார்கள். எனவே உறுதியான எண்ணம் மூலமாக இந்த கிரீடத்தை நிரந்தரமாக இருக்க

வையுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? பிரம்மாபாபா குழந்தைகளைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார். பிரம்பன பாபாவும் எப்பொழுதுமே பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறார். எந்தப் பாடலை பாடுகிறர்? ஆஹா என்னுடைய குழந்தைகளே ஆஹா: மேலும் குழந்தைகள் என்ன பாடல் பாடுகிறார்கள். (ஆஹா பாபா ஆஹா. இது சலபமாகப் பாட முடியும் பாடல். எனவே பாடுகிறார். அனைவரையும் விட அதிகமான குஷி யாருக்கு இருக்கிறது? மிக அதிகமான குஷி பிரம்மாபாபாவிற்கு இருக்கிறது. ஏன்? நீங்கள் அனைத்து குழந்தைகளும் தன்னை யார் என்று கூறுகிறீர்கள்? பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி என்று. சிவகுமார் மற்றும் சிவகுமாரி என்று கூறுவதில்லை. எனவே தந்தை பிரம்மாபாபா தன்னுடைய குழந்தைகளைப் பார்த்து மசிழ்ச்சி அடைகிறார். நீங்கள் பிரம்மாவின் வாய்வழி பிறந்த வஞ்சாவளிகள் இல்லையா? எனவே தன்னுடைய வம்சாவளியைப் பார்த்து பிரம்மாபாபா மகிழ்ச்சி அடைகிறார். அவ்யக்த ரூபமுடையவராக ஆனபோதிலும் மதுபனில் ஸ்தூல சரீரத்தின் அதாவது சைத்தனிய சாகார ரூபத்தின் அனுபவத்தை செய்வித்துக் கொண்டே இருக்கிறார். மதுபன்னில் வந்து பிராமண குழந்தைகள் பிரம்மாவிடமிருந்து சாகார ரூபத்தின், சாகார சரித்திரத்தின் அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? விசேஷாக சாகார ரூபத்தின் அனுபவம் செய்விப்பதற்கான வரதானம் மதுபன் பூமிக்கு இருக்கிறது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா. ஒளி வடிவமான உடல் உள்ள பிரம்மாலா அல்லது சாகாரத்தில் இருக்கிறாரா' என்ன அனுபவம் செய்கிறீர்கள். ஆன்மீக உரையாடல் செய்கிறீர்களா? நல்லது.

இன்று வதனத்தில் பாப்தாதாவிடையே இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் தங்களுடைய நெருங்கிய சம்மந்தத்தின், அன்பில், நிராகாரம் மற்றும் ஆகார ரூபமுடையவர்களை சாகார ரூபமுடையவராக ஆக்குவதில் மிகவும் திறமை நிறைந்தவர்கள் என்கிற ஆன்மீக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. குழந்தைகளின் அன்பின் மந்திரம் ஒளி வடிவத்தில் இருப்பவரையும் சாகாரம் ஆக்கி விடுகிறது. அந்த மாதிரி அன்பின் மந்திரவாதி குழந்தைகள். அன்பு, சொரூபத்தை மாற்றி விடுகிறது. அப்படி பிரம்மாபாபாவும் ஒவ்வொரு அன்பான குழந்தைகளோடு சாகார ரூபமுடையவராகி சந்திக்கிறார். அதாவது குழந்தைகளின் அன்பிற்கு பிரதிபலன் கொடுக்கிறார். அன்பின்

கயிறினால் பாப்தாதாவை எப்பொழுதும் உடன் கட்டிப்போட்டு விடுகிறார்கள். இந்த அன்பின் கயிறு யாருமே துண்டிக்க முடியாத அளவிற்கு உறுதியானது 21-ஜென்மங்களுக்கு பிரம்மாபாபாவுடன் விதவிதமான சம்மந்தத்தில் கட்டப்பட்டே இருப்பார்கள். விலகிச் செல்ல முடியாது. அந்த மாதிரி கயிறைக் கட்டியிருக்கிறீர்கள் தான் இல்லையா? இதைத் தான் அழியாத இனிமையான பந்தனம் என்று சொல்வது. 21-ஜென்மங்கள் வரை நிச்சயமானது அந்த மாதிரி பந்தனத்தை கட்டிப்போட்டு விட்டீர்களா? நீங்கள் மந்திரவாத குழந்தைகள் தான் இல்லையா? அப்படி இன்று வதனத்தில் என்ன உரையாடல் நடந்தது என்று கேட்டீர்களா? பிரம்மாபாபா ஒவ்வொரு குழந்தையின் விசேஷங்களினால் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் மணியை பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தையின் விசேஷம் மணிக்குச் சமமாக மின்னிக் கொண்டிருந்தது. நீங்களும் மின்னிக் கொண்டிருக்கும் உங்களுடைய நட்சத்திரத்தைப் பார்த்தீர்களா? நல்லது.

இரட்டை வெளிநாட்டு குழந்தைகளோடு சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். வானி (ஞான முரளி) கூற மாட்டோம். தந்தையின் அதிசயக் காரியமோ இருக்கவே இருக்கிறது ஆனால் குழந்தைகளின் காரியமும் குறைந்ததல்ல. நீங்கள் உங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள் என்று நினைக்கிறீர்கள், ஆனால் பாப்தாதாவும் அவர்களிடையே ஆன்மீக உரையாடல் செய்கிறார்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் உலக சேவை என்னும் கீரிடம் அணிந்திருக்கும், எப்பொழுதும் அன்பின் பந்தனத்தில் பாப்தாதாவை தன்னுடைய துணைவனாக ஆக்கக்கூடிய, 21-ஜென்மங்களுக்காக அழியாத சம்மந்தத்தில் ஈரக்கூடிய, அந்த மாதிரி எப்பொழுதும் ஒளிவீசிக் கொண்டிருக்கும் தீபங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 04.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்குருவின் முதன் முதல் வரதானம் 'மன்மனாபவ'!

இன்று ஞானக்கடல் தந்தை, ஞானக்கடலின் கரையில் ஞான இரத்தினங்களைப் பொறுக்கும் புனித அன்னப்பறவைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். ஒவ்வொரு புனித அன்னப்பறவையும் எவ்வளவு ஞான இரத்தினங்களை பொறுக்கி குஷியில் நடனமாடிக் கொண்டிருக்கிறார்கள், அந்த அன்னப்பறவைகளின் குஷியின் நடனத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆன்மீகக் குஷியின் ஆன்மீக நடனம் எவ்வளவு விருப்பமானது மற்றும் முழுக் கல்பத்திலும் புதுமையானது.

கடலின் வகை வகையான அலைகளைப் பார்த்து அன்னங்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள் அப்படி இன்று பாப்தாதா என்ன பார்ப்பதற்காக வந்திருக்கிறார்? அன்னப்பறவைகளின் நடனத்தைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். நடனம் ஆடுவதிலோ திறமைசாலிகள் தான் இல்லையா? ஒவ்வொரு மனதிலும் ஒலிக்கும் குஷியின் பாடலையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். பாடலின்றி நடனமும் இருப்பதில்லை தான் இல்லையா? அப்படி இசையும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மேலும் நடனமும் நடந்து கொண்டிருக்கிறது நீங்கள் அனைவரும் கூட குஷியின் பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இந்தப் பாடலை காதுகளால் கேட்க முடியாது. மனதின் பாடலை மனம் மூலமாகத் தான் கேட்க முடியும். மன்மனாபல என்ற நிலை ஆனது மற்றும் பாடல் பாடுவது, பாடல் கேட்பது தொடங்கியது. 'மன்மனாபவ' என்ற இந்த மகாமந்திரத்தின் வரம் பெற்றவர்களாகவே அனைவரும் ஆகி விட்டீர்கள். சக்குருவின் குழந்தையாக ஆனீர்கள் என்றால் சத்குரு மூலமாக முதன் முதல் வரதானம் என்ன கிடைத்தது? மன்மனாபவ. சத்குருவின் ரூபத்தில் வரம் பெற்ற குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் அனைவரும் மகா மந்திர சொரூபமான, மகாதானி, வரதானி, சத்குருவின்

குழந்தைகள் மாஸ்டர் சத்குரு ஆவீர்கள் அல்லது குருவின் பேரக்குழந்தைகள் என்று அப்படி சொன்னாலும் சரி தான். பேரக்குழந்தைகளுக்கு உரிமை அதிகமாக இருக்கிறது. பிரம்மாவின் குழந்தைகள் என்றால் பேரர்களாகவும் ஆகிறீர்கள் இல்லையா. குழந்தைகளாகவும் இருக்கிறீர்கள், பேரர்களாகவும் இருக்கிறீர்கள். எந்த அளவு தந்தையின் சம்மந்தமோ அந்த அளவு உங்களுடைய சம்மந்தமும் இருக்கிறது. அனைத்து சம்மந்தங்களில் உரிமை உள்ள ஆத்மாக்கள் நீங்கள்! கள்ளம் கபடமற்ற தந்தையிடமிருந்து ஏதாவது பெறுவதற்கான திறமை நிறைந்தவர்கள் நீங்கள். நல்ல வியாபாரியாகவும் இருக்கிறீர்கள். வியாபாரம் செய்து விட்டீர்கள் தான். இல்லையா. நானும் பசுவானோடு வியாபாரம் செய்வேன் என்று எப்பொழுதாவது நினைத்திருந்திருப்பீர்களா? மேலும் வியாபாரத்தில் என்ன கிடைத்தது? (முக்தி, ஜீவன்முக்தி). முக்தி, ஜீவன்முக்தி மட்டும் கிடைத்ததா? வியாபாரியின் கூடவே மந்திரவாதியாகவும் இருக்கிறீர்கள். வியாபாரம் செய்தீர்கள் என்றாலும் எவ்வளவு பெரிய வியாபாரம் செய்திருக்கிறீர்கள்! அதன் காரணமாக மற்ற விபாபாரம் செய்வதற்கே அவசியம் இல்லை. எந்தவொரு பொருளின் வியாபாரம் செய்யவில்லை ஆனால் பொருளைக் கொடுக்கும் வள்ளலையே வியாபாரம் செய்து விட்டீர்கள்! அதிலோ அனைத்தும் வந்து விட்டது இல்லையா! வள்ளலையே தன்னுடையவராக ஆக்கி விட்டீர்கள். நல்லது இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளோடு ஆன்மீக உரையாடல் செய்ய வேண்டும் தான் இல்லையா?

**தனித்தனி பார்ட்டிகளுடன் சந்திப்பு: நியூயார்க் (அமெரிக்கா):** நான் கோடியிலும் சிலரான, அந்த சிலரிலும் சிலரான ஆத்மா என்று தன்னை அனுபவம் செய்கிறீர்களா? வாழ்க்கை நாடகத்தில் ஆத்மாக்கள் நமக்கு தந்தையுடன் நேரடி சம்மந்தம் மற்றும் பாத்திரம் இருக்கிறது என்று அந்த அளவு போதை மற்றும் குஷி இருக்கிறதா? எப்பொழுதும் குஷியில் இருப்பதற்காக எத்தனை விஷயங்கள் தாரணை செய்திருக்கிறீர்கள்? பாப்தாதா கண்டெடுக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். எவ்வளவு காலத்திற்குப் பிறகு கிடைத்திருக்கிறீர்கள்? நினைவு வருகிறது தான் இல்லையா? உயர்ந்த ஆத்மாக்கள் நமக்கு உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையுடன் விசேஷ பாத்திரம் இருக்கிறது என்ற நினைவில் இருங்கள். பிறகு எப்படி நினைவு இருக்குமோ அப்படி நிலை இயல்பாகவே உருவாகி விடும். என்ன

கேட்கிறீர்களோ அதை உள்ளே நிரப்பிக் கொண்டே இருங்கள். எவ்வளவு உள்ளே நிரப்புவீர்களோ அந்த அளவு நடைமுறையில் சொரூபமாக ஆகிக் கொண்டே இருப்பீர்கள். ஒவ்வொரு குணத்தின் அனுபவம் இருக்க வேண்டும். ஒவ்வொரு குணத்தின் அனுபவம் எனக்கு எந்த அளவு இருக்கிறது என்ற இதை எப்பொழுதும் தன்னைத் தானே பாருங்கள். ஞானம் நிறைந்தவராக இருக்கிறீர்களா அல்லது அனுபவம் நிறைந்தவராக இருக்கிறீர்களா? இதை சோதனை செய்யுங்கள். ஏனென்றால் சங்கமயுகத்தில் தான் ஒவ்வொரு குணத்தின் அனுபவம் செய்ய முடியும். ஏதாவது குணத்தின் அனுபவம் குறைவாக இருக்கிறது என்றால், அதன் மீது கவனம் செலுத்தி அவசியம் அனுபவியாக ஆகுங்கள். எந்த அளவு அனுபவம் நிறைந்தவராக ஆவீர்களோ அந்த அளவு அஸ்திவாரம் உறுதியாக இருக்கும். மாயாவால் அசைக்க முடியாது. எந்த விதமான தடையோ, பிரச்சனையோ இந்த நேரம் ஒரு விளையாட்டுக்குச் சமமாக அனுபவம் ஆக வேண்டும். தாக்குதல் இல்லை, ஆனால் விளையாட்டு. விளையாட்டு என்று புரிந்து கொள்வதினால் மிகவும் குஷியோடு கடந்து விடுவீர்கள். மேலும் தாக்குதல் என்று புரிந்து கொள்வதினால் பயப்படவும் செய்வீர்கள் மற்றும் குழப்பத்திலும் வந்து விடுவீர்கள். நாடகத்தின் கதாபாத்திரமாக இருக்கும் காரணத்தினால் எந்தவொரு காட்சி எதிரில் வருகிறது என்றால் நாடகத்தின் கணக்குப்படி இவை அனைத்தும் காட்சிகள், என்கிற நினைவு இருக்கிறது என்றால் ஒரே சீரான நிலையில் இருப்பீர்கள். குழப்பம் ஏற்பட முடியாது எனவே இப்பொழுதிலிருந்தே இந்த மாற்றத்தைச் செய்து செல்லுங்கள். குழப்பத்தை இங்கேயே முடித்து விட்டுச் செல்லுங்கள். எப்பொழுதும் தன்னுடைய நெற்றியில் வெற்றித் திலகம் இடப்பட்டு இருக்கிறது என்று அனுபலம் செய்தீர்கள் என்றால். குழப்பம் முடிவடைந்து விடும். பாருங்கள் அமெரிக்கா உலகத்திலேயே உயர்ந்த தேசமாக இருக்கிறது என்றால். பிராமணர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருப்பார்கள். எப்படி தேசத்தின் மகிமை இருக்கிறதோ அதை விட பிராமண ஆத்மாக்களுக்கு மகிமை இருக்கிறது. எனவே நீங்கள் சேவையில் நம்பர் ஒன் ஆக வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் ஒருவேளை தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்காக லைட் ஹவுஸ் ஆகி விட்டீர்கள் என்றால் ஒயிட் வஹவுஸ் (அமெரிக்க ஜனாதிபதி மாளிகை) மற்றாம் லைட் ஸவுஸின் வேற்றுமை தெரிந்து விடும். அது விநாஷம் செய்விப்பது மற்றும் இது ஸ்தாபனை செய்வது இப்பொழுது அதிசயக் காரியம் செய்து காண்பியுங்கள். விசேஷ

ஆத்மாக்களையோ பொறுப்பாளர்களாக ஆக்கியிருக்கிறோம். இப்பொழுது இன்னும் தொடர்பு மூலம் சும்மந்தத்தில் கொண்டு வர வேண்டும். அவர்களுடைய வாய் மூலமாக தந்தையின் மகிமை முழு உலகத்தினருக்கும் செல்ல வேண்டும். அந்த மாதிரி நெருக்கமான சம்மந்தத்தில் கொண்டு வாருங்கள். பாருங்கள் எந்த எந்த குழந்தைகள் மற்ற மதங்களில் கலந்து விட்டார்களோ பாப்தாதா அவர்களையும் தேர்ந்தெடுத்திருக்கிறார். அப்படியானால் நீங்கள் விசேஷ பாக்கியம் நிறைந்தவர்களாக ஆனீர்கள் இல்லையா. நீங்கள் தந்தையை தேடினீர்கள் ஆனால் தந்தை உங்களைத் தேடி கண்டுபிடித்து விட்டார். நீங்கள் தேடினாலும் தேட முடியாது ஏனென்றால் அறிமுகமே இல்லாமல் இருந்தது தான் இல்லையா? எனவே தந்தை ஆத்மாக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்து தன்னுடைய தோட்டத்தின் மலராக ஆக்கி விட்டார். அப்படி நீங்கள் இப்பொழுது இறைவனின் பூந்தோட்டத்தின் ஆன்மீக ரோஜா மலர். அந்த மாதிரி பாக்கியம் நிறைந்தவன் என்று தன்னை நினைக்கிறீர்களா?

பாஷையைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், எப்படி அன்பான ஆத்மாக்கள் தன்னுடைய அதிகாரத்தை பெறுவதற்காக வந்து சேர்ந்து விட்டார்கள் என்று இதுவும் தந்தைக்கு குஷியாக இருக்கிறது. தன்னை உரிமையுள்ள ஆத்மா என்று நினைக்கிறீர்கள் இல்லையா? மிகவும் ஆர்வமுன்ன ஆத்மாக்கள் மீண்டும். தன்னுடைய உரிமையை பெறுவதற்காக மகான் தீர்த்த ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். நல்லது.

**வரதானம்: தன்னுடைய ஆன்மீக தெய்வீக உள்உணர்வு மூலமாக அனைத்து ஆத்மாக்கள் மேல் தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்தும் மாஸ்டர் ஞான சூரியன் ஆகுக!**

எப்படி ஏதாவது கவர்ந்திழுக்கும் பொருள் அக்கம் பக்கம் இருப்பவர்களை தன் பக்கம் கவர்கிறது, அனைவரின் கவனமும் அதன் மேல் செல்லும். அதே போல் எப்பொழுது உங்களுடைய உள்உணர்வு தெய்வீகமானதாக, ஆன்மீமானதாக இருக்குமோ அப்பொழுது உங்களுடைய பிரபாவம் அனேக ஆத்மாக்கள் மேல் இயல்பாகவே ஏற்படும். தெய்விக உள்உணர்வு என்றால் விலகிய மற்றும் அன்பாக இருக்கும் நிலை, அது இயல்பாகவே அனேசு ஆத்மாக்களை தன் பக்கம் கவர்ந்திழுக்கும். அந்த மாதிரி

தெய்வீக சக்திசாலியான ஆத்மாக்கள் மாஸ்டர் ஞான சூரியனாசி தன்னுடைய பிரகாசத்தை நாலாபுறங்களிலும் பரப்புகிறார்கள்.

**சுலோகன்: எப்பொழுதும் சுவமானம் (சுயமரியாதை) என்ற ஆசனத்தில் அமர்ந்திருந்தீர்கள் என்றால், அனைத்து சக்திகளும் உங்களுடைய கட்டளையை ஏற்று நடந்து கொண்டிருக்கும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 06.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுக பிராமண வாழ்க்கையில் தூய்மையின் மகத்துவம்!

இன்று பாப்தாதா விசேஷமாக குழந்தைகளின் தூய்மையின் ரேகையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சங்கமயுகத்தில் வரமளிக்கும் தந்தையிடமிருந்து அனைத்து குழந்தைகளுக்கும் விசேஷமாக இரண்டு வரதானம் கிடைக்கின்றன. ஒன்று சநஜயோகி ஆகுக, இன்னொன்று தூய்மை ஆகுக! இந்த இரண்டு வரதானங்களை ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் வாழ்க்கையில் முயற்சி செய்வதின் அனுசாரம் தாரணை செய்கிறார்கள் அதாவது கடைப்பிடிக்கிறார்கள். அந்த மாசிரியான தாரணை சொரூப ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு குழந்தையின் நெற்றி மற்றும் கண்கள் மூலமாக தூய்மையின் ஜொலிப்பு தென்பட்டுக் கொண்டிருக்கிறது. தூய்மை சங்கமயுகத்து பிராமணர்களின் மகான் வாழ்க்கையின் மகான் தன்மை ஆகும். தூய்மை பிராமண வாழ்க்கையின் சிரேஷ்ட அலங்காரம். எப்படி ஸ்தல் உடலில் முக்கியமாக சுவாசம் இருப்பது மிக அவசியம். சுவாசம் இல்லை என்றால் வாழ்க்கை இல்லை. அந்த மாதிரி பிராமண வாழ்க்கையின் சுவாசம் தூய்மை! 21-ஜென்மங்களின் பிராப்தியின் ஆதாரம் அதாவது அஸ்திவாரம் தூய்மை ஆத்மா அதாவது குழந்தைகள் மற்றும் தந்தை சந்திப்பிற்கான ஆதாரம் தூய்மையான புத்தி. அனைத்து சங்கமயுகத்தின் பிராப்திகளின் ஆதாரம் தூய்மை. தூய்மை பூஜைக்குரிய பதவியை அடைவதற்கான ஆதாரம். அந்த மாதிரி மகான் வரதானத்தை சுலபமாக அடைந்து விட்டீர்களா? வரதானத்தின் ரூபத்தில் அனுபவம் செய்கிறீர்களா அல்லது கடின முயற்சி செய்து பிராப்தி செய்கிறீர்களா? வரதானத்தில் கடின உழைப்பு இருப்பதில்லை ஆனால் வரதானத்தை எப்பொழுதம் வாழ்க்கையில் பிராப்சி செய்வதற்காக ஒரு விஷயத்தின் கவனம் மட்டும் வேண்டும். வரம் அளிக்கும் வள்ளல் மற்றும் வரம் பெறுபவர்கள் இருவர்களின் சம்மந்தம் நெருக்கமான மற்றும் அன்பின் ஆதாரத்தினால் நிரந்தரமாக வேண்டும். வரம் அளிக்கும் வள்ளல் மற்றும்

வரம் பெறும் ஆத்மாக்கள் இருவருமே எப்பொழுதும் இணைந்த ரூபத்தில் இருக்கிறார்கள் என்றால் தூய்மையின் குடை நிழல் இயல்பாகவே இருக்கும். எங்கு சர்வ சக்திவன் தந்தை இருக்கிறாரோ அங்கு தூய்மையின்மை கனவில் கூட வர முடியாது. எப்பொழுதும் தந்தை மற்றும் நீங்கள் ஜோடி ரூபத்தில் இருங்கள். தனியானவர் அல்ல, ஆனால் தம்பதியினர். தனியானவராக ஆகி விடுகிறீர்கள் என்றால், தூய்மையின் மாங்கல்யம் சென்று விடுகிறது. இல்லை என்றால் தூய்மையின் மாங்கல்யம் மற்றும் சிரேஷ்ட பாக்கியம் எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். அப்படி தந்தையை தன்னுடன் வைத்துக் கொள்வது என்றால், தன்னுடைய பாக்கியம் மற்றும் மாங்கல்யத்தை உடன் வைத்துக் கொள்வது. எனவே அனைவரும் தந்தையை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்வதில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறீர்கள் தான் இல்லையா?

விசேஷமாக இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு தனியாக வாழ்வது விருப்பம் இல்லை தான் இல்லையா? எப்பொழுதுமே வாழ்க்கைத் துணை வேண்டும் இல்லையா? எனவே இந்த மாதிரி வாழ்க்கைத் துணைவன் மற்றும் துணை முழுக் கல்பத்திலும் கிடைக்காது. எனவே தந்தையை வாழ்க்கைத் துணைவனாக ஆக்கியிருக்கிறீர்களா அதாவது தூய்மையை நிரந்தரமாகக் கடைபிடிக்கிறீர்களா? அந்த மாதிரி ஜோடியாக இருப்பவர்களுக்கு தூய்மையைக் கடைபிடிப்பது மிக சுலபம். தூய்மையே இயற்கையான வாழ்க்கை ஆகி விடும். தூய்மையாக நான் இருக்க வேண்டும். நான் தூய்மை ஆக வேண்டும். இந்தக் கேள்வியே இருக்காது. பிராமணர்களின் வாழ்க்கையே தூய்மை தான்! பிராமண வாழ்க்கையின் உயிர்தானமே தூய்மை தான். ஆகி அனாதி சொரூபமுமே தூய்மை. நான் ஆதி அனாதி தூய்மையான ஆத்மா என்ற நினைவு வந்து விடுகிறது என்றால், தூய்மையின் பலம் வந்து விடுகிறது. எனவே நினைவு சொரூபம். சக்தி சொரூப ஆத்மாக்கள் இயற்கையாகவே தூய்மையான சம்ஸ்காரம் உள்ளவர்கள். தீய சேர்க்கையின் சம்ஸ்காரம் தூய்மையின்பை. எனவே தன்னுடைய சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துவது சுலபமா அல்லது தீய சேர்க்கையின் சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துவது சுலபமா? பிராமண வாழ்க்கை என்றால் சகஜயோகி மற்றும் நிரந்தரமாக தூய்மையானவர். தூய்மை பிராமண வாழ்க்கையின் விசேஷ ஜென்மத்தின் சிறப்பாகும். தூய்மையான எண்ணம்

பிராமணர்களின் புத்திக்கான உணவு. தூய்மையான பார்வை பிராமணர்களின் கண்களுக்கான ஒளி. தூய்மையான காரியம் பிராமண வாழ்க்கையின் விசேஷ தொழில். தூய்மையான சம்மந்தம் மற்றும் தொடர்பு பிராமண வாழ்க்கையின் மரியாதை.

அப்படியானால் பிராமண வாழ்க்கையின் மகான் தன்மை என்னவானது என்று யோசித்துப் பாருங்கள். தூய்மை தான் இல்லையா. அந்த மாதிரி மஹானான ஒன்றைக் கடைப்பிடிப்பதில் கஷ்டப்படாதீர்கள். பிடிவாத மாகவும் கடைப்பிடிக்காதீர்கள். கஷ்டப்பட்டு செய்வது மற்றும் வலுக்கட்டாயமாக செய்வது நிரந்தரமாக இருக்க முடியாது, ஆனால் இந்த தூய்மையோ உங்கள் வாழ்க்கையின் வரதானம். இதில் கஷ்டப்படுவதும் வலுக்கட்டாயமாக செய்வதும் ஏன்" இது தன்னுடைய இயல்பான ஒன்றாகும். தன்னுடையதைக் கடைபிடிப்பதில் ஏன் கடின முயற்சி செய்ய வேண்டும். மற்றவர்களின் ஒன்றை கடைப்பிடிப்பதில் கடினம் இருக்கும். மற்றர்வகளின் ஒன்று தூய்மையின்மையே அன்றி தூய்மை கிடையாது. இராவணன் மாற்றான். நம்முடையவன் இல்லை. தந்தை நம்முடையவர், இராவணன் மாற்றான். தந்தையின் வரதானம் தூய்மை, இராவணனின் சாபம் தூய்மையின்மை எனவே மாற்றாள் இராவணனினுடையதை ஏன் கடைபிடிக்கிறீர்கள்? மாற்றான் பொருள் மிகவும் பிடித்திருக்கிறதா? தன்னுடையதின் மேல் போதை இருக்கும். எனவே எப்பொழுதும் சுயசொரூபம் தூய்மை, சுயதர்மம் பவித்திர தன்மை அதாவது ஆத்மாவின் முதல் தாரணை பவித்ரதா. சுயதேசம் பவித்ர தேசம் சுயராஜ்யம் பவித்ர ராஜ்யம். சுயத்தின் மினைவுச் சின்னம் பரம் பவித்ர பூஜைக்குரிய நிலை. காம இந்திரியங்களின் அனாதி சுபாவம் சுகர்மம் அதாவது நல்ல காரியம். இந்த ஒன்றை மட்டும் எப்பொழுதும் நினைவில் வைத்தீர்கள் என்றால் கடின உழைப்பு மற்றும் வலுக்கட்டாயத்திலிருந்து விடுபட்டு விடுவீர்கள். பாப்தாதாவால் குழந்தைகள் கஷ்டப்படுவதை பார்க்க முடியாது. எனவே நீங்கள் அனைத்து ஆத்மாக்களும் தூய்மையானவர்கள் தான். இந்த உங்களுடைய சுயமரியாதையில் நிலைத்திருந்து விடுங்கள். உங்களுடைய சுயமரியாதை என்ன? நான் பரம் பவித்ர ஆத்மா. எப்பொழுதும் தன்னுடைய இந்த சுவமானம் என்ற ஆகனத்தில் அமர்ந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். எனவே கலபமாகவே வரம் பெற்றவராக ஆகி விடுவீர்கள். இது சுலபமான ஆசனம். எனவே எப்பொழுதும் தூய்மையின் ஜொலிப்பு மற்றும் பொலிவில் இருங்கள்.

சவமானத்தின் (சுயமரியாதையின்) எதிரில் தேக அபிமானம் வர முடியாது புரிந்ததா?

இரட்டை வெளிநாட்டினரோ இதில் தேர்ச்சி அடைந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? நீங்கள் ஹடயோகி இல்லை தான் இல்லையா? கடினமாகச் செய்யும் யோகி இல்லை தான் இல்லையா? அன்பில் இருந்தீர்கள் என்றால், கடும் முயற்சி அகன்று விடும். அன்பில் ஐக்கியமாகி இருக்கும் ஆத்மாலாக ஆகுங்கள். எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, இது தான் இயற்கையான தூய்மை. அப்படி இந்தப் பாடலை பாடத் தெரியாதா? இந்தப் பாடலைப் பாடுவது என்பது சுலபமாக தூய்ணமயான ஆத்மா ஆவது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சுயத்தின் இருக்கையின் உரிமை உள்ள ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பிராமண வாழ்க்கையின் மகான் தன்மை மற்றும் விசேஷத்தை வாழ்க்கையில் தாரணை செய்யக்கூடிய ஆதி, அனாதி தூய்மையான ஆத்மாக்களுக்கு, சுய சொரூபம், சுயதர்மம், சுகர்மத்தில் நிலைத்திருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பரம் பவித்ர பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு, தூய்மையின் வரதானத்தைப் பெற்றிருக்கும் மகாள் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பிரான்ஸ், ப்ரேசில் மற்றும் அன்னிய சில இடங்களிலிருந்து வந்திருக்கும் வெளிநாட்டு குழந்தைகளோடு அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: 1) நீங்கள் அனைவரும் எப்பொழுதும் தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்களா?** எப்பொழுதும் சேவைக்களத்தில் தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று புரிந்து சேவை செய்தீர்கள் என்றால் சேவையில் வெற்றி நிச்சயிக்கப்பட்டது. ஏனென்றால், தற்சமயத்தின் சேவையில் வெற்றிக்கான விசேஷ சாதனம் உள்உணர்வு மூலமாக வாயுமண்டலத்தை உருவாக்குவது. இன்றைய நாட்களின் ஆத்மாக்களுக்கு தன்னுடைய உழைப்பு மூலர் முன்னேறிச் செல்வது கடினம். எனவே தன்னுடைய எண்ண அலைகள் மூலமாக வாயுமண்டலத்தை அந்த மாதிரி சக்திசாலி ஆக்குங்கள். அதன் காரணமாக ஆத்மாக்கள் இயல்பாகவே ஈர்க்கப்பட்டு வந்து விட வேண்டும்.

அப்படி சேவையின் வளர்ச்சிக்கான அஸ்திவாரம் இது. மற்றபடி இதன் கூடவே சேவைக்கான வேறு என்னென்ன சாதனங்கள் இருக்கின்றனவோ அதை நாலாபுறங்களிலும் செய்ய வேண்டும்.ஒரே பகுதியில் மட்டும் அதிகமான உழைப்பையும் நேரத்தையும் ஈடுபடுத்தாதீர்கள். மேலும் நாலாபுறங்களிலும் சேவையின் சாதனங்கள் மூலமாக சேவையை அதிகரியுங்கள். அப்பொழுது தான் அனைத்து பக்கங்களிலிருந்தும் வெளிப்பட்டிருக்கும் சைத்தன்ய மலர்களின் பூச்செண்டு தயாராகும்.

**2) அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்.** ஒவ்வொருவரும் ஆன்மீக ரோஜா மலர். ஆன்மீக ரோஜா மலரின் குரூப் என்றால் ஆன்மீக தந்தையின் நினைவில் அன்பில் ஐக்கியமாகி இருக்கும் குரூப். அனைவரின் முகத்தில் குஷியின் ஜொலிப்பு மின்னிக் கொண்டிருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு இரத்தினத்தின் மதிப்பை தெரிந்திருக்கிறார். ஒவ்வொரு இரத்தினமும் உலகில் விலைமதிக்க முடியாத இரத்தினம். எனவே பாப்தாதா அதே விசேஷத்தை பார்த்துக் கொண்டே ஒவ்வொரு இரத்தினத்தின் மதிப்பைப் பார்க்கிறார். ஒவ்வொரு இரத்தினமும் அனேகர்களுக்கு சேவை செய்வதற்கு பொறுப்பாளர் ஆகுபவர்கள். எப்பொழுதும் தன்னை வெற்றி இரத்தினம் என்று அனுபலம் செய்யுங்கள். எப்பொழுதும் தன்னுடைய நெற்றியில் வெற்றித் திலகம் இடப்பட்டு இருக்கட்டும். ஏனென்றால், எப்பொழுது நீங்கள் தந்தையின் குழந்தை ஆகிலிட்டீர்களோ அப்போது வெற்றி உங்களுடைய பிறப்புரிமை எனவே அதன் நினைவாகவும் வைஜெயந்தி (வெற்றி) மாலை வர்ணிக்கப்படுகிறது மற்றும் பூஜை செய்யப்படுகிறது. அனைவரும் வைஜெயந்தி மாலையின் மணிகள் தாள் இல்லையா? இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எனவே வாய்ப்பு இருக்கிறது நீங்கள் எந்த இடத்தைப் பிடிக்க வேண்டுமோ அதைச் செய்ய முடியும்.

**3) எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு குணம், ஒவ்வொரு சக்தியின் அனுபவம் நிறைந்தவர் என்று அனுபவம் செய்கிறீர்களா?** ஏனென்றால் சங்கமயுகத்தில் தான் அனைத்து அனுபவங்களும் நிறைந்தவராக ஆக முடியும். எது சங்கமயுகத்தின் விசேஷமாக இருக்கிறதோ, அதை அவசியம் அனுபவம் செய்ய வேண்டும் இல்லையா?

நீங்கள் அனைவரும் தன்னை அந்த மாதிரி அனுபலம் மிறைந்தவர் என்று மினைக்கிறீர்களா? கக்திகள் மற்றும் குணம் இரண்டுமே மிகப் பெரிய பொக்கிஷங்கள். அப்படியானால் எத்தனை பொக்சிஷங்களின் அதிபதியாக ஆகியிருக்கிறீர்கள்? பாப்தாதாவோ அனைத்து பொக்கிஷங்களையும் குழந்தைகளுக்குக் கொடுப்பதற் காகத் தான் வந்திருக்கிறார். எவ்வளவு விரும்புகிறீர்களோ அந்த அளவு எடுத்துக் கொள்ள முடியும். தந்தை கடல் இல்லையா? கடல் என்றால் அளவற்றது அளக்க முடியாது நீங்களும் மாஸ்டர் கடலாக ஆகியிருக்கிறீர்களா? வெளிநாட்டினருக்கு அனைவரையும் விட அதிக பாக்கியம். அவர்களுக்கு வீட்டில் அமர்ந்து கொண்டிருக்கும்போதே தந்தையின் அறிமுகம் கிடைத்து விட்டது. தன்னை அந்த அளவு பாக்கியம் நிறைந்தவர் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா" நீங்கள் மிகவும் ஆர்வம் நிறைந்த ஆத்மாக்கள், அன்பு நிறைந்த ஆத்மாக்கள், அன்பின் பிரத்யக்ஷக்ஷி சொரூபம் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் ஒவ்வொருவரும் தன்னை சூரியவம்சத்து ஆத்மா என்று நினைக்கிறீர்களா? முதல் இராஜ்யத்தில் வருவீர்களா அல்லது இரண்டாம் நம்பரின் இராஜ்யத்தில் வருவீர்களா? முதல் இராஜ்யத்தில் வருவதற்காக ஒரே ஒரு முயற்சி தாள் இருக்கிறது, அது எது? எப்பொழுதும் ஒருவரின் நினைவில் இருந்து ஒரே சீரான நிலையை உருவாக்கினீர்கள் என்றால் ஒன். ஒன் மற்றும் ஒன் ல் வந்து விடுவீர்கள். நல்லது.

**ஜப்பான் குரூப்போடு சந்திப்பு:** நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் இதயசிம்மாசனதாரி ஆத்மாக்கள். தன்னை இந்த அளவு சிரேஷ்ட ஆத்மா என்று நினைக்கிறீர்களா வகை வகையான மலர்களின் மலர்ச்செண்டு எவ்வளவு நன்றாக இருக்கிறது. நீங்கள் அந்த மலர்ச்செண்டில் எந்த இடத்தில் இருக்கிறீர்கள்? சிறு குழந்தைகள் கடவுளுக்கு சமமானவர்களாக இருப்பார்கள். குழந்தைகளை எவ்வளவு காலமாக நினைவு செய்கிறார்? பாப்தாதா ஜப்பானைச் சேர்ந்த குழந்தைகளை எவ்வளவு காலமாக, வெகு காலத்திற்கு முன்பிலிருந்தே குழந்தைகள் உங்களை நினைவு செய்தோம் மற்றும் இப்பொழுது நடைமுறையில் தந்தையின் வரதான பூமியில் நீங்கள் வந்து சேர்ந்து விட்டீர்கள். அந்த மாதிரி பாக்கியம் நிறைந்தவர் என்று தன்னை நினைக்கிறீர்களா? ஜப்பானின் விசேஷ அடையாளமாக எதைக் காண்பிக்கிறார்கள்?

ஒன்றோ கொடி இன்னொன்று விசிறி (காற்றிற்காக அனைவருக்கும் விசிறி கொடுக்கிறார்கள் பாப்தாதாவும் குழந்தைகளுக்கு பறந்து கொண்டே இருங்கள் என்று நினைவூட்டுகிறார். எனவே விசிறியைக் காண்பிக்கிறார்கள். முதன் முதலில் வெளிநாட்டு சேவையின் அஸ்திவாரமே ஜப்பான் தான். அப்படி மகத்துவமானதாக ஆகி விட்டது இல்லையா? பாப்தாதாவின் அழைப்பின் காரணமாக நீங்கள் இங்கே வந்து சேர்ந்திருக்கிறீர்கள். பாப்தாதா அழைத்தார் அதனால் தான் வந்திருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் அலங்கார பெட்டகத்தின் (ஷோ கேசின்) நல்ல அலங்கார பொருள் (ஷோ பீஸ் அனைத்து பிராமண பரிவாரமும் பொன்னான பொம்மைகள் உங்களைப் பார்த்து குஷி அடைகிறார்கள். குடும்பத்தினருக்கும் கண்டெடுக்கப் பட்டவர்கள் மற்றும் பாப்தாதாவிற்கும் கண்டெடுக்கப்பட்டவர்கள் என்று அந்த மாதிரி அனுபவம் செய்தீர்களா? இப்பொழுது ஜப்பானிலிருந்து அந்த மாதிரி ஏதாவது விரேஷ ஆத்மாவை உருவாக்குங்கள். அவர் ஒருவர் வருவதினால் அனேகர்களுக்கு செய்தி கிடைத்து விட வேண்டும். அங்கே வகை வகையான சேவை உருவாக முடியும். கொஞ்சம் உழைத்தீர்கள் என்றால் பலன் அதிகமாகக் கிடைக்கும். இதற்காக ஒன்று, ஸ்தானத்தின் சூழ்நிலையை மிக சக்தி நிறைந்ததாக ஆக்குங்கள். வருபவர்களுக்கு சைத்தன்ய கோவிலுக்கு சென்று கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரி ஆன்மீக நறுமணம் நிறைந்த சூழலாக இருக்க வேண்டும். அது தொலைதூரத்தில் இருந்தே அனைவரையும் ஈர்க்க வேண்டும். சூழ்நிலை ஆத்மாக்களை மிகவும் ஈர்க்க முடியும், நிலம் மிக நல்லது மேலும் பழமும் (பலனும்) அதிகம் உருவாக முடியும். சிறிதளவு உழைப்பும் மற்றும் அதற்கேற்ற வாயுமண்டலமும் வேண்டும் சேவை செய்வதற்கான எண்ணத்தை வைப்பீர்கள், உடன் வெற்றி உங்கள் எதிரில் வரும். வாயுமண்டலம் எப்பொழுது ஆன்மீகமாக ஆகி விடுகிறது என்றால் அனைத்து விஷயங்களும் தானாகவே சரியாகி விடும். அனைவரும் ஒற்றுமையாகவும் ஒரே சீராகவும் நடந்து கொள்பவராக ஆகி விடுவார்கள். பிறகு மாயாவும் வராது ஏனென்றால், போயுமண்டலம் சக்திசாலியாக இருக்கும். வாயுமண்டலத்தை சக்திசாலிபாக ஆக்குவதற்காக நினைவு செய்வதற்கான நிகழ்ச்சிகள் வையுங்கள். மேலும் முன்னேற்றும் அடைவதற்காக உங்களுக்குள் ஆன்மீக உரையாடலின் வகுப்புக்கள் வையுங்கள். அன்பு சந்திப்பு நிகழ்ச்சிகளை வையுங்கள். தாரணையின் வகுப்புக்கள் வைத்தீர்கள் என்றால் வெற்றி கிடைத்து விடும்.

**ஜெர்மனி குரூப்புடன் சந்திப்பு:** அனைவரின் நெற்றியில் என்ன மின்னிக் கொண்டிருக்கிறது? தன்னுடைய நெற்றியில் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தைப் பார்க்கிறீர்களா? பாப்தாதா அனைவரின் நெற்றியில் மின்னிக் கொண்டிருக்கும் மணியைப் பார்க்கிறார். எப்பொழுதும் தன்னை பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மா என்று நினைக்கிறீர்களா? ஒவ்வொரு நேரமும் எவ்வளவு வருமானத்தை சேமிப்பு செய்கிறீர்கள்? கணக்கு போட முடியுமா? முழுக் கல்பத்திலும் இந்த அளவு வருமாளம் செய்யும் மாதிரி வேறு யாராவது வியாபாரி இருக்க முடியுமா? நான் தான் ஒவ்வொரு கல்பத்திலும் அந்த மாதிரி சிரேஷ் ஆத்மாவாக ஆகியிருக்கிறேன் என்ற இந்த குஷி நிறைந்த நினைவு எப்பொழுதும் இருக்கிறதா? நான் அந்த அளவு மிகப் பெரிய வியாபாரி என்று எப்பொழுதுமே நினையுங்கள் மற்றும் அந்த அளவே சம்பாத்தியம் செய்வதில் பிஸியாக இருங்கள். எப்பொழுதும் பிஸியாக இருப்பதினால் எந்த விதத்திலும் மாயா தாக்குதல் செய்யாது என்றால் பிஸிபாசு இருந்தீர்கள் என்றால் பிஸியாக இருப்பதைப் பார்த்து மாயா திரும்பிச் சென்று விடும். தாக்குதல் செய்யாது. சுலபமாக மாயாவை வென்றவர் ஆவதற்கான வழி எப்பொழுதும் சம்பாத்தியம் செய்து கொண்டே மற்றும் செய்வித்துக் கொண்டே இருங்கள். மாயாவின் அனேக விதங்களைத் தெரிந்தவராக எப்படியெல்லாம் ஆகிக் கொண்டே இருப்பீர்களோ அதற்கேற்ப மாயா உங்களிடமிருந்து விலகிச் சென்று கொண்டே இருக்கும். இன்னொரு விஷயம் நீங்கள் ஒரு விநாடி கூட தனியாக இருக்கவில்லை, எப்பொழுதும் தந்தையின் துணையோடு இருந்தீர்கள் என்றால் தந்தை துணையாக இருப்பதைக் கண்டு மாயா வர முடியாது ஏனென்றால், முதலில் மாயா தந்தையிடமிருந்து பிரிக்கிறது. அப்பொழுது தான் வருகிறது. எப்பொழுது நீங்கள் தனியாக ஆவதேயில்லை என்றால் மாயை என்ன செய்யும்? நீங்கள் தந்தைக்கு மிகப் பிரியமானவர்கள் என்ற இந்த அனுபவமோ இருக்கிறது தான் இல்லையா" அப்படியானால் பிரியமான ஒன்றை எப்படி மறக்க முடியும்? எனவே மிகவும் அன்பானவர் யார் என்ற இந்த நினைவை எப்பொழுதும் வையுங்கள். எங்கே மனம் இருக்குமோ அங்கே உடலும், பணமும், செல்வமும் இயல்பாகவே இருக்கும். எனவே மன்மனாபவ என்ற மந்திரம் நினைவு இருக்கிறது தான் இல்லையா. எங்கெல்லாம் மனம் செல்கிறதோ முதலில் இதை விட சிறந்த, இதை விட சிரேஷ்டமான வேறு

ஏதாவது ஒன்று இருக்கிறதா அல்லது எங்கு மனம் செல்கிறதோ அது தான் சிரேஷ்டமானதா என்று சோதனை செய்யுங்கள். அந்த நேரமே சோதனை செய்தீர்கள் என்றால், சோதனை செய்வதினால் மாறி விடுவீர்கள். ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு எண்ணத்தை வைப்பதற்கு முன்பு சோதனை செய்யுங்கள். செய்த பிறகு அல்ல. முதலில் சோதனை பிறகு நடைமுறையில் செய்ய வேண்டும். நல்லது

**விடைபெறும் நேரத்தில் தீதி, தாதியுடன் சந்திப்பு:** நீங்களும் விழித்திருக்க வேண்டியதாக இருக்கிறது. முழு நாளும் கடுமையாக உழைக்கிறீர்கள். மேலும் இரவிலும் விழித்திருக்க வேண்டியதாக இருக்கிறது. பாப்தாதாவோ எப்பொழுதுமே குழந்தைகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். உங்களுடைய தைரியம் மற்றும் ஊக்கத்தின் மேல் தந்தையும் பலியாகி விடுகிறார். பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். மகிமை செய்தோம் என்றால் எவ்வளவு ஆகி விடும். எப்படி தந்தையின் மகிமையைப் பற்றி கடலை ணா ஆக்குங்கள்... என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி குழந்தைகளையும் எவ்வளவு மகிமை செய்வது. தந்தை குழந்தைகளின் மகிமையைப் பார்த்து எப்பொழுதும் அடிக்கடி பலியாகி விடுகிறார். ஒவ்வொரு குழந்தையும் அவரவர்களின் மேடையில் கதாநாயக பாத்திரம் ஏற்று செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு தந்தையின் குழந்தை உண்மையான கதாநாயகசு நடிகன் என்றால், தந்தைக்கு எவ்வளவு பெருமிதம் இருக்கும். முழுக் கல்பத்திலும் அந்த மாதிரி தந்தையும் இருக்க முடியாது என்றால், குழந்தைகளும் இருக்க முடியாது. ஒவ்வொருவரின் மகிமையின் பாடலை பாடத் தொடங்கினோம் என்றால், எவ்வளவு பெரிய பாடல்களின் மாலையாக ஆகி விடும். பிரம்மாபாபாவும் மற்றும் சிவபாபாவும் அவர்களிடையே மிகவும் உரையாடிக் கொள்கிறார்கள். பிஸிபாகவும் இருக்கிறார்கள் மற்றும் முழு நாளும் ஃப்ரீயாகவும் இருக்கிறார்கள். சுதந்திரமாகவும் இருக்கிறார்கள், மேலும் துணைவனும் இருக்கிறார். இணைந்தே இருக்கிறார்கள் என்றால் பிரிந்திருப்பதாக எப்படி தென்படும்? நீங்கள் தனியாக பிரிக்க முடியுமா? நீங்கள் பிரித்தாலும் அவர்கள் அவர்களிடையே கூடிக்கொள்வார்கள். எப்படி பாப்தாதாவிற்கு அவர்களுக்குள் இணைந்த ரூபத்தில் இருக்கிறர்கள் என்றால், அது உங்களுடையதும் தான் இல்லையா? நீங்களும் தந்தையிடமிருந்து பிரிய முடியாது.

**வரதானம்: சிந்தனை சக்தியின் மூலமாக ஒவ்வொரு ஞானத்துளியின் அனுபவி ஆகக்கூடிய எப்பொழுதும் சக்திசாலியான மாயாவால் தாக்க முடியாத, தடைகளால் தாக்க முடியாதவர் ஆகுக!**

எப்படி உடலின் சக்திக்காக ஜீரண சக்தி அசியமாக இருக்கிறதோ, அதே போல் ஆத்மாவை சக்திசாலியாக ஆக்குவதற்காக சிந்தனை சக்தி வேண்டியதாக இருக்கிறது. சிந்தனை சக்தி மூலமாக அனுபவ சொருடம் ஆகி விடுவது என்ற இது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய சக்தி. அந்த மாதிரி அனுபவம் நிறைந்தவர் ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய முடியாது. அங்கே இங்கே கேட்ட விஷயங்களினால் மனம் சஞ்சலம் ஆக முடியாது. அனுபவம் நிறைந்தவர் எப்பொழுதும் நிரம்பியவராக இருப்பார். அவர் எப்பொழுதும் சக்திசாலியாக, மாயாவால் தாக்க முடியாத, தடைகளால் தாக்க முடியாதவர் ஆகி விடுகிறார்,

**சுலோகன்: குஷியின் பொக்கிஷம் எப்பொழுதும் உடன் இருக்கிறது என்றால் மற்ற அனைத்து பொக்கிஷங்களும் இயல்பாகவே வந்து விடும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 08.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# லண்டன் குரூப்புடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு!

இன்று விசேஷமாக லண்டனைச் சேர்ந்த குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். பொதுவாக அனைவருமே பாப்தாதாவைப் பொருத்தவரை எப்பொழுதும் பிரியமானவர்கள் தான். அனைவருக்கும் சந்திப்பதற்கான வாய்ப்பு விசேஷமாகக் கிடைக்கிறது ஆனால் இன்று பிரத்யேகமாக லண்டனைச் சேர்ந்தவர்களைச் சந்திக்க வேண்டும். லண்டனைச் சேர்ந்த குழந்தைகள் சேவையில் உள்ளம் மற்றும் உயிர், அன்பு மற்றும் ஆர்வத்துடன் தங்களது சகயோகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். தன்னுடைய முன்னேறும் கலையில் அனைவருக்கும் நல்ல கவனம் இருக்கிறது. வரிசைக்கிரமமாகவோ இருக்கவே இருக்கிறார்கள், இருந்தும் முயற்சியின் வேகம் நன்றாக இருக்கிறது. (ஒரு பறவை பறந்து வந்து வகுப்பிற்குள் வந்து விட்டது). அனைவரும் பறவையைப் பார்த்து குஷி அடைகிறீர்கள். அது போலவே தன்னுடைய பறக்கும் கலையும் எவ்வளவு பிரியமானதாக இருக்கும். எப்பொழுது பறக்கிறீர்கள் என்றால், விடுபட்டிருக்கிறீர்கள், சுதந்திரமாக இருக்கிறீர்கள். மேலும் பறப்பதற்குப் பதிலாக கீழே வந்து விடுகிறீர்கள் என்றால், பந்தனத்தில் வந்து விடுகிறீர்கள். பறக்கும் கலை என்றால் பந்தனத்திலிருந்து விடுபட்டவர், யோக சொரூபமானவர். லண்டனைச் சேர்ந்தவர்கள் இதில் என்ன நினைக்கிறீர்கள். பறக்கும் கலை இருக்கிறது தான் இல்லையா? கீழே வருவதில்லையே! ஒருவேளை கீழே வருகிறீர்கள் என்றாலும், கீழே இருப்பவர்களை மேலே அழைத்துச் செல்வதற்காக வருகிறீர்கள், ஒரு காரணமுமின்றி வருவதில்லை. யார் கீழான நிலையில் இருக்கிறார்களோ அவர்களுக்கு தைரியம் மற்றும் உற்சாகத்தைக் கொடுத்து மேலே பறக்க வைப்பதற்காக சேவையின் காரணமாக கீழே வந்தீர்கள். பிறகு மேலே சென்று விட்டீர்கள் என்று அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? என்ன நினைக்கிறீர்கள்? லண்டனைச் சேர்ந்த குரூப்

எப்பொழுதும் உடல் மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உலகின் கவர்ச்சியிலிருந்து விலகிய மற்றும் எப்பொழுதும் தந்தையின் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். இதைத் தான் தாமரை மலருக்குச் சமம் என்று சொல்வது. சேவைக்காக இருந்து கொண்டும் விலகி இருப்பவர் மற்றும் அன்பானவர். அப்படி விலயிருக்கும் மற்றும் அன்பான குரூப் இது இல்லையா? லண்டனோடு அனைத்து வெளிநாட்டு சேவை நிலையங்களின் சம்மந்தம் இருக்கிறது. எனவே லண்டனைச் சேர்ந்தவர்கள் சேவை என்ற இந்த மரத்தின் அஸ்திவாரம் ஆகி விட்டார்கள். அஸ்திவாரம் பலஹீனமாக இருந்தது என்றால், முழு மரமும் பலஹீனம் ஆகி விடும். எனவே அஸ்திவாரத்தை சேவையின் பொறுப்பையும் சேர்த்து எப்பொழுதும் தன்னில் கவனம் வைக்க வேண்டும். பொதுவாகவே ஒவ்வொருவரின் மேல் தன்னுடைய மற்றும் உலக சேவையின் பொறுப்பு இருக்கிறது அனைவரும் பொறுப்பு என்ற கிரீடம் அணிந்தவர்கள் என்று அன்றைய நாளில் கூறியிருந்தோம். இருந்தும் இன்று லண்டனைச் சேர்ந்த குழந்தைகளுக்கு விசேஷமாக கவனம் கொடுக்கிறோம். இந்த பொறுப்பு கிரீடம் நிரந்தரமாக டபுள் லைட் ஆக்கக்கூடியது. இது சுமையுள்ள கிரீடம் இல்லை. அனைத்து விதமான சுமையையும் அகற்றக் கூடியது. எப்பொழுது உடல், மனம், பொருள், பணத்தால், எண்ணம், சொல், செயல் என்று அனைத்து ரீதியிலும் சேவாதாரி ஆகி, சேவையில் மிகவும் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்றால் சுலபமாகவே மாயாவை வென்றவர், உலகை வென்றவர் ஆகி விடுகிறீர்கள் என்ற இந்த அனுபவமும் உங்களிடம் இருக்கிறது. தேக உணர்வு இயல்பாகவே, சுலபமாகவே மறந்திருக்கும், கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருக்காது. இந்த அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? சேவையின் நேரத்தில் தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எதுவுமே பிடித்தமாக இருக்காது. குஷியில் நடனமாடிக் கொண்டே இருக்கிறீர்கள். அப்படி இந்த பொறுப்பின் கிரீடம் லேசாக இருக்கிறது தான் இல்லையா? அதாவது லேசாக ஆக்கக்கூடியது. எனவே பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் ஆன்மீக சேவாதாரி என்ற பட்டத்தை விசேஷமாக நினைவூட்டுகிறார். பாப்தாதாவும் ஆன்மீக சேவாதாரி ஆகி வருகிறார். எனவே எது தந்தையின் சொரூபமோ அதுவே குழந்தைகளின் சொரூபம். அனைத்து வெளிநாட்டு குழந்தைகளும் கிரீடம் அணிந்திருப்பவர்கள் தான் இல்லையா? தந்தைக்குச் சமமான நிரந்தர ஆன்மீக சேவாதாரி. கண் திறந்தது. சந்திப்பை செய்தீர்கள், மேலும்

சேவையின் சேத்திரத்திலும் வந்து சேர்ந்து விடுகிறீர்கள். காலை வணக்கத்திலிருந்து சேவை தொடங்குகிறது. மேலும் இரவு வணக்கம் வரை சேவையே சேவை தான்! எப்படி நிரந்தர யோகியோ அது போலவே நிரந்தர ஆன்மீக சேவாதாரி. உடலால் செய்யும் சேவை மூலமாகவும் ஆத்மாக்களுக்கு ஆன்மீக சக்தியை நிரப்புகிறீர்கள். ஏனென்றால், ஸ்தூல சேவை செய்வதின் கூடவே மனசேவையும் செய்கிறீர்கள். அப்படி காரியங்கள் மூலம் செய்யும் சேவையிலும் ஆன்மீக சேவை. உணவு சமைக்கிறீர்கள் என்றால், ஆத்மீக பலத்தை உணவில் நிரப்பி விடுகிறீர்கள். எனவே போஜனம் பிரம்மா போஜனம் ஆகி விடுகிறது. சுத்த அன்னம் ஆகி விடுகிறது. பிரசாதத்திற்குச் சமமாக ஆகி விடுகிறது. அப்படி ஸ்தூல சேவையிலும் ஆன்மீக சேவை நிரம்பியிருக்கிறது. அந்த மாதிரி நிரந்தர சேவாதாரி, நிரந்தர மாயாவை வென்றவர் ஆகி விடுகிறீர்கள். தடைகளை அழிப்பவர்கள் ஆகி விடுகிறீர்கள். அப்படியானால் லண்டனைச் சேர்ந்தவர்கள் எப்படிப்பட்டவர்கள்? நிரந்தர சேவாதாரி! லண்டனில் மாயா வருவதில்லையே? அல்லது மாயாவிற்கும் லண்டன் மிகவும் பிடித்திருக்கிறதா? நல்லது.

லண்டன்வாசிகளுக்கு இப்போது வேறு என்ன செய்ய விரும்புகிறீர்கள்? லண்டனில் நல்ல நல்ல ரத்தினங்கள் உள்ளனர். பல இடங்களுக்கு சென்று விட்டனர், அப்படியே வெளிநாடுகளில் பல சேவை மையங்களைத் திறக்கின்றனர். இப்போது எத்தனை சேவை மையங்கள் உள்ளன? (50). எனவே 50-இடங்களின் அடித்தளம் லண்டன், எனில் மரம் அழகாகி விட்டது, இல்லையா? 50-கிளைகள் கொண்ட மரம் எவ்வளவு அழகாக இருக்கும். எனவே, வெளிநாட்டின் மரமும் நன்றாக விரிவடைந்து பலனளிக்கும் மரமாக மாறியுள்ளது. லண்டன் மட்டுமல்ல, அனைத்து குழந்தைகளின் சேவையின் ஊக்கம் உற்சாகத்தைக் கண்டு பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். வெளிநாட்டில் ஈடுபாடு நன்றாக உள்ளது. மாயாவின் மிகச் சிறிய ரூபத்தைப் பார்த்து விரைவாக பீதி அடையக்கூடிய ஒரே ஒரு விஷயம் உள்ளது. எப்படி இந்தியாவில் பல பிராமணர்கள் எலிகளுக்கும் பயப்படுகிறார்கள், கரப்பான் பூச்சிகளுக்கும் பயப்படுகிறார்கள், எனில் வெளிநாட்டு குழந்தைகள் சிறியதை பெரியதாக நினைத்து பயப்படுகிறார்கள் ஆனால் எதுவுமே இல்லை. காகித சிங்கத்தை உண்மையான சிங்கம் என நினைக்கிறார்கள். எந்தளவு ஈடுபாடு உள்ளதோ அந்தளவு பயப்படும் சம்ஸ்காரம் கொஞ்சம்

வந்து விடுகிறது. எனவே வெளிநாட்டு குழந்தைகள் மாயாவுக்கு பயப்படக்கூடாது ஆனால் விளையாட வேண்டும். ஒரு காகித சிங்கத்துடன் விளையாட வேண்டுமா அல்லது பயப்பட வேண்டுமா? அதுவோ பொம்மை தானே. பொம்மையைப் பார்த்து பயப்படுபவரை என்னவென்று சொல்வது? நீங்கள் எடுக்கும் முயற்சியின்படி, அனைத்து இரட்டை வெளிநாட்டவர்களும் முதலிடத்தைப் பெற முடியும், ஏனென்றால் மற்ற மதங்களின் முத்திரையின் கீழ், நீங்கள் இரட்டைத் திரைக்குள் தந்தையை அடையாளம் கண்டு கொண்டு விட்டீர்கள். ஒன்று சாதாரண ரூபத்தின் திரை, மற்றொன்று மதத்தின் திரை. பாரதவாசிகளுக்கோ ஒரே ஒரு திரையை மட்டுமே தெரிந்து கொள்ள வேண்டும், ஆனால் வெளிநாட்டு குழந்தைகள் திரைக்குள் இரண்டையும் தெரிந்து உள்ளே செல்பவர்கள். தைரியசாலிகளாக பலர் உள்ளனர் மற்றும் அசம்பவத்தை சம்பவமாக்கி உள்ளனர். கிறிஸ்தவர்களும் அல்லது பிற மதத்தைச் சேர்ந்தவர்களும் நம்மால் எப்படி பிராமணர் ஆக முடியும் என்பதைப் புரிந்து கொள்ளாதது அசம்பவம். எனில் அசம்பவத்தை சம்பவமாக்கி இருக்கிறீர்கள் மற்றும் அறிவதிலும் புத்திசாலிகள், நம்புவதிலும் புத்திசாலிகள். இரண்டிலும் முதலிடத்தில் இருக்கிறீர்கள். போகப்போக ஒரு சுண்டெலி வந்தது எனில் பயப்பட்டு விடுகிறீர்கள். இது ஒரு சுலபமான மார்க்கம் ஆனால் உங்கள் வீண் எண்ணங்களை கலப்பதன் மூலம் சுலபம் கடினமாகி விடுகிறது. எனில் இதையும் தாண்டி விட வேண்டும். மாயாவை சோதிக்க உங்கள் கண்ணைக் கூர்மையாக்குங்கள். நீங்கள் தவறாகப் புரிந்து கொள்கிறீர்கள். காகிதத்தை உண்மை என்று கருதுவது தவறல்லவா?இல்லையெனில், இரட்டை வெளிநாட்டவர்களுக்கும் பல சிறப்புகள் உள்ளன ஆனால் இந்த ஒரே ஒரு பலவீனம் உள்ளது, அவ்வளவுதான். பின்னர் தன்னைப் பார்த்தே சிரிக்கிறீர்கள், இது காகித சிங்கம் தான், உண்மையானதல்ல என்று தெரிந்தவுடன் சிரிக்கிறீர்கள். சோதித்து, மாற்றிக் கொள்ளவும் செய்கிறீர்கள் ஆனால் அந்த நேரத்தில் பயப்படுவதால் கீழே வருகிறீர்கள் அல்லது நடுவில் நின்று விடுகிறீர்கள். பின்னர், மேலே செல்ல கடின முயற்சி செய்வதால், எளிதாக இருப்பதற்குப் பதிலாக நீங்கள் கஷ்டமாக அனுபவம் செய்கிறீர்கள். இப்படி எந்த கடின முயற்சியும் தேவையே இல்லை. தந்தையுடையவாராகி விட்டீர்கள், அதிகாரி ஆத்மாவாகி விட்டீர்கள், பொக்கிஷங்கள், வீடு, ராஜ்யத்தின் எஜமானன் ஆகி வீட்டீர்கள் எனில் வேறு என்ன தேவை? எனவே நீங்கள் இப்போது என்ன செய்ய வேண்டும்? பயப்படும்

சம்ஸ்காரத்தை இங்கேயே விட்டுவிட்டுச் செல்லுங்கள். புரிந்ததா! பாப்தாதாவும் விளையாட்டை பார்த்து புன்சிரித்துக் கொண்டே இருக்கின்றார். குழந்தைகள் மிக ஆழமாகவும் செல்கின்றனர் ஆனால் கூடவே சில இடங்களில் பயப்பட்டு விடுகின்றனர். லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட்'ன் சம்ஸ்காரங்களும் உள்ளன. முன்பு வெளிநாட்டினரிடம் சிக்கிக் கொள்வதற்கான சம்ஸ்காரங்கள் இருந்தது, இப்போது அவர்களிடம் வேகமாகச் செல்வதற்கான சம்ஸ்காரங்கள் உள்ளன. ஒன்றில் சிக்கிக் கொள்வதில்லை ஆனால் பலவற்றில் சிக்கிக் கொள்கிறார்கள். ஒரு வாழ்க்கையில் எத்தனை கூண்டுகள் உள்ளன? ஒரு கூண்டிலிருந்து வெளியே வருவது, இன்னொரு கூண்டில் சிக்கிக் கொள்வது, இதிலிருந்து வெளியே வருவது அடுத்ததில் சிக்கிக் கொள்வது. எனவே, சிக்கிக் கொள்ளும் சம்ஸ்காரம் எவ்வளவு இருந்ததோ, அவ்வளவு வேகமாகச் செல்வதற்கான சம்ஸ்காரங்களும் உள்ளன. ஒரே ஒரு விஷயம், சிறிய விஷயங்களைப் பெரிதாக ஆக்காதீர்கள். பெரியதை சிறியதாக ஆக்குங்கள். இப்படியும் நடக்குமா? இந்த கேள்வி கூடாது. என்ன நடந்தது? இது நடக்குமா? மாறாக, நடப்பதும் நன்மையே பயக்கும். கேள்விகளை முடித்து விட வேண்டும். முற்றுப்புள்ளி. புத்தியை இதில் அதிகம் செலுத்தாதீர்கள், இல்லையெனில் ஆற்றல் வீணாகி விடும் மேலும் உங்களை சக்திசாலியாக உணர முடியாது. கேள்விக்குறிகள் அதிகம் வருகிறது எனில் இப்போது மதுபன் பூமியில் கேள்விக்குறிகளை முடித்து விட்டு, முற்றுப்புள்ளி வைத்து விட்டுச் செல்லுங்கள். கேள்விக்குறி இடுவது கடினம், ஃபுல்ஸ்டாப் வைப்பது எளிது. எனவே சுலபமானதை விட்டுவிட்டு ஏன் கடினமானதை ஏற்றுக் கொள்கிறீர்கள்? அதில் ஆற்றல் வீணாகிறது மற்றும் முற்றுப்புள்ளியில் வாழ்க்கை (best) சிறப்பாகிறது. அங்கு 'வேஸ்ட்', இங்கு 'பெஸ்ட்'. எனவே என்ன செய்ய வேண்டும்? இப்போது வீணாக்கக் கூடாது. ஒவ்வொரு எண்ணமும் சிறந்தது, ஒவ்வொரு நொடியும் சிறந்தது. நல்லது, லண்டன் நிவாசிகளுடன் ஆன்மீக உரையாடல் நடந்தது.

லண்டன் உடைய அனைத்து செல்லக் குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் கோடானுகோடி அன்பும் நினைவும் உரித்தாகுக. நீங்கள் சாகாரத்தில் மதுபன் அடையவில்லை, ஆனால் பாப்தாதா சதா குழந்தைகளை தன் எதிரிலேயே பார்க்கிறார். ஒவ்வொருவரின் பெயராக கூறவில்லை எனினும் யாரெல்லாம் சேவை செய்யக்கூடிய குழந்தைகளோ, எல்லா

சகயோகி ஆத்மாக்களும், சதா கவலையற்ற ராஜாவாக இருக்க வேண்டும், ஏனெனில் கூட இருப்பவரோ சுயம் தந்தை! நல்லது, எல்லோருக்கும் அன்பான நினைவுகள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுய ராஜ்ய அதிகாரி ஆத்மாக்களின் ஆசனம் -கர்மாதீத் நிலை!

இன்று பாப்தாதா இராஜ்ய சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் சுயராஜ்ய அதிகாரி தன்னுடைய வரிசைக்கிரமமான கர்மாதீத் நிலையின் (முழுமையாக பாவங்கள் அழிந்த பந்தனமற்ற நிலை ஆசனத்தின் உரியவர்களாக இருக்கிறார்கள். தற்சமயத்து சங்கமயுகத்தின் சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்களின் ஆசனம் என்று கூறினாலும் அல்லது சிம்மாசனம் என்று கூறினாலும் அது கர்மாதீத் நிலை. கர்மாதீத் என்றால் காரியங்கள் செய்து கொண்டும் கர்மங்களின் (காரியங்களின்) பந்தனங்களிலிருந்து அதீத் (விடுபட்டிருப்பது). செய்யும் கர்மங்களின் வசமான நிலை இல்லை, ஆனால் கர்ம இந்திரியங்கள் மூலமாக ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே அதிகாரி நிலையின் போதையில் இருப்பவர். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் வரிசைக்கிரமமான இராஜ்ய அதிகாரத்தின் கணக்குப்படி வரிசைக்கிரமமான சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆசனமும் வரிசைக்கிரமமானது மற்றும் அதிகாரமும் வரிசைக்கிரமமானது. சிலர் சர்வ அதிகாரியாக இருக்கிறார்கள். மேலும் சிலர் அதிகாரியாக இருக்கிறார்கள். எப்படி எதிர்காலத்தில் உலக மகாராஜா மற்றும் மகாராஜா இடையே வித்தியாசம் இருக்கிறது இல்லையா? அதே போல் இங்கேயும் அனைத்து கர்மேந்திரியங்களின் அதிகாரி அதாவது அனைத்து கர்மங்களின் பந்தனத்திலிருந்து விடுபட்டவர். இதைத் தான் சர்வ அதிகாரி என்று கூறுவது. மேலும் மற்றவர்கள் அனைத்தும் நிறைந்தவர்கள் இல்லை ஆனால் வெறும் அதிகாரி. அப்படி இரண்டின் வரிசைக்கிரமமான எண்ணின் பிரகாரம் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்களின் தர்பாரைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு இராஜ்ய அதிகாரியின் நெற்றியிலும் மிக அழகான பல வர்ணங்கள் நிறைந்த மணிகள் மின்னிக் கொண்டிருக்கின்றன. இது தெய்வீக குணங்களின் மணிகள். எந்த அளவு

தெய்வீக குணங்கள் நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறார்களோ அந்த அளவே மணிகள் நெற்றியில் மின்னிக் கொண்டிருக்கின்றன. சிலருக்கு அதிகமாக இருக்கிறது, சிலருக்கு குறைவாக இருக்கிறது. ஒவ்வொருவரின் மின்னுதல் கூட அவரவருடையது. அந்த மாதிரி தன்னுடைய இராஜ்ய சபையின் இராஜ்ய அதிகாரியின் சித்திரம் ஞானத்தின் கண்ணாடியில் தென்படுகிறதா? அனைவரிடமும் கண்ணாடி இருக்கிறதா? கர்மாதீத் நிலையின் சித்திரத்தைப் பார்க்க முடியும் தான் இல்லையா? தன்னுடைய சித்திரத்தைப் பார்க்கிறீர்களா? எவ்வளவு அழகான இராஜ்ய சபை. கர்மாதீத் நிலையின் ஆசனம் எவ்வளவு சிரேஷ்ட ஆசனம். இதே நிலையின் அதிகாரி ஆத்மாக்கள் அதாவது சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மாக்கள் உலகின் எதிரில் இஷ்ட தேவதைகளின் ரூபத்தில் பிரத்யக்ஷம் ஆவார்கள். சுயராஜ்ய அதிகாரி சபை என்றால் இஷ்ட தேவதைகளின் சபை. நீங்கள் அனைவரும் தன்னை அந்த மாதிரி இஷ்ட தேவதை ஆத்மா என்று நினைக்கிறீர்களா? அந்த மாதிரி பரம் பவித்ர, அனைவருக்காகவும் இரக்க மனமுடைய, அனைவருக்காகவும் மாஸ்டர் வரமளிப்பவர், அனைவருக்காகவும் மாஸ்டர் ஆன்மீக அன்பின் கடல், அனைவருக்காகவும் சுபபாவனைகளின் கடல், அந்த மாதிரி பூஜைக்குரிய இஷ்ட தேவதை ஆத்மாக்கள் நீங்கள். அனைத்து பிராமண ஆத்மாக்களில் வரிசைக்கிரமமாக இந்த அனைத்து சம்ஸ்காரங்களும் நிரம்பியிருக்கின்றன ஆனால் வெளிப்படும் ரூபத்தில் இன்று வரை குறைவாக இருக்கிறது. இப்பொழுது இந்த இஷ்ட தேவதைகளின் சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துங்கள். வர்ணனை செய்வதின் கூடவே நினைவு சொரூபத்தில் இருப்பவரிலிருந்து சக்தி சொரூபமானவராகி மேடையில் வாருங்கள். இந்த வருடத்தில் உலகிலுள்ள அனைவரும் நான் யாரை தேடிக் கொண்டிருந்தேனோ, எந்த ஆத்மாக்களை நான் விரும்பினேனோ, எந்த சிரேஷ்ட ஆத்மாக்கள் மீது ஏதாவது கொஞ்சம் எதிர்பார்ப்பு வைத்திருந்தோமோ, அதே சிரேஷ்ட ஆத்மாக்கள் இவர்கள் தான். அனைவரது வாயிலிருந்தும் இது அவர்கள் தான் என்று வாயிலிருந்தும் மற்றும் மனதிலிருந்தும் இந்த ஓசை எழ வேண்டும். இவர்களை மட்டும் சந்தித்தோம் என்றால் தந்தையைச் சந்தித்தோம் என்று அனுபவம் செய்ய வேண்டும். எனக்கு என்னென்ன கிடைத்திருக்கிறதோ இவர்கள் மூலமாகத் தான் கிடைத்தது. இவர்கள் தான் மாஸ்டர், வழிகாட்டிகள், ஏஞ்சல்கள், தூதுவர்கள். இவர்கள் தான். இவர்கள் தான் மேலும் இவர்கள் தான் என்ற இந்த இடைவிடாத ஓசை

அனைவரது மனதையும் தொட வேண்டும். இவர்கள் தான் மேலும் அவர்களே தான்' என்ற இந்த இரண்டு வார்த்தைகளின் இடைவிடாத ஓசை ஒலிக்க வேண்டும். கிடைத்து விட்டார், கிடைத்து விட்டார்... என்ற இந்த குஷியின் கைதட்டல் ஒலிக்கட்டும். அந்த மாதிரி அனுபவம் செய்வியுங்கள். அந்த மாதிரி அனுபவம் செய்விப்பதற்காக விசேஷமாக அஷ்ட சக்தி சொரூபம் அலங்கரிக்கப்பட்ட சக்தி சொரூபம் வேண்டும் ஆனால் சக்தியின் சொரூபமும் தாயின் சொரூபத்தில் வேண்டும். இன்றைய நாட்களில் சக்தி சொரூபத்தினால் மட்டும் திருப்தி அடைய மாட்டார்கள் ஆனால் சக்திமா (சக்தித்தாய்!) யார் அன்பு மற்றும் பாலனை கொடுத்து ஒவ்வொரு தந்தையின் குழந்தையையும் குஷியின் ஊஞ்சலில் ஆட வைக்கிறாரோ அப்பொழுது தான் தந்தையின் ஆஸ்திக்கு உரியவர் ஆக முடியும். தந்தையோடு சந்திக்க வைப்பதற்கு தகுதியானவராக ஆக்குவதில் நீங்கள் பொறுப்பிலிருப்பவர்கள் சக்தியின் ரூபத்தில் அந்த மாதிரி தூய்மையான அன்பு மற்றும் தன்னுடைய பிராப்திகள் மூலமாக சிரேஷ்ட பாலனை கொடுங்கள், தகுதியானவர் ஆக்குங்கள் அதாவது யோகி ஆக்குங்கள். மாஸ்டர் படைப்பவர் ஆவதோ அனைவருக்கும் தெரியும். அற்ப காலத்து பிராப்தி செய்விக்கும் உலகின் பெயர் பெற்ற மகான் ஆத்மாக்கள், அவர்களும் மிகுந்த படைப்பை படைக்கிறார்கள், அன்பும் கொடுக்கிறார்கள் ஆனால் பாலனை கொடுக்க முடியாது. எனவே பின்பற்றி நடப்பவராக ஆகி விடுகிறார்கள் ஆனால் பாலனை மூலம் பெரியவராக்கி தந்தை யுடன் சந்திக்க வைப்பது அதாவது பாலனை மூலமாக தந்தையின் உரிமையுள்ள தகுதியான ஆத்மா ஆக்குவது என்ற இதைச் செய்ய முடியாது. எனவே பின்பற்றி நடப்பவர்களாகவே இருந்து விடுகிறார்கள், குழந்தை ஆவதில்லை. தந்தையின் ஆஸ்தியின் அதிகாரி ஆவதில்லை. அதே போல் பிராமண ஆத்மாக்கள் உங்களிலும் படைப்பையோ மிக விரைவில் படைத்து விடுகிறீர்கள் அதாவது பொறுப்பாளர் ஆகிறீர்கள் ஆனால் அன்பு மற்றும் பாலனை மூலமாக அந்த ஆத்மாக்களை அழியாத ஆஸ்தியின் உரியவராக ஆக்குவது என்ற இதில் மிகக் குறைந்த தகுதியான ஆத்மாக்களே இருக்கின்றார்கள் எப்படி உலகீய குடும்ப வாழ்க்கையில் தாய் குழந்தைகளை பாலனை மூலமாக சக்திசாலியாக ஆக்குகிறார். அதன் காரணமாக அவர் எந்த பிரச்சனையையும் எதிர்கொள்ள முடியும். எப்பொழுதும் ஆரோக்கியமாக மற்றும் செல்வம் நிறைந்தவராக இருக்க வேண்டும். அதே போல் நீங்கள் சிரேஷ்ட

ஆத்மாக்கள் ஜகத்மாதா ஆகி, ஓரிரு ஆத்மாவின் தாய் இல்லை, உலகிற்கே தாய் எல்லைக்கப்பாற்பட்ட தாயாகி, மனம் மூலம் அந்த மாதிரி சக்திசாலி ஆக்குங்கள். அதன் காரணமாக ஆத்மாக்கள் தன்னை தடைகளை அழிப்பவர். சக்தி நிரம்பிய ஆரோக்கியமானவர் மற்றும் செல்வம் நிறைந்தவர் என்று அனுபவம் செய்ய வேண்டும். இப்பொழுது அந்த மாதிரி பாலனைக்கு அவசியம் இருக்கிறது. அந்த மாதிரி பாலனை தருபவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். பரிவாரம் என்பதின் அர்த்தமே அன்பு மற்றும் பாலனையின் அனுபவம் செய்விப்பது. இதே பாலனையின் தாகம் உள்ள ஆத்மாக்கள் இருக்கிறார்கள். அப்படி இவ்வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா?

என்னுடைய நெருக்கமான உறவினர் எனக்கு கிடைத்து விட்டார் என்று அனைவரின் வாயிலிருந்து வெளியாக வேண்டும். முதலில் உறவின் அனுபவத்தை செய்வியுங்கள். பிறகு தொடர்பு ஏற்படுவது சுலபமாகி விடும். 'என்னுடையவர் எனக்கு கிடைத்து விட்டார்' என்றும் அந்த மாதிரியான அலையை நாலாபுறங்களிலும் பரப்பி விடுங்கள். அப்பொழுது தான் யாரை அடைய வேண்டுமோ அவரை அடைந்து விட்டோம் என்று வாயிலிருந்து வெளியாகும். எப்படி தந்தையை விதவிதமான உறவுகளினால் உரிமையுள்ள ஆத்மாக்கள் நீங்கள் அனுபவம் செய்கிறீர்களோ, அதே போன்று துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு என்னென்ன கிடைக்க வேண்டுமோ, என்னென்ன அடைய வேண்டுமோ அவற்றை இவர்கள் மூலமாகத் தான் அடைய முடியும், மேலும் கிடைக்கும் என்று அனுபவம் செய்ய வேண்டும். பிறகு விதவிதமான பெயரைக் கூறுவார்கள். அந்த மாதிரியான சூழ்நிலையை உருவாக்குங்கள். தாயும் தந்தையின் அறிமுகத்தை குழந்தைகளுக்கு அவரே கொடுக்கிறார். தாய் தான் குழந்தைகளை தந்தையோடு சந்திக்க வைக்கிறார். தன்னுடைய தொடர்பில் இருப்பவராக மட்டும் ஆக்காதீர்கள் ஆனால் தந்தையோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்குத் தகுதியானவர் ஆக்குங்கள் அம்மா அம்மா என்று கூறிக் கொண்டே இருக்கும் சின்ன குழந்தையாக மட்டும் ஆக்காதீர்கள் ஆனால் பாபா! பாபா! என்று கூற கற்றுக் கொடுங்கள். ஆஸ்திக்கு உரியவர் ஆக்குங்கள். புரிந்ததா!

எப்படி தந்தையைப் பற்றி 'மேரா பாபா' (என்னுடைய தந்தை) என்று அனைவரின் வாயிலிருந்து வெளியாகிறதோ, அதே போல் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்கள் ஒவ்வொருவருக்காக இவர் என்னுடைய தாய் என்ற இந்த பாவனை உணர்வு வரவேண்டும். அதனால் ஒவ்வொருவரும் இவர் என்னுடைய தாய் என்று புரிந்து கொள்ள வேண்டும். இது தான் எல்லைக்கப்பாற்பட்ட பாலனை. ஒவ்வொருவரிடமிருந்தும் என்னுடையவர் என்ற உணர்வு வெளியாகட்டும். ஒவ்வொருவரும் இவர் என்னுடைய நற்சிந்தனையாளர், சகயோகி, சேனையில் துணையாயிருப்பவர் என்று புரிந்து கொள்ள வேண்டும். இதைத் தான் தந்தைக்குச் சமமான நிலை என்று கூறுவது. இதைத் தான் கர்மாதீத் நிலையின் ஆசனதாரி என்று கூறுவது. சேவையின் காரியத்திலும் பந்தனத்தில் வராதீர்கள். என்னுடைய ஸ்தானம், என்னுடைய சேவை, என்னுடைய மாணவர்கள், என்னுடைய சகயோகி ஆத்மாக்கள் என்ற இவையும் சேவையில் கர்ம பந்தனம் ஆகும். இந்த கர்ம பந்தனத்திலிருந்தும் விடுபட்ட கர்மாதீத் நிலையில் இருக்க வேண்டும். இவ்வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? கர்மாதீத் ஆக வேண்டும். மேலும் 'இவர் அவரே தான், இவர் தான் அனைத்துமானவர் என்ற உணருதல் ஆத்மாக்களுக்குக் கொடுத்து அவர்களை அருகில் கொண்டு வர வேண்டும் புகலிடத்தில் கொண்டு வர வேண்டும். தனக்காகவும் கூறினோம், மேலும் சேவைக்காகவும் கூறினோம். நல்லது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணம் அனைவரின் மனதில் இருந்தது இல்லையா? எந்த அலையைப் பரப்ப வேண்டும். நல்லது.

அந்த மாதிரி சுயராஜ்ய அதிகாரி, கர்மாதீத் நிலையின் ஆசனதாரி, அனைவருக்கும் நெருக்கமான உறவின் அனுபவம் செய்விக்கும் எல்லைக்கப்பாற்பட்ட அன்பு நிறைந்த பாலனை கொடுக்கும் அப்படிப்பட்ட இஷ்ட தேவ ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

சக்தி சேனையைப் பார்த்து தந்தை மிக மகிழ்ச்சி அடைகிறார். சக்திகள் எப்பொழுதும் தந்தையின் துணைவர்கள், எனவே தான் சிவசக்தி என்ற வர்ணனையும் இருக்கிறது. சக்திகளுடன் தந்தையின் நினைவுச்சின்னமும் இருக்கிறது. எனவே இணைந்தவர்கள் ஆகி

விட்டார்கள் இல்லையா? சக்தி சிவனிடமிருந்து தனியாக இல்லை, சிவன் சக்திகளிடமிருந்து தனியாக இல்லை. அந்த மாதிரி இணைந்தவர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் குறைந்தவர்கள் இல்லை. உலகை வென்றவர்கள். ஒன்றும் முழு உலகத்தின் மேல் வெற்றி அடைகிறீர்கள். உலகின் மேல் இராஜ்யம் செய்ய வேண்டும் இல்லையா? அந்த சேனையில் சிறு சிறு படைகள் இருக்கும், இரண்டு படைகள், நான்கு படைகள் ஆனால் இங்கோ எல்லையற்ற நிலை. எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் சேனை மேலும் எல்லையற்றதின் மேல் வெற்றி அடைபவர்கள். ஒவ்வொரு குழந்தையும் எல்லைக்குட்பட்டது இல்லாது, எல்லைக்கப்பாற்பட்ட அதிபதிகள் என்று பாப்தாதாவிற்கும் குஷி ஏற்படுகிறது.

அனைத்து குழந்தைகளும் தந்தையின் வாய் தான் இல்லையா? தந்தையின் வாய் என்றால் வாய் மூலமாகத் தந்தையின் அறிமுகம் கொடுப்பவர். எனவே தான் கௌமுக்'ன் மகிமையும் இருக்கிறது. எப்பொழுதும் வாயிலிருந்து பாபா பாபா என்ற வார்த்தை வெளியாகிறது. அதனால் வாய்க்கும் மகத்துவம் ஆகி விட்டது இல்லையா? அனைத்து குழந்தைகளையும் தந்தையின் வீட்டின் மற்றும் தந்தையின் அலங்காரம் என்று பாப்தாதா கூறுகிறார். அப்படி தந்தையின் வீட்டின் அலங்காரமான நீங்கள் மற்றவர்களை அலங்காரம் செய்விப்பதற்காகச் செல்கிறீர்கள். எத்தனை பேர்களை அலங்காரம் செய்து அழைத்து வருவீர்கள்? ஒவ்வொருவருக்கும் தந்தையின் எதிரில் பூச்செண்டை கொண்டு வர வேண்டும். நீங்கள் அனைத்து இரத்தினங் களும் விலை மதிக்க முடியாதவர்கள். ஏனென்றால், தந்தையைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் தந்தையிடமிருந்து அனைத்தையும் அடைந்திருக்கிறீர்கள். அப்படி தன்னை எப்பொழுதும் இதே குஷியில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் பிறருக்கும் இதே குஷியைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். நல்லது.

சங்கமயுகமே நடப்பதற்கும் மற்றும் நடத்துவிப்பதற்குமான யுகம். எந்தவொரு விஷயத்திலும் நிற்கக் கூடாது. சென்று கொண்டே இருப்பதில் தனக்கும் மேலும் மற்றவர்களுக்கும் நன்மை இருக்கிறது. சங்கமயுகத்தில் பாப்தாதா எப்பொழுதும் உங்களுடன் துணையாக இருக்கிறார் ஏனென்றால் இப்பொழுது மட்டும் தான் தந்தை

குழந்தைகளின் எதிரில் ஆஜராகியிருக்கிறார். நினைவு செய்தீர்கள், மேலும் ஆஜராகி விட்டார். பார்த்தும் பார்க்காதீர்கள். கேட்டும் கேட்காதீர்கள். மேலும் தந்தை கூறுவதைக் கேட்டீர்கள் என்றால், சென்று கொண்டே இருப்பீர்கள். நல்லது.

**வரதானம்: பொறுப்பு உணர்வின் பயிற்சி மூலமாக தன்னுடைய மற்றும் அனைவரையும் முன்னேற்றம் செய்யக்கூடிய விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர் (நியாரா, பியாரா) ஆகுக!**

பொறுப்பாளர் (கருவி) ஆவதின் பங்கு எப்பொழுதும் விலகியிருப்பவர் மற்றும் அன்பானவராக ஆக்குகிறது. ஒருவேளை பொறுப்புணர்வின் பயிற்சி இயல்பானதாக மற்றும் சுலபமாக இருக்கிறது என்றால், எப்பொழுதும் தன்னுடைய முன்னேற்றம் மேலும் மற்றவர்களின் முன்னேற்றம் ஒவ்வொரு அடியிலும் நிரம்பியிருக்கிறது. அந்த ஆத்மாக்களின் காலடி தரையிலிருப்பதில்லை ஆனால் மேடையில் இருக்கும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கு உலகின் எதிரில் நான் தந்தைக்குச் சமமான ஓர் உதாரணம் என்பது எப்பொழுதும் நினைவு சொரூபத்தில் இருக்கிறது.

**சுலோகன்: சுகம் அளிக்கும் வள்ளலின் குழந்தைகள் எப்பொழுதும் சுகம் என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள், துக்க உணர்வில் வராதீர்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 12.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலகிற்கு நன்மை ஏற்படுவது ஆதாரமூர்த்தி ஆத்மாக்களை பொறுத்தது!

இன்று பாப்தாதா உலகின் ஆதாரமூர்த்தி ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மிக உன்னத (சர்வ சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் உலகின் ஆதாரமூர்த்திகள். சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுக்குத் தான் முன்னேறும் கலை மற்றும் பறக்கும் கலை இருக்கிறது என்பதினால் முழு உலகத்திற்கும் நன்மை செய்வதற்கான பொறுப்பாளர் ஆகி விடுகிறீர்கள். முக்தி மற்றும் ஜீவன்முக்தி அடைவதற்கான அனைத்து ஆத்மாக்களின் பல பிறவிகளின் ஆசைகள் தானகவே நிறைவேறி விடுகிறது. நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் முக்தி அதாவது தன்னுடைய வீட்டின் கதவுகளைத் திறப்பதற்குப் பொறுப்பாளர் ஆகி விடுகிறீர்கள் என்றால், அனைத்து ஆத்மாக்களுக்கும் இனிமையான இல்லத்தில் புகடலிம் கிடைத்து விடுகிறது. வெகு காலத்தின் துக்கம் மற்றும் அமைதியின்மை முடிவடைந்து விடுகிறது. ஏனென்றால், சாந்திதாமவாசிகள் ஆகி விடுகிறார்கள். ஜீவன்முக்தியின் ஆஸ்தியால் வஞ்சிக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு ஆஸ்தி பிராப்தி ஆகி விடுகிறது. இதற்கான பொறுப்பாளராக அதாவது ஆதாரமூர்த்தி சிரேஷ்ட ஆத்மாக்களாக தந்தை குழந்தைகள் உங்களைத் தான் ஆக்குகிறார். முதலில் குழந்தைகள் பின்பு தான் நாம் என்று எப்பொழுதும் பாப்தாதா கூறுகிறார். குழந்தைகள் முன்னால், தந்தை பின்னால். அதே மாதிரி தான் எப்பொழுதும் நடத்தி வந்திருக்கிறார். தன்னை அந்த மாதிரி உலகிற்கே ஆதாரமூர்த்தி நாம் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? விதையின் கூடவே மரத்தின் தண்டில் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆதாரமூர்த்திகள் நீங்கள் இருக்கிறீர்கள். அப்படி அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்களுடன் சந்திப்பை செய்வதற்காக பாப்தாதா வருகிறார். நீங்கள் அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்கள் உடலற்றவரையும், ஒளி வடிவ உடலில் இருப்பவரையும் உங்களுக்குச்

சமமாக பௌதீகருபத்தில் கொண்டு வந்து விடுகிறீர்கள். அப்படியானால் நீங்கள் எவ்வளவு சிரேஷ்டமானவர்கள்! அந்த மாதிரி தன்னைப் புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியமும் செய்கிறீர்களா? இந்த நேரத்தில் நினைவு சொரூபம் மூலம் நிரந்தரமாக சக்தி நிறைந்த சொரூபமாக ஆகியே விடும். இந்த ஒரு அட்டென்ஷன் (கவனம்) இயல்பாகவே எல்லைக்குட்பட்ட டென்ஷனை மன அழுத்தத்தை) அகற்றி விடுகிறது. இந்த அட்டென்ஷனின் எதிரில் எந்தவிதமான டென்ஷனும் அட்டென்ஷனில் மாற்றிவிடும். மேலும் இதே சுயமாற்றம் மூலம் உலக மாற்றம் சுலபமாக ஆகி விடும். இந்த அட்டென்ஷன் அந்த மாதிரி மந்திர காரியத்தை செய்யும். அதன் விளைவாக அனேக ஆத்மாக்களின் அனேக விதமான டென்ஷனை அழித்து தந்தையின் பக்கம் அட்டென்ஷனை ஈர்க்கும். எப்படி இன்றைய நாட்களில் அறிவியலின் அனேக விதமான சாதனங்கள் அந்த மாதிரி இருக்கின்றன. அவற்றில் பொத்தானை அழுத்தியவுடன் நாலாபுறங்களிலும் இருக்கும் குப்பை கூளங்கள், அசுத்த பொருட்களை தன் பக்கம் இழுத்து விடும். நாலாபுறங்களிலும் செல்ல வேண்டியது இருக்காது, ஆனால் சக்தி மூலமாக தானாகவே இழுக்கப்பட்டு விடுகின்றன. அந்த மாதிரி அமைதியின் சக்தி மூலமாக இந்த அட்டென்ஷனின் பல சொரூபம் மூலமாக அனேக ஆத்மாக்களின் டென்ஷனை அகற்றி விடுவீர்கள். அதாவது அவர்கள் நான் அனேக முயற்சி செய்தும் வெகுகாலமாக இந்த டென்ஷன் என்னை தொந்தரவு செய்து கொண்டிருந்தது. அது எப்படியோ முடிந்தே, ஆஹா! என்று அனுபவம் செய்வார்கள். யார் அகற்றினார். என்ற இந்த அனுபவம் மூலமாக சிவசக்தி இணைந்த ரூபத்தின் பக்கம் அட்டென்ஷன் செல்லும்,

அப்படி டென்ஷன் அட்டென்ஷனில் மாறி விடும் இல்லையா? இப்பொழுதோ 'நினைவு செய்யுங்கள் -நினைவு செய்யுங்கள் என்று அடிக்கடி கவனமூட்டுகிறீர்கள் ஆனால் எப்பொழுது ஆதாரமூர்த்தி சக்திசாலி சொரூபத்தில் நிலைத்திருந்து விடுவாரோ அப்பொழுது தூரத்தில் அமர்ந்திருந்தாலும் அனேகர்களின் டென்ஷனை ஈர்ப்பவராக, சகஜ அட்டென்ஷனை ஈர்ப்பவராக, சத்திய தீர்த்த ஸ்தானம் ஆகி விடுவார். இப்பொழுதோ நீங்கள் தேடிச் செல்கிறீர்கள், தேடுவதற்காக எவ்வளவு சாதனங்களைக் கையாளுகிறீர்கள், மேலும் பிறகு அவர்கள் உங்களைத் தேடி வருவார்கள். அல்லது எப்பொழுதுமே நீங்களே தேடிக் கொண்டிருப்பீர்களா?

அறிவியலும் சிரேஷ்ட ஆத்மாக்களின் சிரேஷ்ட காரியத்தில் சகயோகி கொஞ்சம் குழப்பம் ஏற்படட்டும் மேலும் நீங்கள் உங்களை உறுதியானவர் ஆக்கி விடுங்கள். பிறகு பாருங்கள். நீங்கள் ஆன்மீக காந்தம். அனேக ஆத்மாக்களை சுலபமாகவே எப்படி இழுத்து விடுவீர்கள் என்று ஏனென்றால். நாளாக நாளாக அவர்கள் தன்னுடைய முயற்சி என்ற கால்களால் செல்வதற்குத் தகுதியானவர்களாகவும் இருக்க மாட்டார்கள் ஏனென்றால். ஆத்மாக்கள் அந்த மாதிரி பலமற்றவர்களாக ஆகி விடுவார்கள். அந்த மாதிரி பலமற்ற ஆத்மாக்களை சக்தி சொரூப ஆத்மாக்களாகிய உங்களின் சக்தி. தன்னுடைய சக்தியின் கால்களைக் கொண்டு நடத்துவிக்கும். அதாவது தந்தையின் பக்கம் இழுத்து விடும். அந்த மாதிரி நிரந்தரமாகப் பறக்கும் கலையில் அனுபவி ஆனீர்கள் என்றால், அனேக ஆத்மாக்களின் துக்கம், அமைதியின்மையை நினைவிலிருந்து அகற்றி புகலிடத்திற்கு சென்றடையச் செய்யுங்கள். தன்னுடைய இறக்கைகள் மூலம் பறக்க வேண்டியதாக இருக்கும். முதலில் நீங்களே அந்த மாதிரி சக்தி நிறைந்த சொரூபமாக ஆனீர்கள் என்றால், தான் சத்திய தீர்த்த ஸ்தானமாகி அனேகர்களை தூய்மையாக்கி முக்தி அதாவது இனிமையான இல்லத்தின் பிராப்தியை செய்விக்க முடியும். நீங்கள் அந்த மாதிரி ஆதார மூர்த்திகளா?

இன்று பாப்தாதா அந்த மாதிரி ஆதாரமூர்த்தி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருவேளை ஆதாரமே ஆட்டம் காண்கிறது என்றால் அவர்கள் மற்றவர்களுக்கு ஆதாரமாக எப்படி ஆக முடியும்? எனவே நீங்கள் ஆடாதவர்களாக ஆனீர்கள் என்றால், உலகில் குழப்பம் ஏற்பட்டு விடும். மேலும் சிறிதளவு குழப்பம் அனேகர்களை சுலபமாக தந்தையின் பக்கம் கவர்ந்திழுக்கும். ஒரு பக்கம் கும்பகர்ணர்கள் விழித்தெழுவார்கள். இன்னொரு பக்கம் அனேக ஆத்மாக்கள் யார் சம்மந்தம் மற்றும் தொடர்பில் வந்திருக்கிறார்களோ, ஆனாலும் இதுவரையிலும் அலட்சியம் என்ற தூக்கத்தில் தூங்கி கொண்டிருக்கிறார்களோ, அந்த மாதிரி அலட்சியத்தின் தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாக்களும் விழித்தெழுவார்கள் ஆனால் எழுப்புபவர்கள் யார்? ஆடாத அசையாத ஆத்மாக்கள் நீங்கள் தான்! புரிந்ததா? சேவையின் ரூபம் அந்தமாதிரி மாறப்போகிறது. அதற்காக நிரந்தரமாக சிவசக்தி சொரூபம் ஆகுங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சாந்தி மற்றும் சக்தி சொரூப குழந்தைகளுக்கு, தன்னுடைய சக்திசாயான நிலை மூலமாக அனேகருக்கு நினைவூட்டக்கூடிய, டென்ஷனை அகற்றி அடென்ஷன் மேல் கவனம் கொடுக்கக்கூடிய. அந்த மாதிரி ஆதாரமூர்த்தி. உலகத்தை மாற்றம் செய்யும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**18-ஜனவரி நினைவு தினத்திற்காக அனைத்து குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டே அவ்யக்த பாபா கூறினார்:** 18-ஜனவரியின் அன்பு நினைவோ8 அத்தியாயத்தின் சக்திசாயான சொரூபமே தான். 18-ஜனவரி எதை நினைவூட்டுகிறது? சம்பன்ன ஃபரிஷ்தா சொரூபத்தை நினைவூட்டுகிறது. தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்ற பாடத்தை ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்திலும் நினைவூட்டுகிறது. அந்த மாதிரியே அனுபவம் நிறைந்தவர்கள் தான் இல்லையா? 18-ஜனவரி தினத்தன்று நீங்க அனைவரும் எங்கே இருப்பீர்கள். இந்த பௌதீக உலகத்திலா அல்லது ஒளி வடிவ உடலுள்ள ஃபரிஷ்தாக்களின் உலகத்திலா? 18-ஜனவரி ஃபரிஷ்தா சொரூபம், ஃபரிஷ்தாக்களின் உலகின் நினைவை ஊட்டுகிறது. அதாவது சக்தி நிறைந்த சொரூபத்தை உருவாக்குகிறது நினைவு தினமாக இருக்கிறது என்றாலே நினைவு சொரூபமாக ஆவதற்கான தினம் தான் இது. அப்படி 18-ஜனவரி என்ன தினமென்று புரிந்து கொண்டீர்களா? அந்த மாதிரி நிரந்தரமாக ஆக வேண்டும். இந்த நினைவைத் தான் அடிக்கடி நினைவூட்டுகிறது. எனவே தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும். சம்பன்ன சொரூபமாக வேண்டும் என்பது தான் 18-ஜனவரியின் அன்பு நினைவான தினம்! நல்லது. அனைவரின் அன்பு நினைவுகள் முன்பாகவே வந்து சேர்ந்து விட்டது நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மேந்திரியங்களை வெல்பவர் தான் உலக ராஜ்ய அதிகாரி!

சப்தத்தில் வருவதற்காகவும் மற்றும் சப்தத்தை கேட்பதற்காகவும் எத்தனை சாதனங்களைக் கையாளுகிறீர்கள்? பாப்தாதாவிற்கும் சப்தத்தில் வருவதற்காக உடன் சாதனத்தை எடுக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் சப்தத்திலி ந்து விலகிச் செல்வதற்காக இந்த சாதனங்களின் உலகிலிருந்து விலகிச் செல்ல வேண்டும். சாதனம் இந்த பௌதீகூலகத்தில் இருக்கிறது. பாப்தாதாவின் சூட்சும வதனம் மற்றும் மூலவதனத்தில் எந்த சாதனங்களின் அவசியம் இருப்பதில்லை. சேவைக்காக சப்தத்தில் வருவதற்காக எத்தனை சாதனங்களைக் கையாளுகிறீர்கள்? ஆனால் சப்தத்திலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருக்கும் பயிற்சியுள்ளவர் ஒரு நொடியில் இந்த அனைத்திலிருந்தும் விலகிச் சென்று விடுகிறார்கள். அந்த மாதிரி பயிற்சி உள்ளவராக ஆகியிருக்கிறீர்களா? இந்த நேரம் சப்தத்தில் வருவது. அடுத்த நேரம் சப்தத்திலிருந்து விலகிச் செல்வது அந்த மாதிரி கட்டுப்படுத்தும் சக்தியையும். ஆளுமை சக்தியையும் தனக்குள் அனுபவம் செய்கிறீர்களா? எண்ணத்தின் சக்தியையும், எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது எண்ணத்தில் வாருங்கள். விஸ்தாரத்தில் வாருங்கள். மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது விஸ்தாரத்தையும் முற்றுப்புள்ளியில் அடக்கி விடுங்கள். தொடங்குவதற்கும் மற்றும் நிறுத்துவதற்குமான இரண்டு சக்திகளிலும் சம ரூப நிலை இருக்கிறதா?

ஹே கர்மேந்திரியங்களை இராஜ்யம் செய்பவரே! தன்னுடைய இராஜ்ய சக்தியை அனுபவம் செய்கிறீர்களா? இராஜ்யம் செய்யும் சக்தி சிரேஷ்டமா அல்லது கர்மேந்திரியங்கள் அதாவது பிரஜைகளின் சக்தி சிரேஷ்டமா! என்ன அனுபவம் செய்கிறீர்கள்! நில் என்று கூறினீர்கள், நின்று விட்டது நீங்கள் நில் என்று மீண்டும் கூறுகிறீர்கள் ஆனால் அது

தொடங்கி விட்டது என்று அப்படி இருக்க வேண்டாம். ஒவ்வொரு கர்மேந்திரியங்களின் சக்தியில் கண்கள் மூலம் சமிக்ஞை மட்டும் கொடுத்தீர்கள் என்றால். சமிக்ஞை மூலமாகவே எப்படி விரும்புகிறீர்களோ அப்படி நடத்துவிக்க முடியும். அந்த மாதிரி கர்மேந்திரியங்களை வென்றவராக ஆனால் தான் இயற்கையை வென்றவராகி கர்மாதீத் நிலையின் ஆசனத்தில் அமர்ந்திருப்பவரிலிருந்து உலக இராஜ்ய அதிகாரி ஆவீர்கள். எனவே கர்மேந்திரியங்களை வென்றவராக ஆகியிருக்கிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள். ஒவ்வொரு கர்ம இந்திரியமும் கூறுங்கள் ஐயா. வந்தேன் ஐயா' என்று கூறிக் கொண்டே நடந்து கொண்டிருக்கிறதா? இராஜ்ய அதிகாரிகள் உங்களை எப்பொழுதும் வரவேற்பதாக அதாவது சலாம் செய்து கொண்டே இருக்கிறதா? இராஜாவின் எதிரில் முழு பிரஜை தலைவணங்கி சலாம் செய்கிறதா?

ஹே இராஜ்ய அதிகாரிகளே. உங்கள் அனைவரின் இராஜ்ய நடவடிக்கைகள் எப்படி இருக்கிறது? மந்திரி. துணை மந்திரிகள் ஏமாற்றவில்லையே? தன்னுடைய இராஜ்ய நடவடிக்கைகளை சோதனைசய்கிறீர்களா? இராஜசபையை தினசரி கூட்டுகிறீர்களா அல்லது எப்பொழுதாவது தானா? என்ன செய்கிறீர்கள்? இராஜ்ய அதிகாரிகளின் இங்கே உள்ள சம்ஸ்காரம் எதிர்காலத்தில் காரியம் செய்யும். எனவே தற்சமயம் ஆத்மா என்னிடம் இராஜ வம்சத்தின் சம்ஸ்காரம் இருக்கிறதா என்று சோதனைசெய்கிறீர்களா? அல்லது பிரஜையின் சம்ஸ்காரம் இருக்கிறதா அல்லது மாநில இராஜ்ய அதிகாரியின் சம்ஸ்காரம் இருக்கிறதா? அதாவது எல்லைக்குட்பட்ட இராஜ்ய அதிகாரியின் சம்ஸ்காரம் இருக்கிறதா? அல்லது எல்லைக்கப்பாற்பட்ட விஷ்வ மகாராஜனின் சம்ஸ்காரம் இருக்கிறதா? அல்லது அதையும் விட கடைசி பதவியான தாசன், தாசியின் சம்ஸ்காரம் இருக்கிறதா? சாகாரத்தில் இருக்கும் பொழுதும் தாசன், தாசி ஆவதற்கான அடையாளம் என்னவென்று கூறியிருந்தோம். யார் எந்தவொரு பிரச்சனை மற்றும் சம்ஸ்காரத்தின் அடிமையாகி உதாஸ் அதாவது சோர்வாக இருக்கிறார் என்றால் உதாஸ் அல்லது சோர்வானவரின் அடையாளம் தாசன், தாசி ஆவது. அப்படியானால் நான் யார் என்ற இதை நீங்களே உங்களை சோதனைசய்யுங்கள். எங்காவது, ஏதேனும் சோர்வின் உணர்வோ வரவில்லையே? உதாஸ் என்றால்,

இப்பொழுதும் தாசன் அதாவது அடிமை, எனவே அந்த மாதிரியானவர்களை இராஜ்ய அதிகாரி என்று எப்படி கூற முடியும்?

இது போல செல்வந்தப் பிரஜைகளும் இருப்பார்கள். எனவே இங்கேயும் யாரும் இராஜா ஆகவில்லை, ஆனால் செல்வந்தர் ஆகியிருக்கிறார்கள். எப்படியெனில், ஞான இரத்தினங்களின் பொக்கிஷம் அதிகமாக இருக்கிறது சேவை செய்து புண்ணிய கணக்கில் சேமிப்பும் அதிகமாக இருக்கிறது ஆனால் நேரம் வரும்போது தன்னை அதிகாரி ஆக்கி வெற்றி அடைபவர் ஆக்கும் கட்டுப்படுத்தும் சக்தி, ஆளுமை சக்தி இல்லையெனில். ஞானம் நிறைந்திருக்கிறது ஆனால் சக்தி நிறைந்திருக்கவில்லை என்றாகிறது. ஆயுதம் தரித்தவர் தான் ஆனால் தேவையான நேரத்தில் செயலில் கொண்டு வர முடியவில்லை. கையிருப்பு இருக்கிறது ஆனால் தேவையான நேரத்தில் தானும் உபயோகம் செய்ய முடியாது. மற்றவர்களையும் உபயோகம் செய்விக்க முடியாது. சட்டம் தெரியும் ஆனால் விதி தெரியாது. அந்த மாதிரி சம்ஸ்காரம் உள்ள ஆத்மாக்களும் இருக்கிறார்கள் அதாவது செல்வந்த சம்ஸ்காரம் உள்ளவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இராஜ்ய அதிகாரி ஆத்மாக்களின் நெருக்கமான துணைவர்களாக எப்பொழுதும் அவசியம் இருப்பார்கள் ஆனால் அவர்களே அதிகாரி ஆவதில்லை. புரிந்ததா? இப்பொழுது தற்சமயம் இதுவரையிலும் நான் என்னவாக ஆகியிருக்கிறேன் என்று நீங்களே உங்களைப் பற்றி யோசியுங்கள். நீங்கள் இப்பொழுது கூட மாற முடியும். இப்பொழுது கூட இறுதி இருக்கை முடிவு செய்யப்பட்டு விட்டது என்ற விசில் ஊதப்படவில்லை. முழுமையான வாய்ப்பு இருக்கிறது ஆனால் நீங்கள் மற்றவர்களுக்காக என்ன கூறுகிறீர்கள்? இப்பொழுது இல்லை என்றால் ஒருபொழுதும் இல்லை என்று கூறுகிறீர்கள். ஏனென்றால் கொஞ்ச காலம் முந்தைய சம்ஸ்காரம் தேவையாக இருக்கிறது. இறுதி நேரத்தினுடையது அல்ல. எனவே இரட்டை வெளிநாட்டினர் குரூப் பொன்னான வாய்ப்பை எடுக்கக்கூடிய சான்சிலர் குரூப் ஆகுங்கள். அப்படியானால் நீங்கள் அனைவரும் எந்த குரூப்பைச் சேர்ந்தவர்கள்? நல்லது. இன்று அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களுக்கான வாய்ப்பு என்றால் இருசாரருமே எந்த குரூப்பாக ஆகி விட்டீர்கள்? எந்த குரூப்பை அழைத்து வந்திருக்கிறீர்கள்? ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் சான்சிலர் குரூப்பா? ஆஸ்திரேலியாவின்

சக்திகள் என்ன நினைக்கிறீர்கள்? சக்தி தளமும் குறைந்தது அல்ல. பாண்டவர்கள் இருக்கிறார்கள் என்றால் சக்திகள் சக்திகளாக இருக்கிறார்கள். இருவர்களுமே அவரவர்களுடைய வேகத்தோடு சென்று கொண்டிருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் சக்திகள் அதிகமா அல்லது பாண்டவர்கள் அதிகமா? (இருவரும் சமமாக இருக்கிறார்கள்). சக்திகள் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள், பிறகு அதிகம் பறப்பார்கள் இல்லையா. எனவே இப்பொழுது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றபடி நம்பர் ஒன் ஆகத் தான் செல்ல வேண்டும். இடையில் கொஞ்சம் ஓய்வெடுத்து விட்டு பிறகு வேகமாக சென்று லட்சியத்தை சென்றடைந்து விடுவார்கள். அந்த மாதிரியும் சிலர் செய்கிறார்கள். நல்லது.

எப்பொழுதும் கர்மேந்திரியங்களை வென்ற. இயற்கையை வென்ற, சூட்சும சம்ஸ்காரத்தை வென்ற அதாவது மாயாவை வென்ற. சுயராஜ்ய அதிகாரியாக இருப்பவர் நாளை உலக இராஜ்ய அதிகாரியாக ஆகும் அந்த மாதிரி இராஜ வம்ச, இராஜரிஷி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**ஆஸ்திரேலியா பார்ட்டியுடன் சந்திப்பு:** பாப்தாதாவிற்கு உங்களை விட அதிகமாக குழந்தைகளின் நினைவு வந்து கொண்டிருக்கிறது. பாப்தாதாவும் தினசரி குழந்தைகளின் மாலையை நினைவு செய்கிறார். நீங்கள் சில நேரம் தவற விடலாம் ஆனால் பாப்தாதா ஒரு நாளும் தவற விடுவதில்லை. ஒவ்வொரு மணிக்கும் அவரவர்களுடைய வரிசை எண் இருக்கிறது. அவர்களும் மாலையில் தான் இருக்கிறார்கள். எத்தனை தடவை உங்கள் அனைவரின் மாலையை பாப்தாதா நினைவு செய்திருப்பார்? ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் மேலேயோ பாப்தாதாவிற்கு எப்பொழுதுமே பெருமிதம் இருக்கிறது. ஏன்? ஏனென்றால் ஆஸ்திரேலியாவில் இருப்பவர்கள் தந்தையைத் தெரிந்து அவரை தன்னுடையவராக ஆக்குவதில் நம்பர் ஒன் என்ற ரிக்கார்ட்டை காண்பித்திருக்கிறார்கள். எண்ணிக்கையில் பாருங்கள். வளர்ச்சியில் பாருங்கள். தரத்தில் பாருங்கள் அனைத்திலும் முன்னால் இருக்கிறார்கள். மேலும் நல்ல முறையோடு கவனிக்கிறார்கள். எனவே ஆஸ்திரேலியாவும் குறைந்ததல்ல, லண்டனில் இருந்தும் பாரதவாசி ஆத்மாக்கள் அதிகமாக இருக்கிறார்கள் ஆனால் ஆஸ்திரேலியாவில்

அனைவரும் திரைச்சீலைக்கு உள்ளே மறைந்திருக்கும் தந்தையை தெரிந்து கொள்வதில் நம்பர் ஒன். எனவே பாப்தாதாவிற்குப் பிரியமானவர்கள். புரிந்ததா? நல்லது.

**வரதானம்: பணிவு என்ற வரதானம் மூலமாக சுலபமாக வெற்றியை அடையக்கூடிய அனைவரின் மரியாதைக்குரியவர் ஆகுக!**

அனைவர் மூலமாக மரியாதை பெறுவதற்கான சகஜ சாதனம் பணிவானவராக ஆவது எந்த ஆத்மாக்கள் சுயம் தன்னை எப்பொழுதும் பணிவாக இருப்பது என்ற விசேஷம் மூலம் நடந்து கொண்டிருக்கிறார்களோ அவர்கள் சுலபமாக வெற்றியை அடைகிறார்கள். பணிவானவர் ஆவது தான் சுயமரியாதை. பணிவானவர் ஆவது என்றால் தலைவணங்குவது என்பதல்ல ஆனால் அனைவரையும் தன்னுடைய விசேஷம் மற்றும் அன்பு மூலமாக தலைவணங்குவது. தற்சமயத்திற்கு ஏற்றபடி எப்பொழுதும். சகஜமாக வெற்றியை அடைவதற்காக இது தான் மூல ஆதாரம். ஒவ்வொரு காரியத்திலும், சம்மந்தத்திலும், தொடர்பிலும் பணிவானவராக ஆகுபவர்கள் தான் வெற்றி இரத்தினம் ஆகுகிறார்கள்.

**சுலோகன்: ஞானத்தின் சக்தியை தாரணை செய்து விட்டீர்கள் என்றால் தடைகள் தாக்குவதற்குப் பதிலாக தோல்வி அடைந்து விடும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 16.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# என்னுடைய தந்தை வந்து விட்டார் என்ற இந்த ஓசை நாலா புறங்களிலும் சப்தமாக ஒலிப்பதற்காக நாலாபுறங்களிலும் ஃபரிஷ்தா ரூபத்தில் பரவி விடுங்கள்!

இன்று பாப்தாதா எங்கே வந்திருக்கிறார், மேலும் யாருடன் சந்திப்பதற்காக வந்திருக்கிறார்? இதைத் தெரிந்திருக்கிறீர்களா? இன்று இறைவன், இறை நண்பனாகி வந்திருக்கிறார் என்றால் நண்பர்கள் அவர்களுக்குள் என்ன செய்கிறார்கள்? பாடுவார்கள், ரித்துக் கொள்வார்கள், சாப்பிடுவார்கள். மேலும் கலகலப்பாக இருப்பார்கள். அப்படி இன்று பாப்தாதா கூறுவதற்காக வரவில்லை ஆனால் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். எவ்வளவு தூர தூரங்களிலிருந்து எத்தனை விதமான இறை நண்பர்கள் வந்து சேர்ந்து விட்டார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார். நிரந்தர நட்பில் இதயத்தில் என்னென்ன எண்ணம் வருகிறதோ அவை அனைத்தையும் நண்பனுக்குக் கூறுவார்கள், நீங்களும் இறைவனை அந்த மாதிரி யான நண்பனாக ஆக்கியிருக்கிறீர்கள் தான் இல்லையா? அழியாதவருடன் உறவை இணைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? இந்த நேரம் இணைத்தீர்கள், அடுத்த நேரம் துண்டிக்கிறீர்கள் என்ற அந்த மாதிரி இல்லையே? என்ன நினைக்கிறீர்கள்? அழியாத நட்பு இருக்கிறதா? முழுக் கல்பத்திற்குள் அந்த மாதிரி தந்தை என்று கூறினாலும், நண்பன் என்று கூறினாலும், என்ன சொன்னாலும், அனைத்து உறவுகளை வைத்துக் கொள்பவர் என்று சொன்னாலும் இந்த மாதிரியானவர் கிடைப்பாரா? முழுக் கல்பத்தின் சக்கரத்தைச் சுற்றி வந்தாலும் கிடைப்பாரா? மேலும் தன்னுடைய நண்பர்களை மற்றும் அனைத்து உறவினர் களையும் தந்தை வந்து தான் தேடினாரே அன்றி உங்களால் தேட முடியவில்லை. அழியாத

அனைத்து உறவுகளையும் இணைத்துக் கொள்வதற்கான ஆதாரம் மற்றும் விதியை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? எப்பொழுதும் மேரா பாபா (என்னுடைய தந்தை) என்ற ஒரு விஷயம் மட்டும் நினைவிருக்க வேண்டும். என்னுடையவர், என்னுடையவர் என்று கூறுவதினால் அதிகாரி ஆத்மா ஆகி விடுவீர்கள். இது கடினமா என்ன? எப்பொழுது மேரா பாபா என்று தந்தை கூறினார் என்றால் குழந்தைகளுக்கு மேரா பாபா என்று புரிந்து கொள்வதில் என்ன கடினம் இருக்கிறது. இந்த என்னுடைய என்ற வார்த்தை 21-ஜென்மங்களுக்காக அழியாத சம்மந்தத்தை இணைப்பதற்கான ஆதாரம். அந்த மாதிரி சுலபமான வழியைக் கடைபிடித்தீர்களா? அனுபவியாக ஆகி விட்டீர்கள் தான் இல்லையா?

இன்று எத்தனை புதுப்புது குழந்தைகள் தன்னுடைய ஒவ்வொரு கல்பத்தின் அதிகாரத்தை அடைவதற்காக வந்து சேர்ந்து விட்டார்கள். மேலும் தங்களுடைய அதிகாரத்தை அடைந்து கொண்டும் இருக்கிறார்கள். அப்படி அதிகாரி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார்.

ஜப்பானின் பொம்மைகள் நன்றாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? மிக அன்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பாருங்கள் தேசம் மற்றும் மதத்தின் முந்தானைக்குள் இருந்த போதிலும் பாப்தாதா தன்னுடைய குழந்தைகளை தன்னுடையவர்களாக ஆக்கியிருக்கிறார். எனவே ஜப்பானின் பொம்மைகள் என்ன பாடல் பாடுகிறீர்கள்? மை பாபா. ஒவ்வொருவரும் இன்னொருவரை விட அன்பானவர்கள். அதே போலவே பிரான்ஸ் தேசத்தின் குழந்தைகளும் எவ்வளவு பிரியமானவர்கள் என்பதையும் பாருங்கள். மொழியைப் புரிந்து கொள்ளாத போதிலும் தந்தையைப் புரிந்து கொள்கிறார்கள். பிரேசில், மெக்சிகோ... வின் அனைத்து குரூப்களும் மிக நல்ல குரூப்கள். இந்த தடவை தூர தேசத்து குரூப் நன்றாக முயற்சி செய்து வந்து சேர்ந்து விட்டார்கள். லண்டன், அமெரிக்கா, ஜெர்மனியோ, தொடக்கத்திலிருந்தே இருக்கிறார்கள். புதுப்புது ஸ்தானங்களின் மிக அழகான பூச்செண்டுகளைப் பார்த்து பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகிறார். அனைத்தையும் விட தொலை தூரமான ஸ்தானம் எது? (பரந்தாமம்). சரியாகக் கூறினீர்கள் ஆனால் எவ்வளவு தான் தூரமான ஸ்தானமாக இருந்தாலும் அந்த அளவே வந்து

சேர்வதில் ஒரு நொடியில், காலதாமதமின்றி வந்து சேர்ந்து விடுகிறீர்களா அல்லது நேரமாகிறதா?

ஹாங்காங்கின் (சீன மொழி பேசுபவர்கள்) குழந்தைகள் வந்து சேர்ந்து விட்டார்கள். இறை பூச்செண்டின் மிக அழகான மலர் நீங்கள். தன்னை இந்த பூச்செண்டின் மலர் என்று அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? நல்லது. ஒவ்வொரு தேசத்தின் அவரவர்களின் பெயரால், அனைவரின் பெயரையோ பாப்தாதா சொல்ல மாட்டார் இல்லையா? அப்படி ஒவ்வொரு தேசத்திலிருந்து வந்திருக்கும் அனைத்து குழந்தைகளும் மிகப் பிரியமானவர்கள். பாப்தாதாவை சந்திப்பதற்காக வந்திருக்கிறீர்கள். மேலும் பாப்தாதாவும் அனைத்து குழந்தைகளைப் பார்த்து, குழந்தைகளின் விசேஷத்தின் பாடலைப் பாடுகிறார். பார்படோஸை சேர்ந்தவர்களும் மிகவும் ஆன்மிக குஷி அடைகிறார்கள். டிரினிடாட்-ன் மாதர்களோ மிக நல்லவர்கள். அவர்கள் மிகவும் போதையில் சுற்றுபவர்களாகவும், குஷியில் ஆடுபவர்களாகவும் தென்படுகிறார்கள். மொரிசீயஸின் குமாரிகள் அடங்கிய பார்ட்டியும் மிக நல்லது. ஒவ்வொரு குமாரியும் 100-பிராமணர்களை விட உத்தமமானவர்கள். ஒருவேளை 4-குமாரிகள் கூட வந்திருக்கிறார்கள் என்றால் 400-பிராமணர்கள் வந்து விட்டார்கள். நீங்கள் நம்முடைய குரூப் மிக சிறியது என்று நினைக்கிறீர்கள் ஆனால் உங்களில் 400-பேர்கள் அடங்கியிருக்கிறார்கள். சிறிய குரூப் அல்ல. மற்றபடி ஆஸ்திரேலியா மற்றும் லண்டனோ அவர்களுக்குள் பந்தயம் செய்கிறார்கள் மற்றும் ஜெர்மனி இடையில் கண்டெடுக்கப்பட்டவர்களாக ஆகி விட்டார்கள். துபாயும் ஒரு லட்சத்திற்குச் சமமானவர்கள். நைரோபி மிக அதிக அதிசயம் செய்திருக்கிறார்கள். யாருமே இதுவரை கட்டாத மினி பாண்டவ பவனை நைரோபியைச் சேர்ந்தவர்கள் கட்டியிருக்கிறார்கள். நல்ல வெள்ளை மாளிகையை உருவாக்கியிருக்கிறீர்கள். ஜெர்மனிக்கும் மிகுந்த கிளைகள் இருக்கின்றன. அமெரிக்காவிற்கும் மிகுந்த கிளைகள் இருக்கின்றன. முழு ஐரோப்பாவும் நல்ல முயற்சி செய்து லண்டன் மற்றும் ஆஸ்திரேலியாவிற்குச் சமமாக வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா அனேக மூலைகளில் சேவை நிலையங்களை

திறந்திருக்கிறார்கள். இந்த சாதுர்யத்தை மிக நன்றாகச் செய்திருக்கிறார்கள். இப்பொழுது நாலாபுறங்களிலும் சேவையின் நல்ல முற்றுகை இட்டிருக்கிறீர்கள். இதன் மூலமாகத் தான் நேரம் வரும்பொழுது ஒயிட் ஹவுஸின் (வெள்ளை மாளிகையின்) மேலே லைட் ஹவுசின் (கலங்கரை விளக்கத்தின்) வெற்றி ஏற்படும். ஏனென்றால் விநாச ஜுவாலையும் அமெரிக்காவிலிருந்து உருவாகும் என்றால் ஸ்தாபனையின் விசேஷ காரியத்திலும் அமெரிக்காவின் பாண்டவ அரசாங்கம் என்று கூறினாலும், பாண்டவ சேனை என்று கூறினாலும் அவர்கள் தான் பொறுப்பாளர் ஆவார்கள். அந்த மாதிரி தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? (ஆம்). கட்டளை பிறக்கலாமா?

ஜப்பானைச் சேர்ந்த பொம்மைகள் என்ன செய்வார்கள்? அனைத்தையும் விட பெரிய, அனைத்தையும் விட அழகான பூச்செண்டை பாப்தாதாவிற்கு அளிப்பீர்கள் தான் இல்லையா? ஜெர்மனி என்ன செய்யும்? ஜெர்மனி கண்ணில்லாதவர்களுக்கும் கண் கிடைக்கும் அளவிற்கு அந்த மாதிரி ஆத்மீக குண்டு மற்றும் அமைதியின் சக்தியின் குண்டுகள் மூலமாக ஒளியைப் பரப்புவார்கள்.

துபாயைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வீர்கள்? அங்கே மறைந்திருக்கும் பிராமணர்கள் தன்னுடைய சிறப்புக்களை அவசியம் காண்பிப்பார்கள். மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பிராமண ஆத்மாக்கள் மறைந்திருக்க முடியாது. எனவே அவர்களும் பெரிய குரூப்பை உருவாக்கி வருவார்கள். உள்ளுக்குள்ளேயே தயாராகிக் கொண்டிருக்கிறார்கள், வெளியில் வந்து விடுவார்கள். இந்த தூர தேசத்தைச் சேர்ந்தவர்கள் (பிரேசில் மற்றும் மெக்சிகோவைச் சேர்ந்தவர்கள்) குழந்தைகளே, என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். தூரத்திலிருந்தே அந்த மாதிரி வலுவான ஓசையைப் பரப்புவார்கள். அது தூரத்திலிருந்தே நேராக பாரதத்தின் கும்பகர்ணர்கள் வரை வந்து சேர்ந்து விடும்.

கயானாவோ அமெரிக்காவின் (நியூயார்க்) அஸ்திவாரம். கயானா என்ன செய்ததோ, அதை இதுவரையிலும் வேறு யாரும் செய்யவில்லை. வி.ஐ.பி-க்களாக இருந்த போதிலும் கயானாவின் ஆத்மாக்களிடம் இந்த

விசேஷம் இருந்தது. முழுமையான வாரிசு தரம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா.

கனடாவிலிருந்தும் திருமூர்த்தி வந்திருக்கிறார்கள். திருமூர்த்தியில் தான் முழு உலகமும் அடங்கியிருக்கிறது. கனடா இப்பொழுது குப்தமாக பிரத்யக்ஷத்தின் பந்தயத்தில் முன்னேறிச் செல்லும், நல்ல நம்பரைப் பெறும்.

மலேசியாவும் நன்றாக உழைத்திருக்கிறார்கள். நான் தனியாக வந்திருக்கிறேன் என்று அப்படி நினைக்காதீர்கள் ஆனால் உங்களுக்குள் அனைத்து ஆத்மாக்களும் நிரம்பியிருக்கிறார்கள். பாப்தாதா ஒருவரைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை ஆனால் உங்களில் நிரம்பியிருக்கும் நெருக்கமான மற்றும் அன்பான ஆத்மாக்களின் காட்சியை தூரத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.அந்த ஆத்மாக்களின் ஓசை உங்களுக்கும் வந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா?

நியுசிலாந்தின் பொறுப்பாளராக ஆகியிருக்கும் ஆத்மாக்கள் சக்திசாலியானவர்கள். எனவே பாப்தாதாவின் மலர்த்தோட்டம் எப்பொழுதும் மலர்ந்திருக்கும். இடம் சிறிய தான், ஆனால் சேவை பெரியது.

ஆஸ்திரேலியா மற்றும் லண்டனின் கிளைகளோ அதிகம் இருக்கின்றன. போலந்திலும் வளர்ச்சி ஏற்பட்டு விடும். எரிந்திருக்கும் ஒரு தீபம் மூலமாக தீபாவளி ஆகி விடும்.

இப்பொழுதோ பாருங்கள், உங்கள் ஒவ்வொருவரின் பெயரைக் கூறுகிறோம். அடுத்த வருடம் வருவீர்கள் என்றால், ஒவ்வொருவரின் பெயரை கூறுவதற்கே கடினமாகும் அந்த அளவிற்கு வளர்ச்சியை செய்யுங்கள்.

இப்பொழுது எப்படி மசூதிகளின் மேல், கிறிஸ்தவ தேவாலயங்களின் மீது ஏறி, அவரவர்களின் பாடலை பாடுகிறார்கள். மசூதிகளில் அல்லாவின் பெயர் கூறி கத்துவார்கள், தேவாலயங்களில் கடவுளின் பெயரை கூறுவார்கள். கோயில்களில் வாருங்கள், வாருங்கள் என்று கூறுவார்கள்

ஆனால் இப்பொழுது அந்த மாதிரி நேரமும் வரும் அதில் அனைத்து கோயில்கள், மசூதிகள் குருத்துவாராக்கள், தேவாலயங்கள் ஆகிய அனைத்தையும் சேர்த்து ஒரே ஒரு ஓசை தான் ஒலிக்கும் -நமது தந்தை வந்து விட்டார் என்று! பிறகு ஃபரிஷ்தாக்கள் உங்களை எங்கே சென்று விட்டார்கள் என்று தேடுவார்கள். நாலாபுறங்களிலும் ஃபரிஷ்தாக்கள் ஃபரிதாக்களே அவர்களுக்குத் தென்படுவார்கள். முழு உலகத்திலும் ஃபரிஷ்தாக்கள் மேகங்கள் மூடுவது மாதிரி பறந்து மூடி விடுவார்கள். மேலும் அனைவரின் பார்வை ஏஞ்சல்கள் உங்களின் பக்கம் மற்றும் தந்தையின் பக்கம் இருக்கும். அப்படியானால் ஃபரிஷ்தாக்களின் காட்சியை அளிக்கும் அந்த நிலை வரை வந்து சேர்ந்து விட்டீர்களா? இப்பொழுது ஒருவேளை கொஞ்சம் கொஞ்சம் ஆடுகிறீர்கள் என்றாலும் கூட நேரம் வரும்பொழுது இவை அனைத்தும் முடிவடைந்து விடும். ஏனென்றால் ஒவ்வொரு கல்பத்திலும் நீங்களே தான் நிச்சயிக்கப்பட்ட ஃபரிஷ்தாக்கள். உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள். எனவே கொஞ்சம் கொஞ்சம் ஆடுவதற்கும் அசைவ தற்குமான காட்சிகளை என்ன இப்பொழுது காண்பிக்கிறீர்களோ இவை அனைத்தும் விரைவிலேயே முடிவடைந்து விடும். பிறகு அனைவரின் வாயிலிருந்தும் மாயா சென்று விட்டது, மேலும் நாங்கள் மாயாவை வென்றவர்களாக ஆகி விட்டோம் என்ற வார்த்தைகள் தான் வாயிலிருந்து வெளியாகும். அந்த நேரம் வந்து கொண்டிருக்கிறது. நல்லது.

இன்று அனைவருக்கும் பிக்னிக். பாப்தாதா இன்றைய பிக்னிக்கில் அனைத்து குழந்தைகளிடமிருந்து பரிசை பெறுவார். கொடுப்பதற்காக தயாராக இருக்கிறீர்களா? இரண்டு வார்த்தைகள் அடங்கிய பரிசு தான். எப்பொழுதும் கிளியர் (தெளிவாக) மற்றும் கேர்ஃபுல் ஆக (கவனமாக) இருப்பது. இதன் ரிசல்ட்டாக சியர்ஃபுல் (மலர்ந்த முகமுடையவராக) ஆகியே விடுவீர்கள். கிளியராக இருப்பதில்லை. எனவே எப்பொழுதும் ஒரே சீராக இருப்பதில்லை. மேலும் டிப்ரஷன் டிப்ரஷன் (மன அழுத்தம்) என்ற வார்த்தையை அடிக்கடி கூறுகிறீர்கள். அதுவும் இந்த நிலையில் தான் உருவாகும். எனவே என்ன விஷயம் வந்தாலும் அதை கிளியர் செய்து விடுங்கள். அது பாப்தாதா மூலமாகவும், தன் மூலமாகவும் அல்லது பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் மூலமாகவும் இருக்கலாம் ஆனால் அவற்றை மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள், அகற்றிவிடுங்கள். ஏன்? என்ன? என்பதில் செல்லாதீர்கள் ஆனால் நீங்கள் இரண்டு

வார்த்தைகளின் பரிசைக் கொடுங்கள். மேலும் பாப்தாதாவிடமிருந்து திருமூர்த்தி புள்ளியின் பரிசை பெற்றுக் கொள்ளுங்கள். பரிசைத் தொலைத்து விடாதீர்கள். பரிசை புத்தி என்ற இரும்பு பெட்டியில் எப்பொழுதும் பாதுகாப்பாக வையுங்கள். கொடுப்பதற்கும், பெறுவதற்கும் சம்மதமா? நல்லது. எப்பொழுதாவது ஏதாவது நடக்கிறது என்றால், திலகம் இட்டுக் கொள்ளுங்கள். பிறகு எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பீர்கள். திலகம் இடத் தெரியும் தான் இல்லையா?

**சான்பிராசிஸ்கோ குரூப்புடன் சந்திப்பு:** அனைத்து பிரம்மா குமார் மற்றும் குமாரிகளின் விசேஷ கடமை எது? பிரம்மாபாபாவின் விசேஷ காரியமாக என்ன இருந்தது? புது உலக ஸ்தாபனை தான் பிரம்மாவின் காரியமாக இருந்தது. எனவே பிரம்மா குமார் மற்றும் குமாரிகளின் விசேஷமான காரியமாக என்ன ஆனது? ஸ்தாபனையின் காரியத்தில் சகயோகியாக இருப்பது. எனவே எப்படி அமெரிக்காவில் விநாஷம் செய்பவர்களின் விநாஷத்தின் வேகம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அதே போல் ஸ்தாபனைக்கு பொறுப்பாளரான குழந்தைகளின் வேகமும் தீவிரமாக இருக்கிறதா? அவர்களோ மிக அதிக வேகத்துடன் விநாஷம் செய்வதற்காக தயாராக இருக்கிறார்கள். அதே போல் நீங்கள் அனைவரும் ஸ்தாபனையின் காரியத்தில் இவ்வளவு எவரெடியாக அதிவேகத்தில் சென்று கொண்டிருக்கிறீர்களா? அவர்களுடைய வேகம் அதிகமா அல்லது உங்களுடைய வேகமா? அவர்கள் 15-விநாடிகளில் விநாஷம் செய்வதற்காக தயாராக இருக்கிறார்கள், மேலும் நீங்கள் 1-விநாடியில் தயாரா? என்ன வேகமாக இருக்கிறது? ஒரு நொடியில் ஸ்தாபனையின் காரியம் என்றால் ஒரு நொடியில் திருஷ்டி கொடுத்தீர்கள் மற்றும் உலகம் உவாகி விட்டது என்று அந்த மாதிரி வேகம் இருக்கிறதா? எனவே ஸ்தாபனைக்கு பொறுப்பாளராக இருக்கும் ஆத்மாக்களுக்கு நம்முடைய வேகம் விநாஷம் செய்பவர்களின் வேகத்தை விட அதிகமாக இருக்க வேண்டும் என்று எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் பழைய உலகத்தின் விநாஷத்தின் தொடர்பு புது உலகத்தின் ஸ்தாபனையுடன் இருக்கிறது. முதலில் ஸ்தாபனை ஆக வேண்டுமா அல்லது விநாஷமா? ஸ்தாபனையின் வேகத்தை அதிகப்படுத்துவதற்கான விசேஷ ஆதாரம் எப்பொழுதும் தன்னை சக்திசாலியான நிலையில் வையுங்கள். ஞானம் நிறைந்ததின் கூடவே

சக்தி நிறைந்த நிலையில் வையுங்கள். ஞானம் நிறைந்ததின் கூடவே சக்தி நிறைந்த நிலையும் இணைந்திருக்கிறது என்றால் தான் ஸ்தாபனையின் காரியம் அதிவேகத்தில் நடக்கும். அப்படியானால் அதிவேகத்திற்கான பவுண்டேஷன் எங்கிருந்து ஏற்படும். அமெரிக்காவிலிருந்தா? அமெரிக்காவிலும் அனேக சேவை நிலையங்கள் இருக்கின்றன. எனவே நம்பர் ஒன்-ல் நாம் தான் செல்வோம் என்று அனைவரும் இந்த லட்சியத்தை வைக்க வேண்டும். எனவே உங்களுடைய சேவை நிலையம் மூலமாக முதன் முதலில் ஆத்மீக குண்டு செல்லும் இல்லையா? அதன் மூலம் என்ன ஆகும். அனைவரும் தந்தையின் அறிமுகத்தை தெரிந்து கொள்வார்கள். எப்படி அந்த குண்டு மூலம் விநாஷம் ஏற்படுகிறது தான் இல்லையா. இந்த ஆத்மீக குண்டு மூலம் இருளின் விநாஷம் ஆகி விடும். எனவே இந்த குண்டை வீசுவதற்கான முறை எது? அந்த அரசாங்கமும் இந்த மாதிரி ஒத்திகை நடக்கும் என்று தேதியை அறிவிக்கிறார்கள் இல்லையா. உங்களுடைய ஒத்திகைக்கான நாள் எப்பொழுது இருக்கும். நல்லது.

**வரதானம்: பாக்கியத்தை உருவாக்கும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் பாக்கியத்தை அனைவருக்கும் வழங்கும் மற்றும் அதிகரிக்கும் அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் ஆகுக!**

பாக்கியத்தை உருவாக்கும் தந்தை தன்னுடையவர் ஆக்கி விட்டார் என்ற இது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய அதிர்ஷ்டம். உலகத்தினரோ பகவானின் ஒரு நொடியின் காட்சி கிடைக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் நீங்கள் எப்பொழுதும் அவருடைய கண்களில் நிரம்பியிருக்கிறீர்கள். இதைத் தான் அதிர்ஷ்டம் என்று சொல்வது. பாக்கியம் உங்களுடைய ஆஸ்தி. முழுக் கல்பத்திலும் இந்த மாதிரியான பாக்கியம் இப்பொழுது தான் கிடைக்கிறது. எனவே பாக்கியத்தை அதிகரித்துக் கொண்டே இருங்கள். அதிகரிப்பதற்கான வழி அனைவருக்கும் கொடுப்பது. எந்த அளவு மற்றவர்களுக்கு கொடுப்பீர்களோ அதாவது பாக்கியவானாக ஆக்குவீர்களோ அந்த அளவு பாக்கியம் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

**சுலோகன்: தடையற்ற மற்றும் ஒரே சீரான நிலையின் அனுபவம் செய்ய வேண்டும் என்றால் ஒருமுகப்பட்ட நிலையின் பயிற்சியை அதிகரியுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 18.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# 18-ஜனவரி பொறுப்பு கிரீடத்தின் முடிசூட்டு விழாவின் தினம்!

இன்று உலகின் கண்ணொளி தன்னுடைய கண்ணின் மணிகளோடு சந்திப்பதற்காக வந்திருக்கிறார். மீண்டும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் தந்தையின் கண் மணிகள். எப்படி உடலில் கண்களில் ஒளி அதாவது பார்வை இல்லை என்றால் உலகமே இல்லை. அதே போல் உலகில் ஆன்மீக கண் மணிகள் நீங்கள் இல்லை என்றால் உலகில் பிரகாசம் இல்லை, இருளாகி விடும். அப்படி நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் கண்ணின் மணிகள் அதாவது உலகின் ஜோதி. இன்றைய விசேஷ நினைவு தினத்தன்று அனைவரின் அன்பு நிறைந்த பாடல் வதனத்தில் பாப்தாதாவால் அமிர்தவேளையில் இருந்தே கேட்க முடிந்தது. ஒவ்வொரு குழந்தையின் பாடல் ஒருவர் மற்றவர்களினுடையதை விட அதிகப் பிரியமானதாக இருந்தது. இனிமையான ஆன்மீக உரையாடலையும் அதிகம் கேட்டோம். குழந்தைகளின் அன்பின் முத்துக்களின் மாலை பாப்தாதாவின் கழுத்தில் வந்து விழுந்தன. அந்த மாதிரி முத்துக்களின் மாலைகள் பாப்தாதாவின் கழுத்திலும் முழுக் கல்பத்தில் இப்பொழுது தான் விழுகிறது. பிறகு இந்த விலைமதிக்க முடியாத அன்பின் முத்துக்களின் மாலை கழுத்தில் விழ முடியாது. இந்த ஒவ்வொரு முத்துக்குள்ளும் என்ன நிரம்பியிருந்தது. ஒவ்வொரு முத்து வினுள்ளும் என்னுடைய பாபா, ஆஹா பாபா என்பது தான் நிரம்பியிருந்தது. எத்தனை மாலைகள் இருக்கும் என்று கூறுங்கள். மேலும் இதே மாலைகளினால் பாப்தாதா எந்த அளவு ஆன்மீகமாக அலங்கரிக்கப்பட்டிருந்திருப்பார்? எப்படி ஸ்தூலத்தில் அன்பின் அடையாளமாக மாலைகளினால் அலங்கரித்தீர்கள். அப்படி இங்கே ஸ்தூல அலங்காரத்தினால் அலங்கரித்தீர்கள் ஆனால் வதனத்தில் அமிர்தவேளையில் தொடங்கி பாப்தாதாவை அலங்காரம் செய்யத் தொடங்கினீர்கள். ஒன்றின் மேல் ஒன்றாக பாப்தாதாவிற்கு நல்ல ஒரு

அலங்காரமாக ஆகி விட்டது. நீங்கள் அனைவரும் அந்த சித்திரத்தை பார்க்கிறீர்கள் தான் இல்லையா?

இன்றைய விசேஷ தினம் அனைத்துக் குழந்தைகளுக்கும் முடிசூட்டு விழாவின் தினம். இன்றைய தினம் ஆதிதேவ் பிரம்மாபாபா அவரே இந்த உலகியல் பொறுப்புக்கள் அதாவது ஸ்தூல ரூபத்தில் சேவையின் கிரீடத்தை கண்களின் பார்வை மூலமாக கையோடு கை சேர்த்து நெருக்கமான குழந்தையிடம் அர்ப்பணம் செய்தார். அப்படி இன்றைய தினம் பிரம்மாபாபாவின் ஸ்தூல ரூபத்தின் பொறுப்புகளின் கிரீடத்தை குழந்தை களுக்குக் கொடுத்ததின் முடிசூட்டு விழா தினம் (பிரகாஷ்மணி தாதியிடம்). இன்றைய தினம் நினைவிருக்கிறது தான் இல்லையா? இன்றைய தினம் பிரம்மாபாபா குழந்தைகளுக்கு தந்தைக்குச் சமமாக ஆகுக என்ற வரம் கொடுக்கும் தினம்.

பிரம்மாபாபாவின் இறுதி எண்ணத்தின் வார்த்தைகளை மற்றும் கண்களின் பாஷையை கேட்டிருக்கிறீர்களா? என்னவாக இருந்தது? கண்களின் சமிக்ஞையின் வார்த்தைகள் இவையாகத் தான் இருந்தன குழந்தைகளே எப்பொழுதும் தந்தையின் சகயோகத்தின் விதி மூலமாக வளர்ச்சியை அடைந்து கொண்டே இருப்பீர்கள். இதே இறுதி வார்த்தை வரதானி வார்த்தைகள் பிரத்யக்ஷ பலனின் ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பிரம்மாபாபாவின் இறுதி வரதானத்தின் சாகார சொரூபம் நீங்கள் அனைவரும் வரதானம் என்ற விதை மூலம் உருவான வகை வகையான பழங்கள். இன்று சிவ பாபா பிரம்மாபாபாவிற்கு வரதானம் என்ற விதையிலிருந்து உருவான மிக அழகான நன்றாகப் பரந்து விரிந்திருக்கும் மரத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தார். அறிவியல் சாதனங்கள் மூலமாகவும் ஒரு மரத்தில் வகை வகையான பழங்கள் வெளிவர வேண்டும் என்று மிகுந்த முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் பிரம்மாபாபாவின் வரதானத்தின் மரம், சகஜயோகாவின் பாலனை மூலம் வளர்ந்திருக்கும் மரம் எவ்வளவு விசித்திரமானது. மனதிற்கு குஷி அளிக்கும் மரமாகும். ஒரே மரத்தில் விதவிதமான பழங்கள் இருக்கின்றன. வேறு வேறு மரங்கள் இல்லை. மரம் ஒன்று தான், பழம் அனேக விதமாக இருக்கின்றன. அந்த மாதிரி மரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? ஒவ்வொருவரும் தன்னை இந்த மரத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி இன்று

வதனத்தில் அந்த மாதிரி விசித்திரமான மரமும் வெளிப்பட்டது. அந்த மாதிரியான மரம் சத்யுகத்திலும் இருக்காது. ஆம், அறிவியலைச் சேர்ந்தவர்கள் என்ன முயற்சி செய்து கொண்டிருக்கிறார்களோ அதனுடைய பலன் உங்களுக்கு சிறிதளவு கிடைத்து விடும். ஒரே பழத்திலிருந்து இரண்டு அல்லது நான்கு பழங்களின் சுவை அனுபவம் ஆகும். இவர்கள் கடுமையாக உழைப்பார்கள். மேலும் நீங்கள் அருந்துவீர்கள். இப்பொழுதிலிருந்தே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்களா என்ன?

இன்றைய தினம் என்ன என்று கேட்டீர்களா? இன்றைய தினம் எப்படி தொடக்கத்தில் பிரம்மாபாபா ஸ்தூல செல்வத்தை குழந்தைகளுக்காக உயில் எழுதி கொடுத்தார். அதே போல் தன்னுடைய ஆன்மீக சொத்துக்களை குழந்தைகளுக்கு உயில் எழுதினார். அப்படி இன்றைய தினம் குழந்தைகளுக்கு உயில் எழுதிக் கொடுத்த தினம். இந்த ஆன்மீக சொத்தின் உயிலின் ஆதாரத்தில் காரியத்தில் முன்னேறிச் செல்வதற்கான மனோபலம் வெளிப்படையாகத் தென்படுகிறது. குழந்தைகளைப் பொறுப்பாளர்களாக ஆக்கி மனோபலத்தின் உயிலை எழுதினார். இன்றைய தினம் விசேஷமாக தந்தைக்குச் சமமாக வரதானி ஆவதற்கான தினம். இன்றைய தினம் அன்பு மற்றும் சக்தி இரண்டும் இணைந்த வரதானி தினம். இரண்டையும் நடைமுறையில் அனுபவம் செய்தீர்கள் தான் இல்லையா? அதிக அன்பு மற்றும் அதிக சக்தி. (தாதியிடம்) அனுபவம் நினைவு இருக்கிறது தான் இல்லையா? முடிசூட்டு விழா நடந்தது தான் இல்லையா? நல்லது இன்றைய தினத்தின் மகத்துவத்தை தெரிந்து கொண்டீர்களா? நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையின் வரதானங்களினால் வளர்ச்சியை அடையக்கூடிய, எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இதே நினைவு சொரூபத்தில் இருக்கும், எப்பொழுதும் பிரம்மாபாபாவிற்கு சமமாக ஃபரிஷ்தா ஆகுக என்ற வரம் பெற்றவர்களுக்கு, அந்த மாதிரி சமமான மற்றும் அருகாமையில் இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் சக்திசாலியான தினத்தன்று அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதி, தீதியுடன் சந்திப்பு:** சாகார பாபாவின் வரதானங்களின் உரிமையுள்ள விசேஷ ஆத்மாக்கள் தான் நீங்கள் இல்லையா? சாகார பாபா குழந்தைகள் உங்களுக்கு என்ன வரதானம் கொடுத்தார்? எப்படி பிரம்மாவிற்கு தொடக்கத்தில் (தத்தத்துவம்) அவ்வாறே நீயும் அந்த மாதிரி ஆகுக என்ற வரம் கிடைத்தது. அதே போலவே பிரம்மாபாபா குழந்தைகளுக்கு விசேஷமாக தத்தத்துவம் என்ற வரதானம் கொடுத்தார். அப்படி நீங்கள் விசேஷமாக தத்தத்துவம் என்ற வரதானத்தின் உரிமையுள்ள வாரிசு ஆத்மாக்கள். இதே வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். அதாவது சக்திசாலியான ஆத்மா ஆக வேண்டும். இந்த வரதானத்தின் நினைவு மூலம் எப்படி பிரம்மாபாபா ஒவ்வொரு காரியத்திலும் தந்தையை பிரத்யக்ஷமாக அனுபவம் செய்தார், அதே போல் உங்களுடைய ஒவ்வொரு காரியத்திலும் பிரம்மாபாபா பிரத்யக்ஷம் ஆவார். பிரம்மாபாபாவை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய ஆதி ரத்தினங்கள் எவ்வளவு குறைவானவர்கள் பொறுப்பாளர்கள் ஆகியிருக்கிறார்கள். விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய முகம் மூலமாக பிரம்மாபாபாவின் ரூபம் அனுபவம் ஆக வேண்டும், மேலும் அனுபவம் செய்யவும் செய்கிறார்கள். பிரம்மா குமாரி இல்லை. பிரம்மாபாபாவிற்குச் சமமாக பிரம்மாபாபாவின் அனுபவம் இருக்க வேண்டும். அந்த மாதிரி நீங்கள் சேவைக்கு பொறுப்பாளரான வரதானி விசேஷ ஆத்மாக்கள். அனைவரும் என்ன கூறுகிறார்கள்? பாபாவைப் பார்த்தீர்களா, பாபாவை அடைந்தீர்களா அப்படியானால் அனுபவம் செய்விப்பவர், பிரத்யக்ஷம் செய்பவர் யார்? கிரீடம் அணிந்த விசேஷ ஆத்மாக்கள் நீங்கள் இப்பொழுது விரைவிலேயே மீண்டும் பிரம்மாபாபா மற்றும் பிரம்மாவின் குழந்தைகள் சக்திகளின் ரூபத்தில், சக்தியில் சிவன் உள்ளடங்கியிருக்கிறார். சிவசக்தி மற்றும் கூடவே பிரம்மாபாபா அந்த மாதிரியான காட்சிகள் நாலாபுறங்களிலும் தொடங்கி விடும். பிரம்மா குமாரிக்குப் பதிலாக பிரம்மாபாபா தென்படுவார். சாதாரண சொரூபத்திற்குப் பதிலாக சிவசக்தி சொரூபம் தென்படும். எப்படி தொடக்கத்தில் சாகாரத்தில் லீலைகள் பல பார்த்தீர்கள். அதே போலவே இறுதியிலும் நடக்கும். இப்பொழுது அதிகப்படியாக சிவசக்தி சொரூபத்தின் காட்சியும் ஏற்படும். இருந்தாலும் சாகார தந்தையோ பிரம்மா தான் இல்லையா. அப்படி சாகார ரூபத்தில் வந்திருக்கும் குழந்தைகள் தந்தையைப் பார்ப்பார்கள் மற்றும் அவசியம் அனுபவம் செய்வார்கள். பிரம்மாபாபாவின் உதவியின் செய்தியையும் கேட்பீர்கள். அவர் உடல் பந்தனத்திலிருந்து மட்டும் விடுபட்டிருக்கிறார். மேலும் அதிவேகமான ரூபத்தில் சகயோகி ஆகியிருக்கிறார். ஏனென்றால், நாடகத்தின் அனுசாரம் வளர்ச்சி அடைய வேண்டும் என்பது நிரந்தரமாக அடங்கியிருக்கிறது.

பொதுவாக ஏதாவது ஒரு இடத்தில் வெளிச்சத்தை பரப்ப வேண்டும் என்றால் என்ன செய்கிறார்கள்? உயர்வான இடத்திலிருந்து வெளிச்சம் வரும் மாதிரி செய்வார்கள் தான் இல்லையா? சூரியனும் உலகில் எப்பொழுதும் வெளிச்சம் கொடுக்க முடியும் என்றால் அது எப்பொழுது உயர்வாகவே இருக்கிறதோ, அதே மாதிரி இந்த ஸ்தூல உலகத்திற்கு சக்தி கொடுப்பதற்காக பிரம்மாபாபாவிற்கும் உயர்ந்த ஸ்தானத்தின் நிவாசியாக ஆகத் தான் வேண்டியதிருந்தது. இப்பொழுதோ ஒரு நொடியில் எங்கே விரும்புகிறாரோ அங்கே தன்னுடைய காரியத்தை செய்ய முடியும். மேலும் செய்விக்க முடியும். வாய் மூலமாகவோ மற்றும் கடிதங்கள் மூலமாகவோ இவ்வளவு காரியம் எப்படி செய்ய முடியும்? எனவே தீவிர விதி மூலமாக குழந்தைகளின் சகயோகி ஆகி காரியம் செய்து கொண்டிருக்கிறார். அனைத்தையும் விட அதிவேகமான சேவைக்கான சாதனம் எண்ணத்தின் சக்தி. அப்படி பிரம்மாபாபா உயர்ந்த எண்ணத்தின் விதி மூலமாக வளர்ச்சி அடைவதில் எப்பொழுதுமே சகயோகியாக இருக்கிறார். அப்படி வளர்ச்சி அடைவதின் வேகமும் தீவிரமாகிக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? விதி தீவிரமானது என்றால், விருத்தியும் (வளர்ச்சியும்) தீவிரம். தோட்டத்தைப் பார்ப்பதில் மகிழ்ச்சி ஏற்படும் தான் இல்லையா. நல்லது.

**சாகார பாபாவின் லௌகீக பரிவாரத்தினருடன் சந்திப்பு (நாராயணன் தாதா மற்றும் அவருடைய மனைவி):** அனைத்து காரியமும் சரியாக நடந்து கொண்டிருக்கிறதா? இப்பொழுது எங்கேயாவது தாண்டி வருகிறீர்களா? இவ்வளவு வளர்ச்சியை பார்த்து சகஜ விதியின் அனுபவம் ஆகவில்லையா? என்ன நினைக்கிறீர்கள்? எண்ணத்தின் விஷயம் தான் இல்லையா? வேறு ஏதாவது செய்ய வேண்டுமா என்ன? எண்ணத்தை உருவாக்கினீர்கள் மற்றும் நடந்தது. இவர்கள் (வெளிநாட்டினர்) இவ்வளவு தூர தேசத்திலிருந்து வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்றால் எதன் ஆதாரத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்கள்? கண்டிப்பாக போக வேண்டும், கண்டிப்பாக செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வைத்தார்கள், மேலும் வந்து சேர்ந்து விட்டார்கள். அப்படி தூரத்திலிருந்தே உறுதியான எண்ணத்தின் ஆதாரத்தில் உரிமையுள்ளவர் ஆகி விட்டார்கள். நீங்களோ குழந்தை பருவத்தின் உரிமையுள்ளவர்கள். குழந்தை பருவம் நினைவிருக்கிறதா? அப்படியானால் என்னவாக ஆவீர்கள்? பார்க்கலாம் என்றா அல்லது

பறக்கும் கலையில் சென்று தந்தைக்குச் சமமான ஃபரிஷ்தா ஆவீர்களா? பார்த்துக் கொண்டோ இருக்கவே இருக்கிறீர்கள். எதுவரை பார்த்துக் கொண்டிருப்பீர்கள்? யோசித்தீர்கள் என்றாலும் எதுவரை யோசிக்க வேண்டும்? பாப்தாதா அதே அன்பின் இறக்கைகள் மூலம் குழந்தைகளைப் பறக்க வைக்க விரும்புகிறார். இறக்கைகளில் அமர்வதற்காகவும் என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? டபுள் லைட்டாகவோ ஆக வேண்டும் இல்லையா? அனைத்து காரியங்களையும் செய்து கொண்டே, டபுள் லைட் ஆக முடியும். கற்பனையின் விளையாட்டு மட்டும் தான் இருக்கிறது. ஒரு விநாடிக்கான விளையாட்டு. ஒரு விநாடிக்கான விளையாட்டை விளையாடத் தெரியாதா? தந்தை என்ன செய்தார்? ஒரு நொடியில் விளையாட்டை செய்தார் இல்லையா? எப்பொழுது இருவரும் ஒருவர் மற்றொருவருக்கு சகயோகியாக இருப்பீர்களோ அப்பொழுது செய்ய முடியும். ஒரு சக்கரத்தினால் செல்ல முடியாது. இரண்டு சக்கரங்களும் வேண்டும். இருந்தும் பாப்தாதாவின் வீட்டிற்கு வருகிறீர்கள். பாப்தாதாவோ எப்பொழுதும் குழந்தைகளை உயர்வாகத் தான் பார்க்கிறார். உயர்ந்த தந்தை குழந்தைகளையும் உயர்வாகவே பார்க்க விரும்புகிறார். இது நியமம் தான் இல்லையா. இப்பொழுது குழந்தைகள் நீங்கள் எங்கே இடத்தை பிடிப்பீர்கள் என்பது உங்களுடைய கையில் இருக்கிறது. வேண்டும் என்றால் நல்ல முறையில் யோசித்து கொள்ளுங்கள் ஆனால் ஒரு நொடிக்கான விஷயம். ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்றால் ஒரு நொடிக்கான விஷயம். நல்லது.

**அபுவில் நடக்கவிருக்கும் மகாநாட்டிற்காக ஏதாவது விசேஷ திட்டம்:**

அபுவில் நடக்கப் போகும் மகாநாட்டிற்கு வி. ஐ. பிலிக்களாக மட்டுமின்றி, அன்புடையவர்களாகவும் ஆக்கி, அழைத்து வாருங்கள். நீங்கள் அன்பானவர்களாக ஆக்கி அழைத்து வாருங்கள். இங்கே சம்மந்தம் இணைந்து விடும் (அன்பானவராக ஆக்குவதற்கான வழி என்ன?) எந்த அளவு தந்தையின் மகிமையை உள்ளப்பூர்வமாக மகிமை செய்வீர்களோ, பிறகு நீங்கள் மகிமை செய்வீர்கள், மேலும் அவர்கள் பற்றுதலில் வந்தவர்களாக ஆகிக் கொண்டே செல்வார்கள். நீங்கள் பாபா, பாபா என்று கூறிக் கொண்டே செல்வீர்கள், மகான் தன்மையை கூறிக் கொண்டே செல்வீர்கள், மேலும் அவர்கள் (பாபாவின் மீது) அன்பானவர்களாக ஆகிக் கொண்டே இருப்பார்கள். எங்கு மகான் தன்மை அனுபவம் ஆகிறதோ அங்கு அவர்களாகவே தலை வணங்குவார்கள்.

எப்படி பக்தர்கள் ஜட விக்கிரகங்களின் மேல் மகான் தன்மையின் பாவனை வைக்கிறார்கள் என்றால் பின்பு தலைகுணிந்து விடுகிறது. அந்த ஜடம் எங்கே மேலும் இங்கே சைத்தன்யம் எங்கே, இருந்தும் தலை வணங்கி விடுகிறது. இங்கேயும் பாருங்கள், ஏதாவது பிரதம மந்திரி அல்லது ஜனாதிபதி இருக்கிறார் என்றால் அவர்களுடைய மகான் நிலையின் எதிரில் இயல்பாகவே தலைவணங்குவார்கள் இல்லையா. அதே போல் நீங்களும் தந்தையின் மகான் தன்மையை கூறிக் கொண்டே சென்றீர்கள் என்றால் அவர்களுடைய தலை வணங்கிக் கொண்டே இருக்கும். நீங்களோ மிகவும் புத்திசாலிகள் தான் இல்லையா. உங்களிடம் அறிவியலின் ஞானமும் இருக்கிறது, அமைதியின் ஞானமும் இருக்கிறது. தேசத்தின் ஞானமும் இருக்கிறது என்றால் வெளிநாட்டின் ஞானமும் இருக்கிறது. அனுபவமும் ஒரு சக்தி, அனுபவம் தான் மிகப் பெரிய சக்தி. அனுபவத்தை கூறிக் கொண்டே இருந்தீர்கள் என்றால், அனைவரும் குஷி அடைவார்கள் இல்லையா. அனுபவம் செய்பவர் அவரே சக்திசாலி ஆகி விடுகிறார். இதுவும் ஒரு பெரிய ஆயுதமாகும். பொதுவாக பேசுபவர்களோ அனேகர்கள் இருக்கிறார்கள் ஆனால் அனுபவத்தின் சக்தி யாரிடமும் இல்லை. இங்கே உள்ள விசேஷமே அனுபவத்தினுடையது தான். பேசுபவர்களுக்கு முன்னால் அனுபவம் நிறைந்தவர்களுக்குத் தான் மகத்துவம் இருக்கிறது. மெது மெதுவாக அறிவியலைச் சேர்ந்தவர்களும், சாஸ்திரவாதிகளும் கூட இருவர்களுமே நாம் மேலோட்டமாக இருக்கிறோம். நமக்கு அஸ்திவாரம் இல்லை என்று புரிந்து கொள்வார்கள். மேலும் இவர்களுக்கு (பி. கு) அனுபவத்தின் அஸ்திவாரம் இருக்கிறது. சந்திரன் வரை சென்றடைந்திருந்தாலும் கூட தன்னுடைய அனுபவம் தனக்கே இல்லை. சந்திரன் வரை சென்றிருந்தாலும் கூட என்ன ஆனது? எனவே இதை உணருவார்கள் ஆனால் இறுதியில் உணருவார்கள். ஏனென்றால் வாரிசாகவோ ஆக வேண்டியதில்லை. எனவே இறுதியில் அறிவியல் அதாவது ஆயுதம் தரித்தவர்கள் மற்றும் சாஸ்திரவாதிகள் இரு சாராருமே நாம் என்னவாக இருக் கிறோம், மேலும் இவர்கள் (பி.கு) என்னவாக இருக்கிறார்கள் என்று புரிந்து கொள்வார்கள். நல்லது.

அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? கடினம் எதுவும் இல்லை தான் இல்லையா. நீங்கள் சகஜயோகியா? நீங்கள் சகஜ சேவாதாரியா?

(வெளிநாட்டைச் சேர்ந்த சகோதரிகள் வெளிநாட்டுச் சேவைக்காக தீதி மற்றும் தாதியை வெளிநாட்டிற்கு வருவதற்காக அழைப்பு கொடுக்கிறார்கள்). தற்சமயம் அதாவது 1983-தொடக்கத்திலேயே இங்கு அனைவரையும் அழைத்து வர வேண்டும், மேலும் அனைவருக்கும் இங்கே கண்டிப்பாக வந்து தான் ஆக வேண்டும் என்றால் இங்கே உள்ள சேவையின் மேல் விசேஷ கவனம் கொடுப்பதற்கான அவசியம் இருக்கிறது. மேலும் அங்கிருந்தும் ஒருவேளை ஐ. நா சபை ஆகியவற்றிலிருந்து விசேஷ அழைப்பிதழ் கிடைத்திருக்கிறது என்றால், அங்கேயும் அவசியம் செல்ல வேண்டும். மற்றபடி என்னென்ன நம்முடைய மகாநாடுகள் ஆகியவற்றை செய்கிறீர்களோ அதற்கு இவ்வளவு அவசியம் இல்லை. ஏனென்றால் அவர்களைத் தான் இங்கு அழைத்து வர வேண்டும். எனவே அனைத்து விஷயங்களையும் பார்க்கும் போது இப்பொழுது அந்த அளவு அவசியம் தென்படவில்லை. மற்றபடி வெளிநாட்டில் இந்த நேரம் இங்கே மற்றும் அடுத்த நேரம் அங்கே, என்று அப்படி இருக்கிறது. அந்த மாதிரி ஏதாவது காரியம் நடந்தது என்றால் வந்து சேர்ந்து விடுவார்கள்.

ஐ.நா. சபையின் தொடர்பை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இந்த தொடர்பை அதிகப்படுத்துவது தான் சேவை. இன்னும் எவ்வளவு முடியுமோ அவர்களை குடும்ப தொடர்பில் கொண்டு வாருங்கள். எப்படி ஐ. நா சபையிலிருந்து வந்திருக்கும் இந்த கருத்துக்களும் அன்பு, தொடர்பின் காரணமாக ஈர்க்கப்பட்டது தான் இல்லையா? அன்பு நிறைந்த பாலனை கிடைத்தது. ஏனென்றால் பெரிய பெரிய அதிகாரிகள் எங்கு இருக்கிறார்களோ அவர்கள் அங்கே அதே பதவியில் இருக்கும் காரணத்தினால் பதவிக்குத் தகுந்தாற்போல் இருப்பார்கள். அவர்களுக்கு, அன்பு பாலனை கிடைப்பதில்லை. இங்கேயோ உறவின் ரசனை கிடைக்கிறது. இது தான் இங்கே இருக்கும் விசேஷம். யாரெல்லாம் தொடர்பு உறவில் வருகிறார்களோ அவர்களுக்கு பரிவாரத்தின் உணர்வு வர வேண்டும். ஏதோ மிக நெருக்கமான ஆத்மா காணாமல் போனது கிடைத்து விட்டது என்று அனுபவம் செய்ய வேண்டும். தொடர்பை அதிகரிப்பது இந்த சேவை சரி தான். எவ்வளவுக்கு எவ்வளவு அருகாமையில் வந்து கொண்டே இருப்பார்களோ அந்த அளவு

இவர்களிடம் என்ன தேவையோ அது தான் இருக்கிறது என்று அனுபவம் செய்வார்கள்.

**ஸ்டீவ் நாராயண் (கயானாவின் துணை ஜனாதிபதி):** அவர்களின் பரிவாரத்திற்கு அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டே அவர்களுக்கு மிகுந்த உள்ளப்பூர்வமான நினைவை கொடுங்கள். உடலால், மனதால், பணத்தால் மூன்று விதமாகவும் மிக நல்ல முழுமையான சகயோகி, நிச்சயபுத்தி உடைய, நம்பர் ஒன் குழந்தைகள். அந்த நாட்டின் பட்ஜெட்டின் காரணமாக வர முடியவில்லை ஆனால் பாண்டவ அரசாங்கத்தின் பட்ஜெட்டில் புத்தி மூலம் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். மிகவும் பணிவு நிறைந்த குழந்தை முழு பரிவாரமே நாடகத்தின் அனுசாரம் மிகுந்த சேவை செய்பவர்கள். தைரியமும் மிக நன்றாக இருக்கிறது. முழு பரிவாரமுமே அன்பானவர்கள். மூட நம்பிக்கை இல்லை, ஞானத்தின் ஆதாரத்தில் அன்பு நிறைந்தவர்கள். இவருடைய தொடர்பின் காரணமாகத் தான் அமெரிக்கா சென்றடைந்தோம். இவர்கள் எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்கு, விசேஷ ஆத்மாக்களின் சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள். இதைத் தான் ஒருவரிடமிருக்கும் ஞானத்தினால் அனேகர்கள் மேல் பிரபாவம் என்று சொல்வது. இவர் மிகப் பெரிய மைக். இவரைப் பார்த்து அங்குள்ள அரசாங்கத்தின் மேலும் நல்ல பிரபாவம் ஏற்பட்டிருக்கிறது. ஞானத்தின், யோகாவின் மிக நல்ல பிரபாவம் ஏற்பட்டிருக்கிறது. இவர் நல்ல சேவாதாரி.

**வரதானம்: எல்லைக்குட்பட்ட இச்சைகளை தியாகம் செய்து அச்சா (நல்லவர்) ஆக ஆவதின் விதி மூலமாக அனைத்து பிராப்தி நிரம்பியவர் ஆகுக!**

யார் எல்லைக்குட்பட்ட இச்சைகள் வைக்கிறார்களோ அவர்களுடைய இச்சைகள் ஒருபொழுதும் நிறைவேறுவதில்லை. நன்றாக ஆகுபவரின் அனைத்து நல்விருப்பங்களும் இயல்பாகவே நிறைவேறிவிடுகிறது. வள்ளலின் குழந்தைகளிடமிருந்து எதையும் கேட்பதற்கான அவசியமே இருப்பதில்லை. கேட்பதினால் எதுவும் கிடைப்பதுமில்லை. கேட்பது என்றால் இச்சை. எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் எண்ணம் இன்றி எல்லைக்குட்பட்ட இச்சை என்னவாக இருக்குமோ அது அவசியம் நிறைவேறும். எனவே எல்லைக்குட்பட்ட இச்சைக்கு பதிலாக நல்லவராக

ஆவதின் விதியைக் கடைபிடித்தீர்கள் என்றால் அனைத்து பிராப்திகளினால் நிரம்பியவர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: நினைவு மற்றும் சுயநலமற்ற சேவை மூலமாக மாயாவை வென்றவர் ஆவது தான் வெற்றி அடைபவர் ஆவது!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 20.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பின் உறவை சீராக வைத்துக் கொள்வதற்கான சகஜ முறை -பாடுவது மற்றும் ( நடனம் ) ஆடுவது!

இன்று பரம்ஜோதியாக (சுடர்விட்டு எரியும் விளக்காக) இருக்கும் தந்தை தன்னுடைய விட்டில் பூச்சிகளின் ஆன்மீக சபையில் வந்திருக்கிறார். இந்த ஆன்மீக சபை எவ்வளவு தெய்வீகமானது மற்றும் சிரேஷ்டமானது. விளக்கு அதாவது பரம் ஜோதியும் அழியாதவர், விட்டில் பூச்சிகளும் (ஆத்மாக்களும்) அழியாதவர்கள். மேலும் பரம்ஜோதி மற்றும் விட்டில்பூச்சிகளுக்கு இடையில் இருக்கும் அன்பும் அழியாதது. இந்த ஆன்மீக அன்பை பரம் ஜோதியானவிளக்கு மற்றும் விட்டில்பூச்சிகளைத் தவிர வேறு யாரும் தெரிந்து கொள்ள முடியாது. யாரெல்லாம் தெரிந்து கொண்டார்களோ அவர்கள் அன்பை முறையாக வைத்து நடந்து கொண்டார்கள். மேலும் அவர்கள் தான் அனைத்தையும் அடைந்தார்கள். அன்பின் உறவு முறை சீராக வைத்து நடந்து கொள்வது என்றால் அனைத்தையும் அடைவது அன்பு வைத்து கொள்ளத் தெரியாது என்றால் அடையவும் தெரியாது. இந்த அன்பின் அனுபவியாக இருப்பவர், இந்த அன்பின் உறவை வைத்து நடந்து கொள்வது எவ்வளவு சுலபமானது என்று தெரிந்திருக்கிறார். அன்பை வைத்து நடந்து கொள்வது என்றால் என்ன என்று தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? இரண்டு விஷயங்களைக் கடைபிடிப்பதில் தான் இருக்கிறது. மேலும் அதுவும் அந்த அளவு சரளமானது. அதை நீங்கள் அனைவரும் தெரிந்தும் இருக்கிறீர்கள். மேலும் அனைவரும் செய்யவும் முடியும். அந்த இரண்டு விஷயங்கள் - பாடல் பாடுவது மற்றும் நடனம் ஆடுவது. நீங்கள் அனைவரும் இதன் அனுபவிகள் தான் இல்லையா? பாடுவது மற்றும் நடனம் ஆடுவதோ அனைவருக்கும் பிடித்தமானது தான் இல்லையா? அப்படியானால் இங்கே என்ன தான் செய்ய வேண்டியதிருக்கிறது?

அமிர்தவேளையிலிருந்து பாடல் பாடுவதை தொடங்குகிறீர்கள். தினசரி நடவடிக்கைகளில் கூட எழுந்திருப்பது கூட பாடல் மூலம் எழுந்திருக்கிறீர்கள். அப்படி தந்தையின் மற்றும் தன்னுடைய சிரேஷ்ட வாழ்க்கையின் மகிமையின் பாடலை பாடுங்கள், ஞானத்தின் பாடலைப் பாடுங்கள் அனைத்து பிராப்திகளின் பாடலைப் பாடுங்கள். இந்தப் பாடலைப் பாடத் தெரியாதா? தெரியும் தான் இல்லையா எனவே பாடலைப் பாடுங்கள். மேலும் குஷியில் நடனமாடுங்கள். குஷியில் ஆடி ஆடி ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். எப்படி ஸ்தூலமான நடனத்திலும்

கூட முழு உடலின் நடனம் ஆகி விடுகிறது. டிரில் (பயிற்சி) ஆகி விடுகிறது. விதவிதமான தோற்றத்தில் நடனமாடுகிறீர்கள். அந்த மாதிரி குஷியின் நடனத்தில் விதவிதமான நடனத்தின் அபிநயத்தைக் காட்டுகிறீர்கள். சில நேரம் கையின் நடனம் ஆடுகிறீர்கள், சில நேரம் கால்களை நடனமாட வைக்கிறீர்கள். அப்படி கர்மயோகி ஆவது என்றால் விதவிதமான வகையில் குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பது பாப்தாதாவிற்கு அல்லது விளக்கொளிக்கு யாருக்கு பாடவும், நடனமாடவும் தெரியுமோ அவரைத் தான் மிகவும் பிடிக்கும். இதுவே தான் அன்பின் நடைமுறை வெளிப்பாடு அப்படி இதுவோ கடினம் இல்லை தான் இல்லையா? சுலபமா அல்லது கடினமா? என்ன அனுபவம் ஆகிறது. இப்பொழுது மதுபன்னில் நீங்கள் ஈஸி ஈஸி (சுலபம். சுலபம்) என்று கூறுகிறீர்கள். மேலும் அங்கே சென்ற பிறகும் ஈஸி ஈஸி என்று கூறுவீர்கள் இல்லையா? அங்கே சென்று மாறி விட மாட்டீர்களே? (இங்கே சுலபமாக இருக்கிறது, மேலும் அங்கே சென்ற பிறகு நீங்கள் பிஸியாகி விடுவீர்கள்) மாற மாட்டீர்கள், இல்லையா? (இங்கே ஈஸியாக இருக்கிறது. அங்கே பிஸியாகி விடுவீர்கள்) ஆனால் சுலபமாகப் பாடுவதும், ஆடுவதிலுமேயே பிஸியாக இருப்பீர்கள் தான் இல்லையா?

எப்பொழுதுமே காதுகளில் இதே இனிமையான இசையை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால், பாடுவது மற்றும் ஆடுவதின் கூடவே இசையும் வேண்டும் தான் இல்லையா? எந்த இசையை கேட்டுக் கொண்டே இருப்பீர்கள்? (முரளி) முரளியில் கூட சாரமாக ஒவ்வொரு முரளியிலும் பாப்தாதா இனிமையான குழந்தைகளே, செல்லமான குழந்தைகளே, கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளே என்று கூறி என்ன

அன்பு நினைவுகள் கூறுகிறாரோ இந்த தந்தையின் அன்பின் இசையை எப்பொழுதும் காதுகளில் கேட்டுக் கொண்டே இருங்கள். பிறகு மற்ற விஷயங்களைக் கேட்டாலும் கூட உங்களுக்கு அது புரியாது, புத்தியில் அது வராது. ஏனென்றால், இந்த ஒரே ஒரு இசையைக் கேட்பதிலேயே பிஸியாக இருப்பீர்கள் இல்லையா? அப்பொழுது மற்றதை எப்படிக் கேட்க முடியும்? அந்த மாதிரியே எப்பொழுதும் பாடல் பாடுவதில் பிஸியாக இருந்தீர்கள் என்றால், மற்ற வீணான விஷயங்களை வாய் மூலம் பேசுவதற்கு நேரமே இருக்காது. எப்பொழுதும் தந்தையுடன் குஷியில் நடனமாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால், மூன்றாமவர் யாரும் உங்களை இடையூறு செய்ய முடியாது இருவரின் இடையில் யாரும் வர முடியாது. அப்படி மாயாவை வென்றவராக ஆகியே விட்டீர்கள் இல்லையா? கேட்க வேண்டாம். சொல்ல வேண்டாம், மாயாவும் வர வேண்டாம். அப்படி அன்பை நல்ல முறையில் வைத்து நடந்து கொள்வது என்பது என்ன? பாடுவது மற்றும் நடனமாடுவது எப்பொழுது இந்த இரண்டில் களைப்படைந்து விடுகிறீர்கள் என்றால், மூன்றாவது விஷயம் தூங்கி விடுங்கள். இங்கே தூங்குவது என்றால் என்ன? தூங்குவது என்றால் காரியம் செய்வதிலிருந்து விலகி விடுவது! அப்படி நீங்கள் கர்ம இந்திரியங்களிலிருந்து விலகி விடுங்கள். அசரீரி ஆவது என்றால். தூங்கி விடுவது. பாப்தாதாவின் நினைவு தான் அவருடைய மடி ஆகும். எனவே எப்பொழுது களைத்து விடுகிறீர்களோ அப்போது அசரீரி ஆகி, அசரீரியான தந்தையின் நினைவில் தன்னையே மறந்து மூழ்கி விடுங்கள். அதாவது தூங்கி விடுங்கள் மிகவும் பாடுகிறார்கள் மேலும் நடனம் ஆடுகிறார்கள் என்றால், உடலால் களைப்படைந்து விடுகிறார்கள். எனவே விரைவில் தூக்கம் வந்து விடுகிறது. அதே போல் இந்த ஆன்மீகப் பாடலை பாடிக் கொண்டே குஷியில் நடனம் ஆடிக் கொண்டே தூங்குவீர்கள் மற்றும் உங்களையே மறந்து மூழ்கி விடுவீர்கள். முழு நாளும் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? மேலும் இரட்டை வெளிநாட்டினரோ இந்த விஷயத்தில் மிகுந்த ஆர்வம் வைப்பவர்கள் அப்படி எந்த விஷயத்தில் ஆர்வம் இருக்கிறதோ அதையே செய்யுங்கள். அவ்வளவு தான். தூங்குகிறீர்கள் என்றாலும் மிகுந்த ஆர்வத்தோடு தூங்குங்கள். அப்படி மூன்று விஷயங்களையும் செய்யத் தெரியும். அப்படி அன்பின் உறவுமுறையை வைத்துக் கொள்வதற்கான சகஜ வழி என்ன என்று புரிந்து கொண்டீர்களா?

நல்லது. இப்பொழுது இரட்டை வெளிநாட்டினர் ஒரு வார்த்தையை இங்கேயே விட்டுச் செல்லுங்கள். அது எது? (அனைவரும் ஏதோ ஏதோ விஷயங்கள் கூறினார்கள் சிலர் சோர்வு என்று சொன்னார்கள், சிலர் களைப்பு என்று கூறினார்கள்) நல்லது. நீங்கள் என்ன கூறுகிறீர்களோ அதிலிருந்து அது இன்னும் உங்களிடம் இருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. நல்லது, சொல்வது என்றால் விடுவது. அப்படி ஒரு வார்த்தை டிப்ரெஷன் (மனச் சோர்வு) என்று ஒருபொழுதும் கூறாதீர்கள். ரியலைசேஷனே (உணர்வதே) அன்றி டிப்ரெஷன் இல்லை. யார் தந்தையின் உறவை துண்டித்து விடுகிறார்களோ அவர்கள் டிப்ரெஷனில் வந்து விடுகிறார்கள். நீங்களோ தந்தையின் நிரந்தரமான துணைவர்கள். எனவே டிப்ரெஷன் என்ற வார்த்தை நன்றாக இல்லை. செல்ஃப் ரியலைசேஷன் (தன்னை உணருதல்) ஆகி விட்டது என்றால், பிறகு டிப்ரெஷன் எப்படி இருக்க முடியும், புரிந்ததா? எப்பொழுது துவாபரயுகம் முடிந்து, கலியுகம் தொடங்கி விட்ட பிறகு வேண்டுமென்றால் இருக்கலாம். அந்த காலம் வரையிலாவது இதை உங்களிடமிருந்து துண்டித்து விடுங்கள். நல்லது.

பரிவர்த்தனை (மாற்றம்) பூமியில் அழியாத பரிவர்த்தனை செய்யக்கூடிய, எப்பொழுதும் அன்பின் உறவுமுறையை நன்றாக வைத்து நடக்கும், விளக்கொளியின் மனதிற்கு விருப்பமான விட்டில் பூச்சிகளுக்கு, எப்பொழுதும் ஆன்மீகப் பாடலைப் பாடும், குஷியில் நடனமாடிக் கொண்டிருக்கும், எப்பொழுது விருப்பமோ அப்போது தந்தையின் மடியில் தூங்கி விடுகின்ற அந்த மாதிரி காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்

**டீச்சர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு (இரட்டை வெளிநாட்டு டீச்சர்கள்):** அனைவரும் அவரவர்களின் சக்திக்கேற்றபடி சேவை செய்ததின் ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். மேலும் கொடுத்துக் கொண்டே இருப்பீர்கள். சேவாதாரி என்றால், ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு மூச்சு, ஒவ்வொரு எண்ணத்திலும் உலக மேடையில் தனது பங்கைச் செய்பவர். எப்பொழுதும் தன்னை உலக மேடையில் கதாநாயக பாத்திரம் ஏற்றுச் செய்யும் சிரேஷ்ட ஆத்மா என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். இதுவும் நாடகத்தில் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அப்படி மற்றவர்களின் பொறுப்பாளர் ஆவதினால் இயல்பாகவே சுயம்

அவர் அந்த விஷயங்களில் கவனம் வைக்கிறார். எனவே எப்பொழுதும் தன்னை சேவையில் ஆஜராக இருக்கும் பாப்தாதாவின் துணைவன் என்ற நினைவிலிருந்து ஒவ்வொரு காரியமும் செய்து கொண்டே இருங்கள். எப்பொழுதும் முன்னேறிச் செல்வீர்கள் மற்றும் மற்றவர்களை முன்னேற வைப்பீர்கள். நல்ல தைரியமும் வைத்திருக்கிறீர்கள். தந்தையின் உதவியும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும். பொறுப்பிலிருக்கும் ஆசிரியர் ஆவது அல்லது ஆன்மீக சேவாதாரி ஆவது என்றால், தந்தையைப் பின்பற்றி நடப்பது எனவே நீங்கள் தந்தைக்குச் சமமான தந்தையின் செல்லக் குழந்தைகள். பாப்தாதாவும் சேவாதாரிகளைப் பார்த்து குஷி அடைகிறார். அனைவரும் எப்பொழுதும் தன்னை பொறுப்பிருப்பவர் அதாவது கருவி என்று புரிந்து, மேலும் பணிவானவராகி நடந்து கொள்ளுங்கள். எந்த அளவு தன்னை ஒரு கருவி என்று புரிந்து கொண்டு மேலும் பணிவானவராகி நடந்து கொள்வீர்களோ அந்த அளவு சேவையில் சுலபமாக வளர்ச்சி இருக்கும். ஒருபொழுதும் நான் செய்தேன் நான் டீச்சர் ஆவேன், இந்த நான் என்ற உணர்வை வைக்காதீர்கள். இப்படி வைப்பது தான் சேவை செய்வதற்குப் பதிலாக நிற்கும் கலையில் வருவதற்கான ஆதாரம், நடைமுறையில் சில நேரம் சேவை குறைந்து விடுகிறது அல்லது தொய்வாகி விடுகிறது என்றால், விசேஷமாக அதற்கான காரணம் கருவி என்று புரிந்து கொள்வதற்குப் பதிலாக நான் என்ற உணர்வு வந்து விடுகிறது. மேலும் இதன் காரணமாகத் தான் சேவை தொய்வடைந்து விடுகிறது. பிறகு தன்னுடைய குஷி மற்றும் போதையும் மறைந்து விடுகிறது. எனவே ஒருபொழுதும் நீங்களே இந்த நினைவிலிருந்து விலகி விடாதீர்கள். மேலும் மற்றவர்களை தந்தையிடமிருந்து ஆஸ்தி பெறுவதில் வஞ்சித்து விடாதீர்கள். இன்னொரு விஷயம் எப்பொழுதும் சுய மாற்றத்தினால் - குடும்பத்தின் எந்தவொரு ஆத்மாவையும் மாற்ற வேண்டும். மேலும் உலகத்தையும் மாற்ற வேண்டும்' என்ற இந்த சுலோகனை நினைவில் வையுங்கள். சுயமாற்றத்தின் மேல் விசேஷ கவனம் கொடுங்கள் பிறகு சேவை இயல்பாகவே வளர்ச்சி அடையும். குறைவதற்கான காரணமும் புரிந்து கொண்டீர்கள். மேலும் அதிகரிப்பதற்கான ஆதாரத்தையும் புரிந்து கொண்டீர்கள். எனவே எப்பொழுதும் குஷியில் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். மேலும் மற்றவர்களையும் குஷியில் கொண்டு வந்து கொண்டே இருப்பீர்கள். புரிந்ததா?

அதனால் நம்பர் ஒன் தகுதியான டீச்சர் மற்றும் நம்பர் ஒன் சேவாதாரிகளின் வரிசையில் வந்து விடுவீர்கள். அப்படி இரட்டை வெளிநாட்டினர் அனைவரும் நம்பர் ஒன் டீச்சர் தான் இல்லையா. நன்றாக உழைக்கிறீர்கள், மேலும் தந்தை மேல் அன்பும் நன்றாக இருக்கிறது. நிரூபணத்தையும் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தையும் சேவாதாரி அதாவது டீச்சர். சேவை நிலையத்தில் இருந்தாலும் அல்லது வேறு எங்கிருந்தாலும் ஆனால் சேவாதாரி. ஏனென்றால் பிராமணர்களின் பதவியே சேவாதாரி. ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கென்ற சேவையின் பங்கு கிடைத்திருக்கிறது. சிலருக்கு அழைத்து வருவதின் சேவை செய்ய வேண்டும், சிலருக்கு ஞானம் சொல்வதின், சிலருக்கு போக் தயாரிப்பதின் சேவை மற்றும் சிலருக்கு போக் ஸ்வீக்காரம் (பாபாவிற்கு வைப்பது) செய்விப்பதின் சேவை கிடைத்திருக்கிறது. அனைவரும் சேவாதாரி. பாப்தாதா அனைவரையும் சேவாதாரி என்று தான் நினைக்கிறார்.

**அகில உலக மாநாட்டிற்காக அனைவரும் புதுப்புது திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதை பாப்தாதாவிடம் கூறுகிறார்கள்.** திட்டத்தை உருவாக்குவதில் நன்றாக உழைத்திருக்கிறீர்கள். அதற்காக பாராட்டுக்கள்! இதற்காகவும் உங்கள் புத்தியை செலவழித்தீர்கள் அதாவது தன்னுடைய வருமானத்தை சேமித்தீர்கள். எனவே மீட்டிங் நடத்தவில்லை ஆனால் சேமிப்பு செய்தீர்கள். எப்பொழுதும் தடையற்ற, எப்பொழுதும் தடைகளை அழிப்பவராக மற்றும் எப்பொழுதும் திருப்தியாக இருங்கள். மேலும் அனைவரையும் திருப்திப் படுத்துங்கள். இந்த சான்றிதழை எப்பொழுதும் பெற்றுக் கொண்டே இருங்கள். இந்த சான்றிதழைப் பெறுவது என்றால், ஆசனதாரி ஆவது திருப்தியாக இருப்பதற்கும் மேலும் அனைவரையும் திருப்திப் படுத்துவதற்கான லட்சியத்தை வையுங்கள். இரண்டிற்குமான சமநிலை வையுங்கள். நல்லது. என்ன திட்டத்தை உருவாக்கி இருக்கிறீர்களோ அவை அனைத்தையும் நடைமுறையில் கொண்டு வாருங்கள். வி.ஐ.பி-களின் குரூப்பை அழைத்து வாருங்கள்.

**வெளிநாட்டின் டீச்சர் சகோதரிகள் அவ்யக்த பாப்தாதாவுடன் பிக்னிக் செய்தார்கள்:** பிக்னிக் செய்தாகி விட்டதா? கேட்டுக் கொண்டோ எப்பொழுதும் இருக்கிறீர்கள். சில நேரம் அருந்துவீர்கள், சில

நேரம் கேட்பீர்கள். இது தானே ஈஸ்வரிய குடும்பத்தின் விசேஷம். இந்த நேரம் ஆசிரியரின் எதிரில் அடுத்த நேரம் தந்தையின் எதிரில், பிறகு தோழனின் எதிரில். இந்த பல ரூபங்களின் அனுபவம் முழு கல்பத்தில் யாரும் செய்யவும் முடியாது. செய்விக்கவும் முடியாது. சங்கமயுகத்தில் தந்தை ஒருவரின் பங்கு தான் இது. ஒருவேளை சத்யுகத்தில் பாப்தாதாவுடன் பிக்னிக் செய்யலாம் என்று விரும்பினீர்கள் என்றால் செய்ய முடியுமா? இப்பொழுது என்ன விரும்புகிறீர்களோ, எந்த ரூபத்தில் விரும்புகிறீர்களோ அதே ரூபத்தில் சந்திப்பை செய்ய முடியும். எனவே இதுவும் விசேஷ சேவாதாரிகள் உங்களுடைய பாக்கியம்.

பாப்தாதாவோ அமிர்தவேளையிலிருந்து ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தை எத்தனை விதமான பாக்கியம் ஒவ்வொரு ஆத்மாவில் நிரம்பியிருக்கிறது என்று பார்த்துக் கொண்டே இருக்கிறார். அமிர்தவேளை தான் பாக்கியத்தை கொண்டு வருகிறது. ஆன்மீக சந்திப்பின் பாக்கியத்தை அமிர்தவேளை தான் கொண்டு வருகிறது இல்லையா? ஒவ்வொரு காரியத்தில் உங்களுக்கு பாக்கியம் இருக்கிறது. பார்க்கிறீர்கள் என்றால், தந்தையைப் பார்க்கிறீர்கள். இந்தக் கண்கள் கிடைத்திருப்பதே தந்தையை பார்ப்பதற்காகத் தான். காதுகள் கிடைத்திருக்கின்றன - தந்தை கூறுவதைக் கேட்பதற்காக. அப்படி பாக்கியம் ஆகி விட்டது இல்லையா? ஒவ்வொரு கர்மேந்திரியத்திற்குப் பாக்கியம் இருக்கிறது. கால்கள் கிடைத்திருக்கின்றன, ஒவ்வொரு அடி மேல் அடி எடுத்து வைப்பதற்காக அப்படி ஒவ்வொரு கர்மேந்திரியத்திற்கும் அதனதன் பாக்கியம் இருக்கிறது. பட்டியலை எடுத்தீர்கள் என்றால், முழு நாளில் எத்தனை பாக்கியம் பிராப்தி ஆகிறது. தந்தையைப் பார்த்தீர்கள் தந்தை கூறுவதை கேட்டீர்கள், தந்தையுடன் சேர்ந்து தூங்கினீர்கள், தந்தையுடன் சேர்ந்து உணவருந்தினீர்கள், அனைத்தையும் தந்தையுடன் செய்கிறீர்கள். சேவை செய்தீர்கள் என்றால் தந்தையின் அறிமுகம் கொடுத்தீர்கள் தந்தையோடு சந்திக்க வைத்தீர்கள். என்றால் எத்தனை பாக்கியம்! அப்படி பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தின் ரேகை எவ்வளவு தெளிவானதாக மற்றும் நீளமானதாக இருக்கிறது என்று எப்பொழுதும் பார்க்கிறார். பாக்கியத்தின் ரேகை இடையிடையில் துண்டிப்பதில்லையே? இணைகிறது மற்றும் துண்டிக்கப்படுகிறதா அல்லது எப்பொழுதிலிருந்து இணைந்ததோ அப்பொழுதிலிருந்து துண்டிப்படாமல் உறுதியாக

இருக்கிறதா? துண்டுபடாமல் ரேகை பிறகு மாறி விடுகிறது. எனவே துண்டிக்கப்படாது உறுதியானதாக இருக்க வேண்டும். அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். தந்தைக்கு வேறு என்ன தான் வேலை இருக்கிறது? உலக சேவைக்காக உங்களைப் பொறுப்பாளர் ஆக்கி விட்டோம். இன்னும் மிச்சம் தந்தை செய்ய வேண்டிய வேலை தான் என்ன இருக்கிறது? (பாபா தானே அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறார்). முதுகெலும்பாக ஆவதின் காரியம் மட்டும் தான் தந்தையினுடையது. மற்றபடி குழந்தைகளோடு சந்திப்பது, குழந்தைகளைப் பார்ப்பது, குழந்தைகளோடு ஆன்மீக உரையாடல் செய்வது, குழந்தைகளை நன்றாக வைத்துக் கொள்வது. இந்த வேலை தான் இருக்கிறது இல்லையா? உங்களுக்கு உலகத்தோடு வேலை இருக்கிறது. மேலும் தந்தைக்கு குழந்தைகள் உங்களோடு வேலை இருக்கிறது. உலகின் எதிரில் தந்தையைக் காண்பிக்கிறீர்கள் என்றால், நீங்கள் குழந்தைகள் ஆகி விட்டீர்கள் இல்லையா? குழந்தைகள் மூலமாகத் தந்தை தென்படுவார். முதுகெலும்பாகவோ தந்தை தான் இருக்கிறார். ஒருவேளை தந்தை முதுகெலும்பாக ஆகவில்லை என்றால், நீங்கள் தனியாக களைப்படைந்து விடுவீர்கள். பாசமும் இருக்கிறது தான் இல்லையா? எனவே குழந்தைகள் களைப்படைவதை தந்தையால் பார்க்க முடியாது. எனவே பாருங்கள், ஒவ்வொரு வருடமும் நீங்கள் இங்கே வருகிறீர்கள், களைப்பை அகற்றுவதற்காக. இங்கே வந்து சேவையின் பொறுப்பு கிரீடத்தை இறக்கி விடுகிறீர்கள் தான் இல்லையா? அங்கேயோ ஒவ்வொரு விஷயத்திலும் யாராவது பார்த்துக் கொண்டிருக்கவில்லையே, யாராவது கேட்டுக் கொண்டிருக்கவில்லையே என்று கவனம் கொடுப்பீர்கள். இங்கு ஒருவேளை ஏதாவது நடந்தாலும் கூட தீதி, தாதி மற்றும் பாப்தாதா அமர்ந்திருக்கிறார்கள். அவர்களே சரி செய்து விடுவார்கள் என்று புரிந்து கொள்வீர்கள். இருந்தாலும் இங்கு சுதந்திரமாக இருக்கிறீர்கள். வெளிநாட்டு சேவையில் அனுபவம் கூட நல்ல நன்றதாக ஏற்படுகிறது தான் இல்லையா? இரட்டை ஞானம் நிறைந்தவராக ஆகி விட்டீர்கள் இல்லையா? நல்லது.

**வரதானம்: பரந்த மனமுடையவராகி துக்கமான அமைதியற்ற ஆத்மாக்களுக்கு குஷியின் தானம் கொடுக்கக்கூடிய மாஸ்டர் இரக்க மனமுடையவர் ஆகுக!**

தற்சமயம் மனிதர்களுக்கு பிற அனைத்தும் கிடைக்க முடியும் ஆனால் உண்மையான குஷி கிடைக்க முடியாது எனவே அந்த மாதிரி நேரத்தில் துக்கமான அமைதியற்ற ஆத்மாக்களுக்கு, குஷியின் அனுபவத்தை செய்து விட்டீர்கள் என்றால், அவர்கள் உள்ளப்பூர்வமாக ஆசீர்வாதம் கொடுப்பார்கள். நீங்கள் வள்ளன் குழந்தைகளாக இருக்கிறீர்கள் என்றால், பரந்த மனதோடு குஷியின் பொக்கிஷத்தை அனைவருக்கும் கொடுங்கள். இரக்க மனம் என்ற குணத்தை வெளிப்படுத்துங்கள். இவரோ நாம் சொல்வதைக் கேட்கக் கூடியவரே இல்லை என்று ஒருபொழுதும் அந்த மாதிரி நினைக்காதீர்கள். ஒருவேளை யாராவது எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்றாலும். நீங்கள் உங்களுடைய இரக்க உணர்வை விடாதீர்கள். இரக்க பாவனை, நல்ல பாவனை அவசியம் பலன் கொடுக்கும்.

**சுலோகன்: ஞானம் யோகத்தின் பாலனை தான் ஆன்மீக பாலனை -இந்த பாலனை மூவம் சக்திசாலியாக ஆகுங்கள் மற்றும் ஆக்குங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 22.01.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வாழ்த்துக்கள் வழங்குவதோடு, விடை கொடுத்தலையும் செய்யுங்கள்!

இன்று உலகிற்கு நன்மை செய்யும் பாப்தாதா உலகில் நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளை நேரெதிரில் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளும் தங்களுடைய நினைவின் சக்தி மூலம் ஒளி வடிவ உடல் ரூபத்தில் மதுபனிற்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் பாபாவை சந்திக்க வேண்டும் என்ற நல் எண்ணம் இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஏனென்றால், பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தை தெரிந்திருக்கிறார். அதே விசேஷத்தின் ஆதாரத்தில் ஒவ்வொருவரும் அவரவர்களின் விசேஷ பங்கை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பிராமண ஆத்மா கூட விஷேசமின்றி சாதாரணமாக இல்லை என்பது தான் பிராமண ஆத்மாக்களின் மற்றும் பிராமண பரிவாரத்தின் புதுமை ஆகும். அனைத்து பிராமணர்களும் ஆன்மீக ஜென்மம் எடுத்தவர்கள், ஆன்மீகத்தன்மை இருக்கிறது. எனவே அனைவரும் ஆன்மீகமானவர்கள் அதாவது ஏதாவது விஷேசத்தின் காரணமாக விஷேச ஆத்மா. விஷேசத்தின் ஆன்மீகத்தன்மை இருக்கிறது, எனவே அனைவரும் விஷேச ஆத்மாக்கள் என்று பாப்தாதாவிற்கு குழந்தைகள் மேல் பெருமிதம் இருக்கிறது. அதே போலவே இந்த ஆன்மீக ஜென்மத்தின், ஆன்மீக நிலையின், மாஸ்டர் சர்வ சக்திவானின் போதை தனக்குள் இருப்பதாக நினைக்கிறீர்களா? இந்த போதை அனைத்து விதமான பலஹீனங்களையும் அகற்றக்கூடியது. எனவே நிரந்தரமாக அனைத்து பலஹீனங்களுக்கு விடை கொடுப்பதற்கான முக்கியமான வழி, எப்பொழுதும் தனக்கும் மற்றும் அனைத்து சங்கமயுகத்தின் விஷேச ஆத்மாக்களின் விஷேச பங்கிற்காக வாழ்த்துக்கள் கொடுங்கள். ஏதாவது முக்கியமான நாள், ஏதாவது முக்கியமான காரியங்கள் செய்கிறீர்கள் என்றால் என்ன செய்வீர்கள்?

அதற்கான வாழ்த்துக்கள் தெரிவிக்கிறீர்கள் தான் இல்லையா, ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறீர்கள். அப்படி முழுக் கல்பத்தில் சங்கம யுகத்தின் ஒவ்வொரு நாளும் விஷேச நாளாகும். மேலும் விஷேச யுகத்தின் விஷேச பங்கினை செய்பவர்கள் நீங்கள்! எனவே விஷேச ஆத்மாக்கள் உங்களின் ஒவ்வொரு காரியமும் ஆன்மீகமானது. அதாவது விஷேசமானது. எனவே எப்பொழுதும் உங்களுக்குள்ளும் வாழ்த்துக்களைத் சொல்லுங்கள். மேலும் தனக்கும் வாழ்த்துக்களைக் கூறுங்கள். எங்கு வாழ்த்துக்கள் இருக்குமோ அங்கு விடை பெறுவதும் நடக்கும். எனவே இந்த வெளிநாட்டினரின் சீசனின் சாரமாக 'எப்பொழுதும் வாழ்த்துக்கள் மூலமாக விடை கொடுத்து விடுங்கள்' என்ற இதை நினைவில் வையுங்கள். நீங்கள் இங்கே வந்திருப்பதே விடை கொடுத்து வாழ்த்துக்களைப் பெறுவதற்காகத் தான் என்றால் 'விடை கொடுப்பது மற்றும் வாழ்த்துக்கள்' என்ற இந்த இரண்டு வார்த்தைகளை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். விடை கொடுக்க வேண்டும் என்றில்லாமல், விடை கொடுத்து விட்டோம் என்றிருக்க வேண்டும். வரதான பூமியில் வருவது என்றால், நிரந்தரமாக பலஹீனங்களுக்கு விடை கொடுப்பது! இராவணனையோ எரித்து விடுகிறீர்கள் ஆனால் இராவணனின் வம்சம் தன்னுடைய பலத்தை காண்பிக்கும். எப்படி உங்களுடைய பூலோகத்தில் ஏதாவது பெரிய செல்வந்தர் உடலை விடுகிறார் என்றால், அவருடைய தூரத்து உறவினர்கள் மறந்து போனவர்கள் எல்லாம் வந்து சேர்ந்து விடு கிறார்கள். அப்படி, இராவணனையோ கொன்று விடுகிறீர்கள் ஆனால் அவருடைய வம்சம் யார் தன்னுடைய உரிமையை பெறுவதற்காக எதிர்க்கிறார்கள், அந்த வம்சத்தை அழிப்பதில் சில நேரம் பலஹீனமாக ஆகி விடுகிறீர்கள். எப்படி காமம், கோபம், பேராசை, பற்றுதல் மற்றும் அகங்காரம் இவற்றின் வம்சம் அதாவது,, அம்சம் மிகப் பெரிய ராயல் ரூபத்தில் தன்னுடையவராக ஆக்கி விடுகிறது. எப்படி பேராசையின் அம்சம் தேவை அவசியம். பேராசையில்லை ஆனால் அனைத்தும் தேவையாக இருக்கின்றன. அவசியத்திற்கும் எல்லை இருக்கிறது. ஒருவேளை தேவைகள் எல்லைக்கப்பாற்பட்டு சென்று விடுகின்றன என்றால், அதுவே பேராசையின் அம்சம் ஆகி விடுகிறது.

அதே போல் காம விகாரம் இல்லை, நிரந்தர பிரம்மச்சாரியாக இருக்கிறார் ஆனால் எவரேனும் குறிப்பிட்ட ஆத்மாவிற்கு விஷேச அடிபணிதல்

அல்லது வளைந்து கொடுப்பது இருக்கிறது என்றால், அதற்கான ராயல் ரூபம் அன்பு. அப்படியென்றால் அதிகப்படியான அன்பு காமத்தின் அம்சமாகும். அன்பாக இருப்பது சரி தான் ஆனால் 'அதிகப்படியான அன்பு' அம்சமாகி விடுகிறது.

அதே போன்று கோபத்தையும் வென்று விட்டீர்கள் ஆனால் ஏதாவது ஆத்மாவின் ஏதாவது சம்ஸ்காரத்தைப் பார்த்து, நீங்கள் மனதிற்குள் ஞான சொரூப நிலையிலிருந்து கீழே வந்து விடுகிறீர்கள். மேலும் அதே ஆத்மாவிடமிருந்து விலகிச் செல்வதற்கான முயற்சி செய்கிறீர்கள். ஏனென்றால், அவரைப் பார்த்து அவருடைய தொடர்பில் இருக்கும்போது மனநிலை மேலே கீழே செல்கிறது. எனவே சுபாவத்தைப் பார்த்து ஒதுங்கி விடுவது என்பதும் வெறுப்பு அதாவது கோபத்தின் அம்சமே தான்! எப்படி அக்னி எரியும் போது தூரமாக விலகி இருக்கிறார்கள். அதே போன்று இந்த சூட்சும வெறுப்பும் கோப அக்னிக்கு சமமானது. ஒதுங்கி விட வைத்து விடுகிறது. இதற்கான இராயல் வார்த்தை - தன்னுடைய மனநிலையை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்? அதை விட விலகி இருப்பதே நல்லது என்று நினைக்கிறார்கள். விலகியிருப்பது வேறு, ஒதுங்கி விடுவது வேறு. அன்பானவராகி விலகியிருப்பது வேறு, வராக ஆகிறீர்கள். அது சரி தான் ஆனால் சூட்சும வெறுப்புணர்வு 'இவர் அப்படித் தான், இவரோ மாறவே மாட்டார்'. அந்த மாதிரி நிரந்தரமாக அவருக்கு சூட்சுமத்தில் சாபம் கொடுக்கிறீர்கள். பாதுகாப்பாக இருங்கள், பரவாயி-லை ஆனால் அவருக்கு முடிவான சான்றிதழைக் கொடுக்காதீர்கள். அது போலவே விசேஷத்தைப் பார்த்துக் கொண்டும், எப்பொழுதும் அனைவருக் காகவும் சிரேஷ்ட பாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பங்களை வைத்துக் கொண்டே இந்த அம்சத்திற்கும் விடை கொடுங்கள். தன்னுடைய சிரேஷ்ட பாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பங்களை விடாதீர்கள். தன்னை பாதுகாத்துக் கொண்டே மற்ற ஆத்மாக்களை, கீழே தள்ளிவிட்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாதீர்கள். இந்த வெறுப்புணர்வு என்றால், விழத்தட்டுவது. மற்றவர்களை கீழே தள்ளி தன்னை பாதுகாத்துக் கொள்வது என்பது பிராமணர்களின் விசேஷம் இல்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள், கூடவே மற்றவர்களையும் காப்பாற்றுங்கள். இதைத் தான் விசேஷமானவர்களாவது மற்றும் விஷேசத்தைப் பார்ப்பது! இந்த சின்ன சின்ன விஷயங்கள் (அம்சங்கள்) நடைமுறையில் இரண்டு

சொரூபங்களைக் கொண்டு வந்து விடுகிறது. மனமுடைந்து போவது, இன்னொன்று அலட்சியம். எனவே இப்பொழுது இராவணனின் அம்சத்தை நிரந்தரமாக விடை கொடுப்பதற்காக இந்த இரண்டு ஸ்திதிகளுக்கும் விடை கொடுங்கள். மேலும் எப்பொழுதும் தனக்குள் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் விசேஷத்தைப் பாருங்கள். என்னுடைய விஷேசம் இல்லை, தந்தையிடமிருந்து கிடைத்திருக்கும் விஷேசம். என்னுடைய விஷேசம் என்று நினைத்தீர்கள் என்றால், பின்பு அகங்காரத்தின் அம்சம் வந்து விடும். என்னுடைய விஷேசம் மூலம் ஏன் சேவை செய்விப்பதில்லை, என்னுடைய விஷேசத்தை இவர்கள் உணரவே இல்லை. 'என்னுடையது' எங்கிருந்து வந்தது? விசேஷமான ஜென்மத்தின் பரிசு விசேஷத்தை அடைவது. அப்படி, ஜென்மத்தை கொடுத்தவர், பரிசையும் கொடுத்திருக்கிறார். எனவே 'என்னுடையது' எங்கிருந்து வந்தது? என்னுடைய விஷேசம், என்னுடைய இயல்பு, என்னுடைய மனம் இதைக் கூறுகிறது மற்றும் நான் நினைக்கிறேன்.... என்ற இவை என்னுடையவை (மேரி) அல்ல ஆனால் கவலைகள் (வொரி) நீங்கள் கூறுகிறீர்கள் இல்லையா? வொரி (கவலை), ஹரி மற்றும் கரி என்று. புரிந்ததா? இந்த அம்சத்திற்கு முடிவு கட்டுங்கள். மேலும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் தன்னுடைய விசேஷத்தை மற்றும் மற்றவர்களின் விசேஷத்தை எப்பொழுதும் பாருங்கள். அதாவது எப்பொழுதும் தனக்கும் பிறருக்கும் வாழ்த்துக்களைக் கொடுங்கள். அனைத்து அம்சத்தையும் புரிந்து கொண்டீர்கள் இல்லையா? இப்பொழுது மோகத்தின் அம்சம் எது? மோகத்தை வென்றவராக ஆகவில்லையா என்ன?

நல்லது. மோகத்தின் ராயல் ரூபம் என்பது ஏதாவது ஒரு பொருள் அல்லது நபர் பிடித்தமாக இருக்கிறது, இந்த இந்த பொருட்கள் எனக்கு மிகவும் பிடிக்கும், மோகம் இல்லை, ஆனால் பிடிக்கும். ஒருவேளை ஏதாவது ஒரு நபர் அல்லது பொருள் பிடித்திருக்கிறது என்றால், அனைவரும், அனைத்தும் பிடித்திருக்க வேண்டும்.. மிக முரடான துணியும் நன்றாக இருக்கிறது, நல்ல துணியும் பிடித்திருக்க வேண்டும். 36 உணவும் பிடித்திருக்கிறது என்றால், காய்ந்த சப்பாத்தி மற்றும் வெல்லமும் பிடித்திருக்க வேண்டும். ஒவ்வொரு பொருளும் பிடித்திருக்க வேண்டும், ஒவ்வொரு நபரும் பிடித்திருக்க வேண்டும். இது அதிகமாக பிடித்திருக்கிறது. இவர் எனக்கு அதிகம் பிடிக்கும் என்று அப்படி

நினைத்துக் கொண்டு காரிய விவகாரத்தில் வராதீர்கள். மருந்து இருக்கிறது, மருந்து என்று நினைத்து நன்றாக சாப்பிடுங்கள் ஆனால் பிடித்திருக்கிறது எனவே சாப்பிடுகிறேன் என்று அப்படி வேண்டாம். பிடித்திருக்கிறது என்றால் ஈர்ப்பு செல்லும். இது தான் மோகத்தின் அம்சம். சாப்பிடுங்கள், குடியுங்கள், மகிழ்ச்சியாக இருங்கள் ஆனால் அம்சத்திற்கு விடை கொடுத்து விட்டு விலகி இருப்பவராகி பிரயோகம் செய்வதில் அன்பானவர் ஆகுங்கள். புரிந்ததா?

பாப்தாதாவின் பண்டாராவிலிருந்து (சமையலறையிலிருந்து) இயல்பாகவே நியமப்படி அனைத்தும் கிடைப்பதற்கான வழி செய்யப்பட்டுள்ளது. எனவே எவ்வளவு வேண்டுமோ சாப்பிடுங்கள் ஆனால் தனியாக சாப்பிடாமல் தந்தையுடன் சேர்ந்து சாப்பிடுங்கள். தந்தையுடன் சேர்ந்து சாப்பிடுகிறீர்கள், தந்தையுடன் சேர்ந்து மனமகிழ்ச்சிக்கான காரியங்கள் செய்கிறீர்கள் என்றால், இயல்பாகவே எப்பொழுதும் கோட்டிற்கு உள்ளே அசோக வனத்தில் (சோகமில்லாத வனம்) இருப்பீர்கள். அங்கு இராவணனின் அம்சம் கூட வர முடியாது. எனவே சாப்பிடுங்கள், குடியுங்கள், மகிழ்ச்சியாக இருங்கள் ஆனால் தந்தையுடனும் கோட்டிற்கு உள்ளேயும் இருக்க வேண்டும். பிறகு எந்த விஷயமும் கடினமாக அனுபவம் ஆகாது. ஒவ்வொரு விஷயமும் மனமகிழ்ச்சி கொடுப்பதாக அனுபவம் ஆகும். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று. எப்பொழுதும் மனமகிழ்ச்சிக்கான காரியங்கள் செய்யுங்கள்.

நல்லது, இரட்டை வெளிநாட்டினர் நிரந்தரமாக மனமகிழ்ச்சியோடு இருப்பதற்கான விதியை புரிந்து கொண்டீர்களா? கடினமாக இல்லையே? தந்தையுடன் அமர்ந்து விட்டீர்கள் என்றால், எதுவுமே கடினமாக இருக்காது, ஒவ்வொரு நேரமும் மனமகிழ்ச்சியை அனுபவம் செய்வீர்கள். ஒவ்வொரு விநாடியும் தனக்காகவும் மற்றும் பிறருக்காகவும் வாழ்த்துக்களின் வார்த்தைகள் வெளியாகிக் கொண்டே இருக்கும். எனவே நீங்கள் அனைவரும் விடைகொடுத்து செல்ல வேண்டும் இல்லையா? உங்கள் கூடவே எடுத்துச் செல்ல மாட்டீர்கள் இல்லையா? இந்த அனைத்து அம்சங்களுக்கும் விடை கொடுத்து விட்டு, வாழ்த்துக்கள் பாராட்டுக்களையும் தெரிவித்து விட்டு செல்லுங்கள். அனைத்து வெளிநாட்டு குழந்தைகளும் தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா?

நல்லது. அந்த மாதிரி நிரந்தரமாக விடை கொடுப்பவர்களுக்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். விடை கொடுத்ததற்கான பல மடங்கு வாழ்த்துக்கள்! நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் மன்மனாபவ அதாவது எப்பொழுதும் மனமகிழ்ச்சியோடு இருக்கும், எப்பொழுதும் ஒரு தந்தையில் முழு உலகையும் அனுபவம் செய்யக்கூடிய, அந்த மாதிரி விசேஷங்களைப் பார்க்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**சேவாதாரிகளுடன் சந்திப்பு:** சேவாதாரிகளுக்கு மதுபனிலிருந்து என்ன பரிசு கிடைத்தது? பிரத்யக்ஷ பலனும் கிடைத்தது. மேலும் எதிர்காலத்து பிராப்தியும் சேமிப்பானது. அப்படி இரட்டை பரிசு கிடைத்தாகி விட்டது. குஷி கிடைத்தது. நிரந்தர யோகாவின் பயிற்சி உடையவர் ஆனீர்கள் என்ற இந்த பிரத்யக்ஷ பலன் கிடைத்தது ஆனால் இதன் கூடவே எதிர்காலத்து பிராப்தியும் சேமிப்பானது. அப்படி இரட்டை வாய்ப்பு கிடைத்தது. இங்கே இருக்கும் போது சகஜயோகி, கர்மயோகி, நிரந்தர யோகியின் பயிற்சி கிடைத்து விட்டது. இதே சம்ஸ்காரத்தை அந்த அளவு உறுதியாக்கிச் செல்லுங்கள். அதன் காரணமாக அங்கே சென்ற பிறகும் இதே சம்ஸ்காரம் இருக்க வேண்டும். எப்படி பழைய சம்ஸ்காரங்கள் விரும்பாவிட்டாலும் கூட காரியத்தில் வந்து விடுகின்றன. அப்படி இந்த சம்ஸ்காரத்தையும் உறுதியாக்குங்கள். அப்படி சம்ஸ்காரத்தின் காரணமாக இந்தப் பயிற்சி நடந்து கொண்டே இருக்க வேண்டும். பிறகு மாயா தடை போடாது. ஏனென்றால் சம்ஸ்காரம் உருவாகி விட்டது. எனவே எப்பொழுதும் இந்த சம்ஸ்காரங்களுக்கு கவனம் என்ற அடிக்கோடிட்டுக் கொண்டே இருங்கள். புதுப்பித்து கொண்டே இருங்கள். இங்கே இருக்கும் போது தடையற்றவர்களாக இருந்தீர்கள். எந்த தடையும் வரவில்லை தான்? ஏதாவது மனதால் கூட உங்களுக்குள் மோதல்கள் ஆகியவை நடக்கவில்லை இல்லையா? கூட்டத்தில் விதவிதமானவர்கள் இருந்த போதிலும் 'தந்தையைப் பாருங்கள்' என்றிருந்தீர்களா அல்லது 'சகோதரன் சகோதரியைப் பாருங்கள்' என்பதும் இருந்ததா? யார் எப்பொழுதும் தந்தையைப் பார்ப்பவராக இருப்பாரோ அவர் தான் பாப்தாதாவின் நெருக்கமான குழந்தை. மேலும் யார் தந்தையை பார்ப்பதின் கூடவே சகோதரனை

பார்ப்பது, சகோதரியை பார்ப்பது என்பதையும் செய்து விடுகிறார்கள் என்றால் அவர் நெருக்கமான குழந்தை இல்லை. தூரத்திலிருப்பவர். அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? நெருக்கமாக இருப்பவர்கள் தான் இல்லையா? எனவே எப்பொழுதும் இதே நினைவில் இருந்து கொண்டே இருங்கள். வெளியில் இருந்து கொண்டும் 'தந்தையைப் பாருங்கள் அல்லது தந்தையைப் பின்பற்றுங்கள்' என்ற இந்த பாடத்தை உறுதியாக்கிக் கொண்டே இருங்கள். தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் ஒருபொழுதும் சூழ்நிலைகள் பிரச்சனைகளில் ஆட மாட்டார்கள். ஏனென்றால் தந்தை ஒருபொழுதும் மேலே கீழே ஆடவில்லை தான் இல்லையா. அப்படி தந்தையை பார்ப்பவர்கள் ஆடாத அசையாத ஒரே சீராக இருப்பார்கள். நல்லது. அனைத்து ஆசைகளும் நிறைவேறி விட்டனவா? நீங்கள் அனைவரும் அவரவர்களின் சேவையில் நல்ல பங்கை செய்தீர்கள். நல்ல பங்கை செய்ததற்கான அடையாளம் ஒவ்வொரு வருடமும் தானாகவே அழைப்பு வரும். இது தான் நடைமுறையில் நினைவுச்சின்னத்தை உருவாக்குவது. அந்த நினைவுச்சின்னமோ உருவாகும் தான் ஆனால் இப்பொழுது கூட உருவாகி விடுகிறது. யாராவது நல்ல சேவை செய்கிறீர்கள் என்றால், அனைவரது வாயிலிருந்து அவரையே அழையுங்கள் என்பது தான் வெளியாகும். எனவே அந்த மாதிரி நிரூபிக்க வேண்டும். அதன் காரணமாக சேவாதாரியிலிருந்து நிரந்தர சேவாதாரி ஆகி விடுங்கள். இவரை இங்கேயே வைத்துக் கொள்ளுங்கள் என்று அனைவரும் கூற வேண்டும். நல்லது.

**மதுபன் வாசிகளோடு சந்திப்பு:** மதுபன் நிவாசிகளோ அனைத்து பிராப்தி சொரூபமானவர்களே! ஏனென்றால், மதுபனின் மகிமை, மதுபனின் விசேஷ படிப்பு, மதுபனில் இருக்கும் விசேஷ தொடர்பு, மதுபனின் விசேஷ வாயுமண்டலம் ஆகிய இவை அனைத்தும் உங்களுக்கு பிராப்தி ஆகியிருக்கிறது. வெளியில் இருப்பவர்கள் தங்களுடைய அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றுவதற்காக மதுபனிற்கு வருகிறார்கள். மேலும் நீங்களோ இங்கேயே அமர்ந்திருக்கிறீர்கள். உடலாலும் பாப்தாதா எப்பொழுதும் கூடவே இருக்கட்டும் ஏனென்றால் மதுபனில் அனைவரும் ஸ்தூல ரூபத்தில் துணையின் அனுபவம் செய்கிறார்கள். எனவே உடலாலும் துணை இருக்கட்டும் அதாவது ஸ்தூலமாகவும் துணை இருக்கட்டும் மேலும்

ஆத்மாவோ தந்தையின் கூடவே தான் இருக்கிறது. அப்படி இரண்டு துணை ஆகி விட்டது இல்லையா? அனைத்து விதமான பொக்கிஷங்களின் மேல் அமர்ந்திருக்கிறீர்கள். அப்படி அனைத்து சுரங்கங்களின் அதிபதிகள் ஆகி விட்டீர்கள் இல்லையா? மதுபனில் இருப்பவர்களின் மனதிலிருந்து என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம், அடையாத ஒருபொருளும் இல்லை என்ற பாடல் தான் ஒவ்வொரு விநாடியும், ஒவ்வொரு மூச்சிலும் வெளியாக வேண்டும். மதுபன்னில் இருப்பவர்களோ எப்பொழுதும் புத்தம் புதுப் பொருட்களை அருந்துபவர்கள். அப்படி யார் எப்பொழுதுமே புத்தம் புது பொருளை அருந்துபவர்களாக இருப்பார்களோ அவர்கள் எவ்வளவு ஆரோக்கியமானவர்களாக இருப்பார்கள். நீங்கள் அனைவரும் வரம் பெற்ற ஆத்மாக்கள், எப்பொழுதும் பாப்தாதாவின் வளர்ப்பில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். வெளியில் இருப்பவர்களுக்கோ வேறு சூழ்நிலையில் செல்ல வேண்டியதாக இருக்கிறது. எனவே அவர்களுக்காக முக்கியமாக ஏதாவது வரதானம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. நீங்களோ வரதான பூமியில் அமர்ந்திருக்கிறீர்கள். வெளியில் இருப்பவர்களுக்கோ ஒரு வருடத்திற்காக புத்துணர்வு தேவையாக இருக்கிறது. எனவே உங்களிடம், உங்கள் ஒவ்வொருவருக்கும் பாப்தாதா என்ன கூறுவது!. அவர்களுக்கோ லைட் ஹவுஸ் ஆகி இருங்கள், மைட் ஹவுஸ் ஆகி இருங்கள் என்று கூறுகிறோம். உங்களுக்கும் இதையே கூறலாமா என்ன? வெளியில் இருப்பவர்களுக்கு இந்த விஷயத்தின் அவசியம் இருக்கிறது. ஏனென்றால் இது தான் அவர்களுக்காக தாமரை மலர் ஆகி விடுகிறது, அதன் மேல் விலகியிருப்பவராகவும், மேலும் அன்பானவராகவும் ஆகி இருக்கிறார்கள். பொதுவாகவே வீட்டிற்கு யாராவது வருகிறார்கள் என்றால், அவர்களை கவனிக்கத் தான் வேண்டியதாக இருக்கிறது. நீங்களோ எப்பொழுதுமே வீட்டில் இருக்கிறீர்கள். அவர்களுக்கு இரட்டை பங்கை செய்ய வேண்டியதாக இருக்கிறது. எனவே இரட்டை சக்தியை நிரப்ப வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்காக இந்த ஒவ்வொரு வார்த்தையும் உலகம் என்ற கடலில் படகின் வேலை செய்கிறது. மேலும் நீங்களோ உலகம் என்ற கடலில் இருந்து வெளியாகி ஞானக் கடலின் மத்தியில் அமர்ந்திருக்கிறீர்கள். உங்களுடைய உலகமே தந்தை தான்.

**ஆஸ்திரேலியா பார்ட்டியுடன் சந்திப்பு:** இன்று நீங்கள் அனைவரும் எந்த சங்கல்பம் (எண்ணம்) வைத்தீர்கள்? அனைவரும் மாயாவிற்கு விடை கொடுத்து விட்டீர்களா? யாருக்கெல்லாம் இப்பொழுது கூட யோசிக்க வேண்டியதாக இருக்கிறதோ அவர்கள் கையை உயர்த்துங்கள். ஒருவேளை இப்பொழுது யோசிக்கலாம் என்று கூறுகிறீர்கள் என்றால், இதுவும் பலஹீனமான அஸ்திவாரம் ஆகி விட்டது. யோசிப்போம் என்றால் பலஹீனம். பிரம்மா குமார், குமாரிகளின் வேலையே மாயாவை வென்றவர் ஆவது மற்றும் ஆக்குவது. அப்படி எது தன்னுடைய உண்மையான வேலையாக இருக்கிறதோ அதற்காக யோசிக்க வேண்டுமா என்ன? நிச்சயம் நடக்கும் என்று கூறுங்கள். எப்படி சென்ற வருடம் அனேக இடங்களில் சேவை நிலையங்கள் திறப்போம் என்ற உறுதியான எண்ணத்தை வைத்து சென்றீர்கள். அதனால் அனேக கிளை நிலையங்கள் திறக்கப்பட்டு விட்டன இல்லையா? இப்பொழுது எத்தனை கிளை நிலையங்கள் இருக்கின்றன? 17, எப்படி நினைத்தீர்களோ அப்படி நிறைவேறியது. அதே போல் மாயாவை வென்றவர் ஆவதற்காகவும் எண்ணம் வையுங்கள். பாப்தாதாவோ குழந்தைகளின் தைரியத்தின் மேல் அடிக்கடி பாராட்டுக்களைத் தெரிவிக்கிறார். வரும் காலத்தில் இன்னும் சேவையில் வளர்ச்சியை செய்து கொண்டே இருங்கள். நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் மனதிற்கு பிடித்தமான குழந்தைகள்! பாப்தாதாவும் துணைவர்கள் நீங்கள் இன்றி எதுவும் செய்ய முடியாது. நீங்கள் மிக மிக மதிப்புள்ளவர்கள். நல்லது.

**வரதானம்: யதார்த்த நினைவு மூலம் அனைத்து சக்திகள் நிரம்பியவர் ஆகக்கூடிய எப்பொழுதும் ஆயுதம் தரித்த, கர்மயோகி ஆகுக!**

யதார்த்த நினைவின் அர்த்தம் அனைத்து சக்திகளினால் எப்பொழுதும் நிரம்பியிருப்பது. பிரச்னைகளின் சூழ்நிலை என்ற எதிரி வருகிறான். மேலும் ஆயுதங்கள் உபயோகத்தில் வரவில்லை என்றால் ஆயுதம் தரித்தவர் என்று கூற முடியாது. ஒவ்வொரு காரியத்திலும் நினைவு இருந்தால் தான் வெற்றி கிடைக்கும். எப்படி ஒரு விநாடி கூட காரியம் செய்யாமல் இருக்க முடியாது, அதே போல் எந்தவொரு காரியமும் யோகா இன்றி செய்ய முடியாது. எனவே கர்மயோகி, ஆயுதம் தரித்தவர் ஆகுங்கள். மேலும் தேவையான நேரத்தில் அனைத்து சக்திகளையும்

கட்டளைப்படி உபயோகப்படுத்துங்கள். அப்பொழுது தான் யதார்த்த யோகி என்று கூறுவோம்.

**சுலோகன்: யாருடைய எண்ணம் மற்றும் காரியம் மகானாக இருக்கிறதோ அவர் தான் மாஸ்டர் சர்வ சக்திவான்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 07.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எண்ணத்தில் பொறுமையாக இருப்பதினால் லாபம்!

இன்று பாப்தாதா தன்னுடைய 'ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை' என்று ஒருவரின் நினைவிலேயே, ஒரே சீரான நிலையில் நிலைத்திருக்கும் நினைவு சொரூப குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் மர்ஜீவா ஜென்மத்தின் (உடலில் இருந்து கொண்டே இறந்து மறு பிறவியின்) உயர்ந்த ரேகைகளைப் பாப்தாதா பார்க்கிறார். இன்றைய உலகத்தில் விசேஷமாக கைரேகைகளைப் பார்த்து, ஆத்மாவின் பாக்கியத்தைக் கூறுகிறார்கள், அவர்களது உயர்ந்த காரியங்கள் மற்றும் குணங்களையும் கூறுகிறார்கள் ஆனால் பாப்தாதா கைரேகைகளைப் பார்க்கவில்லை, ஒவ்வொரு குழந்தையின் வாய், கண்கள் மற்றும் நெற்றி ஆகிய இவை மூலமாக ஒவ்வொருவரின் வேகம் மற்றும் நிலையின் ரேகைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பொதுவாகவே முகம் மூலமாகத் தான் மனிதர்கள், ஆத்மாவை அறிவதற்கு முயற்சி செய்கிறார்கள். அந்த மனிதர்கள் தேக அபிமானம் உள்ளவர்களாக இருக்கும் காரணத்தினால் பௌதீக விஷயங்களை சோதனை செய்கிறார்கள். பாப்தாதா நெற்றி மூலமாக நினைவு சொரூபத்தைப் பார்க்கிறார். கண்கள் மூலமாக ஜுவாலா ரூபத்தைப் பார்க்கிறார், வாயின் புன்முறுவல் மூலமாக விலகியிருந்து மற்றும் அன்பாக இருப்பதின் தாமரை மலருக்குச் சமமான நிலையைப் பார்க்கிறார். யார் எப்பொழுதும் (பாபாவின்) நினைவு சொரூபமாக இருக்கிறாரோ அவருடைய ரேகைகள் எப்பொழுதும் நெற்றியில் எண்ணங்களின் வேகம் உறுதி நிறைந்ததாக இருக்கும். எந்த விதமான சுமையும் இருக்காது. அழுத்தம் இருக்காது. ஒரு நிமிஷத்தில் ஒரு எண்ணத்தின் முலம் அனேக எண்ணங்களை உற்பத்தி செய்ய மாட்டார். எப்படி உடலிலிருக்கும் ஏதாவது ஒரு நோயை நாடித் துடிப்பின் வேகத்தினால் சோதனை செய்கிறார்கள், அதே போல் எண்ணத்தின் வேகம் மூலம் இந்த நெற்றியின் ரேகைகளைத் தெரிந்து கொள்வதாகும்.

ஒருவேளை எண்ணத்தின் வேகம் மிக அதிக அளவில் இருக்கிறது, ஒன்றிலிருந்து இன்னொன்று என்று அப்படி ஒன்றிலிருந்து எண்ணம் தொடர்ந்து இருக்கத் தான் செய்யும். அப்படி எண்ணங்களின் வேகம் மிக அதி தீவிரமாக இருப்பது என்பது கூட பாக்கியத்தின் சக்தியை வீணாக்குவதாகும். யாராவது எப்பொழுதுமே பேசிக் கொண்டே இருக்கிறார், அதிகமாக பேசுகிறார், சப்தமாக பேசுகிறார் என்றால், அவர்களுக்கு என்ன கூறுகிறீர்கள். மெதுவாகப் பேசுங்கள், குறைவாகப் பேசுங்கள் என்று கூறுகிறீர்கள். அதே போல் எண்ணங்களின் வேகம் ஆத்மீக சக்தியை வீணாக்குகிறது. எப்பொழுது வீணான எண்ணம் ஓடுகிறதோ அப்பொழுது எண்ணத்தின் வேகம் என்னவாக இருக்கும் என்பதில் அனைத்து குழந்தைகளும் அனுபவி தான். மேலும் எப்பொழுதும் ஞானத்தின் சிந்தனை ஓடுகிறது என்றால், எண்ணங்களின் வேகம் எப்படி இருக்கும்? வீண் எண்ணம் சக்தியை வீணாக்குகிறது ஆனால் இது சக்தியை உருவாக்குகிறது. வீணான எண்ணங்களின் அதி வேகம் இருக்கும் காரணத்தினால் தன்னைத் தானே சக்தி சொரூபமானவர் என்று ஒருபொழுதும் அனுபவம் செய்ய மாட்டார். எப்படி உடலின் சக்தி இல்லாமல் போகும்போது இன்று என்னுடைய புத்தி மிகவும் காலியாக இருக்கிறது என்று கூறுகிறீர்கள். அதே போல் ஆத்மா அனைத்து பிராப்திகளிலிருந்து தன்னை மிகவும் காலியாக அனுபவம் செய்கிறது. எப்படி உடல் சக்திக்காக ஊசி போட்டு சக்தியை நிரப்புகிறார்கள் அல்லது குளுகோஸ் பாட்டிலை செலுத்துகிறார்கள். அதே போல் ஆன்மீக நிலை மூலமாக பலஹீனமான ஆத்மா முயற்சி செய்வதின் விதியை, நான் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவேன், இன்று முரளியில் பாப்தாதா என்னென்ன ஞான விஷயங்கள் கூறினார், வீணான எண்ணங்களை நிறுத்தினேனா? முற்றுப்புள்ளி இடுவதற்கு முயற்சி செய்வது என்பது ஊசி போடுவது. அந்த மாதிரி முயற்சி செய்வதின் விதியின் ஊசி போடுவதன் மூலமாக கொஞ்ச நேரம் சக்திசாலி ஆகி விடுகிறார்கள் மற்றும் விசேஷமாக நினைவு செய்வதின் நிகழ்ச்சிகள் மூலமாக மற்றும் விசேஷ சங்கடன் (கூட்டாக) மற்றும் சங் அதாவது தொடர்பு மூலமாக குளுகோஸ் ஏற்றி விடுகிறார்கள் ஆனால் எண்ணத்தின் வேகம் அதிகமாக வைத்துக் கொள்ளும் பழக்கம் உள்ளவர்கள், கொஞ்ச நேரத்திற்கு சக்தி நிரப்புவதினால் கொஞ்ச நேரம் தன்னை சக்தி நிறைந்தவராக அனுபவம் செய்வார்கள் ஆனால் இருந்தும் பலஹீனமானவர்கள் ஆகி விடுவார்கள். எனவே நெற்றியின் ரேகைகள்

மூலமாக ரிசல்ட்டைப் பார்த்த பிறகு மீண்டும் குழந்தைகளுக்கு பாப்தாதா எண்ணத்தின் வேகத்தை மிகத் தீவிரமானதாக ஆக்காதீர்கள் என்ற ஸ்ரீமத்தைத் தான் நினைவூட்டுகிறார். எப்படி பேசும் பேச்சிற்காக 10-வார்த்தைகளுக்குப் பதிலாக இரண்டு வார்த்தைகள் பேசுங்கள் என்று கூறுகிறார்கள். அந்த இரண்டு வார்த்தைகளே அந்த மாதிரி சக்தி நிறைந்தததாக இருந்து 10-வார்த்தைகள் செய்யும் காரியத்தை செய்து விட வேண்டும். அதே போல் எண்ணத்தின் வேகம், எது அவசியமாக இருக்கிறதோ அந்த எண்ணம் மட்டும் ஓட வேண்டும். எண்ணம் என்ற விதை, வெற்றி என்ற பழத்தினால் நிரம்பியதாக இருக்கட்டும். பழம் உருவாக முடியாத காலியான விதையாக இருக்க வேண்டாம். இதைத் தான் சக்தி நிறைந்த எண்ணமாக இருக்கட்டும் என்று கூறுவது. வீணானவை இருக்க வேண்டாம். சக்திசாலியானவற்றின் எண்ணிக்கை இயல்பாவே குறைவாக இருக்கும் ஆனால் சக்திசாலியாக இருக்கும். மேலும் வீணானதின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும், பிராப்தி எதுவும் இருக்காது. வீணான எண்ணத்தை மூங்கில் நிறைந்த காடு என்று புரிந்து கொள்ளுங்கள். அது ஒன்றிலிருந்து அனேகம் உருவாகி விடும். மேலும் அவை ஒன்றோடொன்று மோதி உரசுவதினால் நெருப்பு பிடித்து விடும். மேலும் அவையே அந்த நெருப்பில் பஸ்பம் ஆகி விடும். அதே போல் வீணான எண்ணங்களும் ஒன்றோடு ஒன்று மோதி ஏதாவது விகாரத்தின் அக்னியை எரிய வைக்கிறது. மேலும் தன்னையே தான் வருத்திக்கொள்வார்கள். எனவே எண்ணத்தின் வேகத்தை உறுதி நிறைந்ததாக ஆக்குங்கள்.

இந்த மர்ஜீவா ஜென்மத்தின் பொக்கிஷம் என்று கூறினாலும் அல்லது விசேஷ சக்தி என்று கூறினாலும் அது எண்ணம் தான். மர்ஜீவா ஆவதற்கான ஆதாரமே எண்ணம் தான். 'நான் உடல் இல்லை, ஆத்மா' என்ற இந்த எண்ணம் சோழிக்குச் சமமாக இருந்த நிலையி-ருந்து வைரத்திற்குச் சமமானவராக ஆக்கி விட்டது. நான் சென்ற கல்பத்தின் தந்தையின் குழந்தை, வாரிசு, அதிகாரி ஆவேன் என்ற இந்த எண்ணம் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆக்கியது. அப்படி பொக்கிஷமும் இதுவே தான், சக்தியும் இதுவே தான் என்றால், எண்ணமும் இதுவே தான். விசேஷமாக பொக்கிஷங்கள் எப்படி உபயோகிக்கப்படுகின்றன, அந்த மாதிரி தன்னுடைய எண்ணத்தின் பொக்கிஷம் மற்றும் சக்தியைத் தெரிந்து அந்த மாதிரி காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் தான் அனைத்து

எண்ணங்களும் நிறைவேறும் மேலும் சித்தி சொரூபம் ஆகி விடுவீர்கள். இன்று எந்த மாதிரி ரேகைகளைப் பார்த்தோம் என்று புரிந்து கொண்டீர்களா? குறைவாக யோசியுங்கள் அதாவது ஸித்தி சொரூப எண்ணத்தை வையுங்கள். அந்த மாதிரியானவர்கள் எப்பொழுதுமே துக்கமே இல்லா ஊரின் ராஜாவாக இருப்பார். வாய் மூலம் எப்பொழுதும் மகாவாக்கியங்களையே கூறுவார். மகாவாக்கியம் விரல் விட்டு எண்ணக்கூடியதாக இருக்கும். எப்படி மகான் ஆத்மாக்கள் விரல் விட்டு எண்ணும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஆத்மாக்கள் அனேகர் இருப்பார்கள். மேலும் பரமாத்மா ஒருவர் தான் இருக்கிறார். எனவே இரண்டு சக்திகளை அதாவது எண்ணத்தின் மற்றும் வார்த்தைகளின் சக்திகளை வீணாக செலவு செய்யாதீர்கள். மகாவீர் மற்றும் மகாரதி என்றால் வாய் மூலம் மகாவாக்கியம் கூறுபவர், புத்தி மூலமாக சித்தி சொரூப எண்ணங்களை சிந்திப்பவர். இது தான் மகாவீர் மற்றும் மகாரதியின் அடையாளம். அந்த மாதிரி மகாரதியாக ஆகுங்கள். உங்கள் எதிரில் யார் வந்தாலும் இந்த மகான் ஆத்மா எனக்காக சிரேஷ்ட எண்ணத்தைக் கூற வேண்டும், ஆசீர்வாதத்தின் இரண்டு வார்த்தைகள் கூற வேண்டும் என்ற விருப்பம் வைக்க வேண்டும். ஆசீர்வாதத்தின் வார்த்தைகள் எப்பொழுதும் குறைவாக இருக்கும். நீங்கள் மகாரதி, மகாவீர் தேவாத்மாக்கள். பக்தர்களின் பூஜைக்குரிய ஆத்மாக்கள் ஆவீர்கள்! எப்பொழுதும் எண்ணம் மற்றும் வார்த்தைகள் மூலமாக ஆசீர்வாதத்தின் எண்ணம் வையுங்கள் மற்றும் வார்த்தைகளையே கூறுங்கள், அமிர்தவாக்கியங்களைக் கூறுங்கள். உலகியல் வார்த்தைகளைக் கூறாதீர்கள். நல்லது.

எப்பொழுதும் மகான் எண்ணம் மூலமாக தன்னை மற்றும் அனைவரையும் சீதளம் ஆக்கக்கூடிய, வார்த்தைகள் மூலமாக எப்பொழுதும் ஆசீர்வாத வார்த்தைகள் கூறக்கூடிய, அந்த மாதிரி சிரேஷ்ட ரேகைகள் உள்ள, நிரந்தர சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, மகான் ஆத்மாக்களுக்கு, தேவ ஆத்மாக்களுக்கு, பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வெளிநாட்டுக் குழந்தைகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:**

நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் நிரந்தர அன்பிற்குரிய, நிரந்தர சகயோகி மற்றும் நிரந்தர சேவாதாரி, சேவைக்குத் தகுதியான

இரத்தினங்கள் தான் இல்லையா? ஒவ்வொரு இரத்தினமும் எவ்வளவு விலைமதிக்க முடியாதது. அவை ஒவ்வொன்றும் உலகத்தின் காட்சிப் பெட்டகத்தின் நடுவே வைக்கப்படுபவை. எவ்வளவு அதிகமான அனேக விதமான உயர்ந்த தடைச் சுவர்களைக் கடந்து வந்து தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறார்கள். மதத்தின் சுவர், பழக்க வழக்கங்களின் சுவர் அந்த மாதிரி எத்தனை சுவர்களைக் கடந்திருக்கிறீர்கள்? ஆனால் தந்தையின் சகயோகத்தின் காரணமாக இவ்வளவு உயர்ந்த சுவர்களையும் ஒரு அடி எடுத்து வைத்தது போல் கடந்து வந்து விட்டீர்கள். எந்தக் கடினமும் இருக்கவில்லை. அந்த அளவு சுலபமாக இருந்தது இல்லையா! நானோ தந்தையின் குழந்தையாகத் தான் இருந்திருந்தேன் என்று நினைக்கிறீர்கள். ஒருவேளை நீங்கள் அனைவரும் தந்தையின் குழந்தை ஆகவில்லை என்றால், வெளிநாடுகளில் இவ்வளவு கிளை நிலையங்கள் எப்படி திறந்திருக்க கூடும்? சேவை காரணமாக அவரவர்களின் நாடுகளில், இடங்களில் சென்று விட்டீர்கள். மீண்டும் தந்தை வந்து தன்னுடைய குழந்தைகளாக ஆக்கி விட்டார். எனவே இப்பொழுது என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் மதுபன் நிவாசி தான் இல்லையா? உங்கள் அனைவரின் ஓட்டு மதுபன்னில் இருக்கிறது. நான் மதுபன் வாசி சேவைக்காகச் சென்றிருந்தேன் என்று அப்படி நினைக்கிறீர்களா? எப்படி பாரதவாசி குழந்தைகளும் வேறு வேறு ஸ்தானங்களில் சென்றிருந்தார்கள், அதே போல் நீங்களும் சென்று விட்டீர்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் விதவிதமான சேவைக்கான பங்கு இருக்கிறது. தன்னை சார்ந்தவர்களை மற்றும் தன் போன்றவர்களை எழுப்புவதற்காக எவ்வளவு சகஜமாகச் சேவைக்கு பொறுப்பாளர் ஆகி விட்டீர்கள். விதவிதமான ஸ்தானத்தின் விதவிதமான மலர்களைப் பார்த்து பாப்தாதா மிகவும் குஷி அடைகிறார். வகை வகையான மலர்களின் ஒரு மரம் இருக்க வேண்டும், அந்த மாதிரி மரத்தை எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா? ஒரு மரத்தில் விதவிதமான ரோஜா மலர்கள் மற்றும் வேறு மலர்களும் இருக்க வேண்டும். எப்பொழுதும் நீங்கள் சித்தி சொரூபமானவர்கள். ஏனென்றால், பாப்தாதா மூலமாக வரம் பெற்ற ஆத்மாக்களாக ஆகி விட்டீர்கள். மூன்று வார்த்தைகளை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். 1) எப்பொழுதும் சமநிலை வைக்க வேண்டும். 2) எப்பொழுதும் ஆனந்தம் நிறைந்தவராக இருக்க வேண்டும் மற்றும் 3) அனைவருக்கும் ஆசீர்வாதம் கொடுக்க வேண்டும். சேவை மற்றும் சுயத்தின் சேவை இரண்டிற்கும்

எப்பொழுதும் சமநிலை. சமநிலை மூலமாக எத்தனை கலைகளைக் காண்பிக்கிறார்கள். நீங்களும் புத்தியின் சமநிலை மூலமாக எப்பொழுதும் 16-கலைகள் நிரம்பிய சொரூபம் ஆகி விடுவீர்கள். உங்களுடைய ஒவ்வொரு காரியமும் கலை ஆகி விடும். பார்ப்பதும் கலை ஏனென்றால், ஆத்மா ஆகி பார்க்கிறீர்கள் இல்லையா? அதே போல் பேசுவது, நடப்பது, ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு காரியத்திலும் கலை ஆனால் இவை அனைத்திற்குமான ஆதாரம் புத்தியின் சமநிலை. அதே போலவே எப்பொழுதும் ஆனந்த சொரூபமானவர். ஆனந்தக் கடலின் குழந்தைகள் எப்பொழுதும் ஆனந்த சொரூபம்.

நல்லது. இப்பொழுதோ சந்தித்துக் கொண்டிருப்போம். சங்கமயுகமே சந்திப்பதற்கானது. எனவே எப்பொழுதும் சந்தித்துக் கொண்டிருப்போம். ஒரு நாள் கூட தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு இல்லை மற்றும் ஒரு விநாடி கூட சந்திப்பு இல்லை என்று அந்த மாதிரி இருக்கவே முடியாது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதும் தந்தையுடன் இணைந்தவராக இருக்கிறீர்கள் இல்லையா? இணைந்த ரூபத்திலிருந்து பிரிப்பதற்கு யாருக்கும் தைரியம் கிடையாது. யாரிடமும் அந்த சக்தி இல்லை. நல்லது.

**வரதானம்: திட உறுதிமொழி மூலம் அலட்சியம் என்ற தொய்வான ஆணியை இறுக்கமானதாக ஆக்கக்கூடிய தீவிர முயற்சியாளர் ஆகுக!**

உறுதிமொழியில் தொய்வு ஏற்படுவதற்கான மூல காரணம் அலட்சியம். எப்படி எவ்வளவு தான் பெரிய இயந்திரமாக இருந்தாலும், ஆனால் ஒரு சிறிய ஆணி தொய்வாகி விட்டது என்றால், முழு இயந்திரத்தையும் கெடுத்து விடும். அதே போல் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக நல்ல திட்டங்களை உருவாக்குகிறீர்கள், முயற்சியும் செய்கிறீர்கள் ஆனால் முயற்சி மற்றும் திட்டத்தை பலஹீனமாக்கும் ஆணி ஒன்றே ஒன்று தான். அது அலட்சியம். அது புதுப்புது ரூபத்தில் வருகிறது. இந்த தொய்வான ஆணியை இறுக்கமானதாக ஆக்குங்கள். நான் தந்தைக்குச் சமமாக கண்டிப்பாக ஆகியே தீர வேண்டும் என்ற திட எண்ணத்தினால் தீவிர முயற்சியாளர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு தான் நேரத்தின் அருகாமைக்கான அஸ்திவாரம்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஹோலி கொண்டாடுவதின் மற்றும் ஹோலி ஆக்குவதின் அலௌகீக (ஆன்மீக) முறை!

இன்று மிக உயர்ந்த தந்தை தன்னுடைய புனித அன்னப்பறவைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். ஒவ்வொரு புனித அன்னப்பறவையின் புத்தியிலும் எப்பொழுதும் ஞானத்தின் முத்து, மாணிக்கம், இரத்தினம் நிரம்பியிருக்கிறது. அந்த மாதிரியான புனித அன்னப்பறவைகள் பாப்தாதாவிற்கும் முழுக் கல்பத்தில் ஒரு தடவை தான் கிடைக்கிறார்கள். அந்த மாதிரி விசேஷ புனித அன்னப்பறவைகளோடு முழு சங்கமயுகத்தில் பாப்தாதா ஹோலி கொண்டாடிக் கொண்டே இருக்கிறார். உலகத்து மனிதர்கள் வருடத்தில் ஓரிரு நாள் ஹோலி கொண்டாடுகிறார்கள் ஆனால் கொண்டாடுவதின் கூடவே இழக்கவும் செய்கிறார்கள்.மேலும் புனித அன்னப் பறவைகள் நீங்கள் கொண்டாடவும் செய்கிறீர்கள் என்றால் சம்பாதிக்கவும் செய்கிறீர்கள். இழப்பதில்லை. அனைத்து குழந்தைகளும் தூர இடங்களில் அமர்ந்திருந்தாலும் பாப்தாதாவுடன் ஹோலி கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவிடம் பாரதம் மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகளின் உயர்ந்த அன்பின் எண்ணம் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. அனைத்து குழந்தைகளின் கண்கள் மற்றும் நெற்றியின் மூலமாக அன்பின் நீர் மிக அன்பு நிறைந்த நறுமணம் நிறைந்து பீச்சாங்குழல் மூலம் பீச்சி அடிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. பதிலுக்கு பாப்தாதாவும் அனைத்து குழந்தைகளுக்கும் கண்களின் மூலமாக அஷ்ட சக்தி அதாவது அஷ்ட வண்ணங்களின் பீச்சாங்குழல் மூலமாக விளையாடிக் கொண்டிருக்கிறார். எப்படி ஸ்தூல வண்ணங்கள் மூலமாக சிகப்பு வண்ணம் சிகப்பாக ஆக்கி விடும். விதவிதமான வண்ணங்களினால் விதவித ரூபம் உருவாக்கி விடும். அதே போல் ஒவ்வொரு சக்தியின்

ஆன்மீக வண்ணத்தின் மூலம் ஒவ்வொரு சக்தியின் சொரூபம் ஆகி விடுகிறார்கள், ஒவ்வொரு குணமும் சொரூபம் ஆகி விடுகிறது. திருஷ்டியின் மூலமாக ரூபம் பரிவர்த்தனை ஆகி விடுகிறது என்று பாப்தாதா பார்க்கிறார். அந்த மாதிரி ஆன்மீக ஹோலி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா?

பாப்தாதா மலர்களின் மழை பொழிந்து ஹோலி கொண்டாடுவதற்குப் பதிலாக ஒவ்வொரு குழந்தையையும் நிரந்தரமாக அன்பு மூலமாக ஆன்மீக ரோஜா மலர் ஆக்கி விடுகிறார். அவர்களே மலர் ஆகி விடுகிறார்கள். அந்த மாதிரி ஹோலியை தந்தை மற்றும் குழந்தைகளைத் தவிர வேறு யாரும் கொண்டாட முடியாது. ஜென்மம் எடுத்தவுடனேயே தந்தை ஹோலி கொண்டாடி ஹோலி (தூய்மை) ஆக்கி விட்டார். அப்படி அவர்கள் கொண்டாடுபவர்கள். மேலும் நீங்களோ நிரந்தரமாக 'ஹோலி' அதாவது தூய்மை ஆகுபவர்கள். எப்பொழுதும் ஒவ்வொரு குணத்தின் வண்ணம், ஒவ்வொரு சக்தியின் வண்ணம், அன்பின் வண்ணம் பூசப்பட்டு தான் இருக்கிறது. நீங்கள் அந்த மாதிரியான புனித அன்னப்பறவை தான் இல்லையா? திலகம் இடுவதற்கும் அவசியம் இல்லை நீங்கள் நிரந்தரமாக திலகம் இடப்பட்டவர்கள் தான். அழியாத திலகம் இடப்பட்டே தான் இருக்கிறது இல்லையா? அதை அழித்தாலும் கூட அழிக்க முடியாது. அற்ப காலத்திற்குப் பதிலாக சதா காலமும் கொண்டாடிக் கொண்டே இருக்கிறீர்கள். மேலும் மற்றவர்களையும் ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த மனிதர்களோ இனிமையாக சந்திப்பதற்காக ஒருவரோடு ஒருவர் கழுத்தைக் கட்டி அணைத்துக் கொள்வார்கள் ஆனால் புனித அன்னப்பறவை நீங்கள் பாப்தாதாவின் கழுத்தின் மாலையாகவே ஆகி விட்டீர்கள். நிரந்தரமாக கழுத்தின் மாலையாகி மின்னிக் கொண்டிருக்கும் இரத்தினம் உலகின் எதிரில் ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு இரத்தினமும், ஆயிரம் பல்புகள் கூட பிரகாசம் தர முடியாத அளவிற்கு அந்த மாதிரி பிரகாசிக்கும் லைட் சொரூபம் ஆகி விட வேண்டும். அந்த மாதிரி பிரகாசித்துக் கொண்டிருக்கும் இரத்தினம் நீங்கள் தன்னுடைய லைட், மைட் சொரூபத்தை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா.? முழு உலகத்தையும் இருளிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் பிரகாசமாக இருக்கும் இரத்தினங்கள் நீங்கள்! பாப்தாதா அந்த மாதிரி

புனித அன்னப்பறவைகளோடு விசேஷமான தினத்திற்கு ஏற்றபடி ஆன்மீக ஹோலியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்.

ஹோலியை எரிக்கவும் செய்தீர்கள் மற்றும் கொண்டாடவும் செய்தீர்கள். எரிப்பது மற்றும் கொண்டாடுவது இரண்டுமே தெரியும் தான் இல்லையா? எரித்த பிறகு தான் கொண்டாடுவது இருக்கும். எண்ணத்தின் தீக்குச்சியினால் தன்னைப் பற்றியும் அல்லது சேவையைப் பற்றியும் என்னென்ன வீணான எண்ணம் அதாவது பலஹீனமான எண்ணம் கொள்வதின் சம்ஸ்காரம் இருக்கிறதோ, அவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து தீக்குச்சியால் எரித்து விடுங்கள். இவற்றைத் தான் காய்ந்த மரக்குச்சிகள் என்று கூறுவது. அப்படி அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு திட எண்ணம் என்ற தீக்குச்சியால் பற்ற வையுங்கள். ஆக, எரிப்பதும் ஆகி விட்டது. எரிப்பது தான் கொண்டாடுவது மற்றும் ஆகுவது. தீக்குச்சியால் பற்ற வைக்கத் தெரியும் தான் இல்லையா? அப்படி எரியுங்கள் மற்றும் கொண்டாடுங்கள் என்றால், தன்னை நிரந்தரமான 'ஹோலி' அதாவது தூய்மை ஆக்குங்கள். தீக்குச்சியால் பற்ற வைக்கிறீர்கள் ஆனால் அது எரிவதே இல்லை என்று அப்படி இல்லையே.! தீக்குச்சி கூட தீப்பெட்டியின் சம்மந்தமின்றி எரியாது. அப்படி தந்தையுடன் தொடர்பு சம்மந்தம் இருந்தால், பயிற்சி என்ற தீக்குச்சியில் மருந்து சரியாக இருக்கிறது என்றால் தான் ஒரு நொடியில் எண்ணத்தை வைத்தீர்கள், மேலும் ஆனீர்கள். அப்படி அனைத்து சாதனமும் சரியாக வேண்டும். சம்மந்தமும் வேண்டும். பயிற்சியும் வேண்டும். சம்மந்தம் இருக்கிறது, ஆனால் பயிற்சி குறைவாக இருக்கிறது என்றால், கடும் உழைப்பிற்குப் பிறகு தான் வெற்றி கிடைக்கும். ஒரு நொடியில் எண்ணத்தின் சொரூபம் ஆக முடியாது. அடிக்கடி எண்ணத்தை வைத்து வைத்து கடுமையான உழைப்பிற்கு பிறகு வெற்றி கிடைக்கும். உங்கள் அனைவரின் கடின உழைப்பு அதாவது பக்தியின் காலம் முடிவடைந்து விட்டது தான் இல்லையா. பக்தியின் அர்த்தமே கடின உழைப்பு. பக்தியின் காலம் முடிவடைந்தது என்றால், கடின உழைப்பு முடிவடைந்தது. இப்பொழுது பக்தியின் பலனைப் பெறுவதற்கான நேரம். பக்தியின் பலன் 'ஞானம்' அதாவது அன்பே அன்றி கடின உழைப்பு இல்லை. 63-ஜென்மங்கள் கொஞ்சமோ அல்லது அதிகமோ கடின உழைப்பு செய்தீர்கள் ஆக, கடினமாக உழைப்போ செய்தீர்கள் தான் இல்லையா? இப்பொழுது இறுதி ஒரு ஜென்மத்தில் அன்பின் நேரத்தில் கூட கடின

உழைப்பை செய்தீர்களா என்ன? இப்பொழுதோ எப்பொழுதும் தந்தையின் அன்பின் மூலமாக பழத்தை அருந்துங்கள் அதாவது எப்பொழுதும் நன்றாக வளர்ந்து கொண்டிருங்கள். பழத்தை அருந்துங்கள் என்றால், எப்பொழுதும் பயனடைந்தவராக இருங்கள். பழத்தை அருந்துவது என்றால் எப்பொழுதும் ஹோலி கொண்டாடுவது மற்றும் ஹோலி ஆகி விடுவது. இப்பொழுது கடின உழைப்பு செய்வதின், யுத்தம் செய்வதின் சம்ஸ்காரத்தை முடிவு கட்டுங்கள். இப்பொழுதோ இராஜ்ய பாக்கியத்தை அடைந்து விட்டீர்கள். பிறகு ஏன் யுத்தம் செய்ய வேண்டும்? தேவ பதவியின் பாக்கியத்தையும் விட சிரேஷ்ட பாக்கியத்தையோ இப்பொழுது அடைந்திருக்கிறீர்கள். சுவ இராஜ்யத்தின் மகிழ்ச்சி உலகின் இராஜ்யத்தில் கூட இருக்காது. எனவே இராஜ்ய பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களே இப்பொழுதும் ஏன் யுத்தம் செய்கிறீர்கள்? எனவே கடின உழைப்பின் சம்ஸ்காரம், யுத்தம் செய்யும் சம்ஸ்காரம் மற்றும் எண்ணம் என்ற பழைய மரக்குச்சிகளுக்கு நெருப்பு வைத்து விடுங்கள். இந்த ஹோலியை எரிய வையுங்கள். பாப்தாதாவிற்கும் கூட குழந்தைகளின் கடினமாக உழைக்கும் சம்ஸ்காரத்தைப் பார்த்து இரக்கம் வருகிறது. இதுவரையிலும் கூட கடினமாக உழைக்கிறீர்கள் என்றால் பலன் என்ற பழத்தை எப்பொழுதும் அருந்தப் போகிறீர்கள்? அதற்காக கடின உழைப்பு செய்ய வேண்டியது இல்லை, அலட்சியமானவராகவும் ஆக வேண்டாம். அலட்சியமானவராக ஆகக்கூடாது, ஆனால் எப்பொழுதும் அன்பில் மூழ்கியிருக்க வேண்டும். அன்பின் ஐக்கியமாகி இருக்க வேண்டும். நினைத்தீர்கள் மற்றும் நடந்தது. அந்த மாதிரி பயிற்சி உள்ளவராக ஆகுங்கள். நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் எண்ணத்தை வைத்தீர்கள் மற்றும் அனுபவம் ஆனது அந்த மாதிரி சகஜ பயிற்சி உள்ளவராக ஆகுங்கள். சிரேஷ்ட எண்ணங்களின் பொக்கிஷத்தை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். ஏதாவது சிரேஷ்டகாரியம் செய்கிறீர்கள் என்றால் அலங்கரிக் கிறீர்கள் தான் இல்லையா? எப்படி நேற்று கூட அலங்காரம் செய்தீர்கள் இல்லையா? (நேற்று மதுபன்னில் ஐந்து கன்னியாக்களின் சமர்ப்பண விழா நடந்தது, அதில் அவர்கள் மிகவும் அலங்கரிக்கப்பட்டு இருந்தார்கள்). அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்கள் அணிந்த ரூபம் கூட நல்ல அடையாளம். அப்படி நீங்கள் எப்பொழுதும் சுப காரியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்றால், எப்பொழுதும் குணங்களின் நகைகளால் அலங்கரிக்கப்பட்டு இருங்கள். புத்தி என்ற இரும்புப் பெட்டியில் பூட்டி மட்டும் வைக்காதீர்கள்.

எப்பொழுதும் குணங்களின் நனைககளினால் அலங்கரிக்கப்பட்ட மூர்த்தி, இது தான் 16-அலங்காரம் அதாவது 16-கலை சம்பூர்ணமான, சர்வ குண சம்பன்னமானவர் ஆகுங்கள். அந்த மாதிரி உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தைகள் நிரந்தரமான சுமங்கலிகள், நிரந்தரமான பாக்கியவான் ஆத்மாக்கள் அலங்கரிக்கப்படாமல் எப்படி இருக்க முடியும்? மாங்கல்யத்தின் அடையாளம் கூட அலங்காரம், மேலும் இராஜகுலத்தின் அடையாளமும் அலங்காரம். அப்படியானால் நீங்கள் யார்? இராஜாக்களுக் கெல்லாம் இராஜா ஆகக்கூடிய குலத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் நிரந்தர சுமங்கலிகள். எனவே எப்பொழுதும் குணங்களின் நகைகளினால் அலங்கரிக்கப்பட்ட ஆன்மீக மூர்த்தியாக ஆகுங்கள். அந்த மாதிரி ஹோலியைக் கொண்டாடினீர்களா?

மதுபன்னில் ஹோலி கொண்டாடினீர்கள் தான் இல்லையா? நடனம் ஆடுவது, பாடுவது இது தான் கொண்டாடுவது. அப்படி எப்பொழுதும் பாடுகிறீர்கள், எப்பொழுதும் நடனம் ஆடுகிறீர்கள். மேலும் ஸ்தூலமாகவும் பாடினீர்கள் மற்றும் ஆடினீர்கள். கொண்டாடினீர்கள் இல்லையா? பாடவும் செய்தீர்கள், உணவு அருந்தவும் செய்தீர்கள். யோகாவும் செய்தீர்கள், போக் கூட சுவீகாரம் செய்வித்தீர்கள். மனமும் எப்பொழுதும் இனிமை யானதாக, வாயும் எப்பொழுதும் இனிமையானதாக ஆனது. அப்படி ஹோலி கொண்டாடி ஆகி விட்டது இல்லையா? இது ஒவ்வொரு கல்பத்தின் ஹோலி ஆகும். மற்றபடி என்ன செய்வீர்கள்? சிகப்பு வர்ணத்தை பூசுவீர்களா? ரோஜா தண்ணீரை பீச்சுவீர்களா? நீங்களே ரோஜா ஆவீர்கள். மற்றபடி ஏதாவது விருப்பம் இன்னும் நிறைவேறாமல் இருந்து விட்டது என்றால் நாளை ரோஜா தண்ணீரைப் போட்டு விடுங்கள். வண்ணத்திலோ வண்ணமயமாக்கப்பட்டு இருக்கிறீர்கள். அந்த வண்ணத்தையோ அகற்ற வேண்டியதாக இருக்கும். மேலும் இந்த வண்ணமோ எவ்வளவு பூசப்பட்டு இருக்குமோ அந்த அளவு நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் ஆன்மீக ரோஜா மலராக இருக்கும், எப்பொழுதும் ஞானத்தின் வர்ணத்தில் பூசப்பட்டிருக்கும், எப்பொழுதும் பிரபுவின் சந்திப்பை செய்யக்கூடிய, எப்பொழுதும் குணங்களின் நகைகளினால் அலங்கரிக்கப்பட்ட மூர்த்திக்கு, பாப்தாதாவின் நெருக்கமான மற்றும் சமமான இரத்தினங்களுக்கு, தூர இடங்களில் இருந்தாலும் அல்லது நேரெதிரில் இருந்தாலும், அனைத்து புனித

அன்னப்பறவைகளுக்கும் பாப்தாதா அழியாத ஹோலி ஆனதின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். கூடவே, அன்பில் ஐக்கியமாகி இருக்கும் அனைத்து ஆத்மாக்களுக்கு மேலும் மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு, அவர்களின் அன்பிற்குப் பிரதிபலனாக அன்பு நினைவுகளை கொடுப்பதுடன் நமஸ்காரம்.

**குஜராத் பார்ட்டியுடன் சந்திப்பு:** நீங்கள் அனைவரும் மிகப் பெரிய வியாபாரிகள் தான் இல்லையா? உலகத்தில் யாரும் இவ்வளவு பெரிய வியாபாரம் செய்ய முடியாது. யார் திறமை நிறைந்த வியாபாரியாக இருப்பார்களோ அவர்கள் வருமானத்தை அதிகரித்துக் கொண்டே இருப்பார்கள். உலகத்தில் எப்பொழுது வருமானம் அதிகரிக்கிறது என்றால், ஒவ்வொரு புள்ளி (பூஜ்யம்) வைத்துக் கொண்டே இருப்பார்கள். நீங்களும் புள்ளியிட வேண்டும். நானும் புள்ளி, தந்தையும் புள்ளி. நீங்கள் மிகப் பெரிய வியாபாரி, ஆனால் இட வேண்டும் புள்ளி. 6 அல்லது 8 -ஐ எழுதுவதில் கடினம் இருக்கலாம், ஆனால் புள்ளியையோ அனைவரும் இட முடியும். இது சகஜமும் தான் மேலும் உயர்ந்ததும் கூட. முழு நாளில் எத்தனை புள்ளி இடுகிறீர்கள்? எப்பொழுது கேள்வி எழுகிறதோ அப்போது புள்ளி அகன்று விடுகிறது. புள்ளி இல்லாமல் கேள்வியும் இருப்பதில்லை. அப்படி புள்ளி இடுவதில் அனைவரும் திறமை நிறைந்தவர்கள் தான் இல்லையா? புள்ளியிடுவதில் நேரமும் எடுப்பதில்லை. நானும் புள்ளி, பாபாவும் புள்ளி. இதற்காக எனக்கு நேரமே இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஒரு நொடிக்கான விஷயம். அப்படி எவ்வளவு விநாடி கிடைத்ததோ அந்த அளவு புள்ளி இடுங்கள். பிறகு எத்தனை புள்ளி இட்டிருக்கிறேன் என்று இரவில் எண்ணுங்கள். எந்த விஷயத்தையும் யோசிக்காதீர்கள், எந்த விஷயத்தை அதிகமாக யோசிப்பீர்களோ அது அதிகமாக வளர்கிறது. அனைத்து யோசிப்பதையும் விட்டு விட்டு ஒரு தந்தையை நினைவு செய்யுங்கள், இதுவே ஆசீர்வாதம் ஆகி விடும். நினைவில் மிகுந்த லாபம் நிரம்பியிருக்கிறது -எந்த அளவு நினைவு செய்வீர்களோ அந்த அளவு சக்தி நிரம்பிக் கொண்டே இருக்கும், சகயோகமும் கிடைக்கும், மேலும் சேவையும் ஆகி விடும். நல்லது.

**வருடாந்திர கூட்டத்திற்காக பாப்தாதாவின் பிரேரணை:** கூட்டத்தில் (மீட்டிங்கில்) ஏதாவது புதுமையையோ கொண்டு வருவீர்கள் தான் இல்லையா? ஆனால் ஒரு விசேஷ கவனம் வைக்க வேண்டும்.

இப்பொழுது இதைப் பற்றி பாப்தாதா ஏற்கனவே சமிக்ஞையும் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு மண்டலமும் தன்னுடைய சேவையில் சகயோகி, தொடர்பில் இருக்கக்கூடியவர்கள் யார் சேவைக்கு பொறுப்பாளராக ஆகுபவர்களோ, அந்த மாதிரியானவர்களின் மலர்ச்செண்டை தயார் செய்து மதுபன்னிற்கு அழைத்து வாருங்கள். எந்த துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஆனால் அவ்வப்பொழுது சகயோகி ஆவதற்கு பொறுப்பாக இருப்பவராக, அந்த மாதிரி விசேஷ ஆத்மாவாக இருக்க வேண்டும். அந்த மாதிரி சேவை செய்விப்பதற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களை எதிரில் கொண்டு வாருங்கள். பாப்தாதாவின் எதிரில் இல்லை, அவர்களுடைய குரூப்பை உருவாக்கி முதலில் மதுபன்னிற்கு அழைத்து வாருங்கள். பிறகு அவர்கள் எந்த அளவு முன்னேறிச் செல்வார்களோ அந்த அளவு அருகில் வருவார்கள். எனவே இந்த விஷயத்தின் மேல் விசேஷ கவனம் கொடுத்து நாலாபுறங்களிலும் பாரதம் மற்றும் வெளிநாடு, அனைத்து தரப்பி-ருந்தும் குரூப்பை எதிரில் கொண்டு வர வேண்டும். அனைவரும் செய்து கொண்டிருப்பீர்கள் ஆனால் எதிரில் வர வேண்டும். அந்த குரூப் மூலமாக உங்களுடைய சேவை இன்னும் அதிகமாக அதிகரிக்கும். ஏனென்றால் கூட்டத்தில் வருவதினால் அவர்களுக்கு பலம் கிடைக்கும். குடும்பத்து உறுப்பினராக அனுபவம் செய்து கொண்டே இருப்பார்கள். மேலும் கூடவே மனம் மூலம் செய்யும் சேவையின் மேல் உங்களுக்குள் விசேஷமாக குரூப்பை உருவாக்கி ஒன்று அதைத் தெளிவுபடுத்துங்கள் மற்றும் இன்னொன்று அந்த குரூப் அவ்வப்பொழுது அவர்களுக்குள் சந்தித்து மனசேவையின் வளர்ச்சிக்கான திட்டத்தை உருவாக்க வேண்டும். ரிசல்ட் கொடுக்க வேண்டும். ஏனென்றால், நேரத்திற்கு ஏற்றபடி, சூழ்நிலைக்கு ஏற்றபடி இப்பொழுது மனசேவைக்கு மிக மிக அவசியம் இருக்கிறது. எப்படி நீங்கள் பலவிதமான துறைகளையோ (விங்) உருவாக்கியிருக்கிறீர்கள், ஆனால் ஒவ்வொரு துறையிலிருந்தும் அந்த மாதிரி சகயோகி குரூப் தயாராக வேண்டும். நாம் இது வரை என்னென்ன சேவை செய்திருக்கிறோம், எத்தனை பேர்களை பரிவர்த்தனையில் (மாற்றத்தில்) கொண்டு வந்திருக்கிறோம், ஒவ்வொரு துறையிலிருந்தும் (விங்ஸ்) நடைமுறையில் என்ன ரிசல்ட் கிடைத்தது என்பதை அவர்கள் அரசாங்கத்தின் முன் கொண்டு செல்ல வேண்டும். அப்பொழுது இவர்கள் அனைத்து விதமான சேவை செய்பவர்கள் என்று அரசாங்கமும் உங்களைப் புரிந்து கொள்ளும். இவர்கள் மத சம்மந்தப்பட்ட

சேவைகளும் மட்டுமின்றி அனைத்து விதமான சேவை செய்பவர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். என்னென்ன சேவை செய்கிறீர்களோ அதை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துங்கள். பிறகு அரசாங்கம் அதன் முடிவைப் பார்த்து நீங்கள் இந்தக் காரியத்தில் சகயோகம் செய்பவராக ஆகுங்கள் என்று அவர்களே முன்னுக்கு வந்து வாய்ப்பு அளிப்பார்கள். இப்பொழுது அரசாங்கத்தின் முன்பு நீங்கள் செய்த சேவையின் நடைமுறை வரைபடம் வரவில்லை. சேவை அதிகமாக செய்கிறீர்கள், ஆனால் அனைவரின் கண்களும் திறக்க வேண்டும், தொலைக்காட்சியில், செய்தித் தாள்களில், பிரம்மா குமாரிகள் அவர்கள் செய்த இந்த இந்த சேவைகளின் முடிவுகளை அரசாங்கத்தின் எதிரில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற செய்தி வர வேண்டும். எனவே நடைமுறை விளைவுகளை, முடிவுகளை எடுத்துக் காண்பியுங்கள். இந்த சின்ன சின்ன தடைகள் அனைத்தும் அகன்று விடும். இதுவரையிலும் மக்கள் இது ஒரு மதச்சார்பான இயக்கம் என்று நினைக்கிறார்கள். சமூக சேவை செய்பவர்களும் தான், கல்வி கற்றுக் கொடுக்கும் இயக்கமும் தான், மேலும் அனைத்து துறையினருக்கும் சேவைக்கு பொறுப்பாளர்களாகவும் இருக்கிறார்கள், முழு உலகத்தில் உள்ள அனேக விதமான துறைகளைச் சேர்ந்தவர்களையும் பரிவர்த்தனை செய்யக் கூடியவர்கள் தான், இத்தனை நபர்களை குடிப்பழக்கத்திலிருந்து விடுவித்திருக்கிறார்கள், உடல் ஆரோக்கியத்திற்கான நிகழ்ச்சிகள் செய்கிறீர்கள். அப்படி இந்த அனைத்து சேவைகளின் ரிசல்ட் அரசாங்கத்தின் எதிரில் எங்கே வந்திருக்கிறது? ஒரு செய்தியாக நிருபர்கள் செய்தித் தாளில் அச்சடிப்பார்கள். இதன் மூலம் தெரியவருவதில்லை. நடைமுறையில் மேடையில் வருவதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். நிகழ்ச்சிகள் செய்யுங்கள், படவிளக்கக் கண்காட்சிகள் செய்யுங்கள், மிக அதிகமாக சேவை செய்யுங்கள், ஆனால் செய்த சேவையின் ரிசல்ட் அனைவரின் பார்வையில் வர வேண்டும். எந்த அளவு நீங்கள் சேவை செய்கிறீர்களோ, மேலும் எந்த அளவு அதன் ரிசல்ட் கிடைக்கிறதோ அதன் அனுசாரம் வேறு எந்த இயக்கமும் இந்த அளவு சேவை செய்வதில்லை. பலவிதமான துறைகளில், பல கிராமங்களில், செலவின்றி உள்ளப்பூர்வமாக மிக அன்போடு சேவை செய்கிறீர்கள் ஆனால் இவை அனைத்தும் வெளியில் தெரியாமல் இருக்கிறது. புரிந்ததா? அனைத்தையும் தெரிந்தவர் தான் நீஙகள். அதனால் தான் மீட்டிங்கில் வருகிறீர்கள். நல்லது.

**வரதானம்: நான், எனது என்ற அதிகாரத்தை அகற்றி கோபம் மற்றும் அபிமானத்தின் மேல் வெற்றி அடையக்கூடிய கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

எப்பொழுது இது ஏன் செய்தீர்கள், இது என்னுடையது என்று நான், எனது என்ற அதிகாரத்தை வைக்கிறீர்கள் என்றால் கோபம், அபிமானம் அல்லது பற்றுதல் வருகிறது ஆனால் இவர்கள் சேவையில் எனது துணைவர்கள் எனக்கு இவர்கள் மேல் எந்த அதிகாரமும் கிடையாது என்றிருக்க வேண்டும். எப்பொழுது என்னுடையது என்பது இல்லை என்றால், கோபம், பற்றுதலின் கர்ம பந்தனமும் இல்லை. எனவே கர்ம பந்தனங்களிலிருந்து விடுபடுவதற்காக ஒரு தந்தையை தன்னுடைய உலகமாக ஆக்கிக் கொள்ளுங்கள். 'ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை' என்று அப்படி ஒரு தந்தையே உலகம் ஆகி விட்டார் என்றால் எந்த ஈர்ப்பும் இல்லை, எந்த பலஹீனமான சம்ஸ்காரங்களின் பந்தனமும் இல்லை. அனைத்து எனது, எனது என்பது எனது தந்தையில் அடங்கி விடுகிறது.

**சுலோகன்: யார் நேரத்திற்கு ஏற்றபடி ஒவ்வொரு குணத்தை, ஒவ்வொரு சக்தியை காரியத்தில் ஈடுபடுத்துகிறாரோ அவர் தான் மாஸ்டர் சர்வ சக்திவான்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 12.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சைத்தன்ய மலர்களில் வண்ணம், ரூபம், நறுமணத்தின் ஆதாரம்!

இன்று தோட்டத்து உரிமையாளர் தந்தை தன்னுடைய சைத்தன்ய பூந்தோட்டத்தில் அனேக விதமான மலர்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவிற்கும் கூட இந்த மாதிரி ஆன்மீக பூந்தோட்டம் கல்பத்தில் ஒரு தடவை கிடைக்கிறது. அந்த மாதிரி ஆன்மீகப் பூந்தோட்டம், ஆன்மீக நறுமணம் நிறைந்த மலர்களின் ரம்யமான காட்சி வேறு எந்த நேரத்திலும் கிடைக்க முடியாது. எவ்வளவு தான் பெயர் பெற்ற பூந்தோட்டமாக இருந்தாலும், இந்த பூந்தோட்டத்தின் எதிரில் அந்த பூந்தோட்டம் என்ன அனுபவத்தைத் தரும்? இது வைரத்திற்குச் சமமானது, அது சோழிக்குச் சமமானது. நான் அந்த மாதிரி சைத்தன்ய ஈஸ்வரிய பூந்தோட்டத்தின் ஆன்மீக மலர், என்று அந்த மாதிரி போதை இருக்கிறதா? எப்படி பாப்தாதா ஒவ்வொரு மலரின் வண்ணம், ரூபம் மற்றும் நறுமணம் மூன்றையும் பார்க்கிறார். அதே போல் தன்னுடைய வண்ணம், ரூபம் மற்றும் நறுமணத்தை தெரிந்திருக்கிறீர்களா?

வண்ணத்தின் ஆதாரம் -ஞானத்தின் பாடம். எந்த அளவு ஞான சொரூபமாக இருப்பாரோ அந்த அளவு வண்ணம் கவர்ந்திழுப்பதாக இருக்கும். எப்படி ஸ்தூல மலர்களின் வண்ணத்தை பார்க்கிறீர்கள், விதவிதமான வண்ணத்தை பார்க்கிறீர்கள். அதில் சில வண்ணம் விசேஷமாக தூரத்திலிருந்தே கவர்ந்திழுப்பதாக இருக்கும். பார்த்தவுடனேயே இது எவ்வளவு அழகான மலர் என்று வாயிலிருந்து இந்த மகிமை அவசியம் வெளியாகும். மேலும் இதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று மனம் விரும்பும். அதே போல் ஞானத்தின் வண்ணத்தில் வண்ணமயமாக்கப்பட்ட மலர் எவ்வளவு அழகாக இருக்கும். அது போலவே ரூபம் மற்றும் நறுமணத்தின் ஆதாரம் - நினைவு மற்றும் தெய்வீக குணங்கள் நிறைந்தவர். வண்ணம் மட்டும் இருக்கிறது, ஆனால் ரூபம் இல்லை என்றால் கவர்ந்திழுப்பதாக இருக்காது. மேலும் வண்ணம்

இருக்கிறது ஆனால் நறுமணம் இல்லை என்றாலும் கூட கவர்ந்திழுக்க முடியாது. இது போலியானது, இது உண்மையானது என்று கூறுவார்கள். வண்ணம், ரூபம் மட்டும் உள்ள மலர்கள் அலங்கரிக்கும் காரியத்திற்காக மட்டும் உதவும் ஆனால் மணம் நிறைந்த மலரை மனிதர்கள் தங்கள் அருகில் வைத்துக் கொள்வார்கள். நறுமணம் நிறைந்த மலர் இயல்பாகவே எப்பொழுதும் சேவை சொரூபமானது. எனவே நான் எந்த மாதிரியான மலர் என்று தன்னையே கேளுங்கள். எங்கே இருந்தாலும், இயல்பாகவே சேவை நடந்து கொண்டிருக்கிறது என்றால், ஆன்மீக வாயுமண்டலத்தை உருவாக்குவதற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். அருகில் வருவதினால் அதாவது தொடர்பில் வருவதினால் நறுமணம் கிடைக்கிறதா அல்லது தூரத்திலிருந்தே நறுமணத்தை பரப்புகிறதா? ஒருவேளை ஞானம் கேட்டீர்கள், யோகா செய்யும் பயிற்சி உடையவராக ஆகி விட்டீர்கள் ஆனால் ஞான சொரூப மற்றும் யோகி வாழ்க்கையில் நடைமுறையில் தெய்வீக குணம் நிறைந்தவராக ஆகவில்லை என்றால் அலங்காரம் மட்டும் இருக்கிறது. அதாவது பிரஜை ஆகி விடுவார். இராஜாவின் பிரஜை அலங்காரம் தான். அப்படி அல்லாவின் பூந்தோட்டத்தின் மலராகவோ ஆகி விட்டீர்கள் ஆனால் எந்தவிதமான மலர்? இதைத்தான் தன்னுடைய சோதனை செய்ய வேண்டும். பூந்தோட்டம் ஒன்று, தோட்டத்து உரிமையாளரும் ஒருவர் ஆனால் மலர்களில் பலவகை இருக்கிறது. இரட்டை வெளிநாட்டினர் தன்னை என்னவென்று நினைக்கிறார்கள்? இராஜ்ய அதிகாரிகளா அல்லது இராஜ்யம் செய்பவர்களைப் பார்ப்பவர்களா? இன்று பாப்தாதா தோட்டத்தில் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். உங்கள் அனைவரின் மனதில் ஆன்மீக உரையாடல் செய்வதற்கான எண்ணம் இருக்கிறது. எனவே இன்று ஆன்மீக உரையாடல் செய்வதற்காக வந்திருக்கிறோம். விசேஷமாக இரண்டு குரூப்புகள் இருக்கின்றன இல்லையா?

பாப்தாதாவிற்கோ அனைத்து, பாரதம் மற்றும் வெளிநாடு அப்படி இரண்டு பக்கங்களின் குழந்தைகளும் மிகப் பிரியமானவர்கள். கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள் மற்றும் இரட்டை வெளிநாட்டினரும் எப்பொழுதும் குஷியில் ஊஞ்சலாடிக் கொண்டே இருக்கிறார்கள். மதுபன்னில் வந்து அனைவரும் மாயாவை வெற்றி அடைவதின் அனுபவியாக ஆகி விட்டீர்களா? அல்லது மதுபன்னிலும் கூட மாயா வருகிறதா? மதுபன்னில் வருவதே மாயாவை வென்ற நிலையின் அனுபவத்தை செய்வதற்காகத்

தான். எனவே இங்கு மாயாவின் தாக்குதல் இல்லை. மாயா தோல்வி அடைந்து சென்று விடும். ஏனென்றால் மதுபன்னில் முக்கியமாக தன்னுடைய வருமானத்தை சேமிப்பதற்காக வருகிறீர்கள். இரட்டை வெளிநாட்டினருக்கோ இரட்டை பூட்டை போட்டு விட வேண்டும்.

மதுபன்னில் வந்து விசேஷமாக தனக்குள் எந்த விசேஷங்களை தாரணை செய்திருக்கிறீர்கள்? (பாபா வெளிநாட்டினர் மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்தவர்களிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்) எப்படி சகஜயோகி ஆவதற்கான விசேஷத்தைப் பார்த்தீர்கள். அதே போல் மேலும் என்ன பார்த்தீர்கள்? அன்பும் கிடைத்தது, அமைதியும் கிடைத்தது, ஒளியும் (ஞானம்) கிடைத்தது. அனைத்தும் கிடைத்தது இல்லையா? எந்த அளவு தனக்கு பிராப்தி இருக்குமோ அந்த அளவு பிராப்தி அடைந்தவர் சேவை இல்லாமல் இருக்க முடியாது. எனவே பிராப்தி சொரூபமானவரிலிருந்து சேவை சொரூபமானவராக இயல்பாகவே ஆகி விடுகிறீர்கள்.

கர்நாடகாவைச் சேர்ந்தவர்களும் நன்றாக வளர்ச்சியை அடைந்திருக்கிறார்கள். மேலும் வெளிநாட்டிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வெளிநாட்டினர் நல்ல சேவை நிலையங்களையும் மேலும் சேவாதாரிகளையும் உருவாக்கியிருக்கிறார்கள். பாப்தாதாவும் குழந்தைகளின் தைரியம், ஊக்கம், உற்சாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். வெளிநாட்டிலும் சரி, பாரதத்திலும் சரி குழந்தைகளிடம் சேவைக்காக இருக்கும் ஊக்கம் உற்சாகத்தை பார்த்து தந்தை குஷி அடைகிறார். நல்லது. யார் சேவை நிலையத்தில் இருக்கிறார்களோ மற்றும் சேவையில் ஆஜராக இருக்கிறீர்களோ, அவர்கள் பாரதத்தில் அல்லது வெளிநாட்டில் இருந்தாலும் அனைவருமே அமிர்தவேளை யோகாவை சக்திசாலியாக வைக்கிறீர்களா? இந்த குரூப் மிக நல்ல குரூப், ஆனால் நல்ல நல்ல குழந்தைகளையும் மாயா நல்ல முறையில் பார்க்கிறது. மாயாவிற்கும் அவர்கள் மிகவும் பிடித்தமானவர்களாக இருக்கிறார்கள். எனவே மாயாவை வென்றவர் ஆக வேண்டும். ஏனென்றால் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களாக இருக்கிறீர்கள் இல்லையா? எனவே விசேஷ கவனம் வேண்டும். பொறுப்பாளராக இருக்கும் ஆத்மாக்கள் எந்தளவு சக்திசாலியாக இருப்பார்களோ அந்த அளவு வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்க முடியும். இல்லை

என்றால் வாயுமண்டலம் பலஹீனம் ஆகி விடும். பிரச்சனைகள் அதிகமாக வரும். சக்திசாலியான வாயுமண்டலம் இருக்கும் காரணத்தினால் தானும் விக்ன விநாஷக் அதாவது தடைகளை அழிப்பவராக இருப்பார். மேலும் மற்றவர்களின் தடைகளை அழிப்பதற்குப் பொறுப்பாளராகவும் ஆவார். எப்படி சூரியன் அதுவே பிரகாசம் நிறைந்ததாக இருக்கும் காரணத்தினால் இருளை அகற்றி மற்றவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கிறது மற்றும் குப்பைகளை பஸ்பம் செய்கிறது. எனவே யார் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களோ, அவர்கள் சக்தி நிறைந்த விக்ன விநாஷக் நிலையில் நிலைத்திருப்பதற்கான கவனம் வையுங்கள். தனக்காக மட்டும் அல்ல. கையிருப்பும் சேமிப்பாகி இருக்க வேண்டும். அதன் மூலம் மற்றவர்களையும் தடைகளை அகற்றுபவராக ஆக்க முடியும். இந்த குரூப்பில் பெரும்பான்மையோர் மாஸ்டர் ஞான சூரியனாக இருக்கிறார்கள். இப்பொழுது நான் மாஸ்டர் ஞான சூரியன் என்ற இந்த நினைவு சொரூபமாகி இருக்க வேண்டும். தானும் பிரகாச சொரூபம் மற்றும் மற்றவர்களின் இருளையும் அகற்றுபவர். நல்லது.

மதுபன்னை சேர்ந்தவர்களும் பாப்தாதாவின் நினைவில் இருக்கிறார்கள். மதுபன்நிவாசிகளும் பிராமண குடும்பத்தின் பார்வையில் இருக்கிறார்கள். எப்பொழுது மதுபன்னின் மகிமை செய்கிறீர்கள் என்றால், எதிரில் மதுபன் நிவாசி வருகிறார்கள். மதுபன்னின் மகிமைக்கோ முழுமையான சொற்பொழிவு உருவாக்கப்பட்டிருக்கிறது. எது மதுபன்னின் மகிமையாக இருக்கிறதோ அது நம்முடைய மகிமை என்று ஒவ்வொரு மதுபன்நிவாசியும் அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா. நல்லது.

எப்பொழுதும் அனைத்து விசேஷங்கள் நிரம்பிய விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுயத்தின் சொரூபம் மூலமாக சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் சேவாதாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் வண்ணம், ரூபம் மற்றும் நறுமணம் நிறைந்த மலர்களின் தோட்டத்து உரிமையாளர் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

இரட்டை வெளிநாட்டு குழந்தைகளுக்கு நம்மை ஏன் இரட்டை சேவை (ஈஸ்வரிய சேவையின் கூடவே வெளியுலக வேலை) செய்ய வேண்டும்

என்று ஏன் கூறப்படுகிறது என்ற கேள்வி இருக்கிறது. இந்தக் கேள்விக்கு பதில் கூறிக் கொண்டே பாப்தாதா சொன்னார் -நேரம் குறைவாக இருக்கிறது, மேலும் மிகவும் அதிகமாக பிராப்தி செய்ய விரும்புகிறீர்கள். இந்தக் காரணத்தினால் உடலும் ஈடுபட வேண்டும். மனமும் ஈடுபட வேண்டும். மேலும் பணமும் ஈடுபட வேண்டும். எனவே மூன்று விதமான சேவை செய்ய வேண்டும். கொஞ்ச காலத்தில் உங்களுடைய மூன்று விதமான லாபம் சேமிப்பு ஆகிறது. ஏனென்றால், பணத்திற்கும் மதிப்பெண்கள் இருக்கிறது. இந்த மதிப்பெண்கள் சேமிப்பாகும் காரணத்தினால் வரிசை எண்ணில் முன்னுக்கு வந்து விடுகிறீர்கள். அப்படி உங்களின் லாபத்திற்கு தன்னுடைய பணத்தை ஈடுபடுத்தினீர்கள் என்றால் பணத்தின் பாடத்திலும் ஒன்றிற்கு பல மடங்கு கிடைக்கிறது. அனைத்து பக்கங்களிலிருந்து ஒருவேளை ஒரே நேரத்தில் லாபம் எடுக்க முடியும் என்றால், ஏன் செய்யக்கூடாது. மற்றபடி எப்பொழுது பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் இவருக்கு நேரமே இல்லை, ஓய்வே இல்லை, தனது உணவை அருந்துவதற்கும் நேரம் கிடைப்பதில்லை. இவர் இந்த அளவு பிஸியாகி விட்டார் என்றால் இயல்பாகவே அதிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுவார் ஆனால் எதுவரை அந்த அளவு பிஸியாகவில்லையோ இது அவசியமாகும். .இது வீணாகச் செல்லாது. இதற்கும் மதிப்பெண்கள் உண்டு. பிஸியாகி விட்டீர்கள் என்றால் நாடகமே உங்களை அந்த வேலை செய்ய விடாது. ஏதாவது ஒரு காரணம் அந்த மாதிரி உருவாகி விடும். அதனால் விரும்பினால் கூட செய்ய முடியாது. எனவே எப்படி இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறீர்களோ அதில் தான் நன்மை இருக்கிறது. நான் சமர்ப்பணம் ஆனவன் இல்லை என்று அப்படி நினைக்காதீர்கள். நீங்களும் சமர்ப்பணம் ஆனவர்கள் தான். வழிகாட்டுதல் படி நடந்து கொண்டிருக்கிறீர்கள். தன் மனம் சொல்லும் வழிப்படி நடந்தீர்கள் என்றால், சமர்ப்பணம் ஆனவர் இல்லை. ஒருவேளை இதில் தன்னுடைய மனம் சொல்லும் வழியை நான் இதை செய்ய மாட்டேன் என்று நினைக்கிறீர்கள் என்றால், அது இன்னும் அதிகமாக மனம் சொல்லும் வழிப்படி நடப்பதாகும் எனவே தன்னை மிகவும் லேசாக வைத்துக் கொள்ளுங்கள். யார் பொறுப்பாளராக இருக்கும் ஆத்மாக்களோ ஒருவேளை அவர்கள் கூறுகிறார்கள் என்றால், அதில் தான் எனக்கு நன்மை இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். இந்த விஷயத்தில் நீங்கள் கவலையின்றி இருங்கள். இதில் ஒருவேளை எனக்கு இதில்

பங்கு இல்லை, எனக்கு ஏன் கூறப்படவில்லை என்று அதிகமாக யோசித்தீர்கள் என்றால், இவை அனைத்தும் வீணானவை, புரிந்ததா?

**டீச்சர்களுக்காக**: டீச்சர்களுக்காக சேவை ஸ்தானம் எது? டீச்சர்கள் எப்பொழுதும் உலக மேடையில் இருக்கிறார்கள். உங்களுடைய சேவா ஸ்தானம் உலக மேடை. நான் மேடையில் இருக்கிறேன் என்று புரிந்து கொள்வதினால் ஒவ்வொரு காரியத்தையும் கவனமாகச் செய்வீர்கள். ஏதாவது நிகழ்ச்சி செய்கிறீர்கள் என்றால் மேடையில் அமர்ந்திருக்கும் நேரம் எவ்வளவு கவனம் இருக்கிறது. அலட்சியப்போக்கு இருக்காது. அப்படி டீச்சர்கள் ஆவது என்றால் உலக மேடையில் இருப்பது. சென்டரில் இரண்டு சகோதரிகள் இருக்கிறீர்கள் என்றால், இருவர் இல்லை, ஆனால் உலகின் எதிரில் இருக்கிறீர்கள்.

**வரதானம்: பிராமண வாழ்க்கையில் எப்பொழுதும் சுகத்தின் அனுபவம் செய்யக்கூடிய மாயாவை வென்றவர் கோபத்தை வென்றவர் ஆகுக!**

பிராமண வாழ்க்கையில் ஒருவேளை சுகத்தின் அனுபவம் செய்ய வேண்டும் என்றால் கோபத்தை வென்றவர் ஆவது மிக அவசியமாகும். யாராவது தீய வார்த்தைகள் கூறி திட்டினாலும், இழிவு படுத்தினாலும் ஆனால் உங்களுக்கு கோபம் வரக்கூடாது. அடக்குமுறையைக் காட்டுவது கூட கோபத்தின் அம்சமாகும். கோபப்படத்தான் வேண்டியது இருக்கிறது இல்லை என்றால் வேலை நடக்காது என்று அப்படியில்லை. இன்றைய நாட்களின் நேரத்திற்கு ஏற்றபடி கோபத்தினால் காரியம் கெட்டு விடுகிறது. மேலும் ஆத்மீக அன்பு மூலம் அமைதியாக இருந்தால் கெட்டுப் போன காரியமும் சரியாகி விடுகிறது. எனவே இந்த கோபத்தை மிகப் பெரிய விகாரம் என்று புரிந்து கொண்டு மாயாவை வென்றவர், கோபத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக.

**சுலோகன்: உங்களுடைய உள்உணர்வை அந்த மாதிரி சக்திசாலியானதாக ஆக்குங்கள், அதன் மூலம் அனேக ஆத்மாக்கள் உங்களுடைய உள்உணர்வு மூலமாக தகுதியானவர் மற்றும் யோகி ஆகி விடட்டும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 14.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதா மூலமாக பாரதம் மற்றும் வெளிநாடுகளின் செய்தி!

இன்று பாப்தாதா குழந்தைகளுடன் வலம் வரச் சென்றிருந்தார். பாப்தாதாவிற்கு முழு உலகையும் சுற்றி வருவதற்கு எவ்வளவு நேரம் எடுத்திருக்கும்? எவ்வளவு நேரத்தில் விரும்புகிறாரோ அவ்வளவு நேரத்தில் சுற்றி வர முடியும். விஸ்தாரத்தில் செய்தாலும் சரி அல்லது சாரத்தில் செய்தாலும் சரி, அவரால் முடியும். இன்று இரட்டை வெளி நாட்டினரை, சந்திக்கும் நாள் இல்லையா! எனவே சுற்றி வந்த செய்தியைக் கூறுகிறோம். வெளி நாட்டில் என்ன பார்த்தோம் மற்றும் பாரதத்தில் என்ன பார்த்தோம்?

சிறிது காலத்திற்கு முன்பு வெளிநாட்டின் விசேஷத்தின் அலை பாரதத்தில் வந்தது -அது என்ன? எப்படி வெளிநாட்டில் அற்ப கால சுகத்தின் சாதனங்களின் மகிழ்வில் எப்போதும் மகிழ்ச்சியாக இருந்தார்கள், அதே போல் பாரதவாசிகளும் வெளிநாட்டு சுகத்தின் சாதனங்களை அதிகமாக தங்களுடைய காரியத்தில் ஈடுபடுத்தினார்கள். வெளிநாட்டு சாதனங்கள் மூலமாக அற்பகால சுகத்தில் மகிழ்ச்சியாக இருக்கும் அனுபவத்தை அதிகமாகச் செய்தார்கள், இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார்கள். பாரதவாசிகள் அற்பகால சாதனங்களை காப்பி (அதே போல் தயாரிக்க) செய்தார்கள், காப்பி செய்த காரணத்தினால் தங்களுடைய உண்மையான சக்தியை இழந்து விட்டார்கள். ஆன்மீகத்தி-ருந்து ஒதுங்கி விட்டார்கள். மேலும் வெளிநாட்டு சுகத்தின் சாதனங்களின் ஆதாரத்தை எடுத்துக் கொண்டார்கள். மேலும் வெளி நாட்டினர் என்ன செய்தார்கள்? புத்திசாத் தனமான காரியம் செய்தார்கள். பாரதத்தின் உண்மையான ஆன்மீக சக்தி அவர்களை வெளிநாட்டில் கவர்ந்து இழுத்தது. இதன் விளைவாக ஒவ்வொரு பெயர் பெற்ற ஆன்மீக சக்தி உள்ளவர்களிடம் மற்றும் குருமார்களிடம் வெளிநாடுகளில் பின்பற்றி நடப்பவர்களை அதிகமாகப் பார்க்க முடியும். வெளிநாட்டு

ஆத்மாக்கள் போலியான சாதனங்களை விட்டு விட்டு உண்மையின் பக்கம், ஆன்மமீகத்தின் பக்கம் அதிகமாக கவர்ந்து இழுக்கப்பட்டார்கள், மேலும் பாரதவாசிகள் போலியான சாதனங்களில் மகிழ்வாக இருந்து விட்டார்கள். தன்னுடைய பொருளை விட்டு விட்டு மாற்றான் பொருளின் பின்னால் சென்று கொண்டிருக்கிறார்கள். மேலும் வெளிநாட்டு ஆத்மாக்கள் உண்மையானதைத் தேடுவதிலும், பகுத்தறிந்து அடைவதிலும் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

அப்படி இன்று பாப்தாதா, பாரதம் மற்றும் வெளிநாடுகளைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார். அந்த வலம் வருகையில் பாரதவாசிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் மற்றும் வெளிநாட்டினர் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தார். பாரதவாசிகளைப் பார்த்து இவ்வளவு உயர்ந்த குலத்தைச் சேர்ந்த நம்பர் ஒன் தர்மத்தின் ஆத்மாக்கள், பின்னால் வந்தவர்களால் விடப்பட்ட பொருட்களை உபயோகிப்பதில் அந்த அளவு மன மகிழ்ந்து போனார்கள், அதனால் விசேஷ பொருட்களை மறந்து விட்டார்கள். இந்தக் காரணத்தினால் பாரதம் என்ற வீட்டில் அமர்ந்து கொண்டே, பாரதம் என்ற வீட்டில் வந்திருக்கும் சிரேஷ்ட விருந்தினர் தந்தையையும் தெரிந்திருக்கவில்லை. மேலும் வெளிநாட்டின் ஆத்மாக்கள் தூரமான இடங்களில் இருந்தாலும் செய்தியைக் கேட்ட உடனேயே தெரிந்து கொண்டு, வந்தும் சேர்ந்து விட்டார்கள். இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் பகுத்தறியும் கண் மிகக் கூர்மையானது என்று பாப்தாதா பார்க்கிறார். தூரத்தி-ருந்து பகுத்தறியும் கண் மூலமாக அனுபவம் மூலமாக பார்த்து விட்டார்கள் மற்றும் அடைந்து விட்டார்கள். மேலும் பாரத வாசிகள் அதிலும் மவுன்ட் அபு வாசிகள் மேல் மிகுந்த இரக்கம் வருகிறது. அருகி-ருந்தும் பகுத்தறியும் கண் இல்லை. பகுத்தறியும் கண் இன்றி குருடர்களாய் தங்கிப் போய் விட்டார்கள் இல்லையா அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்து இரக்கம் வரத்தானே செய்யும் இல்லையா? அப்படி இரட்டை வெளிநாட்டினரின் அதிசயத்தை பார்த்துக் கொண்டிருந்தனர்.

அடுத்து என்ன பார்த்தோம்? எப்படி தற்சமயப் பாரதம் ஏழையாக இருக்கிறது, அதே மாதிரி இப்பொழுது இறுதி நேரம் அருகில் இருக்கும் காரணத்தினால் வெளிநாட்டினரிலும் நிரம்பிய நிலையில் (செழிப்பில்)

குறை வந்து விட்டது, எப்படி மரம் எப்பொழுது பசுமை நிறைந்ததாக இருக்குமோ, மலர்கள், பழங்கள் ஆகியவை இருக்கும், ஆனால் மரம் காய்ந்து வாடத் தொடங்குகிறது என் மலர், பழங்களும் வாடத் தொடங்கி விடுகின்றன. இப்பொழுது வெளிநாட்டிலும் வேலை சுலபமாக கிடைப்பதில்லை. முன்பு வெளிநாட்டில் இம்மாதிரி பிரச்சனை இருந்ததாகக் கேள்விப்பட்டீர்களா? இதுவும் சுகத்தின் சாதனம், மேலும் அமைதி என்ற மலர் வாடிக் காய்ந்து கொண்டிருக்கின்றன என்பதின் அடையாளம். பாரதம் என்ற முக்கிய தண்டு காய்ந்து கொண்டிருக்கிறது. அதன் பாதிப்பு கிளைகளிலும் ஏற்படத் தொடங்கி விட்டது. இந்த கிறிஸ்துவ மதம் கடைசி முக்கிய பெரிய கிளை, கல்ப விருக்ஷ படத்தில் கிறிஸ்தவ மதம் எந்தக் கிளையாக இருக்கிறது? முக்கிய கிளைகளாக எதைக் காண்பிக்கிறீர்களோ அதில் இது கடைசியானது தான் இல்லையா? அந்தக் கிளை வரை நிரம்பிய நிலையின், பிராப்தியின் பசுமை காய்ந்து விட்டது. இது முழு மரத்தின் இத்துப் போன நிலையின் அடையாளம் அப்படி இன்று முழு உலகில் அற்பக்கால பிராப்தி என்ற மலர்கள், பழங்கள் காய்ந்து இருப்பதாகப் பார்த்தோம். இன்னும் இரண்டு விஷயங்கள் மட்டும் இருக்கின்றன.

ஒன்று, மனதால், வாயால் கதறுவது, இன்னொன்று எப்படியாவது கட்டாயத்தில் வாழ்க்கையை, தேசத்தை நடத்துவது. கதறுவது மற்றும் காரியத்தை நடத்துவது. இந்த இரண்டு வேலைகள் இருந்து விட்டன. மிகவும் குஷியாக வாழ்க்கையை நடத்துவது என்பது முடிவடைந்து விட்டது. எப்படியாவது நடத்த வேண்டும் என்ற நிலையாகி விட்டது. வெளி நாட்டிலும் இந்த மாதிரியான நிலை உருவாகி விட்டது. ஆக இது எதன் அடையாளம்? கட்டாயத்தில் எதுவரை நடத்த முடியும். இப்பொழுது கதறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி உலகிற்கு என்ன செய் வேண்டும்? கட்டாயத்தில் நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு பிராப்தி என்ற இரண்டு இறக்கை கொடுத்து பற்ற வைக்க வேண்டும். யாரால் பறக்க வைக்க முடியும்? யார் அவர்களே பறக்கும் கலையில் இருப்பார்களோ அவர்களால் தான் முடியும். அப்படி நீங்கள் பறக்கும் கலையில் இருக்கிறீர்களா? பறக்கும் கலை மற்றும் ஏறும் கலை - நீங்கள் எந்தக் கலையில் இருக்கிறீர்கள்? ஏறும் கலை கூட இல்லை,

இப்பொழுது பறக்கும் கலை வேண்டும். எதுவரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள்? இரட்டை வெளிநாட்டினர், என்ன நினைக்கிறீர்கள்? பெரும்பான்மையினரோ தந்தைக்கு சமமான ஆசிரியர் தரம் உள்ளவர்கள் தான் இல்லையா? டீச்சர் என்றால், பறக்கும் கலை உள்ளவர் அந்த மாதிரியே தான் இருக்கிறீர்கள் இல்லையா ? நல்லது!

இன்றோ சுற்றி வந்த செய்தி மட்டும் கூறினோம். இப்பொழுது பாரதம் மற்றும் வெளி நாட்டினர் நடைமுறையில் அடையாளங்களை தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய நாட்களில் ஏதாவது விஷயம் நடந்தது என்றால் 100-வருடங்களுக்கு முன்பு நடந்தது என்று கூறுகிறார்கள். அனைத்து விசித்திர விஷயங்களும் நடந்து கொண்டிருக்கின்றன, ஏனென்றால் இவை விசித்திர தந்தையை பிரத்யக்ஷக்ஷம் செய்யும். இப்பொழுது என்ன ஆகுமோ என்று அனைவரின் வாயி-ருந்து இந்த வார்த்தைகள் வெளியாகின்றன. அனைவரின் புத்தியில் இந்தக் கேள்விக் குறி தெளிவாகி விட்டது. பிறகு என்ன நடக்க வேண்டுமோ அது நடந்து விட்டது என்ற வார்த்தைகள் வெளியாகும். தந்தை வந்து விட்டார் என்ற கேள்விக் குறி அகன்று முற்றுப் புள்ளி இடப்பட்டு விடும். எப்படி கடைந்து வெண்ணெய் எடுக்கப்படுகிறது. அதேபோல் முதல் குழப்பம் ஏற்படும் பிறகு வெண்ணெய் வெளியாகும். அப்படி இந்தக் கேள்விக் குறி என்ற குழப்பத்திற்குப் பிறகு பிரத்யக்ஷக்ஷம் என்ற வெண்ணெய் வெளியாகும். இப்பொழுது மிக வேகமாக குழப்பம் தொடங்கி விட்டது. நானபுறங்களிலும் இப்பொழுது பிரத்யக்ஷம் என்ற வெண்ணெய் உலகின் எதிரில் தென்படும் ஆனால் இந்த வெண்ணெயை அருந்துபவர்கள் யார்? சாப்பிடுவதற்குத் தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா! அனைவரும் பரிஷ்தாக்கள் உங்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லது! அனைத்து ப்ராப்தியில்லாத ஆத்மாக்களுக்கும் பிராப்தி செய்விக்கும், அனைவருக்கும் பகுத்தறியும் கண்ணை தானமாகக் கொடுக்கும் மஹாதானிகளுக்கு, அனைவருக்கும் திருப்தியின் வரதானம் கொடுக்கும் வரமளிக்கும் திருப்தியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய பிராப்தியின் இறக்கைகள் மூலமாக மற்ற ஆத்மாக்களை பறக்க வைக்கும், எப்பொழுதும் பறக்கும் கலை உள்ள, எப்பொழுதும் தன் மூலமாக தந்தையை வெளிப்படுத்தக் கூடிய உலகின் எதிரில் வெளிப்படக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வெளிநாட்டுக் குழந்தைகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:** எப்பொழுதும் தன்னை அனைத்து பிராப்தி நிறைந்தவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? அனைத்து பிராப்திகளின் அனுபவம் இருக்கிறதா? எந்த ஆத்மாவிற்கு அனைத்து பிராப்திகளின் அனுபவம் இருக்குமோ அவருடைய அடையாளமாக என்ன தென்படும் ? அவர் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார். அவருடைய முகத்தில் எப்பொழுதும் பிரசன்னத்தின் அடையாளம் தென்படும். இவர் அனைத்தையும் அடைந்திருக்கும் ஆத்மா என்று அவருடைய முகத்தி-ருந்து தென்படும். எப்படி பாருங்கள் வெளியுலகில் யார் ராஜ்குமார், ராஜகுமாரியாக இருப்பார்களோ, உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களோ, அவர்களுடைய முகத்தி-ருந்து இவர்கள் அனைத்தும் நிறைந்த ஆத்மாக்கள் என்பது தென்படும். அதே போல் ஆன்மீக குலத்தைச் சேர்ந்த உங்கள் முகத்தி-ருந்து எது யாருக்குமே கிடைக்கவில்லையோ அது இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது என்பது தென்பட வேண்டும். என்னுடைய முகம் மற்றும் நடத்தை மாறி விட்டது மேலும் முகத்தில் பிராப்தி யின் ஜொலிப்பு வந்து விட்டது என்று அனுபவம் ஆகிறதா? இரட்டை வெளிநாட்டினருக்கு இரட்டை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றால் சேவையும் இரு மடங்கு செய்ய வேண்டும். இரட்டை சேவை எப்படி செய்வீர்கள்? வாய் மொழி மூலம் மட்டுமல்ல, நடத்தை மற்றும் முகம் மூலமும் செய்ய வேண்டும். எப்படி நீங்களே விட்டில் பூச்சி ஆகியிருக்கிறீர்களோ அதே போல் அனேக விட்டில் பூச்சிகளை விளக்கொளியிடம் அழைத்து வரும் ஆத்மாக்கள் நீங்கள்! எனவே, நீங்கள் பறக்கத் தொடங்கியதைப் பார்த்ததுமே மற்ற விட்டில் பூச்சிகளும் உங்கள் பின்னாலேயே பறக்கத் தொடங்கி விடுவார்கள். எப்படி நீங்கள் அனைவரும் ஒவ்வொரு விசயத்தின் ஆழத்தில் செல்கிறீர்கள், அதே போல் ஒவ்வொரு குணத்தின் அனுபவத்தில் ஆழத்தில் செல்லுங்கள். எவ்வளவு ஆழத்தில் செல்வீர்களோ தினசரி புதுப் புது அனுபவங்களைச் செய்ய முடியும். எப்படி அமைதி சொரூபத்தின் அனுபவத்தை தினசரி செய்கிறீர்களோ அந்த மாதிரி புதுமையை அனுபவம் செய்யுங்கள். எப்பொழுது ஏகாந்தவாசியாக ஆவீர்களோ அப்பொழுது தான் புதிய அனுபவம் ஆகும். ஏகாந்த வாசி என்றால், எப்பொழுதும் ஸ்தூல ஏகாந்தத்தின் கூடவே ஒருவரின் நினைவு என்ற அந்தரத்தில் அதாவது எல்லையில் இருப்பது.

ஒரு பாபா என்ற வார்த்தையையும் அடிக்கடி கூறுகிறீர்கள், அந்த ஒவ்வொரு தடவையும் புதிய அனுபவம் ஆக வேண்டும். எப்படி தொடக்கத்தில் எப்பொழுது வந்தீர்களோ அப்பொழுது பாபா என்ற வார்த்தையைக் கூறினீர்கள், மதுபன்னிற்கு எப்பொழுது வந்தீர்களோ அப்பொழுதும் இதையே தான் கூறினீர்கள். மேலும் இப்பொழுது எப்போது செல்வீர்களோ அப்பொழுதும் பாபா என்ற வார்த்தையைக் கூறுவீர்கள் ஆனால் முத-ல் கூறியதிலும், இப்பொழுது கூறுவதிலும் எவ்வளவு வித்தியாசம் இருக்கும், அந்த அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? பாபா என்ற வார்த்தையோ அதே தான்! ஆனால் உணர்வுப் பூர்வமான பிராப்தியின் ஆதாரத்தில் அதே பாபா என்ற வார்த்தை முன்னேறிச் சென்றது, அப்படி வித்தியாசம் ஏற்படுகிறது இல்லையா? அந்த மாதிரி அனைத்து குணங்களிலும் தினசரி புது அனுபவம் செய்யுங்கள். சாந்த சொரூபமாகவோ இருக்கிறீர்கள், ஆனால் அமைதியின் அனுபவம் எந்த பாயின்ட்டின் (ஞானத்தின்) ஆதாரத்தில் ஏற்படுகிறது. எப்படி பாருங்கள் நான் ஆத்மா, பரமாத்ம நிவாசி, இதன் மூலமாகவும் அமைதியின் அனுபவம் ஆகிறது, மேலும் நான் ஆத்மா சத்யுகத்தில் சுகம், அமைதி சொரூபமாக இருப்பேன் என்ற இதன் அனுபவத்தைப் பார்த்தீர்கள் என்றால், அது வேறாக இருக்கும். அதே போலவே காரியம் செய்து கொண்டே அமைதியற்ற சூழ்நிலையில் இருந்த போதிலும் நான் ஆத்மா அமைதி சொரூபமானவன் என்று அதன் அனுபவம் செய்தீர்கள் என்றால், அதன் அனுபவம் வேறாக இருக்கும். மூன்றிலும் வித்தியாசம் இருந்தது இல்லையா? அமைதி சொரூபமாகவோ இருக்கிறீர்கள். அந்த மாதிரி தினசரி அந்த அமைதி சொரூபத்தின் அனுபவத்திலும் முன்னேற்றம் இருக்க வேண்டும். சில நேரம் ஒரு பாயின்ட்-ன் மூலம் அமைதி சொரூபத்தின் அனுபவம் செய்யுங்கள், சில நேரம் இன்னொரு பாயின்ட் மூலம், அப்படி தினசரி புதுப் புது அனுபவம் ஆகும், மேலும் புதுப்புது அனுபவம் கிடைப்பதற்கு இதிலேயே எப்பொழுதும் பிஸியாக இருங்கள். இல்லையென்றால் என்னவாகிறது, காலப் போக்கில் நினைவு செய்வதற்கான விதி, முரளி கேட்பதற்கும் படிப்பதற்கும் அதே விதி, பிறகு அதே விசயம், என்று சில நேரம் சாதாரணமாக அனுபவம் ஆகத் தொடங்குகிறது, எனவே ஊக்கமும், எப்பொழுதும் எப்படி இருக்குமோ அதே போலவே இருக்கும், முன்னேறிச் செல்லாது. மேலும் இதன் முடிவாக சில நேரம் அலட்சியமும் வந்து விடுகிறது. இதுவோ எனக்குத் தெரியும்,

இதையோ நான் தெரிந்தே இருக்கிறேன் என்ற அலட்சியம் வரும் காரணத்தினால் பறக்கும் கலைக்குப் பதிலாக நிற்கும் கலை ஆகி விடுகிறது. எனவே நீங்கள் எந்த ஆத்மாக் களுக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ அவர்களுக்கு எப்பொழுதும் புதுமையை அனுபவம் செய்விப் பதற்காக இந்த விதி அவசியம் வேண்டும். புரிந்ததா? பெரும்பான்மையோர் நீங்கள் அனைவரும் சேவைக்குப் பொறுப்பாக இருக்கும் ஆத்மாக்கள் தான் இல்லையா? ஆனால் இந்த விசேஷத்தை அவசியம் தாரணை செய்ய வேண்டும். அமைதி சொரூபத்தின் அனுபவம் ஆவதற்கான பாயின்ட் என்னவென்று தினசரி ஏதாவது பாயின்டை தேர்ந்தெடுங்கள். அதே போல் அன்பு சொரூபம், ஆனந்த சொரூபம் ஆகிய அனைத்தின் விசேஷ பாயின்ட்டுகளை புத்தியில் வைத்துக் கொண்டே தினசரி புதுப்புது அனுபவம் செய்யுங்கள். இன்று புது அனுபவம் செய்து மற்றவர்களுக்கும் செய்விக்க வேண்டும் என்று எப்பொழுதும் அந்த மாதிரி உணருங்கள். பிறகு அமிர்தவேளையில் நினைவில் அமருவதற்கு மிகுந்த விருப்பம் இருக்கும். இல்லையென்றால், சில நேரம் சோம்ப-ன் அலை வந்து விடும். புதியது கிடைக்கும் பொழுது சோம்பல் இருக்காது ஆனால் அதே விசயம் என்றால் சோம்பல் வர ஆரம்பித்து விடும். எனவே என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? முறை புரிந்ததா? இப்பொழுது ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால், கேளுங்கள். பொதுவாக வெளிநாட்டினருக்கு வித விதமானவை பிடிக்கும் எப்படி பிக்னிக்கில் இனிப்பு வேண்டும், காரமும் வேண்டும். மேலும் பல வகையானவை வேண்டும் என்றால், எப்பொழுதெல்லாம் அனுபவம் செய்ய அமருகிறீர்களோ, அப்பொழுது பாப்தாதா விதவிதமான பிக்னிக் செய்யப் போகிறார் என்று புரிந்து கொள்ளுங்கள். பிக்னிக் என்ற பெயர் கேட்டவுடனேயே சுறுசுறுப்பாகி விடுவீர்கள், சோம்பல் ஓடிவிடும். பொதுவாக உங்களுக்கு பிக்னிக் செய்வது, வெளியில் செல்வது பிடிக்கும் இல்லையா? எனவே வெளியில் சென்று விடுங்கள். சில நேரம் பரம்தாமம் சென்று விடுங்கள். சில நேரம் மதுபன்னிற்கு வந்து விடுங்கள். சில நேரம் லண்டன் சென்டருக்கு சென்று விடுங்கள், சில நேரம் ஆஸ்ட்ரேலியா சென்று விடுங்கள். பல வகை இருப்பதினால் ரமணீகரத்தில் வந்து விடுவீர்கள். நல்லது.

**வரதானம்: எல்லைக்கப்பாற்பட்ட சம்பூர்ண அதிகாரத்தின் நிச்சயம் மற்றும் ஆன்மீக போதையில் இருக்கக் கூடிய மிக உயர்ந்த செல்வந்தர் ஆகுக!**

தற்சமயம் குழந்தைகள் நீங்கள் அந்த மாதிரி உயர்ந்த சம்பூர்ண அதிகாரி ஆகிறீர்கள். சுயம் சர்வசக்திவான் மேல் உங்கள் அதிகாரம் இருக்கிறது. பரமாத்ம அதிகாரி குழந்தைகள் அனைத்து சம்மந்தங்களின் மற்றும் அனைத்து செல்வத்தின் அதிகாரத்தை பிராப்தி செய்து விடுகிறார்கள். இந்த நேரம் தான் தந்தை மூலமாக மிக உயர்ந்த செல்வந்தர் ஆகுக! என்ற வரதானம் கிடைக்கிறது. உங்களிடம் அனைத்து குணங்களின், அனைத்து சக்திகளின் மற்றும் உயர்ந்த ஞானத்தின் அழியாத செல்வம் இருக்கிறது. எனவே உங்களைப் போன்ற செல்வந்தர் வேறு யாரும் கிடையாது.

**சுலோகன்: எப்பொழுதும் கவனமாக இருந்தீர்கள் என்றால் அலட்சியம் முடிவடைந்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 17.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகத்தின் விசேஷ வரதானம் - அமரர் ஆகுக!

இன்று பாப்தாதா தன்னுடைய ஒவ்வொரு கல்பத்தின் அதிகாரி (உரிமையுள்ள) ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார். யார் யார் உயர்ந்த பாக்கியத்தின் அதிகாரி ஆகியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். அதிகாரி ஆத்மாக்களை பார்த்து இன்று பாப்தாதா அவர்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து புன் சிரித்துக் கொண்டிருந்தார்கள். பிரம்மாபாபா கூறினார், உலகத்தினர் இந்த மாதிரி ஆத்மாக்களும் சிரேஷ்டமாக ஆக முடியும் என்று நினைத்துக் கூட பார்க்க முடியாது அந்த மாதிரி குழந்தைகள் மீது மேல் உங்களுடைய பார்வை சென்றுள்ளது. உலகத்தினரின் பார்வையில் மிக சாதாரண ஆத்மாக்கள், அவர்களை பாப்தாதா தன்னுடைய கண்களின் மணியாக ஆக்கி விட்டார். முற்றிலும் நம்பிக்கையிழந்த ஆத்மாக்களை உலகின் எதிரில் மிக சிரேஷ்ட ஆத்மாக்களாக ஆக்கி விட்டார். பாப்தாதா தன்னுடைய சேனையின் மகாவீரர்களை, ஆயுதம் தரித்த ஆத்மாக்களை யார் யார் சர்வ சக்திவானின் பாண்டவ சேனையில் மைதானத்தில் வந்து நிற்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். என்ன பார்த்திருப்பார்? எவ்வளவு அதிசயமான சேனை! உலகத்தின் கணக்குப்படி படிக்காதவர்களாகத் தென்படுகிறார்கள் ஆனால் பாண்டவ சேனையில் இவர் களுக்கு ஞானம் நிறைந்தவர்கள் என்ற பட்டம் கிடைத்திருக்கிறது. அனைவரும் ஞானம் நிறைந்தவர்கள் தான் இல்லையா? உடலால் காரியங்கள் செய்வது அதாவது நடப்பது எழுந்திருப்பது கூட கடினமானது ஆனால் பாண்டவ சேனையின் கணக்கில் பார்த்தால் ஒரு நொடியில் பரம் தாமம் சென்று வர முடியும். அவர்களோ ஒரு இமய மலை மேல் ஏறி கொடியை பறக்க விடுகிறார்கள் ஆனால் சிவசக்தி பாண்டவ சேனை மூன்று உலகங்களிலும் தன்னுடைய கொடியைப் பறக்க விட்டிருக்கிறார்கள். வெகுளியானவர்கள், ஆனால் அந்த மாதிரி சாமர்த்தியமுள்ள விவரமானவர்கள். விசித்திர

தந்தையையும் தன்னுடையவராக ஆக்கி விட்டார்கள். அந்த மாதிரி சேனையை பாப்தாதாவும் பார்த்து புன்சிரித்துக் கொண்டிருந்தார். பாரதத்திலும் சரி, வெளிநாட்டிலும் சரி, உண்மையான பிராமணர்களாக, சாதாரண ஆத்மாக்களே ஆகிறார்கள். தற்சமயத்தில் மிக முக்கியமானவர்கள் (வி.ஐ.பி) என்று கூறப்படுபவர்கள், அனைவரின் பார்வையில் இருக்கிறார்கள், ஆனால் தந்தையின் பார்வையில் யார் இருக்கிறார்? அந்த பெயர் பெற்றவர்கள் க-யுக ஆத்மாக்கள் மூலமாக சுயநலத்தின் காரணமாக மகிமை செய்யப்படுகிறார்கள், மதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அற்பகாலத்திற்கு காலத்தின் மகிமை இருக்கிறது. இந்த நேரம் மகிமை இருக்கும் அடுத்த நேரம் இருக்காது ஆனால் சங்கமயுக பாண்டவ சேனையின் பாண்டவர்கள் மற்றும் சக்திகளின் மகிமை முழு கல்பமும் நிலைத்திருக்கிறது. ஏனென்றால், அழியாத தந்தையின் வாய் மூலமாக என்ன மகிமை கூறப்படுகிறதோ அது அழியாததாக ஆகி விடுகிறது. எனவே எவ்வளவு போதை இருக்க வேண்டும். எப்படி இன்றைய காலத்து ஏதாவது பெயர் பெற்ற சிரேஷ்ட அத்மா யாரை குருவாக மதிக்கிறார்களோ, ஒருவேளை அவரும் ஏதாவது வார்த்தை யாருக்காவது கூறிவிட்டார் என்றால், குரு கூறியிருக்கிறார் சத்தியமாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறார்கள். அந்த நம்பிக்கையில் இருப்பார்கள். நிச்சயத்தின் ஆதாரத்தில் போதை இருக்கும். அதுபோல உங்களுடைய மகிமையை யார் செய்கிறார்? நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் என்று யார் கூறுகிறார் என்று யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு எவ்வளவு போதை இருக்க வேண்டும். வரமளிக்கும் வள்ளல் என்று கூறினாலும், பாக்கியத்தை உருவாக்குபவர் என்று கூறினாலும், பாக்கியத்தை வழங்குபவர் என்று கூறினாலும், அந்த மாதிரி தந்தையிடமிருந்து சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுக்கு எத்தனை பட்டங்கள் கிடைத்திருக்கின்றன உலகத்தில் எவ்வளவு தான் பெரிய பெரிய பட்டங்கள் இருந்தாலும், சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களின் ஒரு பட்டத்திற்கு எதிரில் அந்த அனேக பட்டங்களும் ஒன்றும் இல்லை. அந்த மாதிரி குஷி இருக்கிறதா ?

சங்கம யுகத்தின் விசேஷ வரதானம் எது? அமர தந்தையிடமிருந்து அமரர் ஆகுக, சங்கம யுகத்தில் தான் அமரர் ஆகுக! என்ற வரதானம் கிடைக்கிறது. இந்த வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்கிறீர்களா? போதை இருக்கிறது, குஷி இருக்கிறது, நினைவு

இருக்கிறது ஆனால் அமரர் ஆகுக! என்ற வரம் பெற்றவராக ஆகியிருக்கிறீர்களா? எந்த யுகத்தின் என்ன விசேஷம் இருக்கிறதோ அதைக் காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்களா? ஒருவேளை இப்பொழுது இந்த வரதானத்தைப் பெறவில்லை என்றால், பிறகு ஒருபொழுதும் இந்த வரதானம் கிடைக்க முடியாது. எனவே நேரத்தின் விசேஷத்தை தெரிந்து அமரர் ஆகுக என்ற வரம் பெற்றவனாக ஆகியிருக்கிறேனா என்று உங்களை சோதனை செய்யுங்கள். அமரன் என்று கூறுங்கள், நிரந்தரமாகக் கூறுங்கள், இந்த விசேஷ வார்த்தையை அடிக் கோடிடுங்கள். அமர்நாத் தந்தையின் குழந்தைகள் ஒருவேளை அமரர் ஆகுக என்ற ஆஸ்திக்கு உரியவர் ஆகவில்லை என்றால் என்னவென்று கூறுவது? சொல்வதற்கு அவசியமில்லையா என்ன? எனவே மதுபன் வரதானி பூமியில் வந்து நிரந்தர வரம் பெற்றவராகுக!

நல்லது அந்த மாதிரி எப்பொழுதும் பாப்தாதாவின் கண்களில் நிரம்பியிருக்கும் கண்ணின் மணிகளுக்கு, எப்பொழுதும் வரமளிக்கும் வள்ளலிடமிருந்து வரதானத்தை பிராப்தி செய்து வரம் அளிக்கும் மூர்த்திகளுக்கு, சிரேஷ்ட பாக்கியவான் மூர்த்திகளுக்கு எப்பொழுதும் உலகின் எதிரில் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களாகி உலகை ஒளிமயமாக்கும் அந்த மாதிரி சங்கமயுகத்தின் பாண்டவ சிவசக்தி சேனைக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதியுடன் சந்திப்பு:** சக்கரதாரியாக (பல இடங்களில் சக்கரம் போல் சுற்றி சேவை செய்பவராகவோ) இருக்கிறீர்கள் . சக்கரதாரியின் கூடவே சக்கரவர்த்தியாகவும் ஆகி விட்டீர்கள். இரட்டை வலம் வருகிறீர்களா? ஸ்தூலமாகவும் மற்றும் புத்தி மூலமாகவும் சக்கரவர்த்தி எப்பொழுதும் அனைவரையும் வரதானங்களின் பையை பார்வையால், வாய்மொழி வார்த்தைகளால், காரியங்களினால் நிரப்பிக் கொண்டே இருப்பார். அப்படி தற்சமயம் உருவாக்குபவரின் குழந்தை உருவாக்குபவராக மற்றும் வரமளிக்கும் தந்தையின் குழந்தைகள் வரம் கொடுப்பவராக இருக்கிறீர்களா? அதிகமாக எந்தப் பங்கு நடந்து கொண்டிருக்கிறது? வள்ளலினுடையதா? அல்லது வரமளிக்கும் வள்ள-னுடையதா? மகாதானியினுடையதா? அல்லது வரம் கொடுப்பவரினுடையதா? இரண்டு பங்குமே நடந்து கொண்டிருக்கிறதா அல்லது இரண்டிலும் விசேஷ ஒரு பங்கு நடந்து கொண்டிருக்கிறதா? கடைசிப் பங்கு எது?

உருவாக்குபவரினுடையதா அல்லது வரம் கொடுப்பவரினுடையதா? வரதானத்தை பெறுவதோ சுலபம் ஆனால் கொடுப்ப வருக்கு இந்தளவு பிராப்தி சொரூப நிலையில் நிலைத்திருக்க வேண்டும். பெறுபவர்களுக்காக வரதானம் ஒரு தங்க லாட்டரி, ஏனென்றால் யார் முற்றிலும் பலவீனமாக இருப்பார்களோ அவர்கள் தான் கடைசியில் வருவார்கள். நேரம் குறைவு மற்றும் பலவீனம் அதிகம், எனவே பெறுவதற்கும் தைரியம் இருக்காது. எப்படி யாருடைய இதயம் மிக பலவீனமானதாக இருக்கிறது, மேலும் நீங்கள் எவ்வளவு தான் நல்ல பொருளைக் கொடுத்தாலும் அவர் அதை பெற்றுக் கொள்ள முடியாது. மிக நல்ல பொருள் என்று புரிந்தும் கொள்வார்கள் ஆனால் அதை அவர்கள் எடுத்துக் கொள்ள முடியாது அப்படி கடைசியில் வரும் ஆத்மாக்கள் அனைத்து விசயங்களிலும் பலவீனமாக இருப்பார்கள். எனவே வரமளிக்கும் பங்கு அதிகம் இருக்கும். யார் தான் சம்பன்னமாகி விட்டாரோ, அந்த மாதிரி சம்பன்ன ஆத்மாக்கள் தான் வரமளிப்பவராக ஆக முடியும். சம்பன்னம் ஆவது - இது தான் வரமளிப்பவரின் நிலை. ஒருவேளை தன்னளவில் இன்னும் அடைய வேண்டியது இருக்கிறது என்றால் மற்றவர்களைப் பார்த்ததும் தன் பக்கம் கவனம் செல்லும், மேலும் தன்னுள் நிரப்புவதில் நேரம் எடுக்கும், எனவே யார் அவரே அனைத்து பிராப்திகளினால் சம்பன்னமாக இருப்பாரோ அவர் தான் வரமளிப்பவராக ஆக முடியும்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1. உண்மையான பிராமணர்களின் நீளமான அதிர்ஷ்ட ரேகை 21-ஜென்மங்களுக்காக!** நீங்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள், சுயம் பகவானுடன் பிக்னிக் செய்து கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி எப்பொழுதாவது நினைத்திருந்தீர்களா, பகவானுடன் மனித உடல் ரூபத்தில் சாப்பிடுவோம், விளையாடுவோம், சிரித்து பேசிக் கொள்வோம் என்று அந்த நாளும் வரும் என்று கனவில் கூட வர முடியாது ஆனால் உங்களுக்கு அந்த அளவு சிரேஷ்ட பாக்கியம் இருக்கிறது ஆனால் அதை நடைமுறையில் ஸ்தூலமாக அனுபவம் செய்கிறீர்கள். நீங்கள் அனைத்து பிராப்தி சம்பன்னமாக இருக்கிறீர்கள். உங்களுடைய அதிர்ஷ்ட ரேகை உயர்ந்தது. 21-ஜென்மங்கள் உத்திரவாதம்! மேலும் அதற்குப் பிறகும் இந்தளவு துக்கம் இருக்காது. முழுக்கல்பத்திலும் முக்கால் வாசி சுகமே தான் கிடைக்கும். இந்தக் கடைசி ஜென்மத்திலும் மிக அதிக

துக்கமானவர்கள் பட்டியலில் நீங்கள் இல்லை. அப்படியானால் நீங்கள் எவ்வளவு உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். இந்த உயர்ந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்.

**2. அன்புக்கடலிடமிருந்து அன்பைப் பெறவதற்கான விதி- விலகியிருப்பவராக ஆகுங்கள்!** சில குழந்தைகளிடமிருந்து, நாங்கள் பாபாவின் நினைவிலோ இருக்கிறோம், ஆனால் அன்பு (பாபாவிடமிருந்து) கிடைப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. ஒருவேளை அன்பு கிடைக்கவில்லை என்றால், அவசியம் அன்பை வெறும் விதியில் குறை இருக்கிறது. தந்தை அன்புக்கடல் அவரோடு யோகா செய்பவர்கள் அவருடைய அன்பி-ருந்து வஞ்சிக்கப்பட்டு விடுவார்கள் என்பது இருக்கவே முடியாது ஆனால் அன்பைப் பெறுவதற்கான வழி - விலகியிருப்பவராக ஆகுங்கள். எதுவரை உடலிலிருந்து மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உறவினர்களிட மிருந்து விலகியிருப்பவராக ஆகவில்லையோ அதுவரை அன்பு கிடைப்பதில்லை. எனவே எங்கேயும் பற்றுதல் இருக்கக் கூடாது. பற்றுதல் இருக்கிறது என்றால், அனைத்து உறவிற்குரிய தந்தை மேல் இருக்கட்டும். ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை..... இதை வாயளவில் மட்டுமல்லாமல் அனுபவம் செய்ய வேண்டும். சாப்பிடுங்கள், காரியங்கள் செய்யுங்கள் ஆனால் விலகியிருப்பவராகி, தந்தையின் அன்பிற்குரியவர்கள் ஆகுங்கள். மனிதர்களின் மேல் பற்று வைத்ததினால் துக்கம், அமைதியின்மைதான் கிடைத்தது. எப்பொழுது அனைத்தையும் கேட்டு சுவைத்துப் பார்த்து விட்டோம் என்றால், அந்த விஷத்தை எப்படி இன்னொரு முறை சாப்பிட முடியும். எனவே எப்பொழுதும் விலகியிருப்பவராகி, தந்தையின் அன்பிற்குரியவர்கள் ஆகுங்கள்.

**3. கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான விதி -நான், என்னுடையது என்பதற்கு முடிவு!** அனைத்துக் குழந்தைகளையும் கடின உழைப்பி-ருந்து விடுவிப்பதற்காக தந்தை வந்திருக்கிறார். அரைக் கல்பம் மிகக் கடுமையாக உழைத்திருக்கிறீர்கள், இப்பொழுது கடின உழைப்பு முடிவடைந்தது. அதற்கான சகஜவிதியாக என்னுடைய பாபா என்ற ஒரு வார்த்தையை மட்டும் நினைவு செய்யுங்கள். என்னுடைய பாபா என்று கூறுவதில் எந்த கடின உழைப்பும் இல்லை. என்னுடைய பாபா என்று கூறினீர்கள் என்றால் துக்கம் கொடுக்கக் கூடிய என்னுடையது,

என்னுடையது என்ற அனைத்தும் முடிவடைந்து விடும். எப்பொழுது அனேக என்னுடையது என்பது இருக்குமோ அப்பொழுது கடினம் இருக்கும், ஒரு என்னுடையது என்பது ஆகி விட்டது என்றால் அனைத்தும் சுலபமாகி விடும். பாபா பாபா என்று கூறிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் கூட சத்யுகத்தில் வந்து விடுவீர்கள். என்னுடைய பேரன், என்னுடைய கொள்ளுப் பேரன், என்னுடைய வீடு, என்னுடைய மருமகள்...... அப்படி என்னுடைய என்ற நீளமான பட்டியல் இருக்கிறது இல்லையா அதற்கு முடிவு கட்டுங்கள். அனேகர்களை மறந்து ஒரு தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால், கடின உழைப்பிலிருந்து விடுபட்டு, மிகவும் சௌகரியமாக குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள். எப்பொழுதும் தந்தையின் நினைவு என்ற சௌகரியத்தில் இருங்கள். நல்லது.

**4. சூழ்நிலை என்ற மலையை சுயநிலை மூலம் உயரே தாண்டி கடந்து செல்லுங்கள்!** தன்னை சக்திசாலியான ஆத்மா என்று எப்பொழுதும் நினைக்கிறீர்களா? சக்திசாலியான ஆத்மா என்றால் எப்பொழுதும் மாயாவிற்கு சவால் விட்டு வெற்றியை அடைபவர். எப்பொழுதும் சக்திசாலியான தந்தையின் தொடர்பில் இருப்பவர். எப்படி தந்தை சர்வ சக்திவானாக இருக்கிறார். அதே போல் நானும் மாஸ்டர் சர்வ சக்திவான். அனைத்து சக்திகளும் ஆயுதங்கள், அலங்காரங்கள், அந்த மாதிரி தன்னை அலங்கரிக்கப்பட்ட ஆத்மா என்று நினைக்கிறீர்களா? யார் எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கிறாரோ அவர் ஒருபொழுதும் பாதக சூழ்நிலைகளில் நிலைகுலைந்து போக மாட்டார். சூழ்நிலையைக் கடந்து செல்ல முடியும். எப்படி விமானம் மூலமாக பறக்கிறீர்கள். எத்தனை மலைகளை, கடல்களைக் கடந்து சென்று விடுகிறீர்கள். ஏனென்றால் மிக உயர்வாகப் பறக்கிறீர்கள். அப்படி உயர்ந்த நிலை மூலம் ஒரு நொடியில் கடந்து சென்று விடுவீர்கள். மலையையும் மற்றும் கடலையும் தாண்டி வந்து விட்டேன் என்று அனுபவம் ஆகும். கடினத்தின் அனுபவம் ஆகாது.

**5. அடக்குமுறையை தியாகம் செய்து அன்பை தாரணை செய்யக்கூடிய உண்மையான சேவாதாரி ஆகுங்கள்!** அனைத்து குமாரர்களும் எப்பொழுதும் ஆன்மீக நிலையில் இருக்கிறீர்களா, அடக்குமுறையிலோ வருவ தில்லையே? இளைஞர்களுக்கு ஆதிக்கம் செலுத்துவது விரைவில் வந்து விடுகிறது. நாம் அனைத்தையும்

தெரிந்திருக்கிறோம், அனைத்தையும் செய்ய முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இளமையின் வேகம் இருக்கிறது ஆனால் ஆன்மீக இளைஞன் என்றால், எப்பொழுதும் (பாபாவின்) அன்பில் இருப்பவர். எப்பொழுதும் பணிவானவராக இருப்பார். ஏனென்றால் எந்த அளவு பணிவானவராக இருப்பாரோ அந்த அளவு படைத்தல் காரியம் செய்வார். எங்கு பணிவு இருக்குமோ அங்கு ஆதிக்கம் செலுத்துவது இருக்காது, ஆன்மீகம் இருக்கும். எப்படி தந்தை எவ்வளவு பணிவானவராகி வருகிறார். அதே போல் தந்தையைப் பின்பற்றி நடப்பவர் ஆகுங்கள். ஒருவேளை சேவையில் கொஞ்சமாவது ஆதிக்கம் செலுத்துவது வந்து விட்டது என்றால் அந்த சேவை முடிவடைந்து விடும். நல்லது.

**இரட்டை வெளிநாட்டினருடன் சந்திப்பு:** இது நல்ல குரூப்! மேலும் இரட்டை வெளி நாட்டினரை பார்த்து பாப்தாதாவிற்கு தன்னுடைய ஒரு பெயர் ஞாபகம் வருகிறது என்ன பெயர்? விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்) நீங்கள் குழந்தையாக ஆகாமல் இருந்த பொழுது பாப்தாதா பாரதத்திற்கு நன்மை செய்பவராக இருந்தார், எப்பொழுதி-ருந்து நீங்கள் வந்து விட்டீர்களோ பிறகு பாப்தாதா உலகிற்கு நன்மை செய்பவராகி விட்டார். அப்படியானால் அதிசயம் யாருடையது உங்களுடைய அதிசயம் தான் இல்லையா? மேலும் நன்றாக உழைக்கவும் செய்கிறீர்கள். ஸ்தூலமாக உங்களுடைய முதுகெலும்பாக யார் இருக்கிறாரோ அவர் மிகவும் புத்திசா-. ஓய்வாக உட்கார விடமாட்டார் எந்த மூலையும் பாபா வந்த செய்தி தெரியாமல் விடுபட்டு விடக் கூடாது என்ற ஆர்வம் மிக நன்றாக இருக்கிறது. சேவையில் தடை மட்டும் இல்லாத நிலை, இது தான் சேவையின் வெற்றி. எந்த சேவை தொடங்கினாலும் பாரதத்திலும் அல்லது வெளிநாட்டிலும் முத-ல் சேவையில் உடன் இருப்பவர்களில், சேவையில், வாயு மண்டலத்தில் ஒரு வழி நடப்பது, ஒரு பலம், ஒருவர் மேல் நம்பிக்கை மற்றும் ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதைத்தான் பாப்தாதா கூறுகிறார். எப்படி தேங்காய் உடைத்து திறப்பு விழா செய்கிறீர்கள், ரிப்பன் வெட்டி, திறப்பு விழா செய்கிறீர்கள். அப்படி முதலில் மேலே கூறிய நான்கு விசயங்கள் என்ற ரிப்பனை வெட்டுங்கள், பிறகு அனைவரின் திருப்தி, மகிழ்ச்சிகரமான நிலை என்ற தேங்காயை உடையுங்கள். இந்த தேங்காய் தண்ணீரை நிலத்தில் ஊற்றுங்கள் எந்த ஒரு காரியம் என்ற நிலத்தில் முத-ல் இந்த தேங்காய் தண்ணீரை ஊற்றுங்கள் பிறகு பாருங்கள் வெற்றி எவ்வளவு கிடைக்கிறது என்று.

இல்லையென்றால் அவசியம் ஏதாவது தடை வரும். அனைவரும் சேவை செய்கிறீர்கள், ஆனால் யார் தடையற்ற சேவாதாரியோ அவருடைய எண் தான் பாப்தாதாவின் பதிவேட்டில் குறிக்கப்படும். பாப்தாதாவிடம் அந்த மாதிரி சேவாதாரிகளின் பட்டியல் இருக்கிறது ஆனால் இப்பொழுது மிகக் குறைவானவர்கள் தான், நீளமான பட்டியல் இல்லை. சொற்பொழிவு நிகழ்த்துபவர்களின் நீளமான பட்டியலும் உங்களிடம் இருக்கிறது. அவர்களை பாப்தாதா பாஷன் (சொற்பொழிவு) செய்பவர்கள் என்று கூறுகிறார். முத-ல் தன்னுடைய சிறப்புகளை வெளிப்படுத்தட்டும், பிறகு சொற்பொழிவு நிகழ்த்தட்டும் என்று பாப்தாதா கூறுகிறார். சொற்பொழிவையோ இன்றைய பள்ளி மாணவ, மாணவிகள் கூட மிக நன்றாகச் செய்கிறார்கள், கை தட்டிக் கொண்டே இருக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவிடம் இருக்கும் பட்டிய-ல் யார் தடையற்றவர்களோ, அனைவரையும் மகிழ்விக்கும் மற்றும் திருப்திபடுத்துபவரோ அவருடைய பெயர் தான் இருக்கிறது. எனவே மாலையில் வருபவர்களில் கை உயர்த்தவில்லை. வெளிநாட்டினருக்கு சேவையில் அவர்களுக்குள் தடை வருவதில்லை, ஆனால் மனதில் கொஞ்சம், கொஞ்சம் தடை வருகிறது மற்றபடி பெரும்பான்மையோர் சரியாக இருக்கிறார்கள். மனதின் எண்ணம், மனதின் நிலை ஆடாத, அசையாததாக இருக்கிறது. இரட்டை வெளிநாட்டினர் நன்றாக சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கூறியதைக் கேட்டீர்களா? வளர்ச்சி செய்ததற்காக பாராட்டுக்கள்! நல்லது.

**வரதானம்: பாக்கியம் மற்றும் பாக்கியத்தை உருவாக்குபவரின் நினைவினால் எப்பொழுதும் குஷியாக இருக்கும் மற்றும் அனைவருக்கும் குஷியை வழங்கும் சகஜயோகி ஆகுக!**

சங்கமயுகம் குஷிகளின் யுகம், மகிழ்ச்சிகளின் யுகம். எனவே எப்பொழுதும் குஷியில் இருங்கள். மேலும் மற்றவர்களுக்கு குஷியைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். பாக்கியம் மற்றும் பாக்கியத்தை உருவாக்குபவரின் நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். தந்தை கிடைத்து விட்டார் என்றால், அனைத்தும் கிடைத்து விட்டது என்ற இந்த நினைவு தான் சகஜயோகி ஆக்கி விடும். உலகத்தினரோ கஷ்டப்படாமல் பகவான் கிடைக்க முடியாது என்று கூறுகிறார்கள் ஆனால் நீங்கள் வீட்டில் அமர்ந்திருந்தே பகவான் கிடைத்து விட்டார், எதை நினைத்துக் கூட பார்க்கவில்லையோ அது கிடைத்து விட்டது என்று கூறுகிறீர்கள்.

குஷிகளின் கடல் கிடைத்து விட்டார் என்ற இதே குஷியில் இருங்கள், இதுவும் சகஜயோகா தான்.

**சுலோகன்: சுத்தமாகவும், விதிப்பூர்வமாகவும் ஒவ்வொரு காரியம் செய்பவர்கள் தான் உண்மையிலும் உண்மையான பிராமணன்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# செய்யும் காரியம் ஆத்மாவை தரிசனம் செய்விக்கும் கண்ணாடி!

இன்று சர்வசக்திவான் தந்தை தன்னுடைய சக்தி சேனையைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். ஒவ்வொரு மாஸ்டர் சர்வசக்திவான் ஆத்மாக்கள் அனைத்து சக்திகளையும் எந்த அளவு தன்னுள் தாரணை செய்திருக்கிறார்கள்? விசேஷ சக்திகளை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள். மேலும் தெரிந்ததின் ஆதாரத்தில் சித்திரத்தை உருவாக்குகிறீர்கள். இந்த சித்திரம் சிரேஷ்ட நிலை மற்றும் மகான் நிலையின் சைதன்ய சொரூப அடையாளமாகும். ஒவ்வொரு காரியமும் சிரேஷ்டம் மற்றும் மகானாக இருக்கிறது இதன் மூலம் சக்திகளை சரித்திரத்தில் அதாவது காரியத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். பலமற்ற ஆத்மாவா அல்லது சக்திசாலியான ஆத்மாவா, சர்வசக்தி சம்பன்னமா அல்லது சக்தி சொரூப கம்பன்னமா என்ற இந்த அனைத்தும் செய்யும் காரியத்தி-ருந்து தெரிய வருகிறது. ஏனென்றால் காரியம் மூலமாகத்தான் நபர் மற்றும் சூழ்நிலையின் சம்மந்தம் மற்றும் தொடர்பில் வருகிறார்கள். எனவே பெயரே -கர்மசேத்திரம், கர்ம சம்மந்தம், கர்ம இந்திரியங்கள், கர்மபோகம், கர்ம யோகம் என்றிருக்கிறது. அப்படி இந்த சாகார வதனத்தின் (பௌதீக உலகின்) விசேஷமே கர்மம் (காரியம்) தான். எப்படி நிராகார உலகின் விசேஷம் கர்மத்திலிருந்து விடுபட்டது. அதே போல் பௌதீக உலகம் என்றால் கர்மம். கர்மம் சிரேஷ்டமாக இருக்கிறது என்றால், சிரேஷ்ட பிராப்தி இருக்கிறது. கர்மம் பிரஷ்டம் அதாவது கீழ்த்தரமாக இருக்கும் காரணத்தினால் துக்கத்தின் பிராப்தி இருக்கிறது ஆனால் இரண்டிற்குமான ஆதாரம் கர்மம். கர்மம் அதாவது செய்யும் காரியம் ஆத்மாவை தரிசனம் செய்விக்கும் கண்ணாடி. கர்மம் என்ற கண்ணாடி மூலம் தன்னுடைய சக்தி சொரூபத்தைத் தெரிந்து கொள்ள முடியும். ஒருவேளை கர்மம் மூலமாக எந்த ஒரு சக்தியின் பிரத்யக்ஷ ரூபம் தென்பட வில்லை என்றால், ஒருவர் எவ்வளவு தான் தன்னை நான் மாஸ்டர் சர்வசக்திவான் என்று கூறினாலும், ஆனால் கர்மசேத்திரத்தில்

இருந்து கொண்டு கர்மத்தில் தென்படவில்லை என்றால் யாராவது நம்புவார்களா? எப்படி யாராவது திறமைசா-யான போர்வீரனாக இருந்தும் யுத்த மைதானத்தில் எதிரியின் எதிரில் யுத்தம் செய்ய முடியவில்லை தோல்வியடைந்து விடுகிறார் என்றால், இவர் திறமைசாலியான போர் வீரன் என்று நம்புவார்களா? அதே போல் ஒருவேளை யாராவது நான் சக்தி சொரூபமானவன் என்று தன்னுடைய புத்தியில் நினைத்துக் கொண்டிருக்கிறார் ஆனால் சூழ்நிலையின் தொடர்பில் வரும் நேரத்தில், எந்த நேரம் எந்த சக்தியின் அவசியமாக இருக்கிறதோ அந்த சக்தியை காரியத்தில் கொண்டு வரவில்லை என்றால், இவர் சக்தி சொரூபமானவர் என்று யாராவது நம்புவார்களா? புத்தியால் மட்டும் தெரிந்து கொள்வது என்பது வீட்டில் அமர்ந்து கொண்டு தன்னை திறமை நிறைந்தவர் என்று நினைப்பது என்றாகி விட்டது ஆனால் தேவையான நேரத்தில் சொரூபத்தைக் காண்பிக்கவில்லை, தேவையான நேரத்தில் சக்தியை காரியத்தில் ஈடுபடுத்தவில்லை, நேரம் கடந்து சென்ற பிறகு யோசித்தார் என்றால் அவரை சக்தி சொரூபம் என்று கூற முடியுமா? எப்படி நேரமோ அதற்கேற்ற சக்தியை கர்மம் மூலமாக காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும் கர்மத்தில் இந்த சிரேஷ்டத்தன்மை தான் வேண்டும், அப்படி முழு நாளின் கர்ம லீலை மூலம் நான் எந்த அளவு மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகியிருக்கிறேன் என்று தன்னை சோதனை செய்யுங்கள். விசேஷமாக எந்த சக்தி தேவையான நேரத்தில் வெற்றியடைபவராக ஆக்குகிறது, மேலும் விசேஷமாக எந்த சக்தியின் பலஹீனம் அடிக்கடி தோல்வியடைய வைக்கிறது? அனேக குழந்தைகள் தன்னுடைய பலவீனமான சக்தியை தெரிந்தும் இருக்கிறார்கள், சில நேரம் நன்கு தாரணை செய்யும் கூட்டம் இருக்கிறது அல்லது தன்னுடைய சுய முயற்சியாளர்களின் வாயு மண்டலம் இருக்கிறது என்றால் வர்ணனையும் செய்வார்கள், ஆனால் சாதாரண முறையில் பெரும்பான்மையோர் தன்னுடைய பலவீனத்தை மற்றவர் களிடமிருந்து மறைக்கவே முயற்சி செய்வார்கள். சிலர் அந்த நேரத்தில் கூறவும் செய்வார்கள் இருந்தும் அந்த பலவீனத்தின் விதையை குறைவாகத்தான் தெரிந்திருக்கிறார்கள். மேலோட்டமாக வர்ணனை செய்வார்கள். வெளிப்படையான ரூபத்தின் வர்ணனை செய்வார்கள், ஆனால் விதை வரை செல்ல மாட்டார்கள், எனவே ரிஸல்ட் என்னவாக ஆகிறது? அந்த பலவீனத்தின் மேலோட்டமான கிளைகளை வெட்டி விடுவார்கள், எனவே கொஞ்ச காலம் அகன்று விட்டது என்று அனுபவம் ஆகிறது, ஆனால் விதையாக இருக்கும் காரணத்தினால்

சூழ்நிலைகளின் தண்ணீர் கிடைப்பதினால் மீண்டும் அதே பலவீனத்தின் கிளை வெளிப்படுகிறது. எப்படி இன்றைய நாட்களின் சூழ்நிலையில் உலகத்தில் நோய் முற்றிலும் அகலுவதில்லை. ஏனென்றால், நோயின் விதையை டாக்டர்கள் தெரிந்திருக்கவில்லை எனவே, நோய் உள்ளடங்கிப் போய் விடுகிறது முற்றிலும் அகலுவதில்லை. அதே போல் இங்கேயும் விதையைத் தெரிந்து விதையை அழித்து விடுங்கள். அனேகர் விதையை தெரிந்தும் இருக்கிறார்கள், ஆனால் தெரிந்திருந்தும் அலட்சியத்தின் காரணமாக சரியாகி விடும் என்று சொல்வார்கள் ஆனால் ஒரு தடவையில் எப்படி அழியும். நேரமோ ஆகத்தான் ஆகும். அப்படி அதிக புத்திசாத்தனமாக நடந்து கொள்வார்கள். எந்த நேரம் சக்திசாலி ஆக வேண்டுமோ அந்த நேரம் ஞானம் நிறைந்தவராக ஆகி விடுகிறார்கள் ஆனால் ஞானத்தின் சக்தி இருக்கிறது, ஆனால் அந்த ஞானத்தை சக்தி ரூபத்தில் உபயோகப்படுத்தவில்லை பாயின்ட்டின் (ஞானத்துளியின்) ரூபத்தில் உபயோகிப்பது இல்லை எனவே விதையைத் தெரிந்து கொள்ளுங்கள். அலட்சியத்தில் வந்து தன்னுடைய சம்பூர்ணம் மற்றும் சம்பன்ன நிலையில் குறைவு ஆக்காதீர்கள். மேலும் ஒருவேளை விதையைத் தெரிந்த பிறகு, தனக்குள் தெரிந்து கொள்ளும் சக்தியை அனுபவம் செய்கிறீர்கள், ஆனால் பஸ்மம் ஆக்கும் சக்தி என்று உணரவில்லை என்றால் மற்ற ஜீவாலா சொரூப சிரேஷ்ட ஆத்மாக்களின் சகயோகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். ஏனென்றால், பலவீனமான ஆத்மா ஆன காரணத்தினால் நேரடியாக தந்தை மூலமாக தொடர்பு மற்றும் சரிசெய்தலை செய்ய முடிவதில்லை எனவே, இரண்டாம் நம்பர் சிரேஷ்ட ஆத்மாக்களின் சகயோகத்தைப் பெற்று தன்னை வெரிஃபை (சரி செய்து) செய்வதினால் சுலபமாக ப்யூரிஃபை (தூய்மையாக) ஆகி விடுவீர்கள். என்ன சோதனை செய்ய வேண்டும்? மேலும் எப்படி சோதனை செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? ஒன்றோ மறைக்காதீர்கள் இரண்டாவது தெரிந்த போதிலும் தட்டிக் கழிக்காதீர்கள், அப்படியே இருக்கவிட்டு நடந்து கொள்ளாதீர்கள். இருக்க விட்டீர்கள் என்றால் கதறுகிறீர்கள். அப்படி இன்று பாப்தாதா சக்தி சேனையின் சக்தியைப் பார்த்துக் கொண்டிருந்தார். இப்பொழுது பிராப்தி ஆகியிருக்கும் சக்திகளை காரியத்தில் கொண்டு வாருங்கள். ஏனென்றால், உலகின் அனைத்து ஆத்மாக்களின் எதிரில் நீங்கள் செய்யும் காரியம் தான் உங்களை அறிமுகப்படுத்தும். காரியம் மூலம் சுலபமாகத் தெரிந்து கொள்வார்கள், செய்யும் காரியம் மற்றவைகளை

விட ஸ்தூலமானது அதாவது வெளிப்படையானது. எண்ணம் சூட்சும (வெளியில் தெரியாத) சக்தி. இன்றைய நாட்களின் ஆத்மாக்கள் ஸ்தூலமான வெளிப்படையான ரூபத்தை விரைவில் தெரிந்து கொள்ள முடியும் ஆனால் சூட்சும சக்தி ஸ்தூலத்தை விட வலுவானது, ஆனால் மக்களுக்கு சூட்சும சக்தியின் வைப்ரேஷனை அறிந்து கொள்வது இப்பொழுது கடினம். கர்ம சக்தி மூலமாக உங்களுடைய எண்ணத்தின் சக்தியையும் தெரிந்து கொள்வார்கள். மன சக்தியால் செய்யும் சேவையை விட உயர்ந்தது. உள் உணர்வு மூலமாக உள் உணர்வுகளை வாயு மண்டலத்தை பரிவர்த்தனை செய்யும் சேவையும் மிக உயர்ந்தது ஆனால் இதைவிட சுலபமானது கர்மம், அதனுடைய பரிபாஷையையோ ஏற்கனவே கூறியிருக்கிறோம் ஆனால் இன்று இந்த விசயத்தை அதாவது கர்மம் மூலமாக சக்தி சொரூபத்தின் (சூத்திரம், விளக்கம்) தரிசனம் மற்றும் சாட்சாத்காரம் செய்வியுங்கள் என்று தெளிவுபடுத்துகிறோம். கர்மம் மூலமாக எண்ணத்தின் சக்தி வரை சென்றடைவது சுலபமாகி விடும். இல்லையென்றால் பலவீனமான கர்மம், சூட்சும சக்தியான புத்தியையும், எண்ணத்தையும் கீழே கொண்டு வரும். எப்படி பூமியின் ஈர்ப்பு மேலே உள்ள பொருட்களை கீழே கொண்டு வருகிறது. எனவே சித்திரத்தை சரித்திரத்தில் கொண்டு வாருங்கள். நல்லது.

அந்த மாதிரி ஒவ்வொரு சக்தியையும் காரியம் மூலம் பிரத்யக்ஷம் செய்யக் கூடிய, தன்னுடைய சக்தி சொரூபம் மூலமாக சர்வ சக்திவான் தந்தையை பிரத்யக்ஷம் செய்யக் கூடிய, நிரந்தர, பகுத்தறியும் மற்றும் பரிவர்த்தனை சக்தி சொரூபமான, எப்பொழுதும் சரித்திரம் (ஒழுக்கம்) மூலம் விசித்திர தந்தையை சாட்சாத்காரம் செய்விக்கக் கூடிய, அந்த மாதிரி மாஸ்டர் சர்வ சக்திவான் சிரேஷ்ட காரியம் செய்யும் சக்தி சொரூப ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) மாயா விருந்தினராக இருப்பதின் ரிஸல்ட் -சோர்வு!** எப்பொழுதும் தன்னை பாப்தாதாவின் துணைவன் என்று நினைக்கிறீர்களா? எப்பொழுது நிரந்தரமாக தந்தையின் துணை அனுபவம் ஆகிறது என்றால், அதன் அடையாளம் வெற்றி. ஒருவேளை அதிக நேரம் யுத்தத்தில் செல்கிறது, கடினத்தின் அனுபவம் ஆகிறது என்றால், தந்தையின் துணை இல்லை என்பது நிரூபணம் ஆகிறது. யார் எப்பொழுதும் தந்தையின் துணையின் அனுபவியாக இருப்பாரோ அவர்

எப்பொழுதும் அன்பில் ஐக்கியமாகி இருப்பார். அன்புக் கடலில் மூழ்கி இருக்கும் ஆத்மா எந்தவொரு பிரபாவத்திலும் வர முடியாது. மாயா வருவது என்பது ஒன்றும் பெரிய விசயம் இல்லை ஆனால் அது தன்னுடைய ரூபத்தை காண்பிக்கக் கூடாது. ஒருவேளை மாயாவின் விருந்து உபசரிப்பு செய்தீர்கள் என்றால் காலப் போக்கில் சோர்வு ஏற்பட்டு விடும். முன்னேறிச் செல்லவும் இல்லை பின்னடையவும் இல்லை என்று அப்படி அனுபவம் செய்வீர்கள். பின்னடையவும் முடியாது. முன்னேறிச் செல்லவும் முடியாது. இதுதான் மாயாவின் பிரபாவம். மாயாவின் கவர்ச்சி மேலே செல்ல விடாது. பின்னோக்கிச் செல்வதற்கான கேள்விக்கே இடமில்லை ஆனால் ஒருவேளை முன்னேறிச் செல்லவில்லையென்றால் விதையைப் பகுத்தறிந்து அதை பஸ்மம் செய்யுங்கள். ஏதோ இருக்கிறோம், வந்து கொண்டிருக்கிறோம், கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்று அப்படி இருக்கக் கூடாது ஆனால் தன்னுடைய வேகம் மற்றும் நிலையின் முன்னேற்றம் எந்தளவு ஆகியிருக்கிறது என்று சோதனை செய்யுங்கள். நல்லது.

**2) யார் ஒரே வெட்டில் தந்தையிடம் பலியாகிறாரோ அவர் தான் மகா பிரசாதம் ஆகிறார்**! அனைத்து குழந்தைகளும் ஜீவன் முக்தி ஸ்திதியின் விசேஷ ஆஸ்தியை அனுபவம் செய்கிறீர்களா? நீங்கள் ஜீவன் முக்தியாக இருக்கிறீர்களா அல்லது ஜீவன் பந்தனத்திலா ? டிரஸ்டி என்றால் ஜீவன் முக்தி மர்ஜீவா (உடலிலிருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுப்பது) ஆகியிருக்கிறீர்களா அல்லது இறந்து கொண்டிருக்கிறீர்களா? பக்தி மார்க்கத்தில் ஜட விக்ரஹங்களுக்கு என்ன பிரசாதம் படைப்பார்கள் ? எது ஒரே வெட்டில் பலியாகிறதோ அது தான். கதறிக் கதறி இறப்பது பிரசாதமாகாது. யார் ஒரே வெட்டில் இரண்டு துண்டாகுகிறாரோ அவர் தான் தந்தையின் எதிரில் பிரசாதம் ஆகுகிறார். என்னுடைய பாபா என்றும் நான் பாபாவினுடையவன் என்றும் நினைத்தார் என்றால், ஒரே வெட்டில் இரண்டு துண்டானது. நினைத்தீர்கள் மற்றும் முடிந்தது, வாளால் வெட்டப்பட்டது. ஒருவேளை யோசிக்கிறீர்கள், ஆகி விடும், நடந்து விடும்.... ஆகி விடும் ஆகி விடும் என்றால் கதறுவது ஆகி விடும், ஆகி விடும் என்று கூறுபவர் ஜீவன் முக்த் இல்லை. எப்படி தந்தையோ அப்படி குழந்தைகள் என்று பாபா கூறினார். தந்தை கடலாக இருந்து குழந்தைகள் பிச்சைக்காரர் களாக இருப்பது என்பது இருக்கவே முடியாது. என்னுடையவராக ஆகு என்று தந்தை

வாய்ப்பைக் கொடுக்கிறார் என்றால், இதில் யோசிப்பதற்கான விசயம் எதுவுமில்லை. நல்லது.

**வரதானம்: முயற்சி செய்வதின் கூடவே யோகத்தைப் பிரயோகம் செய்யும் விதி மூலமாக உள் உணர்வுகளை பரிவர்த்தனை செய்யக் கூடிய எப்பொழுதும் வெற்றியடைபவர் ஆகுக!**

முயற்சி செய்வது நிலத்தை உருவாக்குகிறது. அதுவும் அவசியம், ஆனால் முயற்சி செய்வதின் கூடவே யோகத்தின் பிரயோகத்தினால் அனைவரது உள் உணர்வுகளையும் பரிவர்த்தனை செய்தீர்கள் என்றால் வெற்றி அருகில் தென்படும். திட நிச்சயம் மற்றும் யோகத்தின் பிரயோகம் மூலம் யாருடைய புத்தியையும் பரிவர்த்தனை செய்ய முடியும். சேவையில் எப்பொழுதெல்லாம் பிரச்சனை வந்தது என்றால், அதில் வெற்றியானது யோகத்தின் பிரயோகத்தினால் தான் கிடைத்திருக்கிறது. எனவே முயற்சி மூலம் நிலத்தை உருவாக்குங்கள், ஆனால் விதையை வெளிப்படுத்துவதற்காக யோகத்தின் பிரயோகம் செய்யுங்கள். அப்பொழுது தான் வெற்றி அடைக! என்ற வரதானம் பிராப்தி ஆகும்.

**சுலோகன்: சேவை மூலமாக புண்ணியத்தின் மூலதனத்தை சேமிப்பு செய்பவர் தான் புண்ணிய ஆத்மா!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 22.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அரசியல்துறை மற்றும் மதத்துறை அதிகாரி குழந்தைகளோடு பாப்தாதாவின் சந்திப்பு!

பாப்தாதா தனது அனைத்து அதிகார உரிமையுள்ள குழந்தைகளைப் பார்க்கின்றனர். அரசியல் துறை மற்றும் மதத்துறை இரண்டுமே ஒருவருடைய கரத்தில் என்று உங்களது புகழ் பாடப்படுகின்றது. இந்த மகிமை உங்களது எதிர்கால பிராப்தி ரூபத்தின் அடிப்படையில் பாடப்பட்டுள்ளது ஆனால் எதிர்கால பிராப்தியின் ஆதாரம் தற்கால சிரேஷ்ட வாழ்க்கையாகும். பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் எவ்வளவு தூரம் அரசியல் துறை மற்றும் மதத்துறைகளில் பிராப்தம் அடைந்துள்ளார் என்று பார்க்கின்றார். அதற்கான சம்ஸ்காரத்தை இச்சமயத்தில்தான் நிரப்பிக் கொள்ள வேண்டும். தற்கால ராஜாக்களே எதிர்காலத்தில் ராஜ்ய அதிகாரிகளாக முடியும். இப்போதைய தாரணை சொரூப ஆத்மாக்களே தர்மத்துறை (மதம்) அடைய முடியும். ஆக இரு துறைகளையும் ஒவ்வொருவரும் தங்களுக்குள் எவ்வளவு தூரம் தாரணை செய்துள்ளீர்கள்?

அரசியல் துறையினர் என்றால் அதிகாரி, அதாரிட்டி சொரூபம். அரசியல்துறை ஆத்மாக்கள் தமது அதிகாரங்களின் மூலம் எப்போது விருப்பமோ, எப்படி விருப்பமோ அப்படி தமது ஸ்தூல சூட்சும சக்திகளை உபயோகித்துக் கொள்ள முடியும். இந்த அதிகார உரிமை அரசியல் துறையின் அடையாளமாகும். அடுத்த அடையாளம், அரசியல் துறையின் அடையாளமாகும். அடுத்த அடையாளம், அரசியல் துறையினை ஒவ்வொரு காரியத்தையும் சட்டம், ஒழுங்கு முறையில் பிரயோகிக்க முடியும். அரசியல் துறையினர் என்றால் தாய்-தந்தையின் சொரூபத்தில் தனது பிரஜைகளைக் காப்பாற்ற சக்தியுடையோர். அரசியல் துறையினர் என்றால் தானும் அனைத்து ரீதியிலும் முழுமையாக இருப்பதோடு

பிறரையும் முழுமையாக வைக்கக் கூடியவர்கள். அரசியல் துறையினர் என்றால் விசேஷமாய் அனைத்து பிராப்திகளும் இருக்கும். சுகம், சாந்தி, ஆனந்தம், அன்பு மற்றும் அனைத்து குணங்களாலும் நிரம்பப் பெற்ற நிலை. தன்னையும் பிறரையும் நிரம்பிய நிலையில் வைத்திருத்தல். அரசியல் துறையினர் அதாவது, அதிகார உரிமையுள்ள ஆத்மாக்களாக ஆகியுள்ளீர்களா? தாய்-தந்தையைப் போன்று பாலனையின் விசேஷ அனுபவம் செய்கிறீர்களா? எவ்வித ஆத்மாக்கள் சம்பந்தம் தொடர்பில் வந்தாலும் இவர்களே நமது முன்னோர்கள் என்று அனுபவம் செய்ய வேண்டும். இந்த ஆத்மாக்களின் மூலமே வாழ்க்கையின் உண்மையான அன்பு மற்றும் வாழ்க்கையின் முன்னேற்றத்தின் சாதனத்தை அடைய முடியும். ஏனெனில், பாலனையின் (வளர்ப்பு) மூலமே அன்பு மற்றும் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுகிறது. பாலனையின் மூலமே ஆத்மா தகுதியடைகிறது. சிறிய குழந்தை கூட பாலனையின் மூலம் தனது வாழ்க்கையின் நோக்கத்தை எட்டி விடுவதற்கு தைரியமுள்ளதாகி விடுகிறது.

இப்படிப்பட்ட ஆன்மீக பாலனையின் மூலம் ஆத்மா பலமில்லா நிலையிலிருந்து சக்தி சொரூபமாகி விடுகிறது. தனது லட்சியத்தை வேகமாக அடைவதற்கு தைரியம் பெறுகிறது. பாலனையில் சதா அன்புக்கடல் பாபாவின் மூலம் உண்மையான அளவிலா அன்பின் அனுபவத்தைப் பெறுகிறது. இப்பபடிப்பட்ட அரசியல் துறையினரின் அடையாளங்களை உங்களுக்குள் அனுபவம் செய்கிறீர்களா? அடிமைத்தனத்தின் சம்ஸ்காரம் மாற வேண்டும். அதிகார உரிமையின் சம்ஸ்காரம் அனுபவம் செய்கிறீர்களா? அரசியல் துறையினரின் சம்ஸ்காரம் நிரம்பி விட்டதா? அடையாளங்கள் இப்போது தென்படுமா? அல்லது எதிர்காலத்திலா? அரசியல் துறையினரின் இன்னுமொரு விசேஷம் உள்ளது? அறிவீர்களா? சதா உறுதியான, அகண்ட ராஜ்யம். தனது இராஜ்யத்தின் இந்த மகிமையை அனுபவக்கிறீர்கள் இல்லையா? இந்த அடையாளத்தை சோதனை செய்யுங்கள், அரசியல் துறையின் அடையாளங்கள் உறுதியாகவும் அகண்டதாயும் உள்ளதா? துண்டிக்கப்படவில்லையே! அவ்வப்போது அதிகாரி நிலை அவ்வப்போது அடிமைத்தன்மை என்றால் அந்த ராஜ்யத்தை துண்டிக்கப்படாதது எனக் கூற முடியுமா? இதிலிருந்தே நான் இராஜ்ய அதிகாரியா அல்லது

இராஜ்யத்தின் உள்ளே இருப்பவரா என்று தனது பிராப்தம் என்ன என்று அறிய முடியும்.

இதே போன்று சமயத்துறையினர் (மதத்தலைவர்கள்) ஒவ்வொரு தாரணையின் சக்தியினை தமக்குள் அனுபவம் செய்யக் கூடிய ஆத்மாக்கள் தூய்மையின் தாரணா சக்தியை அனுபவம் செய்யக் கூடியவர்கள். தூய்மை சக்தியின் மூலம் சதா பரம் பூஜ்னியர்களாகி விடுகின்றனர். தூய்மை சக்தியின் மூலம் இந்த பதீதமான உலகை மாற்றி விடுகின்றனர். தூய்மை சக்தி விகாரத்தில் எரிந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களை குளிர்ச்சி செய்கிறது. தூய்மையின் சத்தி அனேக பிறவிகளின் விகர்மங்களின் பந்தனங்களிலிருந்து விடுவித்து விடுகிறது. தூய்மையின் சத்தி கண் இழந்தோருக்கு மூன்றாம் கண்ணை வழங்குகிறது, தூய்மையின் சக்தியின் மூலம் இம்முழு சிருஷ்டி என்னும் பெரிய வீடு விழுந்து விடாமல் காக்கக் கூடும். தூய்மை என்பது தூண்கள் போன்றது. அதன் ஆதாரத்தில் தூவாபர யுகத்திலிருந்து இந்த உலகம் நின்று கொண்டிருக்கின்றது. தூய்மை ஒளிக் கிரீடமாகும். இப்படிப்பட்ட தூய்மையின் தாரணை இதுவே தர்மத்துறை. இதே போன்று ஒவ்வொரு குணத்தின் தாரணை ஒவ்வொரு விசேஷ தன்மை ஆத்மாவில் பதிந்திருக்க வேண்டும். இதுவே தர்மத்துறை எனப்படும். தர்ம துறை என்றால் தாரணைத்துறை. இப்படிப்பட்ட தர்மத்துறையின் ஆத்மாக்களாகியுள்ளீர்களா? தர்மத்தில் இரண்டு விசேஷங்கள் உண்டு. தர்மத்துறையினர் தம்மையும், பிறரையும் எளிதாக மாற்றிக் கொள்கின்றனர். மாற்றும் சக்தி மிகத் தெளிவாய் இருக்கும். முழு சிருஷ்டி சக்கரத்தில் பாருங்கள், எந்தெந்த தர்மத்துறை ஆத்மாக்கள் வந்தனவோ அவர்களின் விசேஷ தன்மையாவது மனித ஆத்மாக்களை மாற்றுவது. சாதாரண மனிதனிலிருந்து சிலர் பௌத்தர்கள் ஆயினர், சிலர் கிறிஸ்த்தவர்கள் ஆயினர், சிலர் மடம் ஆஸ்ரமவாசிகளாயினர், ஆனால் மாறித்தானே அவ்வாறு ஆனார்கள். ஆக, தர்மத்துறையினர் என்றால் மாற்றம் செய்யக் கூடிய துறையினர். முதலில் தம்மை, பிறகு பிறரை. தர்மத்துறையினரது இன்னொரு விசேஷம், பரிபக்குவம், அசையக்கூடியவர்கள் அல்ல. பரிபக்குவ (முதிர்ச்சி) சக்தியின் மூலம் பரிவர்த்தனை கொண்டு வர முடியும். இகழ்ச்சி, எதிர்ப்பு எதுவாயினும் சரி, தமது தாரணையில் பரிபக்குவமாய் இருப்பர். எவ்வளவு குணங்களின் தாரணையில் முழுமையாய் இருப்பாரோ, அதாவது குணங்களின்

முதிர்ந்த சொரபத்திலிருப்பவரோ அவ்வளவு முதிர்ச்சியிலும் பணிவுடன் விளங்குவர். தமது பணிவு தன்மையின் மூலமே ஒவ்வொரு குணத்தையும் வெளிப்படுத்த முடியும், என்னென்ன பிராமண குலத்தின் தாரணைகள் உண்டோ அந்த அனைத்து தாரணைகளின் சக்திகளை அடைந்திருப்பதே தர்மத்துறையினராவதாகும். ஆக அரசியல் ஆட்சித்துறை மற்றும் தர்மத்துறை இவ்விரண்டின் சமஸ்காரம் ஒவ்வொரு ஆத்மாவிலும் நிராம்பியுள்ளதா? இரண்டிலும் சமநிலை உள்ளதா?

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளும் எதுவரை அரசாட்சி துறையினராயும், தர்மத்துறையினராயும் ஆகியுள்ளனர் என்கிற சார்டைப் பார்க்கின்றார். வரிசைக் கிரமமாக இருப்பவரா? அல்லது அனைவருமே சமநிலையில் உள்ளனரா? எனது நம்பர் என்ன என்பதை அறிய முடியுமா? இங்கு அனைவருமே இராஜாக்கள் தானே அமர்ந்துள்ளீர்கள் இல்லையா? பிரஜைகளை உருவாக்குபவர்கள் தானே? நீங்கள் பிரஜைகள் அல்லவே? ஆக, அனைவரும் தம்மை இப்படிப்பட்ட அரசியல் துறையினர் மற்றும் தர்மத்துறையின் அதிகாரிகளாகியுள்ளனர், இராஜ்யத்தின் அடையாளங்கள் என்ன என்பது புரிந்தா?

இப்படிப்பட்ட இராஜ்யத்துறையினர், மற்றும் தர்மத்துறையின் அதிகாரி, சதா தான் முழுமை அடைந்து பிறரையும் முழுமை அடைவிக்கக் கூடிய, பரிவர்த்தனை சக்தியின் மூலம் சுயமாற்றம், உலக மாற்றம் செய்யக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள், முழு கல்பத்திலும் மகிமையும், பூஜையும் பெறக்கூடிய பவித்திர ஆத்மாக்கள், சதா தனது பவித்ரதா குணத்தின் மூலம் அனைவரையும் குணவான் ஆக்கக்கூடிய குணமூரத் பாப்தாதாவின் அன்பு ஆத்மாக்களுக்கு நினைவுகளும் நமஸ்காரமும்!

**வரதானம்: சர்வ சம்பந்தத்தின் மூலம் பிரபுவின் மீதான அன்பு என்னும் பிரவிருத்தியை (இல்லறம்) நன்கு கொண்டு செல்வதிலேயே பிஸியாக இருக்கும் மாயாஜீத் பவ!**

எக்குழந்தைகள் ஒரே பாபாவிடம் அனைத்து உறவுகளையும் சீராக்கிக் கொண்டு செல்கின்றனரோ அவர்கள் மாயாஜீத் ஆகின்றார். எப்படி லௌகீக பெரிய குடும்பப் பொறுப்பு வகிப்பவர்கள் சதா கூறுகின்றனர் இல்லையா, வேறு எந்த நினைவும் வராத அளவு குடும்பத்தை

நடத்துவதிலேயே முழுமையாக ஈடுபடுகிறோம் என்று; அதே போன்று பிரபுவிடம் அன்பு நிலையில் நிலைத்திருக்கும் பிரபு பிரவிருத்தி எவ்வளவு பெரிது! பிரபு பிரவிருத்தி தூங்கும் போது கூட நடைபெறுகிறது. தூக்கத்தில் கூட பிரபுவைச் சந்திக்க முடியும். ஒரு வினாடி கூட உங்களுக்குக் கிடைக்கவில்லையெனில், மாயை எங்கிருந்து வரும்?

**சுலோகன்: பிரம்மாபாபா சமமாக ஆவது என்றால் சம்பூர்ணம் என்னும் லட்சியத்தை அடைவது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையின் விசேஷம் தூய்மை!

இன்று பாப்தாதா தன்னுடைய தூய்மையான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் எவ்வளவு தூய்மை ஆகியிருக்கிறார் என்று அனைவரின் இந்தக் கணக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். பிராமணர்களின் விசேஷமே தூய்மை தான் . பிராமணன் என்றால் தூய்மையான ஆத்மா. தூய்மையை எந்த அளவு கடைப்பிடித்திருக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்வதற்கான கருவி எது? தூய்மை ஆகுங்கள் என்ற இந்த மந்திரத்தை அனைவருக்கும் நினைவூட்டுகிறீர்கள், ஆனால் ஸ்ரீமத்படி இந்த மந்திரத்தை எந்த அளவு வாழ்க்கையில் கடைப்பிடித்திருக்கிறீர்கள்? வாழ்க்கை என்றால் எப்பொழுதும் இருப்பது, வாழ்க்கையில் எப்பொழுதும் இருக்கிறீர்கள் இல்லையா? அப்படி அப்படி வாழ்க்கையில் கொண்டு வருவது என்றால், எப்பொழுதும் தூய்மையைக் கடைப்பிடிப்பது! இதைத் தெரிந்து கொள்வதற்கான கருவியை தெரிந்திருக்கிறீர்களா? அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள், மேலும் தூய்மை, சுகம், சாந்திக்கு ஜென்மம் கொடுப்பது! அதாவது எங்கு தூய்மை இருக்குமோ அங்கு சுகம், சாந்தியின் அனுபவம் அவசியம் இருக்கும். இதே ஆதாரத்தில் தன்னை சோதனை செய்யுங்கள். மனதின் எண்ணங்களில் தூய்மை இருக்கிறது என்றால் அதன் அடையாளம், மனதில் எப்பொழுதும் சுக சொரூபம், அமைதி சொரூபத்தின் அனுபவம் இருக்கும். ஒருவேளை எப்பொழுதாவது மனதில் வீணான எண்ணங்கள் வருகிறது என்றால் அமைதிக்குப் பதிலாக குழப்பம் இருக்கும். ஏன் மற்றும் என்ன ? என்ற இந்தக் கேள்விகளின் காரணமாக சுக சொரூபத்தின் நிலை அனுபவம் ஆகாது, மேலும் எப்பொழுதும் இது இப்படி இருக்க வேண்டும், இந்த மாதிரி நடக்கக் கூடாது. இது எப்படி, இது அப்படி என்று தெரிந்து கொள்வதற்கான ஆர்வம் அதிகமாகும். இந்த விசயங்களின் தீர்வு காணுவதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். எனவே எங்கு அமைதி

இல்லையோ அங்கு சுகம் இல்லை. எனவே ஏதேனும் மன உளைச்சல், சுகம் மற்றும் சாந்தியை பிராப்தி செய்வதில் தடை ரூபமாக ஆகவில்லையே என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை ஏன் என்ன என்ற கேள்வி இருந்தால் கூட எண்ண சக்தியில் ஒருமைப்பாடு இருக்காது. எங்கு ஒருமைப்பாடு இல்லையோ அங்கு சுகம், சாந்தியின் அனுபவம் இருக்க முடியாது. தற்சமயத்திற்கேற்றபடி ஃபரிஷ்தா நிலையின் சம்மன்ன நிலைக்கு மற்றும் தந்தைக்குச் சமமான நிலைக்கு அருகில் வந்து கொண்டிருக்கிறீர்கள். அதற்கேற்றபடியே தூய்மையின் சூத்திரமும் மிக சூட்சுமமானது என்று புரிந்து கொள்ளுங்கள். பிரம்மச்சாரி ஆவது மட்டும் சம்பூர்ண தூய்மை இல்லை, ஆனால் பிரம்மச்சாரியின் கூடவே பிரம்மா ஆச்சார்யவாகவும் (பிரம்மாவின் கூறுதல் படி நடப்பவர்) ஆக வேண்டும். சிவா ஆச்சார்யாவாகவும் இருக்க வேண்டும். காலடி என்றால் பிரம்மாபாபாவின் ஒவ்வொரு காரியம் என்ற அடிமேல் அடி எடுத்து வைப்பவர், இதைத்தான் பிரம்மா ஆச்சார்யா என்று கூறுவது அந்த மாதிரி சூட்சும ரூபத்தில் எப்பொழுதும் தூய்மையின் பிராப்தி, சுகம் சாந்தியின் அனுபவம் ஆகிக் கொண்டிருக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். எப்பொழுதும் சுகம் என்ற படுக்கையில் நிம்மதியாக அதாவது அமைதி சொரூபத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? இது தான் பிரம்மா ஆச்சார்யார்களின் ரூபம்.

எப்பொழுதும் சுகம் என்ற படுக்கையில் தூங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாவிற்காக இந்த விகாரமும் குடை நிழலாகி விடுகிறது. எதிரி நிலை மாறி சேவாதாரி ஆகி விடுகிறார்கள். தன்னுடைய சித்திரத்தை பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி பாம்பு படுக்கை சுகமாக மற்றும் அமைதியாக இருப்பதின் அடையாளம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பது. குழப்பமின்றி இருக்கும் ஆத்மாவின் சொரூபம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும். குழப்பத்துடன் இருக்கும் ஆத்மாவை ஒருபொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதாக பார்க்க முடியாது. இவர் எப்பொழுதும் இழந்த முகமாக தென்படுவர், மேலும் அவர் அனைத்தையும் அடைந்த முகமாக தென்படுவார். எப்பொழுது ஏதாவது ஒரு பொருள் தொலைந்து விட்டது என்றால் குழப்பத்தின் அடையாளமாக ஏன், என்ன எப்படி என்பது தான் இருக்கும். அப்படி ஆன்மீக நிலையில் கூட யாரெல்லாம் தூய்மையை இழக்கிறார்களோ அவர்களுடைய மனதில் ஏன் என்ன மற்றும் எப்படி என்பதின் குழப்பம் இருக்கும். எப்படி

சோதனை செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? சுகம், சாந்தியின் பிராப்தி சொரூபத்தின் ஆதாரத்தில் மனதின் தூய்மையை சோதனை செய்யுங்கள்.

இன்னொரு விசயம் உங்களுடைய மனம் மூலமாக மற்ற ஆத்மாக்களுக்கு சுகம் மற்றும் சாந்தியின் அனுபவம் ஆகவில்லை என்றால், தூய்மையான எண்ணத்தின் பிரபாவம் மற்ற ஆத்மாக்கள் வரை சென்றடையவில்லை என்றாகிறது, அதற்கான காரணத்தை சோதனை செய்யுங்கள், எந்த ஒரு ஆத்மாவின் சிறிதளவு பலவீனம் அதாவது அசுத்தம் நம்முடைய எண்ணத்தில் தாரணை ஆனது என்றால், அந்த அசுத்தம் மற்ற ஆத்மாக்களுக்கு சுகம், சாந்தியின் அனுபவம் செய்விக்க முடியாது அல்லது அந்த ஆத்மாவைப் பற்றி வீணான மற்ற அசுத்த பாவனை இருக்கும், மேலும் தனது மனதின் தூய்மையின் சக்தியில் சதவிகிதத்தின் குறை இருக்கும், அதன் காரணமாக மற்றவர்கள் வரை தூய்மையின் பிராப்தியின் பிரபாவம் ஏற்பட முடியாது. தன் வரையிலும் இருக்கும், ஆனால் மற்றவர்கள் வரையிலும் இருக்காது லைட் இருக்கிறது ஆனால் செர்ச் லைட் இல்லை. அதாவது வெளிச்சம் இருக்கிறது, ஆனால் சக்திசாலியான வெளிச்சம் இல்லை. அப்படி தூய்மையின் சம்பூர்ண நிலையின் விளக்கம் எப்பொழுதும் தன்னிலும் சுகம், சாந்தி சொரூபம், கூடவே மற்றவர்களுக்கும் சுகம், சாந்தியின் பிராப்தியின் அனுபவம் செய்விப்பவர், அந்த மாதிரி தூய்மையான ஆத்மா தன்னுடைய பிராப்தியின் ஆதாரத்தில் மற்றவர்களுக்கும் எப்பொழுதும் சுகம், சாந்தி மற்றும் குளுமையின் கிரணங்களை பரப்புபவராக இருப்பார். அப்படி சம்பூர்ண தூய்மை என்றால் என்ன என்று புரிந்து கொண்டீர்களா?

தூய்மையின் சக்தி எந்தளவு மகான் ஆனது அவர் தன்னுடைய தூய்மையான மனம் அதாவது சுத்தமான உள் உணர்வு மூலமாக இயற்கையையும் பரிவர்த்தனை செய்து விடுகிறார். இயற்கையையும் பரிவர்த்தனை செய்து விடுவதுதான் தூய்மையான மன சக்தியின் வெளிப்படையான ஒரு எடுத்துக் காட்டு. சுய பரிவர்த்தனை மூலம் இயற்கையின் பரிவர்த்தனை. இயற்கைக்கு முன்பு மனதின், அவ்வாறு மனதின் பரிவர்த்தனை மற்றும் இயற்கையின் பரிவர்த்தனை! மனதின் தூய்மை மற்றும் இயற்கையின் பரிவர்த்தனை. மனதின் தூய்மை சக்திக்கு அந்தளவு பிரபாவம் இருக்கிறது. இன்று மனதின் தூய்மையைப்

பற்றி தெளிவாகக் கூறினோம். பின்பு வாய்மொழி மற்றும் காரியம் அதாவது சம்மந்தம் மற்றும் தொடர்பில் தூய்மையின் விளக்கும் என்ன என்பதை பின்பு கூறுவோம். ஒருவேளை தூய்மையின் சதவிகிதத்தில் 16-கலையிலிருந்து 14-கலை ஆகி விட்டது என்றால் என்ன ஆக வேண்டியது வரும்? எப்பொழுது 16-கலையின் தூய்மை அதாவது சம்பூர்ண நிலை இல்லையென்றால், சம்பூர்ண சுகம், சாந்தியின் சாதனங்களின் பிராப்தி எப்படி ஆகும்? யுகம் மாறுவதினால் மகிமையே மாறிவிடுகிறது. அதை சதோபிரதானம் என்றும் இதை சதோ என்றும் கூறுவோம். எப்படி சூர்யவம்சி என்றால் சம்பூர்ண நிலை, அதே போல் ஒவ்வொரு தாரணையிலும் சம்பன்னம் அதாவது முழு நிலையை பிராப்தி செய்வது சூர்ய வம்சத்தினரின் அடையாளம்! எனவே இதிலேயும் முழுமையானவர் ஆக வேண்டும். சில நேரம் சுகத்தின் படுக்கையில், சில நேரம் மன உளைச்சல் என்ற படுக்கையில் என்ற இந்த நிலையை சம்பன்னம் என்றோ கூற மாட்டோம் இல்லையா. சில நேரம் புள்ளியின் திலகம் இடுகிறார்கள், சில நேரம் ஏன், என்ன என்பதின் திலகம் இடுகிறார்கள். மூன்று புள்ளிகளின் திலகம் தான் சம்பன்ன சொரூபம். இதை இடத் தெரியாதா? இடுகிறீர்கள், ஆனால் கவனம் என்ற கை அசைந்து விடுகிறது தன் மேலேயே சிரிப்பு வருகிறது இல்லையா? இலட்சியம் சக்திசாலியாக இருக்கிறது என்றால் இலட்சணம் சமபூர்ணமாக சகஜமாக ஆகி விடுகிறது. கடின உழைப்பிலிருந்தும் விடுபட்டு விடுவார்கள். பலவீனமாக இருக்கும் காரணத்தினால் உழைப்பு அதிகமாக செய்ய வேண்டியதாக இருக்கிறது. சக்தி சொரூபமாக ஆனீர்கள் என்றால், கடின உழைப்பு முடிவடைந்து விடும். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** எப்பொழுதும் ஆன்மீகத்தின் நறுமணத்தை பரப்பக்கூடிய உண்மையிலும் உண்மையான ஆன்மீக ரோஜா மலர். நீங்கள் அனைத்துக் குழந்தைகளும் எப்பொழுதும் ஆன்மீக போதையில் இருக்கும் உண்மையான ரோஜா மலர்தான் இல்லையா ? எப்படி ரோஜா மலரின் பெயர் பிரசித்தி பெற்றதோ அதே போல் நீங்கள் அனைத்து ஆத்மாக்களும் ஆன்மீக ரோஜா மலர்கள். ஆன்மீக ரோஜா மலர் என்றால், நாலாபுறங்களிலும் ஆன்மீகத்தின் நறுமணத்தை பரப்புவர். தன்னை அந்த மாதிரி ஆன்மீக ரோஜா மலர் என்று நினைக்கிறீர்களா? எப்பொழுதும் ஆத்மாவைப் பார்த்துக் கொண்டே இருப்பது மற்றும் ஆத்மாக்களின் தந்தையுடன் ஆன்மீக உரையாடல் செய்து

கொண்டிருப்பது தான் ஆன்மீக ரோஜாவின் விசேஷம். எப்பொழுதும் உடலைப் பார்த்தும் ஆத்மாவைப் பார்க்கும் பாடம் உறுதியாக இருக்கிறது தான் இல்லையா? இந்த மாதிரியே ஆத்மாவைப் பார்க்கும் பயிற்சியுள்ளவர் ஆன்மீக ரோஜாவின் விசேஷம். எப்பொழுதும் உடலைப் பார்த்தும் ஆத்மாவைப் பார்க்கும் பயிற்சியுள்ளவர், ஆன்மீக ரோஜா ஆகி விட்டார். தந்தையின் தோட்டத்தின் விசேஷ மலர் நீங்கள் என்றால், நீங்கள் அனைவரையும் விட நம்பர் ஒன் ஆன்மீக ரோஜா மலர் எப்பொழுதும் ஒருவரின் நினைவில் இருப்பவர் என்றால், முதல் எண்ணில் வருபவர், எப்பொழுதும் இந்த லட்சியத்தையே வையுங்கள்.

(தீதி அவர்கள் டெல்லியில் நடக்கவிருக்கும் மேளாவின் துவக்க விழா நிகழ்ச்சிக்கு செல்வதற்காக விடைபெற்றுக் கொண்டிருந்தார்). அனைவரையும் பறக்க வைப்பதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? நினைவில், சகயோகத்தில் அனைத்திலும் பறக்க வைப்பதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். பக்கத்து காட்சிகள் இதுவும் நாடகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. நல்லது தான்! ஆத்மாவே விமானம் ஆகி விட்டது. எப்படி விமானத்தில செல்வது, வருவது கடினம் இல்லையோ, அதே போல் ஆத்மாவே பறக்கும் பறவையாக ஆகி விட்டது. எனவே போவது வருவது சுலபமாக இருக்கிறது. கொஞ்ச சமயத்தில் அதிக பாசனை (ஒளி) கொடுப்பதும் நாடகத்தில் கதாநாயகப் பாத்திரம் அப்படி இந்தக் கதாநாயகப் பாத்திரத்தை செய்வதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். நல்லது அனைவருக்கும் நினைவு கொடுங்கள், மேலும் எப்பொழுதும் வெற்றி சொரூபத்தின் சுப எண்ணங்களை வைத்து முன்னேறிச் செல்லுங்கள் என்ற இந்த நினைவு சொரூபமாக ஆக்கி வாருங்கள். இருந்தும் ஓசை டெல்லியிலிருந்து தான் வெளியாகும். அனைவரின் மைக் டெல்லியைத் தான் வந்தடையும். எப்பொழுது அரசாங்கத்திடமிருந்து சப்தம் எழுமோ அப்பொழுது முடிவடைந்து விடும். அதனால் பாரதத்தின் தலைவர்களும் விழித்தெழுவார்கள். அதன் ஏற்பாடை செய்வதற்காகத்தான் சென்று கொண்டிருக்கறீர்கள் இல்லையா?

**வரதானம்: சாதனங்களை ஆதாரமாக ஆக்குவதற்குப் பதிலாக தேவைக்கேற்ப காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய எப்பொழுதும் சாட்சி பார்வையுடையவர் ஆகுக!**

அனேக குழந்தைகள் நடைமுறையில் காலப் போக்கில் விதையை விட்டு விட்டு கிளைகள் மேல் கவரப்பட்டு விடுகிறார்கள். ஏதாவது ஒரு ஆத்மாவை ஆதாரமாக்கி விடுகிறார்கள். மேலும் சிலர் சாதனங்களை ஆதாரமாக்கிக் கொள்கிறார்கள், ஏனென்றால், விதை வண்ணம் நிரம்பி அழகாக இருப்பதில்லை,மேலும் கிளைகள் இலைகள் ரூபம் மற்றும் வர்ணம் மிக அழகாக இருக்கும். மாயா பொய்யான ஆதாரமே உண்மை என்று அனுபவம் ஆகிறது, எனவே இப்பொழுது சாகார சொரூபத்தில் தந்தையின் துணை மேலும் சாட்சி பார்வை நிலையின் அனுபவத்தை அதிகரியுங்கள். சாதனங்களை ஆதாரமாக ஆக்காதீர்கள். அதை தேவையான நேரத்தில் மட்டும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள்.

**சுலோகன்: ஆன்மீக கௌரவத்தில் இருந்தீர்கள் என்றால் அபிமானத்தின் ஃபீலிங்க் வராது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 27.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விதை ரூப நிலை மற்றும் ஆன்மீக அனுபவங்கள்!

சப்தத்திலிருந்து விலகியிருக்கும் தந்தை, சப்தமான உலகத்தில் சப்தம் மூலமாக அனைவரையும் சப்தத்திலிருந்து விலகிய நிலைக்கு அழைத்துச் செல்கிறார். தன்னுடன் அழைத்துச் செல்வதற்குத் தான் பாப்தாதாவிற்கு வர வேண்டியதாக இருக்கிறது. அனைவரும் உடன் செல்வதற்குத் தயாராக இருக்கிறீர்களா? அல்லது இப்பொழுது வரையிலும் தயார் ஆவதற்காக நேரம் வேண்டுமா? உடன் செல்வதற்காக பிநது (புள்ளி) ஆக வேண்டும். மேலும் பிந்து ஆவதற்காக சிதறிக்கிடக்கும் விஸ்தாரத்தை அதாவது அனேக கிளைகள் உள்ள மரத்தை விதையில் உள்ளடக்கி விதை ரூப நிலை அதாவது பிந்து வில் அனைவரும் நிரம்பி விட வேண்டும். உலகீய முறையில் கூட எப்பொழுது மிக விஸ்தாரத்தின் கணக்கு போடும் பொழுது அனைத்து கணக்கு களையும் முடித்து கடைசியில் என்ன கூறுகிறீர்கள்? சிவம் என்றால் பிந்து என்று சொல்லுங்கள என்று கூறப்படு கிறது. அதேபோல் படைப்புச் சக்கரம் மற்றும் கல்ப விருக்ஷத்தின் தொடக்கத்திலிருந்து இறுதி வரை எவ்வளவு கணக்கு வழக்கின் விஸ்தாரத்தில் வந்திருக்கிறீர்கள். தனது கணக்கு வழக்கின் கிளைகளை மற்றும் விஸ்தாரம் என்ற மரத்தை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? உடலின் கணக்கின் கிளை, உடலின் சம்பந்தங்களின் கிளைகள், உடலின் விதவிதமான பொருட்களின் பந்தனமாகும். ஆத்மா ஆவதின் கிளை பக்தி மார்க்கம் மற்றும் குருக்களின் பந்தனங்களின் கிளைகள், பல வகையான பாவங்களின் பந்தனங்களின் கிளைகள், கர்மத்தின் விளைவுகளை அனுபவிக்கும் கிளைகள் அப்படி எவ்வளவு விஸ்தாரம் ஆகி விட்டது. இப்பொழுது இந்த முழு விஸ்தாரத்திற்கு பிந்து ரூபமாகி, பிந்து அதாவது முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். முழுவிஸ் தாரத்தையும் விதையில் நிரப்பி விட்டீர்களா அல்லது இப்பொழுது கூட விஸ்தாரம் இருக்கிறதா? இந்த இத்துப்போன மரத்தின் எந்த விதமான கிளையோ

தங்கிக் போய் விடவில்லையே. சங்கமயுகமே பழைய மரத்தை முடிவு கட்டுவதற்கான யுகம். எனவே ஹே! சங்கமயுக பிராமணர்களே! பழைய மரத்தை முடிவு கட்டி விட்டீர்களா? எப்படி ஒவ்வொரு இலைக்கும் தண்ணீர் ஊற்ற முடியாது. விதைக்கு கொடுப்பது என்றால் அனைத்து இலைகளுக்கும் தண்ணீர் கிடைப்பது! அந்த மாதிரி இத்தனை 84 பிறவிகளின் பல விதமான கணக்கு வழக்கு என்ற மரத்திற்கு முடிவு கட்ட வேண்டும். ஒவ்வொரு கிளையையும் அழிக்க வேண்டும் என்பதல்ல. இன்று உடலின் நினைவு என்ற கிளையை வெட்டுங்கள், அடுத்து, நாளை உடல் சம்பந்தப்பட்ட உறவினர்களின் கிளையை அகற்றுவதினால் முடிவடையாது ஆனால் விதையாக விளங்கும் தந்தையோடு முழு ஈடுபாட்டை ஏற்படுத்தி, ஈடுபாட்டின் அக்னி மூலமாக சுலபமாக முடிவடைந்து விடும். வெட்டக் கூடாது ஆனால் சாம்பலாக்க வேண்டும். இன்று வெட்டுவீர்கள், பிறகு சிறிது காலத்திற்குப் பிறகு முளைத்து விடும். ஏனென்றால், வாயுமண்டலம் மூலமாக மரத்திற்கு இயற்கையாகவே தண்ணீர் கிடைத்துக் கொண்டேயிருக்கும். மரம் பெரியதாக வளர்ந்து விட்ட பிறகு விசேஷமாக தண்ணீர் ஊற்றுவதற்கு அவசியம் இருப்பதில்லை. இயற்கையாகவே வாயுமண்டலம் மூலம் மரம் வளர்ந்து கொண்டேயிருக்கும் மேலும் பசுமையாக வளர்ந்து கொண்டிருக்கும். அப்படி விஸ்தாரத்தை அடைந்திருக்கும் இத்துப்போன மரத்திற்கு இப்பொழுது தண்ணீர் ஊற்றுவதற்கான அவசியம் இல்லை. இது இயல்பாகவே வளர்ந்து கொண்டேயிருக்கும். முயற்சியின் மூலமாக உடல் சம்பந்தத்தின் நினைவு என்ற கிளையை அழித்து விட்டேன் என்று நீங்கள் நினைக்கலாம் ஆனால் எரித்து அழிக்கப்படாதது மீண்டும் கிளை முளைத்து விடுகிறது. பிறகு நீங்கள் உங்களிடம் மற்றும் தந்தையிடம் றானோ இதை அழித்து விட்டிருந்தேன். பிறகு எப்படி வந்தது என்று கூறுகிறீர்கள்? முன்போ இருக்கவில்லை பிறகு எப்படி ஆனது. என்ன காரணம்? வெட்டினீர்கள் ஆனால் சாம்பலாக்கவில்லை. நெருப்பில் போடப்பட்ட பொருள் ஒருபொழுதும் பலன் கொடுப்தில்லை. எனவே இந்த கணக்கு வழக்கின் விஸ்தார ரூப மரத்தை முழு ஈடுபாட்டின் அக்னி மூலம் அழித்து விடுங்கள். பிறகு என்ன இருந்து விடும்? உடல் மற்றும் உடலின் சம்பந்தம் மற்றும் பதார்த்தத்தின் விஸ்தாரம் அழிந்து விட்டது என்றால் மிச்சம் பிந்து ஆத்மா மற்றும் விதை ஆத்மா இருந்து விடும். எப்பொழுது அந்த மாதிரி பிந்து விதை சொரூபமாகி விடுவீர்களோ அப்பொழுது தான் சப்தத்திலிரு:நது விலகிய விதை ரூப தந்தையுடன் செல்ல முடியும்.

எனவே சப்தத்திலிருந்து விலகிச் செல்ல தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டோம். விஸ்தாரத்தை அழித்து விட்டீர்களா? விதை ரூப தந்தை விதை ரூப ஆத்மாளைத் தான் அழைத்துச் செல்வார். விதை சொரூபமாக ஆகி விட்டீர்களா? யார் எப்பொழுதும் தயாரானவராக ஆகி விட்டாரோ அவருக்கு இப்பொழுதிலிருந்தே ஆன்மீக அனுபவங்கள் ஆகிக் கொண்டே இருக்கும். என்னவாகும்? என்ன ஆகும்?

போனாலும், வந்தாலும், அமர்ந்திருந்தாலும், பேசிக் கொண்டே -இந்த உடல், கணக்கு வழக்கு என்ற மரத்தின் முக்கிய தண்டு, அதிலிருந்து தான் இந்தக் கிளைகள் வெளியாகின்றன, அப்படி இந்த உடல் மற்றும் ஆத்மா என்ற விதை இரண்டுமே முற்றிலும் வேறு வேறு என்று முதலில் அனுபவம் ஆகும். அந்த மாதிரி ஆத்மா நடைமுறையில் காரியங்கள் செய்து கொண்டே விலகிய நிலையை அடிக்கடி அனுபவம் செய்யும். ஞானத்தின் அனுசாரம் நான் ஆத்மா வேறு, உடல் வேறு என்பதுமட்டுமல்லாமல் நான் ஆத்மா இந்த உடலில் இருந்து வேறுபட்ட தனிப்பட்ட ஒரு பொருள் என்பது அனுபவத்திலும் ஏற்படும். எப்படி ஸ்தூலமாக உடலின் ஆடை மற்றும் அணியப்படும் உடல் வேறு என்று அனுபவம் ஆகிறதோ அதேபோல் ஆத்மா எனக்கு இந்த உடல் ஆடை, இந்த ஆடையை அணியும் நான் ஆத்மா என்று தெளிவாக அனுபவம் ஆகும். எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது இந்த உடல் உணர்வு என்ற ஆடையை அணியுங்கள், எப்பொழுது விரும்பு கிறீர்களோ அப்பொழுது இந்த ஆடையிலிருந்து விடுபட்ட அதாவது தேக உணர்விலிருந்து விலகிய நிலையில் நிலைத்து விட வேண்டும். அந்த மாதிரி விலகிய நிலையின் அனுபவம் ஏற்படுகிறதா? ஆடையை நான் அணிகிறேனா அல்லது ஆடை என்னை அணிகிறதா, சைதன்யமாக இருப்பது யார்? எஜமானன் யார்? அப்படி ஒரு அடையாளம் விலகிய நிலையின் அனுபவம். தனியாக பிரிய வேண்டியது இல்லை ஆனால் நான் வேறு என்ற தெளிவான அனுபவம்.

இன்னுமொரு அடையாளம் அல்லது அனுபவம் எப்படி பக்தர்களுக்கு, ஆத்ம ஞானிகளுக்கு அல்லது ஏதோ ஒரு சில பரமாத்ம ஞானிகளுக்கு திவ்ய திருஷ்டி மூலமாக ஜோதி பிந்து ஆத்மாவின் சாட்சாத்காரம் ஆகிறது. சாட்சாத்காரம் அற்பகாலத்திற்கு இருக்கும் ஒன்று. சாட்சாத்காரம் தன்னுடைய பயிற்சியின் பலனானது அல்ல. இதுவோ நாடகத்தில் இருந்த பங்கு அல்லது வரதானம் ஆனால் எவரெடி என்றால்

உடன் செல்வதற்காக சமமாக ஆகியருக்கும் ஆத்மா சாட்சாத்காரம் மூலமாக ஆத்மாவைப் பார்க்காது, ஆனால் புத்தியின் நினைவு மூலமாக எப்பொழுதும் தன்னை சாட்சாத் ஜோதி பிந்து ஆத்மா என்று அனுபவம் செய்யும். சாட்சாத் சொரூபமாவது சதா காலத்திற்கானது மற்றும் சாட்சாத்காரம் அற்பகாலத்திற்கானது. சாட்சாத் சொரூப ஆத்மா, நான் ஒரு பொழுதும் ஆத்மாவின் சாட்சாத்காரத்தைப் பார்க்கவில்லை என்று கூறாது. நான் பார்க்கவில்லை ஆனால் அந்த அனுபவம் மூலமாக சாட்சாத் ரூபத்தின் நிலையில் நிலைத்திருப்பார். எங்கு சாட்சாத் சொரூபம் இருக்குமோ சாட்சாத்காரத்திற்கு அவசியம் இல்லை. அந்த மாதிரி சாட்சாத் ஆத்மா சொரூபத்தின் அனுபவம் செய்பவர் அதிகாரத்துடன், நிச்சயத்துடன் நான் ஆத்மாவை பார்ப்பது என்ன! அனுபவமே செய்திருக்கிறேன் என்று கூறுவார். ஏனென்றால், பார்த்த பிறகு கூட அனுபவம் செய்யவில்லை என்றால் பார்ப்பது ஒன்றும் பிரயோஜனம் இல்லாதது. அந்த மாதிரி சாட்சாத் ஆத்ம அனுபவி நடைமுறையில் காரியங்கள் செய்து கொண்டே தன்னுடைய ஜோதி சொரூபத்தின் அனுபவம் செய்து கொண்டே இருப்பார்.

மூன்றாவது அனுபவம் -அந்த மாதிரி சமமான ஆத்மா அதாவது எவரெடி ஆத்மா பௌதீக உலகில் மற்றும் பௌதீக உடலில் இருந்த போதிலும், புத்தியின் நினைவு சக்தி மூலமாக எப்பொழுதும் நான் ஆத்மா தந்தையுடன் சூட்சும உலகத்திலோ அல்லது மூலவதனத்திலோ இருக்கிறேன் என்று அனுபவம் செய்யும். ஒரு நொடியில் சூட்சுமவதனவாசி, ஒரு நொடியில் மூலவதனவாசி, ஒரு நொடியில் சாகார வதனவாசியாகி கர்மயோகியாகி பங்கைச் செய்பவன், ஆனால் அநேக தடவைகள் தன்னை தந்தையுடன் சூட்சுமவதனம் மற்றும் மூலவதனத்தில் இருப்பதின் அனுபவம் செய்வார்கள். நேரம் கிடைத்தது, சூட்சும வதனம் மற்றும் மூல வதனம் ப்ன்று விட்டார். எப்படி வேலையை முடித்த பிறகு வீட்டுக்குச் செல்கிறார்கள், அந்த மாதிரி சூட்சும வதனவாசி, மூலவதன வாசி என்று அனுபவம் செய்வார்கள், அலுவலகத்தில் வேலை முடிந்து விட்டது என்றால் வீட்டிற்கு செல்வார்களா அல்லது அலுவலகத்திலேயே அமர்ந்திருப்பார்களா? அந்த மாதிரி ஆத்மா அடிக்கடி தன்னை தன்னுடைய வீட்டிலிருப்பவராக அனுபவம் செய்யும். எப்படி எதிரில் இருப்பது போன்று, இந்த நேரம் இங்கே, அடுத்த நேரம் அங்கே. சாகார

வதனம் என்ற அறையிலிருந்து மூலவதனம் என்ற அறைக்கு சென்று விட்டார்.

இன்னும் வேறு அனுபவம் -அந்த மாதிரி சமமான ஆத்மா பந்தனத்திலிருந்து விடுபட்டு இருக்கும் காரணத்தினால், பறக்கும் பறவையாகி, மிக உயரத்தில் பறந்து சென்று கொண்டிருக்கிறேன். மேலும் மிக உயர்ந்த நிலை என்ற ஸ்தானத்தில் அமர்ந்திருந்து இவர்கள் அனைவரும் கீழே இருக்கிறார்கள் என்று அனுபவம் செய்வார்கள். நான் அனைவரையும் விட மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறேன். எப்படி அறிவியல் சக்தி மூலம் விண்வெளிக்குச் சென்று விடுகிறார்கள் என்றால், பூமியின் ஈர்ப்பு இருக்காது. மேலும் தன்னை மிக உயர்ந்த இடத்தில் இருப்பதாக மேலும் எடையற்ற நிலையில். லேசாக இருப்பதாக அனுபவம் செய்வார்கள். பறப்பதின் அனுபவம் அனைத்து ஈர்ப்புகளிலிருந்தும் விடுபட்ட நிலை. அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்ட நிலை. இந்த நிலையின் அனுபவம் ஆவது என்றால் உயர்ந்த பறக்கும் கலை மற்றும் பறந்து கொண்டிருக்கும் நிலையின் அனுபவம் ஆவது. காரியங்கள் செய்து கொண்டே சென்று கொண்டிருக்கிறேன், பறந்து கொண்டிருக்கிறேன், தந்தையும் பிந்து, நானும் பிந்து இருவரும் சேர்ந்தே சென்று கொண்டிருக் கிறோம். சமமான ஆத்மாவிற்கு இந்த அனுபவம் செய்து கொண்டிருப்பது தெளிவாக இருக்கும். அனுபவம் என்ற கண் மூலம் பார்ப்பது, திவ்ய திருஷ்டி மூலம் பார்ப்பதை விடத் தெளிவாக இருக்கும். புரிந்ததா? விஸ்தாரமோ மிக அதிகம் இருந்தாலும் சாரமாக சிறிதளவு அடையாளங் களை கூறினோம். எனவே அந்த மாதிரி எவரெடியாக இருக்கிறீர்களா அதாவது அனுபவி சொரூபமாக இருக்கிறீர்களா? உடன் செல்வதற்கு தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது இன்னும் இந்த வேலை பாக்கி இருக்கிறது என்று கூறுவீர்களா? அந்த மாதிரி எவரெடியாக இருக்கிறீர்களா அதாவது அனுபவி சொரூபமாக இருக்கிறீர்களா? உடன் செல்வதற்குத் தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது இன்னும் இந்த வேலை பாக்கி இருக்கிறது என்று கூறுவீர்களா? அந்த மாதிரி அனுபவம் ஆகிறதாஅல்லது வீடே மறந்து விடும் அளவிற்கு சேவையில் பிஸியாகி விட்டீர்களா? ஆத்மாக்களுக்கு முக்தி ஜீவன் முக்தியின் ஆஸ்தியை பிராப்தி செய்விக்க வேண்டும் என்பதற்காகத் தான் சேவை செய்கிறீர்கள்.

சேவையிலும் இவர்களையும் தந்தையுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற நினைவு இருந்தது என்றால், சேவையில் எப்பொழுதும் ஆடாத நிலை இருக்க முடியும். சேவையின் விஸ்தாரத்தில், சார ரூப விதையின் அனுபவத்தை மறந்து விடாதீர்கள். விஸ்தாரத்தில் காணாமல் போய் விடாதீர்கள். விஸ்தாரத்தில் வந்தாலும் நீங்கள் சார சொரூபத்தில் நிலைத்து இருங்கள், மேலும் மற்றவர்களுக்கும் சார சொரூபத்தின் அனுபவத்தை செய்வியுங்கள். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சாட்சாத் ஆத்ம சொரூபத்தின் அனபவம் செய்யும், எப்பொழுதும் அனைத்து கணக்கு வழக்கு என்ற மரத்தை அழித்து முற்றுப்புள்ளி இட்டு பிந்து ரூபத்தில் நிலைத்திருக்கும், பிந்துவான தந்தையுடன் எப்பொழுதும் இருக்கக்கூடிய, இந்த ரேநம் கர்மயோகி, அடுத்த நேரம் சூட்சும வதனவாசி, இன்னுமொரு நேரம் மூலவதனவாசி என்று எப்பொழுதும் பயிற்சி நிறைந்த ஆத்மாவிற்கு எப்பொழுதும் தன்னுடைய பறக்கும் நிலையின் அனுபவம் செய்யும் ஆத்மாவிற்கு அந்த மாதிரி தந்தைக்குச் சமமான ஆத்மாவிற்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு -(பஞ்சாப் மற்றும் குஜராத் மண்டலம்): 1. மாயாவின் நிழலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு குடை நிழலின் கீழே இருங்கள்!** எப்பொழுதும் தன் மேல் தந்தையின் நினைவின் குடை நிழலை அனுபவம் செய்கிறீர்களா? நினைவின் குடை நிழல் இருக்கிறதா? இந்தக் குடைநிழலை எப்போதாவது விட்டு விடுவதில்லையே? யார் எப்பொழுதும் குடை நிழலின் உள்ளே இருக்கிறாரோ அவர் அனைத்து விதமான மாயாவின் தடைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறார். எந்த விதத்திலும் மாயாவின் நிழல் விழ முடியாது. இந்த 5-விகாரங்கள் எதிரிக்குப் பதிலாக தாசனாகி சேவாதாரி ஆகி விடுகின்றன. எப்படி விஷ்ணுவின் சித்திரத்தில் பார்த்திருக்கிறீர்கள், பாம்பின் படுக்கை மற்றும் பாம்புகளே குடை நிழலாக ஆகி விட்டன. இது வெற்றியின் அடையாளம். இது யாருடைய சித்திரம்? உங்களுடைய சித்திரம் தான் இல்லையா? யார் மீது வெற்றியடைகிறார்களோ அந்த எதிரி சேவாதாரியாகி, விடுகிறார். நீங்கள் அந்த மாதிரியான வெற்றி இரத்தினம். சக்திகளும் குடும்பத்தின்

மாதர்களாக இருந்தவர்கள், சக்தி சேனையின் சக்திகள் ஆகி விட்டார்கள். சக்திகளின் சித்திரங்களல் இராவண வம்ச அசுரர்களை காலின் கீழே இருப்பதாக காண்பிக்கிறார்கள். சக்திகள் அசுரர்களை தன்னுடைய சக்தி என்ற கால்களின் கீழே அழுத்தி விட்டார்கள். சக்தி எந்த ஒரு விகார சம்ஸ்காரத்தையும் மேலே வரவேவிடாது.

**2. ஞானத்தை தானம் செய்யும் உண்மையிலும் உண்மையான மகாதானி ஆகுங்கள்!** எப்பொழுதும் புத்தி மூலமாக ஞானக்கடலின் கரையில் இருக்கக்கூடிய அதாவது கடலின் மூலமாக கிடைத்த அளவற்ற களஞ்சியத்தின் அதிபதி என்று தன்னை நினைக்கிறீர்களா? எப்படி கடல் நிரம்பி இருக்கிறது, அளவற்று இருக்கிறது, நிரந்தரமாக இருக்கிறது, அதேபோலவே ஆத்மாக்களும் அந்த குறைவற்ற களஞ்சியங்களுக்கு மாஸ்டர் அதிபதிகளாக இருக்கிறார்கள். என்ன பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றனவோ அவற்றை மகாதானியாகி மற்றவர்களுக்காக காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே இருங்கள். சம்பந்தத்தில் வரும் பக்த ஆத்மாக்கள் மற்றும் சாதாரண ஆத்மாக்கள் அவர்களுக்காக, பக்தர்களுக்கு பக்தியின் பலன் கிடைத்து விடட்டும் என்ற ஆர்வம் இருக்கும். பாவம் அலைந்து கொண்டிருக்கிறார்கள், அலைவதைப் பார்த்து இரக்கம் வருகிறது இல்லையா? எவ்வளவு இரக்க மனமுடையவர்களாக ஆவீர்களோ அந்த அளவு அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு சுலபமாக வழி கூறுவீர்கள். செய்தியைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். யாரும் வருவதில்லையே என்று நினைக்காதீர்கள். நீங்கள் மகாதானி ஆகுங்கள், செய்தியை கொடுத்துக் கொண்டேயிருங்கள். முறையீடு எதுவும் இருந்து விடக்கூடாது. அழியாத ஞானம் ஒருபொருழுதும் விநாசஷம் ஆவதில்லை. இன்று கேட்பார்கள், ஒரு மாதம் கழித்து யோசிப்பார்கள், பிறகு யோசித்து அருகில் வந்து விடுவார்கள். எனவே ஒருபோதும் மனமுடைந்து போகாதீர்கள். யார் செய்வார்களோ அவர்களுக்கு உருவாகும். மேலும் யாருக்கு செய்கிறீர்களோ அவர்களும் இன்று இல்லை யென்றாலும் அவசியம் நாளை ஏற்றுக் கொள்வார்கள். எனவே அளவற்ற சேவையை களைப்பற்ற வராக செய்து கொண்டே இருங்கள். ஒருபொழுதும் களைப்படையக் கூடாது. ஏனென்றால், பாப்தாதாவிடம் அனைவருடையதும் சேமிப்பாகியே விடுகிறது. மேலும் என்ன

செய்கிறீர்களோ அதற்கான உடனடிப் பலனான குஷியும் கிடைத்து விடுகிறது.

**3. சூழ்நிலையை சக்திசாலி ஆக்க வேண்டும் என்ற இலட்சியம் வைத்தீர்கள் என்றால், சேவையின் வளர்ச்சியின் லட்சணம் தென்படும்!** எப்படி கோயிலின் சூழ்நிலை தூரத்திலிருந்தே இழுக்கிறது, அதேபோன்று, நினைவின் நறுமணத்தின் சூழ்நிலை உயர்ந்ததாக இருக்கட்டும். அதன் மூலம் இது ஏதோ விசேஷ ஸ்தானம் என்று ஆத்மாக் களை தூரத்திலிருந்தே ஈர்க்க வேண்டும். எப்பொழுதும் நினைவின் சக்தி மூலம் தன்னை முன்னேற்றிக் கொண்டே இருங்கள். மேலும் கூடவே வாயுமண்டலத்தையும் சக்திசாலி ஆக்குங்கள். சேவை நிலையத்தின் சூழ்நிலை அந்த மாதிரி இருக்க வேண்டும். அதன் காரணமாக அனைத்து ஆத்மாக்களும் ஈர்க்கப்பட்டு வந்து விட வேண்டும். சேவை வாய்மொழி மூலமாக மட்டும் நடப்பதில்லை. மன சக்தி மூலமாகவும் சேவை செய்யுங்கள். சூழ்றிலையை சக்திசாலி ஆக்க வேண்டும், இது என்னுடைய பொறுப்பு என்று ஒவ்வொருவரும் நினைக்க வேணடும் எப்பொழுது அந்த மாதிரி இலட்சியத்தை வைத்தீர்கள் என்றால், சேவையின் வளர்ச்சியின் இலட்சணம் தென்படும். அனைவரும் வரத்தான் வேண்டும், இதுவோ உறுதியாக இருக்கிறது ஆனால் சிலர் நேராக வந்து விடுவார்கள், சிலர் சுற்றியடித்து அலைந்த பிறகு வந்து விடுகிறார்கள். எனவே ஒவ்வொருவரும் நான் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கும் ஜோதியாக அந்த மாதிரி தீபம் ஆக வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும், அதன் காரணமாக விட்டில் பூச்சிகள் தானாகவே வந்து விடவேண்டும். நீங்கள் பிரகாசமாக எரியும் ஜோதியாக அமர்ந்து விட்டீர்கள் என்றால் விட்டில் பூச்சிகள் தானாகவே வந்து விடும். நல்லது.

**வரதானம்: பரமாத்ம அன்பு மற்றும் அதிகாரத்தின் ஆன்மீகக் குஷி மற்றும் போதையில் இருக்கக்கூடிய அனைத்து பிராப்திகளும் நிரம்பியவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் தந்தையுடன் எப்பொழுதும் இணைந்து இருந்து அன்போடு என்னுடைய பாபா என்று கூறுகிறார்களோ அவர்களுக்கு பரமாத்ம அதிகாரம் பிராப்தி ஆகி விடுகிறது. எல்லையற்ற வள்ளல்

அனைத்து பிராப்திகளினால் சம்பன்னம் ஆக்கி விடுகிறார். மூன்று உலகங்களின் அதிகாரி ஆகி விடுகிறார்கள். பிறகு என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம், அடைவதற்கு இன்னும் ஒன்றுமில்லை என்ற இந்தப் பாடலைத்தான் பாடுகிறார்கள். அவர்களுக்கு 21-பிறவிகளுக்கு உறுதி (கேரண்டி கார்டு) கிடைத்து விட்டது என்ற இந்த ஆன்மீகக் குஷி மற்றும் போதையில் இருங்கள்.

**சுலோகன்: சாதனங்களின் ஆதாரத்தில் சாதனை (இடைவிடாத பயிற்சி) இருக்க வேண்டாம், சாதனம் சாதனையில் தடை ரூபம் ஆக வேண்டாம்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 29.03.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான வைஷ்ணவன் என்றால் எப்பொழுதும் குணத்தை கிரஹிப்பவர்!

இன்று பாப்தாதா மாலை அணிவித்துக் கொண்டிருந்தார். எந்த மாலை? ஒவ்வொரு சிரேஷ்ட ஆத்மாவிற்கும் சிரேஷ்ட குணங்களின் மாலை அணிவித்துக் கொண்டிருந்தார். ஏனென்றால் சிரேஷ்ட தந்தையின் ஒவ்வொரு சிரேஷ்ட குழந்தைகளிடமும் அவரவர்களுக்கென்று விசேஷம் இருக்கிறது என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். அவரவர்களின் குணத்தின் ஆதாரத்தினால் சங்கம யுகத்தில் சிரேஷ்ட பிராப்தியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். இன்று விசேஷமாக காலாட்படை குரூப்பின் குணங்களை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். முயற்சி செய்வதில் கடைசி குரூப் என்று கூறப்பட்டாலும், அவர்களிலும் விசேஷ குணம் அவசியம் இருக்கிறது. மேலும் அதே விசேஷ குணம் அந்த ஆத்மாக்கள் தந்தையின் குழந்தை ஆவதற்கு விசேஷ ஆதாரம். அப்படி பாப்தாதா முதல் நம்பரில் கடைசி நம்பர் வரை செல்லவில்லை, ஆனால் கடைசியிலிருந்து முதல் வரை குணத்தைப் பார்த்தார். முற்றிலும் கடைசி நம்பரில் கூட குணம் நிறைந்தவர் இருந்தார். பரமாத்மாவின் குழந்தை தான் ஆனால் மேலும் எந்த குணமும் இல்லை என்று அப்படி இருக்க முடியாது. அந்த குணத்தின் ஆதாரத்தினால் தான் பிராமண வாழ்வில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதாவது உயிரோடு இருக்கிறார். நாடகத்தின் அனுசாரம் அதே குணம் தான் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தை ஆக்கியது. அந்த குணத்தின் காரணமாகத் தான் பிரபுவிற்கு விருப்பமானவர் ஆனார், எனவே குணங்களின் மாலையை உருவாக்கிக் கொண்டிருந்தோம். அந்த மாதிரியே ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் குணத்தைப் பார்ப்பதினால் உயர்ந்த ஆத்ம உணர்வு சகஜமாகவும் இயல்பாகவும் இருக்கும், ஏனென்றால் குணத்தின் ஆதாரத்தினால் தான் சிரேஷ்ட ஆத்மா ஆக முடியும். அனேக ஆத்மாக்கள் குணத்தை தெரிந்திருந்தும் பல பிறவிகளாக அசுத்தத்தைப் பார்க்கும் பயிற்சி உடையவராக இருக்கும் காரணத்தினால் குணத்தைப்

பார்க்காமல் அவகுணத்தைத் தான் பார்க்கிறார்கள் ஆனால் அவகுணத்தைப் பார்ப்பது, அவகுணத்தை தாரணை செய்வது என்பது அசுத்த உணவை அருந்துகிறார் என்றால், அந்த தவறை உணருகிறீர்கள் தான் இல்லையா? உணவை அருந்தும் விசயத்தில் பலவீனமாக இருக்கிறேன். என்று (சார்ட்டில்) எழுதுகிறீர்கள் தான் இல்லையா? அதே போல் ஒருவேளை யாருடைய அவகுணம் மற்றும் பலவீனத்தை யாவது உங்களுக்குள் தாரணை செய்கிறீர்கள் என்றால், அசுத்த உணவை உண்கிறீர்கள் அருந்துபவர் என்று புரிந்து கொள்ளுங்கள். உண்மையான வைஷ்ணவன் இல்லை, விஷ்ணு வம்சி இல்லை, ஆனால் இராமின் சேனை ஆகி விடுவார். எனவே எப்பொழுதும் குணத்தை கிரஹிக்கும் குணம் நிறைந்தவர் ஆகுங்கள்.

இன்று பாப்தாதா குழந்தைகளின் சாதுர்யமான விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். தன்னுடைய விளையாட்டு நினைவு வருகிறது தான் இல்லையா? மிகப் பெரிய விசயம் மற்றவர்களின் அவகுணத்தைப் பார்ப்பது, தெரிந்து கொள்வது. இதை மிகுந்த புத்திசாலித்தனம் என்று நினைக்கிறார்கள். இதையே ஞானம் நிறைந்தவர் என்று நினைத்து விடுகிறார்கள் ஆனால் தெரிந்து கொள்வது என்றால் மாறுவது ஒருவேளை தெரிந்து கொண்டாலும் அந்த இரு நிமிடங்கள் ஞானம் நிறைந்தவராகவும் ஆகி விட்டார், ஆனால் ஞானம் நிறைந்தவராகி என்ன செய்தார்? ஞானத்தை லைட் (ஒளி) மற்றும் மைட் (சக்தி) என்று கூறப்படுகிறது. இது அவகுணம் என்று தெரிந்தோ கொண்டார், ஆனால் ஞானத்தின் சக்தி மூலம் தன்னுடைய மற்றும் மற்றவர்களின் அவகுணத்தைப் பஸ்பம் செய்தாரா? பரிவர்த்தனை செய்தாரா? மாறி மற்றும் மாற்றிக் காண்பித்தாரா அல்லது பழி வாங்கினாரா? ஒருவேளை ஞானத்தின் லைட், மைட்டை றடைமுறையில் கொண்டு வரவில்லையென்றால், அதைத் (ஞானத்தை) தெரிந்து கொண்டவர் என்று கூறுவோமா, ஞானம் நிறைந்தவர் என்று கூறுவோமா? ஞானத்தின் லைட், மைட்டை உபயோகிக்காமல் தெரிந்து கொள்வது என்பது துவாபர் யுக சாஸ்திரவாதிகளுக்கு சாஸ்திரத்தின் ஞானம் இருப்பது போன்றது. அந்த மாதிரி தெரிந்து கொள்பவரை விட அவகுணத்தைத் தெரியாதவர் மிக நல்லவர். பிராமண பரிவாரத்தில் தங்களுக்குள் பரிகாசத்தில் அவர்களுக்குள் முட்டாள் என்று புரிந்து கொள்வார்கள். நீயோ முட்டாள் ஒன்றும் தெரியவில்லை என்று

உங்களுக்குள் கூறுகிறீர்கள் தான் இல்லையா? ஆனால் இந்த விசயத்தில் ஒன்றும் அறியாதவர் ஆவது நல்லது தான். அப்போது அவகுணத்தைப் பார்க்க மாட்டார்கள், தாரணை செய்யமாட்டார்கள், வாய்மொழி மூலம் வர்ணனை செய்து மற்றவர்கள் மற்றும் மாற்றத்தைப் பற்றி சிந்தனை செய்யும் பட்டியலில் வரமாட்டார்கள், அவகுணமோ குப்பைதான் இல்லையா? ஒருவேளை பார்க்கிறீர்கள் என்றாலும் மாஸ்டர் ஞான சூரியனாகி குப்பையை எரிப்பதற்கான சக்தி இருக்கிறது என்றால், நல்லதை நினைப்பவர் ஆகுங்கள். புத்தியில் கொஞ்சமாவது குப்பை இருக்கிறது என்றால், தூய்மையான தந்தையின் நினைவு நிலைத்திருக்க முடியாது. பிராப்தி செய்ய முடியாது. அசுத்தத்தை தாரணை செய்யும் பழக்கத்தை ஒருதடவை ஏற்படுத்திவிட்டால் அடிக்கடி புத்தி விரும்பாவிட்டாலும் அசுத்தத்தின் பக்கம் சென்று கொண்டே இருக்கும். பிறகு ரிஸல்ட் என்னவாகும்? அது இயற்கையாக சம்ஸ்காரம் ஆகி விடும். பிறகு அந்த சம்ஸ்காரத்தை மாற்றம் செய்வதில் கடின உழைப்பும் மற்றும் நேரமும் சென்று விடும். மற்றவர்களின் அவகுணத்தை வர்ணனை செய்வது என்றால் அவரும் பரசிந்தனையின் அவகுணத்திற்கு வசமாவது. மற்றவர்களின் பலவீனத்தை வர்ணனை செய்வது என்றால், தன்னுடைய உள்ளடக்கும் சக்தியின் பலவீனத்தை வெளிப்படுத்துவது என்று புரிந்து கொள்வதில்லை. எந்த ஒரு ஆத்மாவையும் எப்பொழுதும் குணம் நிறைந்தவராகப் பாருங்கள். ஒருவேளை எவரிடமாவது பலவீனம் இருக்கிறது என்றாலும், மரியாதைக்குப் புறம்பாக காரியம் நடக்கிறது என்றாலும் பாப்தாதாவின் காரியத்திற்கு உருவாக்கப்பட்டிருக்கும் உயர் நீதிமன்றத்தில் கொண்டு வாருங்கள். நீங்களே வக்கீலாகவும் நீதிபதியாகவும் ஆகாதீர்கள். சகோதரன் சகோதரர் என்ற பார்வை நிலைத்திருக்க முடிவதில்லை. வழக்கை தாக்கல் செய்வதற்கு ஒன்றும் தடை இல்லை, ஆனால் கலப்படத்தையும் ஏமாற்றுக் காரியத்தையும் செய்யாதீர்கள். எவ்வளவு முடியுமோ சுபபாவனையோடு சமிக்ஞை கொடுத்து விடுங்கள். தன்னுடைய மனதிலும் வைக்காதீர்கள் மேலும் மற்றவர்கள் மனமனாபவ நிலையில் நிலைப்பதற்கு தடையாக ஆகாதீர்கள். அப்படி சாதுர்யமான விளையாட்டு என்ன செய்கிறீர்கள்? எந்த விசயத்தை உள்ளடக்க வேண்டுமோ அதை பரப்புகிறீர்கள் மேலும் எந்த விசயத்தைப் பரப்ப வேண்டுமோ அதை இதுவோ அனைவரிலும் இருக்கிறது என்று உள்ளடக்கி விடுகிறீர்கள். எனவே எப்பொழுதும் தன்னை அசுத்தத்திலிருந்து தூரமாக வையுங்கள். எண்ணத்தில்,

வார்த்தைகளில், காரியத்தில் மற்றும் உறவு தொடர்பில் அசுத்தம் இருப்பது சங்கமயுகத்தின் சிரேஷ்ட பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர் ஆக்கி விடுகிறது. காலம் கடந்து சென்று விடும். பிறகு என்ன அடையவேண்டுமோ என்ற பட்டியலில் நிற்க வேண்டியதாக இருக்கும். பிராப்தி சொரூபத்தின் பட்டியலில் இருக்க மாட்டார். அனைத்து பொக்கிஷங்களின் அதிபதியின் குழந்தை பிராப்தி அடையாதவர்களின்

பட்டியலில் இருக்கிறார் என்ற இது நன்றாக இருக்குமா? எனவே தன்னுடைய பிராப்தியை அடைவதில் ஈடுபட்டு விடுங்கள். நற்சிந்தனை உள்ளவர் ஆகுங்கள். எந்த விதமான விகாரங்களின் வசமானவராகி, தன்னுடைய தலைகீழான புத்திசாலிதனத்தைக் காண்பிக்காதீர்கள். இந்த தலைகீழான புத்திசாலித்தனம் இப்பொழுது அற்பகாலத்திற்கு உங்களை குஷிப்படுத்தி விடும், மேலும் உங்களுடன் இருப்பவர்களும் உங்களுடைய புத்திசாலித்தனத்தின் மகிமையைப் பாடிக் கொண்டிருப்பர் ஆனால் கர்மத்தின் விளைவுகளையும் புத்தியில் வையுங்கள். தலைகீழான புத்திசாலித்தனம் தலைகீழாக தொங்க விட்டு விடும். இப்பொழுது அற்பகாலத்திற்கு காரியம் நடக்க வேண்டும் என்பதற்காக புத்திசாலித். தனத்தைக் காண்பிப்பார்கள், பின்பு அந்த அளவே காரியத்தை செய்விப்பதற்குப் பதிலாக கதறவும் வேண்டியதிருக்கும். சிலர் பாப்தாதா, தீதி, தாதியையும் புத்திசாலித்தனத்தைக் காண்பித்து ஏமாற்றி விடுகின்றனர். அந்த முறையும் தெரியும். அற்பகால தலைகீழான பிராப்திக்காக சம்மதிக்கவும் வைத்தீர்கள், செய்விக்கவும் செய்தீர்கள் ஆனால் என்ன அடைந்தீர்கள் மற்றும் என்ன இழந்தீர்கள்? இரண்டு , மூன்று வருடங்களாகப் பெயரும் பெற்று விட்டீர்கள் ஆனால் அனேக ஜென்மங்களுக்காக உயர்ந்த பதவியிலிருந்து பெயரை இழந்து விட்டீர்கள். அப்படியானால் அடைந்ததாக ஆனதா அல்லது இழந்ததாக ஆனதா?

இன்னும் வேறு சாதுர்யங்களைக் கூறலாமா? அந்த மாதிரி நேரத்தில் இப்பொழுது பிரத்யக்ஷ பலனையோ எடுத்துக் கொள், எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்ற ஞானத்தின் பாயிண்ட்டை (கருத்தை) உபயோகிக்கிறார்கள் ஆனால் பிரத்யக்ஷ பலனான அதீந்திரிய சுகம் நிரந்தரமானதே அன்றி அற்ப காலத்திற்கானது அல்ல. எவ்வளவு தான் பிரத்யக்ஷ பலன் அடைவதின் சவால் விட்டாலும் அற்பகாலத்திற்கு

கிடைத்த பெயர் மற்றும் குஷியின் கூடவே இடையில் திருப்தியின்மை என்ற முள் இந்த பலனின் கூடவே குத்திக் கொண்டே இருக்கும். மனதின் மகிழ்ச்சி நிறைந்த நிலை மற்றும் திருப்தியை அனுபவம் செய்ய முடியாது. எனவே அந்த மாதிரி இறங்கும் கலையின் கலைத்திறமையை காட்டாதீர்கள். பாப்தாதாவிற்கு அந்த மாதிரி ஆத்மாக்கள் மேல் இவர்கள் என்ன ஆவதற்காக வந்தார்கள், ஆனால் என்ன ஆகிக் கொண்டிருக்கிறார்கள் என்று இரக்கம் வருகிறது. நான் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறேனோ அது பிரபுவிற்கு விருப்ப மானதாக இருக்க வேண்டும் என்ற இலட்சியத்தை வையுங்கள். எப்படி தந்தை குணங்களின் மாலையை கழுத்தில் அணிவிக்கிறாரோ அதே போல் குணங்களின் மாலையை அணியுங்கள் கற்களின் மாலையை அணியாதீர்கள். இரத்தினங்களின் மாலையை அணியுங்கள். நல்லது

அப்படி எப்பொழுதும் குணம் நிறைந்தவராக இருக்கும், பிரபுவிற்கு விருப்பமான, எப்பொழுதும் உண்மையான வைஷ்ணவனாக இருக்கும், விஷ்ணுவின் இராஜ்ய அதிகாரிகளுக்கு எப்பொழுதும் சுபபாவனை மூலமாக சகோதரன், சகோதரணின் பார்வையில் சுலபமாக நிலைத்திருக்கக் கூடிய, எப்பொழுதும் குணத்தை கிரகிக்கும் பார்வையுள்ள, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக ஆகக் கூடிய, நெருக்கமான ரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1. உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தைகள் மண்ணில் விளையாடுவதற்குப் பதிலாக அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுங்கள்!** எப்பொழுதும் தன்னை அனைத்து பிராப்தி சொரூபமானவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? பிராப்தி சொரூபம் என்றால் அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுபவர். எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்று அந்த மாதிரி தந்தையின் துணையை எப்பொழுதும் அனுபவம் செய்வார்கள். எப்பொழுது தந்தை அனைத்து உறவுகளினால் நம்முடையவர் ஆகி விட்டார் என்றால், எப்பொழுதும் தந்தையின் துணை வேண்டும் இல்லையா? எவ்வளவு தான் பெரிய பிரச்சனையாக இருந்தாலும், மலை போன்றதாக இருந்தாலும், நீங்கள் தந்தையின் கூடவே மேலே பறந்து கொண்டே இருந்தீர்கள் என்றால், ஒருபொழுதும் நிற்க மாட்டீர்கள். எப்படி

விமானத்தை மலை நிறுத்த முடியாது. மலையில் ஏறுபவர்களுக்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியதாக இருக்கும், ஆனால் பறப்பவர்கள் அதை சுலபமாகவே கடந்து விடுவார்கள். அதே போல் எப்படிப்பட்ட கடுமையான பிரச்சனையாக இருந்தாலும் தந்தையின் கூடவே பறந்து கொண்டே இருந்தீர்கள் என்றால், ஒரு நொடியில் கடந்து விடுவீர்கள். ஒருபொழுதும் ஊஞ்சலில் இருந்து கீழே வராதீர்கள். இல்லையென்றால் அழுக்காகி விடுவீர்கள். அழுக்கானவர் எப்படி தந்தையை சந்திக்க முடியும். வெகுகாலம் பிரிந்து இருந்தீர்கள். ஒவ்வொரு குழந்தையையும் குல தீபமாக, நம்பர் ஒன் குழந்தையாக பாப்தாதா பார்க்க விரும்புகிறார். ஒருவேளை அடிக்கடி அழுக்காக ஆனீர்கள் என்றால், சுத்தமாவதில் எவ்வளவு காலம் வீணாகச் செல்லும். எனவே எப்பொழுதும் சந்திப்பில் இருங்கள். மண்ணில் ஏன் காலை வைக்கிறீர்கள். இவ்வளவு சிரேஷ்ட தந்தையின் குழந்தைகள் மேலும் அழுக்காக இருக்கிறார்கள் என்றால், உயர்ந்ததின் உயர்ந்த தந்தையின் குழந்தை என்று உங்களை யார் நம்புவார்கள்? எனவே கடந்ததை கடந்ததாக்குங்கள். எந்த விநாடி கடந்து சென்று விட்டதோ அது முடிந்தது எந்த விதமான மன உழைச்சலிலும் வராதீர்கள். சுய சிந்தனை செய்யுங்கள், பரசிந்தனைகளைக் கேட்காதீர்கள் மற்றும் செய்யாதீர்கள், இவைகள் தான் அழுக்காக்குகின்றன. இப்பொழுதிலிருந்தே கேள்விக் குறியை அகற்றி விட்டு புள்ளி வைத்து விடுங்கள். புள்ளியாகி, புள்ளியான தந்தையுடன் பறந்து விடுங்கள் நல்லது.

**2. ஓய்வாக இருக்கும் ஆத்மாக்களின் சேவையை சுறுசுறுப்பாகச் செய்தீர்கள் என்றால், வெற்றி கிடைக்கும்!** வானபிரஸ்திகள் (வயோதிகர்கள்) யாருக்கு எப்பொழுதுமே நேரம் இருக்கிறது, யார் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களோ, அவர்களுடைய சேவை செய்வதற்காக கொஞ்சம் உழைக்க வேண்டியதாக இருக்கும். அவர்கள் நோட்டீஸைப் பார்த்து வரமாட்டார்கள். ஓய்வாக இருப்பவர்களின் சேவையையும் நேரம் பார்த்து செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் வயோதிகர்களாக இருக்கும் காரணத்தினால் தன்னை அனுபவி என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு அனுபவத்தின் அபிமானம் இருக்கும், எனவே அவர்களுடைய சேவைக்காக கொஞ்சம் அதிகம் நேரம் கொடுக்க வேண்டும். மேலும் முறையும் நட்பு மற்றும் அன்பு நிறைந்த சந்திப்பிற்கானதாக இருக்க வேண்டும். புரிய வைப்பதற்காக

இல்லை. நட்புறவின் காரணமாக அவர்களை சந்தியுங்கள். இந்த விசயத்தை நீங்கள் தெரிந்திருக்கவில்லை, நான் தெரிந்திருக்கிறேன் என்று அப்படி கூறாதீர்கள். அனுபவத்தின் கருத்துப் பரிமாற்றம் செய்யுங்கள். அவர்கள் கூறும் விசயத்தை கேட்டீர்கள் என்றால், இவர் எனக்கு மரியாதை கொடுக்கிறார் என்று நினைப்பார்கள். யாரையாவது நெருக்கத்தில் கொண்டு வருவதற்காக அவருடைய விசேஷத்தை வர்ணனை செய்யுங்கள். பிறகு அவர்களுக்கு உங்களுடைய அனுபவத்தைக் கூறி அருகில் கொண்டு வாருங்கள். ஒருவேளை ஏழு நாள் பாடம் எடுங்கள், ஞானம் கேளுங்கள் என்றால் கேட்க மாட்டார்கள், எனவே அனுபவத்தைக் சொல்லுங்கள். இப்பொழுது பாப்தாதாவிற்கு அந்த மாதிரி வானபிரஸ்திகளின் பூச்செண்டை வழங்குங்கள் அவர்களை நட்புறவின் காரணமாக சகயோகி ஆக்கி அழையுங்கள்.

**3. பணிவானவர் ஆனீர்கள் என்றால், புதுப்படைப்பின் காரியம் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கும்!** எப்பொழுதும் தன்னை சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் சேவையின் அலங்காரம் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? சேவாதாரியின் முக்கிய விசேஷம் என்ன? சேவாதாரி என்றால் படைப்பை செய்யும் எப்பொழுதும் பணிவாக இருப்பவர். படைப்புக் காரியம் செய்பவர் மற்றும் பணிவாக இருப்பவர். பணிவாக இருப்பது தான் சேவையின் வெற்றிக்கான சாதனம். பணிவாக இருப்பதினால் சேவையில் எப்பொழுதும் லேசாக இருப்பீர்கள். பணிவு இல்லை, மரியாதை கிடைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது என்றால், சுமையாகி விடும். சுமையுள்ளவர் எப்பொழுதும் நின்று விடுவார். வேகமாகச் செல்ல முடியாது. எனவே பணிவாக இருக்கிறேனா அல்லது இல்லையா என்பதின் அடையாளம், லேசாக இருப்பார். ஒருவேளை ஏதாவது சுமை பாரம் அனுபவம் ஆகிறது என்றால், பணிவு இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள்.

**4. உண்மையான ஆன்மீக சேவாதாரி என்றால், அனைத்து உறவுகளின் அனுபவத்தை ஒரு தந்தையுடன் செய்வது மற்றும் செய்விப்பது!** அனைத்து உறவுகளும் ஒரு தந்தையுடன் இருக்கிறது, தந்தை எப்பொழுதும் என் எதிரில் இருக்கிறார் என்று அப்படி அனுபவம் ஆகிறதா? உன்னோடுதான் அருந்துவேன், உன்னுடன் தான் அமர்ந்திருப்பேன், நீ கூறுவதைத் தான் கேட்பேன்... என்ற இதன்

அனுபவம் ஆகிறது தான் இல்லையா? தந்தையே உண்மையான நண்பன் ஆகி விட்டார் என்றால், மற்றவர்களை நண்பனாக்குவதற்கு அவசியமே இல்லை. எந்த உறவு வேண்டுமோ அந்த உறவோடு எப்பொழுதும் பாப்தாதா எதிரில் ஆஜராக இருக்கிறார். அப்படி ஆசிரியர் என்றால் அனைத்து உறவுகளின் சுவையை ஒரு தந்தையிடம் அனுபவம் செய்பவர், இவரைத் தான் உண்மையான சேவாதாரி என்று கூறுவது. தனக்குள் இருக்கிறது, என்றால் மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விக்க முடியும். ஒருவேளை பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களில் ஏதாவது ஒரு ரசனையின் குறை இருக்கிறது என்றால் வரக்கூடிய ஆத்மாக்களிலும் அந்தக் குறை இருந்து விடும். எனவே அனைத்து ரசனைகளின் அனுபவம் செய்யுங்கள் மற்றும் செய்வியுங்கள். நல்லது ஓம் சாந்தி

**வரதானம்: ஞானப் பொக்கிஷம் மூலமாக முக்தி, ஜீவன் முக்தியின் அனுபவம் செய்யக் கூடிய அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

ஞான ரத்தினங்களின் பொக்கிஷம் அனைத்தையும் விட உயர்ந்த பொக்கிஷம்! இந்தப் பொக்கிஷம் மூலமாக இந்த நேரம் தான் முக்தி, ஜீவன் முக்தியின் அனுபவம் செய்ய முடியும். ஞானம் நிறைந்த ஆத்மா யாரென்றால் யார் துக்கம் மற்றும் அசாந்தியின் அனைத்து காரணங்களையும் முடிவு கட்டி, அனேக பந்தனங்களின் கயிறுகளை துண்டித்து, முக்தி மற்றும் ஜீவன் முக்தியை அனுபவம் செய்வது. அனேக வீணான எண்ணங்களி லிருந்தும், தீய எண்ணங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் எப்பொழுதும் விடுபட்டு இருப்பது - இது தான் முக்தி மற்றும் ஜீவன் முக்தி நிலை.

**சுலோகன்: யார் தன்னுடைய சக்திசாலியான உள் உணர்வுகளினால் வாயு மண்டலத்தை பரிவர்த்தனை செய்து விடுகிறாரோ அவர் தான் உலக மாற்றம் செய்பவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாக்கியத்தின் ஆதாரம் தியாகம்!

இன்று பாக்கியத்தை உருவாக்கும் பாப்தாதா தன்னுடைய அனைத்து குழந்தைகளின் தியாகம் மற்றும் பாக்கியம் இரண்டை யும் பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன தியாகம் செய்தோம் மற்றும் என்ன பாக்கியம் அடைந்தோம். ஒரு மடங்கு தியாகத் திற்கு பலனாக பல மடங்கு பாக்கியம் கிடைக்கிறது என்பதையோ தெரிந்தே இருக்கிறீர்கள். தியாகத்தின் நுணுக்கமான விளக்கத்தைத் தெரிந்த போதிலும் எந்தக் குழந்தைகள் கொஞ்சம் தியாகம் செய்தாலும் பாக்கியத்தின் ரேகை மிகத் தெளிவானதாக மற்றும் பெரியதாக ஆகி விடுகிறது. தியாகத்திற்கும் விதவிதமான நிலைகள் இருக்கின்றன. பொதுவாக பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி ஆகியிருக்கிறீர்கள் என்றால், இதுவும் தியாகத்தின் பாக்கியமாக பிராமண வாழ்க்கை கிடைத்திருக்கிறது. இந்த வகையில் எப்படி அனைவரும் தியாகம் செய்பவர்களாகவும் ஆகி விட்டீர்கள் ஆனால் தியாகத் திலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. எனவே பாக்கியத்தை அடைவதிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. அனைவருமே தன்னை பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்றோ கூறுகிறீர்கள் ஆனால் பிரம்மா குமார், பிரம்மா குமாரிகளிலிருந்து ஒருவர் மாலையின் நம்பர் ஒன் மணி ஆகிறார், வேறு ஒருவர் கடைசி மணி ஆகிறார் ஆனால் இருவருமே பிரம்மா குமார்-குமாரி தான். அனைவரும் சூத்ர வாழ்க்கையை தியாகம் செய்திருக்கிறீர்கள், இருந்தும் நம்பர் ஒன் மற்றும் கடைசியில் இருக்கும் வித்தியாசம் ஏன்? குடும்ப வாழ்க்கையில் டிரஸ்டி ஆகி நடந்து கொண்டாலும், குடும்ப வாழ்க்கையிலிருந்து விடுபட்டு சேவாதாரி ஆகி எப்பொழுதும் சேவை நிலையத்தில் இருக்கிறீர்கள் என்றாலும், இரண்டு விதமான பிராமண ஆத்மாக்களும் டிரஸ்டி ஆக இருந்தாலும், சேவாதாரியாக இருந்தாலும் இருவர்களுமே பிரம்மா குமார் - குமாரி என்று தான் கூறுகிறீர்கள்.. குடும்பப் பெயர் இருபாலருக்குமே ஒன்று தான் ஆனால் இருவர்களுக்குமே தியாகத்தின் ஆதாரத்தில் பாக்கியம் உருவாகி இருக்கிறது. சேவாதாரி ஆகி சேவை நிலையத்தில்

இருப்பது என்பது தான் உயர்ந்த தியாகம் மற்றும் பாக்கியம் என்று கூற முடியாது. டிரஸ்டி ஆத்மாக்களும் தியாக உள் உணர்வு மூலமாக மாலையில் நல்ல வரிசை எண்ணை பெற முடியும் ஆனால் உண்மையான மற்றும் சுத்தமான உள்ளம் உள்ள டிரஸ்டியாக இருக்க வேண்டும். பாக்கியத்தை அடைவதற்கான அதிகாரம் இருவர்களுக்குமே இருக்கிறது ஆனால் சிரேஷ்ட பாக்கிய ரேகையைப் போடுவதற்கான ஆதாரம் சிரேஷ்ட எண்ணம் மற்றும் சிரேஷ்ட காரியம் - டிரஸ்டி ஆத்மாவாக இருந்தாலும் சேவாதாரி ஆத்மாவாக இருந்தாலும், இருபாலருமே இதே ஆதாரத்தின் மூலமாக வரிசை எண்ணைப் பெற முடியும். பாக்கியத்தை உருவாக்குவதற்கு இருவர்களுக்குமே முழு அதிகாரம் இருக்கிறது. யார் உருவாக்க விரும்புகிறீர்களோ, எவ்வளவு உருவாக்க விரும்புகிறீர்களோ, அந்த அளவு உருவாக்க முடியும். பிரம்மா குமார்லிகுமாரிகள் பிறந்ததிலிருந்தே பாக்கியத்தை கொணடே வருகிறீர்கள். பிறந்த உடனேயே பாக்கிய நட்சத்திரம் பிறப்பு உரிமையாகி விட்டது. பிராமணன் என்றாலே பாக்கியம் நிறைந்தவர் ஆனால் கிடைத்திருக்கும் பிறப்பு உரிமையை மற்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பாக்கிய நட்சத்திரத்தை எவ்வளவு முன்னேற்றம் அடையச் செய்கிறார், எவ்வளவு உயர்ந்ததாக ஆக்கிக் கொண்டே இருக்கிறார் என்பது அவரவர்களின் முயற்சியைப் பொருத்தது. கிடைத்திருக்கும் பாக்கியத்தின் அதிகாரத்தை வாழ்க்கையில் நடைமுறையில் காரியத்தில் கொண்டு வருவது என்றால் கிடைத்திருக்கும் தந்தையின் சொத்தை சம்பாத்தியம் மூலம் அதிகரித்துக் கொண்டே இருப்பது அல்லது சாப்பிட்டே அழித்து விடுவது என்பது. அவரவர்கள் கையில் இருக்கிறது. பிறந்த உடனேயே பாப்தாதா அனைவருக்கும் ஒரே மாதிரி சிரேஷ்ட பாக்கியவானாக ஆகுக என்ற வரதானம் என்று சொன்னாலும், பாக்கியத்தின் சொத்து என்று சொன்னாலும் ஒரே மாதிரி தான் கொடுத்திருக்கிறார். அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரி தான் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளே, செல்லமான குழந்தைகளே என்ற பட்டங்களைக் கொடுக்கிறார். சிலரை செல்லமானவர்கள் என்றும், சிலரை செல்லமற்றவர்கள் என்றும் கூறுவதில்லை ஆனால் சொத்தை பாதுகாப்பது மற்றும் அதிகப் படுத்துவதில் வரிசைக்கிரமமானவர்கள் ஆகி விடுகிறார்கள். சேவாதாரி களுக்கு 10 மடங்கு கொடுக்கிறார் மற்றும் டிரஸ்டிகளுக்கு இரண்டு மடங்கு கொடுக்கிறார் என்று அப்படி அல்ல. அனைவரை யும் பல மடங்கு செல்வந்தர்கள் என்று கூறுகிறார் ஆனால் பாக்கியம் என்ற

பொக்கிஷத்தைப் பாதுகாப்பது அதாவது தனக்குள் தாரணை செய்வது மேலும் பாக்கியம் என்ற பொக்கிஷத்தை அதிகரிப்பது அதாவது எண்ணம், சொல் மூலமாக காரியத்தில் ஈடுபடுத்துவது, இதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். அனைவரும் சேவாதாரியாகவும் இருக்கிறீர்கள், அனைவரும் தாரணை நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள், ஆனால் தாரணை சொரூபத்தில் வரிசைக் கிரமமாக இருக்கிறீர்கள். சிலர் அனைத்து குணங்களும் நிரம்பியவர் ஆகியிருக்கிறீர்கள், சிலர் குணம் நிறைந்தவர் களாக அகியிருக்கிறீர்கள். சிலர் எப்பொழுதும் தாரணை சொரூபமாக இருக்கிறீர்கள், சிலர் சில நேரம் தாரணை சொரூபமாக இருக்கிறீர்கள், சிலர் மேலே கீழே ஆடும் சொரூபமாக இருக்கிறீர்கள். ஒரு குணத்தை தாரணை செய்தீர்கள் என்றால் இன்னொன்றை தேவையான நேரத்தில் காரியத்தில் கொண்டு வர முடியாது. எப்படி ஒரே நேரத்தில் சகித்துக் கொள்ளும் சக்தியும் வேண்டும். மேலும் கூடவே உள்ளடக்கும் சக்தியும் வேண்டும். ஒருவேளை ஒரு சக்தி மற்றும் சகிப்புத் தன்மை என்ற குணத்தை தாரணை செய்து விடுவீர்கள். மேலும் உள்ளடக்கும் சக்தி மற்றும் குணத்தைக் கூடவே உபயோகிக்க முடியவில்லை என்றால் பிறகு கூறுவீர்கள் நான் இவ்வளவு சகித்துக் கொண்டேன் இல்லையா, இதை குறைவாகச் செய்தேனா என்ற என்று கூறுவீர்கள். நான் இவ்வளவு சகித்துக் கொண்டேன் என்று எனக்குத் தெரியும் ஆனால் சகித்துக் கொண்ட பிறகு உள்ளடக்கவில்லை, உள்ளடக்கும் சக்தியை உபயோகிக்கவில்லை என்றால் என்னவாகும்? இவர் இதைச் செய்தார், நான் இதைச் செய்தேன் என்று அங்கு இங்கு வர்ணனை இருக்கும். சகித்துக் கொண்டீர்கள், இந்த அதிசயத்தையோ அவசியம் செய்தீர்கள் ஆனால் அதிசயத்தை வர்ணனை செய்து குழப்பத்தில் மாற்றி விட்டீர்கள். ஏனென்றால் வர்ணனை செய்வதினால் ஒன்றோ தேக அபிமானம் மற்றும் இன்னொன்று பரசிந்தனை இரண்டு சொரூபமும் காரியத்தில் வந்து விடுகின்றன. இதே விதமாக ஒரு குணத்தை தாரணை செய்தீர்கள், இன்னொன்றை செய்யவில்லை என்றால், என்ன தாரணை சொரூபம் இருக்க வேண்டுமோ அது உருவாவதில்லை. இந்த காரணத்தினால் கிடைத்திருக்கும் பொக்கிஷத்தை எப்பொழுதும் தாரணை செய்யமுடிய வில்லை அதாவது பாதுகாக்க முடிவதில்லை. பாதுகாக்க முடியவில்லை என்றால் இழந்து விட்டீர்கள் இல்லையா? சிலர் பாதுகாக்கிறார்கள், சிலர் இழந்து விடுகிறார்கள். அவருக்கு வரிசை எண்ணே இருக்காது இல்லையா?

அப்படி சேவையில் ஈடுபடுத்துவது என்றால், பாக்கியத்தின் செல்வத்தை அதிகரிப்பது. இதில் கூட சேவையோ அனைவரும் செய்கிறீர்கள் ஆனால் உண்மையான உள்ளத்தோடு, முழு ஈடுபாட்டுடன் சேவை செய்வது மற்றும் சேவாதாரியாகி சேவை செய்வது, இதிலேயும் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. சிலர் உண்மையான உள்ளத்தோடு சேவை செய்கிறார்கள், மேலும் சிலர் புத்தியின் ஆதாரத்தில் சேவை செய்கிறார்கள். வித்தியாசமோ இருக்கும் இல்லையா?

புத்தி கூர்மையானது, பாயின்ட்டுகள் அதிகம் இருக்கின்றன அதன் ஆதாரத்தில் சேவை செய்வது உண்மையான உள்ளத்தோடு சேவை செய்வது என்ற இதில் இரவு, பகலுக்கான வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. உள்ளப்பூர்வமாக சேவை செய்பவர் பரந்த உள்ளமுடையவரின் குழந்தையாக ஆக்குவார் ஆனால் புத்தி மூலம் சேவை செய்பவர், சொல்வதற்கும் மற்றும் சொல்ல வைப்பதற்கும் மட்டுமே கற்றுக் கொடுப்பார். அவர் சிந்தனை செய்வார், இவர் வர்ணனை செய்வார். ஒருவர் சேவாதாரி ஆகி சேவை செய்பவர், இனனொருவர் பெயர் பெற்றவர் ஆவதற்காக சேவை செய்பவர். வித்தியாசம் ஏற்பட்டு விட்டது தான் இல்லையா? உண்மையான சேவாதாரி யாருக்கு சேவை செய்வார்களோ அவர்களுக்கு பிராப்தியின் பிரத்யக்ஷ பலனை அனுபவம் செய்விப்பார்கள். பெயர் பெற்றவர் ஆகக்கூடிய சேவாதாரி அந்த நேரம் நல்ல பெயரை பெறுவார், மிக நன்றாகக் கூறினார், மிக நன்றாகப் பேசினார் என்று பெயர் பெறுவார் ஆனால் பிராப்தியின் பலனின் அனுபவத்தை செய்விக்க முடியாது. அப்படி வேற்றுமை ஏற்பட்டு விட்டது தான் இல்லையா? அப்படி ஒருவர் முழு ஈடுபாடோடு சேவை செய்பவர், இன்னொருவர் கொடுக்கப்பட்ட வேலை என்று சேவை செய்பவர். ஈடுபாடு உள்ளவர் ஒவ்வொரு ஆத்மாவிடமும் ஈடுபாட்டை ஏற்படுத்தாமல் இருக்க மாட்டார். வேலை என்று நினைப்பவர் தன்னுடைய வேலையை முடித்து விடுவார், ஏழு நாள் பாடமும் எடுத்து விடுவார், யோகப் பயிற்சி முகாமும் செய்து விடுவார், தாரணை வகுப்புகளும் செய்து விடுவார், முரளி வகுப்பும் எடுக்கும் வரையிலும் கொண்டு வந்து விடுவார், ஆனால் ஆத்மாவிற்கு முழு ஈடுபாடு உடையவராக ஆக்குவது தன்னுடைய பொறுப்பு என்று உணருவதில்லை. கோர்ஸ்க்கு மேல் கோர்ஸ் (பல ஏழுநாள் பாடங்கள்) எடுத்து விடுவார் ஆனால் ஆத்மாவில் ஃபோர்ஸ் (சக்தி) நிரப்ப முடியாது. நான் மிகக் கடுமையாக உழைத்து

விட்டேன் என்று நினைப்பார் ஆனால் சேவையின் ஈடுபாடு உள்ளவர் தான், ஈடுபாட்டை ஏற்படுத்த முடியும் என்பது நியமம். அந்த வித்தியாசத்தைப் புரிந்து கொண்டீர்களா? இது தான் கிடைத்திருக்கும் செல்வத்தை அதிகரிப்பது, அதாவது இந்த காரணத்தினால் எவ்வளவு பாதுகாக்கிறார்களோ எவ்வளவு அதிகரிக்கிறார்களோ அந்த அளவு வரிசை எண்ணை முன்னுக்கு எடுத்து விடுகிறார்கள். பாக்கியத்தை அளிப்பவரோ அனைவருக்கும் ஒரே மாதிரி தான் பாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார் ஆனால் சம்பாதிப்பவர்கள் சிலர் இழப்பவர்களாக ஆகி விடுகிறார்கள். சிலர் சாப்பிட்டு அழித்து விடுபவர்கள் ஆகி விடுகிறார்கள். எனவே இரண்டு விதமான மாலை உருவாகியிருக்கிறது. மேலும் மாலையிலும் வரிசை எண் உருவாகி விட்டது. வரிசை எண் ஏன் உருவானது என்பதைப் புரிந்து கொண்டீர்களா? அப்படி தியாகத்தின் பாக்கியத்தை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். தியாகத்தின் லீலையும் அளவற்றது. அதைப் பின்பு கூறுவோம். நல்லது.

அந்த மாதிரி உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்த, எப்பொழுதும் உயர்ந்த எண்ணம் மற்றும் உயர்ந்த காரியம் மூலமாக பாக்கிய ரேகையைப் பெரியதாக்கும், நிரந்தர உண்மையான சேவாதாரிகளுக்கு, எப்பொழுதும் அனைத்து குணங்கள், அனைத்து சக்திகளை வாழ்க்கையில் கொண்டு வரக்கூடிய, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் பிரத்யக்ஷபலன் அதாவது பிராப்தி சொரூபம் ஆக்கக்கூடிய, அந்த மாதிரி சிரேஷ்ட தியாகி மற்றும் சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த எப்பொழுதும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் அதிகாரத்தை, பொக்கிஷங்களைப் பாதுகாக்கும் மற்றும் அதிகரிக்கும் அந்த மாதிரி தாரணை ரூப நிரந்தர சேவாதாரி குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) பிராமணரிலிருந்து பரிஷ்தா மற்றும் ஃபரிஷ்தாவிலிருந்து தேவதை ஆக வேண்டும் என்ற இந்த இலட்சியத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள்!** அனைவரும் தன்னை பிராமணனிலிருந்து ஃபரிஷ்தா ஆகுபவன் என்று நினைக்கிறீர்களா? இப்பொழுது பிராமணர் மேலும் பிராமணரிலிருந்து பரிஷ்தா ஆகப்போகிறேன். பிறகு பரிஷ்தாவிலிருந்து தேவதை ஆவேன் என்ற இந்த நினைவு இருக்கிறதா? பரிஷ்தா ஆவது என்றால், பௌதீக உடலிலிருப்பவராக இருந்தாலும் லேசான ரூபத்தில் இருப்பது, அதாவது

எப்பொழுதும் புத்தி மூலமாக உயர்ந்த நிலையில் இருப்பது. பரிஷ்தாக்களின் கால்கள் தரையில் படாது மேலே எப்படி இருப்பார்கள்? புத்தி மூலமாக. புத்தி என்ற கால்கள் எப்பொழுதும் உயர்ந்த நிலையில் இருப்பது. அந்த மாதிரி பரிஷ்தாவாக ஆகிக் கொண்டி ருக்கிறீர்களா அல்லது ஆகி விட்டீர்களா? பிராமணனாகவோ இருக்கவே இருக்கிறீர்கள் ஒருவேளை பிராமணனாக இல்லை யென்றால், இங்கே வருவதற்கு அனுமதியும் கிடைத்திருக்காது ஆனால் பிராமணர்கள் பரிஷ்தா தன்மையின் நிலையை எந்த அளவு கடைப் பிடித்திருக்கிறார்கள்? பரிஷ்தாக்களுக்கு ஒளி வடிவமான உடலைக் காண்பிக்கிறார்கள். எனவே எந்த அளவு தன்னை பிரகாச சொரூப ஆத்மா என்று புரிந்து கொள்வீர்களோ மேலும் ஒளிவடிவமான உடலுள்ள ஃபரிஷ்தாவாகி காரியங்கள் செய்து கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் செய்வீர்களோ, ஃபரிஷ்தா என்றால் தன்னுடைய உடல் உணர்வோடும் எந்த சம்பந்தம் இல்லை, தேக உணர்வின் சம்பந்தம் துண்டிக்கப்பட்டது என்றால், ஃபரிஷ்தா, உடலிலிருந்து அல்ல, உடல் உணர்விலிருந்து! உடலிலிருந்து சம்பந்தம் துண்டிக்கப்ட்டது என்றாலோ இங்கிருந்து சென்று விடுவீர்கள், ஆனால் தேக உணர்விலிருந்து சம்பந்தம் முடிய வேண்டும், அப்பொழுது இந்த வாழ்க்கை மிகவும் பிடித்தமானதாக இருக்கும். பிறகு எந்த மாயாவும் கவர்ந்திழுக்காது. நல்லது.

**2. நான் இறைவனின் பூந்தோட்டத்தின் மலர் -இந்த சுவமானத்தில் இருங்கள்!** எப்பொழுதும் தன்னை பாப்தாதாவின் அதாவது அல்லாவின் பூந்தோட்டத்தின மலர் என்ற புரிந்து நடந்து கொள்கிறீர்களா? நான் ஆன்மீக ரோஜா மலராகி எப்பொழுதும் ஆன்மீக நறுமணத்தைப் பரப்புகிறேனா என்று தன்னிடமே கேளுங்கள். எப்படி ரோஜாவின் நறுமணம் அனைவருக்கும் இனிமையானதாக அனுபவம் ஆகும். மேலும் அந்த நறுமணம் நாலாபுறமும் பரவி விடுகிறது. அது ஸ்தூலமானது அழியக்கூடியது மேலும் நீங்கள் அனைவரும் அழியாத உண்மையான ரோஜா மலர்கள். எனவே எப்பொழுதும் அழியாத உண்மையான ரோஜா மலர்கள். எனவே எப்பொழுதும் அழியாத ஆன்மீகத்தின் நறுமணத்தை பரப்பிக் கொண்டே இருக்கிறீர்களா? நான் அல்லாவின் பூந்தோட்டத்தின் மலராகி விட்டேன் என்ற இந்த சுயமரியாதை யிலேயே இருங்கள். இதைவிட உயர்ந்த சுயமரியாதை வேறு எதுவும் இருக்க முடியாது. ஆஹா! என்னுடைய சிரேஷ்ட பாக்கியம், என்ற இந்தப் பாடலை எப்பொழுதும்

பாடிக் கொண்டே இருங்கள். கள்ளம் கபடமற்றவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டீர்கள் என்றால், சாதுர்யமானவர் ஆகி விட்டீர்கள் இல்லையா! யாரை தன்னுடையவர் ஆக்கியிருக்கிறீர்கள்? யாருடன் ஒப்பந்தம் செய்திருக்கிறீர்கள்? மூன்று உலகங்களையும் ஒப்பந்தத்தில் பெற்று விட்டீர்கள் இல்லையா? இன்றைய உலகத்தில் மிகப் பெரிய செல்வந்தன் இருந்தாலும், இவ்வளவு பெரிய ஒப்பந்தத்தை யாரும் செய்ய முடியாது. அந்த அளவு மஹான் ஆத்மாக்கள் நீங்கள். இந்த மஹான் நிப்லையை நினைவில் வைத்து நடந்து கொண்டே இருங்கள்.

**3. பிராமணர்களின் கடமை -குஷியின் தானம் செய்து மஹாதானி ஆவது!** அனைத்தையும் விட மிக உயர்ந்த பொக்கிஷம் குஷியின் பொக்கிஷம். பொக்கிஷம் என்ன என்ன ஒருவரிடம் இருக்குமோ அது தானம் செய்யப்படும். நீங்கள் குஷியின் பொக்கிஷத்தை தானம் செய்து கொண்டே இருங்கள். நீங்கள் யாருக்கு குஷியைக் கொடுப்பீர்களோ அவர் அடிக்கடி உங்களுக்கு நன்றி கூறிக் கொண்டே இருப்பார். துக்கமான ஆத்மாக்களுக்கு குஷியின் தானம் செய்து விட்டீர்கள் என்றால், உங்களுடைய மகிமை பாடுவர். மஹாதானி ஆகுங்கள் அனைவருக்கும் குஷியின் பொக்கிஷத்தை வழங்குங்கள். தன்னைப் போன்றவர்களை எழுப்பி விடுங்கள். வழி காண்பியுங்கள். சேவையின்றி பிராமண வாழ்க்கை இல்லை. சேவை இல்லையென்றால் குஷி இல்லை, எனவே எப்பொழுதும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டே இருங்கள். தினசரி யாருக்காவது அவசியம் தானம் செய்யுங்கள். தானம் செய்யாமல் தூக்கமே வரக்கூடாது.

**வரதானம்: அமைதியின் சக்தி மூலம், சம்ஸ்காரம் ஒத்துப்போவது மூலமாக அனைத்துக் காரியங்களையும் வெற்றியடையச் செய்யும் எப்பொழுதும் தடையற்றவர் ஆகுக!**

யார் தந்தையைப் பார்க்கிறாரோ, தந்தையைப் பின்பற்றி நடக்கிறாரோ அவர்தான் எப்பொழுதும் தடையின்றி இருக்க முடியும். சகோதரன், சகோதரியை பார்ப்பதினால் குழப்பம் ஏற்படுகிறது. எனவே இப்பொழுது தந்தையைப் பின்பற்றி நடந்து கொண்டே தந்தைக்கு சமமான சம்ஸ்காரத்தை உருவாக்கினீர்கள் என்றால், சம்ஸ்காரம் இணைந்து செல்லும் நடனம் ஆடிக் கொண்டே எப்பொழுதும் தடையின்றி

இருப்பீர்கள். அமைதியின் சக்தி மூலம் மற்றும் அமைதியாக இருப்பதினால் எவ்வளவு பெரிய தடையும் சுலபமாக முடிவடைந்து விடும். மேலும் அனைத்துக் காரியங்களும் இயல்பாகவே நிறை வேறிவிடும்.

**சுலோகன்: யார் ஒவ்வொரு விசயத்தையும் ஒரு காலத்து பார்வையோடு பார்ப்பதில்லை, மேலும் ஒவ்வொரு விசயத்திலும் நன்மை இருக்கிறது என்று நினைக்கிறாரோ அவர் தான் மூன்று காலத்தையும் தெரிந்தவர்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 03.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்தையும் விட முதன்மையான தியாகம் -தேக உணர்வின் தியாகம்!

பாப்தாதா தன்னுடைய தியாகமூர்த்தி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் தியாக சொரூபமாக இருக்கிறார்கள் ஆனால் எப்படி பாக்கியத்தைப் பற்றிக் கூறியிருந்தோம் இல்லையா? ஒரு தந்தையின் குழந்தையாக இருந்தும், ஒரே மாதிரி பாக்கியத்தின் ஆஸ்தி கிடைத்தும், பாதுகாப்பது மற்றும் அதிகரிப்பதின் ஆதாரத்தில் வரிசை எண் உருவாகி விடுகிறது என்று கூறியிருந்தோம். அதே போல் தியாகமூர்த்தி யாகவோ அனைவரும் ஆகியிருக்கிறீர்கள், இதிலேயும் வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள். தியாகம் செய்தீர்கள், மேலும் பிராமணன் ஆனீர்கள் ஆனால் தியாகத்தின் சூத்திரம் மிக நுண்ணியமானது. சொல்வதற்கோ அனைவரும் உடல், மனம், பணம், செல்வம், சம்மந்தம் அனைத்தையும் தியாகம் செய்து விட்டோம் என்ற ஒரு விஷயத்தை கூறுகிறீர்கள் ஆனால் உடலின் தியாகம் என்றால் உடல் உணர்வின் தியாகம். உடல் உணர்வின் தியாகம் ஆகி விட்டதா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறதா? தியாகத்தின் அர்த்தமே எந்தவொரு பொருளை மற்றும் விஷயத்தை விட்டு தன்னுடையது என்பதிலிருந்து விலகி விடுவது. தன்னுடைய அதிகாரம் முடிவடைந்தது. யாருக்காக தியாகம் செய்தீர்களோ அந்தப் பொருள் அவருடையதாக ஆகி விட்டது. எந்த விஷயத்தை தியாகம் செய்தீர்களோ அது பிறகு எண்ணத்தில் கூட வர முடியாது. ஏனென்றால் தியாகம் செய்த விஷயத்தை, எண்ணம் மூலமாக உறுதிமொழி எடுத்த விஷயத்தை மீண்டும் திரும்பிப் பெற முடியாது. எப்படி எல்லைக்குட்பட்ட சன்னியாசி தன்னுடைய வீட்டை, சம்மந்தத்தை தியாகம் செய்து செல்கிறார். மேலும் ஒருவேளை அவர் மீண்டும் திரும்பி வந்து விட்டார் என்றால், அவரை என்னவென்று கூறுவது.! நியமப்படி திரும்பி வர முடியாது. அதே போல் பிராமணர்கள் நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட சன்னியாசிகள் மற்றும் தியாகிகள். தியாகமூர்த்திகள்! நீங்கள் உங்களுடைய இந்த பழைய வீடு அதாவது

பழைய உடல், பழைய உடலின் உணர்வை தியாகம் செய்திருக்கிறீர்கள். புத்தி மூலமாக மீண்டும் ஒருபொழுதும் இந்த பழைய வீட்டின் மேல் கவரப்பட மாட்டோம் என்று எண்ணத்தை வைத்தீர்கள். எண்ணம் மூலமாகக் கூட மீண்டும் திரும்பி வர மாட்டோம். முதன்முதலில் இந்த தியாகம் செய்தீர்கள். எனவே தான் உடலையும் சேர்த்து உடலின் சம்மந்தத்தின் தியாகம் என்று கூறுகிறீர்கள். உடலின் உணர்வின் தியாகம். எனவே தியாகம் செய்யப்பட்ட பழைய வீட்டில் மீண்டும் வந்து விடுவதில்லையே? என்ன உறுதிமொழி எடுத்திருக்கிறீர்கள். உடலும் உன்னுடையது என்று கூறினீர்களா? அல்லது மனம் மட்டும் உன்னுடையது என்று கூறினீர்களா? முதல் வார்த்தை 'உடல்' வருகிறது. எப்படி உடல், மனம், பொருள் என்று கூறுகிறீர்கள். உடல் மற்றும் உடலின் சம்மந்தம் என்று கூறுகிறீர்கள். அப்படி முதல் தியாகமாக என்ன ஆனது. இந்த பழைய உடலின் உணர்விலிருந்து நினைவு மறந்த நிலை அதாவது விடுபட்ட நிலை. இது தியாகத்தின் முதல் அடி ஆகும். எப்படி வீட்டில் வீட்டின் பொருட்கள் இருக்கும், அதே போல் இந்த உடல் என்ற வீட்டில் கர்ம இந்திரியங்கள் தான் வீட்டுச் சாமான்கள் ஆகும். அப்படி வீட்டின் தியாகம் என்றால், அனைத்தின் தியாகம். வீட்டை விட்டு விட்டீர்கள், ஆனால் ஏதாவது ஒரு பொருள் மேல் பற்றுதல் இருந்து விடுகிறது என்றால் அதை தியாகம் என்று கூறுவோமா? அதே போல் ஏதாவது ஒரு கர்ம இந்திரியம் ஒருவேளை தன் பக்கம் கவர்ந்திழுக்கிறது என்றால் அதை சம்பூர்ண தியாகம் என்று கூறுவோமா? இந்த விதமாக தன்னை சோதனை செய்யுங்கள். அனைத்தையும் விட்டு விட்டேன். மற்றபடி ஒரு கர்ம இந்திரியம் சஞ்சலப்படுகிறது. அதுவும் அந்த நேரத்தில் சரியாகி விடும் என்று அந்த மாதிரி அலட்சியமானவராக ஆகாதீர்கள் ஆனால் ஏதாவது ஒரு கர்ம இந்திரியத்தின் கவர்ச்சி கூட ஒரு தந்தையின் குழந்தையாக ஆக விடாது. ஒரே சீரான நிலையில் நிலைத்திருக்க விடாது. நம்பர் ஒன்னில் செல்ல விடாது. ஒருவேளை யாராவது வைரம், வைடூரியம், மாட மாளிகைகளை விட்டு விட்டார், ஆனால் ஏதோ ஒரு உடைந்த மண் பானை மேல் பற்றுதல் இருந்து விடுகிறது என்றால் என்னவாகும்? எப்படி வைரம் தன் பக்கம் கவர்ந்திழுக்கிறது, அதே போல் வைரத்தையும் விட அதிகமாக அந்த உடைந்த மண் பானை அவரை தன் பக்கம் அடிக்கடி கவர்ந்திழுக்கும். விரும்பாவிட்டாலும் கூட புத்தி அடிக்கடி அங்கே அலைந்து கொண்டே இருக்கும். அதே போல் ஒருவேளை ஏதாவது கர்ம இந்திரியத்தின் ஈர்ப்பு இருந்து விட்டது என்றால் உயர்ந்த பதவி

அடைவதிலிருந்து அடிக்கடி கீழே கொண்டு வரும். எனவே பழைய வீடு மற்றும் பழைய பொருட்கள், சாமான்கள் அனைத்தின் தியாகம் வேண்டும். இது ஒன்றும் அதிகம் இல்லை, கொஞ்சம் தான் இருக்கிறது என்று அப்படி நினைக்காதீர்கள் ஆனால் இந்தக் கொஞ்சமும் மிக அதிகமானதை இழக்க வைக்கக்கூடியது. எனவே சம்பூர்ண தியாகம் வேண்டும். இந்த பழைய உடலை பாப்தாதா மூலமாக கிடைத்திருக்கும் சொத்து என்று புரிந்து கொள்ளுங்கள். சேவைக்காக காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். இது என்னுடைய உடல் அல்ல, ஆனால் சேவைக்கான சொத்து ஆகும். ஒரு விருந்தாளி ஆகி இந்த உடலில் இருக்கிறீர்கள். கொஞ்ச காலத்திற்காக பாப்தாதா காரியம் செய்வதற்காக உங்களுக்கு இந்த உடலைக் கொடுத்திருக்கிறார். எனவே நீங்கள் என்னவாக ஆகி விட்டீர்கள். விருந்தினர். என்னுடையது என்பதை தியாகம் செய்து மேலும் விருந்தாளி என்று புரிந்து கொண்டு மகான் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். விருந்தினருக்கு என்ன நினைவிருக்கும்? தன்னுடைய உண்மையான வீடு நினைவிருக்குமா அல்லது வந்திருக்கும் வீட்டிலேயே மாட்டிக் கொண்டிருப்பாரா? அப்படி உங்கள் அனைவருக்கும் இந்த உடல் என்ற வீடும் இருக்கிறது. இந்த ஃபரிஷ்தா சொரூபம் இருக்கிறது, பிறகு தேவதை சொரூபம் ஆவீர்கள். அதை நினைவு செய்யுங்கள். எப்படி பாப்தாதா பழைய உடலின் ஆதாரம் எடுக்கிறார் ஆனால் உடலில் மாட்டிக் கொள்வதில்லை. அதே போல் நீங்கள் இந்த பழைய உடலில் நிவாசம் செய்யுங்கள். காரியம் செய்வதற்காக ஆதாரமாக எடுத்தீர்கள், பிறகு தன்னுடைய ஃபரிஷ்தா சொரூபத்தில் நிலைத்து விடுங்கள். தன்னுடைய நிராகார சொரூபத்தில் நிலைத்து விடுங்கள். விலகியிருக்கும் உயர்ந்த நிலையிலிருந்து கீழே ஸ்தூலமான கர்ம இந்திரியங்கள் மூலமாக காரியம் செய்வதற்காக வாருங்கள். இதைத் தான் விருந்தினர் அதாவது மகான் என்று கூறுவது. அந்த மாதிரி இருக்கிறீர்களா? தியாகத்தின் முதல் அடியை எடுத்து வைத்து விட்டீர்களா?

தற்சமயம் யாருமே தன்னை குறைந்தவராக நினைப்பதில்லை என்று பாப்தாதா நகைப்பூட்டும் விஷயத்தை கேள்விப்படுகிறார். ஒருவேளை யாரிடமாவது நீங்கள் இருவரில் ஒருவர் சிறியவராகவும் மற்றொருவர் பெரியவராகவும் ஆகி விடுங்கள் என்று கூறினால் என்ன செய்கிறார்கள். தன்னை குறைந்தவராக நினைப்பார்களா? ஏன், என்ன என்ற ஆயுதத்தை எடுத்து தவறான சக்தி சொரூபத்தைக் காண்பிக்கிறார்கள். இந்த

அலங்காரமும் குறைந்தது அல்ல. எப்படி அனைத்து சக்திகளின் அலங்காரம் இருக்கிறது. அதே போல் மாயா மற்றும் இராவணனின் புஜங்களும் கூட குறைந்தது அல்ல. சக்திகளை புஜங்கள் உள்ளவர்களாகக் காண்பிக்கிறார்கள். எட்டு புஜங்கள், 16 புஜங்கள் உள்ளவர்களாகக் காண்பிக்கிறார்கள் ஆனால் இராவணனின் தலையை அதிகமாக காண்பிக்கிறார்கள். இது ஏன்? ஏனென்றால் இராவணன் மாயாவின் சக்தி முதலில் புத்தியைத் தான் குழப்பத்தில் கொண்டு வருகிறது. எந்த நேரம் ஏதாவது மாயா வருகிறது என்றால், ஒரு நொடியில் அதற்கு எத்தனை ரூபங்கள் தோன்றுகின்றன? ஏன், என்ன, அப்படி, இப்படி, எப்படி என்று எத்தனை கேள்விகள் என்ற தலைகள் உருவாகி விடுகின்றன. ஒன்றை வெட்டினோம் என்றால், இன்னொன்று உருவாகி விடுகிறது. ஒரே நேரத்தில் பத்து விஷயங்கள் புத்தியில் உடனடியாக வந்து விடும். அப்படி ஒரு விஷயத்திற்குப் பத்து தலைகள் வந்து விட்டன இல்லையா? இந்த விஷயங்களின் அனுபவமோ இருக்கிறது தான் இல்லையா.? பிறகு ஒவ்வொரு தலையும் தன்னுடைய ரூபத்தைக் காண்பிக்கிறது. இவ்வாறு பத்து தலைகளின் ஆயுதம் தரித்தவராக ஆகி விடுகிறார்கள்.

சக்தி என்றால் சகயோகி. அபிமானத்தின் தலை உள்ள சக்தி அல்ல ஆனால் எப்பொழுதும் அனைத்து புஜங்கள் உள்ளவர் அதாவது அனைத்து சூழ்நிலைகளிலும் சகயோகி. இராவணனின் பத்து தலை உள்ள ஆத்மாக்கள் ஒரு சின்னஞ் சிறு சூழ்நிலையில் கூட ஒருபொழுதும் சகயோகியாக ஆக மாட்டார். ஏன், என்ன, எப்படி என்ற தலை மூலமாக தன்னுடைய தவறான அபிமானத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார். 'ஏன்' என்ற கேள்விக்கு தீர்வு கண்டீர்கள் என்றால் பிறகு 'எப்படி' என்ற தலை நிமிர்ந்து நிற்கும். அதாவது ஒரு விஷயத்தை தீர்வு செய்வீர்கள் என்றால், பிறகு இன்னொரு விஷயம் தொடங்கி விடும். அந்த இன்னொரு விஷயத்தை சரி செய்தீர்கள் என்றால் மூன்றாவது தலை உருவாகி விடும். அடிக்கடி இந்த விஷயமோ சரி தான் என்று கூறுவார்கள் ஆனால் இது ஏன்? அது ஏன்? என்ற இதைத் தான் ஒரு விஷயத்திற்கு பத்து தலைகள் கொடுக்கும் சக்தி என்று கூறுவது. இந்த மாதிரியானவர்கள் சகயோகியாக ஒருபொழுதும் ஆக மாட்டார்கள், எப்பொழுதும் ஒவ்வொரு விஷயத்தில் எதிர்ப்பு தெரிவிப்பார்கள். அப்படி எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இராவணனின் சம்பிரதாயத்தைச்

சேர்ந்தவர்களாக ஆகி விட்டார்கள் இல்லையா. பிராமணன் ஆகி விட்டார் என்றாலும், அந்த நேரத்தில் அசுர சக்தியின் பிரபாவம் இருக்கிறது, வசமானவர்கள் ஆகி விடுகிறார்கள். மேலும் சக்தி சொரூபமானவர்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒவ்வொரு காரியத்திலும் எப்பொழுதும் சகயோகியாக இருப்பார்கள். சகயோகத்தின் அடையாளம் புஜங்கள், எனவே எப்பொழுதாவது ஏதாவது குழுவாக இருந்து காரியம் நடக்கிறது என்றால் என்ன வார்த்தை கூறுகிறீர்கள்? அவரவர்களின் விரலைக் கொடுங்கள் என்று கூறுகிறீர்கள். அப்படி இது சகயோகம் கொடுப்பதாக ஆகிறது இல்லையா? விரலும் கையில் தான் இருக்கிறது இல்லையா? ஆக, புஜங்கள் சகயோகத்தின் அடையாளம் தான். அப்படி சக்தியின் புஜங்கள் மற்றும் இராவணனின் தலையைப் புரிந்து கொண்டீர்களா? எனவே நான் எப்பொழுதும் சகயோகியாக ஆகியிருக்கிறேனா என்று தன்னைப் பாருங்கள். தியாகம் நிறைந்தவராக ஆவதற்கு முன்பு முதல் அடியாக தந்தையைப் பின்பற்றி அடி எடுத்து வைப்பதை செய்தீர்களா? பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள், கேட்டீர்கள் - எண்ணத்தில், வாயில் எப்பொழுதும் என்ன இருந்தது? அவர் தந்தையின் ரதம். உங்களுடைய ரதம் யாருடையது? பிரம்மாபாபா மட்டும் ரதத்தைக் கொடுத்தாரா? அல்லது நீங்கள் அனைவரும் ரதத்தைக் கொடுத்தீர்களா? பிரம்மாபாபாவின் உடலில் பிரவேசம் செய்வதின் பங்கு வேறு ஆகும் ஆனால் நீங்கள் அனைவரும் கூட உடல் உன்னுடையது என்று கூறினீர்களேயன்றி, உடல் என்னுடையது என்று கூறவில்லை. எப்படி நடத்துவிப்பீர்களோ, எங்கே அமர வைப்பீர்களோ . . . என்று உங்கள் அனைவரின் உறுதிமொழி இருக்கிறது தான் இல்லையா? அல்லது நான் கண்களை நடத்துவிப்பேன், மற்றதை தந்தை நடத்துவிக்கட்டும் என்று அப்படியிருக்கிறதா? சிறிது மனம் சொல்லும் வழியில் நடப்பேன், சிறிது ஸ்ரீமத்படி நடப்பேன் என்று அந்த மாதிரியான உறுதிமொழியோ இல்லை தான் இல்லையா? அப்படி ஏதாவது கர்ம இந்திரியத்தின் வசம் ஆவது ஸ்ரீமத்தா? அல்லது மனம் சொல்லும் வழியா? தியாகத்தின் சூத்திரம் எவ்வளவு நுணுக்கமானது என்று புரிந்து கொண்டீர்களா? எனவே வரிசை எண் உருவாகி விட்டது. இப்பொழுதோ உடலின் தியாகத்தின் விஷயத்தை மட்டும் கூறினோம். இன்னும் வரும் நாட்களில் மிக அதிகம் இருக்கின்றன. இப்பொழுதோ தியாகத்தின் படிகளும் அதிகம் இருக்கின்றன. முதல் படியின் விஷயத்தை இப்பொழுது கூறிக் கொண்டிருக்கிறோம். தியாகம் கடினமானதாகவோ இல்லையோ?

அனைத்தையும் விட வேண்டியதாக இருக்கும். ஒருவேளை பழையதிற்குப் பதிலாக புதியது கிடைத்து விட்டது என்றால், கடினமா என்ன? இந்த நேரம் கிடைக்கிறது, எதிர்காலத்தில் கிடைப்பதோ ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் இப்பொழுது பழைய உணர்வை விடுங்கள், ஃபரிஷ்தா சொரூபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுது பழைய உலகத்தின் உடல் உணர்வை விட்டு விடுகிறீர்கள் என்றா,ல் என்ன ஆகி விடுகிறீர்கள்? டபுள் லைட். இப்பொழுதே ஆகிறீர்கள் ஆனால் ஒருவேளை இங்கேயும் இல்லாமல், அங்கேயும் இல்லாமல் இருக்கிறீர்கள் என்றால் கடினமாக அனுபவம் ஆகிறது. முழுமையாக விடுவதுமில்லை, முழுமையாக எடுத்துக் கொள்வதுமில்லை என்றால் பாதி இறந்தவர் ஆகி விடுகிறீர்கள். எனவே அடிக்கடி பெருமூச்சு விடுகிறீர்கள். ஏதாவது ஒரு விஷயம் கடினமாக இருக்கிறது என்றால், பெருமூச்சு விடுவார்கள். இறப்பதிலோ மகிழ்ச்சி இருக்கிறது ஆனால் முழுமையாக இறக்க வேண்டும். பெறுவதிலோ முழுமையாகப் பெறுவோம் என்று கூறுகிறீர்கள். மேலும் விடுவதில் மண் பானையைக் கூட விடுவதில்லை. எனவே கடினமாகி விடுகிறது. பொதுவாக ஒருவேளை யாராவது மண் பானையை வைத்துக் கொள்கிறார் என்றாலும் பாப்தாதா வைத்துக் கொள் என்று தான் கூறுவார். பாப்தாதாவிற்கு என்ன கவலை இருக்கிறது? ஆனால் நீங்களே தொந்தரவிற்கு உள்ளாகிறீர்கள். எனவே விடுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். ஒருவேளை ஏதாவது பழைய பொருட்களை வைக்கிறீர்கள் என்றால் ரிசல்ட் என்னவாக இருக்கும். அடிக்கடி புத்தியும் அதன் மேலேயே அலைந்து கொண்டிருக்கும். ஃபரிஷ்தாவாக ஆக முடிவதில்லை? எனவே பாப்தாதாவோ இன்னும் ஆயிரம் மண் பானைகள் கொடுக்க முடியும். எவ்வளவு ஒன்றாகச் சேர்க்க முடியுமோ சேர்த்துக் கொள்ளுங்கள் ஆனால் எங்கு குப்பை இருக்குமோ அங்கு என்ன உருவாகும்? கொசு. மேலும் கொசு யாரைக் கடிக்கும்? எனவே பாப்தாதா குழந்தைகளின் நன்மைக்காகத் தான் பழையதை விட்டு விடுங்கள் என்று கூறுகிறார். அரைகுறையாக இறப்பவராக ஆகாதீர்கள். இறப்பது என்றால் முழுமையாக இறங்கள், இல்லை என்றால் நன்றாக உயிரோடு இருங்கள். கடினம் எதுவும் இல்லை ஆனால் நீங்கள் கடினமாக்கி விடுகிறீர்கள். சில நேரம் கடினம் ஆகி விடுகிறது. எப்பொழுது இராவணனின் தலை முளைத்து விடுகிறதோ அப்பொழுது கடினம் ஆகி விடுகிறது. எப்பொழுது புஜங்கள் உள்ள சக்தி ஆகி விடுகிறீர்கள் என்றால் சுலபமாகி விடுகிறது. ஒரு அடியின் சகயோகம் மட்டும் கொடுக்க வேண்டும், மேலும் பல மடங்கு

அடிகளின் சகயோகம் கிடைப்பது ஆகி விடுகிறது ஆனால் முதலில் ஒரு அடி என்ன எடுத்து வைக்க வேண்டியது இருக்கிறதோ அதில் பயந்து விடுகிறீர்கள். கிடைப்பதை மறந்து விடுகிறீர்கள், கொடுப்பது நினைவு வந்து விடுகிறது. எனவே கடினம் அனுபவம் ஆகிறது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சகயோகியாக இருக்கும், எப்பொழுதும் தியாகம் மூலமாக சிரேஷ்ட பாக்கியத்தை அனுபவம் செய்யும், ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின்பற்றி நடக்கும், எப்பொழுதும் தன்னை விருந்தினர் அதாவது மகான் ஆத்மா என்று புரிந்து கொள்ளும், அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட சன்னியாசம் செய்யும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: 1. உண்மையான பிராமணர்களின் நீளமான அதிர்ஷ்ட ரேகை -21 ஜென்மங்களுக்காக!** நீங்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள், சுயம் பகவானுடன் பிக்னிக் செய்து கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி எப்பொழுதாவது நினைத்திருந்தீர்களா, பகவானுடன் மனித உடல் ரூபத்தில் சாப்பிடுவோம், விளையாடுவோம். சிரித்து பேசிக் கொள்வோம் என்று அந்த நாளும் வரும் என்று கனவில் கூட வர முடியாது, ஆனால் உங்களுக்கு அந்த அளவு சிரேஷ்ட பாக்கியம் இருக்கிறது ஆனால் அதை நடைமுறையில் ஸ்தூலமாக அனுபவம் செய்கிறீர்கள். நீங்கள் அனைத்து பிராப்தி சம்பன்னமாக இருக்கிறீர்கள். உங்களுடைய அதிர்ஷ்ட ரேகை உயர்ந்தது. 21 ஜென்மங்கள் உத்திரவாதம் மேலும் அதற்குப் பிறகும் இந்தளவு துக்கம் இருக்காது. முழுக்கல்பத்திலும் முக்கால் வாசி சுகமே தான் கிடைக்கும். இந்தக் கடைசி ஜென்மத்திலும் மிக அதிக துக்கமானவர்கள் பட்டியலில் நீங்கள் இல்லை. அப்படி யானால் நீங்கள் எவ்வளவு உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். இந்த உயர்ந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்.

**2. அன்புக்கடலிடமிருந்து அன்பைப் பெறுவதற்கான விதி- விலகியிருப்பவராக ஆகுங்கள்!** சில குழந்தைகளிடமிருந்து, நாங்கள் பாபாவின் நினைவிலோ இருக்கிறோம் ஆனால் அன்பு (பாபாவிடமிருந்து) கிடைப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. ஒருவேளை அன்பு கிடைக்கவில்லை என்றால், அவசியம் அன்பை வெறும் விதியில்

குறை இருக்கிறது. தந்தை அன்புக்கடல் அவரோடு யோகா செய்யவர்கள் அவருடைய அன்பிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுவார்கள் என்பது இருக்கவே முடியாது ஆனால் அன்பைப் பெறுவதற்கான வழி விலகியிருப்பவராக ஆகுங்கள். எதுவரை உடலிலிருந்து மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உறவினர்களிட மிருந்து விலகியிருப்பவராக ஆகவில்லையோ அதுவரை அன்பு கிடைப்ப தில்லை. எனவே எங்கேயும் பற்றுதல் இருக்கக் கூடாது. பற்றுதல் இருக்கிறது என்றால், அனைத்து உறவிற்குரிய தந்தை மேல் இருக்கட்டும். ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை... இதை வாயளவில் மட்டுமல்லாமல் அனுபவம் செய்ய வேண்டும். சாப்பிடுங்கள், காரியங்கள் செய்யுங்கள் ஆனால் விலகியிருப்பவராகி, தந்தையின் அன்பிற்குரியவர்கள் ஆகுங்கள். மனிதர்களின் மேல் பற்று வைத்ததினால் துக்கம், அமைதியின்மைதான் கிடைத்தது. எப்பொழுது அனைத்தையும் கேட்டு சுவைத்துப் பார்த்து விட்டோம் என்றால், அந்த விஷத்தை எப்படி இன்னொரு முறை சாப்பிட முடியும். எனவே எப்பொழுதும் விலகியிருப்பவராகி, தந்தையின் அன்பிற்குரியவர்கள் ஆகுங்கள்.

**3. கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான விதி -நான், என்னுடையது என்பதற்கு முடிவு கட்டுங்கள்!** அனைத்துக் குழந்தைகளையும் கடின உழைப்பிலிருந்து விடுவிப்பதற்காக தந்தை வந்திருக்கிறார். அரைக் கல்பம் மிகக் கடுமையாக உழைத்திருக்கிறீர்கள், இப்பொழுது கடின உழைப்பு முடிவடைந்தது. அதற்கான சகஜவிதியாக என்னுடைய பாபா என்ற ஒரு வார்த்தையை மட்டும் நினைவு செய்யுங்கள். என்னுடைய பாபா என்று கூறுவதில் எந்த கடின உழைப்பும் இல்லை. என்னுடைய பாபா என்று கூறினீர்கள் என்றால் துக்கம் கொடுக்கக் கூடிய என்னுடையது, என்னுடையது என்ற அனைத்தும் முடிவடைந்து விடும். எப்பொழுது அனேக என்னுடையது என்பது இருக்குமோ அப்பொழுது கடினம் இருக்கும். ஒரு என்னுடையது என்பது ஆகி விட்டது என்றால் அனைத்தும் சுலபமாகி விடும். பாபா பாபா என்று கூறிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் கூட சத்யுகத்தில் வந்து விடுவீர்கள். என்னுடைய பேரன், என்னுடைய கொள்ளுப் பேரன், என்னுடைய வீடு, என்னுடைய மருமகள்.... அப்படி என்னுடைய என்ற நீளமான பட்டியல் இருக்கிறது இல்லையா அதற்கு முடிவு கட்டுங்கள். அனேகர்களை மறந்து ஒரு தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால், கடின உழைப்பிலிருந்து

விடுபட்டு, மிகவும் சௌகரியமாக குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள். எப்பொழுதும் தந்தையின் நினைவு என்ற சௌகரியத்தில் இருங்கள். நல்லது.

**இரட்டை வெளிநாட்டினருடன் சந்திப்பு:** இது நல்ல குரூப் மேலும் இரட்டை வெளி நாட்டினரை பார்த்து பாப்தாதாவிற்கு தன்னுடைய ஒரு பெயர் ஞாபகம் வருகிறது என்ன பெயர்? விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்) நீங்கள் குழந்தையாக ஆகாமல் இருந்த பொழுது பாப்தாதா பாரதத்திற்கு நன்மை செய்பவராக இருந்தார். எப்பொழுதிலிருந்து நீங்கள் வந்து விட்டீர்களோ பிறகு பாப்தாதா உலகிற்கு நன்மை செய்பவராகி விட்டார். அப்படியானால் அதிசயம் யாருடையது உங்களுடைய அதிசயம் தான் இல்லையா? மேலும் நன்றாக உழைக்கவும் செய்கிறீர்கள். ஸ்தூலமாக உங்களுடைய முதுகெலும்பாக யார் இருக்கிறாரோ அவர் மிகவும் புத்திசாலி. ஓய்வாக உட்கார விடமாட்டார் எந்த மூலையும் பாபா வந்த செய்தி தெரியாமல் விடுபட்டு விடக் கூடாது என்ற ஆர்வம் மிக நன்றாக இருக்கிறது. சேவையில் தடை மட்டும் இல்லாத நிலை, இது தான் சேவையின் வெற்றி. எந்த சேவை தொடங்கினாலும் பாரதத்திலும் அல்லது வெளிநாட்டிலும் முதலில் சேவையில் உடன் இருப்பவர்களில், சேவையில், வாயு மண்டலத் தில் ஒரு வழி நடப்பது, ஒரு பலம், ஒருவர் மேல் நம்பிக்கை மற்றும் ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதைத்தான் பாப்தாதா கூறுகிறார். எப்படி தேங்காய் உடைத்து திறப்பு விழா செய்கிறீர்கள், ரிப்பன் வெட்டி, திறப்பு விழா செய்கிறீர்கள். அப்படி முதலில் மேலே கூறிய நான்கு விசயங்கள் என்ற ரிப்பனை வெட்டுங்கள். பிறகு அனைவரின் திருப்தி, மகிழ்ச்சிகரமான நிலை என்ற தேங்காயை உடையுங்கள். இந்த தேங்காய் தண்ணீரை நிலத்தில் ஊற்றுங்கள் எந்த ஒரு காரியம் என்ற நிலத்தில் முதலில் இந்த தேங்காய் தண்ணீரை ஊற்றுங்கள் பிறகு பாருங்கள் வெற்றி எவ்வளவு கிடைக்கிறது என்று. இல்லையென்றால் அவசியம் ஏதாவது தடை வரும். அனைவரும் சேவை செய்கிறீர்கள் ஆனால் யார் தடையற்ற சேவாதாரியோ அவருடைய எண் தான் பாப்தாதாவின் பதிவேட்டில் குறிக்கப்படும். பாப்தாதாவிடம் அந்த மாதிரி சேவாதாரிகளின் பட்டியல் இருக்கிறது ஆனால் இப்பொழுது மிகக் குறைவானவர்கள் தான், நீளமான பட்டியல் இல்லை. சொற்பொழிவு நிகழ்த்துபவர்களின் நீளமான பட்டியலும் உங்களிடம் இருக்கிறது.

அவர்களை பாப்தாதா பாஷன் (சொற்பொழிவு) செய்பவர்கள் என்று கூறுகிறார். முதலில் தன்னுடைய சிறப்புகளை வெளிப்படுத்தட்டும், பிறகு சொற்பொழிவு நிகழ்த்தட்டும் என்று பாப்தாதா கூறுகிறார். சொற்பொழிவையோ இன்றைய பள்ளி மாணவ, மாணவிகள் கூட மிக நன்றாகச் செய்கிறார்கள், கை தட்டிக் கொண்டே இருக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவிடம் இருக்கும் பட்டியலில் யார் தடையற்றவர்களோ, அனைவரையும் மகிழ்விக்கும் மற்றும் திருப்திபடுத்துபவரோ அவருடைய பெயர் தான் இருக்கிறது. எனவே மாலையில் வருபவர்களில் கை உயர்த்தவில்லை. வெளிநாட்டினருக்கு சேவையில் அவர்களுக்குள் தடை வருவதில்லை, ஆனால் மனதில் கொஞ்சம், கொஞ்சம் தடை வருகிறது மற்றபடி பெரும்பான்மையோர் சரியாக இருக்கிறார்கள். மனதின் எண்ணம், மனதின் நிலை ஆடாத, அசையாததாக இருக்கிறது. இரட்டை வெளிநாட்டினர் நன்றாக சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கூறியதைக் கேட்டீர்களா? வளர்ச்சி செய்ததற்காக பாராட்டுக்கள்! நல்லது.

**வரதானம்: தந்தையின் நெருக்கத்தின் அனுபவம் மூலமாக கனவில் கூட வெற்றி அடைபவராக ஆகும் சமமான துணைவன் ஆகுக!**

பக்தி மார்க்கத்தில் நெருக்கத்தில் இருப்பதற்காக சத்சங்கத்தின் மகத்துவத்தை கூறுகிறார்கள். யார் சமமாக இருக்கிறாரோ அவர் தான் அருகில் இருக்க முடியும். யார் எண்ணத்தில் கூட எப்பொழுதும் உடன் இருக்கிறாரோ அவர் அந்த அளவு வெற்றி அடைபவராக இருப்பார். அவரை எண்ணத்தில் கூட இல்லை, ஆனால் கனவு அளவில் கூட மாயா தாக்க முடியாது. எப்பொழுதும் மாயாவை வென்றவர் என்றால், எப்பொழுதும் தந்தையின் அருகாமையில் இருப்பவர். அவரை தந்தையின் நெருக்கத்திலிருந்து எந்த சக்தியும் பிரிக்க .

**சுலோகன்: எப்பொழுதும் தடையற்றவராக இருப்பது மேலும் அனைவரையும் தடையற்றவராக ஆக்குவது என்பது தான் யதார்த்த சேவை!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 06.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தாசன் மற்றும் அதிகாரி ஆத்மாக்களின் லட்சணம்!

இன்று பாப்தாதா இராஜரிஷிகளின் தர்பாரை பார்த்துக் கொண்டிருக்கிறார். இராஜா என்றால் அதிகாரி மற்றும் ரிஷி என்றால் அனைத்தையும் தியாகம் செய்தவர். தியாகி மற்றும் தபஸ்வி. எனவே பாப்தாதா அனைத்து பிராமண குழந்தைகளை அதிகாரி ஆத்மா மற்றும் கூடவே மகாதியாகி ஆத்மா, இந்த இரண்டையும் வாழ்க்கையில் பிரத்யக்ஷ சொரூபத்தில் எந்த அளவு கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தனர். அதிகாரி மற்றும் தியாகி இரண்டிலும் சமநிலை இருக்க வேண்டும். அதிகாரியும் முழுமையாக இருக்க வேண்டும், மேலும் தியாகியும் முழுமையாக இருக்க வேண்டும். இரண்டும் சேர்ந்தே இருக்க முடியுமா? இதைத் தெரிந்திருக்கிறீர்களா? நீங்கள் அனுபவிகளாகவும் இருக்கிறீர்கள். தியாகம் இன்றி இராஜ்யத்தை நீங்கள் அடைய முடியுமா? சுயத்தின் அதிகாரம் அதாவது சுயராஜ்யத்தை அடைய முடியுமா? தியாகம் செய்தீர்கள் அதனால் தான் சுயராஜ்ய அதிகாரி ஆகியிருக்கிறீர்கள். இதுவோ அனுபவம் இருக்கிறது தான் இல்லையா. தியாகத்தின் சூத்திரத்தை முன்பும் கூறியிருக்கிறோம்.

தியாகத்தின் முதல் அடி தேக உணர்வின் தியாகம். எப்பொழுது தேக உணர்வின் தியாகம் ஆகி விடுகிறது என்றால், அடுத்து தேகத்தின் அனைத்து உறவுகளின் தியாகம். எப்பொழுது தேக உணர்வு விடுபட்டு விடுகிறது என்றால், என்னவாகி விடுகிறீர்கள்? ஆத்மா, உடலற்றவர் மற்றும் எஜமானன். தேகத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்டு அதாவது ஜீவன்முக்த் இராஜ்ய அதிகாரி. எப்பொழுது இராஜ்ய அதிகாரி ஆகி விட்டீர்களோ அப்போது அனைத்து விதமான அடிமைத்தனமும் முடிவடைந்து விடுகிறது. ஏனென்றால், தேகத்தின் தாசனிலிருந்து (வேலையாள்) தேகத்தின் எஜமானன் ஆகி விட்டீர்கள். அடிமைத்தனம் விடுபட்டு விட்டது. தாசன் மற்றும் அதிகாரி இரண்டு நிலை களும்

சேர்ந்தே இருக்க முடியாது. அடிமைத்தனத்தின் அடையாளம் மனதால், முகத்தினால் சோர்வாக இருப்பது. சோர்வடைவது அடிமைத்தனத்தின் அடையாளம் மற்றும் அதிகாரி என்றால், சுயராஜ்ய அதிகாரியின் அடையாளம். அதாவது மனம் மற்றும் உடலால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பது. தாசன் எப்பொழுதும் நிலை குலைந்து இருப்பார். இராஜ்ய அதிகாரி எப்பொழுதும் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பார். தாசன் சின்னஞ்சிறு விஷயத்தில் மற்றும் ஒரு நொடியில் குழப்பம் அடைந்து விடுவார். மேலும் அதிகாரி எப்பொழுதும் தன்னை சௌகரியமாக இருப்பதாக அனுபவம் செய்வார். இந்த அடையாளங்களினால் நான் யார் என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். நான் தாசனா அல்லது அதிகாரியா? எந்தவொரு சூழ்நிலையும், எந்தவொரு நபரும், எந்தவொரு சாதனமும், வாயுமண்டலமும் மரியாதையை மீறி அதாவது ஞானத்திலிருந்து விலகி தொந்தரவு செய்வதில்லையே! அப்படி தாசன் என்றால் தொந்தரவு அடைபவர் மற்றும் அதிகாரி என்றால் எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவான், விக்ன விநாஷக் நிலையின் மதிப்பு, மரியாதையில் நிலைத்திருப்பார். சூழ்நிலை, நபர் மற்றும் சாதனங்கள் மரியாதையாக இருந்து மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். தாசன் ஆத்மா எப்பொழுதும் தன்னை பரீட்சையின் அறையில் இருப்பதாக அனுபவம் செய்வார். அதிகாரி ஆத்மா படகோட்டி ஆகி, படகை மிகவும் மகிழ்ச்சியோடு சோதனையின் அலைகளோடு விளையாடிக் கொண்டே கடந்து செல்வார்.

தாச ஆத்மாக்களின் கர்ம லீலைகளைப் பார்த்து பாப்தாதா இரக்கத்தின் கூடவே புன்சிரிப்பு செய்து கொண்டும் இருக்கிறார். இந்த உலகத்தில் கூட சிரிப்பூட்டும் ஒரு கதையை கூறுகிறார்கள் இல்லையா? தாச ஆத்மாக்கள் என்ன செய்வார்கள். கதை நினைவிருக்கிறதா? கூறியிருந்தோம் இல்லையா? எலி வருகிறது, எலியை விரட்டியாயிற்று என்றால், பூனை வந்து விடுகிறது, பூனையை விரட்டிய பின் நாய் வந்து விடுகிறது. ஒன்றை அகற்றினால் இன்னொன்று வந்து விடுகிறது, இன்னொன்றை அகற்றினால் மூன்றாவது வந்து விடுகிறது. இதே கர்ம லீலையில் பிஸியாக இருக்கிறார்கள். ஏனென்றால் தாச ஆத்மாக்கள் இல்லையா? சில நேரம் கண் என்ற எலி ஏமாற்றி விடுகிறது, சில நேரம் காது என்ற பூனை ஏமாற்றி விடுகிறது. சில நேரம் தீய சம்ஸ்காரம் என்ற சிங்கம் தாக்கி விடுகிறது. மேலும் பாவம் அந்த தாச ஆத்மா அவர்களை அகற்றி

அகற்றி உதாஸ் அதாவது சோர்வடைந்து விடுகிறார். எனவே பாப்தாதாவிற்கு இரக்கமும் வருகிறது. கூடவே புன்சிரிப்பும் வருகிறது. ஆசனத்தை ஏன் விடவே செய்கிறீர்கள். தானாக வழுக்கி விடுகிறதா என்ன? நினைவு என்ற காந்தத்தினால் தன்னை அந்த ஆசனத்தில் உறுதியாக அமர வைத்து விட்டீர்கள் என்றால் வழுக்காது. வேறு என்ன செய்கிறார்கள்? பாப்தாதாவின் எதிரில் வேண்டுதல்களின் நீள அகல கோப்புகளை வைத்து விடுகிறார்கள். சிலர் ஒரு மாதமாக பிரச்சனையில் இருக்கிறேன் என்று வேண்டுதல் போடுகிறார்கள், சிலர் மூன்று மாதங்களாக மேலே கீழே போய் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார்கள். சிலர் ஆறு மாதங்களாக யோசித்துக் கொண்டிருந்தேன் ஆனால் அப்படியே இருக்கிறேன், எவ்வித மாற்றமும் இல்லை. இத்தனை வேண்டுதல்கள் ஒன்றாகச் சேர்த்து கோப்பு ஆகி விடுகிறது ஆனால் எவ்வளவு பெரிய கோப்போ அந்த அளவு அபராதம் கொடுக்க வேண்டியதாக இருக்கும் என்று யோசித்துக் கொள்ளுங்கள். எனவே வேண்டுதல்களை அகற்றுவதற்கான சுலபமான சாதனம் எப்பொழுதும் தந்தையின் விருப்பத்தின்படி நடந்து கொள்ளுங்கள். 'என்னுடைய விருப்பம் இது' என்றால், அது உங்களது மனவிருப்பம் ஆகும். அது வேண்டுதல்களின் கோப்பை உருவாக்கி விடுகிறது. எது தந்தையின் விருப்பமோ அது என்னுடைய விருப்பம். தந்தையின் விருப்பம் என்ன? ஒவ்வொரு ஆத்மாவும் எப்பொழுதும் சுப சிந்தனை செய்பவராக, அனைவருக்காகவும் எவ்வித மாற்றமும் இல்லை. எப்பொழுதும் சுப சிந்தனையில் இருக்கக்கூடிய தனக்கு நன்மை செய்பவர் மற்றும் உலகிற்கு நன்மை செய்பவர் ஆக வேண்டும். இந்த விருப்பத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே எந்த கடினமும் இன்றி நடந்து கொண்டே இருங்கள். எப்படி கண்ணை மூடிக் கொண்டு போய் கொண்டே இருங்கள் என்று கூறப்படுகிறது இல்லையா? அந்த மாதிரி இல்லையே? இந்த மாதிரி ஆகாதே என்ற இந்தக் கண்ணை திறக்காதீர்கள். இந்த வீணான சிந்தனையின் கண்ணை மூடி தந்தையின் விருப்பம் அதாவது தந்தையின் அடிக்கு பின்னால் அடி வைத்து சென்று கொண்டே இருங்கள். பாதத்திற்கு மேல் பாதம் வைத்து செல்வது கடினமாக இருக்குமா அல்லது சுலபமாக இருக்குமா? எனவே அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றி நடங்கள். சகோதரியைப் பின்பற்றுவது, சகோதரனைப் பின்பற்றுவது என்ற இந்த புதிய காலடியை எடுத்து வைக்காதீர்கள். இதன் காரணமாக அடைய வேண்டிய

இலக்கிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர் ஆகி விடுவீர்கள். மரியாதை கொடுங்கள், ஆனால் பின்பற்றி நடக்காதீர்கள். விசேஷம் மற்றும் குணத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் ஆனால் உங்களுடைய காலடி தந்தையின் காலடி மேல் இருக்க வேண்டும். தேவையான நேரத்தில் தனக்கு சுயநலமான விஷயங்களை எடுக்காதீர்கள். சுயநலமான விஷயங்களும் மிக மன மகிழச்சிக்குரியதாக இருக்கும். அந்த வாக்கியங்களைப் பின்பு கூறுவோம், ஏனென்றால் பாப்தாதாவிடமோ அனைத்து சேவை நிலையங்களின் செய்தி வருகிறது. முழு உலகத்தின் செய்தி வருகிறது. எனவே தாச ஆத்மாவாக ஆகாதீர்கள். இது மிகச் சிறிய கர்மேந்திரியங்கள். கண், காது எவ்வளவு சிறியவை ஆனால் இவைகள் எவ்வளவு பெரிய வலையை விரித்து விடுகின்றன. எப்படி சின்ன சிலந்தியை பார்த்திருக்கிறீர்கள் இல்லையா. அது எவ்வளவு சிறியதாக இருக்கிறது ஆனால் அதனுடைய வலை எவ்வளவு பெரியதாக இருக்கிறது. அப்படி ஒவ்வொரு கர்மேந்திரியத்தின் வலையும் அவ்வளவு பெரியது. அந்த மாதிரி வலையில் மாட்ட வைத்து விடும். நான் மாட்டிக் கொண்டிருக்கிறேன் என்பது கூட தெரிய வராது. இது அந்த மாதிரியான மந்திர வலை, அது ஈஸ்வரிய உணர்விலிருந்து, ஈஸ்வரிய மரியாதைகளிலிருந்து மூர்ச்சையானவர் ஆக்கி விடுகிறது. வலையிலிருந்து விடுபட்ட ஆத்மாக்கள் எவ்வளவு தான் அந்த தாச ஆத்மாக்களுக்கு உணர வைத்தாலும், மூர்ச்சையானவருக்கு என்ன உணர்வு ஏற்படும். ஸ்தூல ரூபத்தில் கூட மூர்ச்சையானவரை எவ்வளவு தான் அசைத்தாலும், எவ்வளவு தான் புரிய வைத்தாலும் பெரிய பெரிய மைக்கை காதுகளில் வைத்தாலும். அவரால் கேட்க முடியுமா? அதே மாதிரி இந்த வலையும் உணர்விழக்க வைத்து விடுகிறது. பிறகு என்ன கூறுகிறார்கள். உணர்விழந்த நிலையில் சிலர் அதிகமாக பேசவும் செய்கிறார்கள் ஆனால் அந்த பேச்சு அர்த்தமற்றதாக இருக்கும். அந்த மாதிரி ஆன்மீக உணர்விழந்த நிலையில் தன்னை தெளிவுப்படுத்துவதற்காக பல விஷயங்கள் கூறுவார்கள் ஆனால் அவை அர்த்தமற்றதாக இருக்கும். இரண்டு மாதத்தின், ஆறு மாதத்தின் பழைய விஷயம். இங்கே உள்ள அங்கே உள்ள விஷயத்தைப் பேசிக் கொண்டே இருப்பார்கள். அந்த மாதிரியானது இந்த ஆன்மீக உணர்விழந்த நிலை. விஷயமோ மிகச் சிறியதாக இருக்கும் ஆனால் மூர்ச்சையான நிலையும் மிகப் பெரியதாக இருக்கும். இதிலிருந்து விடுபடுவதற்கும் நீண்ட காலம் ஆகும் என்றால், வலையின் ஒவ்வொரு கம்பியையும் துண்டிப்பதற்கு

முயற்சி செய்கிறார்கள். வலையை எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா? உங்களுடைய கண்காட்சி, படங்களில் இருக்கிறது. வலையை அழித்து விடுங்கள். சிலந்தியும் தன்னுடைய வலையை முழுமையாக தானே சாப்பிட்டு விடும். அந்த மாதிரி விஸ்தாரத்தில் செல்லாமல். விஸ்தாரத்திற்குப் புள்ளி வைத்து புள்ளியில் உள்ளடக்கி விடுங்கள். புள்ளி ஆகி விடுங்கள், புள்ளி இட்டு விடுங்கள், புள்ளியில் நிரம்பி விடுங்கள். அப்பொழுது முழு விஸ்தாரமும், முழு வலையும் ஒரு நொடியில் உள்ளடங்கி விடும். மேலும் நேரம் மிச்சமாகி விடும். கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். புள்ளி ஆகி, புள்ளியின் அன்பில் ஐக்கியமாகி விடுவீர்கள் எனவே வலையில் மாட்டிக் கொண்டு உணர்விழந்த நிலையில் இருப்பது நல்லதா? அல்லது புள்ளி ஆகி புள்ளியின் அன்பில் ஐக்கியமாகியிருப்பது நல்லதா? ஆக, தந்தையின் விருப்பம் என்னவானது? அன்பில் ஐக்கியமாகி விடுங்கள்.

எப்பொழுது மரத்தின் பரிவர்த்தனை கண்டிப்பாக ஆக வேண்டும் என்றிருக்கிறது என்றால், மரத்தின் இறுதியில் என்ன இருந்து விடுகிறது. தொடக்கமும் விதை, முடிவும் விதை தான் இருந்து விடுகிறது. இப்பொழுது இந்த பழைய மரத்தின் பரிவாரத்தனையின் நேரத்தில் மரத்தின் மேலே மாஸ்டர் விதை ரூப நிலையில் நிலைத்து விடுங்கள். 'புள்ளி'. புள்ளி தான் விதை ஆகும். முழு ஞானம், குணங்கள், சக்திகள் அனைத்தின் கடல் புள்ளியில் நிரம்பிவிடுகிறது. இதைத் தான் தந்தைக்குச் சமமான நிலை என்று கூறுவது. தந்தை கடலாக இருந்த போதும் புள்ளியாக இருக்கிறார். அந்த மாதிரி மாஸ்டர் விதை ரூப நிலை எவ்வளவு பிரியமானது. இதே நிலையில் எப்பொழுதும் நிலைத்திருங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

பாருங்கள். இரண்டு மண்டலங்களின் விசேஷமும் இது தான். கர்நாடகம் என்றால் நாடகத்தை முடித்து விட்டார்கள், இப்பொழுது அன்பில் ஐக்கியமாகி விடுங்கள். மேலும் உ.பி-யிலும் நதிகள் அதிகம் இருக்கும். நதிகள் எப்பொழுதும் கடலில் சென்று கலந்து விடும். அப்படி நீங்கள் கடலில் கலந்து விடுங்கள் அதாவது அன்பில் ஐக்கியமாகி விடுங்கள். இருவரிடமும் விசேஷம் இருக்கிறது இல்லையா? எனவே மதிப்புடன் அன்பில் ஐக்கியமான நிலையில் எப்பொழுதும் அமர்ந்திருங்கள். மேலே கீழே செல்லாதீர்கள். வருவது, போவதின் அலைவதை இப்பொழுது

முடித்து விட்டீர்கள் இல்லையா? இப்பொழுதோ சௌகரியமாக மதிப்புடன் அமர்ந்து விடுங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அனைத்து அதிகாரம் நிறைந்த மற்றும் அனைத்தையும் தியாகம் செய்த, எப்பொழுதும் மூர்ச்சை இழந்த நிலையின் வலையிலிருந்து விடுபட்ட, வருவது போவதிலிருந்து விடுபட்ட, மாஸ்டர் விதை ரூப நிலையில் அன்பில் ஐக்கியமாகி இருக்கக்கூடிய, அந்த மாதிரி இராஜரிஷி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** நீங்கள் அனைவரும் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் தான் இல்லையா? எப்பொழுதும் தன்னை சேவைக்கு பொறுப்பான ஆத்மா நான் என்று புரிந்து நடந்து கொள்வீர்களா? பொறுப்பிலிருக்கும் ஆத்மா என்று புரிந்து கொள்வ தினால் எப்பொழுதுமே இரண்டு விசேஷங்கள் வெளிப்படையான ரூபத்தில் தென்படும். 1) எப்பொழுதும் பணிவாக இருப்பதின் மூலம் உருவாக்கும் காரியத்தை செய்து கொண்டே இருப்பார்கள், 2) எப்பொழுதும் திருப்தி என்ற பழத்தை அருந்திக் கொண்டே மற்றவர்களுக்கும் அருந்தக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். அப்படி நான் ஒரு பொறுப்பாளன் (கருவி) என்று நினைப்பதினால் விலகியிருப்பவராகவும், தந்தையின் அன்பிற்குரியவராகவும் அனுபவம் செய்வீர்கள். நான் செய்தேன் என்ற இதையும் ஒருபொழுதும் வர்ணனை செய்ய மாட்டார்கள். நான் என்ற வார்த்தை முடிவடைந்து விடும். 'நான்' என்பதற்குப் பதிலாக பாபா, பாபா என்றிருக்கும். அப்படி பாபா - பாபா என்று கூறுவதினால் அனைவரின் புத்தி தந்தையின் பக்கம் சென்று விடும். யார் பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறாரோ அவர் பக்கம் புத்தி ஈடுபடுவதினால் வரக்கூடிய ஆத்மாக்களுக்கு விசேஷமாக சக்தியின் அனுபவம் ஆகும். ஏனென்றால், சர்வ சக்திவானோடு யோகா (தொடர்பு) ஏற்பட்டு விடும். சக்தி சொரூபத்தின் அனுபவம் செய்வார்கள். இல்லை என்றால், பலஹீனமானவராகவே இருந்து விடுவார்கள். எனவே பொறுப்பாளர் என்று புரிந்து நடந்து கொள்வது தான் சேவாதாரியின் விசேஷம். பாருங்கள், அனைவரையும் விட மிகப் பெரிய சேவாதாரி தந்தை! ஆனால் அவருடைய விசேஷமே இது தான். தன்னை ஒரு கருவி என்று புரிந்து கொண்டார். எஜமானனாக இருந்த போதிலும் கருவி என்று புரிந்து

கொண்டார். கருவி என்று நினைக்கும் காரணத்தினால் அனைவருக்கும் பிரியமானவர் ஆகி விட்டார். எனவே நான் கருவி, விலகியிருப்பவன், அன்பானவன் என்ற இதை எப்பொழுதும் நினைவில் வைத்து நடந்து கொள்ளுங்கள். சேவையோ அனைவரும் செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த லாட்டரியோ கிடைத்து விட்டது ஆனால் இந்த கிடைத்திருக்கும் லாட்டரியை எப்பொழுதும் அதிகரிப்பதா அல்லது அந்த அளவு மட்டும் வைத்துக் கொள்வதா என்பது உங்கள் கையில் இருக்கிறது. தந்தையோ கொடுத்து விட்டார். அதிகரிப்பது உங்களுடைய வேலை. பாக்கியத்தை அனைவருக்கும் ஒரே மாதிரி கொடுத்திருக்கிறார். சிலர் பாதுகாத்து அதை அதிகரிக்கிறார்கள், சிலர் செய்வதில்லை. இதன் காரணமாக வரிசை எண் உருவாகி விடுகிறது. எனவே எப்பொழுதும் தன்னை முன்னேற்றம் அடையச் செய்து கொண்டே மற்றவர்களையும் முன்னேற்றிக் கொண்டே இருங்கள். மற்றவர்களை முன்னேற்றுவது தான், தான் முன்னேறுவது. எப்படி தந்தையைப் பாருங்கள், தந்தை, தாயை முன்னுக்கு வைத்தார். இருந்தும் நம்பர் ஒன் நாராயணன் ஆனார். அவர் இரண்டாம் நம்பர் லட்சுமி ஆனார் ஆனால் முன்னேற வைத்ததினால் இவர் முன்னேறினார். முன்னேற்றுவது என்றால் பின்னடைவது அல்ல. பிறரை முன்னேற்றுவது என்றால் (தான்) முன்னேறுவது. அனைத்து சேவாதாரிகளும் மிக நன்றாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உழைப்பைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார் ஆனால் கருவி என்று புரிந்து சேவை செய்தீர்கள் என்றால் சேவையின் பலனாக ஒன்றுக்கு நான்கு மடங்கு ஆகி விடும். தந்தைக்குச் சமமான ஆசனம் கிடைத்திருக்கிறது, இப்பொழுது இதே ஆசனத்தில் அமர்ந்து சேவையை வளரச் செய்யுங்கள். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) விசேஷ ஆத்மா ஆவதற்காக அனைவரின் விசேஷங்களை பாருங்கள்!** பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் விசேஷங்களின் மகிமை பாடுகிறார். எப்படி தந்தை அனைத்து குழந்தைகளின் விசேஷங்களைப் பார்க்கிறார். அதே போல் நீங்கள் விசேஷ ஆத்மாக்களும் அனைவரின் விசேஷங்களைப் பார்த்துக் கொண்டே தன்னை விசேஷ ஆத்மா ஆக்கிக் கொண்டே இருங்கள். விசேஷ ஆத்மாக்களின் காரியம் விசேஷத்தை பார்ப்பது மற்றும் விசேஷம் ஆவது. எப்பொழுதாவது எந்த ஆத்மாவின் தொடர்பில் வருகிறீர்கள் என்றால், அவரின் விசேஷத்தின் மேல் தான் பார்வை

செல்ல வேண்டும். எப்படி தேனீக்களின் பார்வை மலர்கள் மேல் இருக்கிறது. அதே போல் உங்களுடைய பார்வை பிறரது விசேஷங்களின் மேல் இருக்கட்டும். ஒவ்வொரு பிராமண ஆத்மாவைப் பார்த்து எப்பொழுதும் ஆஹா! சிரேஷ்ட ஆத்மா ஆஹா! என்ற மகிமை பாடிக் கொண்டே இருங்கள். ஒருவேளை மற்றவர்களின் பலஹீனத்தை பார்த்தீர்கள் என்றால், நீங்களும் பலஹீனம் ஆகி விடுவீர்கள். எனவே உங்களுடைய பார்வை ஒருபொழுதும் பலஹீனம் என்ற கற்களின் மேல் செல்லக்கூடாது. நீங்கள் புனித அன்னப்பறவைகள், எப்பொழுதும் குணம் என்ற முத்தையே பொறுக்கிக் கொண்டிருங்கள்.

**2) நேரம் மற்றும் தன்னுடைய மகத்துவத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால் மகான் ஆகி விடுவீர்கள்!** சங்கமயுகத்தின் ஒவ்வொரு விநாடியும் முழுக் கல்பத்திற்கான பிராப்தியை உருவாக்குவதற்கான ஆதாரம், அந்த மாதிரி நேரத்தின் மகத்துவத்தைத் தெரிந்து கொண்டு ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறீர்களா? எப்படி நேரம் மகானாக இருக்கிறது அதே போல் நீங்களும் மகான் ஆவீர்கள். ஏனென்றால், பாப்தாதா மூலமாக ஒவ்வொரு குழந்தைக்கும் மகான் ஆத்மா ஆவதற்கான ஆஸ்தி கிடைத்திருக்கிறது. எனவே தன்னுடைய மகத்துவத்தையும் தெரிந்து ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் மகானாக செய்யுங்கள். எப்பொழுதும் நான் மகான் தந்தையின் குழந்தை, மகான் ஆவேன் என்ற இந்த நினைவிலேயே இருங்கள். இதன் மூலம் தான் எந்த அளவு சிரேஷ்ட பாக்கியத்தை உருவாக்க விரும்புகிறீர்களோ அந்த அளவு உருவாக்க முடியும். சங்கமயுகத்திற்கு இது தான் வரதானம். தந்தை மூலமாக கிடைத்திருக்கும் பொக்கிஷங்களுடன் எப்பொழுதும் விளையாடிக் கொண்டே இருங்கள். எப்பொழுதும் வாயிலிருந்து இரத்தினம் வெளியாகட்டும், மனதில் ஞான சிந்தனை ஓடிக் கொண்டே இருக்கட்டும். அந்த மாதிரி தாரணை சொரூபமானவராக இருங்கள். மகான் நேரமாகும், நான் மகான் ஆத்மா என்ற இதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். நல்லது - ஓம் சாந்தி.

**வரதானம்: அனைத்து பிராப்திகளின் குஷியில் பறந்து கொண்டே லட்சியத்தை சென்றடையக்கூடிய நினைவு சொரூபமானவர் ஆகுக!**

பிராமண வாழ்க்கையில் தொடக்கத்திலிருந்து இதுவரையிலும் என்னென்ன பிராப்திகள் ஆகியிருக் கின்றனவோ அவற்றின் பட்டியலை நினைவில் கொண்டு வந்தீர்கள் என்றால் சார ரூபத்தில் பிராப்தி இல்லாத ஒரு பொருள் கூட பிராமண வாழ்க்கையில் இல்லை. மேலும் இவை அனைத்தும் அழியாத பிராப்திகள் என்று தான் கூறுவீர்கள். இந்த பிராப்திகளின் நினைவு வெளிப்படும் ரூபத்தில் இருந்தது என்றால் அதாவது அதன் நினைவு சொரூபம் ஆனீர்கள் என்றால், குஷியில் பறந்து கொண்டே லட்சியம் வரை சுலபமாகவே சென்றடைந்து விடுவீர்கள். பிராப்தியின் குஷி ஒருபொழுதும் கீழே குழப்பத்தில் கொண்டு வராது. ஏனென்றால் நிரம்பிய நிலை ஆடாததாக ஆக்கும்.

**சுலோகன்: பிந்து சொரூபத்தின் நினைவில் இருப்பதற்காக ஞானம், குணம் மற்றும் தாரணையில் கடல் ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 08.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலகத்து (லௌகீக) மற்றும் ஆன்மீக (அலௌகீக) சம்மந்தத்தின் தியாகம்!

இன்று பாப்தாதா தன்னுடைய மகாதானி (பெரும் வள்ளல்), வரதானி (வரமளிக்கும் வள்ளல்) விசேஷ ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மகாதானி, வரதானி ஆவதற்கான ஆதாரம் மகாதியாகி. மகாதியாகியாக ஆகாமல் மகாதானி, வரதானி ஆக முடியாது. மகாதானி என்றால் கிடைத்திருக்கும் பொக்கிஷங்களை சுயநலமின்றி அனைத்து ஆத்மாக்களுக்காக கொடுப்பவர் - சுயநலமற்றவர். தன்னுடைய நலத்தை விட்டு விலகிய ஆத்மா தான் மகாதானி ஆக முடியும். வரதானி, எப்பொழுதும் தனக்குள் குணங்கள், சக்திகள் மற்றும் ஞானத்தின் பொக்கிஷங்களினால் நிரம்பிய ஆத்மா. எப்பொழுதும் அனைத்து ஆத்மாக்களுக்காக சிரேஷ்ட மற்றும் சுபபாவனை, அதாவது, அனைவருக்கும் நன்மை நடக்கட்டும் என்று அந்த மாதிரி உயர்ந்த் விருப்பம் வைக்கக்கூடியவர். எப்பொழுதும் ஆன்மீக இரக்க மனமுடைய, பரந்த மனமுடைய ஆத்மா தான் வரதானி ஆக முடியும். இதற்காக மகாதியாகி ஆவது அவசியமாகும். தியாகத்தின் இலக்கணத்தையும் கூறியிருந்தோம். முதல் தியாகம், தன்னுடைய உடலின் நினைவின் தியாகம். இரண்டாவது, உடலின் சம்மந்தத்தின் தியாகம். உடலின் சம்மந்தத்தில் முதல் விஷயமாக கர்மேந்திரியங்களின் சம்மந்தத்தைப் பற்றி கூறியிருந்தோம் - ஏனென்றால் 24 மணி நேரங்களுக்கான சம்மந்தம் இந்த கர்மேந்திரியங்களுடன் இருக்கிறது. இந்திரியங்களை வென்றவர் ஆவது, அதிகாரி ஆத்மா ஆவது என்பது இரண்டாவது படி. இதனுடைய விளக்கத்தையும் கூறியிருந்தோம். இப்பொழுது மூன்றாவது விஷயம் உடலின் கூடவே மனிதர்களின் சம்மந்தப்பட்டது. இதில் லௌகீக (உலகத்து) மற்றும் அலௌகீக (ஆன்மீக) சம்மந்தம் வந்து விடுகிறது. இந்த இரண்டு சம்மந்தங்களில் மகாதியாகி என்றால், பற்றுதலை வென்றவர். பற்றுதலை வென்றதின் அடையாளம் - இரண்டு சம்மந்தங்களிலும் யார் மீதும் வெறுப்பு இருக்காது, யார் மீதும்

பற்றுதலோ அல்லது ஈர்ப்போ இருக்காது. ஒருவேளை யார் மீதாவது வெறுப்பு இருக்கிறது என்றால், அந்த ஆத்மாவின் அவகுணம் அல்லது உங்களுடைய மனம் விரும்பாத காரியத்தை செய்து அடிக்கடி உங்களுடைய புத்தியை சஞ்சலப்படுத்துவார், விரும்பாவிட்டாலும் எண்ணத்தில் வார்த்தையில், கனவில் கூட அவரைப் பற்றிய தவறான சிந்தனை இயல்பாகவே இருக்கும். நீங்கள் தந்தையை நினைவு செய்வீர்கள், மேலும் அந்த ஆத்மா எதிரில் வந்து விடும். எப்படி இதயத்தை ஈர்க்கும் பற்றுதல் வைக்கப்பட்ட ஆத்மா விரும்பாவிட்டாலும் கூட தன் பக்கம் கவர்ந்து இழுத்தே விடும். அவர் குணம் மற்றும் அன்பின் ரூபத்தில் புத்தியை கவர்ந்திழுப்பார். மேலும் வெறுப்பான ஆத்மா சுயநலம் நிறைவேறாத காரணத்தினால் அந்த சுயநலம் புத்தியை சஞ்சலப்படுத்தும். எதுவரை சுயநலம் நிறைவேறவில்லையோ அது வரை அந்த ஆத்மாவுடன் பகைமையின் உணர்வு மற்றும் கர்மக் கணக்கு முடிவடைவதில்லை.

வெறுப்படைவதற்கான விதையாவது, சுயநலத்தின் ராயல் சொரூபமான -'வேண்டும்' என்பதாகும். இவருக்கு இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்யக்கூடாது, இது நடக்க வேண்டும். அப்படி வேண்டும் என்பதின் விருப்பமானது அந்த ஆத்மாவுடன் சுயநலத்தின் சம்மந்தத்தை இணைத்து விடும். வெறுப்படைந்த ஆத்மாவைப் பற்றி எப்பொழுதும் வீணான சிந்தனை இருக்கும் காரணத்தினால் பரதர்ஷன சக்கரதாரி ஆகி விடுவார்கள் ஆனால் இந்த வீணான சம்மந்தமும் பற்றுதலை வென்றவராக ஆக விடாது. அன்பின் காரணமாக பற்றுதல் இருக்காது ஆனால் கட்டாயத்தினால். பிறகு என்ன கூறுவார்கள்? நானோ நொந்து போய் விட்டேன். அப்படி யார் நோகடிக்கிறாரோ அவர் மேல் புத்தியோகம் செல்லும் தான் இல்லையா?. நேரமும் செல்லும், புத்தியும் செல்லும் மேலும் சக்திகளும் செல்லும். அப்படி ஒன்று இந்த சம்மந்தம். இரண்டாவது அழியும் அன்பு மற்றும் பிராப்தியின் ஆதாரத்தில் அல்லது அற்ப காலத்திற்காக ஆதாரமாக ஆவதின் காரணமாக ஏற்படும் பற்றுதல் மற்றும் ஈர்ப்பு. அதுவும் லௌகீக மற்றும் அலௌகீக இரண்டு சம்மந்தங்களிலும் புத்தியை தன் பக்கம் ஈர்க்கும். எப்படி லௌகீகத்தில், தேகத்தின் உறவினர்கள் மூலமாக அன்பு கிடைக்கிறது, ஆதரவு கிடைக்கிறது, பிராப்தி ஆகிறது என்றால், அவர்கள் மேல் விசேஷமான பற்றுதல் செல்கிறது தான் இல்லையா? அந்த பற்றுதலை

அகற்றுவதற்காக முயற்சி செய்கிறீர்கள், எந்தப் பக்கமும் புத்தி செல்லக்கூடாது என்ற லட்சியத்தை வைக்கிறீர்கள். லௌகீகத்தை விட்ட பிறகு அலௌகீக சம்மந்தத்திலும் இதே அனைத்து விஷயங்களும் புத்தியை கவர்ந்திழுக்கிறது. அதாவது தன் பக்கம் புத்தியை சுலபமாக ஈர்த்து விடுகிறது. இதுவும் தேகதாரிகளின் சம்மந்தம் தான். ஏதாவது ஒரு பிரச்சனை வாழ்க்கையில் வருகிறது, உள்ளத்தில் ஏதாவது குழப்பத்திற்கான விஷயம் இருக்கிறது என்றால், விரும்பாவிட்டாலும் கூட அற்ப காலத்திற்கு ஆதரவு கொடுக்கும் மற்றும் அற்ப காலத்திற்கு பிராப்தி செய்விக்கும், பற்றுதல் உள்ள அந்த ஆத்மா தான் நினைவில் வருவார். தந்தை நினைவில் வர மாட்டார். பிறகு அந்த மாதிரி பற்றுதல் உள்ள ஆத்மாக்கள் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக மேலும் தன்னை (அவ்வாறு தனி நபர்களை நினைப்பதை) சரி என்று நிரூபிப்பதற்காக என்ன நினைக்கிறார்கள் மற்றும் பேசுகிறார்கள்? தந்தையோ உடலற்றவர் மற்றும் ஒளி வடிவமான உடல் உள்ளவர் இல்லையா? பௌதீகமாக (இவ்வுலகில்) ஏதாவது ஒன்று (ஒருவர்) அவசியம் வேண்டும் ஆனால் ஒருவேளை ஒரு தந்தையிடமிருந்து அனைத்து பிராப்திகளின் சம்மந்தம், அனைத்து சம்மந்தங்களின் அனுபவம் மற்றும் எப்பொழுதும் ஆதரவளிக்கும் அவர் மேல் உறுதியான நம்பிக்கை இருக்கிறது, நிச்சயம் இருக்கிறது என்றால், பாப்தாதா நிராகாரமாக, ஆகாரமாக இருக்கின்ற போழ்திலும் (நம்மீது) அன்பின் பந்தனத்தில் கட்டப்பட்டிருக்கிறார் என்பதை மறந்து விடுகிறார்கள். பௌதீக ரூபத்தில் அந்த அனுபவத்தை நிச்சயம் கொடுக்கிறார். அனுபவம் ஆகாததற்கான காரணம்? ஞானம் மூலமாக அனைத்து சம்மந்தத்தையும் ஒரு தந்தையோடு வைக்க வேண்டும் என்பதையோ புரிந்து கொண்டுள்ளார் தான், ஆனால் வாழ்க்கை நடைமுறையில் அனைத்து சம்மந்தங்களையும் கொண்டு வரவில்லை. எனவே சாட்சாத் அனைத்து சம்மந்தங்களின் அனுபவம் செய்ய முடிவதில்லை. எப்பொழுது பக்தி மார்க்கத்தில் பக்த மாலையின் உயர்ந்த மணியாக விளங்கிய மீராவிற்குக்கூட சாட்சாத்காரம் கிடைக்கவில்லை, ஆனால் சாட்சாத் அனுபவம் ஏற்பட்டது என்றால், ஞானக்கடலின் நேரடி ஞான சொரூப குழந்தைகளுக்கு சாகார ரூபத்தின் அனைத்து பிராப்திகளுக்கும் ஆதாரமானவர், எப்பொழுதும் ஆதரவளிக்கும் தந்தையின் அனுபவம் கிடைக்க முடியாதா என்ன? பிறகு சர்வ சக்திவானை விட்டு விட்டு அவரவர்களுக்கேற்றபடி சக்தி உள்ள (மனித) ஆத்மாக்களை ஆதரவாக

ஏன் ஆக்குகிறீர்கள்? இதுவும் ஒரு நுண்ணியமான கர்மங்களின் கணக்கு என்பதை புத்தியில் வையுங்கள். கர்மங்களின் கணக்கு எவ்வளவு நுட்பமானது என்ற இதையும் தெரிந்து கொள்ளுங்கள். எந்த ஆத்மா மூலமாக அற்பகாலத்திற்கான ஆதாரம் எடுக்கிறீர்கள் அல்லது பிராப்திக்கான ஆதாரமாக ஆக்குகிறீர்கள், அந்த ஆத்மாவின் பக்கம் புத்தியின் ஈர்ப்பு இருக்கும் காரணத்தினால் கர்மாதீத் ஆவதற்குப் பதிலாக கர்மங்களின் பந்தனம் கட்டிப்போட்டு விடுகிறது. ஒருவர் கொடுத்தார், இன்னொருவர் பெற்றார் என்றால், ஆத்மாவிற்கு ஆத்மாவுடன் கொடுக்கல், வாங்கல் ஆனது. அப்படியானால் கொடுக்கல், வாங்கலின் கணக்கு உருவானதா அல்லது முடிவடைந்ததா? அந்த நேரம் நான் முன்னேறிக் கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் செய்வார்கள் ஆனால் அந்த முன்னேறுதல் முன்னேற்றமில்லை, ஆனால் கர்ம பந்தனத்தின் கணக்கை சேமித்தார்கள். முடிவாக என்ன ஆகும்? கர்ம பந்தனம் உள்ள ஆத்மா தந்தையுடனான சம்மந்தத்தினை அனுபவம் செய்ய முடியாது. கர்ம பந்தனத்தின் சுமை உள்ள ஆத்மா நினைவு யாத்திரையில் சம்பூர்ண நிலையின் அனுபவம் செய்ய முடியாது. அவர் நினைவு பாடத்தில் எப்பொழுதும் பலஹீனமாக இருப்பார். ஞானம் சொல்வதிலும், கேட்பதிலும் திறமைசாலியாக இருக்கலாம், புத்திசாலியாக இருக்கலாம் ஆனால் சக்திசாலியாக இருக்க மாட்டார். சேவை செய்பவராக இருப்பார், ஆனால் தடைகளை அழிப்பவராக இருக்க மாட்டார். சேவையின் வளர்ச்சியை செய்து விடுவார், ஆனால் விதிப்பூர்வமான வளர்ச்சி இருக்காது. எனவே அந்த மாதிரியான ஆத்மாக்கள் பேச்சாளர் ஆக முடியும், ஆனால் கர்ம பந்தனத்தின் சுமையின் காரணமாக வேகமாக முன்னேறிச் செல்ல முடியாது. அதாவது பறக்கும் கலையின் வேகத்தை அனுபவம் செய்ய முடியாது. அப்படி இதுவும் இரண்டு விதமான தேகத்தின் சம்மந்தங்கள் அது மகாரதியாக ஆக விடாது. எனவே முதலில் இந்த தேகத்தின் சம்மந்தத்தை மட்டும் சோதனை செய்யுங்கள். எந்த ஆத்மா மேலும் அது வெறுப்பிற்கான சம்மந்தமாக இருந்தாலும், பிராப்தி மற்றும் ஆதரவின் சம்மந்தமாக இருந்தாலும் ஏதேனும் பற்றுதலோ அதாவது புத்தியின் ஈர்ப்போ இல்லையே என்று சோதனை செய்யுங்கள். அடிக்கடி புத்தி செல்வது மற்றும் ஈர்க்கப்படுவது, அது சுமை என்று நிரூபிக்கிறது. சுமையுள்ள ஒன்று வளைந்து கொடுக்கும். அப்படி இதுவும் கர்மங்களின் சுமை ஆகிறது. எனவே விரும்பாவிட்டாலும் கூட புத்தி அந்தப் பக்கம் தான்

வளையும். புரிந்ததா? இப்பொழுது ஒரு தேகத்தின் சம்மந்தத்தின் விஷயத்தைக் கூறினோம்.

எனவே தேகத்தின் சம்மந்தத்தின் தியாகம் செய்திருக்கிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள்? அல்லது லௌகீகத்தில் தியாகம் செய்து அலௌகீகத்தில் இணைத்துக் கொண்டேனா? கர்மாதீத் ஆகும் ஆத்மாக்களாகிய நீங்கள், இந்த கர்ம பந்தனத்தையும் தியாகம் செய்யுங்கள். அப்படி பிராமணர்களைப் பொருத்தளவில் இந்த சம்மந்தத்தின் தியாகமும் தியாகம் தான்! இவ்வாறு தியாகத்தின் இலக்கணம் என்னவென்று புரிந்து கொண்டீர்களா? இப்பொழுது வரும் நாட்களில் இன்னும் கூறுவோம். இப்பொழுது தியாகத்தின் ஒரு வார பாடம் நடந்து கொண்டிருக்கிறது. இன்றைய பாடம் உறுதியானதா? பிராமணர்களின் விசேஷமே மகாதியாகி. தியாகமின்றி பாக்கியத்தை அடைய முடியாது. பிரம்மா குமார் - குமாரி ஆகி விட்டோம் என்றால், தியாகம் ஆகி விட்டது என்று அப்படி புரிந்து கொள்ளவில்லையே? பிரம்மா குமார் - குமாரிகளைப் பொருத்தவரை தியாகத்தின் இலக்கணம் மிக நுண்ணியமானதாக ஆகி விடுகிறது. புரிந்ததா? நல்லது.

அப்படி எப்பொழுதும் சுயநலமற்றவராக, அனைவருக்கும் நன்மை செய்பவராக, அனைத்து பிராப்திகளையும் சேவையில் ஈடுபடுத்தி சேமிக்கக்கூடிய, வள்ளலின் குழந்தைகள் எப்பொழுதும் கொடுக்கக்கூடிய, பெறுவதின் அற்பகால பிராப்தியிலிருந்து சுயநலமற்ற, எப்பொழுதும் அனைவருக்காக சுபபாவனை, நன்மை பயக்கும் விருப்பம் வைக்கக்கூடிய மகாதானி, வரதானி, சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** சேவாதாரி ஆத்மாக்களுக்கு தந்தைக்குச் சமம் ஆக வேண்டும் என்ற ஒரே லட்சியம் எப்பொழுதும் இருக்கிறதா? ஏனென்றால், தந்தைக்குச் சமமான ஆசனத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். எப்படி தந்தை ஆசிரியர் ஆகி, ஞானக் கல்வி கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆகிறார். அதே போல் சேவாதாரி ஆத்மாக்கள் தந்தைக்குச் சமமான காரியம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறீர்கள். எனவே எப்படி தந்தையின் குணமோ அதே போல் பொறுப்பாளர் ஆகியிருக்கும் சேவாதாரிகளின் குணம் இருக்க வேண்டும். எனவே எப்பொழுதும்

என்னென்ன வார்த்தைகள் கூறுகிறீர்களோ அது தந்தைக்குச் சமமாக இருக்கிறதா என்று முதலில் இதை சோதனை செய்யுங்கள். என்னவெல்லாம் எண்ணம் வைக்கிறீர்களோ அது தந்தைக்குச் சமமாக இருக்கிறதா? ஒருவேளை இல்லை என்றால், சோதனை செய்து மாற்றம் செய்து விடுங்கள். காரியத்தில் வராதீர்கள். அந்த மாதிரி சோதனை செய்த பிறகு நடைமுறையில் கொண்டு வருவதினால் என்னவாகும்? எப்படி தந்தை நிரந்தர சேவாதாரி ஆகியிருந்தும் அனைவருக்கும் பிரியமானவராக மற்றும் அனைவரிடமிருந்து விலகியிருப்பவராக இருக்கிறார். அதே போல் சேவை செய்து கொண்டே அனைவரின் ஆன்மீகப் பிரியமானவராகவும் இருப்பார் மற்றும் கூடவே அனைவரிடமிருந்தும் விலகியிருப்பவராகவும் இருப்பார். தந்தையின் முக்கியமான விசேஷமே - எந்த அளவு அன்பானவரோ அந்த அளவு விலகியிருப்பவர். அதே போல் தந்தைக்குச் சமமான சேவையில் பிரியமானவர் மற்றும் புத்தியின் நினைவினால் எப்பொழுதும் ஒரு தந்தையின் பிரியமானவர், அனைவரிடமிருந்தும் விலகியிருப்பவர். இதைத் தான் தந்தைக்குச் சமமான சேவாதாரி என்று கூறுவது. அப்படி ஆசிரியர் ஆவது என்றால், தந்தையின் முக்கியமான இந்த விசேஷத்தைப் பின்பற்றுவது. சேவையிலோ அனைவரும் மிக நன்றாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் எங்கு விலகியிருப்பவராக ஆக வேண்டும், மேலும் எங்கு பிரியமானவராக ஆக வேண்டும் என்ற இதன் மேல் விசேஷ கவனம் வேண்டும். ஒருவேளை அன்போடு சேவை செய்யவில்லை என்றாலும் சரி கிடையாது, மேலும் அன்பில் மாட்டிக் கொண்டு சேவை செய்கிறீர்கள் என்றாலும் சரி கிடையாது. எனவே அன்போடு சேவை செய்ய வேண்டும், விலகியிருக்கும் நிலையில் நிலைத்திருந்து செய்ய வேண்டும் அப்பொழுது தான் சேவையில் வெற்றி கிடைக்கும். ஒருவேளை கடுமையாக உழைத்த பிறகும் கூட வெற்றி குறைவாக கிடைக்கிறது என்றால், அவசியம் அன்பாக மற்றும் விலகியிருப்பவராக ஆவதில் சமநிலையில் குறை உள்ளது என பொருள். எனவே சேவாதாரி என்றால், தந்தைக்குப் பிரியமானவர் மற்றும் விலகியிருப்பவர். இது தான் அனைத்தையும் விட மிக நல்ல நிலை. இதைத் தான் தாமரை மலருக்குச் சமமான வாழ்க்கை என்று கூறப்படுவது. எனவே தான் சக்திகளுக்கு தாமரை மலர் ஆசனம் கொடுக்கிறார்கள். தாமரை மலரில் அமர்ந்திருப்பதாகக் காண்பிக்கிறார்கள். ஏனென்றால் தாமரை மலருக்குச் சமமாக விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர். அனைத்து

சேவாதாரிகளும் தாமரை மலரின் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ஆசனம் என்றால் நிலை. நிலையைத் தான் ஆசன ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள். மற்றபடி தாமரை மலரில் யாரும் அமர்ந்திருப்பது கிடையாது, இல்லையா? எனவே எப்பொழுதும் தாமரை மலர் ஆசனத்தில் அமர்ந்திருங்கள். ஒருபொழுதும் தாமரை மலர் சேற்றில் சென்று விட வேண்டாம். இதில் கவனத்தை எப்பொழுதும் வையுங்கள். நல்லது.

**குமாரர்களுடன் சந்திப்பு:** குமாரர்கள் வாழ்க்கையில் தந்தையின் குழந்தை ஆவது என்பது எவ்வளவு பாக்கியத்தின் அடையாளம். நான் எத்தனை பந்தனங்களில் செல்வதிலிருந்து தப்பித்துக் கொண்டுள்ளேன் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? குமாரர் வாழ்க்கை என்றால், அனேக பந்தனங்களிலிருந்து விடுபட்ட வாழ்க்கை. எந்த விதமான பந்தனமும் இல்லை. தேக உணர்வின் பந்தனமும் இருக்க வேண்டாம். இந்த தேக உணர்வு மூலம் அனைத்து பந்தனங்களும் வந்து விடுகின்றன. எனவே எப்பொழுதும் தன்னை ஆத்மா சகோதரன், சகோதரன் என்று புரிந்து, நடந்து கொண்டே இருங்கள். இந்த நினைவு மூலம் குமாரர்களின் வாழ்க்கை எப்பொழுதும் தடையற்றதாக முன்னேறிச் செல்ல முடியும். எண்ணம் மற்றும் கனவில் கூட எந்த பலஹீனமும் இருக்க வேண்டாம், இதைத் தான் விக்ன விநாஷக் (தடைகளை அழிப்பவர்) என்று கூறுவது. நடைமுறையில் அனைத்து காரியங்களையும் செய்து கொண்டே, போனாலும் வந்தாலும் நான் ஒரு ஆத்மா என்ற நினைவு இயற்கையாகவே இருக்கட்டும். பார்க்கிறீர்கள் என்றாலும் ஆத்மாவைப் பாருங்கள், கேட்கிறீர்கள் என்றாலும் ஆத்மாவாக ஆகிக் கேளுங்கள். இந்த பாடத்தை ஒருபொழுதும் மறக்காதீர்கள். சேவையிலோ குமாரர்கள் மிகவும் முன்னேறிச் சென்று விடுகிறார்கள், ஆனால் சேவை செய்து கொண்டே ஒருவேளை சுயத்தின் சேவை மறந்து விடுகிறது என்றால் பிறகு தடை வந்து விடுகிறது. குமாரர் என்றால் கடுமையான வேலை செய்பவர் ஆக இருக்கவே இருக்கிறீர்கள் ஆனால் தடையற்றவராகவும் ஆக வேண்டும். சுயத்தின் சேவை மற்றும் உலகின் சேவை இரண்டிலும் சமநிலை இருக்கட்டும். சேவையில் அந்த அளவு பிஸியாக ஆகாதீர்கள், அதன் காரணமாக சுயத்தின் சேவையில் அலட்சியமானவராக ஆகி விடாதீர்கள். ஏனென்றால் குமாரர் எந்த அளவு தன்னை முன்னேற்ற விரும்புகிறாரோ அந்த அளவு முன்னேற்றிக் கொள்ள முடியும்.

குமாரர்களிடம் உடலின் சக்தியும் இருக்கிறது, மேலும் கூடவே திட எண்ணத்தின் சக்தியும் இருக்கிறது. எனவே அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும். இந்த இரண்டு சக்திகள் மூலமாக முன்னேறிச் செல்ல முடியும் ஆனால் சமநிலையின் கலை முன்னேறும் கலையில் எடுத்துச் செல்லும். சுயசேவை மற்றும் உலக சேவை இரண்டிற்கும் சமநிலை இருந்தது என்றால் தடையற்று வளர்ச்சி இருந்து கொண்டே இருக்கும்.

**2) குமாரர்கள் எப்பொழுதும் தன்னை தந்தை உடன் இருப்பதாக நினைக்கிறீர்களா?** தந்தை மற்றும் நான் எப்பொழுதும் கூடவே இருக்கிறோம் என்று அப்படி தந்தையின் நிரந்தர துணைவனாக ஆகியிருக்கிறீர்கள். பொதுவாகவே வாழ்க்கையில் எப்பொழுதும் யாரையாவது துணைவனாக ஆக்குவார்கள். அப்படி உங்களுடைய வாழ்க்கையின் துணைவன் யார்? (தந்தை). அந்த மாதிரி உண்மையான துணைவன் ஒருபொழுதும் கிடைக்க முடியாது. எவ்வளவு தான் அன்பிற்குரிய மற்றும் அன்பான துணைவனாக இருந்தாலும் ஆனால் தேகதாரி துணைவன் நிரந்தரமாக துணையாக இருக்க முடியாது. மேலும் இந்த ஆன்மீக உண்மையான துணைவன் எப்பொழுதும் துணைவனாக இருப்பார். எனவே குமாரர்கள் தனியாக இருக்கிறீர்களா அல்லது இணைந்திருக்கிறீர்களா? (இணைந்திருக்கிறோம்). பிறகு யாரையாவது துணையாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமோ வருவதில்லையே? எப்பொழுதாவது ஏதாவது கடினம் வருகிறது, நோய் வருகிறது, உணவு தயாரிப்பதில் கடினம் ஏற்படுகிறது என்றால், (வாழ்க்கைத்) துணையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறதா? எப்பொழுதாவது அந்த மாதிரி எண்ணம் வருகிறது என்றால் இதை வீணான எண்ணம் என்று புரிந்து நிரந்தரமாக ஒரு நொடியில் அதை முடித்து விட வேண்டும். ஏனென்றால் யாரை இன்று துணைவி என்று புரிந்து துணைவியாக ஆக்கினீர்கள் என்றால், நாளை அவர் மேல் என்ன நம்பிக்கை இருக்கிறது. எனவே அழியும் துணையை உருவாக்குவதினால் என்ன லாபம் இருக்கிறது. எனவே எப்பொழுதும் இணைந்திருக்கிறேன் என்று புரிந்து கொள்வதினால் மற்ற எண்ணங்கள் முடிவடைந்து விடும். ஏனென்றால், சர்வ சக்திவான் துணைவனாக இருக்கிறார். எப்படி சூரியனின் எதிரில் இருள் நிலைத்திருக்க முடியாது. அதே போல் சர்வ சக்திவானின் எதிரில் மாயா நிலைத்திருக்கவே

முடியாது. அப்படியானால் நீங்கள் அனைவரும் மாயாவை வென்றவர் ஆகி விடுவீர்கள். நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: தன்னுடைய மன்னிக்கும் சொரூபம் மூலமாக அறிவுரை கொடுக்கக்கூடிய மாஸ்டர் மன்னிக்கும் கடல் ஆகுக!**

ஒருவேளை ஏதாவது ஆத்மா உங்களுடைய மனநிலையை அசைப்பதற்கு முயற்சி செய்தால், தீமை செய்வதின் உள்உணர்வு வைத்தால், அவரையும் நீங்கள் உங்களுடைய நன்மை பயக்கும் உள்உணர்வு மூலம் பரிவர்த்தனை செய்யுங்கள் அல்லது மன்னியுங்கள். பரிவர்த்தனை செய்ய முடியவில்லை என்றால் மாஸ்டர் மன்னிக்கும் கடல் ஆகி மன்னியுங்கள். உங்களுடைய மன்னிப்பு அந்த ஆத்மாவிற்கு ஒரு படிப்பினையாகி விடும். இன்றைய நாட்களில் அறிவுரை கூறுவதினால் சிலர் புரிந்து கொள்வார்கள், சிலர் புரிந்து கொள்ள மாட்டார்கள் ஆனால் மன்னிப்பது என்றால் சுபபாவனை ஆசீர்வாதங்கள் கொடுப்பது, சகயோகம் கொடுப்பது.

**சுலோகன்: யார் எப்பொழுதும் குஷி நிறைந்தவராக இருக்கிறாரோ அவர் தான் தனக்கும், மற்றவர்களுக்கும் பிரியமானவராக இருப்பார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வீணானதை தியாகம் செய்து சக்திசாலி ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய அனைத்து பாவங்களையும் வென்ற, அதாவது பாவக்காரியங்களை (சன்னியாசம்) துறந்து விட்ட ஆத்மாக்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். பிராமண ஆத்மா ஆவது என்றால், சிரேஷ்ட காரியம் செய்வது மற்றும் பாவக்காரியங்களை சன்னியாசம் செய்வது. ஒவ்வொரு பிராமண குழந்தையும் பிராமணன் ஆன உடனேயே நாம் அனைவரும் இப்பொழுது பாவ காரியங்களை விட்டு விட்டு நல்ல காரியங்களை செய்பவர்களாகி விட்டோம் என்ற சிரேஷ்ட எண்ணத்தை வைத்தீர்கள், நல்ல காரியங்கள் செய்யும் ஆத்மாவை சிரேஷ்ட பிராமண ஆத்மா என்று கூறுவது. அப்படி எண்ணமே பாவங்களை வென்றவர் ஆவதற்கானது இதே இலட்சியத்தை நீங்கள் அனைவரும் வைத்தீர்கள் தான் இல்லையா? இதே இலட்சியத்தை எதிரில் வைத்து சிரேஷ்ட இலட்சணத்தை தனக்குள் கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்கள். எனவே பாவகாரியங் களை சன்னியாசம் செய்து பாவங்களை வென்றவர் ஆகியிருக்கிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள். எப்படி உலகத்தில் கூட உயர்ந்த இராஜ குலத்தைச் சேர்ந்த ஆத்மா எந்த சாதாரண நடத்தையும் செய்ய முடியாது. எப்படி எல்லைக்குட்பட்ட வைஷ்ணவர்கள் எந்த ஒரு கீழ்த்தரமான பொருளையும் உட்கொள்ள முடியாது. அதே போல் பாவங்களை வென்ற விஷ்ணு வம்சத்தைச் சேர்ந்தவர் பாவக்காரியம் மற்றும் தீய எண்ணங்கள் என்ற கீழ்த்தரமான காரியம் மற்றும் எண்ணத்தை வைக்க முடியாது. இவை பிராமண ஜென்மத்தின் கணக்குப்படி தடை செய்யப்பட்டவை. அந்த மாதிரி பிராமணர்களுக்காக மற்றும் தனக்காக என்ன என்ன தடை செய்யப்பட்டவை என்பதை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? அனைவரும் தெரிந்தும் இருக்கிறீர்கள், ஏற்றுக் கொண்டும் இருக்கிறார்கள் ஆனால் வரிசைக் கிரமமாக நடந்து கொள்கிறீர்கள். அந்த மாதிரிக் குழந்தைகளைப் பார்த்து நீங்கள் கூறும் அந்த சிரிப்பூட்டும் கதை

நினைவில் வருகிறது. சொல்லிக் கொண்டும் இருக்கிறார் மற்றும் செய்து கொண்டும் இருக்கிறார், இதை என்னவென்று கூறுவது? இது பிராமண ஆத்மாக்களைப் பொருத்த வரை உயர்ந்ததாக இருக்குமா? சிரேஷ்டமானது எது? நல்ல காரியமா? சாதாரண காரியமா? எப்பொழுது பிராமணன் சாதாரண காரியமே செய்ய முடியாது என்றால் பாவக்காரியங்களின் விஷயமே இல்லை. பாவங்களை வென்றவர் என்றால் பாவக்காரியம் மற்றும் தீய எண்ணங்களை தியாகம் செய்தவர் கர்ம இந்திரியங்களின் ஆதாரத்தினால் காரியம் செய்யாமல் இருக்க முடியாது. தேகத்தின் சம்மந்தம் கர்ம இந்திரியங்களுடன் இருக்கிறது. மற்றும் கர்ம இந்திரியங்களின் சம்மந்தம் காரியத்துடன் இருக்கிறது. இது தேகம் மற்றும் தேகத்தின் சம்மந்தத்தின் தியாகத்தின் விசயத்தை பேசிக் கொண்டிருக்கிறோம். கர்ம இந்திரியங்களுக்கு காரியத்துடன் என்ன சம்மந்தம் இருக்கிறதோ அந்தக் காரியத்தின் கணக்குப்படி பாவக்காரியத்தின் தியாகம். பாவக் காரியத்தின் தியாகம் இன்றி நல்ல காரியம் செய்பவராகவும் பாவங்களை வென்றவராகவும் ஆக முடியாது. பாவக்காரியத்தின் இலக்கணத்தை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? எந்த ஒரு விகாரத்தின் அம்சமாத்திரம் வசமாகி காரியம் செய்வது என்றால் பாவக்காரியம் செய்வது விகாரங்களின் சூட்சும சொரூபம் மற்றும் ராயல் சொரூபங்களை மிக நன்றாக தெரிந்திருக்கிறீர்கள். இதன் மேல் பிராமணர்களின் ராயல் ரூபத்தின் விகாரத்தின் சொரூபம் என்ன என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். ஒருவேளை ராயல் ரூபத்தில் விகாரம் இருக்கிறது மற்றும் சூட்சும அம்சமாத்திரத்தில் இருக்கிறது என்றால் அந்த மாதிரி ஆத்மா எப்பொழுது நல்ல காரியம் செய்பவராக ஆக முடியாது.

நல்ல காரியம் செய்தேனா அல்லது வீணான காரியம் செய்தேனா அல்லது ஏதாவது பாவக்காரியமும் செய்தேனா என்று அமிர்தவேளையில் தொடங்கி ஒவ்வொரு காரியத்தையும் சோதனை செய்யுங்கள் நல்ல காரியம் என்றால், ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் காரியம் செய்வது. ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் செய்யப்பட்ட காரியம் இயல்பாகவே நல்ல கர்மம் அதாவது புண்ணிக் கணக்கில் சேமிப்பாகிறது. அப்படி காரியம் மற்றும் பாவக்காரியத்தை சோதனை செய்வதற்கான விதி சுலபமானது. இந்த விதிப்படி எப்பொழுதும் சோதனை செய்து கொண்டே இருங்கள்.

அமிர்தவேளையில் எழும் காரியத்திலிருந்து இரவு தூங்கும் வரை ஒவ்வொரு காரியத்திற்காக ஸ்ரீமத் கிடைத்திருக்கிறது. எழுவது எப்படி, உட்காருவது எப்படி என்று அனைத்தும் கூறப் பட்டிருக்கிறது தான் இல்லையா? ஒருவேளை அந்த மாதிரி எழவில்லை என்றால் அமிர்தவேளையிலிருந்து சிரேஷ்ட காரியத்தின் சிரேஷ்ட பிராப்தியை உருவாக்க முடியாது. அதாவது வீணானவை மற்றும் பாவக்காரியத்தின் தியாகி ஆக முடியாது. அப்படி இந்த சம்மந்தத்தையும் தியாகம் செய்ய வேண்டும். வீணானவற்றையும் தியாகம் செய்ய வேண்டும். சிலர் நானோ எந்த பாவமோ செய்யவில்லையே என்று நினைக்கிறார்கள். எந்த தவறும் செய்யவில்லையே? அந்த மாதிரி தவறான எந்த வார்த்தையும் பேசவில்லையே என்று நினைக்கிறார்கள் ஆனால் அதாவது சிரேஷ்ட பாக்கியம் நிறைந்தவராக ஆக விடாது, ஒருவேளை பாவக்காரியம் செய்யவில்லை ஆனால் வீணான காரியமும் செய்தீர்கள் என்றால், தற்சமயத்திற்கும் மற்றும் எதிர்காலத்திற்கும் சேமிப்போ ஆகவில்லையே சிரேஷ்ட காரியம் செய்வதினால் தற்சமயத்திலும் சிரேஷ் காரியத்தின் உடனடி பலனாக குஷி மற்றும் சக்தியின் அனுபவம் ஆகும். தனக்காகவும் உடனடி பலன் கிடைத்து விடுகிறது மேலும் மற்றவர்களும் உயர்ந்த காரியங்கள் செய்யும் ஆத்மாக்களைப் பார்த்து முயற்சி செய்வதின் ஊக்கம் உற்சாகத்தில் வருகிறார்கள். நாமும் அந்த மாதிரி ஆக முடியும் என்று நினைக்கிறார்கள். அப்படி தனக்காக உடனடிப் பலன் மேலும் மற்றவர்களின் சேவை. இரட்டை சேமிப்பு ஆகி விட்டது. மேலும் தற்சமயத்தின் கணக்குப்படி எதிர்காலத்திற்கோ சேமிப்போ ஆகி விடுகிறது. இந்த கணக்குப்படி பாருங்கள் ஒருவேளை வீணான அதாவது சாதாரண காரியம், பேச்சு, நேரம் இதன் தியாகமும் செய்து எப்பொழுதும் சக்திசாலியாக, எப்பொழுதும் ஆன்மீக அதாவது பலடங்கு பாக்கியம் நிறைந்தவராக ஆகுங்கள். எனவே, வீணானவை மற்றும் சாதாரண விசயங்கள் மீது கவனம் செலுத்துங்கள். இதன் லட்சியத்தையும் தியாகம் செய்ய வேண்டும். ஏனென்றால், நீங்கள் அனைத்து பிராமண ஆத்மாக்களுக்கும் உலக மேடையில் கதாநாயக, கதாநாயகி பாத்திரம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த மாதிரி கதாநாயக பாத்திரம் ஏற்று செய்யும் ஆத்மாக்களின் ஒவ்வொரு வினாடி, ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தை, ஒவ்வொரு காரியமும் வைரத்தை விட அதிக மதிப்புள்ளது. ஒருவேளை ஒரு எண்ணம் கூட வீணானதாக இருந்தது என்றால், வைரத்தை இழந்தது மாதிரி, ஒருவேளை மிகவும் விலை

மதிப்புள்ள வைரம் கீழே விழுந்து விட்டது என்றால், காணாமல் போய் விட்டது என்றால், ஏதோ இழந்து விட்டோம் என்று யோசிப்பார் இல்லையா? அப்படி ஒரு வைரத்தின் விசயம் இல்லை. அனேக வைரங்களின் விலை ஒரு வினாடி ஆகும். இந்தக் கணக்கின் படி யோசியுங்கள். சாதாரண ரூபத்தில் அமர்ந்து கொண்டே சாதாரண விசயங்கள் பேசிப் பேசியே நேரத்தை கழித்து விட்டீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். பிறகு என்ன கூறுகிறார்கள், சும்மா அப்படியே பேசிக் கெண்டிருந்தோம், உட்கார்ந்திருந்தோம் மேலும் எந்தக் கெட்ட காரியமும் செய்யவில்லையே. இந்த மாதிரியே இருந்து வந்தோம். இந்த மாதிரி செய்து செய்து எவ்வளவு காலம் கடந்து விட்டது. பொதுவாக அப்படியே இருந்தது என்பதல்ல, ஆனால் வைரம் மாதிரி இருந்தது. எனவே தன்னுடைய மதிப்பைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய ஜட விக்ரகங்களுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது. உங்களுடைய ஒவ்வொரு எண்ணத்திற்கும் கூட அந்த அளவு மதிப்பு இருக்கிறது. இன்று வரை அதை ஒரு வரதான ரூபம் என்று நம்புகிறார்கள். ஒரு நொடியின் காட்சி கொடுத்து விடு என்று தான் பக்தர்களும் கூறுகிறார்கள். அப்படி தரிசனம் நேரத்தின் மதிப்பு, வரதானம் எண்ணத்தின் மதிப்பு உங்களுடைய வார்த்தைகளுக்கு மதிப்பு, இன்று கூட இரண்டு வார்த்தைகள் கேட்பதற்காக துடிக்கிறார்கள். உங்களுடைய பார்வையின் மதிப்பாக இன்று கூட பார்வையால் நன்மை செய்யுங்கள் என்று அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள் உங்களுடைய ஒவ்வொரு காரியத்திற்கும் மதிப்பு இருக்கிறது. தந்தையுடன் சேர்த்து உங்களுடைய சிரேஷ்ட காரியத்தை வர்ணனை செய்து மனம் குதூகலம் அடைகிறார்கள். அப்படி உங்களுடைய ஒவ்வொரு வினாடி ஒவ்வொரு எண்ணமும் விலை மதிக்க முடியாதது. எனவே தன்னுடைய மதிப்பைத் தெரிந்து வீணானது, தீயது மற்றும் பாவக் காரியங்களை தியாகம் செய்யுங்கள். அப்படி இன்று தியாகத்தின் பாடத்தில் என்ன உறுதி செய்தீர்கள்? அப்படியே தான் இருந்து வந்தோம் என்ற அலட்சியத்தின் வார்த்தையின் தியாகம். எப்படி இன்றைய நாட்களில் நடைமுறை பழக்க பேச்சு என்று கூறுகிறார்கள் அதே போல் இதுவும் பிராமணர்களின் நடைமுறை பழக்க பேச்சு ஆகி விட்டது. இந்த மொழியை விட்டு விடுங்கள். ஒவ்வொரு வினாடியும் ஆன்மீகமாக இருக்கட்டும். ஒவ்வொரு எண்ணமும் உலகியல் அற்றதாக அதாவது விலைமதிக்க முடியாததாக இருக்கட்டும். ஒவ்வொரு எண்ணமும் உலகியல் அற்றதாக அதாவது விலை மதிக்க முடியாததாக இருக்கட்டும். தற்சமயம் மற்றும் எதிர்காலத்திற்கான

இரட்டை பலன் அடைபவர்கள் எப்படி சில நேரம் ஒன்றில் இரண்டு பழங்கள் சேர்ந்தே இருக்கும். அப்படி பார்த்திருப்பீர்கள். அப்படி சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுக்கு எப்பொழுதும் இரட்டை பலன் அதாவது இரட்டை பிராப்தி, எதிர்காலத்திற்கு முன்பு தற்சமயம் பிராப்தி இருக்கிறது. மேலும் தற்சமயத்தின் ஆதாரத்தில் எதிர்காலத்தில் பிராப்தி இருக்கிறது. அப்படி ஒன்றை அல்ல, இரட்டை பழங்களை சாப்பிடுங்கள். புரிந்ததா? நல்லது. எப்பொழுதும் பாவங்களை வென்ற, மதிப்புள்ளவராகி ஒவ்வொரு வினாடியையும் விலை மதிப்பற்றதாக ஆக்கும் சேவையில் ஈடுபடுத்தக் கூடிய இரட்டை கதாநாயக ஆத்மாக்களுக்கு, இரட்டை பழம் அருந்தும், வீணானது மற்றும் சாதாரணத்தை மஹா தியாகம் செய்த, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக சிரேஷ்ட எண்ணம் மற்றும் காரியம் செய்யக் கூடிய மஹா மஹா பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1. நிரம்பிய ஆத்மாக்களின் முகம் மூலமாக சேவை:** அனைவரும் கடலின் அருகில் இருக்கக் கூடியவர்கள், எப்பொழுதும் கடலின் பொக்கிஷங்களை தனக்குள் நிரப்பிக் கொண்டே இருக்கிறீர்களா? கடலின் ஆழத்தில் எவ்வளவு பொக்கிஷங்கள் இருக்கின்றன. அப்படி கடலின் கரையில் இருப்பவர்கள், அருகில் இருப்பவர்கள் அனைத்து பொக்கிஷங்களின் அதிபதி ஆகி விட்டார்கள். பொதுவாகவே யாருக்காவது ஏதாவது பொக்கிஷம் கிடைக்கிறது என்றால், குஷியில் வந்து விடுவார். திடீரென்று யாருக்காவது ஏதாவது பணம், செல்வம் கிடைத்து விட்டது என்றால் போதை ஏறிவிடும். குழந்தைகள் உங்களுக்கு அந்த மாதிரி செல்வம் கிடைத்திருக்கிறது. அதை யாரும் பறிக்கவும் முடியாது. கொள்ளை அடிக்கவும் முடியாது. 21-தலை முறைக்கும் எப்பொழுதும் செல்வந்தர்களாக இருப்பீர்கள். அனைத்து பொக்கிஷங்களின் சாவி பாபா பாபா என்று கூறினீர்கள், களஞ்சியம் திறந்தது. அப்படி சாவியும் கிடைத்து விட்டது, களஞ்சியமும் கிடைத்து விட்டது நிரந்தர அனைத்து செல்வங்கள் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்கள். அந்த மாதிரி நிறைந்த, அனைத்து செல்வங்களும் நிரம்பிய ஆத்மாக்களின் முகத்தில் குஷியின் ஜொலிப்பு இருக்கும் அவருடைய குஷியைப் பார்த்து இவருக்கு என்ன கிடைத்தது என்று தெரியவில்லை என்று அனைவரும் கூறுவார்கள். அதைத் தெரிந்து

கொள்ள இச்சை இருக்கும். எனவே இயல்பாகவே அவர்களுக்கு சேவை நடந்து விடும்.

**2. மாயாவை வென்றவர் ஆவதற்காக சுயமரியாதை என்ற ஆசனத்தில் அமர்ந்திருங்கள்!** எப்பொழுதும் தன்னை சுயமரியாதை என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? நான் புண்ணிய ஆத்மா,உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமண ஆத்மா, சிரேஷ்ட, ஆத்மா மஹான் ஆத்மா என்று அப்படி தன்னை சுயமரியாதை என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? எங்காவது அமார வேண்டியதிருக்கிறது என்றால் இருக்கை வேண்டும் இல்லையா? சங்கமயுகத்தில் தந்தை சிரேஷ்ட சுயமரியாதை என்ற இருக்கையைக் கொடுத்திருக்கிறார். அதிலேயே அமர்ந்திருங்கள். இருக்கை அல்லது ஆசனம் தான் நினைவில் இருக்க வேண்டும். எனவே நான் ஒவ்வொரு அடியிலும் புண்ணியம் செய்யும் புண்ணிய ஆத்மா என்ற நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். நான் மகான் எண்ணம், மகான் பேச்சு, மகான் காரியம் செய்யும் மகான் ஆத்மா, ஒரு பொழுதும் தன்னை சாதாரணமானவர் என்று நினைக்காதீர்கள். யாருடையவனாகி விட்டேன் மற்றும் என்னவாகி விட்டேன்? இதே நினைவு என்ற இருக்கையில் அமர்ந்து இருங்கள். இந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தீர்கள் என்றால் ஒருபோதும் மாயா வர முடியாது. தைரியம் வைக்க முடியாது. ஆத்மாவின் இருக்கை சுயமரியாதை என்ற இருக்கை, அதில் அமருபவர்கள் சுலபமாகவே மாயாவை வென்றவர்கள் ஆகி விடுகிறார்கள்.

**3. அனைத்து சம்மந்தங்களையும் ஒருவருடன் இணைத்து பந்தனத்திலிருந்து விடுபட்ட யோக சொரூபமானவர்கள் ஆகுங்கள்!** எப்பொழுதும் தன்னை பந்தனத்திலிருந்து விடுபட்ட ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? சுதந்திரமாகி விட்டீர்களா அல்லது இன்னும் ஏதாவது பந்தனம் இருந்து விட்டதா? பந்தனத்திலிருந்து விடுபட்டவரின் அடையாளம் எப்பொழுதும் யோக சொரூபமானவர். யோக சொரூபம் இல்லையென்றால் அவசியம் பந்தனம் இருக்கிறது. எப்பொழுது தந்தையினுடையவர் ஆகி விட்டீர்கள் என்றால் தந்தையைத் தவிர வேறு என்ன நினைவு வரும்? எப்பொழுதும் பிரியமான பொருள் மற்றும் நல்ல பொருள் நினைவு வருகிறது இல்லையா, அப்படி தந்தையை விட சிரேஷ்ட பொருள் அல்லது நபர் யாராவது இருக்கிறார்களா?

எப்பொழுது தந்தையைத் தவிர வேறு யாரும் சிரேஷ்டமானவர் இல்லை என்று புத்தியில் தெளிவாகி விடுகிறது என்றால் சகஜயோகி ஆகி விடுகிறார். சுலபமாக பந்தனத்திலிருந்து விடுபட்டவராகவும் ஆகி விடுகிறார். கஷ்டப்பட வேண்டியm திருக்காது. அனைத்து சம்மந்தமும் தந்தையுடன் இணைந்து விட்டது. என்னுடையது என்னுடைய என்ற அனைத்தும் முடிவடைந்தது இதைத் தான் அனைத்து சம்மந்தங்களும் ஒருவருடன் என்று கூறுவது.

**4. நெருக்கமான ஆத்மாக்களின் அடையாளம் -சமமானவர்கள்!** எப்பொழுதும் தன்னை நெருக்கமான ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? நெருக்கமான ஆத்மாக்களின் அடையாளம் சமமானவர்கள். யார் யாருடைய நெருக்கத்தில் இருப்பாரோ, அவர் மேல் இன்னொருவருடன் இருப்பதின் பாதிப்பு இயல்பாகவே ஏற்படும். அப்படி தந்தையின் சமீபம் என்றால் தந்தைக்குச் சமம் எது தந்தையின் குணமோ அது குழந்தைகளின் குணம், எது தந்தையின் கடமையோ அது குழந்தைகளின் கடமை. எப்படி தந்தை எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்பவர் அதே போல் குழந்தைகளும் உலகிற்கு நன்மை செய்பவர். எனவே என்ன என்ன காரியம் செய்கிறேனோ என்ன என்ன வார்த்தைகள் பேசுகிறேனோ அது தந்தைக்கு சமமானதாக இருக்கிறதா என்று ஒவ்வொரு நேரமும் சோதனை செய்யுங்கள். எப்படி தந்தை எப்பொழுதும் சம்பன்னமாக இருக்கிறார், சர்வசக்திவானாக இருக்கிறார் அதே போலவே குழந்தைகளும் மாஸ்டர் ஆகி விடுவார்கள். எந்த ஒரு குணத்தின், சக்தியின் குறைவு இருக்காது. சம்பன்னமாக இருக்கிறார்கள் என்றால் ஆடாமல், அசையாமல் உறுதியாக இருப்பார்கள்.

**5. சேவைக்காக அங்கு இங்கு ஓடுவது கூட மன மகிழ்ச்சிக்கான சாதனம்!** அனைவரும் தன்னை ஒவ்வொரு அடியில் நினைவு மற்றும் சேவை மூலமாக பலமடங்கு வருமானத்தை சேமிக்கக் கூடிய பல மடங்கு பாக்கியம் நிறைந்தவர் என்று நினைக்கிறீர்களா? வருமானம் செய்வதற்கு எவ்வளவு சுலபமான வழி கிடைத்திருக்கிறது. சௌகரியமாக அமர்ந்து தந்தையை நினைவு செய்யுங்கள் மற்றும் வருமானத்தை சேமிப்பு செய்து கொண்டே இருங்கள். மன சக்தி மூலம் மிகுந்த வருமானம் செய்ய முடியும், ஆனால் இடை இடையே சேவையின் சாதனங் களில் அங்கு இங்கு ஓட வேண்டியதிருக்கிறது, அதுவோ

மனமகிழ்ச்சிக்கான பொழுது போக்கு. பொதுவாக வாழ்க்கையில் மாற்றத்தை விரும்புகிறார்கள் என்றால், மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. அந்த மாதிரி சம்பாதிப்பதற்கான வழி அதிகம் இருக்கிறது, ஒரு நொடியில் பல மடங்கு சேமிப்பாகி விடுகிறது. நினைவு செய்தார் மற்றும் ஒரு பூஜ்யம் அதிகரித்து விட்டது எனவே சுலபமான அழியாத வருமானம் செய்வதிலேயே பிஸியாகி இருங்கள்.

**பஞ்சாப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டே பாப்தாதா கூறினார்:** பஞ்சாப்பைச் சேர்ந்த சேவாதாரி குழந்தைகளுக்கு சேவையில் இருக்கும் ஊக்கம் உற்சாகத்திற்காக பாராட்டுக்கள்! எவ்வளவு சேவையோ அந்த அளவு அதிகம் வெண்ணெய் சாப்பிடுபவர்கள் ஆவீர்கள். இந்த மேளாவோ (பெரிய சேவை நிகழ்ச்சி) எல்லைக்கப்பாற்பட்ட சேவை ஆகும். மேளா என்றால் ஆத்மாக்களை பாபாவுடன் சந்திக்க வைப்பதற்கு பொறுப்பாளர் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். எல்லைக்கப்பாற்பட்ட சேவை, அளவற்ற ஊக்கம் வைத்து சேவை செய்தார்கள். மேலும் எப்பொழுதும் அந்த மாதிரி ஊக்கம் உற்சாகத்தில் இருந்து கொண்டே முன்னேறிச் சென்று கொண்டே இருக்க வேண்டும். மிக நல்ல பழைய பாலனை பெற்ற குழந்தைகள் பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். ழைய குழந்தைகளின் பாக்கியத்தையோ இதுவரையிலும் சாஸ்திரங்களிலும் மகிமை பாடுகிறார்கள். மேலும் சைத்தன்யத்தில் புதுப் புது குழந்தைகள் யார் வருகிறார்களோ அவர்களும் அவர்களைப் பற்றி வர்ணனை செய்கிறார்கள். அப்படி பதமாபதி ஆவதற்கான வாய்ப்பை எடுக்கக் கூடிய சேவாதாரி குழந்தைகளுக்கு பல மடங்கு அன்பு நினைவுகள் நல்லது.

**வரதானம்: மனம் புத்தியால் எந்த ஒரு தீயதையும் தொடாத சம்பூர்ண வைஷ்ணவன் மற்றும் வெற்றி தபஸ்வி ஆகுக!**

தூய்மையின் தனித்தன்மை மற்றும் ராயல் தன்மை உள்ளவர்கள் மனம் புத்தியால் எந்த ஒரு தீயதையும் தொட முடியாது. எப்படி பிராமண வாழ்க்கையில் உடற்கவர்ச்சி மற்றும் உடலைத் தொடுவது தூய்மையின்மையோ அதே போல் மனம், புத்தியில் எந்த ஒரு விகாரத்தின் எண்ண அளவில் கவர்ச்சி மற்றும் தொடுவது

தூய்மையின்மை ஆகும். எனவே எந்த ஒரு தீயதையும் எண்ணத்தில் கூட தொடாமல் இருப்பது என்பது தான் சம்பூர்ண வைஷ்ணவன் மற்றும் வெற்றி நிறைந்த தபஸ்வியின் அடையாளம்.

**சுலோகன்: மனதின் உளைச்சலை முடித்து விட்டு தற்சமயத்தையும் எதிர்காலத்தையும் ஒளிமயமானதாக ஆக்குங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 13.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தியாகி, மஹாதியாகியின் விளக்கம்!

பிராமண ஆத்மாக்களில் சர்வஸ்வ (அனைத்து வித) தியாகி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மூன்று விதமான குழந்தைகள் இருக்கிறார்கள். ஒன்று தியாகி, இன்னொன்று மஹாதியாகி, மூன்றாவது சர்வதியாகி. மூவர்களுமே தியாகிகள் தான், ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள்.

தியாகி -யார் ஞானம் மற்றும் யோகா மூலமாக தன்னுடைய பழைய சம்பந்தம், பழைய உலகம், பழைய தொடர்பு மூலமாக பிராப்தி ஆகியிருக்கும் அற்பகால பிராப்திகளை தியாகம் செய்து எண்ணம் மூலமாக பிராமண வாழ்க்கை அதாவது யோகி வாழ்க்கையைக் கடைப்பிடித்திருக்கிறாரோ, அதாவது பழைய வாழ்க்கையை விட இந்த யோகி வாழ்க்கை சிரேஷ்டமானது என்று அனைத்தையும் தாரணை செய்திருக்கிறார். அற்ப கால பிராப்தியை விட இந்த சதா காலத்து பிராப்தியை பிராப்தி செய்வது அவசியமாகும். அப்படி அதை அவசியம் என்று புரிந்ததின் ஆதாரத்தில் ஞான, யோகத்தின் பயிற்சியுள்ளவராக ஆகி விட்டார். பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி என்று கூறிக் கொள்ள உரிமையுள்ளவர்கள் ஆகி விட்டீர்கள் ஆனால் பிரம்மா குமார், பிரம்மா குமாரி ஆன பிறகு கூட பழைய சம்பந்தம், எண்ணம் மற்றும் சம்ஸ்காரம் சம்பூர்ணமாக மாற்றம் ஆகவில்லை, ஆக மாற்றம் செய்வதின் யுத்தத்தில் எப்பொழுதும் முழுமையாக ஈடுபட்டிருக்கிறீர்கள். இந்த நேரம் பிராமண சம்ஸ்காரம், அடுத்த நேரம் பரிவர்த்தனை (மாற்றம்) செய்வதின் யுத்த சொரூபத்தில் இருக்கிறீர்கள். இந்நிலையைத் தான் தியாகி ஆகியிருக்கிறீர்கள், ஆனால் சம்பூர்ண பரிவர்த்தனை செய்யவில்லை என்று கூறுவது. தியாகம் செய்வது தான் மஹா பாக்கியவான் ஆவது என்று நினைப்பவராக மற்றும் புரிந்து கொள்பவராக மட்டும் ஆகியிருக்கிறீர்கள். செய்வதற்கான தைரியம் குறைவாக இருக்கிறது. அலட்சியத்தின் சம்ஸ்காரம் அடிக்கடி வெளிப்படுவதினால் தியாகத்தின்

கூடவே ஓய்வு விரும்பியாகவும் ஆகி விடுகிறார்கள். புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள், இந்த வாழ்க்கையில் இருந்து கொண்டும் இருக்கிறார்கள், முயற்சியும் செய்கிறார்கள், பிராமண வாழ்க்கையை விடவும் முடியாது, பிராமணனாகத் தான் இருக்க வேண்டும் என்ற இந்த எண்ணமும் உறுதியாக இருக்கிறது. மாயா மற்றும் மாயாவி உறவினர்கள் பழைய வாழ்க்கையில் வருவதற்காக தன் பக்கம் கவர்ந்து இழுக்கவும் செய்தாலும், பிராமண வாழ்க்கை தான் உயர்ந்தது என்ற இந்த எண்ணத்தில் உறுதியாக இருக்கிறார்கள். இதில் உறுதியான நிச்சயபுத்தி உடையவர்களாக இருக்கிறார்கள் ஆனால் சம்பூர்ண தியாகி ஆவதற்காக இரண்டு விதமான தடை முன்னேற விடுவதில்லை. அது எது? ஒன்று எப்பொழுதும் தைரியம் வைக்க முடிவ தில்லை அதாவது, தடைகளை எதிர்நோக்குவதற்கான சக்தி குறைவாக இருக்கிறது. இரண்டாவது அலட்சியத்தின் சொரூபமான ஓய்வு விரும்பியாக ஆகி நடந்து கொள்வது. படிப்பு, நினைவு, தாரணை மற்றும் சேவை அப்படி அனைத்து பாடங்களையும் செய்து கொண்டிருக்கிறோம் ஆனால் மிகவும் நிதானமாக சம்பூர்ண பரிவர்த்தனை செய்வதால் ஆயுதம் தரித்த சக்தி சொரூபத்தில் குறை ஏற்பட்டு விடுகிறது. அன்பு வைத்திருப்பவர்தான், ஆனால் சக்தி சொரூபமாக இல்லை. மாஸ்டர் சர்வசக்திவான் சொரூபத்தில் நிலைத்திருக்க முடிவதில்லை, எனவே மஹாதியாகி ஆக முடியாது. இவர்கள் தான் தியாகி ஆத்மாக்கள்.

மஹாதியாகி -எப்பொழுதும் சம்பந்தம், எண்ணம் மற்றும் சம்ஸ்காரம் அனைத்தையும் பரிவர்த்தனை செய்வதற்கு எப்பொழுதும் தைரியம் மற்றும் உற்சாகத்தில் இருப்பார்கள். பழைய உலகம் மற்றும் பழைய சம்பந்தத்திலிருந்து எப்பொழுதும் விலகி இருப்பார். மஹாதியாகி ஆத்மாக்கள் எப்பொழுதும் இந்தப் பழைய உலகம் மற்றும் உறவினர்கள் ஏற்கனவே இறந்து விட்டார்கள் என்று அனுபவம் செய்வார்கள். இதற்காக யுத்தம் செய்ய வேண்டியதாக இருக்காது. எப்பொழுதும் அன்பானவராக, சகயோகி, சேவாதாரி சக்தி சொரூபத்தின் நிலையில் நிலைத்திருப்பார்கள், மிச்சம் வேறு என்ன இருந்து விடுகிறது. மஹாதியாகியின் பலன் சொரூபமாக, தியாகத்தின் பாக்கியமாக இருக்கும் மஹாஞானி, மஹாயோகி, சிரேஷ்ட சேவாதாரி ஆகி விடுகிறார்கள். இந்த பாக்கியத்தின் அதிகாரத்தை அங்கங்கே தவறான போதையின் ரூபத்தில் உபயோகப் படுத்தி விடுகிறார்கள். கடந்த கால

வாழ்க்கையின் சம்பூர்ண தியாகம் இருக்கிறது ஆனால் தியாகத்தினும் தியாகம் இல்லை. இரும்புச் சங்கிலிகளை துண்டித்து விட்டார்கள், இரும்புக் காலத்திலிருந்து பொற்காலமாகவோ ஆகி விட்டார், ஆனால் சில நேரங்களில் பரிவர்த்தனை, இந்த இனிமையான வாழ்க்கையின் தங்கச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு விடுகின்றன. இந்த தங்கச் சங்கிலிகள் எவை? நான் மற்றும் என்னுடையது. நான் நல்ல ஞானி, நான் ஞான சொரூப ஆத்மா, யோக சொரூப ஆத்மா. இந்த தங்கச் சங்கிலிகள் சில நேரம் பந்தனத்திலிருந்து விடுபட்டவராக ஆக விடுவதில்லை. மூன்று விதமான குடும்பம் இருக்கிறது. 1) உலகியல் குடும்பம் மற்றும் வேலை, தொழிலின் குடும்பம், 2) தன்னுடைய உடல் என்ற குடும்பம் 3) சேவை என்ற குடும்பம்.

தியாகியாக இருப்பவர் உலகத்து குடும்பத்திலிருந்து விடுபட்டு விட்டார் ஆனால் உடல் என்ற குடும்பம் அதாவது தன்னை தானே நடத்துவிப்பதில் மற்றும் உருவாக்குவதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பது மற்றும் தேக உணர்வின் சுபாவத்திற்கு வசமாவது, மேலும் அந்த சுபாவத்தின் காரணமாகத் தான் அடிக்கடி தைரியம் அற்றவர் ஆகி விடுகிறார். புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள், விரும்பவும் செய்கிறார்கள், ஆனால் அவர்களே கூறுகிறார்கள் இது என்னுடைய நேச்சர் என்று. இதுவும் தேக உணர்வின், தேகத்தின் குடும்பம், இதில் சக்தி சொரூபமாக இருக்க வேண்டும். மேலும் இந்தக் குடும்பத்திலிருந்தும் விலகி விட வேண்டும் என்பதை அவர்களால் செய்ய முடிவதில்லை. இது தியாகியின் விஷயத்தைக் கூறினோம் ஆனால் மஹா தியாகி உலகத்து குடும்பம் மற்றும் தேகத்தின் குடும்பம் இரண்டிலிருந்தும் விலகி விடுகிறார் ஆனால் சேவை என்ற குடும்பத்தில் சில நேரம் விலகுவதற்குப் பதிலாக மாட்டிக் கொள்கிறார். அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு தன்னுடைய தேக உணர்வும் தொந்தரவு செய்வதில்லை, ஏனென்றால் இரவு பகலாக சேவையில் மூழ்கியிருக்கிறார். தேகத்தின் குடும்பத்திலிருந்தோ விலகி விடுகிறார். இந்த இரண்டின் தியாகத்தின் பாக்கியமாக - ஞானி மற்றும் யோகி ஆகி விட்டார், சக்திகளின் பிராப்தி, குணங்களின் பிராப்தி ஆகி விட்டது. பிராமண பரிவாரத்தில் பிரசித்தி பெற்ற ஆத்மாக்கள் ஆகி விட்டனர் ஆனால் இந்த சேவையின் குடும்பத்தின் விஸ்தாரமாக என்ன இருக்கிறதோ அந்த விஸ்தாரத்தில் ஒட்டிக் கொள்கிறார்கள். இந்த அனைத்து பிராப்தியையும் மஹாதானி ஆகி மற்றவர்களுக்கு தானம்

செய்வதற்குப் பதிலாக தனக்காக எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். அப்படி நான் மற்றும் என்னுடையது என்ற சுத்த உணர்வின் தங்கச் சங்கிலி ஆகி விடுகிறது. நான் எனக்காக கூறவில்லை, சேவைக்காக கூறுகிறேன் என்ற உணர்வு மற்றும் வார்த்தைகள் மிகவும் சுத்தமாக இருக்கும். நான் என்னை ஒரு பொழுதும் தகுதியான டீச்சர் என்று கூறியதில்லை ஆனால் அனைவரும் என்னை விரும்பி அழைக்கிறார்கள். நானோ விலகி இருப்பவளாக இருக்கிறேன் ஆனால் மற்றவர்கள் என்னை அன்பானவராக ஆக்கி விடுகிறார்கள். இதை என்னவென்று கூறுவது? தந்தையைப் பார்த்தார்களா அல்லது உங்களைப் பார்த்தார்களா? உங்களுடைய ஞானம் நன்றாக இருக்கிறது, நீங்கள் சேவை செய்யும் முறை நன்றாக இருக்கிறது என்று பிடித்திருக்கிறது என்றால், தந்தை எங்கே சென்று விட்டார்? தந்தையை பரம்தாம நிவாசியாக ஆக்கி விட்டார்கள். இந்த பாக்கியத்தையும் தியாகம் செய்ய வேண்டும். அதாவது நீங்கள் தென்படக்கூடாது, தந்தை தென்பட வேண்டும். மஹான் ஆத்மா மேல் அன்பு வைத்திருப்பவர்களாக ஆக்காதீர்கள், பரமாத்மா மேல் அன்புள்ளவர்களாக ஆக்குங்கள். இதைத் தான் மற்ற குடும்பங்களைக் கடந்து வந்து இந்த கடைசி குடும்பத்தில் அனைத்தையும் தியாகம் செய்தவர் ஆவதில்லை என்று கூறுவது. அப்படி மஹாபாக்கியம் நிறைந்தவராகவே ஆகியிருக்கிறார், ஆனால் அனைத்தையும் தியாகம் செய்தவராக ஆகவில்லை. அப்படி இரண்டாம் நம்பரின் மஹாதியாகியைப் பற்றி கேட்டீர்களா? இன்னும் இருப்பது அனைத்தும் தியாகம் செய்தவர் பற்றி....

இது தான் தியாகப் படிப்பின் இறுதி முழுமையான பாடம். இறுதிப் பாடமாக இருக்கிறது. அதை பின்பு கூறுவோம், ஏனென்றால் 83-ல் மஹா யக்ஞம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ மேலும் மஹான் ஸ்தானத்தில் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் அனைவரும் கொஞ்சமாவது ஆஹுதி போடுவார்கள் இல்லையா அல்லது ஹால் கட்டுவதற்கான ஏற்பாடு மட்டும் செய்வீர்களா? மற்றவர்களுக்கு சேவையோ செய்வீர்கள். தந்தையின் பிரத்யக்ஷத்தின் ஓசை நாலா புறங்களிலும் நன்றாக ஒலிப்பதற்காக பெரிய பெரிய மைக்குகளையும் அழைத்து வருவீர்கள். இந்த திட்டத்தை தீட்டி இருக்கிறீர்கள் இல்லையா? ஆனால் தந்தை தனியாக பிரத்யக்ஷம் ஆவாரா அல்லது சிவ சக்தி இருவர்களும் பிரத்யக்ஷம் ஆவார்களா? சக்தி சேனை என்றால் ஆண்,

பெண் இருவர்களுமே வந்து விடுகிறார்கள். தந்தை குழந்தைகளுடன் சேர்ந்து பிரத்யக்ஷம் ஆவார். அப்படி மைக் மூலமாக செய்தியை நன்றாக ஒலிக்கச் செய்வது பற்றியோ யோசித்திருக்கிறீர்கள் ஆனால் உலகில் செய்தி பரவி விடும், மேலும் பிரத்யக்ஷத்தின் திரையும் அகற்றப் பட்டுவிடும் ஆனால் பிரத்யக்ஷம் ஆகக்கூடிய மூர்த்திகளும் சம்பன்னமாக இருக்க வேண்டும் இல்லையா? அல்லது திரை அகன்று விட்டது சிலர் தயாராகிக் கொண்டிருக்கிறார், சிலர் உட்கார்ந்திருக்கிறார்கள், அந்த மாதிரி காட்சியோ காண்பிக்க வேண்டாம் இல்லையா. சிலர் சக்தி சொரூப கேடயத்தைப் பிடித்திருக்கிறார்கள், சிலர் வாளை பிடித்திருக்கிறார்கள். அந்த மாதிரி புகைப்படமோ எடுக்க வேண்டாம் இல்லையா? எனவே என்ன செய்ய வேண்டும்? சம்பூர்ண சுவாஹா செய்ய வேண்டும். இதற்காகவும் நிகழ்ச்சி தயாரிக்க வேண்டும் இல்லையா. அப்படி மஹாயக்ஞத்தில் தங்கச் சங்கிலிகளையும் சுவாஹா செய்து விட வேண்டும் ஆனால் அதற்கு முன்பு இப்பொழுதிலிருந்தே பயிற்சி வேண்டும். 83-ல் செய்ய வேண்டும் என்று அப்படி இல்லை. எப்படி நீங்களும் முதலில் சேவாதாரியாகவோ முன்பே ஆகி விடுகிறீர்கள். மேலும் சமர்ப்பணம் நிகழ்ச்சி பிறகு நடக்கும். இந்த அனைத்தையும் சுவாஹா செய்யும் நிகழ்ச்சியும் 83-ல் செய்ய வேண்டும் ஆனால் நீண்ட காலத்து பயிற்சி வேண்டும் புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக அனைத்தையும் தியாகம் செய்த, எப்பொழுதும் பிரம்மாபாபாவிற்கு சமமாக பிராப்தி ஆகியிருக்கும் பாக்கியத்தையும் அளவற்று தானம் செய்யும், அந்த மாதிரி எப்பொழுதும் தந்தைக்கு உண்மையான கட்டளைப்படி மற்றும் தந்தையைப் பின்பற்றி நடக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: எப்பொழுதும் அனைத்து பிராப்திகளின் நினைவு மூலமாக யாசிக்கும் சம்ஸ்காரங்களிலிருந்து விடுபட்டு இருக்கக்கூடிய சம்பன்னம் மற்றும் நிரம்பியவர் ஆகுக!**

ஒரு நிரம்பிய நிலை வெளிமுகமானது, ஸ்தூல பொருட்களால், சாதனங்களினால் நிரம்பிய நிலை ஆனால் இன்னொன்று மனதின் நிரம்பிய நிலை. யார் மனதால் நிரம்பி இருக்கிறாரோ அவரிடம் ஸ்தூல

பொருட்கள், சாதனங்கள் இல்லா விட்டாலும் மனம் நிரம்பியிருக்கும் காரணத்தினால் அவர் தன்னிடம் குறையை அனுபவம் செய்ய மாட்டார். அனைத்தையும் அடைந்து விட்டோம் என்ற இந்தப் பாடலைத் தான் எப்பொழுதும் பாடிக் கொண்டே இருப்பார். அவரிடம் யாசிக்கும் சம்ஸ்காரம் அம்ச மாத்திரம் கூட இருக்காது.

**சுலோகன்: தூய்மை அந்த மாதிரியான அக்னி, அதில் அனைத்து தீயவைகளும் எரிந்து சாம்பலாகி விடுகின்றன!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுகத்தின் சுயராஜ்ய தர்பார்தான் அனைத்தையும் விட உயர்ந்த தர்பார்!

இன்று பாப்தாதா எந்த தர்பாரில் வந்திருக்கிறார்? இன்றைய இந்த தர்பாரில் பாப்தாதா தன்னுடைய உலகின் இராஜ்ய ஸ்தாபனையின் காரியத்தில் இராஜ்ய சகயோகி ஆத்மாக்களை அதாவது தன்னுடைய இராஜ்ய காரிய விவகாரங்களின் அதிகாரி குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். சங்கமயுகத்தின் சுயராஜ்ய தர்பாரை பார்த்துக் கொண்டிருக்கிறார். சுயராஜ்ய தர்பாரில் நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து விதமான சகயோகி ஆத்மாக்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த சுயராஜ்ய தர்பாரின் விசேஷ சிரோமணி இரத்தினம் பாப்தாதாவின் எதிரில் ஸ்தூல ரூபத்தில் தூரத்தில் இருந்தாலும் மாலையின் ரூபத்தில் இராஜ்ய அதிகாரி சிம்மாசனத்தில் எதிரில் தென்பட்டுக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு இராஜ்ய அதிகாரி சகயோகி ஆத்மா அவரவர்களின் விசேஷங்களின் ஜொலிப்பில் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் விதவிதமான குணங்கள் என்னும் நகைகளினால் அலங்கரிக்கப் பட்டிருக்கிறார்கள். சிம்மாசனத்தின் இராஜ அடையாளமாக என்ன இருக்கும்? அனைவரும் தர்பாரில் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? சிலர் முன்னால் இருக்கிறீர்கள், சிலர் பின்னால் இருக்கிறீர்கள், ஆனால் அனைவரும் தர்பாரில் இருக்கிறீர்கள். சிம்மாசனத்தின் இராஜ அடையாளமாக வெண்கொற்றக் குடை என்ற குடை மிக நன்றாக ஜொலித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் இரட்டை கிரீடம் அதாவது ஃபரிஷ்தா சொரூபத்தின் அடையாளத்தின் கூடவே உலக நன்மைக்கான எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் கிரீடம் அணிந்தவர். கிரீடமோ அனைவரிடமும் இருக்கிறது ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறது. சிலரின் இரண்டு கிரீடங்களும் சமமாக இருக்கிறது. சிலருக்கு ஒன்று சின்னது என்றால் இன்னொன்று பெரியதாக இருக்கிறது. மேலும் சிலருக்கு இரண்டுமே சிறியதாக இருக்கிறது. கூடவே ஒவ்வொரு ராஜ்ய

அதிகாரியின் தூய்மையின் தனித்தன்மையும் அவரவர்களுடையது. ஆன்மீகத்தின் அவரவர்களின் இராயல்தன்மை வரிசைக்கிரமமாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி சுயராஜ்ய அதிகாரி சகயோகி ஆத்மாக்களின் தர்பாரை பார்த்துக் கொண்டிருக்கிறோம். சங்கமயுக சிரேஷ்ட தர்பார் மற்றும் எதிர்கால இராஜ தர்பார் இரண்டிற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. இப்போதைய தர்பார் பல ஜென்மங்களின் தர்பாருக்கான அஸ்திவாரம் இப்போதைய தர்பாரின் ரூபம் வடிவம் எதிர்கால தர்பாரின் ரூபம் வடிவத்தை உருவாக்கக் கூடியது. எனவே இப்போதைய இராஜ்ய அதிகாரி சகயோகி தர்பாரில் என்னுடைய இடம் எது என்று உங்களை நீங்களே பார்க்க முடியும். சோதனை செய்யும் இயந்திரம் அனைவரிடமும் இருக்கிறதா? எப்பொழுது அறிவியல் துறையினர் புதுப்புது இயந்திரங்கள் மூலமாக பூமியின் மேலே இருக்கும் ஆகாய மண்டலத்தின் படத்தை வரைய முடியும், அங்கே உள்ள வாயுமண்டலத்தின் செய்தியை சொல்ல முடியும், முன்பாகவே இயற்கையின் தத்துவங்களின் சீற்றத்தின் செய்தியைக் கூற முடியும் என்றால், நீங்கள் அனைத்து சக்திகள் நிரம்பிய தந்தையின் அதிகாரம் உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுடைய தெய்வீக புத்தி இயந்திரத்தின் மூலமாக மூன்று காலத்தின் ஞானத்தின் ஆதாரத்தினால் தன்னுடைய நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும் ஏன் தெரிந்து கொள்ள முடியாது. இயந்திரமோ அனைவரிடமும் இருக்கிறது தான் இல்லையா? தெய்வீக புத்தியோ அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. இந்த தெய்வீக புத்தி என்று இயந்திரத்தை எப்படி உபயோகிக்க வேண்டும், எந்த ஸ்தானத்தில் அதாவது எந்த நிலையில் நிலைத்திருந்து உபயோகிக்க வேண்டும் என்ற அதையும் தெரிந்திருக்கிறீர்கள். மூன்று காலங்களையும் தெரிந்த நிலை என்ற ஸ்தானத்தில் நிலைத்திருந்து மூன்று காலங்களின் ஞானத்தின் ஆதாரத்தில் இயந்திரத்தை உபயோகியுங்கள். உபயோகிக்க தெரியுமா? முதலிலோ இடத்தில் அமரத் தெரியுமா? அதாவது நிலையில் நிலைத்திருக்கத் தெரியுமா? எனவே இதே இயந்திரங்கள் மூலமாக என்னுடைய வரிசை எண் எது என்று உங்களை நீங்களே பாருங்கள். புரிந்ததா.

இன்று சர்வஸ்வ தியாகிகளின் (அனைத்தையும் தியாகம் செய்தவர்களின்) விஷயத்தைக் கூறவில்லை. இப்பொழுது கடைசி பாடம் இன்னும் கற்பிக்க வேண்டியதிருக்கிறது. இன்று பாப்தாதா தன்னுடைய

இராஜ தர்பாரிலிருக்கும் துணைவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் இங்கே வந்து சேர்ந்து விட்டார்கள். இன்றைய சபையில் விசேஷமாக அன்பான ஆத்மாக்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால், அன்பான ஆத்மாவுக்கு பாப்தாதாவும் அன்பின் பிரதிபலனாக அன்பு கொடுப்பதற்காக அன்பான தர்பாரில் வந்து சேர்ந்து விட்டார். இதுவும் அன்புக் கடல் மற்றும் நதிகளின் மேளா (சந்திப்பு). அப்படி மேளாவை கொண்டாடுவது என்றால், உற்சவத்தைக் கொண்டாடுவது. இன்று பாப்தாதாவும் மேளாவின் உற்சவத்தில் வந்திருக்கிறார். பாப்தாதா மேளாவைக் கொண்டாடும், அன்பைப் பெறுவதற்கான பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களைப் பார்த்து இவ்வளவு முழு விசால உலகத்தில் அளவற்ற எண்ணிக்கைகளின் நடுவே எப்படிப்பட்ட ஆத்மாக்கள் சந்திப்பதற்கான பாக்கியத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து மகிழ்ச்சியடைகிறார். உலகின் எதிரில் நம்பிக்கை இல்லாத ஆத்மாக்கள் தன்னுடைய அனைத்து விருப்பங்களை, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான பாக்கியத்தை அடைந்து விட்டார்கள். மேலும் உலகின் எதிரில் யார் பெயர் பெற்ற நம்பிக்கைக்குரிய ஆத்மாக்களாக இருக்கிறார்களோ அவர்கள் யோசித்துக் கொண்டும் தேடிக் கொண்டே இருந்து விட்டார்கள். தேடுதல் செய்து செய்து தேடுதலிலேயே மூழ்கி விட்டார்கள். மேலும் அன்பான ஆத்மாக்கள் நீங்களோ அன்பின் ஆதாரத்தில் அடைந்து விட்டீர்கள். அப்படியானால் சிரேஷ்டமானவராக யார் ஆனார்கள்? சிலர் சாஸ்திரத்தின் காரணமாக செய்து சாஸ்திரங்களிலேயே இருந்து விட்டார்கள். சிலர் மகாத்மாக்களாக ஆகி ஆத்மா மற்றும் பரமாத்மாவின் மிகச்சிறிய பிரம்மையில் தன்னுடைய பாக்கியத்தைத் பெறுவதிலிருந்து தங்கிப்போய் விட்டார்கள். குழந்தைகளாகி தந்தையின் அதிகாரத்தைப் பெறுவதிலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக இருந்து விட்டார்கள். பெரிய பெரிய விஞ்ஞானிகள் தேடுதல் செய்து அதிலேயே மூழ்கி விட்டார்கள். அரசியல்வாதிகள் திட்டங்களை உருவாக்கி உருவாக்கியே இருந்து விட்டார்கள். வெகுளியான பக்தர்கள் அணு அணுவில் தேடிக் கொண்டே இருந்து விட்டார்கள் ஆனால் யார் அடைந்தார்கள்? போலாநாத்தின் (கள்ளம் கபடமற்றவரின்) போலே (வெகுளியான) குழந்தைகள் அடைந்தார்கள். பெரிய புத்தியுடையவர்கள் அடையவில்லை ஆனால் உண்மையான உள்ளம் உடையவர்கள் அடைந்தார்கள். எனவேதான் உண்மையான உள்ளமுடையோர் மீது இறைவன் திருப்தியாக இருக்கிறார் என்ற

பழமொழி இருக்கிறது எனவே நீங்கள் அனைவரும் உண்மையான உள்ளத்தினால் இதய சிம்மாசனதாரிகள் ஆக முடியும். உண்மையான உள்ளத்தினால் திலாராம் (உள்ளம்) தந்தையை தன்னுடையவராக ஆக்க முடியும். திலாராம் தந்தை உண்மையான உள்ளம் இன்றி ஒரு விநாடி கூட நினைவு ரூபத்தில் நிலைத்திருக்க முடியாது. உண்மையான உள்ளம் உள்ளவர்களின் மிக உயர்ந்த எண்ணம் என்ற விருப்பங்கள் சுலபமாக நிறைவேறிவிடுகின்றன. உண்மையான உள்ளம் உள்ளவர்கள் தந்தையின் துணையை சாகாரத்தில் (ஸ்தூலமாக) இவ்வுலகில், ஆக்காரம் (சூட்சுமமாக) நிராகார் (உடலற்ற) மூன்று ரூபங்களிலும் எப்பொழுதும் துணையை அனுபவம் செய்கிறார்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அன்புக் கடலுடன் சந்திப்பை செய்யும் வற்றாமல் ஓடிக் கொண்டிருக்கும் கங்கைகளுக்கு, எப்பொழுதும் அன்பின் ஆதாரத்தினால் பாப்தாதாவை அனைத்து சம்பந்தத்தில் தன்னுடையவர் என்று அனுபவம் செய்யும், கள்ளம் கபடமற்ற தந்தையிடம் எப்பொழுதும் வியாபார ஒப்பந்தம் செய்யக்கூடிய, அந்த மாதிரி அன்பான உண்மையான உள்ளம் உள்ள உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** சேவாதாரிகளுக்கு எப்பொழுதும் புத்தியில் என்ன நினைவிருக்கிறது? சேவை மட்டுமா அல்லது நினைவு மற்றும் சேவையா? எப்பொழுது நினைவு மற்றும் இரண்டின் சமநிலை இருக்கிறது என்றால், இயல்பாகவே வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். வளர்ச்சி அடைவதற்கான சுலபமான வழியே சமநிலை. தற்சமயத்தின் கணக்குப்படி அனைத்து ஆத்மாக்களுக்கும் மிக அதிகமாக அமைதி வேண்டுமென்று விருப்பம் இருக்கிறது. எனவே எங்கெல்லாம் சேவை வளர்ச்சியடைவில்லையோ அப்படியே இருந்து விடுகிறது என்று பார்க்கிறீர்கள் என்றால், அங்கே நம்முடைய சேவை நிலையத்தின் சூழ்நிலையை அமைதி குண்டம் மாதிரி ஆக்கி விடுங்கள். ஒரு அறையில் விசேஷமாக இந்த வாயுமண்டலம் மற்றும் ரூபம், வடிவம் நிறைந்ததாக உருவாக்குங்கள். எப்படி பாபாவின் அறையை தயார் செய்கிறீர்கள். அதே மாதிரி முறையோடு உருவாக்கினீர்கள் என்றால், துக்கமான சூழ்நிலையின் நடுவில் அமைதியின் மூலை தென்படும். அந்த மாதிரி வாயுமண்டலத்தை உருவாக்கு வதினால் அமைதியின் அனுபவத்தை

செய்விப்பதினால் சுலபமாக வளர்ச்சி அடைந்து விடும். மியூசியம் சரி தான் ஆனால் இது பார்ப்பதற்கும் மற்றும் கேட்பதற்குமான சாதனம் கேட்பவர்களுக்கும் மற்றும் தெரிந்து கொள்பவர்களுக்காக மியூசியம் சரி தான் ஆனால் அவர்கள் கேட்டு கேட்டு களைப்படைந்து விட்டார்கள். அவர்களுக்காக அமைதியின் ஸ்தானத்தை உருவாக்குங்கள். பெரும்பான்மையோர் இப்பொழுது உங்களது அனைத்து விஷயங்களையும் கேட்டு விட்டோம், அனைத்தையும் பார்த்து விட்டோம் என்று தான் கூறுகிறார்கள் ஆனால் அடைந்து விட்டோம் என்று யாரும் கூறுவதில்லை. அனுபவம் செய்தோம் அடைந்து விட்டோம் என்று இப்பொழுது கூறுவதில்லை. எனவே அனுபவம் செய்விப்பதற்கான வழி நினைவில் அமர வையுங்கள். அமைதியின் அனுபவம் செய்வியுங்கள். இரண்டு நிமிடம் கூட அமைதியின் அனுபவம் செய்து விட்டார் என்றால் அவரால் விட முடியாது. அப்படி இரண்டு வழிகளையுமே கடைப்பிடிக்க வேண்டும். மியூசியம் மட்டும் அல்ல, ஆனால் அமைதி குண்டத்தின் ஸ்தானமும் வேண்டும். எப்படி அபுவில் மியூசியமும் நன்றாக இருக்கின்றது. அமைதியின் ஸ்தானமும் கவர்ந்திழுக்கக் கூடியது. ஒருவேளை படங்கள் மூலமாகப் புரிந்து கொள்ளவில்லை என்றாலும் 2-நிமிடங்கள் நினைவில் அமர வைப்பதனால் அபிப்ராயம் மாறிவிடும். விருப்பம் மாறிவிடும். ஏதோ கொஞ்சம் கிடைக்க முடியும் என்று நினைப்பார்கள். பிராப்தி ஆக முடியும். எங்கு அடைவதற்கான விருப்பம் உருவாகிறதோ அங்கு வருவதற்காக அடி எடுத்து வைப்பது சுலபமாகி விடும். அப்படி வளர்ச்சி அடைவதற்கான வழிகளைக் கடைப்பிடியுங்கள்.

மற்றபடி சேவாதாரிகள் எப்பொழுது தன் மீதும், பிறர் மீதும் திருப்தியாக இருக்கிறார் என்றால், சகயோகம் கொடுப்பதற்கான ஊக்கம், உற்சாகம் இயல்பாகவே இருக்கும். சொல்வது மற்றும் செய்விக்க வேண்டியதிருக்காது, திருப்தி சுலபமாகவே ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வரும். சேவாதாரிக்கு, திருப்தியாக இருக்க வேண்டும் மற்றும் திருப்தி படுத்த வேண்டும் என்ற விசேஷ லட்சியம் இருக்கட்டும்.

நீங்கள் எப்பொழுதும் கடலின் கரையில் இருக்கும் புனித அன்னப் பறவைகளா? அன்னப் பறவை எப்பொழுதும் கடற்கரையில் இருக்கும் மேலும் கடலின் அலைகளோடு விளையாடிக் கொண்டே இருக்கும். தன்னை அந்த மாதிரி புனித அன்னப் பறவை என்று அனுபவம்

செய்கிறீர்களா? எப்பொழுதும் ஞான இரத்தினத்தை பொறுக்கும் அதாவது தாரணை செய்யும், எப்பொழுதும் புத்தியில் ஞான இரத்தினம் நிரம்பி இருக்கும். மற்றபடி என்னென்ன வீணான விஷயங்கள், வீணான காட்சிகள்...... இருக்கின்றன, இவை அனைத்தும் கூழாங்கற்கள் ஆகி விட்டன. அன்னப்பறவை ஒருபொழுதும் கூழாங்கற்களைப் பொறுக்காது, இரத்தினங்களைத் தான் பொறுக்கும். எனவே ஒருபொழுதும் எந்த ஒரு வீணான விஷயத்தின் பிரபாவம் ஏற்பட வேண்டாம். ஒருவேளை பிரபாவத்தில் வந்து விட்டீர்கள் என்றால், அதே சிந்தனை மற்றும் அதே பேச்சு தான் இருக்கும். சிந்தனை, பேச்சினால் வாயுமண்டலமும் அந்த மாதிரி ஆகி விடும். விஷயம் ஒன்றுமே இருக்காது ஆனால் பெரிய மலையே விழந்து விட்டது மாதிரி வாயுமண்டலம் ஆகி விடும். ஒருவேளை தன்னுடைய மனதில் சிந்தனை ஓடுகிறது மேலும் வாய்மூலம் வர்ணனை ஆகிக் கொண்டே இருக்கிறது என்றால், சின்ன விஷயம் கூட மலை ஆகி விடும், வாயுமண்டலத்தில் பரவி விடுகிறது. மேலும் ஒருவேளை அந்த விஷயத்தை உள்ளடக்கி விடுங்கள், சாட்சி ஆகி கடந்து விட்டீர்கள் என்றால், அந்த விஷயம் கடுகாகி விடும். ஆக புனித அன்னப் பறவைகள் எப்பொழுதும் கடலின் கரையில் இருப்பவர்கள். எப்பொழுதும் இதே சொரூபத்தின் நினைவில் இருங்கள்.

சேவாதாரிகள் எப்பொழுதும் வெற்றி சொரூபமாக இருப்பதற்கு தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும். தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்ற இந்த ஒரு வார்த்தை மட்டும் நினைவில் இருக்க வேண்டும். என்ன காரியம் செய்தாலும் இது தந்தையின் காரியமா என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை தந்தையினுடையது என்றால், என்னுடையதும் தான், தந்தையினுடையது இல்லையென்றால் என்னுடையதும் இல்லை. இந்த சோதனை உரைகல்லை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள். எனவே தந்தையைப் பின்பற்றி நடப்பவர் என்றால், எது தந்தையின் எண்ணமோ அதுவே என்னுடைய எண்ணம், எது தந்தையின் வார்த்தைகளோ அதுவே என்னுடையது. இதனால் என்னவாகும்? எப்படி தந்தை எப்பொழுதும் வெற்றி சொரூபமாக இருக்கிறாரோ அதே போல் நீங்களும் நிரந்தர வெற்றி சொரூபமாகி விடுவீர்கள். எனவே தந்தையின் அடி மேல் அடி வைத்து சென்று கொண்டே இருங்கள். யாராவது சென்று கொண்டிருக்கிறார், நீங்கள் அவர் பின்னாலேயே சென்று கொண்டிருந்தீர்கள் என்றால், சுலபமாகவே

சென்றடைந்து விடுவீர்கள் இல்லையா? எனவே தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள் மேலும் சகஜமாக பிராப்தியின் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும்.

**குமாரிகளுடன் சந்திப்பு: 1) குமாரிகளின் இலட்சியம் என்ன?** சேவை செய்வதற்காக முதலில் தனக்குள் அனைத்து பிராப்திகளின் அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால், எவ்வளவு பொக்கிஷம் தன்னிடம் இருக்குமோ அவ்வளவு மற்றவர்களுக்கு கொடுக்க முடியும். தினமும் இந்த ஆன்மீக படிப்பின் மேல் கவனம் கொடுக்கிறீர்களோ? படிப்பதின் கூடவே சேவைக்கான வாய்ப்பையும் எடுத்துக் கொள்கிறீர்கள். எப்பொழுதும் தன்னை இறை மாணவி என்று புரிந்து படிப்பின் மேல் கவனம் வைக்க வேண்டும். எந்த அளவு நீங்கள் படிப்பின் மீது கவனம் வைப்பீர்களோ அந்த அளவு அனுபவியாகி மற்றவர்களுக்கும் கற்பிக்க முடியும். இந்த நேரத்திற்கேற்றபடி குடும்ப வாழ்க்கை என்றால், என்ன என்று அதையும் பார்க்கிறீர்கள் தான் இல்லையா? குடும்ப வாழ்க்கை என்றால், எல்லைக்கப்பாற்பட்ட ஜெயிலில் மாட்டிக் கொள்வது! இப்பொழுது சுதந்திரமாக இருக்கிறீர்கள் இல்லையா? எத்தனை பந்தனங்களிலிருந்து விடுபட்டு இருக்கிறீர்கள். எனவே எப்பொழுதுமே அந்த மாதிரி பந்தனத்திலிருந்து விடுபட்ட, ஜீவன்முக்த் நிலையில் நிலைத்து இருங்கள். குடும்ப வாழ்க்கையையும் அனுபவம் செய்து பார்க்கலாமே என்ற எண்ணம் ஒருபொழுதும் வர வேண்டாம். குமாரி வாழ்க்கையில் தந்தையின் குழந்தை ஆகியிருக்கிறீர்கள், நீங்கள் மிகுந்த பாக்கியம் நிறைந்தவர்கள். எனவே வலது கரமாக ஆக வேண்டும், இடது கரமாக ஆகக்கூடாது.

**2) அனைத்து குமாரிகளும் தந்தையுடன் உறுதியான ஒப்பந்தம் செய்திருக்கிறீர்களா?** என்ன ஒப்பந்தம் செய்திருக்கிறீர்கள்? பாபா நான் உன்னுடையவள் என்று நீங்கள் கூறினீர்கள். மேலும் தந்தை குழந்தைகளே நீங்கள் என்னுடையவர்கள் என்று கூறினார். இந்த உறுதியான ஒப்பந்தத்தை செய்திருக்கிறீர்களா? வேறு ஒப்பந்தமோ செய்ய மாட்டீர்கள் தான் இல்லையா? இரண்டு படகுகளில் கால் வைப்பவரின் நிலைமை என்னவாகும்? இங்கேயும் இல்லை, அங்கேயும் இல்லை என்று அப்படி ஆகி விடும். ஒப்பந்தம் செய்வதிலோ திறமைசாலிகள் தான் இல்லையா? பாருங்கள் என்ன கொடுக்கிறீர்கள் -

பழைய உடல், அதற்கு ஊசியால் தையல் போடுகிறீர்கள், பலஹீனமான மனம், அதில் எந்த சக்தியும் இல்லை, மேலும் கறுப்பு பணம். . . மேலும் என்ன பெறுகிறீர்கள். 21-ஜென்மங்களுக்கு உத்திரவாதமுள்ள இராஜ்யம். அந்த மாதிரியான ஒப்பந்தத்தையோ முழுக் கல்பத்திலும் ஒருபொழுதும் செய்யவில்லையே? எனவே உறுதியான ஒப்பந்தம் செய்தீர்களா? ஒப்பந்தத்தை எழுதி விட்டீர்களா? குமாரிகள் பாப்தாதாவிற்கு மிகப் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் குமாரிகள் சமர்ப்பணம் ஆனார்கள் என்றால் ஆசிரியை ஆகி விட்டார்கள். குமார் சமர்ப்பணமானால் என்றால், ஆசிரியர் என்று கூறப்பட மாட்டார், சேவாதாரி என்று கூறப்படுவார். குமாரிக்கு ஆசிரியை பதவி கிடைத்து விடுகிறது. இன்று குமாரி, நாளை அவரை அனைவரும் தந்தைக்குச் சமமான பொறுப்பு ஆசிரியை என்ற பார்வையில் பார்க்கிறார்கள் என்றால் சிரேஷ்டமாகி விட்டார் இல்லையா? குமாரி வாழ்க்கையில் சிரேஷ்டமாகி விட்டார், பிறகு தவறான படியில் ஏறுவதிலிருந்து தப்பித்துக் கொள்வார். நீங்கள் அப்படி ஏறவும் இல்லை, பிறகு இறங்குவதற்கான கடினமும் இல்லை. குடும்பத்திலிருப்பவர்களுக்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்படி குமாரிகள் நீங்கள் எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்பவர்கள். பாப்தாதா அனைவரையும் வெற்றி சொரூபம் என்று நினைக்கிறார். ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்கு செல்லுங்கள் பந்தயம் செய்யுங்கள் ஆனால் போட்டி போடாதீர்கள். ஒவ்வொருவரின் விசேஷத்தைப் பார்த்து விசேஷ ஆத்மா ஆக வேண்டும். நல்லது.

**3) குமாரி அல்லது சேவாதாரிக்கு பதிலாக தன்னை சக்தி சொரூபம் என்று புரிந்து கொள்ளுங்கள்!** எப்பொழுதும் தன்னுடைய சிவசக்தி சொரூபம் நினைவில் இருக்கிறதா? சக்தி சொரூபம் என்று நினைப்பதினால் சேவையிலும் சக்திசாலி ஆத்மாக்களின் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். எப்படி நிலமோ அப்படி பழம் உருவாகும். எந்தளவு தன்னுடைய சக்திசாலி நிலையை உருவாக்குவீர்களோ, வாயுமண்டலத்தை சக்தி சொரூபமாக ஆக்குவீர்களோ அந்த அளவு அந்த மாதிரி ஆத்மாக்களும் வருவார்கள். இல்லையென்றால் பலஹீனமான ஆத்மாக்கள் வருவார்கள், அவர்களுக்குப் பின்னால் கடுமையாக உழைக்க வேண்டியதாக இருக்கும். எனவே எப்பொழுதும் தன்னுடைய சிவசக்தி சொரூபமாகுக. குமாரி இல்லை, சேவாதாரி இல்லை சிவசக்தி.

சேவாதாரிகளோ அதிகம் இருக்கிறார்கள், இந்தப் பட்டம் இன்றைய நாட்களில் அனேகர்களுக்குக் கிடைத்து விடுகிறது, ஆனால் உங்களுடைய விசேஷம் -சிவசக்தி இணைந்த சொரூபம். இதே விசேஷத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால் சேவையின் வளர்ச்சியில் சகஜமான, சிரேஷ்டமான அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும். சேவை செய்வதற்கான லிஃப்ட்டின் கிஃப்ட் என்ன கிடைத்திருக்கிறதோ அதற்கான பிரதிபலன் கொடுக்க வேண்டும். பிரதிபலன் என்ன? சக்திசாலி ஆக வேண்டும், வெற்றி மூர்த்தி ஆக வேண்டும். நல்லது - ஓம்சாந்தி.

**வரதானம்: சுயமரியாதையில் நிலைத்திருந்து எல்லைக்குட்பட்ட இச்சைகளை முடிவு கட்டக்கூடிய ஆசையென்றால் என்னவென்று தெரியாதவர்கள் ஆகுக!**

யார் சுயமரியாதையில் நிலைத்திருக்கிறாரோ அவருக்கு ஒருபொழுதும் எல்லைக்குட்பட்ட மரியாதை பெற வேண்டும் என்ற ஆசை இருக்காது. ஒரு சுயமரியாதையில் அனைத்து எல்லைக்குட்பட்ட ஆசைகள் நிரம்பி விடுகிறது, கேட்பதற்கான அவசியம் இருப்பதில்லை. எல்லைக்குட்பட்ட ஆசைகள் ஒருபொழுதும் முழுமையாக நிறைவேறுவதில்லை, ஒரு எல்லைக்குட்பட்ட ஆசை அனேக ஆசைகளை உருவாக்கும். மேலும் சுயமரியாதை அனைத்து ஆசைகளையும் சுலபமாகவே நிறைவேறச் செய்து விடும். எனவே சுயமரியாதை உள்ளவராக ஆகுங்கள். பிறகு சர்வ பிராப்தி சொரூபம் ஆகி விடுவீர்கள். பிராப்தியின்மை மற்றும் ஆசைகள் என்னவென்று தெரியாத நிலை ஆகி விடும்.

**சுலோகன்: ஒவ்வொரு சூழ்நிலையிலும் தன்னை மோல்டு (வளைத்துக் கொள்வது) செய்வது தான் உண்மையான கோல்டு (தங்கம்) ஆவது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமண குலத்திற்கு மரியாதை வையுங்கள்!

இன்று பாப்தாதா அனைத்து அன்பான மற்றும் சந்திக்க வேண்டும் என்ற பாவனை உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். குழந்தைகளின் சந்திக்க வேண்டும் என்ற பாவனைக்கான பிரத்யக்ஷ பலனையும் பாப்தாதாவிற்குக் கூட இந்த நேரம் தான் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. பக்தியின் பாவனைக்கான பலன் நேரடியாக எதிரில் சந்திப்பது கிடைக்காது ஆனால் ஒரு தடவை அறிமுகம் அதாவது ஞானத்தின் ஆதாரத்தினால் தந்தை மற்றும் குழந்தைகளின் உறவு இணைந்தது என்றால் அந்த மாதிரி ஞான சொரூப குழந்தைகளுக்கு அதிகாரத்தின் ஆதாரத்தினால் சுபபாவனை, ஞான சொரூப பாவனை, சம்மந்தத்தின் ஆதாரத்தில் சந்திக்க வேண்டும் என்ற பாவனையின் பலன் நேரெதிரில் தந்தைக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி இன்று அந்த மாதிரி ஞானம் நிறைந்த சந்திக்க வேண்டும் என்ற பாவனை சொரூபமான ஆத்மாக்களோடு சந்திப்பதற்காக பாப்தாதா குழந்தைகளின் நடுவே வந்திருக்கிறார். அனேக பிராமண ஆத்மாக்கள் சக்தி சொரூபம் ஆகி, மகாவீர் ஆகி எப்பொழுதும் வெற்றியடையும் ஆத்மா ஆவதிலும், அந்த அளவு தைரியம் வைப்பதிலும் தன்னை பலஹீனமானவர் என்று தெரிந்திருந்தும், ஒரு விசேஷத்தின் காரணமாக விசேஷ ஆத்மாக்களின் பட்டியலில் வந்து விட்டார்கள். அது என்ன விசேஷம்? தந்தை மிகவும் பிடித்திருக்கிறார், சிரேஷ்ட வாழ்க்கை மிகவும் பிடித்திருக்கிறது. பிராமண பரிவாரத்தின் சங்கடன் (குழு), சுயநலமற்ற அன்பு மனதைக் கவர்ந்திழுக்கிறது. அப்படி பாபா (தந்தை) கிடைத்தார், ஈஸ்வரிய குடும்பம் கிடைத்தது, தூய்மையான புகலிடம் கிடைத்தது, வாழ்க்கையை சிரேஷ்டமாக ஆக்குவதற்காக சகஜமான ஆதாரம் கிடைத்து விட்டது. இதே ஆதாரத்தில் சந்திக்க வேண்டும் என்ற பாவனையோடு அன்பின் ஆதாரத்தில் சென்று கொண்டே இருக்கிறார்கள்.ஆனால் இருந்தும் சம்மந்தத்தை இணைத்ததின்

காரணமாக சம்மந்தத்தின் ஆதாரத்தில் சொர்க்கத்தின் அதிகாரத்தை ஆஸ்தியில் அடைந்தே விடுகிறார்கள், ஏனென்றால் பிராமணனராக இருப்பவர் தான் தேவதை ஆகிறார். இந்த விதிக்கு ஏற்றபடி தேவதை பதவியின் பிராப்தியின் அதிகாரத்தை அடைந்தே விடுகிறார்கள். சத்யுகத்தை தேவதைகளின் யுகம் என்று தான் கூறப்படுகிறது. இராஜாவாக இருந்தாலும், அல்லது பிரஜையாக இருந்தாலும் தேவதை தர்மம் தான் இருக்கிறது. ஏனென்றால் எப்பொழுது உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை தனது குழந்தையாக ஆக்கினார் என்றால், உயர்ந்த தந்தையின் ஒவ்வொரு குழந்தைக்கும் சொர்க்கத்தின் ஆஸ்தியின் அதிகாரம் இருக்கிறது, தேவதை ஆவதற்கான அதிகாரம் பிறப்புரிமையின் அதிகாரத்தில் கிடைத்தே விடுகிறது. பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி ஆவது என்றால், சொர்க்கத் தின் ஆஸ்தியின் அதிகாரத்தில் அழியாத முத்திரை இடப்பட்டது. முழு உலகத்திலிருந்து அந்த மாதிரி அதிகாரத்தை அடைபவர்கள் அனைத்து ஆத்மாக்களிலிருந்தும் வெகு சில ஆத்மாக்கள் தான் உருவாகிறார்கள். எனவே பிரம்மா குமார், பிரம்மா குமாரி ஆவது சாதாரண விஷயம் என்று நினைக்காதீர்கள். பிரம்மா குமார், பிரம்மா குமாரி ஆவது விசேஷமே. மேலும் இதே விசேஷத்தின் காரணமாக விசேஷ ஆத்மாக்களின் பட்டியலில் வந்து விடுகிறீர்கள். எனவே பிரம்மாகுமார், பிரம்மாகுமாரி ஆவது என்றால், பிராமண உலகத்தின், பிராமண குடும்பத்தினராக ஆவது. பிரம்மாகுமார், குமாரி ஆன பிறகு ஒருவேளை யாராவது சாதாரணமாக மற்றும் பழைய மாதிரியே நடக்கிறார் என்றால், அவர் தனியாக தனக்கு மட்டும் நஷ்டத்தை ஏற்படுத்தவில்லை, ஏனென்றால் நீங்கள் தனியான பிரம்மாகுமார், குமாரி இல்லை, பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள். தனக்கு நஷ்டத்தையோ ஏற்படுத்திக் கொள்கிறார்கள், ஆனால் குலத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதின் சுமையும் அந்த ஆத்மாக்களின் மீது ஏறுகிறது. பிராமணர்களின் மரியாதையைக் காப்பாற்ற வேண்டும், இதுவும் ஒவ்வொரு பிராமணனின் கடமை ஆகும். எப்படி வெளியுலக குல மரியாதையின் மேல் எவ்வளவு கவனம் வைக்கிறார்கள். வெளியுலக குல மரியாதையில் கூட பதமாபதம்பதி ஆவதிலிருந்தும் சிலர் வஞ்சிக்கப்பட்டு விடுகிறார்கள். நீங்களே அனுபவம் செய்கிறீர்கள், மேலும் கூறவும் செய்கிறீர்கள். விரும்புவதோ அதிகமாக செய்ய வேண்டும் என்றோ நினைக்கிறோம் ஆனால் சமுதாயம் குடும்ப கௌரவத்தையும் கடைபிடித்து நடக்க வேண்டியது இருக்கிறது

என்று கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி எந்த உலகம் அனேக ஜென்மங்களின் பிராப்தியிலிருந்து வஞ்சிக்கக்கூடியதோ, தற்சமயத்து வைரத்திற்கு சமமான ஜென்மத்தை சோளிக்குச் சமமாக வீணானதாக ஆக்கக்கூடியதோ இதையோ நீங்கள் மிகவும் நன்றாக தெரிந்தும் இருக்கிறீர்கள். இருந்தும் வெளியுலக குடும்ப, சமுதாய மரியாதைப்படி நடந்து கொள்வதில் மிக நல்ல முறையில் கவனமும் கொடுக்கிறீர்கள், நேரமும் கொடுக்கிறீர்கள், சக்தியையும் ஈடுபடுத்து கிறீர்கள். அப்படியானால் இந்த பிராமண குல மரியாதைக்கு எந்த விசேஷமும் இல்லையா? அந்த உலக மரியாதைக்குப் பின்னால் தன்னுடைய தர்மம் அதாவது தாரணைகள் மேலும் நினைவு செய்ய வேண்டும் என்ற சிரேஷ்ட காரியம் இரண்டையுமே தர்மத்தையும் கர்மத்தையும் விட்டு விடுகிறீர்கள். சில நேரம் உள்உணர்வின் பத்தியத்தைக் கடைபிடிப்பதில் அதாவது தர்மத்தை விட்டு விடுகிறீர்கள், சில நேரம் சுத்தமான பார்வையின் தர்மத்தை விட்டு விடுகிறீர்கள். சில நேரம் சுத்த அன்னத்தின் தர்மத்தை விட்டு விடுகிறீர்கள். பிறகு தன்னைத் தானே உயர்ந்தவர் என்று நிரூபிப்பதற்காக பல விஷயங்களை கூறுகிறீர்கள் மற்றும் பேசுகிறீர்கள். என்ன கூறுகிறீர்கள்? செய்யத் தான் வேண்டியதிருக்கிறது என்று கூறுகிறீர்கள். சிறிதளவு பலஹீனம் நிரந்தரமாக தர்மம் மற்றும் கர்மத்தை உங்களிடமிருந்து விடுவித்து விடுகிறது. யார் தர்மம் மற்றும் கர்மத்தை விட்டு விடுகிறார்களோ அவருக்கு உலகின் குலத்தில் கூட என்ன புரிய வைக்கப்படுகிறது? தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? இது எந்த சாதாரண குலத்தின் தர்மம் மற்றும் கர்மம் அல்ல. பிராமண குலம் உயர்ந்ததிலும் உயர்ந்த உச்சம் குடுமிக்கு சமமான குலம். எனவே எந்த உலகத்தின் மற்றும் எந்த குலத்தின் மரியாதை வைக்க வேண்டும். மேலும் பலர், எனக்கு விருப்பம் இல்லை, ஆனால் மற்றவர்களைக் குஷிப் படுத்துவதற்காக செய்தேன் என்று பல நல்ல நல்ல விஷயங்களைக் கூறுகிறார்கள். அஞ்ஞானி ஆத்மாக்கள் எப்பொழுதாவது நிரந்தரமாக குஷியாக இருக்க முடியுமா என்ன? அந்த மாதிரி இந்த நேரம் குஷியாக, அடுத்த நேரம் கோபமாக இருக்கும் ஆத்மாக்களின் காரணமாக தன்னுடைய சிரேஷ்ட தர்மம் மற்றும் கர்மத்தை விட்டு விடுகிறீர்கள். யார் தர்மத்தில் இல்லையோ அவர் பிராமண உலகத்தில் இல்லை. அற்பமான ஆத்மாக்களைக் குஷிப்படுத்தி விட்டீர்கள் ஆனால் அனைத்தையும் தரும் தந்தையின் கட்டளையைப் புறக்கணித்தீர்கள். அப்படியானால் என்ன அடைந்தீர்கள், என்ன இழந்தீர்கள்? எந்த உலகம் விரைவிலேயே

அழியப்போகிறது, நாலாபுறங்களிலும் நெருப்பு பிடித்து எரியும் மரங்கள் மிக வேகவேகமாக ஒன்றாகச் சேர்க்கப்படுகின்றன. மரங்கள் என்றால், ஏற்பாடுகள். இந்த மரங்களை தனித்தனியாக்கி நெருப்பு பிடித்து எரிய வைக்கும் ஏற்பாடுகளை முடிக்க வேண்டும் என்று எவ்வளவு நினைக்கிறார்களோ அந்த அளவே மரங்களின் குவியல் மிக உயரமாக ஆகிக் கொண்டே இருக்கிறது. எப்படி ஹோலிக்காவை எரிக்கிறார்கள் என்றால், பெரியவர்களின் கூடவே சிறு சிறு குழந்தைகளும் விறகு குச்சிகளை ஒன்றாக்கி கொண்டு வருவார்கள். கிடைக்கவில்லை என்றால் வீட்டிலிருந்தே மரங்களை எடுத்து வருவார்கள். ஆர்வம் இருக்கும். இன்றைய நாட்களில் கூட பாருங்கள் சிறு சிறு நகரங்களில் கூட மிக ஆர்வத்துடன் சகயோகிகள் உருவாகிறார்கள். அப்படி அந்த மாதிரி சமூக மரியாதைக்காக தன்னுடைய அழியாத பிராமணனாக இருப்பவர்கள் நீங்கள், தேவதை ஆகும் அந்த குலத்தின் மரியாதையை மறந்து விடுகிறீர்கள். அதிசயம் செய்கிறீர்கள். இதைக் கடைபிடிக்க வேண்டுமா அல்லது இழக்க வேண்டுமா? எனவே பிராமண குலத்தின் மரியாதையையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சில குழந்தைகள் மிகவும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். தன்னுடைய பழைய குல மரியாதையையும் வைக்க விரும்புகிறார்கள். மேலும் பிராமண குலத்திலும் சிரேஷ்டமாக ஆக விரும்புகிறார்கள். உலகியல் குல மரியாதையை நன்றாகப் கடைப் பிடியுங்கள். அதற்கு தடை இல்லை ஆனால் தர்மத்தையும் கர்மத்தையும் விட்டு விட்டு குல மரியாதை வைப்பது தவறு என்று பாப்தாதா கூறுகிறார். வேறு புத்திசாலித்தனமாக எண்ணிக் கொண்டு என்ன காரியங்கள் செய்கிறார்கள்? யாருக்கு என்ன தெரியும் என்று நினைக்கிறார்கள். பாபாவும் நானும் அனைவரின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்தவன் இல்லை என்று கூறுகிறார். பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்களுக்கும் என்ன தெரியப் போகிறது. அந்த மாதிரி நடக்கிறது. அந்த மாதிரி நடந்து கொண்டு மதுபன்னிலும் வந்து சேர்ந்து விடுகிறார்கள். சேவை நிலையங்களிலும் தன்னைத் தானே மறைத்து வைத்து சேவையில் பெயர், புகழ் பெற்றவர்களாக ஆகியும் விடுகிறார்கள். கொஞ்சம் சகயோகம் கொடுத்து சகயோகத்தின் ஆதாரத்தில் மிக நல்ல சேவாதாரி என்ற பட்டத்தையும் விலைக்கு வாங்கி விடுகிறார்கள் ஆனால் பல ஜென்மங்களுக்கான சிரேஷ்ட பட்டமான சர்வ குண சம்பன்னம், 16-கலைகள் சம்பூர்ணம், சம்பூர்ண நிர்விகாரி . . . என்ற இந்த அழியாத பட்டத்தை இழந்து

விடுகிறார்கள். ஆக, இது சகயோகம் கொடுக்கவில்லை ஆனால் 'உள்ளே ஒன்று வெளியில் இன்னொன்று' என்ற இந்த ஏமாற்றுதல் மூலமாக சுமையை தூக்கிக் கொள்கிறார்கள். சகயோகி ஆத்மாவிற்குப் பதிலாக சுமை தூக்குபவர்கள் ஆகி விட்டார்கள். எவ்வளவு தான் புத்திசாலித்தனத்தோடு தன்னை நடத்திக் கொண்டாலும் ஆனால் இந்த புத்திசாலித்தனத்தோடு நடத்துவிப்பது, நடத்துவிப்பது அல்ல ஆனால் கதறுவது! இந்த சேவை நிலையங்கள் ஏதோ பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்களின் ஸ்தானம் மட்டுமே என்று நினைக்கா தீர்கள். ஆத்மாக்களை எப்படியோ சாதுர்யமாக கையாண்டுவிடுகிறீர்கள் ஆனால் பரமாத்மாவிற்கு எதிரே ஒன்றிற்கு லட்சம் மடங்கான கணக்கு ஒவ்வொரு ஆத்மாவின் கர்ம கணக்கில் சேமிப்பாகியே விடுகிறது. அந்தக் கணக்கை சாதுர்யத்தினால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே அந்த மாதிரி புத்திசாலி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவிற்கும் இரக்கம் வருகிறது. இருந்தாலும் ஒரு தடவை பாபா என்று கூறினார் என்றால், தந்தையும் குழந்தைகளின் நன்மைக்காக எப்பொழுதும் அறிவுரை கொடுத்துக் கொண்டே இருப்பார். எனவே அந்த மாதிரி புத்திசாலியாக ஆகாதீர்கள். எப்பொழுதும் பிராமண குல மரியாதையை வையுங்கள்.

பாப்தாதாவோ கர்மம் மற்றும் பலன் இரண்டிலிருந்தும் விடுபட்டவர். இந்த நேரம் பிரம்மாபாபாவும் இதே நிலையில் இருக்கிறார். பிறகோ கணக்கு வழக்கில் வந்து தான் ஆக வேண்டும் ஆனால் இந்த நேரம் தந்தைக்குச் சமமாக இருக்கிறார். எனவே யார் செய்வாரோ, எப்படி செய்வாரோ அதை தனக்காகத் தான் செய்கிறார். தந்தையோ வள்ளல். எப்பொழுது தானே செய்கிறார் மற்றும் தானே பலனை அடைகிறார் என்றால், என்ன செய்ய வேண்டும்? பாப்தாதா சூட்சும வதனத்தில் குழந்தைகளின் விதவிதமான விளையாட்டுகளைப் பார்த்து புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார். நல்லது.

அந்த மாதிரி பிராமண குல தீபங்களுக்கு, எப்பொழுதும் உண்மையான ஆர்வத்துடன் அன்பான மற்றும் சகயோகி ஆகுபவர்களுக்கு, நிரந்தரமாக சிரேஷ்ட பலனை அடையக்கூடிய, எப்பொழுதும் உண்மையான தந்தையின் உண்மையான அன்பில் அற்ப கால பிராப்திகளை தியாகம் செய்யக்கூடிய அன்பான ஆத்மாக்களுக்கு, சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்ட நிலையின் அனுபவம் செய்வதற்காக கர்மயோகி ஆகுங்கள்!**

எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்தை செய்து கொண்டே, கர்மத்தின் பந்தனங்களிலிருந்து விடுபட்ட மேலும் தந்தையின் அன்பான -அந்த மாதிரி தன்னை விலகிய மற்றும் அன்பான ஆத்மாவாக அனுபவம் செய்கிறீர்களா? கர்மயோகி ஆகி காரியம் செய்பவர் ஒருபொழுதும் செய்யும் காரியத்தின் பந்தனத்தில் வருவதில்லை. அவர் எப்பொழுதும் பந்தனத்திலிருந்து விடுபட்ட யோக சொரூபமானவராக இருப்பார். கர்மயோகி ஒருபொழுதும் நல்லது மற்றும் தீய காரியம் செய்பவர்களின் பிரபாவத்தில் வருவதில்லை. யாராவது நல்ல காரியம் செய்பவரின் தொடர்பில் வந்து அதன் குஷியில் வந்து விடுகிறீர்கள். மேலும் யாராவது நல்ல காரியம் செய்யாதவர் சம்மந்தத்தில் வந்தால். கோபத்தில் வந்து விடுகிறீர்கள் அல்லது அவர் மீது வெறுப்பு அல்லது பொறாமை வந்து விடுகிறது என்று அந்த மாதிரி இருக்கக்கூடாது. இதுவும் கர்ம பந்தனம். கர்மயோகியின் எதிரில் யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவர் எப்பொழுதும் விலகியிருப்பவராக மற்றும் அன்பானவராக இருப்பார். ஞானத்தின் மூலமாக இவருக்கு இந்த நேரம் இந்த பங்கு நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்து கொள்வார். வெறுப்படைபவர்கள் மீது தானும் வெறுப்பு கொள்வது என்பது கர்மத்தின் பந்தனம். அந்த மாதிரி கர்மத்தின் பந்தனத்தில் வருபவர்கள் ஒரே சீராக இருக்க முடியாது. சில நேரம் ஒரு மனநிலையிலும் வேறு நேரம் வேறு மனநிலையிலும் இருப்பார்கள். எனவே நல்லவரை நல்லவர் என்று புரிந்து சாட்சியாகிப் பாருங்கள், மேலும் தீயவரை இரக்க மனமுடையவராகி இரக்கப் பார்வையுடன், பரிவர்த்தனை செய்வதின் சுபபாவனையோடு சாட்சியாகிப் பாருங்கள். இதைத் தான் கர்ம பந்தனத்திலிருந்து விலகிய நிலை என்று கூறுவது. ஏனென்றால் ஞானத்தின் அர்த்தமே அறிவு / விவேகம். எந்த விஷயத்தின் அறிவு? கர்மத்தின் பந்தனங்களிலிருந்து விடுபடுவதற்கான அறிவைத் தான் ஞானம் என்று கூறுவது. ஞானி ஒருபொழுதும் பந்தனங்களில் வசமாக மாட்டார். எப்பொழுதும் விலகியிருப்பவராக இருப்பார். சில நேரம் விலகியிருப்பவராக ஆகிறீர்கள், மேலும் சில நேரம் கொஞ்சம் ஆட்டம் கண்டீர்கள் என்று அப்படியும் இருக்கலாகாது. எப்பொழுதும் பாவங்களை வென்றவராக ஆக வேண்டும் என்ற லட்சியத்தை வையுங்கள். கர்ம பந்தனத்தை வென்றவர்

ஆக வேண்டும். இந்த நீண்ட காலத்து பயிற்சி நீண்ட காலத்தின் பலன் பெறுவதற்கான காரணம் ஆகி விடும். மேலும் இப்பொழுது கூட மிக விசித்திரமான அனுபவம் செய்வீர்கள். எனவே நிரந்தரமான விலகியிருப்பவராகவும், நிரந்தரமான அன்பானவராகவும் ஆகுங்கள். இது தான் தந்தைக்குச் சமமான கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்ட நிலை.

**2) பழைய மூத்த சகோதரிகளைப் பார்த்து பாப்தாதா கூறினார்:** இந்த குரூப்பை எந்த குரூப் என்று கூறலாம்? முதலில் தொடக்கத்திலோ அவரவர்களுக்கென்று பெயர் இருந்தது -இப்பொழுது எந்த பெயர் கொடுக்கலாம்? எப்பொழுதும் தந்தையின் தொடர்பில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தையின் வலதுகரம். நீங்கள் அந்த மாதிரியான குரூப் தான் இல்லையா? பாப்தாதாவும் புஜங்கள் இன்றி இவ்வளவு பெரிய ஸ்தாபனையின் காரியத்தை எப்படிச் செய்ய முடியும். எனவே நீங்கள் ஸ்தாபனை காரியத்திற்கான விசேஷ புஜங்கள். வலதுகரம் தான் விசேஷ புஜமாக இருக்கும். ஆதி இரத்தினங்களை எப்பொழுதும் பாப்தாதா ரியல் கோல்ட் (உண்மையான தங்கம்) என்று கூறுகிறார். அனைத்து ஆதி இரத்தினங்களும் உலக மேடையில் விசேஷ பங்கை செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு விசேஷ ஆத்மாவின் விசேஷ பங்கைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அனைவரின் கதாபாத்திரமோ விதவிதமாக இருக்கும் இல்லையா? ஒரே மாதிரியாகவோ இருக்க முடியாது ஆனால் ஆதி இரத்தினங்களுக்கு விசேஷமாக நாடகத்தின் அனுசாரம் விசேஷ பங்கு இருக்கிறது என்பதோ உண்மை. ஒவ்வொரு இரத்தினத்திமாகிய நீங்கள் குறிப்பாக, விசேஷத்தின் ஆதாரத்தில் தான் முன்னேறி சென்று கொண்டிருக்கிறார்கள். மேலும் முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்கள். அது என்ன விசேஷம்? அவைகளை நீங்களும் தெரிந்திருக்கிறீர்கள். மேலும் மற்றவர்களும் தெரிந்திருக்கிறார்கள் ஆனால் நீங்கள் விசேஷம் நிரம்பிய விசேஷ ஆத்மாக்கள்!

அந்த மாதிரி ஆதி இரத்தினங்களுக்கு பாப்தாதா பல லட்சம் மடங்கு பாராட்டுக்கள் வழங்குகிறார். ஏனென்றால், தொடக்கத்திலிருந்து சகித்துக் கொண்டு ஸ்தாபனையின் காரியத்தை சாகார சொரூபத்தில் விருத்தி அடையச் செய்வதற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். அப்படி யார் ஸ்தாபனையின் காரியத்தில் சகித்துக் கொண்டார்களோ

அதை மற்றவர்கள் செய்யவில்லை. உங்களுடைய சகித்துக் கொள்ளும் சக்தியின் விதை இந்த பழத்தை உருவாக்கியது. அப்படி ஒவ்வொருவரும் என்னென்ன சகித்துக் கொண்டார்கள், எப்படி சக்தி ரூபத்தை காண்பித்தார்கள் என்று பாப்தாதாவும் முதல், இடை, கடையைப் பார்க்கிறார். மேலும் விளையாடுவது போலேயே சகித்துக் கொண்டார்கள். சகித்துக் கொள்ளும் ரூபத்தில் சகித்துக் கொள்ளவில்லை. விளையாடிக் கொண்டே சகித்துக் கொள்ளும் பங்கை செய்வதற்கு பொறுப்பாளர் ஆகி, தன்னுடைய விசேஷமான கதாநாயக பாத்திரத்தை பதிய வைத்து விட்டார்கள். எனவே ஆதி இரத்தினங்களின் இந்த பொறுப்பாளர் ஆகும் பங்கு எப்பொழுதும் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறது. மேலும் இதன் பலனாக நீங்கள் அனைத்து ஆத்மாக்களும் எப்பொழுதும் அமரராக இருங்கள். தன்னுடைய பங்கை புரிந்து கொண்டீர்களா? எவ்வளவு தான் யாராவது முன்னுக்குச் சென்று விட்டாலும் -ஆனால் இருந்தும்.... இருந்தும் என்று கூறுவோம். பாப்தாதாவிற்கு பழைய பொருளின் மதிப்பு தெரியும். புரிந்ததா! நல்லது.

**வரதானம்: எந்தவொரு காரியம் செய்து கொண்டே எப்பொழுதும் இதய சிம்மாசனதாரியாக இருக்கும் கவலையற்ற மகாராஜா ஆகுக!**

யார் எப்பொழுதும் பாப்தாதாவின் இதய சிம்மாசனத்தில் இருக்கிறார்களோ அவர்கள் கவலையற்ற மகாராஜா ஆகி விடுகிறார்கள்.ஏனென்றால் இந்த ஆசனத்தின் விசேஷமே யார்இந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருப்பாரோ அவர் அனைத்து விஷயங்களிலும் கவலையற்றவராக இருப்பார். எப்படி இன்றைய நாட்களிலும் ஏதாவது ஸ்தானத்திற்கு விசேஷமாக ஏதாவது புதுமை, சிறப்புத் தன்மை, விசேஷம் கிடைத்திருக் கிறது என்றால் இதய சிம்மாசனத்தின் விசேஷமே கவலை வர முடியாது. இந்த இதயசிம்மாசனத்திற்கு வரதானம் கிடைத்திருக்கிறது. எனவே எந்தவொரு காரியம் செய்து கொண்டும் எப்பொழுதும் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவராக இருங்கள்.

**சுலோகன்: வரிசை எண்ணில் முன்னுக்கு லர வேண்டும் என்றால், அன்பு மற்றும் சகயோகத்தின் கூடவே சக்தி ரூபத்தையும் தாரணை செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரி ஆவதற்கு அனைவருக்கும் சமமான அதிகாரம் இருக்கிறது!

இன்று ஞான கங்கைகள் மற்றும் ஞானக்கடலின் சந்திப்பு மேளா (கொண்டாட்டம்). இந்த மேளாவில் அனைத்து குழந்தைகளும் தந்தையுடன் ஆன்மீக சந்திப்பை அனுபவம் செய்கிறார்கள். தந்தையும் ஆன்மீக குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். மேலும் குழந்தைகளும் ஆன்மீகத் தந்தையை சந்தித்து மகிழ்ச்சியடைகிறார் ஏனென்றால் ஒவ்வொரு கல்பத்திலும் தெரிந்து கொண்ட ஆத்மாக்கள் தன்னுடைய புத்தி யோகத்தின் மூலம் நானும் சென்ற கல்பத்தின் ஆத்மா அந்த தந்தையை மீண்டும் அடைந்து விட்டேன் என்று தெரிந்திருக்கிறார். எனவே அதே ஆனந்தம், சுகம், அன்பு மற்றும் குஷியின் ஊஞ்சலில் ஆடுவதின் அனுபவம் செய்கிறார். அந்த மாதிரி அனுபவத்தை செய்த சென்ற கல்பத்தின் குழந்தைகள் மீண்டும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே பழைய அறிமுகம் மீண்டும் நினைவில் வந்து விட்டது. அந்த மாதிரி நினைவு சொரூப அன்பான ஆத்மாக்கள் இந்த அன்புக்கடலில் மூழ்கி அன்பிலேயே ஐக்கியமாகி இருக்கும் ஆத்மாக்கள் தான் இந்த விசேஷ அனுபவத்தைத் தெரிந்து கொள்ள முடியும். அனைத்துக் குழந்தைகளும் அன்பிற்குரிய ஆத்மாக்கள் தான். அன்பின் சுத்தமான சம்மந்தத்தின் காரணமாக இங்கு வரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இருந்தாலும் அன்பிலும் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். சிலர் அன்பில் மூழ்கி இருக்கும் ஆத்மாக்கள் மேலும் சிலர் சந்திப்பு செய்வதின் அனுபவத்தை அவரவர்களின் சக்திக்கேற்றபடி அனுபவம் செய்பவர்கள். மேலும் சிலர் இந்த ஆன்மீக சந்திப்பின் ஆனந்தத்தைப் புரிந்து கொள்பவர்கள், புரிந்து கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இருந்தாலும் அனைவரையும் அன்பிற்குரிய ஆத்மாக்கள் என்று கூறுவோம். அன்பின் சம்மந்தத்தின் ஆதாரத்தில் முன்னேறிக் கொண்டே மூழ்கியிருக்கும்

சொரூபம் வரையிலும் வந்து சேர்ந்து விடுவார்கள் புரிந்து கொள்வது முடிவடைந்து மூழ்கியிருக்கும் அனுபவம் ஆகியே விடும். ஏனென்றால், மூழ்கக் கூடிய ஆத்மாக்கள் சமமான ஆத்மாக்கள். அப்படி சமம் ஆவது என்றால், அன்பில் மூழ்கி விடுவது. எனவே எந்த அளவு தந்தைக்குச் சமமாக ஆகியிருக்கிறேன் என்று உங்களை நீங்களே தெரிநது கொள்ள முடியும். தந்தையின் எண்ணம் என்னவாக இருக்கிறது. அந்த எண்ணத்திற்குச் சமமாக அன்பில் ஐக்கியமாகியிருக்கும் ஆத்மா என்னுடைய எண்ணம் இருக்கிறதா? அந்த மாதிரி வார்த்தைகள், காரியம், சேவை, சம்மந்தம் அனைத்திலும் தந்தைக்குச் சமமாக ஆகியிருக்கிறேனா? அல்லது இதுவரை பெரிய வித்தியாசம் இருக்கிறதா அல்லது சிறிதளவு வித்தியாசம் இருக்கிறதா? வித்தியாசம் இல்லாமல் ஆவது தான் மனமனாபவலிவின் மஹா மந்திரம் இந்த மஹாமந்திரத்தை ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு வினாடி சொரூபத்தில் கொண்டு வர வேண்டும். இதைத்தான் சமமான மற்றும் மூழ்கியிருக்கும் ஆத்மா என்று கூறுவது எல்லைக்கப்பாற்பட்ட தந்தை அனைத்து குழந்தைகளும் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்று எல்லைக்கப்பாற்பட்ட எண்ணம் வைப்பவர். நான் குருவாக ஆக வேண்டும் மற்றும் இவர்கள் சிஷ்யர்கள் ஆக வேண்டும் என்று அப்படியில்லை. அனைவரும் தந்தைக்குச் சமமாகி தந்தையின் இதய சிம்மாசனதாரி ஆகட்டும். இங்கு யாரும் கத்தியில் (இருக்கையில்) அமருபவராக ஆக வேண்டாம். இதுவோ ஒரிருவர் ஆவார்கள், ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட தந்தை, எல்லைக்கப்பாற்பட்ட இதய சிம்மாசனதாரி ஆக்குகிறார், அதற்கு அனைத்து குழந்தைகளும் அதிகாரி ஆக முடியும். அனைவருக்கும் ஒரே மாதிரியான பொன்னான வாய்ப்பு இருக்கிறது. ஆரம்பத்தில் வந்திருந்தாலும், இடையில் வந்திருந்ததாலும் அல்லது இப்பொழுது வந்திருந்தாலும் அனைவருக்கும் சமமாக ஆவதற்கு அதாவது இதய சிம்மாசனதாரி ஆவதற்கு அனைவருக்கும் முழு அதிகாரம் இருக்கிறது. பின்னால் வந்தவர்கள் முன்னுக்குச் செல்ல முடியாது என்று அப்படி இல்லை. யாரும் முன்னுக்கு செல்ல முடியும். ஏனென்றால் இது எல்லைக்கப் பாற்பட்ட செல்வம் முதலில் வந்தவர்கள் எடுத்து விட்டார்கள் எனவே முடிந்து விட்டது என்று அப்படியில்லை. அந்த அளவு அளவற்ற செல்வம் இதற்குப் பிறகு கூட யார் எவ்வளவு பெற விரும்புகிறார்களோ அந்த அளவு பெற முடியும் ஆனால் இது அதிகாரத்தைப் பெறுபவர்களின் மேல் இருக்கிறது. ஏனென்றால், அதிகாரத்தை பெறுவதின் கூடவே

அடிமைத்தனத்தின் சம்ஸ்காரத்தை விட வேண்டும், வேறு ஒன்றும் இல்லை அடிமைத்தனம் மட்டும் இருக்கிறது ஆனால் எப்பொழுது விடுவதற்கான விசயம் வருகிறது என்றால், தன்னுடைய பலவீனத்தின் காரணமாக இந்த விசயத்தில் செய்ய முடியாமல் இருந்து விடுகிறார்கள். பிறகு விடுபடுவது இல்லை என்று கூறுகிறார்கள். சம்ஸ்காரம் விடுபடுவதில்லை என்று சம்ஸ்காரத்தின் மீது பழி கூறுகிறார்கள், ஆனால் அவர்களே விடுவதில்லை. ஏனென்றால் சைதன்ய சக்திசாலியானது ஆத்மாவா அல்லது நம்ஸ்காரமா? சம்ஸ்காரம் ஆத்மாவை தாரணை செய்ததா அல்லது ஆத்மா சம்ஸ்காரத்தை தாரணை செய்ததா? ஆத்மாவின் சைதன்ய சக்தி சம்ஸ்காரமா அல்லது சம்ஸ்காரத்தின் சக்தி ஆத்மாவா? எப்பொழுது தாரணை செய்வது ஆத்மா என்றால், விட வேண்டியதும் ஆத்மா தானேயின்றி சம்ஸ்காரம் அதுவாகவே விடுபடாது. பிறகு சம்ஸ்காரம், சுபாவம், பழக்கம் மற்றும் இயல்பு என்று பல பல பெயர் கொடுக்கிறார்கள் ஆனால் சொல்லக் கூடிய சக்தி எது? பழக்கம் பேசுகிறதா அல்லது ஆத்மா பேசுகிறதா? அப்படியானால் எஜமானனா அல்லது அடிமையா? அப்படி அதிகாரத்தை அதாவது எஜமானத் தன்மையை தாரணை செய்வதில் எல்லைக்கப்பாற்பட்ட வாய்ப்பு இருந்தும் அவரவர்கள் சக்திக்கேற்றபடி பெறுபவர்கள் ஆகி விடுகிறார்கள் காரணமாக எது ஆனது? என்னுடைய பழக்கம் என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய நேச்சர் என்று கூறியும் எஜமானத் தன்மை இல்லை. ஒருவேளை என்னுடையது என்றால், அவரே தான் எஜமானர் இல்லையா? அந்த மாதிரி எஜமானன் என்ன விரும்புகிறாரே அதைச் செய்ய முடியவில்லை, பரிவர்த்தனை செய்ய முடியவில்லை, அதிகாரத்தை வைக்க முடியவில்லை என்றால் அவரை என்னவென்று கூறுவது? அந்த மாதிரி பலஹீனமான ஆத்மாவை அதிகாரி ஆத்மா என்று எப்படிக் கூறுவோம்? திறந்த வாய்ப்பு இருந்த போதிலும், தந்தை வரிசைக் கிரமமாகக் கொடுப்பதில்லை ஆனால் அவர்களே அப்படி ஆக்கி விடுகிறார்கள். தந்தையின் இதய சிம்மாசனம் முழு உலகின் ஆத்மாக்களையும் கூட அமர வைக்க முடியும். அந்த அளவு விராட சொரூபமானது, ஆனால் அமருவதற்கு தைரியம் வைப்பவர்கள் எத்தனை பேர் ஆகிறார்கள். ஏனென்றால், இதய சிம்மாசனத்தில் அமருவதற்காக இதயத்தின் ஒப்பந்தம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எனவே தான் தில்வாலா (பெரிய இதயம் உள்ளவர்) என்று தந்தைக்குப் பெயர் வந்தது. அப்படி

இதயத்தை கொடுக்கவும் செய்கிறார். பறிக்கவும் செய்கிறார் எப்பொழுது ஒப்பந்தம் ஆகத் தொடங்குகிறது என்றால், மிகுந்த சாதுர்யம் செய்கிறார்கள். முழுமையான ஒப்பந்தம் செய்வதில்லை கொஞ்சம் வைத்துக் கொள்வார்கள், பிறகு என்ன கூறுகிறார்கள்? மெது மெதுவாக செய்து கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். தவணை முறையில் செய்வதை விரும்புகிறார்கள். ஒரே வெட்டில் இரண்டு துண்டு என்ற ஒப்பந்தம் செய்பவர்கள் ஒருவருடையவராக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் ஒரே சீராக இருக்கிறார்கள். மேலும் அனைத்திலும் நம்பர் ஒன் ஆகி விடுகிறார்கள். மற்றபடி கொஞ்சம், கொஞ்சம் செய்து ஒப்பந்தம் யார் செய்கிறார்களோ அவர்கள் ஒன்றிற்கு பதிலாக இரண்டு படகுகளில் கால் வைப்பவர்கள் எப்பொழுதும் ஏதாவது குழப்பத்தில், சஞ்சலத்தில் இருப்போர் ஒரே சீராக இருப்பவராக ஆவதில்லை. எனவே ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்றால், ஒரு வினாடியில் செய்யுங்கள். இதயத்தைத் துண்டு துண்டாக ஆக்காதீர்கள். இன்று தன்னிடமிருந்து இதயத்தை அகற்றி தந்தை மேல் வைத்தீர்கள், என்றால் ஒரு துண்டு கொடுத்தீர்கள் என்றால் ஒரு தவணை கொடுத்தீர்கள். பிறகு நாளை உறவினர்களிடமிருந்து இதயத்தை அகற்றி தந்தையிடம் கொடுத்தீர்கள் என்றால், இரண்டாவது தவணை கொடுத்தீர்கள், இரண்டாவது துண்டு கொடுத்தீர்கள் இதனால் என்னவாகும்? தந்தையின் செல்வத்தின் அதிகாரத்திற்கும் துண்டிற்கு உரியவர்கள் ஆகிறீர்கள். பிராப்தியின் அனுபவத்தில், அனைத்து பிராப்திகளின் அனுபவத்தை அடைய முடியாது. கொஞ்சம், கொஞ்சம் அனுபவம் செய்தார் இதனால் எப்பொழுதும் நிரம்பியவராக, திருப்தியானவராக இருக்கமாட்டார், எனவே அனேக குழந்தைகள் இன்று வரையிலும், எப்படி மற்றும் எந்தளவு இருக்க வேண்டுமோ அந்தளவு இல்லை என்று கூறுகிறார்கள். சிலர் முழுமையாக அனுபவம் ஆவதில்லை, கொஞ்சம் ஆகிறது என்று கூறுகிறார்கள். மேலும் சிலர் ஆகிறது ஆனால் எப்பொழுதும் ஆவதில்லை என்று கூறுகிறார்கள் ஏனென்றால், முழுமையான ஒப்பந்தம் செய்யவில்லை என்றால், அனுபவமும் முழுமையாக ஆவதில்லை. ஒரே நேரத்தில் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வைக்கவில்லை. எப்போதாவது செய்கிறார்கள் என்றால் அனுபவமும் எப்போதாவது ஆகிறது. எப்பொழுதும் ஆவதில்லை. உண்மையிலேயே இந்த ஒப்பந்தம் எவ்வளவு பிராப்தி செய்விக்கக் கூடியது. அலைந்து கொண்டிருக்கும் இதயத்தை கொடுப்பது மற்றும் திலாராம் தந்தையின் இதய

சிம்மாசனத்தின் மேல் சுலபமாக அதிகாரத்தை அடைவது. இருந்தும் ஒப்பந்தம் செய்வதற்குத் தைரியம் இல்லை. தெரிந்தும் இருக்கிறார்கள், கூறவும் செய்கிறார்கள் ஆனால் இருந்தும் தைரியம் இல்லாதவர்கள் பாக்கியத்தை அடைய முடியாது. மிக மலிவான ஒப்பந்தம் தான் இல்லையா? அல்லது கடினமாக இருக்கிறதா? சொல்வதற்கோ மலிவு என்று அனைவரும் கூறுகிறார்கள். எப்பொழுது செய்யத் தொடங்குகிறார்களோ அப்பொழுது கடினமாக்கி விடுகிறார்கள். உண்மையில் கொடுப்பது, கொடுப்பதல்ல. இரும்பைக் கொடுத்து விட்டு வைரத்தைப் பெறுவது என்பது கொடுத்ததாக ஆனதா அல்லது பெறுவதாக ஆனதா? அப்படியானால் பெறுவதற்கும் தைரியம் இல்லையா என்ன? எனவே தான் எல்லைக்கப்பாற்பட்ட தந்தை அனைவருக்கும் ஒரே மாதிரி தான் கொடுக்கிறார் ஆனால் பெறுபவர்கள் திறந்த வாய்ப்பு இருந்த போதிலும் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். வாய்ப்பை எடுக்க விரும்புகிறீர்கள் என்றால் எடுத்துக் கொள்ளுங்கள், பிறகு என்னால் செய்ய முடிந்திருக்கும், ஆனாலும் செய்யவில்லை என்ற, இந்தக் காரணம் என்ற முறையீட்டை யாரும் கேட்க மாட்டார்கள். முன்பே வந்திருந்தேன் என்றால் முன்னுக்கு சென்றிருப்பேன். இந்த சூழ்நிலைகள் இல்லாமல் இருந்திருந்தால் முன்னுக்குச் சென்றிருப்பேன். இந்த முறையீடுகள் தனது பலஹீனங்களின் விசயங்கள். சுய நிலையின் முன்பு சூழ்நிலைகள் ஒன்றும் செய்ய முடியாது. விக்ன விநாசக் (தடைகளை அழிக்கும்) ஆத்மாக்களின் எதிரில் தடை முயற்சி செய்வதில் தடை போட முடியாது. நேரத்தின் வேகத்திற்கேற்றபடி முயற்சி செய்வதன் வேகம் இல்லை. இரண்டு வருமானவர் முன்னுக்கு செல்ல முடியும், இரண்டு மாதமானவர் முன்னுக்கு செல்ல முடியாது என்று அப்படியில்லை. இங்கேயோ ஒரு நொடியில் செய்யும் ஒப்பந்தம். இரண்டு மாதமோ எவ்வளவு நீண்ட காலம் ஆனால் எப்பொழுது வந்தீர்களோ அப்பொழுதிலிருந்து தீவிர வேகம் இருக்கிறதா? எனவே எப்பொழுதும் தீவிர வேகத்தில் செல்லும் ஆத்மா, அனேக அலட்சியமான ஆத்மாக்களை விட முன்னுக்குச் செல்ல முடியும். எனவே தற்சமயத்திற்கு மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களுக்கு தனக்காக என்ன விரும்புகிறார்களோ எவ்வளவு முன்னேறிச் செல்ல விரும்புகிறார்களோ, எந்தளவு அதிகாரி ஆக விரும்புகிறார்களோ எந்தளவு அதிகாரி ஆக விரும்புகிறார்களோ அந்தளவு சகஜமாக ஆக முடியும் என்ற வரதானம் இருக்கிறது. ஏனென்றால் இப்போதைய நேரம் வரம் பெற்ற நேரம். வரமளிக்கும்

தந்தையின் வரம் பெற்ற ஆத்மாக்கள் நீங்கள். வரம்பெறும் ஆத்மாக்களாக ஆக வேண்டும் என்றால் இப்பொழுது ஆகுங்கள், பிறகு வரம் பெறும் நேரமும் முடிந்து விடும். பிறகு கடும் உழைப்பிற்குப் பின்பும் ஒன்றும் அடைய முடியாது எனவே என்ன அடைய வேண்டுமோ அதை இப்பொழுது அடைந்து கொள்ளுங்கள். என்ன செய்ய வேண்டுமோ அதை இப்பொழுது செய்து விடுங்கள். யோசிக்காதீர்கள் ஆனால் என்ன செய்ய வேண்டுமோ அதை திட எண்ணத்தோடு செய்து விடுங்கள் மேலும் வெற்றியடையுங்கள். நல்லது!

அந்த மாதிரியான அனைத்து அதிகாரி குழந்தைகளுக்கும் ஒரு நொடியில் ஒப்பந்தம் செய்பவருக்கு அதாவது என்ன நினைத்தாரோ அதைச் செய்தார், அந்த மாதிரி எப்பொழுதும் தைரியமுள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் எஜமானனாகி பரிவர்த்தனை (மாற்றும்) சக்தி மூலம் பலவீனங்களை அகற்றக் கூடிய என்ன சிரேஷ்ட காரியம் செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்யக் கூடிய அந்த மாதிரி மாஸ்டர் சர்வ சக்திவான், இதய சிம்மாசனதாரி அதிகாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**டீச்சர்களுடன் சந்திப்பு:** தன்னை எப்பொழுதும் சேவாதாரி என்று புரிந்து கொண்டு சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? சேவையின் வெற்றிக்கான ஆதாரம் விசேஷமாக சேவாதாரிக்காக என்ன இருக்கிறது? தெரிந்திருக்கிறீர்களா? வெற்றி இருக்க வேண்டும் என்று தான் எப்பொழுதும் சேவாதாரி விரும்புகிறார் ஆனால் வெற்றியடைவதற்கான ஆதாரம் என்ன? இன்றைய நாட்களில் விசேஷமாக எந்த விசயத்தின் மேல் கவனம் ஈர்க்கிறோம்? (தியாகத்தின் மேல்) தியாகம் இன்றி தபஸ்யாவின் வெற்றி இல்லை. அப்படி சேவாதாரி என்றால், தியாகம் நிறைந்தவர் மற்றும் தபஸ்யா செய்பவர். தபஸ்யா என்றால் என்ன? ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. இதுதான் ஒவ்வொரு நேரத்தின் தபஸ்யா. மேலும் தியாகம் எது? அதைப் பற்றியோ மிகவும் கூறியிருக்கிறோம் ஆனால் சார ரூபத்தில் சேவாதாரிகளின் தியாகம் எப்படி நேரமோ எப்படி பிரச்சனைகளோ, எப்படி மனிதர்களோ அதற்கேற்ப தன்னை வளைத்துக் கொண்டு தனக்கு நன்மை மற்றும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்காக எப்பொழுதும் இலகுவானவராக இருக்க வேண்டும். எப்படி சூழ்நிலையோ அதாவது எங்காவது

தன்னுடைய பெயரை, சம்ஸ்காரங்களை, வீணான எண்ணங்களை, ஸ்தூல அற்பக்கால சாதனங்களை தியாகம் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்றால் அந்த சூழ்நிலையில் மேலும் நேரத்திற்குத் தகுந்தாற்போல் தன்னுடைய உயர்ந்த நிலையை உருவாக்க முடிய வேண்டும். அதற்காக எப்படிப்பட்ட தியாகத்தைச் செய்ய வேண்டியதாக இருந்தாலும் செய்து விடுங்கள். தான் வளைந்து கொடுக்க வேண்டும் இதைத்தான் தியாக மூர்த்தி என்று கூறுவது. தியாகம், தபஸ்யா பிறகு சேவா. தியாகம் மற்றும் தபஸ்யா தான் சேவையின் வெற்றிக்கான ஆதாரம். நான் தியாகம் செய்தேன் என்று தியாகத்தின் அபிமானமும் இல்லாத தியாகியாக இருக்க வேண்டும். ஒருவேளை இந்த எண்ணமும் வருகிறது என்றால் இதுவும் தியாகம் இல்லை.

சேவாதாரி என்றால் பெரியவர்களின் டைரக்ஷன் (வழிகாட்டுதலை) உடனே நடைமுறையில் கொண்டு வருபவர். கூடியிருக்கும் மக்களுக்காக ஏதாவது டைரக்ஷன் கிடைத்தாலும், நான் சரிதான் என்று நிரூபிக்க முயலுதல் கூடாது. நீங்கள் சரிதான் ஆனால் மக்கள் கூட்டத்திற்காக பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களிடமிருந்து டைரக்ஷன் கிடைக்கிறது என்றால் சரிங்க ஐயா! அப்படியே ஆகட்டுங்க.... என்று சொல்வது தான் சேவாதாரிகளின் விசேஷம். இது தலை வணங்குவது அல்ல, கீழே இறங்குவது அல்ல ஆனால் இருந்தும் உயர்வாகச் செல்வது. சில நேரம் நான் செய்தேன் என்றால், நான் தாழ்ந்த நிலைக்குச் சென்று விடுவேன். என்னுடைய பெயர் குறைந்து விடும், என்னுடைய பெர்சனாலிட்டி (தனித்தன்மை) குறைந்து விடும் என்று நினைக்கிறார்கள் ஆனால் அப்படி அல்ல. ஏற்று நடப்பது என்றால், மரியாதைக்குரியவர் ஆவது. பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்பது என்றால் சுயமரியாதையைப் பெறுவது. எனவே தன்னுடைய மதிப்பு, மரியாதையையும் தியாகம் செய்யும் சேவாதாரியாக இருக்க வேண்டும். அற்பகால மதிப்பு மரியாதையை பெற்று என்ன செய்வீர்கள்? கட்டளைப்படி நடப்பவர் ஆவது தான் நிரந்தரமான மதிப்பு மரியாதையைப் பெறுவது. அழியாததைப் பெற வேண்டுமா அல்லது இப்பொழுது கிடைப்பதை பெற வேண்டுமா அப்படி சேவாதாரி என்றால் இந்த அனைத்து விசயங்களின் தியாகம் செய்வதில் எப்பொழுதும் எவரெடியாக இருப்பது. பெரியவர்கள் சொன்னார்கள் மற்றும் செய்தேன். அந்த மாதிரியான விசேஷ சேவாதாரிகள் அனைவருக்கும் மற்றும் தந்தைக்கும் பிரியமானவர்களாக

இருப்பார்கள். வளைந்து கொடுப்பது என்றால் சிறியவர்களாக ஆவதில்லை, ஆனால் வெற்றி என்ற பழத்தை நன்றாகப் பழுக்க வைப்பது. அந்த நேரம் என்னுடைய பெயர் கீழே சென்று கொண்டிருக்கிறது, அவர் பெரியவர் ஆகி விட்டார், நான் சிறியவன் ஆகி விட்டேன், என்னை கீழே இறக்கி விட்டார்கள், அவரை உயர்த்தி விட்டார்கள் என்று அனுபவம் ஆகும் ஆனால் நடப்பதோ ஒரு நொடிக்கான விளையாட்டு ஒரு நொடியில் வெற்றி ஏற்பட்டு விடுகிறது, ஒரு நொடியில் தோல்வி ஏற்பட்டு விடுகிறது. ஒரு நொடியின் தோல்வி நிரந்தரமான தோல்வி ஆகி விடுகிறது. அது சந்திரவம்சத்தின் வில் ஏந்தியவராக ஆக்கி விடுகிறது. மேலும் ஒரு நொடியின் வெற்றி நிரந்தர குஷியை பிராப்தி செய்விக்கிறது அதனுடைய அடையாளமாக ஸ்ரீ கிருஷ்ணன் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருப்பதாகக் காண்பித்திருக்கிறார்கள். சந்திரவம்சத்து வில்லு ஏந்தியவர் எங்கே மற்றும் புல்லாங்குழல் வாசிப்பவர் எங்கே? எனவே ஒரு நொடிக்கான விசயம் இல்லை, ஆனால் ஒரு நொடியின் ஆதாரம் எப்பொழுதும் இருக்கிறது. எனவே இந்த இரகசியத்தைப் புரிந்து கொண்டு எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். பிரம்மாபாபாவைப் பார்த்தீர்களா பிரம்மாபாபா தன்னைத் தானே எந்தளவு தாழ்த்திக் கொண்டார், குழந்தை களின் காலை பிடித்து விடுவதற்கும் தயாராகி அவ்வளவு பணிவானவராகி சேவாதாரி ஆனார். குழந்தைகள் என்னை விட முன்னுக்கு இருக்கிறார்கள், குழந்தைகள் என்னை விட நன்றாக சொற்பொழிவு நிகழ்த்த முடியும். முதலில் நான் என்று ஒருபொழுதும் சொன்னதில்லை. குழந்தைகள் முன்னுக்கு, முதலில் குழந்தைகள், பெரிய குழந்தைகள் என்று கூறினார். அப்படி தாழ்த்திக் கொள்வது தாழ்ந்து விடுவதல்ல, உயர்ந்தது செல்வது. இதைத் தான் உண்மையான நம்பர் ஒன் தகுதியான சேவாதாரி என்று கூறுவது. அனைவருக்கும் இலட்சியமோ அந்த மாதிரித்தான் இல்லையா? குஜராத்தில் நிறைய சேவாதாரிகள் உருவாகியிருக்கிறார்கள், ஆனால் குஜராத்தின் நதிகள் குஜராத்திலேயே ஓடிக் கொண்டிருக்கின்றன. குஜராத்திற்கு மட்டும் நன்மை செய்பவராக ஆகாமல் உலகிற்கே நன்மை செய்பவராக ஆகுங்கள். எப்பொழுதும் எவரெடியாக இருங்கள். இன்று ஏதாவது டைரக்ஷன் கிடைக்கிறது என்றால் சரி ஐயா! என்று கூறுங்கள். என்னவாகும், எப்படியாகும் டிரஸ்டிக்கு என்ன எப்படி என்று என்ன யோசிக்க வேண்டியதிருக்கிறது. உங்களை நீங்களாகவே சமர்ப்பித்தீர்கள் என்றால் விடுபட்ட நிலையில் இருப்பீர்கள். பற்றுதல், ஈர்ப்பிலிருந்து

விலகி விடுவீர்கள். இன்று இங்கு இருக்கிறீர்கள், நாளை வேறு எங்கு சென்றாலும் விலகியிருப்பவராக ஆகி விடுவீர்கள். இங்கேயே இருக்க வேண்டும் என்றால் கொஞ்சம் ஆக வேண்டும், கொஞ்சம் ஆக்க வேண்டும் என்பதோ இருக்கும். இன்று இங்கே நாளை அங்கே! பறவை இன்று ஒரு கிளையில் இருக்கிறது, நாளை இன்னொரு கிளையில் இருக்கும். அதனால் மன நிலை விலகி இருப்பதாக வேண்டும். சில இடங்களில் 20-வருடங்கள் இருந்தாலும் எப்பொழுதும் எவரெடியாக இருங்கள். எப்படி ஆகும் என்று நீங்களே யோசிக்காதீர்கள். இதைத் தான் மஹாதியாகி என்று கூறுவது நல்லது.

**வரதானம்: சங்கமயுக நேரத்தின் மகத்துவத்தைத் தெரிந்து பரமாத்ம ஆசீர்வாதங்களினால் பையை நிரப்பும் மாயாவை வென்றவர் ஆகுக!**

சங்கம யுகத்தின் ஒரு வினாடி மற்ற யுகங்களின் ஒரு வருடத்தையும் விட அதிகம். இந்த நேரம் ஒரு வினாடியை இழந்தாலும் ஒரு வினாடி அல்ல மிக அதிகமாக இழந்தீர்கள். இந்தளவு மகத்துவம் எப்பொழுதும் நினைவு இருக்கிறது என்றால், ஒவ்வொரு வினாடியும் பரமாத்ம ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டே இருப்பீர்கள். மேலும் யாருடைய பை பரமாத்மாவின் ஆசீர்வாதங்களினால் எப்பொழுதும் நிரம்பியிருக்கிறதோ அவரிடம் மாயா ஒருபொழுதும் வர முடியாது. தூரத்திலிருந்தே ஓடி விடும். எனவே நேரத்தை சேமிக்க வேண்டும். இது தான் தீவிர முயற்சி. தீவிர முயற்சியாளர் என்றால் எப்பொழுதும் மாயாவை வென்றவர்.

**சுலோகன்: யார் கட்டளைப்படி நடப்பவராக இருக்கிறாரோ அவர் தான் தந்தையின் மற்றும் குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரமானவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்தையும் தியாகம் செய்தவரின் அடையாளங்கள்!

பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து மகாதியாகி, சர்வம்ச (அனைத்தையும்) தியாகி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எந்தெந்தக் குழந்தைகள் இந்த மகான் பாக்கியத்தை பிராப்தி செய்து கொண்டிருக்கிறார்கள் மற்றும் அருகில் வந்து சேர்ந்து விட்டார்கள் - அந்த மாதிரி அருகாமையிலிருக்கும் அதாவது சமமான, சிரேஷ்ட, சர்வம்ச தியாகி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். சர்வம்ச தியாகி குழந்தைகளின் விசேஷம் என்ன, அந்த விசேஷத்தின் ஆதாரத்தின் அருகில் இருப்பவர்களாக மற்றும் சமமாக ஆகிறார்கள்? பௌதீக உடல் மூலமாகவும் (பிரம்மா) கடைசி வார்த்தைகளில் மூன்று விசேஷங்களைக் கூறினோம்:

(1) எண்ணத்தில் எப்பொழுதும் உடலற்ற (நிராகார்) நிலையிலிருந்து உடலில் (சாகார்) வருபவர், எப்பொழுதும் அனைத்திலிருந்தும் விலகிய மற்றும் தந்தையின் பிரியமான ஆத்மாக்கள்.

(2) வார்த்ததையில் எப்பொழுதும் அகங்காரமற்ற நிலை அதாவது எப்பொழுதும் ஆன்மீக இனிமைத் தன்மை மற்றும் பணிவு.

(3) காரியத்தில் ஒவ்வொரு கர்ம இந்திரியம் மூலமாக விகாரமற்ற (நிர்விகாரி) நிலை அதாவது தூய்மையின் தனித்தன்மை உள்ளவர்.

அப்படி ஒவ்வொரு கர்ம இந்திரியம் மூலமாக மகாதானி மற்றும் வரதானி அதாவது பெரும் வள்ளல் மற்றும் வரமளிப்பவர். நெற்றி மூலமாக அனைவருக்கும் சுய சொரூபத்தின் நினைவூட்டக் கூடிய வரதானி மற்றும் மகாதானி. கண்களினால் ஆன்மீக திருஷ்டி மூலம் அனைவருக்கும் சுய தேசம் அதாவது ஜீவன் முக்தி. தன்னுடைய இராஜ்யத்தின் தரிசனம் செய்விப்பது மேலும் வழி காண்பிப்பதற்காக திருஷ்டி மூலம் இஷாரா (சைகை) காண்பிப்பது. இது தான் நம்முடைய உண்மையான வீடு மற்றும் இராஜ்யம் என்று ஆத்மாக்கள் உணரும் அளவிற்கு அனுபவம்

செய்விப்பதற்கான வரதானம் கொடுப்பது, வீட்டிற்கான வழி, ராஜ்யத்தை அடைவதற்கான வழி கிடைத்து விட்டது என்று அந்த மாதிரி மகா தானம் மற்றும் வரதானம் பெற்று மகிழ்ச்சி அடைந்து விட வேண்டும். வாய் மூலமாக படைப்பவர் மற்றும் படைப்பின் விஸ்தாரத்தை தெளிவாகத் தெரிந்து தன்னை படைப்பவரின் முதல் படைப்பு சிரேஷ்ட பிராமணனிலிருந்து தேவதை ஆவதற்கான வரதானத்தைப் பெற்று விடட்டும். அதே போல் கைகள் மூலமாக எப்பொழுதும் சகஜயோகி, கர்மயோகி ஆவதற்கான வரதானம் கொடுக்கும் சிரேஷ்ட பலனை, பிராப்தி செய்வதற்கான வரதானத்தைப் பெறுபவர் களாக ஆக்குபவர். தாமரை போன்ற கால் பாதங்கள மூலமாக ஒவ்வொரு அடியிலும் தந்தையை பின்பற்றி நடந்து ஒவ்வொரு அடியிலும் பலமடங்கு வருமானத்தை சேமிக்கக்கூடிய வரம் பெற்றவர்கள். அந்த மாதிரி ஒவ்வொரு கர்ம இந்திரியம் மூலமாக விசேஷ அனுபவம் செய்விக்கும் வரம் பெற்றவர் அதாவது விகாரமற்ற வாழ்க்கை. இந்த மூன்று விசேஷங்கள சர்வம்ச தியாகியிடம் எப்பொழுதும் தெளிவாகத் தென்படும். சர்வம்ச தியாகி ஆத்மா ஏதேனும் ஒரு விகாரத்தின் அம்சத்தின் வசமாகி எந்த ஒரு தவறான காரியமும் செய்ய மாட்டார். விகாரங்களின் ராயல் அம்ச ரூபத்தைப் பற்றி ஏற்கனவே கூறியிருந்தோம். பெரிய ரூபத்தில் விகாரங்கள் அகன்று ராயல் ரூபத்தில், அம்ச மாத்திர ரூபத்தில் இருந்து விடுகின்றன. கூறியது நினைவு இருக்கிறது தான் இல்லையா? பிராமணர்களின் மொழியும் ராயல் ஆகி விட்டது. அதைப் பற்றிய விஸ்தாரமோ மிக நீளமானது. நான் தான் யதார்த்தமாக இருக்கிறேன், மேலும் நான் தான் சரியாக இருக்கிறேன் என்று தன்னை நிரூபிப்பதற்கான ராயல் மொழியின் வார்த்தைகளும் மிக அதிகமாக இருக்கின்றன. தன்னுடைய பலஹீனத்தை மறைத்து மற்றவர்களின் பலவீனத்தை நிரூபிக்கும் மற்றும் தெளிவு படுத்துவதற்கான விஸ்தாரம் செய்வது ஆகிய இவற்றிற்கும் மிக அதிக ராயல் வாôத்தைகள் இருக்கின்றன. இதுவும் பெரிய அகராதி, அது உண்மையானது அல்ல ஆனால் தன்னை நிரூபிப்பதற்காக மற்றும் தன்னுடைய பலகீனங்களை மறைப்பதற்கான மனம் சொல்லும் வழிப்படி கூறும் வார்த்தைகள், அந்த விஸ்தாரத்தை நீங்கள் அனைவரும் நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள். எந்த ஒரு விகாரத்தின் அம்ச மாத்திரம் கூட சர்வம்ச தியாகியின் பேச்சில் இருக்காது. அப்படி எண்ணம், சொல், செயல், சம்பந்தம் தொடர்பில்

எப்பொழுதும் விகாரங்களின் அம்ச மாத்திரமும் இல்லாத நிலை - இதைத்தான் சர்வம்ச தியாகி என்று கூறுவது. சர்வ அம்சத்தின் தியாகம்.

சர்வம்ச தியாகிகள் எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்யும் விசேஷம் உள்ளவர்களாக இருப்பார்கள். எப்பொழுதும் வள்ளலின் குழந்தைகள் வள்ளல் ஆகி, அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு நிறைந்தவர்களாக இருப்பார்கள். இவர் செய்தால், இந்த மாதிரி சூழ்நிலை, வாயுமண்டலம் இருந்தால் நான் செய்வேன் என்று அப்படியில்லை. மற்றவர்களின் உதவியைப் பெற்று தன்னுடைய நன்மைக்கான காரியம் செய்பவர் அதாவது பெற்று பிறகு கொடுப்பவர், உதவியைப் பெற்றார் பிறகு கொடுத்தார், பெறுவது மற்றும் கொடுப்பது சேர்ந்தே இருந்தது ஆனால் சர்வம்ச தியாகி, அவரே மாஸ்டர் வள்ளல் ஆகி சூழ்நிலைகளையும் மாற்றம் செய்வதற்கு, பலகீனமானவரை சக்திசாலி ஆக்குவதற்கு, வாயுமண்டலம் மற்றும் உள் உணர்வை தன்னுடைய சக்திகள் மூலம் பரிவர்த்தனை செய்வதற்கு எப்பொழுதும் தன்னை நன்மை செய்வதற்கு பொறுப்பாளர் என்று புரிந்து ஒவ்வொரு விஷயத்திலும் சகயோகம் மற்றும் சக்தியின் மகாதானம் மற்றும் வரதானம் கொடுப்பதற்கான எண்ணத்தை வைப்பார்கள். இது இருந்தால் இதைச் செய்வேன் என்றிருக்க மாட்டார்கள். மாஸ்டர் வள்ளல் ஆகி பரிவர்த்தனை செய்வதற்கு சுபபாவனையோடு சக்திகளை காரியத்தில் ஈடுபடுத்த அதாவது கொடுப்பதின் காரியத்தை செய்து கொண்டே இருப்பார்கள். நான் கொடுக்க வேண்டும், நான் செய்ய வேண்டும், நான் மாற வேண்டும், அப்படி முதலில் செய்பவர் அர்ஜுனன் அதாவது வள்ளல் தன்னைமயின் விசேஷம் இருக்கும்.

சர்வம்ச தியாகி என்றால் எப்பொழுதும் குண சொரூபமானவர். குண சொரூபமானவரின் பொருள் குணம் நிறைந்தவராக ஆவது மற்றும் அனைவரிடமுமுள்ள குணத்தைப் பார்ப்பது. ஒருவேளை அவரே குண சொரூப மானவர் என்றால், அவருடைய பார்வை மற்றும் உள் உணர்வு அந்த மாதிரி குணம் நிரம்பியதாகி விடும். அதன் காரணமாக அவருடைய பார்வை, உள் உணர்வு அனைவரில் இருக்கும் குணம் தான் தென்படும். அவகுணத்தைப் பார்த்தாலும், புரிந்து கொண்டாலும், பிறருடைய அவகுணத்தை புத்தி மூலம் கிரகிக்க மாட்டார் அதாவது புத்தியில் வைக்க மாட்டார். அந்த மாதிரி புனித அன்னப் பறவையாக இருப்பார். கூழாங்கல்

என்று தெரிந்தும் பொறுக்க மாட்டார். இன்னும் அதிகமாக அந்த ஆத்மாவின் அவ குணத்தை அகற்றுவதற்காக, அந்த ஆத்மாவையும் குணவானாக ஆக்குவதில் சகயோகியாக இருப்பார். ஏனென்றால் மாஸ்டர் வள்ளலின் சம்ஸ்காரம் இருக்கும்.

சர்வம்ச தியாகி எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு சிரேஷ்ட காரியத்தின் சேவையின் வெற்றியின் காரியத்தில், பிராமண ஆத்மாக்களின் முன்னேற்றத்தின் காரியத்தில், பலஹீனமான மற்றும் வீணான சூழ்நிலையை சரி செய்யும் காரியத்தில் பொறுப்பான ஆத்மா என்று புரிந்து கொள்வார்கள். சேவையில் தடை ஏற்படுவதற்கான காரணம் மற்றும் சம்பந்தம் தொடர்பில் ஏதாவது வரிசைக்கிரமமான (பலஹீன) ஆத்மாக்களின் காரணமாக கொஞ்சம் குழப்பம் ஏற்படுகிறது என்றால், சர்வம்ச தியாகி தன்னை எல்லைக்குக்கப்பாற்பட்ட ஆதார மூர்த்தி என்று நினைத்து நாலா புறங்களிலுமுள்ள குழப்பங்களுக்கு தீர்வு காணும் பொறுப்பு தன்னுடையது என்று நினைப்பார்கள். அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட முன்னேற்றத்தின் ஆதார மூர்த்தி என்று தன்னை நினைப்பார்கள் மற்றும் அனுபவம் செய்வார்கள். இதுவோ இந்த இடத்தின் விஷயம், இந்த சகோதரன், சகோதரியின் தனிப்பட்ட விஷயம் என்று நினைக்க மாட்டார். இது என்னுடைய குடும்பம். நான் நன்மை செய்யும் பொறுப்பிலிருக்கும் ஆத்மா. உலகிற்கு நன்மை செய்பவர் என்ற பட்டம் கிடைத்திருக்கிறதேயன்றி தனக்கு நன்மை செய்பவர் மற்றும் தன்னுடைய சென்டருக்கு நன்மை செய்பவர் என்றல்ல. மற்றவர்களின் பலவீனம் என்றால் தன்னுடைய குடும்பத்தின் பலவீனம் என்று அப்படி எல்லைக்கப்பாற்பட்ட பொறுப்புள்ள ஆத்மா என்று புரிந்து கொள்வார்கள். நான், எனது என்பது இல்லை. கருவியாக மட்டும் இருக்கிறேன் அதாவது உலக நன்மைக்கு ஆதார மூர்த்தி எல்லைக்கப்பாற்பட்ட காரியத்தின் ஆதார மூர்த்தி.

சர்வம்ச தியாகி எப்பொழுதும் ஒரு ரசனையில், ஒரு வழி, ஒரே குடும்பத்தின் காரியம் என்று அந்த மாதிரி எப்பொழுதும் ஒரே நினைவில், நம்பர் ஒன் ஆத்மாவாக இருப்பார். சர்வம்சதியாகி எப்பொழுதும் தன்னை பிரத்யக்ஷ பலனின் பிராப்தியினை அடைந்த ஆத்மாவாக, பிராப்தியினை அடைந்த ஆத்மாவாக அனுபவம் செய்வார்கள். அதாவது சர்வம்ச தியாகி ஆத்மா எப்பொழுதும் அனைத்து பிரத்யக்ஷ பலன்களால் (பழங்களால்)

நிரம்பிய நெடிய மரத்திற்குச் சமமாக இருப்பார்கள். எப்பொழுதும் பலன் சொரூபமாக இருப்பார். எனவே எல்லைக்குட்பட்ட காரியத்தின், எல்லைக்குட்பட்ட பலன் அடைவதின் அற்பகால ஆசையிலிருந்து விடுபட்டு, ஆசையென்றால் என்னவென்று தெரியாத நிலையில் இருப்பார். எப்பொழுதும் பிரத்யக்ஷ பழத்தை அருந்தும் நிரந்தர ஆரோக்கியமானவராக இருப்பார். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பார். எந்த விதமான மனதின் நோயும் இருக்காது. எப்பொழுதும் மன்மனாபவ ஆக இருப்பார். அந்த மாதிரி சர்வம்ச தியாகியாக ஆகியிருக்கிறீர்களா? மூன்று விசேஷங்களையும் எதிரில் வைத்து நான் எந்த மாதிரியான தியாகி என்று தன்னிடமே கேளுங்கள். எதுவரை வந்து சேர்ந்திருக்கிறேன்? எத்தனை படிகளை ஏறிவந்து தந்தைக்கு சமமான இலக்கை வந்தடைந்திருக்கிறேன்? முற்றுப்புள்ளி வரை வந்து சேர்ந்திருக்கிறீர்களா அல்லது இப்பொழுது சில புள்ளி வரை வந்து சேர்ந்திருக்கிறீர்களா? ஏழு பாடங்களில் எத்தனை பாடங்களைப் படித்திருக்கிறீர்கள்? ஏழு நாள் பாடங்களில் கடைசி நாள் பாடத்தில் போக் வைப்பது வருகிறது. எனவே இப்போது பாப்தாதாவும் போக் (நைவேத்யம்) வைக்கட்டுமா? நீங்கள் அனைவரும் ஒவ்வொரு குருவாரம் (வியாழக்கிழமை) அன்று போக் வைக்கிறீர்கள் ஆனால் பாப்தாதாவோ மகா 'போக்' வைப்பார் இல்லையா? எப்படி சந்தேஷி சகோதரிகள் சூட்சும வதனத்திற்கு போக் எடுத்து வருகிறார்கள் என்றால், பாப்தாதா 'போக்' எங்கே எடுத்துச் செல்வார்? முதலில் தன்னை போக்கில் சமர்ப்பணம் செய்யுங்கள். போக்கையும் தந்தையின் எதிரில் சமர்ப்பணம் செய்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது தன்னை எப்பொழுதும் பிரத்யக்ஷ பலன் சொரூபமாக்கி சமர்ப்பணம் செய்யுங்கள் அப்பொழுது தான் மகா போக் ஆகும். தன்னைத் தானே சம்பன்னமாக்கி அர்ப்பணம் செய்யுங்கள். ஸ்தூல போகை மட்டும் வைக்காதீர்கள். சம்பன்ன ஆத்மாவாகி தன்னை சமர்ப்பணம் செய்யுங்கள். புரிந்ததா -வேறு என்ன செய்ய வேண்டும் புரிந்து கொண்டீர்களா?

நல்லது. மற்றபடி இன்னும் ஒரு முறை சந்திப்பது இருக்கிறது. உடல் மூலமாக சந்திப்பதற்கு இந்த ரூபம், வடிவத்தில் சந்திப்பதற்கு இன்று கடைசி நேரம். நிகழ்ச்சிப்படியோ இன்று சாகார சந்திப்பிற்கான நிறைவு விழா. பிறகு நடக்கும் விஷயங்களைப் பிறகு பார்க்கலாம். அதிகப்படியான ஒரு தந்தையின் சுங்க வரியும் (லாபம்) கிடைத்து விடும்

ஆனால் இந்த முழு சந்திப்பு மூலம் சார ரூபத்தில் நீங்கள் உங்களுக்காக என்ன அடைந்தீர்கள்? கேட்க மட்டும் செய்தீர்களா? அல்லது உள்ளே நிரப்பி சொரூபத்தில் கொண்டு வந்தீர்களா? இந்த சந்திப்பு கொண்டாட்டத்தின் சீஸன் எந்த சீஸனைக் கொண்டு வரும்? இந்த சீஸனின் பழமாக எது உருவாகும்? சீஸனின் பழத்திற்கு மகத்துவம் இருக்கிறது இல்லையா? அப்படி இந்த சீஸனின் பழமாக என்ன உருவானது? பாப்தாதா கிடைத்தார் அதுவோ இருந்தது, ஆனால் கிடைப்பது என்றால் சமமாக ஆவது. எனவே எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்ற திட எண்ணத்தின் பழத்தை பாப்தாதாவிற்கு காண்பிப்பீர்கள் இல்லையா? அந்த மாதிரி பழத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? தன்னை தயார் செய்திருக்கிறீர்களா? அல்லது இப்பொழுது கேட்க மட்டும் செய்தீர்கள், இன்னும் தயாராக வேண்டுமா? சந்திக்க மட்டும் வேண்டுமா? அல்லது சமமாக வேண்டுமா? எப்படி சந்திப்பதற்காக மிகவும் ஊக்கம் உற்சாகத்தோடு ஓடி ஓடி வந்து சேருகிறீர்கள், அதேபோல் (பாபா) சமமாக ஆக வேண்டும் என்பதற்காகவும் பறந்து வருகிறீர்களா? வந்து போகும் சாதனங்களால் சிரமத்தை அனுபவிக்கவில்லையே? ஆனால் பறக்கும் கலையில் செல்வதில் எந்தக் கஷ்டமும் கிடையாது. எல்லைக்குட்பட்ட கிளைகளை உருவாக்கி, கிளைகளைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டீர்கள், ஹே, பறக்கும் பறவைகளே! கிளைகளை விடுங்கள். தங்கக் கிளைகளையும் விடுங்கள். சீதையை பொன் மான் தான் சோக வனத்திற்கு அனுப்பி வைத்தது. இந்த என்னுடைய, என்னுடையது, என்னுடைய பெயர், என்னுடைய மரியாதை, என்னுடைய மதிப்பு, என்னுடைய சென்டர் இவை அனைத்தும் தங்க கிளைகள். எல்லைக்கப்பாற்பட்ட அதிகாரத்தை விட்டுவிட்டு எல்லைக்குட்பட்ட அதிகாரத்தில் வந்து விடுகிறீர்கள். என்னுடைய அதிகாரம் இது, இது என்னுடைய காரியம் -இந்த அனைத்திலிருந்தும் பறக்கும் பறவை ஆகுங்கள். இந்த எல்லைக்குட்பட்ட ஆதாரங்களை விடுங்கள் என்று கதறிக் கொண்டிருக்கும் கிளியோ இல்லையே! நீங்கள் விடுவதில்லை, மேலும் விடுவியுங்கள்! என்று கதறுகிறீர்கள். அந்த மாதிரி கிளியாக ஆகாதீர்கள். விடுங்கள் மற்றும் பறங்கள். விட்டால் தானே விடுபடுவீர்கள் இல்லையா? பாப்தாதா இறக்கை கொடுத்து விட்டார். இறக்கைகளின் வேலை பறப்பதா அல்லது அமர்ந்திருப்பதா? எனவே பறக்கும் பறவை ஆகுங்கள். அதாவது பறக்கும்

கலையில் எப்பொழுதும் பறந்து கொண்டே இருங்கள். புரிந்ததா? -இதைத் தான் சீஸனின் பழம் கொடுப்பது என்று கூறுவது நல்லது.

அப்படி எப்பொழுதும் பிரத்யக்ஷ பலன் நிரம்பிய, சம்பூர்ண சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தைக்கு சமமான நிராகாரி, நிர் அகங்காரி நிர்விகாரி ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் விகாரத்தின் அம்சத்தை தொடாத, அந்த மாதிரி சர்வம்ச தியாகி, எப்பொழுதும் பறக்கும் கலையில் பறக்கும் பறவைகளுக்கு, அந்த மாதிரி தந்தைக்கு சமமான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலை மூலம் வீணானவை என்ற குப்பையை அகற்றுங்கள்!** எப்பொழுதும் தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மா என்று நினைக்கிறீர்களா? சர்வ சக்திவான் என்றால் சக்திசாலியானவர். யார் சக்திசாலியானவரோ அவர் வீணானவை என்ற குப்பையை அகற்றி விடுவார். மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால், வீணானவையின் பெயர் அடையாளம் இல்லாதவர். நான் வீணானவற்றை முடிக்கும் சக்திசாலியானவன் என்ற இலட்சியத்தை எப்பொழுதும் வையுங்கள். எப்படி சூரியனின் வேலை குப்பையை பஸ்மம் ஆக்குவது, இருளை அகற்றுவது, வெளிச்சம் கொடுப்பது. இதே முறையில் மாஸ்டர் ஞான சூரியன் என்றால் வீணானவை என்ற குப்பையை அகற்றுபவர், அதாவது இருளை அகற்றுபவர். ஒருவேளை பிரபாவத்தில் வந்து விடுகிறீர்கள் என்றால், பலகீனமானவர் ஆனீர்கள். தந்தை சர்வ சக்திவான் மற்றும் குழந்தைகள் பலகீனமானவர்கள் என்ற இதை கேட்பதற்ககே நன்றாக இல்லை. என்ன ஆனாலும் சரி, நான் மாஸடர் சர்வ சசக்திவான் என்ற நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். நான் தனியாக என்ன செய்ய முடியும் என்று அப்படி நினைக்காதீர்கள். ஒருவர் கூட அனேகர்களை மாற்ற முடியும். எனவே தானும் சக்திசாலி ஆகுங்கள். மேலும் மற்றவர்களையும் ஆக்குங்கள். எப்பொழுது ஒரு சிறிய தீபம் இருளை அகற்ற முடியும் என்றால், நீங்கள் என்ன செய்ய முடியாது? எனவே சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தை எப்பொழுதும் வையுங்கள். உலகை மாற்றுபவர் ஆவதற்கு முன்பு சேவை நிலையத்தின் சூழ்நிலையை மாற்றம் செய்து சக்திசாலியான வாயுமண்டலத்தை உருவாக்குங்கள்.

**தம்பதிகளுடன் பாப்தாதாவின் சந்திப்பு:** அனைவரும் குடும்பத்தில் இருந்து கொண்டே குடும்பத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்டு மற்றும் எப்பொழுதும் தந்தைக்குப் பிரியமானவராக இருக்கிறீர்களா? ஏதாவது குடும்ப பந்தனத்தில் கட்டப்பட்டு இருக்க வில்லையே? சமுதாயத்தின் பந்தனத்தில், சம்பந்தத்தில் கட்டப்பட்டவரை பந்தனம் நிறைந்த ஆத்மா என்று கூறுவோம். எனவே எந்த பந்தனமும் இருக்க வேண்டாம். மனதின் பந்தனமும் இருக்க வேண்டாம். மனதில் எனக்கு குடும்ப உறவினர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணமும் வரவே வேண்டாம். குடும்ப உறவில் இருந்து கொண்டே ஆன்மீக சம்பந்தத்தின் நினைவு இருக்க வேண்டும். ஏதோ காரணமாக குடும்ப சம்பந்ததில் இருக்கீறீர்கள் ஆனால் ஆன்மீக மற்றும் பரலோக சம்பந்தம் நினைவில் இருக்கட்டும். எப்பொழுதும் தாமரை மலர் ஆசனத்தில் அமர்ந்திருங்கள். தண்ணீர் மற்றும் சேற்றின் தொடர்பில் வந்தாலும் எப்பொழுதும் வலகியிருப் பவராகவும், அன்பானவராகவும் இருங்கள். சேவையின் காரணமாக தொடர்பில் இருக்கிறோம். தேகத்தின் சம்பந்தத்தில் இல்லை, சேவையின் சம்பந்தத்தில் இருக்கிறோம், குடும்பத்தில் உறவின் காரணமாக இருக்க வில்லை, சேவையின் காரணமாக இருக்கிறீர்கள். அது வீடு இல்லை. சேவை ஸ்தானம். சேவை ஸ்தானம் என்று புரிந்து கொள்வதினால் எப்பொழுதும் சேவையின் நினைவு இருக்கும். நல்லது.

**வரதானம்: விகாரங்கள் என்ற பாம்புகளை கழுத்தில் மாலை ஆக்கி விடும் உண்மையான தபஸ்வி ஆகுக!**

இந்த விகாரங்கள் மனிதர்களை பொறுத்தவரை விஷம் நிறைந்த பாம்புகள் ஆனால் யோகி தபஸ்வி ஆத்மாக்கள் உங்களுக்கு அது கழுத்தின் மாலையாகி விடுகிறது. எனவே பிராமணர்கள் உங்களுடைய மற்றும் பிரம்மாபாபாவின் நினைவுச் சின்னமான அசரீரி தபஸ்வி சங்கர் சொரூபத்தில் பாம்பின் மாலையை கழுத்தில் காண்பித்திருக்கிறார்கள். உங்களுக்கோ பாம்பு குஷியில் நடனம் ஆடுவதற்கான மேடை ஆகி விடுகிறது. இந்த அடிமையின் அடையாளத்தை காண்பித்திருக்கிறார்கள். ஆத்மாவின் நிலை தான் மேடை. எனவே விகாரங்களின் மீது எப்பொழுது இந்த அளவு வெற்றியடைவீர்களோ அப்பொழுது தான் உண்மையான தபஸ்வி என்று கூறுவோம்.

**சுலோகன்: பழைய உலகம் மற்றும் சம்ஸ்காரங்களிலிருந்து இறப்பது தான் உடலில் உயிரோடு இருந்து கொண்டே இறப்பது ஆகும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 30.04.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விஸ்தாரத்தை புள்ளியில் உள்ளடக்குங்கள்!

பாப்தாதா அனைவரையும் இந்த உடல் மற்றும் உலகத்திலிருந்து தூரமாக அழைத்துச் செல்வதற்காக இந்த பௌதீக உடல் மற்றும் உலகில் வருகிறார். தூர தேசவாசி அனைவரையும் தூர தேச வாசிகளாக ஆக்குவதற்காக வருகிறார். தூர தேசத்திற்கு இந்த உடல் செல்லாது தூய்மையான ஆத்மா தந்தையின் கூடவே தன்னுடைய தேசத்திற்குச் செல்லும். அப்படியானால் செல்வதற்காக தயாராகி விட்டீர்களா அல்லது மூட்டை கட்டுவதற்கு இன்னும் மிச்சம் ஏதாவது இருக்கிறதா? எப்பொழுது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்கிறீர்கள் என்றால், விஸ்தாரமாக இருக்கும் பல பொருட்களை ஒன்றாகச் சேர்த்து கட்டி இடம் மாறிச் செல்கிறீர்கள். அந்த மாதிரி தூர தேசம் மற்றும் தன்னுடைய இனிமையான இல்லத்திற்குச் செல்வதற்காக என்ன தயாராக வேண்டும்? அனைத்து விஸ்தாரத்தை புள்ளியில் உள்ளடக்க வேண்டியதாக இருக்கும். அந்த அளவு உள்ளடக்கும் சக்தி, சுருக்கப்படுத்தும் சக்தியை தாரணை செய்து விட்டீர்களா? நேரத்திற்குத் தகுந்தாற்போல் பாப்தாதாவிடமிருந்து இப்பொழுது ஒரு நொடியில் என்னோடு வா என்று உத்தரவு கிடைத்தது என்றால், ஒரு நொடியில் விஸ்தாரத்தை உள்ளடக்க முடியுமா? உடலின் குடும்பம், உலகத்து குடும்பம், சேவையின், குடும்பம், இன்னும் மிச்சமிருக்கும் பலஹீனமான எண்ணங்களின் மற்றும் சம்ஸ்காரத்தின் குடும்பம், அப்படி அனைத்து விதமான குடும்பத்திலிருந்தும் விலகியவராகி, கூடவே தந்தையுடன் செல்லும் அன்பானவராகவும் ஆக முடியுமா? அல்லது ஏதாவது குடும்பம் தன் பக்கம் கவர்ந்திழுக்குமா? அனைத்துப் பக்கங்களிலிருந்தும் அனைத்து குடும்பங்களின் பிடிப்பையும் விட்டு விட்டீர்களா அல்லது ஏதாவது குடும்பம் தன் பக்கம் கவர்ந்திழுக்குமா? அனைத்துப் பக்கங்களிலிருந்து அனைத்து குடும்பங்களின் பிடிப்பை விட்டு விட்டீர்களா அல்லது எதாவது ஒரு பிடிப்பு அற்பகால ஆதரவாகி, தந்தையின் ஆதரவு மற்றும் துணையிலிருந்து

தூரமாக்கி விடுமா? செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை வைத்தீர்கள், இப்பொழுது செல்ல வேண்டும் என்று உத்தரவு கிடைக்கிறது என்றால், டபுள் லைட் என்ற விமானத்தின் இருக்கையில் அமர்ந்து பறந்து செல்ல முடியுமா? அந்த மாதிரி தயாராகியிருக்கிறீர்களா? அல்லது இப்பொழுது இதைச் செய்ய வேண்டும் அதைச் செய்ய வேண்டும் என்று யோசிப்பீர்களா? சுருக்கத்தில் கொண்டு வரும் சக்தியை இப்பொழுது காரியத்தில் ஈடுபடுத்த முடியுமா அல்லது என்னுடைய மாணவர்கள், என்னுடைய (உலக) குடும்பம், என்னுடைய வெளி உலக வேலை போன்றவை நினைவில் வராதே? எப்படி நீங்கள் ஒரு நாடகத்தை நடித்துக் காண்பிக்கிறீர்கள்- இந்த மாதிரியான எண்ணங்களை இப்பொழுது எண்ண வேண்டும், பிறகு திரும்பிச் செல்வோம்..... அந்த மாதிரி நாடகத்தில் காண்பித்தது போல் உடன் செல்வதற்கான இருக்கையை பெறும் உரிமையிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடக் கூடாது. இப்பொழுதோ மிக அதிகமாக விஸ்தாரத்தில் செல்கிறீர்கள், மேலும் இன்னும் அதிகரிக்கத்தான் செய்யும், ஆனால் விஸ்தாரம் எவ்வளவு அதிகரித்துக் கொண்டிருக்கிறதோ அந்தளவு விஸ்தாரத்திலிருந்து விலகியிருப்பவராகி மற்றும் உடன் செல்லும் அன்பானவர் ஆக வேண்டும் என்ற இந்த விசயத்தை மறந்து விடாதீர்கள். ஏதேனும் ஒரு பக்கத்தின் பற்றுதலின் கயிறு தங்கிப் போய் இருந்து விட வேண்டாம். அனைத்து பக்கங்களின் கயிறுகள் துண்டிக்கப்பட்டு இருக்க வேண்டும். மேலும் அனைவரிடமிருந்தும் விடை பெற்று இருங்கள். எப்படி இன்றைய நாட்களில் இங்கு முன்பாகவே மரணத்தை கொண்டாடுகிறீர்கள் இல்லையா? ஆக, அனைவரிடமிருந்தும் விடை பெற்று விட்டீர்கள் இல்லையா? அந்த மாதிரி அனைத்து குடும்பங்களின் பந்தனங்களி-ருந்து விடைபெற்று விடுங்கள். நிறைவு விழாவைக் கொண்டாடுங்கள். பறக்கும் கலையில் செல்வதற்கான பறக்கும் இருக்கை எப்பொழுதும் தயாராக இருக்கட்டும். எப்படி இன்றைய உலகத்தில் கூட யுத்தம் தொடங்கு கிறது என்றால், அங்கே உள்ள ராஜா அல்லது ஜனாதிபதி தேசத்தை விட்டு வெளியேறுவதற்கான வழியை (சுரங்கம்) முன்பாகவே தயார் செய்து விடுவார்கள். அந்த நேரம் இதைத் தயார் செய்யுங்கள் என்று உத்தரவு இடுவதற்கான நேரம் மற்றும் வாய்ப்பு, வசதி இருக்காது. யுத்தம் என்ற சமிக்ஜை கிடைத்த வுடனேயே ஒடி விடுவார்கள். இல்லையென்றால் என்னவாகி விடும், ராஜா மற்றும் ஜனாதிபதிக்குப் பதிலாக சிறைப் பறவை ஆகி விடுவார்கள். இன்றைய நாட்களில் பொறுப்பில்

இருப்பவராகியிருக்கும் அற்பகால அதிகாரி ஆத்மாக்கள் கூட முன்பாகவே தன்னுடைய ஏற்பாடுகளை செய்து வைத்திருப்பார்கள். அப்படியானால் நீங்கள் யார்? இந்த சங்கமயுகத்தின் கதாநாயகன் பாத்திரத்தை ஏற்று நடித்து வரும் விசேஷ ஆத்மாக்கள்! எனவே உங்கள் அனைவருக்கும் கூட முன்பாகவே ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும் இல்லையா அல்லது அந்த கடைசி நேரம் செய்வீர்களா? ஒரு நொடிக்கான வாய்ப்புதான் கிடைக்கும், பிறகு என்ன செய்வார்கள்? யோசிப்பதற்கும் நேரம் கிடைக்காது. செய்யவா அல்லது வேண்டாமா, இதைச் செய்யவா, அதைச் செய்யவா என்று யோசிப்பவர்கள், உடன் வருபவர்களுக்குப் பதிலாக ஊர்வலத்தில் வருபவர்கள் ஆகி விடுவார்கள். எனவே இறுதி வாகன நிலை அதாவது கர்மபந்தனத்திலிருந்து விடுபட்ட கர்மாதீத நிலை. அந்த மாதிரி கர்மாதீத நிலையின் வாகனம் அதாவது இறுதி வாகனம். அந்த வாகனம் மூலமாக ஒரு நொடியில் பறந்து செல்வீர்கள். வாகனம் தயாராக இருக்கிறதா? அல்லது நேரத்தை எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? இப்பொழுது இது நடக்க வேண்டும், அது நடக்க வேண்டும் அதற்கு பிறகு ஆகும் என்று அப்படியோ யோசிக்கவில்லையே? அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுங்கள். சேவையின் சாதனங்களையும் உபயோகியுங்கள். புதுப்புது திட்டங்களை உருவாக்குங்கள். அதற்கு ஒன்றும் தடையில்லை ஆனால் பக்கங்களில் கயிறைக் கட்டி விட்டு விடாதீர்கள். குடும்பத்திற்குள் வந்தவுடன் தாமரை மலர் ஆக வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள், திரும்பிச் செல்வதற்கு தயாராக வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள் எப்பொழுதும் தனது இறுதி நிலைக்கான வாகனமாகிய, விலகியிருப்பவராகவும் (நியாரா) அன்பானவராகவும் (ப்யாரா) ஆக வேண்டும் என்ற சிரேஷ்ட சாதனத்தை சேவையின் சாதனங்களில் மறந்து விடாதீர்கள். சேவை அதிகமாகச் செய்யுங்கள் ஆனால் விலகியிருப்பது என்ற விசேஷத்தை விட்டு விடாதீர்கள். இப்பொழுது இந்தப் பயிற்சிக்கான அவசியம் தான் இருக்கிறது. இருந்தால் முற்றிலும் விலகியிருப்பவராக இருந்து விடுகிறீர்கள் அல்லது முற்றிலும் அன்பானவராக ஆகி விடுகிறீர்கள், எனவே விலகியிருப்பது மற்றும் அன்பாக இருப்பதில் சமநிலை வையுங்கள். சேவை செய்யுங்கள் ஆனால் என்னுடையது என்பதி-ருந்து விலகியிருந்து சேவை செய்யுங்கள். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று? இப்பொழுது புதுப்புது கயிறுகளையும் தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள். பழையவை துண்டித்துக் கொண்டிருக்கிறது. புரிந்து கொண்டும் புதுக்

கயிறுகளை கட்டுகிறார்கள். ஏனென்றால், நன்றாக ஜொ-க்கும் கயிறுகள். எனவே இந்த வருடம் என்ன செய்ய வேண்டும்? பாப்தாதா சாட்சியாகி, குழந்தைகளின் விளையாட்டைப் பார்க்கிறார். கயிறுகளை கட்டும் பந்தயம் கூட ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள், எனவே விஸ்தாரத்தில் சென்றாலும் எப்பொழுதும் சார ரூபத்தில் இருங்கள்.

தற்சமயம் சேவையின் ரிஸல்ட்டில் (முடிவில்) குவான்டிட்டி (எண்ணிக்கை) மிக நன்றாக இருக்கிறது ஆனால் இப்பொழுது குவான்டிட்டியில் குவாலிட்டியை நிரப்புங்கள். ஸ்தாபனை காரியத்தில் குவான்ட்டிட்டியும் அவசியமாக இருக்கிறது ஆனால் மரத்தில் இலைகள் பரந்து வளர்ந்திருக்கிறது ஆனால் பழம் தரவில்லையென்றால் அதை விரும்புவீர்களா? இலைகளும் இருக்க வேண்டும், பழமும் கொடுக்க வேண்டும் என்றா அல்லது இலை மட்டும் இருந்தால் போதுமா? இலைகள் மரத்தின் அலங்காரம். மேலும் பழம் வாழ்க்கைக்குத் தேவையான நிரந்தர ஆதாரம், எனவே ஒவ்வொரு ஆத்மாவையும் பிரத்யக்ஷ பலன் சொரூபம் ஆக்குங்கள். அதாவது விசேஷமாக குணங்களின், சக்திகளின் அனுபவம் நிறைந்தவராக ஆக்குங்கள். வளர்ச்சி நன்றாக இருக்கிறது ஆனால் எப்பொழுதும் தடைகளை அழிப்பவராக, சக்திசாலி ஆத்மா ஆவதற்கான விதியைக் கற்றுக் கொடுப்பதில் விசேஷ கவனம் வையுங்கள். வளர்ச்சியின் கூடவே விதியைக் கற்றுக் கொடுப்பதற்கும், சித்தி சொரூபம் ஆக்குவதற்கும் விசேஷ கவனம் தேவை. அன்பானவர்களாகவும், சகயோகியாகவும் கண்டிப்பாக ஆவார்கள், ஆனால் தடைகளை பழைய சம்ஸ்காரங்களை அழித்து சக்திசா-யான ஆத்மா அதாவது மஹாவீர் ஆகி விட வேண்டும். என்ற இதன் மேல் விசேஷ கவனம் வையுங்கள். சுய இராஜ்ய அதிகாரியாக இருந்து உலக இராஜ்ய அதிகாரியாக ஆகும் இந்த மாதிரி குவாலிட்டி ஆத்மாக்களை அதிகப்படுத்துங்கள். சேவாதாரியாக அதிகமாக ஆகியிருக்கிறீர்கள் ஆனால் அனைத்து சக்திகளும் நிரம்பிய சம்பன்ன ஆத்மாக்களை மேடையில் கொண்டு வாருங்கள்.

இந்த வருடம் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் விசேஷமாக அனுபவி மூர்த்தியாக, விசேஷமாக அனுபவங் களின் சுரங்கமாகி, அனுபவி மூர்த்திகளாக ஆக்குவதற்கான மஹாதானம் செய்யுங்கள், அதன் மூலம்

ஒவ்வொரு ஆத்மாவும் அனுபவத்தின் ஆதாரத்தில் அங்கதனுக்குச் சமமாகி விட வேண்டும். (இந்த மார்க்கத்தில்) சென்று கொண்டிருக்கிறோம், (முயற்சி) செய்து கொண்டிருக்கிறோம், கேட்டுக் கொண்டிருக்கிறோம், சொல்லிக் கொண்டிருக் கிறோம் என்று அப்படியல்ல ஆனால் அனுபவங்களின் பொக்கிஷத்தை அடைந்து விட்டோம் என்ற பாடலை பாடிக் கொண்டே குஷியின் ஊஞ்ச-ல் ஆடிக் கொண்டே இருக்க வேண்டும்.

இந்த வருடம் சேவையின் உற்சவங்களின் கூடவே பறக்கும் கலையின் உற்சாகம் அதிகரித்துக் கொண்டே இருக்கட்டும். சேவையின் உற்சவத்தின் கூடவே உற்சாகம் அழியாததாக இருக்கட்டும், அந்த மாதிரி உற்சவத்தை கொண்டாடுங்கள். புரிந்ததா! எப்பொழுதும் பறக்கும் கலையின் உற்சாகத்தில் இருக்க வேண்டும், மேலும் அனைவரின் உற்சாகத்தையும் அதிகரிக்க வேண்டும்.

இந்த வருடம் -ஒவ்வொருவருக்கும் பல்வேறு துறைகளின் ஆத்மாக்களுக்கு சேவை செய்து அனைத்து விதமான துறைகளைச் சேர்ந்த ஆத்மாக்களையும் தந்தையின் குழந்தையாக்கி, பல்வேறு துறைகளின் பூச்செண்டை தயார் செய்து தந்தையின் எதிரில் கொண்டு வர வேண்டும் ஆனால் நீங்கள் அனைவருமே ஆன்மீக ரோஜா மலர்களாகத் தான் இருக்கிறீர்கள். மரம் பலவகையாக இருந்தாலும், வி.ஐ.பி யாகவும் இருக்க வேண்டும், வேறு வேறு பதவியில் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும், சாதாரணமானவர் களும் இருக்கட்டும், கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கட்டும் ஆனால் அனைவருக்கும் அனுபவங்களின் சுரங்கம் மூலமாக அனுபவி முர்த்தியாக்கி, பிராப்தி சொரூபமாக்கி எதிரில் கொண்டு வாருங்கள் - இதைத் தான் ஆன்மீக ரோஜா மலர் என்று சொல்வது. பூச்செண்டை தயாரியுங்கள் ஆனால் நான், எனது என்பதைக் கொண்டு வராதீர்கள்- என்னுடைய பூச்செண்டே அனைத்தையும் விட மிக நல்லது என்று நினைப்பவர் ஆன்மீக ரோஜா மலராக ஆக முடியாது. நான் .... எனது..... என்பது வந்து விட்டது என்றால், பூச்செண்டு வாடி விட்டது. எனவே இவர்கள் பாபாவின் குழந்தைகள் என்னுடையவர்கள் என்பதை மறந்து விடுங்கள். ஒருவேளை என்னுடையவர்கள் என்று ஆக்கினீர்கள் என்றால் அந்த ஆத்மாக்களையும் எல்லைக்கப்பாற்பட்ட அதிகாரத்தி-ருந்து

தூரமாக்கி விடுவீர்கள். ஆத்மா எவ்வளவு தான் மஹானாக இருந்தாலும் அனைத்தும் நிறைந்தவர் அல்ல. கடல் என்று கூறமாட்டோம் எனவே எந்த ஒரு ஆத்மாவையும் எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தியிலிருந்து வஞ்சிக்க வைத்து விடக் கூடாது. இல்லை என்றால், அதே ஆத்மாக்கள் வரும் நாட்களில் இவர்களை என்னுடைய குழந்தையாக ஆக்குபவர்களிடம் என்னை ஏன் வஞ்சிக்கப்பட்டவராக ஆக்கினீர்கள் என்று புகார் கூறுவார்கள். அந்த நேரம் அவர்களுடைய புலம்பலை சகித்துக் கொள்ள முடியாது. அந்த அளவு துக்கம் நிறைந்த இதயத்தின் புலம்பலாக இருக்கும் எனவே இந்த முக்கியமான விசயத்தை விசேஷ கவனம் கொடுத்து புரிந்து கொள்ள வேண்டும். விசேஷமாக சேவையோ நன்றாகச் செய்யுங்கள். உட-ன் சக்தி, மனதின் சக்தி, பணத்தின் சக்தி, சகயோகம் கொடுப்பதின் சக்தி அப்படி என்ன என்ன சக்திகள் இருக்கின்றனவோ, நேரத்தின் சக்தியும் இருக்கிறது, இந்த அனைத்தையும் பயனுள்ள காரியத்தில் ஈடுபடுத்துங்கள். எதிர்காலத்தின் என்னவாகும் என்று யோசிக்காதீர்கள். எவ்வளவு ஈடுபடுத்தினீர்களோ அவ்வளவு சேமிப்பானது. எனவே என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா அனைத்து சக்திகளையும் ஈடுபடுத்துங்கள். தன்னை பறக்கும் கலையில் பறக்க வையுங்கள். மேலும் மற்றவர் களையும் பறக்கும் கலையில் கொண்டு செல்லுங்கள். உற்சாகத்திற்கான சுலோகனும் கிடைத்திருக்கிறது தான் இல்லையா?

இந்த வருடம் இரட்டை உற்சவம் கொண்டாட வேண்டும். மேலும் ஆன்மீக ரோஜா மலரின் பூச்செண்டை ஒவ்வொருவரும் தயார் செய்ய வேண்டும். இன்று வந்திருப்பவர்கள் கூட விதவிதமான பூச்செண்டுகள் தான். நாலாபுறங்களிலும் உள்ளவர்கள் வந்திருக்கிறார்கள் இல்லையா! பாரதம் மற்றும் வெளிநாடுகளில் பலவிதமான பூச்செண்டுகள் ஆகி விட்டன இல்லையா! இரட்டை வெளிநாட்டினரும் கடைசி குளிய-ல் பங்கு எடுத்துக் கொண்டார்கள். அவ்வாறு வந்ததற்காக பாப்தாதாவும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். வாழ்த்துக்களும் அனைவருக்கும் கிடைத்து விட்டது, மேலும் சந்திப்பு ஆகி விட்டது இல்லையா? அனைவரும் சந்தித்து விட்டீர்கள்? வாழ்த்துக்களையும் பெற்று விட்டீர்கள் இன்னும் என்ன இருக்கிறது? டோலி . வரிசையாக வாருங்கள் மேலும் டோலி வாங்கிச் செல்லுங்கள். அந்த மாதிரியான நேரம் வரப் போகிறது. எப்பொழுது இவ்வளவு பெரிய ஹால் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் என்ன

நிலைமை ஆகும்? எப்பொழுதும் ஒரே மாதிரியான பழக்கமோ இருக்க முடியாது. இந்த தடவையோ விசேஷமாக பாரதவாசி குழந்தைகளின் முறையீடுகளை நிறைவேற்றினோம். ஒவ்வொரு சீசனுக்கும் அது அதற்கு என்ற பழக்க வழக்கம் இருக்கும். அடுத்த வருடம் என்ன நடக்கும் என்பதை பொருத்திருந்து பாருங்கள். இப்பொழுதே சொல்லிவிட்டால் மகிழ்ச்சி இருக்காது. அனைவரும் பூச்செண்டுகளோடு வருவீர்கள் தான் இல்லையா? தரமானதை உருவாக்கிக் கொண்டு வாருங்கள், ஏனென்றால் வரிசை எண்ணோர தரத்தையும் சேர்த்து எண்ணிக்கை மேல் கிடைக்கும் பொதுவாக கூட்டத்தை கூட்டுவதில் தலைவர்களும் திறமை நிறைந்தவர்கள். அதிக எண்ணிக்கையும் இருக்க வேண்டும், ஆனால் தரமுள்ளதாக அந்த மாதிரி பூச்செண்டைக் கொண்டு வாருங்கள். இலைகளால் மட்டுமான பூச்செண்டைக் கொண்டு வராதீர்கள். நல்லது!

அந்த மாதிரி இறுதி வாகனத்திற்கு எவரெடியான அனைத்து ஆத்மாக்களையும் அனுபவி மூர்த்தி ஆக்கும் மஹாதானி, எப்பொழுதும் வரமளிக்கும், உருவாக்கும் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையிடமிருந்து எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தியை பெற்றுத் தருவதற்கு பொறுப்பாளராகும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சேவாதாரி களின் கூடவே சக்திசாலியான ஆத்மாக்களை உருவாக்கக் கூடிய, வளர்ச்சியின் கூடவே விதி மூலமாக பிராப்திகளின் சித்தியை (வெற்றியை) அடையக் கூடிய, அந்த மாதிரி தந்தைக்கு சமமான சேவை செய்து கொண்டு, சேவையி-ருந்து விலகியிருந்து தந்தையுடன் செல்லக் கூடிய அன்பான, நெருக்கமான மற்றும் சமமான ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**சேவாதாரிகளுடன் சந்திப்பு:** ஒருவர் ஆத்மாக்களுக்கு தந்தையின் அறிமுகம் கொடுத்து தந்தையின் ஆஸ்திக்கு அதிகாரி ஆக்குவதற்குப் பொறுப்பான சேவாதாரி மற்றும் இன்னொருவர் யக்ஞ சேவாதாரி. இந்த நேரம் நீங்கள் அனைவரும் யக்ஞ சேவையின் பங்கைச் செய்பவர்கள். யக்ஞ சேவையின் மகத்துவம் எவ்வளவு பெரியது என்பதை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள். யக்ஞத்தின் ஒவ்வொரு அணுவிற்கும் எவ்வளவு மகத்துவம் இருக்கிறது? ஒவ்வொரு அணுவும் பொற்காசுக்குச் சமமானது. ஒருவேளை யாராவது ஒரு அணு அளவிற்கு சேவை செய்தாலும் ஒரு பொற்காசுக்கு சமமாக சேமிப்பாகிறது. அதனால் சேவை

இல்லை வருமானத்தை சேமித்தீர்கள். சேவாதாரிகளுக்கு தற்சமயம் ஒன்று, மதுபன் வரதான பூமியில் இருப்பதற்கான வாய்ப்பின் பாக்கியம் கிடைத்தது. இரண்டாவது எப்பொழுதும் சிரேஷ்ட சூழ்நிலை, அதன் பாக்கியம் மூன்றாவது, எப்பொழுதும் வருமானத்தை சேமிப்பதற்கான பாக்கியம். இப்படி எத்தனை விதமான பாக்கியம் சேவாதாரிகளுக்கு இயல்பாகவே பிராப்தி ஆகி விடுகிறது. அந்த அளவு பாக்கியம் நிறைந்த சேவாதாரி ஆத்மாக்கள் என்று புரிந்து சேவை செய்கிறீர்களா? அந்த அளவு ஆன்மீக போதை நினைவில் இருக்கிறதா அல்லது சேவை செய்து செய்து மறந்து விடுகிறீர்களா? சேவாதாரி தன்னுடைய சிரேஷ்ட பாக்கியம் மூலமாக மற்றவர்களுக்கும் ஊக்கம், உற்சாகம் கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆக முடியும். அனைத்து சேவாதாரிகளும் எவ்வளவு நேரம் எந்த சேவையில் இருந்தாலும் தடையற்றவர்களாக இருங்கள். எண்ணத்தில் கூட தடையற்றவர். ஒருபொழுதும் எந்த விதமான தடையும், குழப்பமும் வர வேண்டாம். இதைத் தான் சேவையில் வெற்றியடைபவர் என்று கூறுவது. எவ்வளவு தான் சம்ஸ்காரம் அல்லது சூழ்நிலைகள் மேலே கீழே சென்றாலும் யார் எப்பொழுதும் தந்தையுடன் இருக்கிறாரோ, கூடவே தந்தையைப் பின்பற்றி நடக்கிறாரோ, எப்பொழுதும் தந்தையை பார்க்கிறாரோ அவரே எப்பொழுதும் தடையற்று இருப்பார். மேலும் ஒருவேளை எங்காவது ஏதாவது ஆத்மாவைப் பார்த்தார், ஆத்மாக்களைப் பின்பற்றினார் என்றால், குழப்பத்தில் வந்து விடுவார். சேவாதாரிகளுக்கு சேவையில் வெற்றியடைவதற்கான ஆதாரம் தந்தையைப் பாருங்கள் மற்றும் தந்தையைப் பின்பற்றுங்கள். அனைவரும் உண்மையான உள்ளத்தோடு சேவை செய்தீர்கள் தான் இல்லையா? சேவை செய்து கொண்டே நினைவு சார்ட் எப்படி இருந்தது? நல்லது தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தை உருவாக்கி இருக்கிறீர்கள். ரிஸல்ட் நன்றாக இருக்கிறது. நீங்கள் பெரிய பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள், யக்ஞ சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. எனவே உங்களுடைய நினைவு அகலாமல் இருக்கும் அளவிற்கும் பின்பு எப்போதாவது தேவையாக இருந்தால் உங்களை அழைக்கும் அளவிற்கு காரியம் செய்து விட்டுச் செல்லுங்கள். களைப்பற்றவராகி யார் சேவை செய்கிறாரோ அதற்கான பலன் தற்சமயம் மற்றும் எதிர்காலம் இரண்டிற்கும் சேமிப்பாகி விடுகிறது. அந்த மாதிரி நீங்கள் அனைவரும், அவரவர்களுடைய பங்கை மிக நன்றாகச் செய்தீர்கள் நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் வெற்றியின் நினைவின் மூலம் மகிழ்ச்சியாக இருக்கும் மற்றும் அனைவருக்கும் குஷி கொடுக்கக் கூடிய ஆகர்ஷணம் நிறைந்தவர் ஆகுக!**

நான் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றியடைந்த ஆத்மா, வெற்றித் திலகம் நெற்றியில் பிரகாஷித்துக் கொண்டு இருக்கிறது என்றால், இந்த வெற்றித் திலகம் மற்றவர்களுக்கும் குஷியைக் கொடுக்கும். ஏனென்றால், வெற்றி ஆத்மாவின் முகம் எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருக்கும். மகிழ்ச்சி நிறைந்த முகத்தைப் பார்த்து குஷியின் காரணமாக இயல்பாகவே அனைவரும் ஆகர்ஷிக்கப்படுவார்கள். எப்பொழுதும் இறுதி நேரத்தில் யாரிடமும் கேட்பதற்கு நேரம் இருக்காது. அப்பொழுது உங்களுடைய ஆகர்ஷணம் (ஈர்க்கும்) செய்யும் மகிழ்ச்சி நிறைந்த முகம் தான் அனேக ஆத்மாக்களுக்கு சேவை செய்யும்

**சுலோகன்: அவ்யக்த நிலையின் ஒளியை நாலாபுறங்களிலும் பரப்புவது தான் லைட் ஹவுஸ் ஆவது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 02.05.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசேஷ சுய சரிதையை (வாழ்க்கை கதை) உருவாக்குவதற்கான ஆதாரம் -எப்பொழுதும் முன்னேறும் கலை!

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் வாழ்க்கை கதையின் என்ன என்ன எதிர்காலத்தின் ரேகைகள் இருக்கின்றன, எப்பொழுதும் ஒரே சீராக முன்னேற்றத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கிறதா, அந்த மாதிரி இரண்டு விதமான ரேகை அதாவது வாழ்க்கையின் லீலை தென்பட்டது. எப்பொழுது ஏற்றத்திற்கு பிறகு ஏதாவது காரணமாக ஏறும் கலைக்குப் பதிலாக இறங்கும் கலையில் வருகிறார்கள் என்றால், இறங்குவதின் பிரபாவமும் தன் பக்கம் இழுக்கிறது. பல காலத்தின் ஏறும் கலை, பல காலத்தின் பிராப்தியை செய்விக்கிறது. சகஜயோகி வாழ்க்கை உள்ளவர்கள் எப்பொழுதும் தந்தையின் நெருக்கம் மற்றும் துணையை அனுபவம் செய்கிறார்கள். எப்பொழுது தன்னை அனைத்து சக்திகளிலும் மாஸ்டர் என்று புரிந்து கொள்வதினால் சகஜமாக நினைவு சொரூபமாகி விடுகிறார்கள், எந்த ஒரு சூழ்நிலை அல்லது சோதனை வந்தாலும் எப்பொழுதும் தன்னை விக்ன விநாஷக் (தடைகளை அழிப்பவர்) என்று அனுபவம் செய்கிறார்கள். எப்பொழுதும் ஏறும் கலை அதாவது எப்பொழுதும் அனைத்து பிராப்திகளையும் அடைந்திருப்பவர். மேலும் ஏறிய பிறகு இறங்கி அதன் பிறகு ஏறுபவர்கள் இழந்ததை மீண்டும் அடைவர்கள், அந்த மாதிரி இறங்கி, பிறகு ஏறும் ஆத்மாக்கள், அடைந்தோம், ஆனால் இழந்து விட்டோம் என்று அனுபவம் செய்கிறார்கள். அடைந்ததின் அனுபவியாக இருக்கும் காரணத்தினால், மீண்டும் அதே நிலையை அடையாமல் இருக்கவும் முடியாது. எனவே விசேஷ கவனம் கொடுப்பதினால் மீண்டும் அனுபவத்தை அடைந்து விடுகிறார்கள், ஆனால் நிரந்தரமாக மற்றும் சகஜமாக அடைபவர்களின் பட்டியிலில் இருப்பதற்குப் பதிலாக இரண்டாம் நம்பர் பட்டியலில் வந்து

விடுகிறார்கள். மூன்றாம் நம்பரின் விஷயமோ, அவருடைய வாழ்க்கைக் கதை எப்படி இருக்கும் என்று நீங்களே யோசிக்கலாம், மூன்றாம் நம்பரிலோ வரவே வேண்டாம் தான், இல்லையா?

தன்னுடைய வாழ்க்கைக் கதையை எப்பொழுதுமே முன்னேற்றத்தை நோக்கியே செல்வதாக அனைத்து விசேஷங்கள் நிரம்பிய, எப்பொழுதும் பிராப்தி சொரூபமாக அந்த மாதிரி உயர்ந்ததாக ஆக்குங்கள். இந்த நேரம் மேலே, அடுத்த நேரம் கீழே மேலும் கொஞ்ச நேரம் மேலே மீண்டும் கொஞ்ச நேரம் கீழே என்று அந்த மாதிரி ஏறுவது - இறங்குவது என்ற விளையாட்டில் நிரந்தர அதிகாரத்தை விட்டு விடாதீர்கள். இன்று பாப்தாதா அனைவரின் வாழ்க்கைக் கதையைப் பார்த்துக் கொண்டிருந்தோம். எப்பொழுதும் ஏறும் கலை உள்ளவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்? மேலும் யார் இருப்பார்கள்? நான் எந்த லிஸ்ட்டில் (பட்டியலில்) இருக்கிறேன் என்று தன்னை பார்க்க முடியும் இல்லையா! இறங்குவதற்கான சூழ்நிலைகள், சோதனைகளோ அனைவரின் எதிரிலும் வரும், பரீட்சை இன்றி யாரும் தேர்ச்சி பெற முடியாது, ஆனால் 1) பரீட்சையில் சாட்சியாக இருப்பது மற்றும் (தந்தையின்) துணையின் நினைவு சொரூபம் மூலமாக முழுமையாக தேர்ச்சி பெறுவது அல்லது வெறும் தேர்ச்சி பெறுவது அல்லது கட்டாயத்தில் தேர்ச்சி பெறுவது என்று இதில் வித்தியாசம் வந்து விடுகிறது. 2) பெரிய பரீட்சையை சிறியதாக நினைப்பது அல்லது மிகச்சிறிய விஷயத்தைப் பெரியதாக நினைப்பது, இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. 3) சிலர் சிறிய விஷயத்தை அதிகமாக நினைத்து, வர்ணனை செய்து மேலும் சுற்றுப்புரத்தில் பரப்பியும் சிறியதைப் பெரியதாக்கி விடுகிறார்கள். மேலும் சிலர் பெரிய விஷயத்தையும் சோதித்து கூடவே மாற்றம் செய்தார்கள், மேலும் நிரந்தரமாக பலஹீனமான விஷயத்திற்கு முற்றுப்புள்ளி இட்டு விடுகிறார்கள், முற்றுப்புள்ளி இடுவது என்றால் மீண்டும் எதிர்காலத்திற்காக முழுமையான ஸ்டாக்கை (கையிருப்பை) சேமிப்பது வருங்காலத்தில் முழுமையாக தேர்ச்சியடைவதின் அதிகாரி ஆவது. எனவே நீண்டகாலத்து முன்னேற்றம் கலை உள்ளவர் நல்ல எதிர்காலம் உள்ளவர் ஆகி விடுகிறார்கள், எனவே வாழ்க்கைச் சரித்திரத்தின் விசேஷமாக என்ன வைக்க வேண்டும் என்று புரிந்து கொண்டீர்கள். இதன் மூலம் நிரந்தரமாக உங்களுடையது விசேஷ வாழ்க்கை கதையாகி விடும். எப்படி சிலருடைய வாழ்க்கைக் கதை விசேஷ பிரேரணை

கொடுக்கிறது, உற்சாகத்தை அதிகரிக்கிறது. தைரியத்தை அதிகரிக்கிறது, வாழ்க்கைப் பாதையைத் தெளிவாக அனுபவம் செய்விக்கிறது, அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களின் வாழ்க்கை கதை அதாவது வாழ்க்கையின் ஒவ்வொரு காரியமும் அனேக ஆத்மாக்களுக்கு அந்த மாதிரி அனுபவம் செய்விக்க வேண்டும். பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் நீங்களே செய்ய முடியும் என்றால், நாங்களும் செய்வோம் என்று அனைவரின் வாயிலிருந்தும், மனதிலிருந்தும் சப்தம் எழ வேண்டும். நாங்களும் முன்னேறிச் செல்வோம், நாங்களும் அனைவரையும் முன்னேற்றுவோம். அந்த மாதிரி பிரேரணை ஊட்டுவதற்குத் தகுதியான விசேஷ வாழ்க்கைக் கதையை எப்பொழுதும் உருவாக்குங்கள், என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நல்லது

இன்றோ இரட்டை வெளிநாட்டினர் சந்திப்பதற்கான நாள், ஒரு பக்கம் வெளிநாட்டினர் இன்னொரு பக்கம் மிக நெருக்கத்தில் இருப்பவர்கள் (மதுபன் நிவாசிகள்). இருபாலாரின் விசேஷ சந்திப்பு இது. மற்ற அனைவருமே கேலரியில் பார்ப்பதற்காக வந்திருக்கிறார்கள். எனவே வந்திருக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் மரியாதை வைத்து முரளியும் சொன்னார். நல்லது.

சதா சந்திப்பு வாழ்க்கையின் சாரத்தை நடைமுறை வாழ்வில் கொண்டு வரக்கூடிய, விசேஷ சமிக்ஞைகளை தன்னுடைய வாழ்க்கையின் நிரந்தரமான வரதானம் என்று புரிந்து வரதானி மூர்த்தி ஆக்கூடிய, கேட்பது என்றால் ஆவது என்று இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவு சொரூபத்தில் கொண்டு வரக்கூடிய, அன்பின் நன்றிக்கடனாக எப்பொழுதும் தடையற்றவர் ஆக்குவதற்காக சகயோகம் கொடுக்க கூடிய, எப்பொழுதும் அனுபவி மூர்த்தி ஆகி, அனைவரிலும் அனுபவங்களின் விசேஷத்தை நிரப்பக்கூடிய. அந்த மாதிரி தந்தைக்குச் சமமான, சம்பன்ன சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி அவர்களோடு சந்திப்பு:** பொறுப்பாளர் ஆகியிருக்கும் தந்தையின் அனைத்து புஜங்களும் அவரவர்களின் காரியத்தை யதார்த்த ரூபத்தில் செய்து கொண்டிருக்கிறார்களா? இவர்கள் அனைவரும் புஜங்கள் தான் இல்லையா? அனைவரும் வலதுகரமா? அல்லது யாராவது இடது கரமும்

இருக்கிறார்களா? யார் தன்னை பிராமணன் என்று கூறுகிறார்களோ அப்படி பிராமணன் என்று சொல்லும் அனைவரும் வலது கரமாக இருக்கிறார்களா? (பிராமணன் சில நேரம் ஆகி விடுகிறார்கள்), புஜங்களும் மாறுமா என்ன? அந்த மாதிரி இராவணனின் தலையும், இந்த நேரம் வெட்டப்பட்டது, ஆனால் அடுத்து உடனே மீண்டும் தலை வந்து விடுவதாகக் காண்பிக்கிறார்கள், ஆனால் பிராணர்களிலும் பிரம்மாவின் புஜங்களும் மாற்றம் ஆகிக் கொண்டே இருக்கின்றனவா என்ன? அப்படியானால் தினசரி புஜங்கள் மாறிக் கொண்டே இருப்பதாக ஆகும்.

உண்மையில் அனைவரும் தன்னை பிரம்மா குமார் அல்லது பிரம்மா குமாரி என்று கூறுகிறார்கள், ஆனால் மனதில் நான் பிரத்யக்ஷ பலன் என்கிற பழத்தை அருந்துபவன் அல்ல, ஆனால் கஷ்டப்பட்டு முயல்வது (கடின உழைப்பு) என்ற பழத்தை அருந்துபவன் என்று உணருகிறார்கள், சிலர் பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துபவர்கள் மற்றும் சிலர் கடின உழைப்பு என்ற பழத்தை அருந்துபவர்கள், மிகக் கடுமையாக உழைப்பதற்கு அவசியமில்லை. திட எண்ணம் மற்றும் ஸ்ரீமத் என்ற இதன் ஆதாரத்தில் மட்டும் ஒவ்வொரு எண்ணத்தையும், காரியத்தையும் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் கடின உழைப்பிற்கான விஷயமே இல்லை, இந்த இரண்டின் ஆதாரத்தில் நடக்காத காரணத்தினால் எப்படி வண்டி தண்டவாளத்திலிருந்து இறங்கி விடுகிறதோ, அந்த மாதிரி ஆகி விடுகிறது, பிறகு, கடினமாகிறது. ஒருவேளை வண்டி தண்டவாளத்திலேயே போய்க் கொண்டிருக்கிறது என்றால் எந்தக் கடினமும் இல்லை, இஞ்சின் ஓட்டிக் கொண்டிருக்கிறது, மேலும் அது ஒடுகிறது. ஆக இந்த இரண்டின் ஆதாரத்தினால், திட எண்ணம் அல்லது ஸ்ரீமத்படி நடப்பதற்கு மிகுந்த கவனம் வைக்க வேண்டும், ஆனால் திட எண்ணம் வைப்பதில் பலஹீனம் இருக்கிறது என்றால் இதனுடைய ரிஸல்ட் (முடிவு) என்னவாக இருக்கும்? கடின உழைப்பு என்ற பழம் அருந்துபவர்களும் சத்திரியர்களின் வரிசையில் வந்து விட்டார்கள். எப்பொழுதாவது அவர்களிடம் ஏதாவது விஷயத்தை கேட்டீர்கள் என்றால், கடின உழைப்பு அல்லது கஷ்டத்தின் கதையைத் தான் கூறுவார். எப்படி ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா, ஒரு விஷயத்தை அகற்றினார் என்றால், இன்னொன்று வந்து விடுகிறது, எலியை விரட்டினோம் என்றல் பூனை வந்து விடுகிறது, பூனையை விரட்டினோம் என்றால் நாய் வந்து விடுகிறது அப்படி அகற்றுவதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மூன்று தர்மங்கள் சேர்ந்தே ஸ்தாபனை ஆகிறது தான் இல்லையா, பிராமணன், தேவதை, மற்றும் சத்திரிய தர்மம், எனவே மூன்று விதங்களுமே தென்படும் இல்லையா? அனேகர்களுக்கு ஜென்மமே கஷ்டப்பட்டுத்தான் ஆனது, மேலும் சிலரோ குழந்தைப் பருவத்திலிருந்தே கடின உழைப்பு செய்வதைத் தொடங்கி விட்டார்கள். இதுவும் அனேகவிதமான அதிர்ஷ்டத்தின் ரேகைகள் தான். சிலரிடம் கேட்டோம் என்றால், நாங்கள் தொடக்கத்திலிருந்தே எந்த கடின உழைப்பும் செய்யவில்லை என்று கூறுவார்கள், ஸ்ரீமத்படி நடக்க வேண்டும், யோகி ஆக வேண்டும் என்பது இயல்பாகவே இலட்சிய சொரூபமாகி விட்டது. அலட்சியமாக இருப்பார்கள் என்றல்ல, ஆனால் இயல்பாகவே சொரூபமாகி நடக்கிறார்கள், அலட்சியமாக இருப்பவர்களும் கஷ்டத்தை அனுபவம் செய்வதில்லை, ஆனால் அது தலைகீழான விஷயம், அவருக்கு பின்பு எதிர்காலம் உருவாவதில்லை, தந்தைக்குச் சம்மாக பிராப்தியின் அனுபவம் செய்வதில்லை, மற்றபடி பிறந்தலிருந்து பொறுப்பற்ற அலட்சியமானவர், சாப்பிடுவார், அருந்துவார், தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தார் அவ்வளவுதான், நியமப்படி செல்பவர் ஆனால் தாரணையை வாழ்க்கையில் கொண்டு வருபவர் அல்ல, இங்கேயும் அவரை நேமிநாத் (நியமப்படி நடப்பவர்) என்று வர்ணனை செய்கிறார்கள். சிலர் நேமிநாத்தாக மட்டுமே இருக்கிறார்கள், வகுப்பிற்கு, யோகாவிற்கு அனைவரையும் விட முதலில் வருவார்கள், ஆனால் என்ன அடைந்தார்கள்? ஞானத்தை கேட்டுவிட்டோம் என்று சொல்வார்கள், முன்னேற வேண்டும் - முன்னேற வேண்டும் என்ற லட்சியம் இருக்காது, முரளி கேட்டுவிட்டோம், மஜா (மகிழ்ச்சி) வந்து விட்டது சரி, வந்தார், சென்றார், நடந்தார், அருந்தினார், இந்த மாதிரியானவர்களை நேமிநாத் என்று கூறுவது, இருந்தாலும் அந்த மாதிரியானவர்களுக்கும் பூஜை நடக்கிறது. நியமப்படியோ நடந்து கொள்கிறார்கள் இந்த அளவு செய்கிறார்கள் இல்லையா? அதன் பலனாகவும் பூஜைக்குரியவர் ஆகி விடுகிறார்கள், மழை பெய்கிறது என்றால், நெருக்கமானவர்கள் வர மாட்டார்கள் ஆனால், இவர் வருவார், தூய்மையாகவும் இருக்கிறார். எனவே பூஜைக்குரியவராக அவசியம் ஆகி விடுகிறார், அந்த மாதிரியானவர்களும் வேண்டும் இல்லையா! பத்து வருடங்கள் ஆகி விடும், இருந்தும், அவரிடம் ஏதாவது விஷயத்தைப் பற்றிக் கேட்டோம் என்றால், முதல் நாள் என்ன பதில் இருந்ததோ அதே பதிலைத் தான் பத்து வருடங்களுக்குப் பிறகும் சொல்வார் நல்லது.

இப்பொழுது பாப்தாதா சூட்சமவதனத்தில் அவர்களுக்குள் மிகவும் பேசிக்கொள்கிறார்கள், இருவரும் பேசிக்கொள்கிறார்கள், இருவரும் சுதந்திர ஆத்மாக்கள், சேவையோ ஒரு நொடியில் செய்தார்கள், அனைவருக்கும் அனுபவம் செய்வித்தார்கள். பிறகு அவர்களுக்குள் என்ன செய்வார்கள்? ஆன்மீக உரையாடல் செய்து கொண்டே இருக்கிறார்கள், பிரம்மாபாபாவிற்கு ஜென்மம் எடுத்தவுடன் முதல் நாள் ஆசையாக இதுவாகத்தான் இருந்தது, எந்த ஆசை? நானும் தந்தைக்குச் சம்மாக அவசியம் ஆவேன் என்ற பெருமிதம் மற்றும் போதை இருந்தது, தொடக்க காலத்தின் பிரம்மாவின் வார்த்தைகள் நினைவு இருக்கிறதா? வந்து கொண்டிருக்கிறேன், ஒன்றாக இணைந்து கொண்டிருக்கிறேன் என்ற போதை இந்த நிறைந்த வார்த்தைகளே எப்பொழுதும் அவர் பிறந்தபோது என்ன எண்ணம் மற்றும் வார்த்தைகள் இருந்தனவோ அவையே, இப்பொழுதும் காரியத்தை முடித்து விட்டு, , அதே இலட்சிய ரூபத்தில் நிரம்பியும் விட்டார், முதலில் அர்த்தம் புரியவில்லை, ஆனால் நடக்க வேண்டும் என்று இருந்ததுவோ அவையே வார்த்தைகளில் கூறப்பட்டது, மேலும் கடைசியில் என்ன பார்த்தீர்கள்? தந்தைக்கு சம்மாக பழைய சட்டையை கழட்டி விட்டார் இல்லையா, எவ்வளவு நேரத்திற்குள் இவையெல்லாம் நடந்தது? சில விநாடிகளின் காட்சியாக இருந்தது, இதைத் தான் தந்தைக்குச் சமமாக தேக உணர்வையும் சகஜமாக விட்டு பற்றுதலை வென்ற நினைவு சொரூப நிலை என்று கூறுவது, நான் சென்று கொண்டிருக்கிறேன், என்ன நடந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணமும் எழுந்தது. குழந்தைகள் எதிரில் இருந்தார்கள், ஆனால் பார்த்தும் பார்க்கவில்லை, லைட், மைட், மற்றும் சமநிலையின் திருஷ்டியைக் கொடுத்துக் கொண்டே பறவை பறந்து விட்டது, அந்த மாதிரி தானே அனுபவம் செய்தார்கள் இல்லையா? எவ்வளவு சுலபமாக பறந்து சென்றது! இருந்தது, யார் பார்த்துக் கொண்டிருந்தார்களோ, அவர்கள் பார்த்துக் கொண்டே இருந்து விட்டார்கள், பறந்து செல்பவர் பறந்தே சென்று விட்டார், இதைத் தான் தொடக்கத்தில் இருந்த இதே வார்த்தை, மேலும் இறுதியில் அந்த சொரூபம் ஆகி விட்டார், அந்த மாதிரியே நீங்களும் தந்தையைப் பின்பற்றி நடங்கள், நல்லது.

**இரட்டை வெளிநாட்டினருடன் சந்திப்பு:** அனைவரும் அன்பான மற்றும் சகயோகி ஆத்மாக்கள் தான் இல்லையா! அன்பின் காரணமாக

தந்தையைத் தெரிந்து கொண்டீர்கள், அந்த மாதிரி அன்பான மற்றும் சகயோகி ஆத்மாக்களாக இருக்கிறீர்கள், சேவைக்கான ஊக்கம் உற்சாகம் எப்பொழுதும் இருக்கிறது, ஆனால் இன்னும் என்ன பாக்கி உள்ளது? அன்பானவர் மற்றும் சகயோகியின் கூடவே சக்தி சொரூபமாகவும் இருக்க வேண்டும். சக்திசாலியான ஆத்மா எப்பொழுதும் தடைகளை அழிப்பவராக இருப்பாரோ, அவர் இயல்பாகவே தந்தையின் இதய சிம்மாசனதாரியாக இருப்பார். ஆசனத்திலிருந்து கீழே கொண்டு வருவதே மாயாவின் ஏதாவது ஒரு தடை, எப்பொழுது மாயாவே வராதோ பிறகு அவர் எப்பொழுதும் இதய சிம்மாசனதாரியாக இருப்பார், அதற்காகத் தன்னை எப்பொழுதும் இணைந்திருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள், ஒவ்வொரு காரியத்திலும் வித விதமான சம்பந்தத்தில் துணையின் அனுபவம் செய்யுங்கள், எனவே எப்பொழுதும் உடன் இருப்பீர்கள், எப்பொழுதும் சக்திசாலியாகவும் இருப்பீர்கள், மேலும் எப்பொழுதும் தன்னை ரமணீகரமாகவும் அனுபவம் செய்வார்கள், எந்த விதமான தனிமையையும் அனுபவம் செய்ய மாட்டீர்கள், ஏனென்றால், வித விதமான சம்பந்தத்தில் உடன் இருப்பவர்கள் எப்பொழுதும் ரமணீகரம் மற்றும் குஷியின் அனுபவம் செய்வார்கள், பொதுவாக எப்பொழுதும் ஒரே விஷயம் நடந்து கொண்டிருக்கிறது, ஒரே விஷயத்தை தினசரி கேட்கிறீர்கள் மற்றும் செய்கிறீர்கள். என்றால் உள்ளம் சோர்வு அடைந்து விடுகிறது, இங்கேயும் தந்தையுடன் வித விதமான சம்பந்தங்களை அனுபவம் செய்வதினால் எப்பொழுதும் ஊக்கம், உற்சாகம் உருவாகி நிலைத்திருக்கும், பாபா என்னுடைய தந்தை, நான் அவருடைய குழந்தை என்று மட்டுமல்ல, வித விதமான சம்பந்தங்களில் அவரை அனுபவம் செய்யுங்கள், எப்படி மதுபன்னிற்கு வந்தவுடனேயே மன மகிழ்ச்சியின் அனுபவம் செய்கிறீர்கள், அதே போலவே பகல் எப்படி இரவானது, இரவு எப்படி பகலானது என்று தெரியவில்லை என்றே அனுபவம் செய்வார்கள், பொதுவாகவே வெளிநாட்டினர் மாற்றத்தை விருப்புவார்கள், அதே போல் இங்கேயும் ஒருவர் மூலமாக வித விதமான அனுபவம் செய்வதற்கு மிக நல்ல வாய்ப்பு இருக்கிறது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: மஹாவீரனின் விசேஷம் -எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை!** எப்பொழுதும் தன்னை மஹாவீரன் என்று உணர்கிறீர்களா? (ஹனுமானின்) மகாவீரரின் விசேஷம் ஒரு ராமைத்தவிர வேறு யாருடைய நினைவும் இல்லை,

எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்ற நினைவில் இருப்பவர் நிரந்தர மஹாவீர் எப்பொழுதும் வெற்றித் திலகம் இடப்பட்டு இருக்க வேண்டும், எப்பொழுது ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்ற நிலை இருக்கிறது என்றால், அழியாத திலகம் இருக்கும். என்னுடைய உலகமே தந்தை ஆகி விட்டார், உலகில் நபர்கள் மற்றும் பொருட்கள் தான் இருக்கும், எனவே அனைத்து சம்பந்தம் தந்தையுடன் இருக்கிறது என்றால், நபரும் வந்து விட்டார் மேலும் பொருள், அதுவும் அனைத்து பிராப்திகளும் தந்தையிடமிருந்து கிடைத்த மாதிரி. சுகம், சாந்தி, ஞானம், ஆனந்தம், அன்பு அனைத்து பிராப்திகளும் கிடைத்து விட்டன, அடைவதற்கு என்று வேறு எதுவுமே இல்லை என்றால் புத்தி வேறு எங்கு செல்லும், எப்படி செல்லும்? நல்லது.

**வரதானம்: பழைய உலகம் மற்றும் சம்ஸ்காரங்களின் ஈர்ப்பிலிருந்து உடலில் இருந்து கொண்டே இறக்கக் கூடிய யதார்த்த மர்ஜீவா ஆகுக!**

யதார்த்தமாக உடலில் இருந்து கொண்டே இறப்பது என்றால், நிரந்தரமாக பழைய உலகம் மற்றும் பழைய சம்ஸ்கரங்களிலிருந்து கனவிலும், நினைவிலும் இறப்பது, இறப்பது என்றால் பரிவர்த்தனை (மாற்றம்) ஆவது அவரை எந்த ஒரு கவர்ச்சியும் தன் பக்கம் கவர்ந்திழுக்க முடியாது, என்ன செய்வது! விரும்பவில்லை தான், ஆனால் ஆகி விட்டது என்று அவர் ஒரு பொழுதும் சொல்ல முடியாது, சில குழந்தைகள் இறந்து மறுபிறவி எடுத்து உயிர்பெற்று விடுகிறார்கள், இராவணனின் ஒரு தலையை வெட்டீனீர்கள் என்றால் இன்னொன்று வந்து விடுகிறது, ஆனால் அஸ்திவாரத்தையே அழித்து விட்டீர்கள் என்றால், ரூபத்தை மாற்றி மாயா தாக்க முடியாது.

**சுலோகன்: யார் நினைவு மற்றும் சேவையில் எப்பொழுதும் பிஸியாக இருக்கிறார்களோ அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.06.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒன்றின் மந்திரம் நினைவு இருக்கிறது என்றால் அனைவரிலும் ஒருவர் தென்படுவார் (டீச்சர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு)!

இன்று குழந்தைகளின் குழு மற்றும் அன்பு, சகயோகம், பரிவர்த்தனையின் (மாற்றம்) திட எண்ணம் என்ற நறுமணத்தைப் பெறுவதற்கு வந்திருக்கிறோம். குழந்தைகளின் குஷியில் பாப்தாதாவின் குஷி இருக்கிறது. எப்பொழுதும் இந்த அழியாத குஷி மற்றும் அழியாத நறுமணம் குழந்தைகளிடம் இருக்க வேண்டும் என்று அந்த மாதிரி அழியாத எண்ணத்தைத்தான் வைத்தீர்கள் இல்லையா! தொடக்கத்தில் ஸ்தாபனையின் ஆரம்ப காலத்தில் ஒவ்வொருவருக்கும் என்ன எழுதினீர்கள் மற்றும் கூறினீர்கள் என்ற அந்த நினைவு இருக்கிறதா? என்ன வார்த்தை கூறினீர்கள்? உண்மையான பிரிய ஆத்மாவே இது தான் ஆத்மா அபிமானி ஆவதற்கும் மற்றும் ஆக்குவதற்குமான சகஜ சாதனமாக இருந்தது. பெயர், ரூபத்தைப் பார்க்கவில்லை, பயிற்சி செய்த அந்த நாட்கள் நினைவு இருக்கிறதா? எவ்வளவு இயற்கையாக இருந்தது? கடின முயற்சி செய்ய வேண்டியதிருந்ததா? இதே தொடக்கத்து வார்த்தையை இப்பொழுது ஆழமான இரகசியத்துடன் நடைமுறையில் கொண்டு வந்தீர்கள் என்றால் இயல்பாகவே நினைவு சொரூபம் ஆகி விடுவீர்கள். ஒன்றின் மந்திரம், ஒரு தந்தை, ஒரு வீடு, ஒருவழி, ஒரு ரசனை, ஒரு இராஜ்யம், ஒரு தர்மம், ஒரு பெயர் ஆத்மா, ஒரு ரூபம், என்று இந்த ஒன்றின் மந்திரம் எப்பொழுதும் நினைவு இருக்கிறது என்றால், என்னவாகி விடும்? அனைவரிலும் ஒருவர் தென்படுவார். இது சுலபம் தான் இல்லையா! எப்பொழுது ஒருவர் தான் தென்படுகிறார் என்றால், எனக்கு ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பாடல்

பாடுகிறீர்கள் இல்லையா? அது இயல்பாகவே ஆகி விடும், அந்த மாதிரி தான் எண்ணம் வைத்தீர்கள் இல்லையா?

பாப்தாதாவோ கண்களால் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். குழந்தைகள் அழைத்தீர்கள் மற்றும் தந்தை வந்திருக்கிறார். தந்தை குழந்தைகளின் அன்பிற்கு பிரதிபலன் கொடுத்திருக்கிறார் என்ன சொன்னீர்களோ, அது நடந்தது இல்லையா! இரண்டு விநாடிக்காவது வாருங்கள் என்று நீங்கள் செய்தி அனுப்பி இருந்தீர்கள் இல்லையா! அனைவரின் செய்தியும் வந்து சேர்ந்து விட்டது. நீங்கள் அவ்வாறு நினைத்த உடனேயே பாப்தாதா கேட்டு விட்டார், வார்த்தைகளில் வருவதற்கு முன்பே பாப்தாதவிடம் வந்து சேர்ந்து விடுகிறது.

(ஜெயந்தி சகோதரியைப் பார்த்து பாபா கூறுகின்றார்) வெளிநாட்டிலிருந்து வருவது எதை நிரூபிக்கிறது? உள்ளம் தூரமாக இல்லை என்றால், தேசமும் தூரமாக இல்லை. இதயம் அருகில் நெருக்கமாக இருக்கிறது, எனவே இதுவும் ஒவ்வொருவரும் அருகில் இருப்பதற்கான நிரூபணம். எப்பொழுதும் ஒருவர் இன்னொருவரின் துணை என்பதை நடைமுறை சொரூபத்தில் காண்பித்திருக்கிறீர்கள். இது தான் வளர்ப்பில் இருக்கும் குழந்தைகளின் அடையாளம், பொறுப்பாளர் ஆகியிருக்கும், எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு, பிரத்யக்ஷ நிரூபணதிற்காக பாப்தாதா வாழ்த்துகளைத் தெரிவிக்கிறார். உங்கள் ஒருவரை மட்டும் பார்க்கவில்லை, ஆனால் அனைத்துக் குழந்தைகளின் உள்ளம் இங்கே இருக்கிறது மற்றும் உடல் அங்கே இருக்கிறது. அந்த மாதிரி அனைத்துக் குழந்தைகளையும் பாப்தாதா சபையில் பார்க்கிறார். பொதுவாக அவர்களிடமும் நினைவு சென்றடைந்து விடுகிறது, இருந்தாலும் அனைத்துக் குழந்தைகளையும் பார்த்து அன்புக்கயிற்றால் கட்டப்பட்டியிருக்கும் எப்பொழுதும் அருகில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, விசேஷ அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். அதே மாதிரி பாரதத்திலும் எந்தக் குழந்தைகள் ஸ்துலமாக இங்கே இல்லையோ அவர்களின் இதயமும் இங்கே தான் இருக்கிறது, அந்தக் குழந்தைகளுக்கும் பாப்தாதா விசேஷமாக அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். நல்லது.

(நிர்வயர் சகோதருடன்) இவரும் வெளிநாடு செல்கிறார், எவரெடி ஆகி விட்டீர்கள் இல்லையா! இதைத் தான் இனிமையான நாடகம் என்று கூறுவது. மூன்று புள்ளிகளின் திலகத்தின் பரிசு கிடைத்து விட்டது. எப்பொழுதிலிருந்து எண்ணத்தை வைத்தீர்களோ நாடகப்படி மூன்று புள்ளிகளின் திலகம் மீண்டும் இடப்பட்டு விட்டது. இந்த அழியாத திலகம் எப்பொழுதும் நெற்றியில் இடப்பட்டியிருக்கிறது தான் இல்லையா! மூன்று புள்ளிகளும் சேர்ந்தே இருக்கின்றன, பாப்தாதா இந்த திலகத்துடன் சூட்சமவதனத்தில் வரவேற்பு செய்து விட்டார், சரிதான் இல்லையா, விசேஷமாக எந்த சொரூபம் மூலமாக செய்தியைக் கூற சென்று கொண்டிருக்கிறீர்கள்? விசேஷமாக எந்தப் பாடத்தை நினைவூட்டுவீர்கள்?

எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் பறந்து கொண்டே இருங்கள் என்ற இந்த விஷேச பாடத்தை அனைவருக்கும் அனுபவத்தின் மூலம் கற்பியுங்கள். அனுபவம் மூலம் பாடம் படிப்பது அழியாத பாடமாகி விடுகிறது. அனுபவத்தில் இருந்து அனுபவம் செய்விக்க வேண்டும் என்ற இந்த விசேஷ புதுமை தான் இருக்க வேண்டும். வாய்மொழி மூலம் கற்பிப்பதோ நீண்ட காலம் இருந்தது. இப்பொழுது அனைவருக்கும் இந்தப் படிப்பின் அவசியம் இருக்கிறது. இதே விதி மூலம் அனைவரையும் பறக்கும் கலையில் கொண்டு செல்லுங்கள், ஏனென்றால், அனுபவம் மிகப் பெரிய சக்தி ஆகும். யாருக்கு அனுபவத்தின் சக்தி இருக்கிறதோ அவரை வேறு எந்த சக்தியும் தாக்க முடியாது, எனவே இந்த விதியை கவனத்தில் வைத்து சுற்றி வாருங்கள், அப்போது இது புதுமையாகி விடும் இல்லையா! ஏனென்றால், யாராவது செல்கிறார் என்றால், அனைவரும் ஏதாவது புதுமை இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பேசுவது மற்றும் சொரூபம் ஆகி சொரூபம் ஆக்குவது சேர்ந்தே இருக்கட்டும், உங்களுடைய விருப்பமும் இது தான் இல்லையா! நாடகத்தின் அனுசாரம் இப்பொழுது என்ன நேரம் அடங்கியிருக்கிறதோ அது தான் சேவைக்குத் தகுதியானது என்று புரிந்து கொள்ளுங்கள். எண்ணமோ முடிவடைந்து விட்டது தான் இல்லையா? எவரெடியாகி அனைத்து ஏற்பாடுகளும் ஒரு நொடியில் ஆகி விட்டது தான் இல்லையா, ஸ்தூல சாதனமோ அங்கு அனைத்தும் இருக்கின்றன. ஏற்கனவே தயாராக இருக்கும் சாதனங்கள், இன்னும் ஏதாவது தேவையாக இருந்தால் அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, இங்கிருந்து இரண்டு ஜோடி ஆடைகளுடன் சென்றாலும் ஒன்றும் பாதகம் இல்லை, அங்கே ரெடிமேட் கிடைத்து விடும், சூட்சம

தயாராவதோ ஆகி விட்டது தான் இல்லையா? ஸ்தூலமாகத் தயாராவது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை.

அவர்களுக்கு சந்தோஷமான செய்தியைக் கூற வேண்டும், விநாஷம் ஏற்பட வேண்டாம் என்று விரும்புகிறார்கள், இந்த உலகத்தின் ஸ்தாபனை மட்டும் இருக்கட்டும் விநாஷத்தைக் கண்டு ஏன் பயப்படுகிறார்கள்? நம்முடைய இந்த உலகம் அழிந்து விடும் என்று நினைக்கிறார்கள். எனவே பயப்படுகிறார்கள், ஆனால் உலகமோ இன்னும் புதியது வரப்போகிறது. நம்முடைய இந்த உலகம் எப்பொழுதும் வளர்ச்சியடைந்து கொண்டே இருக்க வேண்டும், மிக நல்லதாக ஆகி விட வேண்டும் என்ற உங்களுடைய எண்ணம் உலகைப் படைப்பவர் தந்தையிடம் வந்து சேர்ந்து விட்டது என்ற மகிழ்வான செய்தி அவர்களுக்கு கிடைத்து விடட்டும், மேலும் உலகின் எஜமானர் உலகில் அமைதி ஏற்பட்டு விட வேண்டும், அதற்கான காரியத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். உலகம் ஒன்றாகி விட வேண்டும், உலகில் சிநேகம் இருக்க வேண்டும் என்ற உங்கள் அனைவரின் ஆசை நிறைவேறுவதற்கான நேரம் வந்து சேர்ந்து விட்டது ஆனால் எந்த விதியின் மூலம் அது நிறைவேறுமோ அந்த விதியை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள், விதி யதார்த்தமானதாக இருக்கிறது என்றால், சித்தியும் (வெற்றியும்) இருக்கும், சித்தியோ கிடைக்கும், ஆனால் எந்த விதிமூலமாகக் கிடைக்கும் என்பதைத் தெரிந்திருக்கவில்லை, மாநாடுகள் ஆகியவற்றையோ செய்து பார்த்திருக்கிறீர்கள் ஆனால் மனதிலிருந்து எண்ணம் வருவதில்லை, சண்டை சச்சரவின் விதையே அழிந்து விட்டது என்றால், ஆயுதங்கள் இருந்த போதிலும் உபயோகிக்க வேண்டியதிருக்காது. ஏனென்றால், நஷ்டத்தை எந்த ஆயுதமும் செய்வதில்லை, நஷ்டத்தை ஏற்படுத்துவது கோபமேயன்றி ஆயுதமல்ல, கோபம் தான் விதை, எனவே அதே விதிப்பூர்வமாக விதையையே அழித்து விட்டோம் என்றால், வெற்றி நிச்சயம், உறுதியாக்கப்பட்டது. சண்டை சச்சரவின் விதையே அழிந்து விட வேண்டும், அனைத்து ஆத்மாக்களின் ஆசை நிறைவேறுவதற்கான நேரம் வந்து விட்டது. நேரம் அனைவரின் புத்தியை பிரேரித்துக் (தூண்டிக்) கொண்டிருக்கிறது, குப்தமாக காரியம் என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அந்தக் காரியம் அனைவரையும் தன் பக்கம் இழுக்கிறது ஆனால் இந்த எண்ணம் ஏன் வருகிறது என்று அவர்கள் தெரிந்து கொள்ள முடியாது, உருவாக்கியதே அவர்கள் தான் பிறகு இந்த

எண்ணம் ஏன் ஒடுகிறது என்று உபயோகிப்பது இல்லை, அந்த மாதிரி ஸ்தாபனைக் காரியம் அவர்களை பிரேரிக்கிறது, ஆனால் அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை, பரிவர்த்தனை ஆவதில் விநாஷம் ஆகாமல் ஸ்தாபனை ஆகாது என்று நீங்களே தெரிந்திருக்கிறீர்கள், ஆனால் பாவனையோ அவர்களுக்கு அதுவே தான் இல்லையா? அவர்களுடைய பாவனையை மனதில் வைத்து இந்தக் குஷியான செய்தியை அவர்களுக்குக் கூறுங்கள். பிறகு அமைதிக் கடல் மூலமாகத்தான் அமைதி ஸ்தாபனை ஆகும் என்ற இந்த விதியை அவர்களே கூறுவார்கள், நாம் அனைவரும் ஒன்று, இந்த சகோதரத்துவத்தின் பாவனை எந்த ஆதாரத்தினால் உருவாக முடியும்? அதன் மூலம் இந்த ஆயுதத்தை உபயோகிக்கலாமா அல்லது வேண்டாமா என்ற எண்ணமே எழாத, கடின உழைப்பு செய்ய அவசியம் இல்லாத அளவிற்கு, ஆனால் இந்த இல்லாத, சகோதரத்துவம் வந்து விட வேண்டும் என்ற இது தான் விதி சகோதரத்துவம் வந்து விட்டது என்றால், தந்தையோ இருக்கவே இருக்கிறார், அந்த மாதிரி குஷியான செய்தி ரூபத்தில் அவர்களுக்குக் கூறுங்கள், அமைதிக்கான பாடத்தை கற்பிக்க வேண்டியதாக இருக்கும், (அமைதியின் விதி மூலம் அமைதியின்மை அகன்று விடும்) ஆனால் அந்த அமைதி எப்படி வரும்? அதற்காக மந்திரம் தர வேண்டியதாக இருக்கும், அமைதிக்கான பாடத்தை கற்பிக்கிறீர்கள் தான் இல்லையா! நானும் அமைதியானவன், என்னுடைய வீடும் அமைதியானது, என்னுடைய தந்தையும் அமைதிக் கடல் மற்றும் என்னுடைய தர்மமும் அமைதி என்று அந்த மாதிரி பாடத்தை கற்பியுங்கள், அமைதி தான் அமைதியின் பாடம், இரண்டு விநாடியாவது அனுபவம் செய்வார்கள் இல்லையா, ஒரு விநாடியாவது மரண அமைதி அனுபவம் ஆகி விட்டது என்றால், உங்களுக்கு அடிக்கடி நன்றி கூறுவார்கள். உங்களையே பகவான் என்று நினைக்கத் தொடங்கி விடுவார்கள். ஏனென்றால், மிகவும் நொந்து போய் இருக்கிறார்கள் இல்லையா! எவ்வளவு பெரிய புத்தியோ அந்த அளவு பெரிய பிரச்சனையும் இருக்கிறது, எனவே அந்த மாதிரி பிரச்சினையிலிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒருவேளை கொஞ்சமாவது அஞ்சலி கிடைத்து விட்டது என்றால், அதுவே அவர்களுக்கு வாழ்வின் வரதானம் ஆகி விடும், யாருக்கு வாய்ப்பு கிடைத்தாலும் நீங்கள் பேசிக் கொண்டிருக்கும், ஒரு விநாடியாவது அவர்களை அனுபவத்தில் கொண்டு சென்றீர்கள் என்றால் அவர்கள் உங்கள் மேல் மிகுந்த நன்றி உணர்வு வந்து விட்டது என்று அனைவரும் அனுபவம் செய்யும் அளவிற்கு

சூழ்நிலையை உருவாக்குங்கள், அனுபவம் ஒரு விநாடி அல்லது அரை விநாடியாவது அனுபவம் ஆக வேண்டும். ஏனென்றால், இதுவோ வாயுமண்டலம் மூலமாகத்தான் ஆகும் இல்லையா! அதிக நேரம் இருக்க முடியாது, ஒன்று அல்லது அரை விநாடியாவது வாயுமண்டலம் அந்த மாதிரி லேசாகி விட வேண்டும், பிறகு மனதால் நன்றியை வெளிப்படுத்துவார்கள். ஏனென்றால் பாவம் அவர்கள் மிகுந்த குழப்பத்தில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து பாப்தாதாவிற்கு இரக்கம் வருகிறது, இரவும் தூக்கம் இல்லை, பகலிலும் தூக்கம் இல்லை, உணவும் எப்படி சாப்பிட வேண்டுமோ அப்படி சாப்பிடுவதில்லை என்ன ஆகுமோ, எப்படி ஆகுமோ என்று தலைமேல் மிகுந்து சுமை இருக்கும் நிலை, அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு ஒரு ஜொலிப்பு கூட கிடைத்து விட்டது என்றால், சூரியனே கீழே வந்து விட்டதாக நினைப்பார்கள், ஒரு ஜொலிப்பு தான் வேண்டும், அதிக நேரமோ அவர்களால் சக்தியை தாரணை செய்ய முடியாது, இதுவோ சில விநாடிகளுக்கான விஷயம், ஒரு அலை வந்தது மற்றும் சென்று விட்டது என்று இந்த அளவாவது அனுபவம் ஆகியது என்றால் அவர்களைப் பொருத்தவரை பெரிய விஷயம்! ஏனென்றால், மிகவும் நொந்து போயிருக்கிறார்கள், ஒரு சின்ன மரக் கடையின் ஆதாரம் கிடைத்தால் கூட அவர்களைப் பொருத்தவரை பெரிய விஷயம் நல்லது.

எண்ணம் நிறைவேறியதா? குழந்தைகளின் குஷியில் தந்தையின் குஷி இருக்கிறது, வெற்றி மூர்த்தி தான் இல்லையா? வெற்றியோ உங்கள் கூடவே இருக்கிறது, தந்தை உங்களுடன் இருக்கிறார் என்றால் வெற்றி எங்கே செல்லும்? எங்கு தந்தை இருக்கிறாரோ அங்கு அனைத்து வெற்றிகளும் உடன் இருக்கிறது.

புள்ளி வைக்கத் தெரியுமா அல்லது புள்ளியில் கேள்விக்குறி வந்து விடுகிறதா? இன்றைய உலகில் கூட அந்த மாதிரி வெடியை கொளுத்துகிறார்கள், சின்ன புள்ளியாக இருந்தது பெரிய பாம்பாக (வெடிகுண்டாக) ஆகி விடுகிறது. இங்கேயும் வைக்க வேண்டும் புள்ளி, புள்ளியில் அனைத்தும் உள்ளடங்கி விடுகிறது, ஒருவேளை எண்ணத்தின் தீக்குச்சியை எரிய வைத்தீர்கள் என்றால், பிறகு அது பாம்பாகி (வெடிகுண்டாக) விடுகிறது, தீக்குச்சியையும் கொளுத்தாதீர்கள், பாம்பும் (வெடிமருந்தாகவும்) உருவாக வேண்டாம், குழந்தைகளின் இந்த

விளையாட்டை பாப்தாதா பார்த்துக் கொண்டே இருக்கிறார், என்ன நடக்கிறதோ அதில் நன்மை நிரம்பிருக்கிறது, அப்படி ஏன், என்ன, என்பது வேண்டாம், என்னென்ன அனுபவம் செய்ய வேண்டியது இருந்ததோ அதைச் செய்தேன், பரிவர்த்தனை செய்தேன் மற்றும் முன்னேறிச் செல்லுங்கள். இது தான் புள்ளி வைப்பது. அனைத்து வெளிநாட்டினருக்கும் இந்த விளையாட்டைப் பற்றிக் கூறுங்கள். அவர்களுக்கு இந்த விளையாட்டைப் பற்றிக் கூறுங்கள், அவர்களுக்கு அந்த மாதிரி விஷயங்கள் பிடிக்கும். (தாதி அவர்களும், தாதி சந்திரமணி அவர்களும் பாபா அருகில் அமர்ந்திருக்கிறார்கள்).

இவரோ கல்யாண ஊர்வலத்தின் பெருமை கொண்டவர். பாப்தாதாவின் விசேஷ அலங்காரம் இவர், உங்கள் அனைவரின் எதிரில் பரிவாரத்தின் அலங்காரம் யார்? இவர்கள் தான் (தாதிகள்) இல்லையா? அனைவரின் மனதில் இந்த விசேஷ ஆத்மாக்களுக்காக, இவர்கள் எப்பொழுதும் இருக்கிறது, இவர்கள் அனைவரும் உங்கள் அனைவருக்கும் அமர்பவ என்பதின் சகயோகத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள், ஒரு தாதிக்கு ஏதாவது ஒன்று (உடல் நிலை) என்றால், அனைவர் மனதிலும் எண்ணம் ஒடுகிறது தான் இல்லையா? இவர்கள் ஸ்தூலத்தில் பொறுப்பிலிருக்கும் குடைநிழல், பொதுவாக தந்தையின் குடை நிழலோ இருக்கிறது, ஆனால் பொறுப்பிலிருக்கும் இந்த அனுபவி ஆத்மாக்கள் மாஸ்டர் குடை நிழல் எப்போதாவது வெயில் அல்லது மழை வருகிறது என்றால், குடைக்கு கீழே சென்று விடுகிறீர்கள் இல்லையா! உங்களிடம் கூட ஏதாவது பிரச்சினை வருகிறது என்றால் என்ன செய்கிறீர்கள்? இவர்களிடம் வரவேண்டியது இருக்கிறது, தந்தையோடோ ஆன்மீக உரையாடல் செய்வீர்கள், ஆனால் கடிதமோ மதுபன்னிற்குத் தான் எழுதுவீர்கள் இல்லையா, மனமகிழ்விற்கான நிகழ்ச்சிகள் செய்கிறீர்கள் என்றால், மத்தியில் குடை நடுகிறீர்கள் பிறகு நிகழ்ச்சிகள் செய்கிறீர்கள். இதைப் பார்த்திருப்பீர்கள், மதுபன்னில் சிரித்து, ஆடிப் பாடுகிறீர்கள் தான் இல்லையா? குழந்தைகள் மனமகிழ்ச்சிக்கான நிகழ்ச்சிகளைக் கொண்டாடுகிறார்கள் என்றால், பாப்தாதாவிற்கும் குஷி ஏற்படுகிறது, இந்த அன்பு தான் அனைவரையும் தந்தையின் அன்பின் பக்கம் கவர்ந்திழுக்கிறது, எப்படி இவர்கள் பொறுப்பாளர் ஆகி இருக்கிறார்களோ அதே போல் நீங்களும் உங்களை ஒவ்வொரு ஸ்தானத்தின் குடை என்று புரிந்து கொள்ளுங்கள், யாருக்கு

பொறுப்பாளர் ஆகிறீர்களோ அவர்களுக்கு பாதுகாப்பிற்கான வழி கிடைத்து விட வேண்டும், வளைந்து கொடுக்க வேண்டாம், ஆனால் ஆதரவு கொடுங்கள், சகயோகம் கொடுங்கள் அது வேறு விஷயம்! ஆனால் ஆதாரம் அளிக்கும் வள்ளலாகி ஆதரவு கொடுக்காதீர்கள், கருவியாகி ஆதரவு கொடுப்பது மற்றும் ஆதரவு அளிக்கும் வள்ளலாகி கொடுப்பது என்பதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. நான் ஆதாரம் என்று நினைக்கவில்லை என்றாலும் ஆனால் மற்றவர்கள் உங்களை நினைக்கிறார்கள் என்றாலும் இவருடைய பெயரும் வரும் இல்லையா? சேவை என்று புரிந்து கருவியாகி ஊக்கம்,உற்சாகத்தை அதிகரிப்பதற்கான ஆதரவு கொடுப்பது என்ற இந்த விதிப்பூர்வமாக ஆதரவு கொடுத்தீர்கள் என்றால் ஒருபோதும் புகார் வராது, இவர்தான் என்னுடைய ஆதாரம் என்று எனக்கு இவர்தான் அனைத்தும் என்று புரிந்து கொள்வதைத் தான் ஆதரவு அளிக்கும் வள்ளலாகி ஆதரவு கொடுத்தீர்கள் என்று கூறுவது! ஆனால் சேவை என்று புரிந்து கருவியாகி சகயோகத்தின் ஆதரவு கொடுப்பது வேறு விஷயம். அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்?

இறுதியில் அனைத்து நடிகர்களும் மேடையில் வருவார்கள், இந்த உடல் மூலமாக சேவாதாரியாகவோ, அல்லது வேறு வேறு உடல் மூலமாக சேவாதாரியாகவோ வருவார்கள், அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நடிகர்கள் மேடையில் வருவது என்றால் வெற்றி முழக்கம் முழங்கி முடிவு ஏற்படுவது. ஏனென்றால், அவர்களுக்குத் தான் குப்த ரூபத்தில் ஸ்தாபனைக் காரியத்தில் சகயோகி ஆவதற்கான பங்கு இருக்கிறது, நீங்கள் பிரத்யக்ஷ ரூபத்தில் இருக்கிறீர்கள், அவர்கள் குப்த ரூபத்தில் தங்களுடைய ஸ்தாபனைக் காரியத்தின் பங்கை செய்து கொண்டிருக்கிறார்கள், இப்பொழுது பிரத்யக்ஷம் ஆகமாட்டார்கள், ஏனென்றால், எப்பொழுது தான் திரை அகலும் நேரம் வரும், சம்பன்னம் ஆகி விட வேண்டும், திரை அகன்றது என்றால் பிறகோ முடிவு வந்து விடும் இல்லையா, அந்த மாதிரி அனைவரும் தயாராக இருக்கிறீர்களா? திரை அகற்றுவதற்காக தயாராகி விட்டீர்களா? இப்பொழுது வாரிசு தரத்தின் மாலை தயாராகி விட்டதா? 108-ன் சம்பன்ன நிலையின் மிக அருகில் இருக்கிறீர்கள், முற்றிலும் சம்பன்னம் ஆகி விடுங்கள், நேரத்தின் கணக்குப்படி கூட சம்பூர்ணத்தின் அருகில் இருக்கிறீர்கள், அந்த மாதிரி உங்களை நினைக்கிறீர்கள், அந்த மாதிரி உங்களை நினைக்கிறீர்களா?

அதன் அடையாளம் என்னவாக இருக்கும்? மாலையின் விசேஷமாக என்ன இருக்கும்? மாலை தயாராகி விட்டது என்பதின் விசேஷ அடையாளமாக என்ன தென்படும்? ஒரு மணியோடு இன்னொரு மணி சேர்ந்திருக்கும். இது மாலையின் அடையாளம், மாலையின் விசேஷம் ஒவ்வொருவரின் சம்ஸ்காரத்தின் அருகாமையில் இருப்பது, மணியோடு மணி சேர்ந்திருப்பது, அது தயாராகி விட்டதா? யாரைப் பார்த்தாலும், 108-ம் நம்பரில் இருப்பவராக இருந்தாலும் ஆனால் மணி சேர்ந்திருக்கிறது என்றால், அவரும் இருக்கிறார் இல்லையா? அந்த மாதிரி இணைந்திருப்பது. இவர்கள் மாலைக்குச் சமமாக உருண்டு கொண்டிருக்கும் மணிகள் என்று அனைவருக்கும் உணர்வு ஏற்படவேண்டும், அனைவரின் சம்ஸ்காரம் வித விதமாக இருக்கிறது, அருகாமையில் எப்படி இருப்போம் என்று வேண்டாம், வித விதமான சம்ஸ்காரம் இருந்தும் அருகாமையிலிருப்பதாகத் தென்பட வேண்டும். பல வகையில் ஆதாரத்தில் வரிசை எண் ஆகி விட்டது, ஆனால் மணியோ அருகில் இருக்கிறது இல்லையா, எதுவரை ஒருவர் இன்னொருவரோடு இணையவில்லையோ அதுவரை மாலை உருவாக முடியாது, ஒரு மணி பிரிந்து சென்று விட்டாலும் மாலை துண்டிக்கப்பட்டு விடும், பூஜைக்குரிய மாலை என்று கூறப்படாது மணி தூரத்தில் இருந்தாலும் பூஜைக்குரிய மாலை என்று கூறமாட்டோம், 108-வது நம்பர் மணி கூட ஒருவேளை கொஞ்சம் தூரமாக இருக்கிறது என்றாலும் மாலை தயாராக முடியாது. நல்லது.

**வரதானம்: அனைத்து சக்திகளையும் தன்னுடைய அதிகாரத்தில் வைத்து சுலபமாக வெற்றியை அடையக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக!**

எந்த அளவு மாஸ்டர் சர்வசக்திவானின் ஆசனத்தில் அமர்ந்திருப்பீர்களோ அந்த அளவு அனைத்து சக்திகளும் கட்டுப்பாட்டில் இருக்கும், எப்படி ஸ்தூல கர்ம இந்திரியங்கள் எப்படி கட்டளை இடுகிறீர்களோ அப்படி கட்டளைப்படி நடக்கின்றன, அந்த மாதிரி சூட்சும சக்திகளும் கட்டளைப்படி நடப்பதாக இருக்க வேண்டும், இந்த அனைத்து சக்திகளும் இப்பொழுது தான் இறுதியில் வெற்றி அடைய முடியும், ஏனென்றால், எங்கு அனைத்து சக்திகளும் இருக்கின்றனவோ, அங்கு வெற்றி பிறப்பு உரிமையாகும்.

**சுலோகன்: ஆகாரி (ஒளிவடிவ உடல்) மற்றும் நிராகாரி (உடலற்ற நிலை) நிலையில் சுலபமாக நிலைத்திருக்க வேண்டும் என்றால் நிர் அஹங்காரி (அஹங்காரமற்றவர்) ஆகுங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 25.12.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சட்டம், விதி மற்றும் வரதானம்!

இன்று அனைத்து அன்பான குழந்தைளின் அன்பிற்கான பிரதிபலனைக் கொடுப்பதற்காக பாப்தாதா சந்திக்க வரவேண்டியதாக இருக்கிறது. முழு உலகில் குழந்தைகளின் அன்பின், நினைவின் ஒசை பாப்தாதாவின் வதனத்தில் இனிமையான இசையின் ரூபத்தில் வந்து சேர்ந்து விட்டது. எப்படி குழந்தைகள் அன்பின் பாடலைப் பாடுகிறார்களோ, அதே போன்று பாப்தாதாவும் குழந்தைகளின் குணங்களின் பாடலைப் பாடுகிறார். எப்படி இந்த மாதிரியான பாப்தாதா முழு கல்பத்திலும் கிடைக்க மாட்டார் என்று கூறுகிறார்கள், பாப்தாதாவும் குழந்தைகளைப் பார்த்து இம்மாதிரியான குழந்தைகள் முழு கல்பத்தில் கிடைக்க மாட்டார்கள், அந்த மாதிரி தந்தை மற்றும் குழந்தைகளின் இனிமையான ஆன்மீக உரையாடலைக் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்களா? தந்தை மற்றும் நீங்கள் இணைந்த ரூபத்தில் இருக்கிறீர்கள் தான் இல்லையா? இந்த சொருபத்தைத் தான் சகஜயோகி என்று கூறுவது. யோகா செய்பவர்கள் அல்ல ஆனால் எப்போதும் இணைந்த அதாவது உடன் இருப்பவர்கள். அந்த மாதிரியான நிலையை அனுபவம் செய்கிறீர்களா அல்லது கடுமையாக முயற்சி செய்ய வேண்டியதிருக்கிறதா? குழந்தைப் பருவத்தில் என்ன உறுதி மொழி கொடுத்திருக்கிறீர்கள்? உடன் இருப்போம், உடன் வாழ்வோம், உடன் செல்வோம், இந்த உறுதி மொழி கொடுத்தீர்கள் தான் இல்லையா? உறுதியாக? நீங்கள் சாகார பாலனைக்கு உரிய ஆத்மாக்கள், தன்னுடைய பாக்கியத்தை நல்ல முறையில் யோசித்துப் பாருங்கள் மற்றும் புரிந்து கொள்ளுங்கள்.

(பாப்தாதாவின் எதிரில் தாதா ராம் மற்றும் சாவித்திரி சகோதரியின் லௌகீக குடும்பம் அமர்ந்திருக்கிறது) இந்த மாதிரி கோடியில் சிலர் பாக்கியத்தை உருவாக்குபவரின் எதிரில் தொடர்பில் வருகிறார்கள், இப்பொழுது நேரம் வரும் பொழுது இந்த தன்னுடைய பாக்கியம் நினைவில் வரும், ஆதி பிதாவை அடைவது என்பது தான் பாக்கியத்தின்

உயர்ந்த அடையாளம். எப்பொழுதும் உடன் இருப்பவராக நிரந்தர யோகி, எப்பொழுதும் சகஜயோகி, பறக்கும் கலையில் செல்பவராக, எப்பொழுதும் பரிஷ்தா சொரூபமாக இருக்கிறீர்களா?

இன்று பெரிய நாளை (கிறிஸ்துமஸ்) கொண்டாடுவதற்காக அழைத்திருக்கிறோம், பெரியதிலும் பெரிய தந்தையுடன் பெரியதிலும் பெரிய, பெரிய நாள் மற்றும் சந்திப்பை செய்து கொண்டிருக்கிறீர்கள். பெரிய நாள் என்றால் பண்டிகை நாளை, எப்பொழுது பெரிய நாளைக் கொண்டாடுகிறீர்கள் என்றால் தீய நாட்கள் முடிவடைந்து விடுகிறது. இன்றைய நாள் மட்டும் கொண்டாடுவதாக இருக்கக் கூடாது, ஆனால் எப்பொழுதும் கொண்டாட வேண்டும். அதாவது ஊக்கம், உற்சாகத்தில் எப்பொழுதும் இருப்பது, அழியாத தந்தை, அழியாத நாள், அழியாத கொண்டாட்டம், பெரிய நாள் கொண்டாடுவது என்றால் தன்னை நிரந்தரமாக பெரியதிலும் பெரியவராக ஆக்குவது, கொண்டாடுவது மட்டும் அல்ல, ஆனால் ஆவது மற்றும் ஆக்குவது, அனைத்து ஆத்மாக்களுக்கும் பெரிய நாளின் பரிசாக என்ன கொடுப்பீர்கள், எந்த ஆத்மா தொடர்பில் வந்தாலும் அவருக்கு ஈஸ்வரிய ஆன்மீக அன்பு, சக்தி, குணம், அனைவருக்கும் சகயோகம் கொடுப்பதற்கான லிஃப்ட்டின் கிஃப்டை (பரிசு) கொடுங்கள், அதன் மூலம் பிராப்தியின்மை எதுவும் இல்லை என்று அனுபவம் செய்யும் அளவிற்கு சம்பன்னம் ஆகி விட வேண்டும், அந்த மாதிரி பரிசைக் கொடுக்க முடியுமா? நீங்கள் சம்பன்னமாக இருக்கிறீர்களா? மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு முதலில் தன்னிடம் சேமிப்பு இருந்தது என்றால் தானே கொடுக்க முடியும் இல்லையா! நல்லது இன்றோ பரிசை கொடுப்பதற்கும், பரிசைப் பெறுவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா, வாங்க மட்டும் செய்வீர்களா? கொடுப்பது மற்றும் பெறுவதில் மகிழ்ச்சி வருகிறதா அல்லது பெறுவதில் மட்டுமா? வள்ளலுக்குக் கொடுக்க வேண்டுமா அல்லது பெற வேண்டுமா? தந்தையும் (நீங்கள் கொடுப்பதை) ஏன் பெற்றுக் கொள்கிறார்? பல கோடி மடங்காக்கி பரிவர்த்தனை செய்து கொடுப்பதற்காக, தந்தைக்கு என்ன தேவை இருக்கிறது? தந்தையிடம் இருப்பதே குழந்தைகளுக்குக் கொடுப்பதற்காக! எனவே தந்தை வள்ளலாகவும் இருக்கிறார், உருவாக்குபவராகவும் இருக்கிறார், வரமளிப்பவராகவும் இருக்கிறார். எந்த அளவு தந்தை குழந்தைகளின் பாக்கியத்தைத் தெரிந்திருக்கிறாரோ, அந்த அளவு குழந்தைகள் தங்களுடைய பாக்கியத்தைத் தெரிந்திருக்கவில்லை, இந்த

பாக்கியத்தின் நாள் எப்பொழுதும் சக்திசாலியாக ஆக்கும் நாள் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள், இது முழுமையாக அதிர்ஷ்டம் நிறைந்த பொறுப்பில் இருக்கும் விதையின் காரணமாக மரம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. மேலும் ஆத்மாவின் சிரேஷ்ட விருப்பங்கள் முழு பரிவாரத்திற்கும் லிப்ஃடின் கிஃப்ட் ரூபத்தில் கிடைத்திருக்கிறது. ஏனென்றால், தூய்மையான சுத்த ஆத்மாவாக இருந்தது. எனவே தூய்மையின் நீர் பிரத்யக்ஷ பழம் (பலன்) கொடுக்கிறது. புரிந்ததா? சாகார ரூபத்தில் பொறுப்பிலிருக்கும் மாதா குருவும் (சாவித்திரி) அமர்ந்திருக்கிறார்கள், மாதா குருவாக ஆனார் உடன் தந்தையும் லிஃப்டின் கிஃப்ட்டைக் கொடுத்தார், இப்பொழுது இந்த குடும்பம் என்ன செய்ய வேண்டும்? தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும் இல்லையா? இதில் எதையும் விட வேண்டியது இருக்காது. பயப்படாதீர்கள். நல்லது.

இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளும் வந்து சேர்ந்து விட்டார்கள், பாப்தாதாவும் இப்பொழுது வெளிநாட்டினர் தான், பிரம்மாபாபாவும் வெளிநாட்டினராக, வெளிநாட்டினரோடு சந்திப்பது என்பது எவ்வளவு நல்ல விஷயம். பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகளின் அதிலேயும் கூட விசேஷமாக பொறுப்பிலிருக்கும் இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் ஒரு விசேமான விஷயத்தைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது, அது எந்த விஷயம்? வெளிநாட்டுக் குழந்தைகளின் விசேஷமாக சந்திப்பதற்கான ஆர்வம் பாப்தாதாவிடம் இன்று விசேஷ ரூபத்தில் வந்து சேர்ந்தது. இந்த உலகத்தின் கணக்குப்படி கூட இன்றைய நாள் விசேˆமாக வெளிநாட்டினரினுடையது என்று ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. டோலி, இனிப்பு சாப்பிட்டு விட்டீர்களா அல்லது இனிமேல் தான் சாப்பிட வேண்டுமா? பாப்தாதா இனிப்பை உண்ணக் கொடுத்து கொடுத்து இனிமையாக ஆக்கி விடுகிறார், நீங்களோ இனிமையானவர் ஆகி விட்டீர்கள் தான் இல்லையா! நாலாபுறங்களிலிருந்தும் வந்திருக்கும் குழந்தைகளுக்கு, மதுபன் நிவாசி குழந்தைகளுக்கு பாப்தாதா அன்பின் பிரதிபலனாக எப்பொழுதும் இணைந்த அதாவது எப்பொழுதும் உடன் இருப்பதற்கான வரதானம் மற்றும் ஆஸ்தியைக் கொடுக்கிறார். நீங்கள் இரட்டை அதிகாரிகள், ஆஸ்தியும் கிடைக்கிறது, வரதானமும் கிடைக்கிறது, எங்காவது, எப்போதாவது கடினமாக அனுபவம் ஆகிறது என்றால், வரமளிக்கும் வள்ளலின் ரூபத்தை நினைவில் கொண்டு வாருங்கள், வரமளிக்கும் வள்ளல் மூலமாக வரதான ரூபத்தில் பிராப்தி

ஆவதினால் கடினமும் சுலபமாகி விடும், மேலும் பிரத்யக்ஷமாக பிராப்தியின் அனுபவமும் ஏற்படும்.

இன்னைய நாளின் விசேஷ சுலோகனை எப்பொழுதும் நினைவில் வையுங்கள், மூன்று வார்த்தைகளை நினைவில் வையுங்கள் - விதி, சட்டம், மற்றும் வரதானம். விதி மூலமாக சுலபமாக சித்தி (வெற்றி) சொரூபமாகி விடுவீர்கள். சட்டத்தின் மூலமாக உலகை படைப்பவர் மற்றும் வரதானத்தினால் வரதானி மூர்த்தி ஆகி விடுவீர்கள். இந்த மூன்று வார்த்தைகளும் எப்பொழுதும் சக்திசாலியாக ஆக்கிக் கொண்டே இருக்கும், நல்லது.

நாலாபுறங்களின் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, பெரியதிலும் பெரிய தந்தையின், பெரியதிலும் பெரிய தந்தையின், பெரியதிலும் பெரிய குழந்தைகளுக்கு, அனைவரையும் சம்பன்னம் ஆக்கக் கூடிய மாஸ்டர் உருவாக்குபவர் வரதானி குழந்தைகளுக்கு, மாயாவிற்கு விடை கொடுத்ததற்காக வாழ்த்துக்கள்! இந்த வாழ்த்தின் கூடவே இன்று விசேˆ ரூபத்தில் குழந்தைகளுக்கு ஊக்கம் உற்சாகத்திற்காகவும் வாழ்த்துக்கள், அனைவருக்கும், யார் ஸ்தூலமாகாவும் ஒளிவடிவ உடல் மூலமாகவும் எதிரில் இருக்கிறார்களோ, அந்த மாதிரி அனைத்து எதிரில் இருக்கும் குழந்தைகளுக்கு, மிகுந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி, தாதியுடன் சந்திப்பு:** உங்கள் இருவரையும் பார்த்து பாப்தாதாவிற்கு என்ன நினைவு வரும்? உலகின் கண்களாகவோ இருக்கவே இருக்கிறீர்கள், ஆனால் முதலில் தந்தையின் கண்களின் மணியாக இருக்கிறீர்கள், கண்பார்வை இல்லையென்றால் உலகமில்லை என்று கூறுகிறார்கள் இல்லையா! எனவே பாப்தாதாவும் கண்ணின் மணிகளை ஸ்தாபனை காரியத்தில் அந்த மாதிரியே விசேஷ ஆத்மாக்களாகப் பார்க்கிறார். செய்விப்பவரோ செய்து கொண்டிருக்கிறார் ஆனால் செய்பவர் களாக குழந்தைகளைக் கருவியாக ஆக்குகிறார். செய்பவர் செய்விப்பவர் என்ற இந்த வார்த்தையிலும் தந்தை மற்றும் குழந்தைகள் இணைந்திருக்கிறார்கள் இல்லையா? கைகள் குழந்தைகளினுடையது மற்றும் வேலை தந்தையினுடையது, உதவிக்கரம் கொடுப்பதற்கான பொன்னான வாய்ப்பு குழந்தைகளுக்குத் தான் கிடைத்திருக்கிறது. மிகப் பெரிய

காரியம் கூட எப்படி அனுபவம் ஆகிறது? செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்று அனுபவம் ஆகிறது இல்லையா? கருவியாக்கி நடத்திக் கொண்டிருக்கிறார். மனதிலிருந்து இந்த ஒலிதான் எப்பொழுதும் வெளிப்படுகிறது. பாப்தாதாவும் குழந்தைகளின் ஒவ்வொரு காரியத்திலும் செய்விப்பவர் ரூபத்தில் எப்பொழுதும் துணையாக இருக்கிறார். உடன் இருக்கிறாரா அல்லது சென்று விட்டாரா? கண்ணாம்பூச்சி விளையாட்டு விளையாடினீர்கள். விளையாடுவதைக் கூட குழந்தைகள் மூலமாகத்தான் செய்வோம் இல்லையா? விளையாட்டில் என்ன நடக்கும்? கைதட்டப்பட்டது மற்றும் விளையாட்டு தொடங்கியது. இதுவும் நாடகத்தின் கைதட்டப்பட்டது, மேலும் கண்ணாம்பூச்சி விளையாட்டு தொடங்கியது. இப்பொழுது இனிமையான வீட்டின் கதவுகளை எப்பொழுது திறக்கப்போகிறீர்கள்? எப்படி மாநாடு நடத்த வேண்டிய நாளை நிர்ணயம் செய்தீர்கள் என்றால், அதற்கான நிகழ்ச்சியை தயாரிக்கவில்லையா! கதவைத் திறப்பதற்கு முன்பு தேவையானவற்றை தயார் செய்வீர்களா அல்லது அதையும் தந்தை தான் தயார் செய்ய வேண்டுமா? அது தயாராக இருக்கிறதா? பிரம்மாபாபாவோ ஏற்கனவே எவரெடியாக இருக்கிறார். இப்பொழுது உடன் செல்பவர்களும் எவரெடி ஆக வேண்டும் இல்லையா! 8-மணி மாலையை உருவாக்க முடியுமா? இப்பொழுது உருவாகுமா? முதலில் 8-மணி மாலை தயாராகி விட்டது என்றால், பிறகு பின்னால் உருவாக வேண்டிய மாலை தயாராகியே விடும். 8-மணிகள் எவரெடியா? பெயரை எடுத்து எழுதி அனுப்புங்கள். அனைத்தையும் சோதனை செய்து ஆம் சரி! என்று கூறலாம். இதைத் தான் எவரெடி என்று கூறுவது தந்தை விருப்பமானவர், பிராமண பரிவாரம் விருப்பமானது, மேலும் உலக சேவையும் விருப்பமாக இருக்கிறது, இந்த மூன்று விசேஷங்களும் எப்பொழுது இருக்குமோ அப்பொழுது எவரெடி என்று கூறுவோம். முதலில் கங்கணம் தயாராகும் பிறகு பெரிய மாலை தயாராகும் நல்லது.

**சாவித்திரி சகோதரியுடன் சந்திப்பு:** தன்னுடைய குப்த (மறைவான) வரதானங்களை பிரத்யக்ஷ ரூபத்தில் பார்க்கிறீர்களா? நான் யார் என்று புரிந்து கொண்டீர்களா? சேவைக்குத் தகுதியானவர்களின் பட்டியலில் தன்னுடைய எண் முன்னுக்கு இருக்கிறது என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா! சேவையின் பலனிற்கு பொறுப்பாளர் ஆனீர்கள். இருந்தும் விதைதான் பொறுப்பாளர் என்று கூறுவோம் இல்லையா? வேவைக்குத்

தகுதியானவர் பட்டியலில் மிகவும் முன்னுக்கு இருக்கிறீர்கள். சில நேரம் மட்டும் தன்னை மறந்து விடுகிறீர்கள். பாப்தாதாவே ஸ்வீகாரம் (ஏற்றுக் கொண்டார்) செய்கிறார் என்றால், வேறு என்ன வேண்டும்? அனைவரின் சேவை ஒரே மாதிரி இருப்பதில்லை, வகை வகையான ஆத்மாக்கள், வகை வகையான சேவைக்கான முறைகள் இருக்கின்றன. அதிகம் யோசிப்பதினால் ஒன்றும் நடக்காது, தானாக நடக்கும், தன்னை எப்பொழுதும் தந்தையின் நெருக்கமான இரத்தினம் என்று புரிந்து கொள்ளுங்கள். பிறந்ததிலிருந்தே நீங்கள் அதிகாரி, பிறந்ததிலிருந்தே மிக வேகமாகச் சென்றீர்கள் இல்லையா! பிறந்ததிலிருந்தே நெருக்கத்தில் இருப்பதற்கான வரதானம் கிடைத்தது. சாகார பாபாவுடன் அருகாமையில் இருப்பதற்கான வரதானம் எத்தனை பேர்களுக்கு கிடைத்தது என்று எண்ணிணீர்கள் என்றால், அந்த மாதிரி வரதானிகள் (வரம் பெற்றவர்கள்) தேடினாலும் கஷ்டப்பட்டுதான் கிடைப்பார்கள். எனவே தந்தையின் அருகாமையில் இருக்கிறேன் என்று புரிந்து கொண்டு முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். எவ்வளவு நடக்கிறதோ அது நன்மை நிரம்பியது. யோசிக்காதீர்கள், எந்த எண்ணமும் இல்லாமல் இருங்கள். தந்தை எப்பொழுதும் துணைவனாக இருப்பார் என்று தந்தையிடமிருந்து உறுதிமொழி இருக்கிறது. தன்னுடைய எண்ணத்தையும் தந்தையிடம் விட்டு விடுங்கள், சேவை அதிகாரிக்குமா அல்லது அதிகாரிக்காதா அது தந்தைக்குத் தெரியும். அதிகரிக்கவில்லை என்றால், நீங்கள் பொறுப்பல்ல, தந்தைக்குத் தான் பொறுப்பு. அந்த அளவு கவலையின்றி இருங்கள். நீங்களோ தந்தையின் எதிரில் உங்களுடைய எண்ணத்தை வைத்து விட்டீர்கள் இல்லையா! அப்படியானால் பொறுப்பு யாருடையது? நீங்கள் கண்டெடுக்கப்பட்டவர், எவ்வளவு அன்போடு தந்தை தேடினார், முதன் முதலில் சேவைக்கான ரத்தினங்களை முழு உலகிலிருந்து தேர்ந்தெடுத் திருக்கிறார், எனவே இதை மறக்காதீர்கள், நல்லது.

**சாவித்திரி சகோதரியின் லௌகிக குடும்பத்தினருடன் சந்திப்பு:** அனைவரும் இரட்டை ஆஸ்தியின் அதிகாரிகள் தான் இல்லையா! லௌகிக தந்தையின் சிரேஷ்ட எண்ணத்தின் கஜானா கிடைத்தது. மேலும் பரலோக தந்தையின் ஆஸ்தியும் கிடைத்தது. ஆன்மீகத் தந்தையின் ஆஸ்தியும் கிடைத்தது. மூவரின் ஆஸ்தியும் சேர்ந்தே கிடைத்தது. மூன்று தந்தையின் விருப்பங்களின் தீபமாக இருக்கிறீர்கள்,

பொதுவாக குழந்தைகளை குலத்தின் தீபம் என்று கூறுவார்கள். குலத்தின் தீபமாகவோ ஆகியிருக்கிறீர்கள், ஆனால் கூடவே உலகின் தீபமாக ஆகுங்கள், எப்பொழுதும் நெற்றியில் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவும் அந்த மாதிரி தைரியம் வைக்கும் குழந்தைகளுக்கு எப்பொழுதும் உதவி செய்கிறார். எப்பொழுதெல்லாம் எண்ணத்தை வைத்தீர்களோ, தந்தை ஆஜராகி விடுகிறார். தந்தை மேல் அனைத்துக் காரியங்களின் பொறுப்பில் நடக்கும், விட்டு விட்டீர்கள் என்றால் காரியம் எப்படி நடக்கும் என்று பாபாவிற்குத் தெரியும். நீங்கள் எப்பொழுதும் டபுள் லைட் பரிஷ்தா, டிரஸ்டி ஆகி இருந்தீர்கள் என்றால், எப்பொழுதும் லேசாக இருப்பீர்கள் சுத்தமான இதயம் இருந்தால் விரும்பியது கிடைக்கும் சிரேஷ்ட எண்ணங்களின் வெற்றி அவசியம் இருக்கும். ஒரு சிரேஷ்ட எண்ணம் குழந்தைகளினுடையது மேலும் ஆயிரம் சிரேஷ்ட எண்ணங்களின் பலன் தந்தை மூலமாகக் கிடைத்து விடுகிறது. ஒன்றிற்கு ஆயிரம் மடங்கு கிடைத்து விடுகிறது. இப்பொழுது தந்தையிடமிருந்து என்ன கஜானா கிடைத்திருக்கிறதோ, அதை அனைவருக்கும் கொடுத்துக் கொண்டே இருங்கள், மஹாதானி ஆகுங்கள், உங்களிடம் யார் வந்தாலும் காலியாகச் செல்லக் கூடாது. ஞானத்தின் ஆஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது, அந்த விதை தான் இப்பொழுது பழம் (பலன்) கொடுக்கும், நல்லது.

**விடைபெற்று செல்லும் நேரம்** அனைத்துக் குழந்தைகளுக்காக பாப்தாதா அன்பு நினைவுகளை ஒலி நாடாவில் பதிய வைத்தார். நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து அன்பிற்குரிய குழந்தைகளின் அன்பு நினைவுகளையும், வாழ்த்துக்களையும் பெற்றோம், பாப்தாதாவுடன் அனைத்துக் குழந்தைகளும் இதய சிம்மாசனதாரிகள், யார் இதயத்தில் இருக்கிறரோ அவரை எப்படி மறக்க முடியும்? எனவே எப்பொழுதும் குழந்தைகள் உடன் இருக்கிறார்கள், மேலும் உடன் தான் இருப்பார்கள், உடன் தான் செல்வார்கள், பாப்தாதா அனைத்து குழந்தைகளின் இதயத்தின் ஊக்கம், உற்சாகம் மேலும் சேவையில் ஏற்படும் வளர்ச்சி மற்றும் மாயாவை வென்றவர் ஆவதின் செய்தியை கேட்டுக் கொண்டே இருக்கிறார், ஒவ்வொரு குழந்தையும் மஹாவீர் மஹாவீரனாகி வெற்றிக் கொடியை பறக்க விட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே பாப்தாதா அனைவருக்கும் வெற்றிக்கான வாழ்த்துக்களைக் கொடுக்கிறார், பாராட்டுக்களைக்

கொடுக்கிறார், எப்பொழுதும் பெரிய தந்தையுடன் பெரியதிலும் பெரிய நாளை ஊக்கம் உற்சாகத்துடன் கழித்துக் கொண்டிருக்கிறீர்கள், மேலும் எப்பொழுதுமே பெரிய நாளை கொண்டாடிக் கொண்டே இருப்பீர்கள். விசேஷமாக என்னுடைய பெயரில் அன்பு நினைவு வந்தது என்று ஒவ்வொரு குழந்தையும் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் பெயரையும் சேர்த்து பாப்தாதா எதிரில் பார்த்துக் கொண்டே, சந்தித்துக் கொண்டே அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். நல்லது.

**வரதானம்: எல்லைக்கப்பாற்பட்ட வைராக்ய உள் உணர்வு மூலமாக என்னுடையது என்பதின் ராயல் ரூபத்தை அகற்றக் கூடிய விலகியிருக்கும் அன்பானவர் ஆகுக!**

நேரத்தின் அருகாமைக் கேற்றபடி தற்சமயத்து வாயுமண்டலத்தில் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்யம் பிரத்யக்ஷ ரூபத்தில் இருப்பது அவசியாமாகும். அனைத்து உறவு, தொடர்பில் எந்த அளவு
விலகி இருக்கிறீர்களோ அந்த அளவு அன்பாக இருப்பது என்பது தான் யதார்த்த வைராக்கிய உள்உணர்வின் அர்த்தமாகும், யார் விலகியும் அன்பாகவும் இருக்கிறாரோ அவர் ஒரு கருவியாகவும் பணிவாகவும் இருப்பார், அவரில் நான், நான், என்று என்பது இராயல் ரூபத்தில் அதிகரித்து விட்டது. இது என்னுடைய வேலை தான், இது என்னுடைய இடம் தான், எனக்கு இந்த அனைத்து சாதனங்களும் பாக்கியத்தின் அனுசாரம் கிடைத்திருக்கிறது.... என்று கூறுவார்கள். இப்பொழுது அந்த மாதிரியான இராயல் ரூபத்தின் நான், எனது என்பதை முடிவு கட்டுங்கள்.

**சுலோகன்: பரசிந்தனின் (மற்றவை, மற்றவர்களின் சிந்தனை) பிரபாவத்திலிருந்து விடுபட வேண்டும் என்றால் நல்ல சிந்தனை செய்யுங்கள் மேலும் நற்சிந்தனையாளர் ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.12.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்பொழுதும் ஒரே ரசனையில், சம்பூர்ணமாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம் ஆகுங்கள்!

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் பார்த்து ஒவ்வொரு குழந்தையின் தற்சமயத்து முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கும் நிலை மற்றும் எதிர்காலத்து பிராப்தியைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றார். என்னவாக இருந்தார்கள், என்னவாக ஆகியிருக்கிறார்கள் மேலும் எதிர்காலத்திலும் என்னவாக ஆகப் போகிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் உலகின் எதிரில் விஷேச ஆத்மா, ஒவ்வொருவரின் நெற்றியிலும் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறது. எப்பொழுதும் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தைப் பார்க்கிறேன் என்ற மாதிரியே பயிற்சி இருக்க வேண்டும். இந்தப் பயிற்சியை எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே இருங்கள், எங்கு பார்த்தாலும், எப்போதாவது, யாரைப் பார்த்தாலும், உடலைப் பார்த்தும் பார்க்காத மாதிரி இயற்கையான பயிற்சி இருக்க வேண்டும், எப்பொழுதும் பார்வை மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம் பக்கம் செல்ல வேண்டும். எப்பொழுது அந்த மாதிரி ஆன்மீகப் பார்வை எப்பொழுதும் இயற்கையான ரூபத்தில் ஆகி விடுமோ அப்பொழுது உலகின் பார்வை மின்னிக் கொண்டிருக்கும் பூமியின் நட்சத்திரங்களாகிய உங்கள் மீது செல்லும். இப்பொழுது உலகத்து ஆத்மாக்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள், ஏதோ சக்தி காரியம் செய்து கொண்டிருக்கிறது என்று அந்த மாதிரியான உணருதல், அந்த மாதிரியான டச்சிங் (பாபாவின் குறிப்பை உணருதல்) இப்பொழுது வரத் தொடங்கியிருக்கிறது ஆனால் எங்கே, யார் என்று தேடிக் கொண்டிருந்து தெரிந்து கொள்ள முடிவதில்லை, பாரதத்தின் மூலமாகத்தான் ஆன்மீக ஒளி கிடைக்கும் என்பதும் மெது மெதுவாக தெளிவாகிக் கொண்டே இருக்கிறது. இந்தக் காரணத்தினால் உலகின் நாலாபுறங்களிலிருந்தும்

பார்வை அகன்று பாரதத்தின் பக்கம் பதிந்து விட்டது, ஆனால் பாரதத்தில் எந்தப் பக்கம் மற்றும் யார் ஆன்மீக ஒளி கொடுப்பதற்குப் பொறுப்பாக இருக்கிறார்கள் என்பது இப்போது தெளிவாக வேண்டும், பாரதத்தில் அனேகர்கள் தங்களையே தானே ஆன்மீக ஆத்மாக்கள் என்று கூறிக் கொள்பவர்கள் இருக்கிறார்கள், இவர்களில் யார் தர்மாத்மா மற்றும் யார் பரமாத்மா என்ற தேடுதல் அனைவர் உள்ளத்திலும் இருக்கிறது, இவர் இல்லை, அவரும் இல்லையே .. என்று இதே யோசனையில் இருக்கிறார்கள். இதுவேதான் என்ற முடிவில் இதுவரை வந்து சேர முடியவில்லை, அந்த மாதிரி அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு சரியான இலக்கை, யதார்த்த புகலிடத்தை காண்பிப்பவர் யார்? நாங்கள் தான் அவர்கள் என்று இரட்டை வெளிநாட்டினர் நினைக்கிறார்கள், பிறகு பாவம் அவர்களை ஏன் இந்த அளவு அலைய வைக்கிறீர்கள்? நிரந்தரமாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தைப் பார்க்கும் மாதிரி உங்களுடைய நிலையை உருவாக்குங்கள். தூரத்திலிருந்தே உங்களுடைய மின்னிக் கொண்டிருக்கும் ஒளி தென் பட வேண்டும், இதுவரையிலும் யார் எதிரில் வருகிறாரோ, தொடர்பில் வருகிறாரோ அவர்களுக்கு அனுபவம் ஆகிறது, ஆனால் வெகு தூரம் வரை டச்சிங் (உணர்த்துதல்) ஆக வேண்டும், இந்த அலைகள் பரவ வேண்டும், அதில் இப்பொழுது இன்னும் பயிற்சி அவசியமாக இருக்கிறது. இப்பொழுது வாருங்கள், வந்து அனுபவம் செய்யுங்கள் என்று அழைப்பு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம், சூரியன், சந்திரனுக்கும் சமமாக தன்னுடைய சம்பூர்ண நிலையில் நிலைத்திருக்கும் என்றால், என்னவாகும். எப்படி ஸ்தூல வெளிச்சத்தை நோக்கி விட்டில் பூச்சிகள் தானாகவே வருகின்றன, ஒளி அழைப்பதற்காக செல்வதில்லை, ஆனால் தாகமுள்ள விட்டில் பூச்சிகள் தான் எங்கிருந்தாவது வந்து சேர்ந்து விடும், அதே போன்று மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் உங்களை நோக்கி அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்கள், தேடிக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் தானாகவே அடைவதற்காக, சந்திப்பதற்காக அந்த மாதிரி அதிவேகத்தில் வருவார்கள், அவர்களுக்கு நீங்கள் அனைவரும் ஒருநொடியில் தந்தை மூலமாக முக்தி, ஜீவன் முக்தியின் அதிகாரம் கொடுப்பதற்காக அதிவேகத்தில் சேவை செய்ய வேண்டியதாக இருக்கும், இந்த நேரம் மாஸ்டர் வள்ளலின் பங்கை செய்து கொண்டிருக்கிறீர்கள், மாஸ்டர் ஆசிரியரின் பங்கு நடந்து கொண்டிருக்கிறது ஆனால் இப்பொழுது

சத்குருவின் குழந்தையாகி கதி மற்றும் சத்கதிக்கு வரமளிக்கும் வள்ளலின் பங்கை செய்ய வேண்டும். மாஸ்டர் சத்குருவின் சொரூபம் என்ன என்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா? இப்பொழுதோ தந்தைக்கும், தந்தை மற்றும் ஆசிரியரின் பங்கு விஷேசமாக நடந்துக் கொண்டிருக்கிறது, எனவே குழந்தைகளின் ரூபத்தில் சில நேரம் தந்தைக்கும் குறும்புக் காரியங்களையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆசிரியரின் ரூபத்தில் அடிக்கடி ஒரே பாடத்தை நினைவூட்டிக் கொண்டே இருக்கிறார். சத்குருவின் ரூபத்தில் கதி-சத்கதியின் சான்றிதழ் இறுதி வரதானம் ஒரு நொடியில் கிடைக்கும்.

மாஸ்டர் சத்குருவின் சொரூபம் என்றால், முழுமையாகப் பின்பற்றி நடப்பவர், சத்குருவின் வாக்கியங்களின்படி எப்பொழுதும் முழுமையாக நடப்பவர் -அந்த மாதிரி சொரூபத்தை இப்பொழுது நடைமுறையில் தந்தையின் மற்றும் தன்னுடைய அனுபவம் செய்வீர்கள், சத்குருவின் சொரூபம் என்றால் சம்பன்னம் மற்றும் சமமாகி உடன் அழைத்துச் செல்பவர், சத்குருவின் சொரூபத்தில் மாஸ்டர் சத்குருவும் பார்வையாலேயே அனைத்தையும் நிறைந்தவர் ஆக்குபவர். வழி சொன்னார் மற்றும் கதி கிடைத்தது, எனவே குரு மந்திரம் பிரசித்தியானது, ஒரு நொடியில் மந்திரத்தை பெற்றார்கள். மேலும் கதி கிடைத்து விட்டது என்று நினைப்பார்கள். மந்திரம் என்றால் உயர்ந்த வழி, அந்த மாதிரி சக்திசாலி நிலையிலிருந்து ஸ்ரீமத் கொடுத்தீர்கள் என்றால், எனக்கு கதி, சத்கதிக்கான புகலிடம் கிடைத்து விட்டது என்று ஆத்மாக்களின் அனுபவம் செய்வார்கள். அந்த மாதிரி சக்திசாலி நிலையை இப்பொழுதிலிருந்தே உங்களுக்குள் கொண்டு வாருங்கள், அனைவருமே நட்சத்திரங்கள் தான், ஆனால் இப்பொழுது எப்பொழுதும் ஒரே (ஒருவரின்) ரசனையில் முழுமையாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம் நான் என்று தன்னை வெளிப்படுத்துங்கள், கேட்டீர்களா? என்ன செய்ய வேண்டும் என்று, இரட்டை வெளிநாட்டினர் அதிவேகமாக முன்னேறுபவர்கள் தான் இல்லையா? அல்லது நிற்கிறீர்கள், பிறகு செல்கிறீர்கள் என்று அப்படியா? எப்போதாவது மேகங்களின் நடுவே மறைந்து விடுவதில்லையே!. மேங்கள் வருகின்றனவா? அந்த மாதிரி முழுமையாக பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் ஆத்மா ஒருவேளை மேகங்களில் மறைந்து விடுகிறது என்றால், உலகின் ஆத்மாக்கள் தெளிவாக அனுபவம் செய்ய முடியாது. எனவே ஒரே சீராக இருப்பதின்,

எப்பொழுதும் சூரியனுக்கு சமமாக பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வையுங்கள். நல்லது.

அனைத்து இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு, மேலும் நாலாபுறங்களிலும் உள்ள சேவாதாரி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சம்மாக எண்ணம், சொல், மற்றும் செயலில் பின்பற்றி, நடக்கக் கூடிய, எப்பொழுதும் தந்தையின் இதய சிம்மாசனதாரி, மாஸ்டர் திலாராம், எப்பொழுதும் அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு வழி காட்டக்கூடிய லைட் ஹவுஸ் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: நைரோபி பார்ட்டி:** அனைவரும் பந்தயத்தில் நம்பர் ஒன் ஆக இருக்கிறீர்கள் இல்லையா? நம்பர் ஒன்-ன் அடையாளம் ஒவ்வொரு விஷயத்திலும் வின் (வெற்றி) ஆடைபவர், அதாவது ஒன் நம்பரில் வருபவர், எந்த விஷயத்திலும் தோல்வி இருக்க வேண்டாம், எப்பொழுதும் வெற்றியடைபவர். நைரோபியைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் வெற்றியடைபவர்கள் தான் இல்லையா! சில நேரம் சென்று கொண்டிருக்கும் போதே நின்று விடுவதில்லையே? நிற்பதற்கான காரணம் என்னவாக இருக்கிறது? அவசியம் ஏதாவது ஒரு மரியாதை மற்றும் நியமத்தை கடைப்பிடிப்பதில் ஏற்றம் இறக்கம் இருக்கிறது என்றால், வண்டி நின்று விடுகிறது, ஆனால் இந்த சங்கமயுகமே மரியாதா புருஷோத்தமன் ஆவதற்கான யுகம், ஆண் இல்லை, பெண் இல்லை ஆனால் புருஷோத்தமன் என்ற இந்த நினைவிலேயே எப்பொழுதும் இருங்கள். புருஷர்களில் (ஆண்களில்) உத்தம புருஷர் என்று பிரஜா பிதா பிரம்மாவைக் கூறுவோம். அப்போது பிரம்மாவின் குழந்தைகள் நீங்கள் அனைத்து பிரம்மா குமார், குமாரிகள் புருஷோத்தமர்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா? இந்த நினைவில் இருப்பதினால் எப்பொழுதும் பறக்கும் கலையில் சென்று கொண்டே இருப்பீர்கள், கீழே நிற்க மாட்டீர்கள், சென்றாலும் கூட எப்பொழுதும் பறந்து கொண்டே இருப்பீர்கள், ஏனென்றால் சங்கமயுகம் பறக்கும் கலைக்கான யுகம் மேலும் வேறு எந்த யுகத்திலும் பறக்கும் கலை இருப்பதில்லை, இந்த யுகம் பறக்கும் கலைக்கான யுகமாகும், பிராமணர்களின் கடமையும் பறப்பது மற்றும் பறக்க வைப்பது. உண்மையான நிலையும் பறக்கும் கலை, பறக்கும் கலையுள்ளவர், ஒரு நொடியில் அனைத்து பிரச்சனைகளையும் கடந்து

சென்று விடுவார். கீழேயுள்ள எந்த பொருளும் நிலைகுலைய வைக்காது. தடை ஏற்படுத்தாது. விமானத்தில் செல்கிறீர்கள் என்றால், இமயமலை கூட தடையாகி நிற்காது. மலையையும் பொழுது போக்கு மாதிரி கடந்து சென்று விடுவார். அதனால் பறக்கும் கலையுள்ளவர்களை பொறுத்தவரை மிகப் பெரிய பிரச்சனையும் சுலபமாகி விடும். நைரோபி தன்னுடைய வரிசை எண்ணை முன்னுக்கு பெறுகிறீர்கள் தான் இல்லையா? இப்பொழுது வி.ஐ.பிக்களின் சேவையில் வரிசை எண் முன்னுக்கு பெற வேண்டும். நல்ல எண்ணிக்கையில் வந்திருக்கிறீர்கள. இப்பொழுது இந்த மாநாட்டில் யார் யார் வி.ஐ.பி.களை அமைத்து வருகிறீர்கள் என்று பார்க்கலாம். இப்பொழுது இதில் நம்பர் பெற வேண்டும். அனைவரையும் விட நம்பர் ஒன் வி.ஐ.பி.யை அழைத்து வருகிறார்கள் என்ற இந்த பந்தயத்தை பாபத்ôதா பார்ப்பார்.

**புதிய ஹாலுக்காக ஓவியங்களை வரையும் ஓவியர்களுக்காக பாப்தாதாவின் சமிக்ஞை:** ஓவியர்களாகி ஓவியங்களை வரைந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது நீங்களே அந்த நிலையில் நிலைத்திருந்து ஓவியங்களை வரைகிறீர்களா? என்ன செய்கிறார்கள்? ஏனென்றால் வேறு எங்காவது ஓவியங்களை வரைகிறார்கள் என்றால், தொழில் செய்யும் ஓவியராகி, ஓவியத்தை வரைந்து விடுவார்கள். இங்கு ஒவியத்தை உருவாக்குவதற்கான இலட்சியம் என்ன? எப்படி தந்தையின் படத்தை வரைகிறீர்கள் என்றால், அதன் விசேஷம் என்ன இருக்க வேண்டும்? படம் சைதன்யமானவரை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்த) செய்ய வேண்டும். படத்தின் எதிரில் வந்த உடனேயே நான் படத்தை பார்க்கவில்லை, சைதன்யத்தை பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் செய்ய வேண்டும். பொதுவாக ஒவியத்தின் விசேஷமாக, ஒவியம் ஜடமாக இருந்த போதிலும் சைதன்யம் அனுபவம் ஆக வேண்டும். இதன் ஆதாரத்தில் பரிசு கிடைக்கிறது. அதிலேயும் பாவனை வேறு விதமானவையாக இருக்கும் ஆனால் ஆன்மீக ஒவியத்தின் லட்சியமாக, ஒவியம் தெய்வீகமாக ஆத்மாவைப் பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். ஆன்மீக தன்மையை அனுபவம் செய்விக்க வேண்டும். அந்த மாதிரி ஆன்மீக ஒவியராக இருக்க வேண்டும். உலகீய ஒவியராக வேண்டாம். உலகத்து ஒவியரோ உலகியல் விசயங்களை, கண் பாவத்தைப் பார்ப்பார்கள் ஆனால் இங்கு ஆன்மீகத்தின் அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரி ஒவியத்தை உருவாக்குங்கள். (உங்களுடைய ஆசீர்வாதம்

வேண்டும்) ஆசீர்வாதமோ, என்ன ஆசீர்வாதத்தின் சுரங்கத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள், கேட்பதற்கு அவசியம் இல்லை ஆனால் அதிகாரத்தை எடுத்துக் கொள்வதற்கான ஸ்தானம் எப்பொழுது ஆஸ்தியின் ரூபத்தில் பிராப்தி ஆக முடியும் என்றால், சிறிது ஆசீர்வாதம் ஏன்? சுரங்கத்திற்கு சென்று இரண்டு பிடி எடுத்து வருபவரை என்ன வென்று சொல்வது! தந்தை எப்படி அவரே கடலாக இருக்கிறார் என்றால், குழந்தைகளையும் மாஸ்டர் கடலாக ஆக்குவார் இல்லையா? கடலில் எதுவும் குறைவு இருக்காது எப்பொழுதும் நிரம்பி இருக்கும் நல்லது.

**சுவீடன் பார்ட்டியுடன் சந்திப்பு:** எப்பொழுதும் நிச்சயபுத்தி உடைய வெற்றி இரத்தினம் என்ற இந்த போதையில் இருங்கள். நிச்சயத்தின் அஸ்திவாரம் உறுதியாக இருக்கிறது. தன்மேல் நிச்சயம், தந்தை மேல் நிச்சயம் மேலும் நாடகத்தின் மீதான நிச்சயத்தின் ஆதாரத்தில் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். இப்பொழுது என்னென்ன விசேஷங்கள் இருக்கின்றனவோ அவற்றை எதிரில் வையுங்கள், பலவீனங்களை வைக்காதீர்கள். பிறகு உங்கள் மேலேயே உங்களுக்கு நம்பிக்கை வரும். பலஹீனமான விசயங்களை அதிகமாக யோசிக்கவில்லை என்றால் குஷியில் முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்கள். தந்தையின் கையை பிடித்திருக்கிறீர்கள், தந்தையின் கையை பிடிப்பவர்கள் எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்கள். தந்தையின் கையை பிடித்திருக்கிறீர்கள், தந்தையின் கையைப் பிடிப்பவர்கள் எப்பொழுதும் முன்னேறிச் செல்வார்கள் என்ற இந்த நிச்சயத்தை வையுங்கள். எப்பொழுது தந்தை சர்வசக்திவானாக இருக்கிறார் என்றால், அவருடைய கையைப் பிடிப்பவர்கள் இலட்சியத்தை அடைந்தே விடுவார்கள். அவர் பலஹீனமாக இருந்தாலும் கூட, உடன் இருப்பவரோ மிகவும் வலுவானவர் இல்லையா? எனவே சென்றடைந்தே விடுவார்கள். எப்பொழுதும் நிச்சய புத்தி வெற்றி இரத்தினம் என்ற இந்த நினைவிலேயே இருங்கள். கடந்ததைக் கடந்ததாக்கி, முற்றுப் புள்ளி இட்டு முன்னேறிச் செல்லுங்கள்.

(பூனாவைச் சேர்ந்த ஹர் தேவி சகோதரி வெளிநாடு செல்வதற்காக விடைபெற்றுக் கொண்டிருக்கிறார்). விசேஷ விதியாக என்ன இருக்கும்? பாலனையை பெற்றிருக்கிறீர்கள், அதே பாலனையைத் தான் அனைவருக்கும் வழங்க வேண்டும். அன்பு மற்றும் அமைதி என்ற இந்த

இரண்டு விசயங்கள் மூலமாக அனைவரையும் பாலனை செய்ய வேண்டும். அன்பு அனைவருக்கும் வேண்டும் மற்றும் அமைதியும் அனைவருக்கும் வேண்டும். இந்த இரண்டு பரிசுகளை அனைவருக்காகவும் கொண்டு செல்லுங்கள். அன்பாக திருஷ்டி மட்டும் கொடுத்தீர்கள் என்றால், பிறகு அவர்கள் இயல்பாகவே அருகிலும் வந்து கொண்டே இருப்பார்கள். எப்படி பாலனை பெற்றிருக்கிறீர்கள், பாலனையின் மிக அனுபவம் நிறைந்தவராக நீங்கள் இருக்கிறீர்கள் தான் இல்லையா? அதே பாலனையின் அனுபவத்தை மற்றவர்களுக்கு செய்விக்க வேண்டும். டாபிக்கின் மேல் (தலைப்பின்) சொற்பொழிவு செய்யாவிட்டாலும், அனைத்தையும் விட டாப் (உயர்ந்தது) ஆனது அன்பு மற்றும் அமைதியின் அனுபவம் ஆவது இந்த டாப் -ஆன இரண்டு விசயங்களைக் கொடுத்து விடுங்கள். அதன் மூலம் இந்த மாதிரி அன்போ எங்களுக்கு ஒருபொழுதும் கிடைக்கவில்லை, பார்க்கவே இல்லை என்று ஒவ்வொரு ஆத்மாவும் அனுபவம் செய்ய வேண்டும். அன்பு அந்த மாதிரியானது, அந்த அன்பின் அனுபவத்திற்குப் பின்னால் இயல்பாகவே இழுக்கப்படுவார்கள். மிகவும் நல்லது. அதி மஹாவீர் நீங்கள் செல்கிறீர்கள். சதி மற்றும் குஞ்ச் (2-பிற தாதிகள்) இருவர்களும் சென்றிருக்கிறீர்கள் தான் இல்லையா? பாலனையின் சொரூபமாக சென்று கொண்டிருக்கிறீர்கள். மிகவும் நல்லது! இவர்கள் மூலமாக சாகார பாபாவுடன் சுலபமாக சம்மந்தம் இணைந்து விடும். ஏனென்றால், இவரின் ஒவ்வொரு நரம்பிலும் சாகார பாபாவின் பாலனை நிரம்பியிருக்கிறது. எது உள்ளே நிரம்பியிருக்குமோ அது நடைமுறையில் தென்படத்தானே வேண்டும். உங்கள் மூலமாக தந்தையின் பாலனையின் அனுபவம் ஆகும். மிகவும் குஷியோடு செல்லுங்கள். குழந்தைகள் செல்வதில் பாப்தாதாவிற்கும் குஷி இருக்கிறது. ஏனென்றால், ஊர் சுற்றுபவர்கள் கிடையாது. யக்ஞத்திற்கு எலும்பு உருக சேவை செய்பவர்கள். அவர்களுடைய ஒவ்வொரு அடியிலும் சேவை இருக்கும், எனவே குழந்தைகள் சக்கரவர்த்தி ஆவதில் பாப்தாதாவிற்கு குஷி.

அனைத்துக் குழந்தைகளுக்காகவும் பாப்தாதா அன்பு நினைவுகளை ஒலி நாடாவில் பதிவு செய்தார். முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகளின் கூடவே பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் ஊக்கம், உற்சாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அனைவரின் அன்பு நினைவுகள் மேலும் முயற்சி செய்வதில் இருக்கும்

ஊக்கம் உற்சாகத்தின் மற்றும் தடைகளை அழிப்பவர் ஆவதின் கடிதங்கள் பாப்தாதாவிடம் வந்திருக்கின்றன. மேலும் பாப்தாதா அனைத்து தடைகளையும் அழிக்கும் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். மேலும் எப்பொழுதுமே மாயாவை வென்றவர், எப்பொழுதுமே மாஸ்டர் சர்வசக்திவான் என்ற ஆசனத்தில் அமர்ந்து டபுள் லைட் ஆகி பறந்து கொண்டும் மற்றும் பறக்க வைத்துக் கொண்டும் இருங்கள். ஆக நாலாபுறங்களிலும் உள்ள, வெளி நாட்டினருக்கு மட்டுமில்லை ஆனால் அனைத்து இதய சிம்மாசன தாரி குழந்தைகளுக்கு, திலாராம் தந்தையின் தரப்பிலிருந்து மிகுந்த அன்பு நினைவுகள் .... ஓம் சாந்தி

**வரதானம்: விலகியிருக்கும் நிலை மூலமாக மதிப்புடன் தேர்ச்சி பெற்றவர் என்ற சான்றிதழைப் பெறக் கூடிய அசரீரி ஆகுக!**

மதிப்புடன் தேர்ச்சி பெற்றவர் என்ற சான்றிதழைப் பெறுவதற்காக வாய் மற்றும் மனம் இரண்டின் சப்தத்திலிருந்து விலகி அமைதி சொரூப நிலையில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி வேண்டும். ஆத்மா அமைதியின் கடலில் மூழ்கி, விட வேண்டும். இந்த இனிமையான அமைதியின் அனுபவம் மிகவும் பிரியமானதாக இருக்கும். உடல் மற்றும் மனதிற்கு ஒய்வு கிடைத்து விடுகிறது. இறுதி நேரத்தில் இந்த அசரீரி ஆவதின் பயிற்சி தான் உபயோகமாக இருக்கும். உடலின் எந்த ஒரு செயல் நடந்து கொண்டிருந்தாலும், அசரீரி ஆகி ஆத்மா விலகியிருந்து தன்னுடைய உடல் செய்யும் செயலை பார்க்கும் இந்தப் பயிற்சி தான், இந்த நிலைதான் இறுதியில் வெற்றி அடைபவர் ஆக்கி விடும்.

**சுலோகன்: அனைத்து குணங்கள் மற்றும் அனைத்து சக்திகளின் அதிகாரத்தையும் பெறுவதற்காக கட்டளைப்படி நடப்பவர் ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.1982 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் அனைத்து ஆன்மீக நண்பர்களுக்கு வாழ்த்துக்கள்!

இன்று அனைத்து பிராமண ஆத்மாக்களின் மனதின் அன்பிற்குரியவர், இதயத்தின் பாடல், அன்பின் உறவின் கடமையைச் செய்வதற்காக அதிசயமான முறையில் ஆன்மீக ரோஜா மலர்களின் தோட்டத்தில் மற்றும் அல்லா தனனுடைய பூந்தோட்டத்தில் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். பொதுவாகவே அன்பிற்குரியவர் என்று சொன்னாலும் சரி அல்லது நண்பன் என்று சொன்னாலும் சரி, தோட்டத்தில் சந்திப்பை செய்வார்கள். அந்த மாதிரியான தோட்டம் முழுக்கல்பத்திலும் கிடைக்க முடியாது. இன்று நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகள் நாங்களும் எங்களது மனதின் அன்பிற்குரியவருடன் புது வருடப் பிறப்பு நாளைக் கொண்டாடுவோம் என்ற இந்த ஒரே ஒரு ஆர்வத்தில் இருக்கிறார்கள், பாப்தாதா இன்று உடல் சொரூபத்தில் எதிரில் அமர்ந்திருக்கும் ஆன்மீக நண்பர்களுடன் மட்டும் சந்திப்பு செய்யவில்லை, ஆனால் பௌதீக சபையை விட ஒளிவடிவ ரூபமுள்ள குழந்தைகளின் மற்றும் மனதின் அன்பிற்குரிய ஆத்மாக்களின் மிகப் பெரிய சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார். இத்தனை ஆன்மீக நண்பர்கள், உண்மையான நண்பர்கள் வேறு யாருக்காவது இருப்பார்களா? பாப்தாதாவிற்கும், இந்த மாதிரி மற்றும் இத்தனை நண்பர்கள் யாருக்கும் கிடைக்கவும் இல்லை, கிடைக்கவும் மாட்டார்கள் என்று ஆன்மீகப் பெருமிதம் இருக்கிறது, அனைவரின் இதயத்தின் பாடல் தூரத்திலிருந்தும் மற்றும் அருகாமையிலும் கேட்கிறது. எந்தப் பாடல்? ஓ பாபா! என்ற இதே பாபா, பாபா என்ற பாடல் ஒரே ஒரு இசை மற்றும் இரகசியதோடு நாலாபுறங்களிலிருந்து கேட்க முடிகிறது. குழந்தை என்று சொன்னாலும் சரி அல்லது நண்பர்கள் என்று சொன்னாலும் சரி, அனைவருக்கும் ஒரே வார்த்தை தான் நீங்கள் தான் என்னுடையவர் மேலும் இறைவன் நண்பனும் ஒவ்வொருவருக்கும் நீ என்னுடையவன் என்ற இதைத் தான் கூறுகிறார். ஆஹா என்னுடைய நண்பர்களே பாடல் பாடுங்கள் (சகோதரிகள் பிரம்மாபாபாவிற்கு பிடித்த பாடலை

பாடினார்கள். நீதான் என்னுடைய.....). இந்த வாயினால் பாடும் பாடலையோ கொஞ்ச நேரம் பாட முடியும், ஆனால் மனதின் பாடலோ அழியாது ஒலித்துக் கொண்டே இருக்கும். இன்று புது வருட நாளன்று அனேக குழந்தைகளின் மிக நல்ல எண்ணம், அன்பான வார்த்தைகள் பாப்தாதாவிடம் முன்பே வந்து சேர்ந்து விட்டது. இன்றைய தினம் குஷியாக கொண்டாடுவீர்கள் இல்லையா! ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்கள் கூறுகிறீர்கள். பாப்தாதாவும் அனைத்து மனதிற்குப் பிடித்தமான ஆன்மீக நண்பர்களுக்கு வாழ்த்துக்கள் கூறுகிறார்.

எப்பொழுதும் விதி மூலமாக வளர்ச்சியை அடைந்து கொண்டே இருப்பீர்கள், எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பி இருப்பீர்கள். எப்பொழுதும் ஃபரிஷ்தாவாகி அனைத்து உடலின் உறவு களிலிருந்து விலகி, பறந்து கொண்டே இருப்பீர்கள். எப்பொழுதும் கண்களில், இதயத்தில் தந்தையை நிரப்பி ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த முழு ஈடுபாட்டில் மூழ்கி இருப்பீர்கள். எப்பொழுதும் வந்திருக்கும் சோதனைகளை, பிரச்சனைகளை, வீணான எண்ணங்களை தண்ணீரில் கிழித்த கோட்டிற்கு சமமாகக் கடந்து சென்று மதிப்புடன் தேர்ச்சி பெறுப்வர் ஆவீர்கள். அந்த மாதிரி சிரேஷ்ட சுப விருப்பங்களுடன் வாழ்த்துக்கள் கொடுக்கிறோம். ஒவ்வொரு விலைமதிக்க முடியாத இரத்தினத்தின் பாடலை பாடுகின்றோம். இன்றைய நாளில் பாடுவீர்கள், ஆடுவீர்கள் இல்லையா! இன்று மட்டுமல்ல எப்பொழுதும் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் இருங்கள், எப்பொழுதும் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆன்மீக பரிசு கொடுத்துக் கொண்டே இருங்கள். எப்படி பெரிய மனிதர்கள் எங்காவது செல்கிறார்கள் மற்றும் அவர்களிடம் யாராவது வருகிறார் என்றால் வெறும் கையோடு செல்ல மாட்டார்கள். நீங்கள் அனைவரும் மிகப் பெரியவர்கள் தான் இல்லையா! ஒருபொழுதும் எந்த ஒரு பிராமண ஆத்மாவுடன் மற்றும் யாருடனாவது சந்திக்கிறீர்கள் என்றால் ஏதாவது கொடுக்காமல் எப்படி சந்திப்பீர்கள்? ஒவ்வொருவருக்கும் சுபபாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பங்களின் பரிசைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். விசேஷத் தன்மையை கொடுங்கள், பெறுங்கள், குணத்தைக் கொடுங்கள் மற்றும் பெறுங்கள், அப்படிப்பட்ட காட்லி கிஃப்டை அனைவருக்கும் கொடுத்துக் கொண்டே இருங்கள். யாரேனும் எந்த பாவனையுடனோ, விருப்பத்துடனோ வந்திருக்கலாம், ஆனால் நீங்கள்

சுபபாவனை என்றா பரிசைக் கொடுங்கள். சுபபாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பங்களின் பரிசின் கையிருப்பு எப்பொழுதும் நிரம்பியிருக்கட்டும், இருந்தும் எதுவரை தான் சுபபாவனையுடன் பார்ப்பது என்பது எண்ணத்தின் அளவில் கூட உருவாக வேண்டாம். எதற்கும் ஒரு அளவு இருக்கிறதா அல்லது இல்லையா! இந்த எண்ணம் கூட இந்த தங்கப் பரிசின் கையிருப்பு சேமிப்பாகவில்லை என்று நிரூபிக்கிறது.

நீங்கள் வள்ளல், உருவாக்குபவர், வரமளிக்கும் வள்ளலின் குழந்தைகள், பாக்கிய ரேகையை இழுக்கக்கூடிய பிரம்மாவின் குழந்தைகள் பிரம்மாகுமார் மற்றும் பிரம்மா குமாரிகள் எனவே எப்பொழுதும் களஞ்சியம் நிரம்பி இருக்கட்டும். இந்த வருடம் யாரையும் காலியாக இருக்க விடாதீர்கள். வெறுங்கையோடு செல்லவும் கூடாது, வெறுங்கையோடு வரவும் கூடாது. அனைவருக்கும் கொடுக்கவும் வேண்டும். அனைவரிடமிருந்து பெறவும் வேண்டும். இது பரிசை வழங்குவதற்கான வருடம், ஒரு நாள் மட்டுமல்ல, ஆனால் முழு வருடமும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரத்திலும், ஒவ்வொரு விநாடி, கடந்து சென்ற ஒவ்வொரு எண்ணத்திலும் புதுமையை கொண்டு வருபவர்கள் நீங்கள். புதுநாள், புது இரவு என்றோ அனைவரும் கூறுகிறார்கள், ஆனால் சிரேஷ்ட ஆத்மாக்களின் புதிய விநாடி, புதிய எண்ணம் எப்பொழுது இருக்கும் என்றால் வரக்கூடிய புது உலகத்தின் புதுப் பொலிவு உலகத்து ஆத்மாக்களுக்கு கனவு ரூபத்தில் அல்லது காட்சியின் ரூபத்தில் தென்படுமோ, அப்பொழுது தான் இதுவரையிலும் உலகின் ஆத்மாக்களும், விநாஷத்திற்கு பிறகு என்னவாகும்? என்பதை இப்போது வரை உலக ஆத்மாக்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றனர், ஆனால் இந்த வருடம் அனைத்து ஆதார சொரூப ஆத்மாகளின் ஒவ்வொரு விநாடி மற்றும் ஒவ்வொரு எண்ணம் புதியதிலும் புதியதாக, உயர்ந்ததிலும் உயர்ந்ததாக, நல்லதிலும் நல்லதாக இருந்தது என்றால், நாலாபுறங்களிலிருந்து புது உலகின் பொலிவை பார்ப்பதற்கான செய்தி பரவும், மேலும் என்னவாகும் என்பதற்கு பதிலாக இப்படி ஆகும், அந்த மாதிரி அதிசயமான உலகம் விரைவில் வரட்டும், மேலும் விரைவில் உருவாக்க வேண்டும் என்பதில் ஈடுபட்டு விடுவார்கள். எப்படி ஸ்தாபனையின் தொடக்கத்தில் கனவு மற்றும் சாட்சாத்காரத்தின் லீலை விசேஷமாக இருந்தது. அதேபோல் இறுதியிலும் இதே விசித்திர வீலை பிரத்யக்ஷம் செய்வதற்குக் காரணமாகும். நாலாபுறங்களிலிருந்து

இதுவே தான், இதுவே தான் என்ற இதே ஓசை ஒலிக்கும், மேலும் இந்த ஓசை அனேகர்களின் பாக்கியத்தை சிரேஷ்டம் ஆக்குவதற்குப் பொறுப்பாகும். ஒன்றிலிருந்து அனேக தீபங்கள் எரிந்து விடும். அப்படியானால் இந்த வருடம் என்ன செய்ய வேண்டும்? உண்மையான தீபாவளியைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பழைய விஷயங்களின், பழைய சம்ஸ்காரத்தின் தசரா கொண்டாடுங்கள். ஏனென்றால் தசராவிற்குப் பிறகு தான் தீபாவளி இருக்கும். இன்று மனதின் பிரியமானவர் ஆத்மாக்களுடன் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார். மனதின் உள்ள விஷயங்களை யாரோடு பேசுவார்கள்? நண்பர்களோடு பேசுவார்கள் இல்லையா! நல்லது. வாழ்த்துக்களோ கிடைத்து விட்டது. வாழ்த்துக்களின் கூடவே புது வருடத்திற்கான பரிசையும் எப்பொழுதும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். எத்தனை பரிசுகள் வேண்டும்? ஒன்று, ஒன்றில் அதிகம் நிரம்பியிருக்கிறது, மேலும் அனேகமும் ஒன்று, மிக நல்ல பரிசாக ஒன்றோ பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் வைர சாவி கொடுத்திருகிறார், அதன் மூலம் எந்த பொக்கிஷம் விரும்புகிறீர்களோ, அது ஆஜராகி விடும், வைர சாவி எது? ஒரே ஒரு வார்த்தை பாபா இதை விட அழகான சாவி ஏதாவது கிடைக்குமா? சத்யுகத்திலும் இந்த மாதிரி சாவி கிடைக்காது. அனைவரும் இந்த வைர சாவியை பத்திரமாக வைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா! திருட்டு போய் விடவில்லையே? சாவியைத் தொலைத்தீர்கள் என்றால் அனைத்து பொக்கிஷங்களையும் தொலைத்தீர்கள், எனவே சாவியை எப்பொழுதும் உங்கள் கூடவே வைத்துக் கொள்ளுங்கள். சாவி வளையம் (கீ செயின்) இருக்கிறதா? அல்லது தனியாக சாவி மட்டும் இருக்கிறதா? எப்பொழுதும் அனைத்து சம்பந்தங்களினால் நினைவு சொரூபமாகி இருங்கள். அந்த மாதிரி கீ செயினின் பரிசு கிடைத்திருக்கிறது இல்லையா! மிக நல்ல பரிசோ இந்த பரிசு கிடைத் திருக்கிறது இல்லையா! மிக அழகான பரிசோ இந்த சாவி. அதன் கூடவே இந்த வருடத்திற்காக உறுதிமொழி என்ற கங்கணமும் கொடுக்கிறோம். இந்த உறுதிமொழி கங்கணம் எது? ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா! ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு ஆத்மாவின் தொடர்பில் எப்பொழுதும் புதியதிலும் புதியது. அதாவது உயர்ந்ததிலும் உயர்ந்தது. கீழே உள்ள விஷயங்களைப் பார்க்காதீர்கள். கீழான நிலையையும் வைத்துக் கொள்ள கூடாது. எப்பொழுதும் உயர்ந்த நிலையிலிருப்பது, உயர்ந்த தந்தை, உயர்ந்த

குழந்தைகள், உயர்ந்த நிலை மேலும் அனைவருக்கும் உயர்ந்ததிலும் உயர்ந்த சேவை செய்ய வேண்டும், இது தான் உறுதி மொழி என்ற கங்கணம். கூடவே அனைத்து குணங்களின் அலங்காரப் பெட்டகம், வகை வகையான செட்டின் அலங்கார பெட்டகம், எந்த நேரம் எந்த அலங்காரம் வேண்டுமோ, அந்த நேரம் அதே செட்டில் அலங்காரம் செய்து எப்போதும் அலங்காரத்துடன் இருக்க வேண்டும். சிலநேரம் சகித்துக் கொள்ளும் சக்தியின் செட் அணியுங்கள் ஆனால் முழு செட்டையும் அணிய வேண்டும். செட்டை மட்டும் அணியாதீர்கள், காதுகள் மூலமாகவும் சகிப்புத் தன்மை இருக்கட்டும், கைகள் மூலமாகவும் சகிப்புத் தன்மையின் அலங்காரம் இருக்க வேண்டும், அந்த மாதிரி அவ்வப்போது விதவிதமான அலங்காரம் செய்து கொண்டு உலகின் எதிரில் ஃபரிஷ்தா ரூபத்தில் மற்றும் தேவதை ரூபத்தில் வெளிப்பட்டு விடுவீர்கள், இந்த திரிமூர்த்தி பரிசை எப்பொழுதும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

நட்பை வைத்து நடந்து கொள்ளத் தெரியும் இல்லையா! இரட்டை வெளிநாட்டினரோ, நண்பர்களை மிக நன்றாக உருவாக்குகிறார்கள், ஆனால் அழியாத நட்பை வைத்துக் கொள்ளுங்கள், இரட்டை வெளிநாட்டினர் விடுவதிலும் திறமைசாலிகள், உருவாக்குவதிலும் திறமைசாலிகள். இப்பொழுது இருக்கிறது, மேலும் அடுத்த நேரம் இல்லை என்று அப்படியோ செய்ய மாட்டீர்கள் இல்லையா! பாப்தாதா இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளைப் பார்த்து, எப்படி சமிக்ஞை கிடைத்த உடனேயே நான்கு மூலைகளிலிருந்து அறிமுகம் செய்து விட்டார்கள், தந்தையைத் குழந்தைகளை தேடினார். மேலும் குழந்தைகள் அறிந்து கொண்டனர். இந்த விசேஷத்தன்மையைப் பார்த்து பாப்தாதாவும் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். எனவே எப்பொழுதும் மாயாவை வென்றவராக இருங்கள். நல்லது.

அந்த மாதிரி தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, அழியாத அன்பின் உறவை வைத்து நடந்து கொள்ளக் கூடிய அழியாத நண்பர்களுக்கு, எப்பொழுதும் மலர்களின் தோட்டத்தில் கையோடு கை கோர்த்து துணைவியாகி மெதுவாக நடந்து சுற்றி வரக்கூடிய, எப்பொழுதும் ஈஸ்வரிய பொன்னான பரிசை காரியத்தில் கொண்டு வரக்கூடிய எப்பொழுதும் நிரம்பிய, எப்பொழுதும் மாஸ்டர் வள்ளல், மாஸ்டர் அனைவரின் பாக்கியத்தை உருவாக்கக்கூடிய,

நாலாபுறங்களிலும் உள்ள அந்த மாதிரி அன்பிற்குரிய சகயோகிக் குழந்தைகளுக்கு, சாகாரி (பௌதீக உடல்) மற்றும் ஆகாரி (ஒளி வடிவமான உடல்) ரூபமுடைய குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வெளிநாட்டு டீச்சர்களுடன் சந்திப்பு:** பொறுப்பிலிருக்கும் ஆசிரியர்களைப் பார்த்து பாப்தாதா மிகவும் மகிழ்ச்சியடைகிறார், எவ்வளவு ஈடுபாட்டுடன், அன்புடன் அவரவர்களின் ஸ்தானத்தில் இருந்து கொண்டே அனைவரும் எப்பொழுதும் சக்தி சொரூப நிலையில் நிலைத்திருந்து அனைத்து சக்திகளின் அனுபவத்தை செய்வித்துக் கொண்டே இருக்கின்றனர். இப்பொழுது சாதாரண பெண் மற்றும் குமாரி ரூபம் இல்லை, ஆனால் சர்வ சிரேஷ்ட சேவாதாரி ஆத்மாக்கள். நீங்கள் பாப்தாதாவின் அழகு பெட்டகத்திலிருக்கும் அழகுப் பொருட்கள், உங்கள் அனைவரையும் பார்த்து அனைத்து ஆத்மாக்களும் தந்தையைத் தெரிந்து கொள்கிறார்கள், ஒவ்வொரு பொறுப்பிலிருக்கும் ஆசிரியரின் மேல், உலக மாற்றம் செய்வதற்கான பொறுப்பு இருக்கிறது. நான் எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரி என்று தன்னை நினைக்கிறீர்களா? ஒரு பிரதேசத்திற்கு நன்மை செய்பவர் என்றோ நினைக்கவில்லையே? ஒரு ஸ்தானத்தில் அமர்ந்திருந்தாலும் கூட, நீங்களோ லைட் ஹவுஸ் இல்லையா! நாலாபுறங்களிலும் லைட் (ஒளி) கொடுப்பவர், எனவே சின்னஞ்சிறு பல்பாகி ஒரு இடத்திற்கு மட்டும் வெளிச்சம் கொடுக்கிறீர்களா அல்லது லைட் ஹவுஸ் ஆகி உலகிற்கு வெளிச்சம் கொடுக்கிறீர்களா? நீங்கள் சாதாரண லைட்டா, மிகவும் சக்திசாலியான லைட்டா அல்ல லைட் ஹவுஸா? தைரியமோ மிக நன்றாக வைத்திருக்கிறீர்கள். மிக நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள், வரும் நாட்களிலும் மிக நன்றாக செய்து கொண்டே இருங்கள். டீச்சர்களோ, எப்பொழுதும் மாயவை வென்றவர்கள் தான் இல்லையா? ஒருவேளை டீச்சர்களிடம் மாயா வருகிறது என்றால் மாணவர்களின் நிலைமை என்னாவாகும்? உங்களிடம் ஒரு தடவை மாயா வருகிறது என்றால் அவர்களிடம் 10-தடவை வரும். எனவே டீச்சர்களிடம் மாயா அந்த மாதிரி வர வேண்டாம், நமஸ்காரம் செய்வதற்கு வரட்டும். பொறுப்பிலிருக்கும் ஆசிரியர்களின் சொரூபம் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த, மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இருக்கையில் எப்பொழுதும் அமர்ந்து இருங்கள். டீச்சர்கள் இருக்க வேண்டிய இடமே உயர்ந்த நிலை. சென்டரில்

இருக்கவில்லை, ஆனால் உயர்ந்த மேடையில் இருக்கிறீர்கள். உயர்ந்த மேடை என்றால் இதய சிம்மாசனத்தில் மாயா வரமுடியாது, கீழே இறங்கினீர்கள் என்றால், மாயா வரும், பாண்டவர்களும் பாப்தாதாவின் சகயோகி வலது கரம் தான் இல்லையா! கதியை (அமரும் ஸ்தானம்) கவனித்துக் கொள்பவருக்கு வலது கரம் என்று கூறப்படுகிறது. அனைத்து பாண்டவர்களும் வெற்றியடைந்தவர்கள் தான் இல்லையா! இதுவரையிலும் மாயாவுடன் அதிக காலம் விளையாட்டு விளையாடினீர்கள். இப்பொழுது விடை கொடுங்கள். இன்றிலிருந்து நிரந்தரமாக விடை கொடுத்ததின் வாழ்த்துக்களைக் கொண்டாடுங்கள். மிக நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது, மேலும் வாய்ப்பை எடுத்துக் கொண்டும் இருக்கிறீர்கள், நல்லது.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய பாக்கியத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார், சங்கமயுகத்தில் ஒவ்வொரு ஆத்மாவின் பாக்கியம் அவரவர்களுடையது. மேலும் ஒவ்வொரு குழந்தைக்கும் சிரேஷ்ட பாக்கியம் இருக்கிறது, ஏன்? ஏனென்றால் எப்பொழுது சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமான தந்தையின் குழந்தை ஆகியிருக்கிறீர்கள் என்றால் சிரேஷ்ட பாக்கியம் ஆகி விட்டது இல்லையா! இதை விட எந்த தந்தையும் சிரேஷ்டமானவர், இல்லை, இதை விட எந்த பாக்கியமும் சிரேஷ்டமானது, இல்லை, உயர்ந்திலும் உயர்ந்தவர் தந்தை. பாக்கியத்தை உருவாக்குபவர் எனது தந்தை என்ற இதே நினைவு இருக்கிறது தான் இல்லையா! இதை விடப் பெரிய போதை வேறு என்ன இருக்க முடியும்? உலகியல் முறையில் என்னுடைய தந்தை இஞ்சினியர், டாக்டர், நீதிபதி அல்லது பிரதம மந்திரி என்று குழந்தை களுக்கு போதை இருக்கிறது, ஆனால் உங்களுக்கு என்னுடைய தந்தை பாக்கியத்தை உருவாக்குபவர் என்ற போதை இருக்கிறது, உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான், இதே போதை எப்பொழுதும் இருக்கிறதா அல்லது எப்போதாவது மறந்து விடுகிறதா? பாக்கியத்தை மறந்தீர்கள் என்றால், என்னவாகும்? பிறகு பாக்கியத்தை அடைவதற்கு பிரயத்தனம் செய்ய வேண்டியதாக இருக்கும், தொலைந்து போன பொருளை அடைவதற்கு கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. தந்தை வந்து கடின முயற்சி செய்வதிலிருந்து காப்பாற்றியிருக்கிறார், அரைக்கல்பம் கடின உழைப்பு செய்தீர்கள்.

விவஹாரத்திலும் உழைப்பு. பக்தியில், தர்மத்தின் க்ஷேத்திரத்தில் அனைத்திலும் கடின உழைப்பு தான் செய்தீர்கள். மேலும் இப்பொழுது அனைத்து உழைப்பிலிருந்து விடுபட்டு விட்டீர்கள், இப்பொழுது விவஹாரம் பரமாத்ம காரியத்தின் ஆதாரத்தில் சுலபமாகி விட்டது. நிமித்தமாகி செய்து கொண்டிருக்கிறீர்கள். கருவி என்று புரிந்து செய்பவர்களுக்கு எப்பொழுதுமே எளிதாக அனுபவம் ஆகும். விவஹாரம் அல்ல, ஆனால் ஒரு விளையாட்டு, மாயாவின் புயல் அல்ல, ஆனால் இது நாடகத்தின் அனுசாரம் முன்னேறிச் செல்வதற்கான பரிசு, எனவே உழைப்பது விடுபட்டு விட்டது இல்லையா! புயல் அதாவது பரிசைப் பெறுவதிலோ முயற்சியோ, உழைப்போ இருப்பதில்லை தான் இல்லையா! அந்த மாதிரி கடின உழைப்பிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய, எப்பொழுதும் பாக்கியத்தை உருவாக்குபவர் என்பதன் கூடவே மாஸ்டர் பாக்கியத்தை உருவாக்குபவர் ஆகி இருப்பவர், இவரைத் தான் சிரேஷ்ட ஆத்மா என்று கூறுவது.

**சென் ஆண்டானியா தேசத்தை சேர்ந்தவர்களுடன் சந்திப்பு:**
அனைவரும் தன்னை விசேஷ ஆத்மா என்று நினைக்கிறீர்களா? எந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள்? நேரில் சந்திப்பு செய்யும் அளவிற்கான பாக்கியம் உலகத்தில் எத்தனை ஆத்மாக்களுக்கு கிடைக்கும். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இதை விட பெரிய பாக்கியம் வேறு என்ன வேண்டும்? எப்பொழுதும் தன்னுடைய இதே பாக்கியத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால் உங்களுடைய பாக்கியத்தின் (ப்ராப்தியின்) குஷியைப் பார்த்து இன்னும் அருகில் வருவார்கள், மேலும் தன்னுடைய பாக்கியத்தை உருவாக்குவார்கள். எப்பொழுதும் குஷியாக இருங்கள். தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறீர்கள் என்றால், ஆஸ்தியாக என்ன கிடைத்தது? குஷி கிடைத்தது இல்லையா! எனவே இந்த ஆஸ்தியை எப்பொழுதும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். விட்டுச் செல்லாதீர்கள். குஷியின் பொக்கிஷத்தின் எஜமானன் ஆகி விட்டீர்கள் என்றால், எப்பொழுதுமே குஷியில் பறந்து கொண்டே இருக்க வேண்டும். இதில் ட்ரை (முயற்சி) செய்வதற்கான விசயமே இல்லை. ஒருவேளை முயற்சி என்று கூறினால் அழுது கொண்டே இருப்பீர்கள், குழந்தை ஆவதிலும் முயற்சி செய்ய வேண்டியது இருக்கிறதா என்ன? எனவே முயற்சி என்பதும் வேண்டாம். அழுவதும் வேண்டாம், முயற்சி செய்வோம் என்ற வார்த்தையை இங்கே

விட்டு விட்டுச் செல்லுங்கள். தந்தை மற்றும் ஆஸ்தி எப்பொழுதும் உங்கள் கூடவே இருக்கட்டும். இணைந்து இருங்கள். எங்கு தந்தை இருக்கிறாரோ, அங்கு அனைத்து பொக்கிஷங்களும் தானாகவே இருக்கும். தந்தை என்னுடன் இருக்கிறார் என்ற இந்த ஒரு விஷயத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். ஆஸ்தி என்னுடைய பிறப்புரிமை.

**புது வருடத்திற்கான வாழ்த்துக்கள் (இரவு 12மணி):** புது வருடத்தின் அனைத்து குழந்தைகளுக்கும் முழு வருடத்திற்காக வாழ்த்துக்கள் உரித்தாகுக! அந்த மாதிரி விலை மதிக்க முடியாத இரத்தினங்கள் யாரெல்லாம் தந்தையை தெரிந்து கொண்டார்களோ, மேலும் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான பொறுப்பு கிரீடத்தை அணிந்திருக்கிறார்களோ, அந்த மாதிரி நிரந்தர சேவாதாரி, நெருக்கமான, கீரிடம் அணிந்த சிம்மாசனதாரிக் குழந்தைகளுக்கு அவரவர்களின் பெயரோடு சேர்த்து வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுங்கள்!

லண்டனில் இருப்பவர்களுக்கு பொறுப்பாளராக இருக்கும் ஜனக் (ஜானகி தாதி) குழந்தை, மேலும் கூடவே ஆதி இரத்தினம் ரஜனி குழந்தை, உடன் முரளி குழந்தை மற்றும் மிக அதிக அன்பிற்குரிய சிறு குழந்தை போன்ற தந்தைக்கு சமமான ஜெயந்தி குழந்தைக்கு, மேலும் கூடவே எந்தெந்த குழந்தைகள் சேவையில் இருக்கிறார்கள், எப்படி பிரிஜ்ராணி தன்னுடைய வெளிப்பாட்டை நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள், என்ன சேவை செய்து கொண்டிருக்கிறார்களோ, அதில் ஆன்மீகம் நிரம்பியிருக்கிறது, அந்த மாதிரி அனைத்து குழந்தைகளும் அவரவர்களின் பெயரோடு கூறி வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுங்கள். புது வருடம், புது உலகம், புது உற்சாகம் மற்றும் இந்த வருடத்தில் எப்பொழுதுமே தினசரி உற்சவம் என்று புரிந்து உற்சாகம் கொடுத்துக் கொண்டே இருங்கள். இதே சேவையில் எப்பொழுதும் ஈடுபட்டு இருங்கள். நல்லது.

அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் இதயப் பூர்வமான, உயிருக்கும் மேலான அன்பு நினைவுகள் உரித்தாகுக.

**வரதானம்: வாய்மொழியின் கூடவே உள் உணர்வு மூலமாக ஆன்மீக எண்ண அலைகளைப் பரப்பும் சேவை செய்யக் கூடிய இரட்டை சேவாதாரி ஆகுக!**

எப்படி வாய்மொழி மூலமாக சேவை செய்கிறீர்கள், அதேபோல் வாய்மொழியின் கூடவே உள் உணர்வு மூலமாக சேவை செய்தீர்கள் என்றால் வேகமாக சேவை நடக்கும், ஏனென்றால் கேட்ட வார்த்தையை தேவையான நேரத்தில் மறந்து விடுவார்கள், ஆனால் எண்ண அலைகள் ரூபத்தில் மனம் மற்றும் புத்தியில் முத்திரை இடப் பட்டு விடுகிறது. எனவே இந்த சேவை செய்வதற்காக உள் உணர்வில் யாருக்காகவும் வீணான எண்ண அலைகள், இருக்கக்கூடாது. வீணான எண் அலைகள் ஆன்மீக எண்ண அலைகள் முன்பு ஒரு சுவர் ஆகி விடுகிறது. எனவே மனம் புத்தியை வீணான எண்ண அலைகளிலிருந்து விடுவித்து வையுங்கள். அப்பொழுதுதான் இரட்டை சேவை செய்ய முடியும்.

**சுலோகன்: முறையீடு செய்வதற்குப் பதிலாக நினைவில் இருந்தீர்கள் என்றால் அனைத்து அதிகாரமும் கிடைத்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# கேள்வி பதில்

**கேள்வி: பாபாவுடன் நாம் குழந்தைகளும் உலகைச் சுற்றி வலம் வர எப்படிச் செல்ல முடியும்?**

பதில்: இதற்காக தந்தைக்குச் சமமாக உலகிற்கு நன்மை செய்பவரின் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருந்தீர்கள் என்றால், எப்படி ஸ்ரீகிருஷ்ணன் பூமி உருண்டையின் மேல் அமர்ந்திருக்கிறார் என்று காண்பிக்கிறார்கள், அதே போல் நானும் பூமி உருண்டை மேல் அமர்ந்திருக்கிறேன் என்று அனுபவம் செய்வீர்கள். அப்போது இயல்பாகவே உலகைச் சுற்றி வருவது ஆகி விடும். எப்படி மிக உயர்ந்த ஸ்தானத்திற்குச் சென்று விட்டீர்கள் என்றால், சுற்றி வர வேண்டியதிருக்காது ஆனால் ஒரு இடத்தில் இருந்து கொண்டே அனைத்தும் தென்படும், அதே போல் எப்பொழுது உயர்வான நிலையில், விதை ரூப நிலையில், உலகிற்கு நன்மை செய்பவர் நிலையில் நிலைத்திருந்தீர்கள் என்றால், முழு உலகமும் ஒரு சிறிய பந்து மாதிரி தென்படும். எனவே ஒரு நொடியில் சுற்றி வந்து விடுவீர்கள். ஏனென்றால் உயர்ந்த நிலையில் இருக்கிறீர்கள். மற்றபடி சில நேரம் திவ்ய திருஷ்டி மூலம் நடைமுறையில் சுற்றி வருவதாக அனுபவம் ஆகும். அது சூட்சும ஒளிவடிவமான சொரூபம் மூலமாக ஆகும். எப்படி விமானத்தில் சுற்றி வருகிறீர்களோ அதே போல் ஒளிவடிவ உடல் ரூபம் மூலமாக உலகைச் சுற்றி வர முடியும். இரண்டு விதமாகவும் சுற்றி வர முடியும். எப்பொழுது நீங்கள் உலகைப் படைப்பவரின் குழந்தையாகவே இருக்கிறீர்கள் என்றால், படைப்பைச் சுற்றி வருவீர்கள் தான் இல்லையா!

**கேள்வி: பல தடவைகள் யோகாவில் மிக நல்ல நல்ல டச்சிங் (உணர்த்துதல்) ஏற்படுகிறது ஆனால் இது பாபாவின் டச்சிங் தான் என்று எப்படி தெரிந்து கொள்வது?**

பதில்: 1 பாபாவின் டச்சிங் மிகவும் சக்திசாலியாக இருக்கும். மேலும் இது என்னுடைய சக்தியை விட விசேஷ சக்தி என்று அனுபவம் ஆகும்.

2. எது பாபாவின் டச்சிங்காக இருக்குமோ அதில் சகஜமாக வெற்றியின் அனுபவம் ஏற்படும்

3. பாபாவின் டச்சிங்கில் ஏன், என்ன என்ற கேள்வி எழாது. மிகவும் தெளிவாக இருக்கும். எனவே இந்த விசயங்களிலிருந்து இது பாபாவின் டச்சிங் என்று புரிந்து கொள்ளுங்கள்.

**கேள்வி: நாம் புத்தியால் சமர்ப்பணம் ஆகியிருக்கிறோமா அல்லது இல்லையா என்று எப்படி தெரிந்து கொள்வது?**

பதில்: புத்தியால் சமர்ப்பணம் ஆவதில் அர்த்தம் - புத்தி என்ன நிர்ணயம் செய்தாலும் அது ஸ்ரீமத்தின் அனுகூலமாக இருக்கும். ஏனென்றால், புத்தி செய்யும் வேலையே நிர்ணயம் செய்வது, எனவே புத்தியில் ஸ்ரீமத்தைத் தவிர வேறு எந்த விசயமும் வரவே வேண்டாம். புத்தியில் எப்பொழுதும் பாபாவின் நினைவு இருக்கும் காரணத்தினால் இயல்பாகவே அதே நிர்ணய சக்தி இருக்கும். மேலும் அதன் நடைமுறை அடையாளம் அவருடைய முடிவெடுத்தல் சத்யமாக இருக்கும். மேலும் வெற்றியளிப்பதாக இருக்கும். அவருடைய விசயம் அவருக்கே நான் இந்த விசயத்தை மிக நன்றாகச் சொன்னேன் என்று அவர் மனமே ஏற்றுக் கொள்ளும், மற்றவர்களும் ஏற்றுக் கொள்வார்கள். இவருடைய புத்தி மிகவும் தெளிவாகவும், சமர்ப்பணமாகவும் இருக்கிறது என்று அனைவரும் உணருவார்கள். தன் புத்தி மேல் திருப்தி இருக்கும். இது சரியா அல்லது தவறா என்ற கேள்வி இருக்காது.

**கேள்வி: அனேக நிச்சயபுத்தி உடைய குழந்தைகள் 4-5 வருடங்கள் இருந்த பிறகு சென்று விட்டார்கள் ஏன் இப்படி நடக்கிறது? இதை எப்படி நிறுத்துவது?**

பதில்: செல்வதற்கான முக்கியமான காரணம் - சேவையில் மிகவும் பிஸியாக இருக்கிறார்கள் ஆனால் சேவை மற்றும் சுய முன்னேற்றத்தின் சம நிலையை இழந்து விடுகிறார்கள். நல்ல நல்ல குழந்தைகள் யார் நின்று விடுகிறார்களோ அவர்களுடைய ஒரு காரணம் இதுவாக இருக்கும், மேலும் இன்னொன்று அவர்களிடம் ஏதாவது ஒரு முக்கியமான சம்ஸ்காரம் இருக்கும், அதில் தொடக்கத்தி-ருந்தே பலவீனமாக இருப்பார்கள் ஆனால் அதை மறைப்பார்கள், தனக்குள்ளேயே யுத்தம் செய்து கொண்டே இருப்பார்கள். பாப்தாதாவிற்கும் மற்றும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கும் தன்னுடைய பலவீனத்தைத் தெளிவாகக் கூறி அதை அழிப்பதில்லை . மறைக்கும் காரணத்தினால் அந்த நோய் உள்ளுக்குள்ளேயே கொடூரமான ரூபத்தை எடுத்துக் கொண்டே இருக்கிறது. மேலும் முன்னேறிச் செல்வதற்கான அனுபவம் ஆவதில்லை. பிறகு மனமுடைந்து போய் விட்டு விடுகிறார்கள். மூன்றாவது காரணம், அவர்களுக்குள் சம்ஸ்காரம் ஒத்துப் போவதில்லை. சம்ஸ்காரங்களின் மோதல் ஏற்பட்டு விடுகிறது. இப்பொழுது இந்த மாதிரி

நடப்பதை தடுப்பதற்காக சேவை செய்வதின் கூடவே தன் மேல் முழு கவனம் வைக்க வேண்டும். இன்னொன்று யாரெல்லாம் வருகிறார்களோ அவர்கள் பாப்தாதா மற்றும் பொறுப்பாளராக இருக்கும் ஆத்மாக்களின் எதிரில் முற்றிலும் தெளிவாக இருக்க வேண்டும். ஒருவேளை சேவையில் இது மிக அதிகமாக இருக்கிறது என்று அனுபவம் செய்கிறீர்கள் என்றால், தன்னுடைய முன்னேற்றத்திற்கான வழியை முன்பாகவே யோசிக்க வேண்டும் மேலும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கும் தன்னுடைய கருத்தைக் கூற வேண்டும். புதிதாக யார் வருகிறார்களோ அவர்களுக்கு முதலில் இந்த விசயங்களின் மேல் கவனத்தைக் கொண்டு வர வேண்டும். முன்பாகவே தனது சம்ஸ்காரங்களின் சோதனையை செய்ய வேண்டும். ஒருவேளை யாருடனாவது நமது சம்ஸ்காரம் மோதுகிறது என்றால், அவரிடமிருந்து விலகி விடுவது நல்லது. எந்த சூழ்நிலைகளில் சம்ஸ்கார மோதல் ஏற்படுகிறது என்றால், அதிலிருந்து விலகி விடுவதுதான் நல்லது.

**கேள்வி: ஒருவேளை ஏதாவது ஒரு இடத்தில் சேவையின் ரிசல்ட் இல்லையென்றால் அது நம்முடைய குறையா அல்லது நிலம் அப்படிபட்டதா?**

பதில்: முதலிலோ சேவைக்கான அனைத்து வழிகளையும் உபயோகித்து பாருங்கள். ஒருவேளை அனைத்து வகையிலும் சேவை செய்த பிறகு கூட ஒரு ரிசல்ட்டும் இல்லையென்றால், நிலத்தில் (அந்த பகுதியில்) குறைபாடுகள் இருக்கலாம். ஒருவேளை தன்னுடைய ஏதோ குறை இருக்கிறது, அந்தக் காரணத்தினால் சேவை வளரவில்லை என்றால், நம் காரணமாக சேவை நடக்கவில்லை என்று மனம் உறுத்திக் கொண்டே இருக்கும். அந்த மாதிரி நேரத்தில் மற்றவர்களின் சகயோகத்தைப் பெற்று சக்தி கொடுக்க வேண்டும். ஒருவேளை நம்முடைய காரணமாக இருக்கிறது என்றால், அவ்விடத்திலிருந்து உருவாகும் ஆத்மாக்களும் மந்தமாக இருப்பார்கள். தீவிர முயற்சி இருக்காது. நல்லது.

**கேள்வி: தன்னுடைய மற்றும் பிற ஆத்மாக்களின் எண்ணத்தை தீர்ப்பளிக்கும் நீதிபதியாக யார் ஆக முடியும்?**

பதில்: யாருடைய புத்தியின் முள் ஒருநிலைப்பட்டிருக்கிறதோ, எந்தவொரு குழப்பமும் இல்லையோ, தீய எண்ணமற்ற நிலை இருக்கிறதோ யாருடைய வார்த்தைகள் மற்றும் காரியத்தில் அன்பு

மற்றும் சட்டத்தின், அன்பு மற்றும் சக்தியின் சமநிலை இருக்கிறதோ அந்த மாதிரியான நீதிபதி யதார்த்த தீர்ப்பு அளிக்க முடியும். அந்த மாதிரியான ஆத்மா சுலபமாகவே யாரையும் பகுத்தறிய முடியும்.

**கேள்வி: உலகத்து நீதிபதி மற்றும் ஆன்மீக நீதிபதி உங்களுடைய பொறுப்பு என்ன?**

பதில்: உலகத்து நீதிபதி ஒருவேளை தவறான தீர்ப்பு கூறுகிறார் என்றால், ஏதாவது ஆத்மாவின் ஒரு ஜென்மம் அல்லது அந்த ஜென்மத்தின் கொஞ்ச காலத்தை வீணாக இழக்க முடியும். அனேக விதமான நஷ்டத்தை ஏற்படுத்து வதற்கு பொறுப்பாளர் ஆக முடியும் ஆனால் ஆன்மீக நீதிபதி நீங்கள் யாரையாவது பகுத்தறிய முடியவில்லை என்றால், அநேக ஜென்மங்களின் நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்பாளர் ஆகி விடுவீர்கள்,

**கேள்வி: எந்த முக்கிய தாரணையின் ஆதாரத்தில் புத்தி என்ற முள் ஒருமித்த நிலையில் நிலைத்திருக்க முடியும்?**

பதில்: யார் ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலையில் நிலைத்திருப்பாரோ, அவருடைய புத்தி என்ற முள் ஒருமித்த நிலையில் நிலைத்திருக்கும். அவர் தான் யாருடைய ஆசைகளையும் நிறைவேற்ற முடியும். அவர் எதிரில் எப்படிப்பட்ட துடித்துக் கொண்டிருக்கும் தாகமான ஆத்மா வருகிறது என்றால் அவருடைய அடையவேண்டிய ஆசையை பகுத்தறிந்து அதை நிறைவேற்றி விடுவார். அப்படி ஒருமுகப்பட்ட புத்தி உள்ளவர் தான் யதார்த்த மற்றும் முழுமையான தீர்ப்பைக் கொடுக்க முடியும்.

**கேள்வி: ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை எப்பொழுது இருக்க முடியும்?**

பதில்: எப்பொழுது அவரே யுக்தி நிறைந்தவராக ஞானம் நிறைந்தவராக, மேலும் எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பாரோ அப்பொழுது தான் சம்பன்னம் ஆன பிறகுதான் ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை வருகிறது, அப்பொழுது பிராப்தி இல்லை என்று ஒரு பொழுதும் இருக்க முடியாது. அந்த நிலையைத் தான் கர்மாதீத் மற்றும் ஃபரிஷ்தாவின் நிலை என்று கூறுவது. அந்த மாதிரி நிலை

உள்ளவர்தான் ஒவ்வொரு ஆத்மாவையும் பகுத்தறிய முடியும். மேலும் மற்றவர்களுக்கு பிராப்தி செய்விக்க முடியும்.

**கேள்வி: முக்கியமாக எந்த நான்கு சம்மந்தங்களின் ஆதாரத்தில் 4-தாரணைகள் மற்றும் 4-சுலோகன்களை எதிரில் கொண்டு வந்தீர்கள் என்றால் சுலபமாக சம்பன்னமாக விடுவீர்கள்?**

பதில்: தந்தை ஆசிரியர், சத்குரு மற்றும் பிரியதர்ஷன் இந்த நான்கு சம்மந்தங்களின் ஆதாரத்தில் முக்கிய நான்கு தாரணைகள் இருக்கின்றன. ஒன்றோ தந்தையின் சம்மந்தத்தில் கட்டளைப்படி நடப்பவர். ஆசிரியரின் சம்மந்தத்தில் நேர்மையானவர் மற்றும் குருவின் சம்மந்தத்தில் ஆணைப்படி நடப்பவர் மற்றும் பிரியதர்ஷனின் சம்மந்தத்தில் உண்மையானவர். இதன் கூடவே நான்கு சுலோகன்களும் நினைவில் இருக்க வேண்டும். தந்தையின் சம்மந்தத்தில் சுலோகன்மகன் தந்தையை வெளிப்படுத்துகிறார் அதாவது உண்மையான வராகி நிரூபணம் கொடுப்பது ஆசிரியரின் ரூபத்தில் சுலோகன்எதுவரை வாழவேண்டுமோ அதுவரை படிக்க வேண்டும், குருவின் ரூபத்தில் சுலோகன் எங்கு அமர வைப்பீர்களோ, எப்படி அமர வைப்பீர்களோ என்ன கூறுவீர்களோ, எப்படி கூறுவீர்களோ எப்படி நடத்துவிப்பீர்களோ எப்படி தூங்க வைப்பீர்களோ..... மேலும் பிரியதர்ஷனின் ரூபத்தில் சுலோகன் உன்னோடுதான் அமருவேன், உன்னோடு தான் அருந்துவேன் மேலும் உன்னுடனேயே மூச்சுக்கு மூச்சு உடன் இருப்பேன். இந்த அனைத்து விசயங்களையும் எதிரில் கொண்டு வந்து தன்னுடைய முயற்சியை சோதனை செய்தீர்கள் என்றால், சம்பன்னம் ஆகி விடுவீர்கள்.

**கேள்வி: காரியங்கள் செய்து கொண்டே கர்மபந்தனத்திலிருந்து விடுபட்டு இருப்பதற்கான வழி என்ன?**

பதில்: எந்தக் காரியம் செய்யும் பொழுதும் தந்தையின் நினைவில், அன்பில் ஐக்கியமாகி இருங்கள். அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மா காரியம் செய்து கொண்டும் விலகியிருப்பார். கர்மயோகி என்றால் நினைவில் இருந்து கொண்டே காரியம் செய்பவர் எப்பொழுதும் கர்மபந்தனத்திலிருந்து விடுபட்டு இருக்கிறார். காரியம் செய்து கொண்டிருக்கவில்லை, ஆனால் விளையாடிக் கொண்டிருக்கிறோம் என்று அனுபவம் ஆகும். எந்த விதமான களைப்பும், சுமையும் அனுபவம் ஆகாது. கர்மயோகி என்றால் காரியங்களை விளையாடுவது மாதிரி

விலகியிருந்து செய்பவர். அந்த மாதிரி விலகியிருக்கும் குழந்தைகள் கர்ம இந்திரியங்கள் மூலமாக காரியம் செய்து கொண்டே தந்தையின் அன்பில் ஐக்கியமாகியிருக்கும் காரணத்தினால் பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகி விடுகிறார்.

**கேள்வி: எந்த ஆன்மீக லிஃப்ட் மூலமாக ஒரு நொடியில் உயர்ந்த இலக்கை சென்றடைய முடியும்? உயர்ந்த இலக்கு எது?**

பதில்: எண்ணம் தான் உயரே கொண்டு செல்வதற்கும் மற்றும் கீழே கொண்டு வருவதற்குமான ஆன்மீக லிஃப்ட். நிராகாரி (உடலற்ற) நிலையில் நிலைத்து விடுவது தான் உயர்ந்த இலக்கு. இதற்காக எஜமானத் தன்மை என்ற நிலையில் நிலைத்திருந்து எண்ணத்தின் சக்தியை ஒருமுகப்படுத்துவதற்கான பயிற்சி வேண்டும். எப்பொழுது விரும்புகிறீர்களோ, எங்கே விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அப்படி அனைத்து சக்திகளையும் காரியத்தில் ஈடுபடுத்துவது தான் மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலை.

**கேள்வி: தற்சமயம் முழு உலகின் அத்தனை ஆத்மாக்களும் என்ன விருப்பம் வைத்திருக்கிறார்கள்? உலகிற்கு நன்மை செய்வதற்கான சுலபமான வழி என்ன?**

பதில்: தற்சமயம் முழு உலகின் அனைத்து ஆத்மாக்களும் அலைந்து கொண்டிருக்கும் புத்தி ஒரு நிலைப்பட்டு விட வேண்டும் என்ற இந்த விருப்பத்தைத் தான் வைத்திருக்கிறார்கள். மனதின் சஞ்சலம் ஒருநிலைப்பட்டு விட வேண்டும் என்று விரும்புகிறார்கள். உலகிற்கு நன்மை செய்வதற்காக உயர்ந்த எண்ணங்களின் நிலைக்கான பயிற்சி வேண்டும். இந்த ஒருமித்த நிலை மூலம் தான் அனைத்து ஆத்மாக்களின் அலைந்து கொண்டிருக்கும் புத்தியை ஒருநிலைப்படுத்த முடியும்.

**கேள்வி: ஒருமித்த நிலை என்று எதைக் கூறுவது? ஒருமித்த நிலையின் பயிற்சியை யார் செய்ய முடியும்?**

பதில்: ஒருமித்த நிலை என்றால் ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்று அந்த மாதிரி நிரந்தரமாக ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பதற்கான பயிற்சியை, முதலில் யார் வீணான எண்ணங்களை சுத்த எண்ணங்களாக மாற்றி விடுகிறாரோ அவரால் தான் செய்ய முடியும். இன்னொன்று மாயா மூலம் வரக்கூடிய அனேக

விதமான தடைகளை தன்னுடைய ஈஸ்வரிய ஈடுபாட்டின் மூலம் முடித்து விட வேண்டும்.

**கேள்வி: தடைகளைக் கண்டு பயப்படுவதற்கான முக்கிய காரணம் என்ன?**

பதில்: எப்பொழுது ஏதாவது தடை வருகிறது என்றால் முழு ஈடுபாட்டின் சோதனையில் இவை அனைத்தும் வரும் என்று முன்பாகவே பாப்தாதா ஞானம் கொடுத்திருக்கிறார் என்பதை மறந்து விடுகிறீர்கள். தடை கண்டிப்பாக வரும் என்று முன்பே தெரிந்திருக்கும் பொழுது பயப்படுவதற்கு என்ன அவசியம் இருக்கிறது.

**கேள்வி: எந்தக் கேள்வி தடைகளை அகற்றுவதற்குப் பதிலாக முழு ஈடுபாட்டை அகற்றுவதற்கு காரணமாகி விடுகின்றது?**

பதில்: மாயா ஏன் வருகிறது? வீணான எண்ணங்கள் ஏன் வருகின்றன? புத்தி ஏன் அலைகிறது? சூழ்நிலை ஏன் பிரபாவத்தை ஏற்படுத்துகிறது? உறவினர்கள் ஏன் ஒத்துழைப்பு தருவதில்லை? பழைய சம்ஸ்காரங்கள் ஏன் இப்பொழுது வெளிப்படுகின்றன? இந்த அனைத்து கேள்விகளும் தடைகளை அகற்றுவதற்குப் பதிலாக தந்தை மேல் உள்ள ஈடுபாட்டை அகற்றுவதற்கு காரணமாகி விடுகின்றன.

**கேள்வி: தடையற்றவர் ஆவதற்கான வழி என்ன?**

பதில்: தடைகள் வருவதற்கான காரணத்தை யோசிக்காதீர்கள் ஆனால் எவ்வளவு முன்னேறிச் செல்வீர்களோ அந்த அளவு மாயா சோதனை செய்வதற்காக வேறு வேறு ரூபங்களில் வரும். மேலும் இந்த சோதனைகள் தான் முன்னேறிச் செல்வதற்கான சாதனமேயன்றி கீழே தள்ளுவதற்காக அல்ல என்ற பாப்தாதாவின் மஹாவாக்கியத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். காரணத்தை யோசிப்பதற்குப் பதிலாக நிவாரணத்தைப் பற்றி யோசியுங்கள், பிறகு தடையற்றவராகி விடுவீர்கள். ஏன் வந்தது? என்றில்லாமல் இது கண்டிப்பாக வரும் என்ற நினைவில் இருந்தீர்கள் என்றால் சக்தி நிறைந்த சொரூபம் ஆகி விடுவீர்கள்.

**கேள்வி: மிகச் சிறிய தடையில் கேள்வி எழுவதற்கான காரணம் என்ன? சூழ்நிலை ஏன் பிரபாவத்தை ஏற்படுத்துகிறது?**

பதில்: கேள்வி எழுவதற்கான முக்கிய காரணம் -ஞானி ஆகியிருக்கிறீர்கள் ஆனால் ஞான சொரூபமாக ஆகவில்லை எனவே மிகச் சிறிய தடையில் வீணான எண்ணங்களின் க்யூ வரிசை உருவாகி விடுகிறது. மேலும் அந்த க்யூவை அகற்றுவதற்கு அதிக நேரம் எடுத்து விடுகிறது. நாம் நம்முடைய சக்திசாலியான உள் உணர்வு மூலமாக வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்பவர்கள் என்பதை எப்பொழுது மறந்து விடுகிறீர்களோ அப்பொழுது சூழ்நிலை உங்கள் மீது பிரபாவத்தை ஏற்படுத்துகிறது.

**கேள்வி: பாபாவில் தான் உலகமே இருக்கிறது என்ற இதன் அர்த்தம் என்ன?**

பதில்: பொதுவாகவே புத்தி செல்கிறது என்றால் உலகத்தில் தான் செல்லும் இல்லையா? உலகத்தில் இரண்டு பொருட்கள் இருக்கின்றன, ஒன்று நபர், இன்னொன்று பொருள். தந்தையே உலகம் என்றால் அனைத்து நபர்களிடமிருந்து என்ன பிராப்தி ஆகுமோ அது ஒரு தந்தையிடமிருந்து ஆகிறது. மேலும் அனைத்து பொருட்களிடமிருந்து என்னென்ன திருப்தி ஏற்படுகிறதோ அதுவும் தந்தையிடமிருந்து தான் கிடைக்கிறது. அப்படி உலகம் ஆகி விட்டது இல்லையா. சம்மந்தமும் தந்தையோடு, தொடர்பும் தந்தையோடு. அமர்வது, எழுவதும் தந்தையோடு. அப்படி உலகமே தந்தை ஆகி விட்டார் இல்லையா.

**கேள்வி: எதிர்காலத்து 21-ஜென்மங்களுக்காக இராஜ பதவி மற்றும் வள்ளல் தன்மையின் சம்ஸ்காரத்தை எப்பொழுது நிரப்ப முடியும்?**

பதில்: இந்த நேரத்திலிருந்தே! எப்பொழுது அனைத்து ஆத்மாக்களுக்கு தந்தையின் பொக்கிஷத்தை கொடுக்கும் வள்ளல் ஆவீர்களோ, தன்னுடைய சக்திகள் மூலமாக தாகத்தில் மற்றும் துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு உயிர் பிச்சை அளிப்பீர்களோ, வரம் வழங்குபவராகி பிராப்தி ஆகியிருக்கும் வரதானங்கள் மூலமாக அவர்களையும் தந்தையின் நெருக்கமான சம்மந்தத்தில் கொண்டு வருவீர்களோ அப்பொழுது இங்கே உள்ள வள்ளல் தன்மையின் சம்ஸ்காரம் எதிர்காலத்திற்காக இராஜ பதவி அதாவது வள்ளல்தன்மையின் சம்ஸ்காரத்தை நிரப்ப முடியும்.

**கேள்வி: இந்த சங்கமயுகத்தை புருஷோத்தம சங்கமயுகம் மற்றும் அதிமேலான யுகம் என்று ஏன் கூறுகிறீர்கள்?**

பதில்: ஏனென்றால் இந்த நேரத்தில் தான் ஆத்மாவில் ஒவ்வொரு விதமான தர்மத்தின், இராஜ்யத்தின், சிரேஷ்ட சம்ஸ்காரங்களின், சிரேஷ்ட சம்மந்தங்களின் மற்றும் சிரேஷ்ட குணங்களின் அதிமேலான தன்மை இப்பொழுது ரிக்காடிற்கு (இசைத்தட்டிற்கு) சமமாக நிரம்பிக் கொண்டிருக்கிறது. 84-பிறவிகளின் ஏறும் கலை மற்றும் இறங்கும் கலை அந்த இரண்டின் சம்ஸ்காரம் இந்த நேரம் ஆத்மாவில் நிரம்புகிறது. ரிக்கார்டில் பதியும் நேரம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. எனவே இது தான் அனைத்தையும் விட மேலான புருஷோத்தம யுகம்.

**கேள்வி: வெளியுலக இசைத் தட்டில் பதிவு செய்பவர்கள் எந்த மூன்று விஷயங்களின் மேல் கவனம் வைக்கிறார்கள். அதை எல்லைக்கப்பாற்பட்ட பதிவேட்டை பதிவு செய்யும் நீங்களும் கவனம் வைக்க வேண்டும்?**

பதில்: அவர்கள் வாயுமண்டலம், தன்னுடைய உள்உணர்வு மற்றும் குரல் வளம் இந்த மூன்றின் மீது கவனம் வைக்கிறார்கள். ஒருவேளை உள்உணர்வு சஞ்சலமாக இருக்கிறது, ஒருமித்த நிலை இல்லை என்றாலும் குரலில் மற்றவர்களை ஈர்க்கும் சாறு இருக்காது. எந்த விதமான பாடலைப் பாடுகிறார்களோ, அதே ரூபத்தில் நிலைத்திருந்து பாடுவார்கள். எனவே எப்பொழுது எல்லைக்குட்பட்ட வெளியுலக பாடல் பாடுபவர்களும் மற்றும் இசைத்தட்டை நிரப்புபவர்களும் இந்த அனைத்து விஷயங்களிலும் கவனம் வைக்கிறார்கள் என்றால், எல்லைக்கப்பாற்பட்ட பதிவேட்டை பதிவு செய்யும், முழு கல்பத்திற்கான பதிவேட்டை நிரப்புபவர்களும் இந்த அனைத்து விஷயங்களின் மீது கவனம் வைக்க வேண்டும். ஒருவேளை இசைத்தட்டைப் பதிவு செய்து கொண்டிருக்கும் போதே உற்சாகத்திற்குப் பதிலாக சோம்பல் வந்து விடுகிறது என்றால் இசைத்தட்டு எப்படி பதிவாகும். எனவே எப்பொழுதாவது தன்னால் நிரப்பப்பட்ட முழு நாளின் பதிவேட்டை சாட்சியாக இருந்து, இது சரியாக பதியப்பட்டு இருக்கிறதா என்று பாருங்கள்.

**கேள்வி: ஆத்மாவின் பலமற்ற நிலை எந்தவொரு விஷயத்தினால் நிரூபனமாகிறது?**

பதில்: ஒருவேளை தன்னை சோதனை செய்யும் பொதுவான நியமமும் இதுவரையிலும் மறந்து விடுகிறது, அமிர்தவேளையில் தன்னுடைய தினசரி காரியங்களை நிச்சயம் செய்வதில்லை, தன்னைத் தானே ஈஸ்வரிய நியமம் மற்றும் மரியாதைப்பூர்வமாக நடத்துவிக்க

முடியவில்லை என்றால் இதன் மூலம் ஆத்மா இதுவரையிலும் பலமற்றதாக இருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. அவர்கள் மரியாதைப் பூர்வமான உலக இராஜ்யத்தை எப்படி நடத்த முடியும்.

**கேள்வி: இப்பொழுது எந்த மாதிரியான நேரம் நடந்து கொண்டிருக்கிறது? பிறகு எந்த மாதிரியான நேரம் வரும்?**

பதில்: இப்பொழுது பிராப்தியின் நேரம் நடந்து கொண்டிருக்கிறது, கொஞ்ச காலத்திற்குப் பிறகு வேதனை அடையும் நேரம் வரும். இப்பொழுது தந்தையின் அன்பு நிறைந்த சொரூபம் பிறகு தலைமை நீதிபதியின் ரூபம் ஆகி விடும். நீதிபதியின் எதிரில் எவ்வளவு தான் அன்பிற்குரிய உறவினராக இருந்தாலும் சட்டம், சட்டம் தான். இப்பொழுது அன்பிற்கான நேரம் பிறகு சட்டத்திற்கான நேரம் வந்து விடும். பிறகு அந்த நேரம் லிஃப்ட் கிடைக்க முடியாது. எனவே அனைத்து குழந்தைகளுக்கும் இருக்கும் கொஞ்ச நேரத்திற்குள் வெகு காலத்தின் பிராப்தியை உருவாக்கி விடுங்கள் என்று மீண்டும் பாப்தாதா கூறுகிறார். நேரத்தின் காத்திருத்தலில் அலட்சியமானவராக இருக்காதீர்கள்.

**கேள்வி: சத்கதியை அடைவதற்காக எந்த அதிவேகத்தைக் கடைபிடிப்பது அவசியமாகும்?**

பதில்: என்னென்ன காரியம் செய்கிறீர்களோ அந்த அனைத்து காரியங்களையும் ஒரு விநாடியில் செய்யுங்கள். செய்வோம், திட்டத்தை உருவாக்குவோம்... என்ற இது அதிவேகம் இல்லை. யார் திட எண்ணத்தை வைத்து செய்யத் தான் வேண்டும், ஆகத் தான் வேண்டும் என்று உறுதிமொழி எடுக்கிறார்களோ அவர்களைத் தான் தீவிர முயற்சியாளர் என்று கூறுவது. அந்த மாதிரி அதிவேகம் உள்ளவர்கள் தான் சத்கதியை அடைய முடியும்.

**கேள்வி: ஏர்கண்டிஷன் (குளிர்சாதன வசதியுள்ள) இருக்கையை முன்பதிவு செய்வதற்கான முறை என்ன?**

பதில்: ஏர்கண்டிஷன் இருக்கையை முன்பதிவு செய்வதற்கான தந்தை என்ன என்ன கண்டிஷன்கள் (நிபந்தனைகள்) கூறியிருக்கிறாரோ அதன்படி எப்பொழுதும் நடந்து கொண்டே இருக்க வேண்டும். ஒருவேளை ஏதாவது கண்டிஷனை அமல் படுத்தவில்லை என்றால் ஏர்கண்டிஷன் இருக்கை கிடைக்காது. முயற்சி செய்வோம்.... என்று யார்

கூறுகிறார்களோ அந்த மாதிரி முயற்சி செய்பவர்களுக்கும் இந்த இருக்கை கிடைக்க முடியாது.

**கேள்வி: எந்த ஒரு குணம் பரமாத்ம காரியத்திலும் விவஹாரத்திலும் அனைவரின் பிரியமானவர் ஆக்கி விடுகிறது?**

பதில்: ஒவ்வொருவரையும் முன்னேற்றுவதற்கான குணம் அதாவது முதலில் நீங்கள் என்ற குணம் பரமாத்மா காரியம் மற்றும் விவஹாரம் இரண்டிலேயுமே அனைவரின் பிரியமானவர் ஆக்கி விடுகிறது. தந்தைக்கும் இந்த முக்கிய குணம் தான் இருக்கிறது. குழந்தைகளே முதலில் நீங்கள் என்று தந்தை கூறுகிறார். அந்த மாதிரி இதே குணத்தில் தந்தையைப் பின்பற்றி நடங்கள்.

**கேள்வி: காலப்போக்கில் முயற்சி செய்வதில் தடை வருகிறது என்றால் என்ன செய்ய வேண்டும்? தடை வருவதற்கான காரணம் என்ன இருக்கும்?**

பதில்: அனேக விதமான சோதனை எதிரில் வருகிறது என்றால், வந்த சோதனையை எதிர்கொள்வதற்கு சக்தி இல்லாத காரணத்தினால் முயற்சி செய்வதில் தடை வந்து விடுகிறது. அந்த நேரம் மற்றவர்களின் உதவியைப் பெறுவது அவசியமாக இருக்கிறது. எப்படி காரில் பாட்டரியின் சார்ஜ் குறைந்து விட்டது என்றால், அதுவாக இயங்கத் தொடங்க முடியாது. அப்பொழுது மற்றவர்களிடமிருந்து உதவி பெற்று தள்ளி விடச் சொல்லி வண்டியை ஸ்டார்ட் செய்வார்கள். எனவே அந்த ஆத்மா மேல் இவர் மூலம் எனக்கு உதவி கிடைக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றால், அவரிடம் கொஞ்சம் உதவி பெற்று முன்னேறிச் சென்று விட வேண்டும். முத-ல் அவருக்கு விசயம் இந்த மாதிரி என்று தெளிவாகக் கூற வேண்டும், பிறகு உதவி கிடைப் பதினால் முன்னேறிச் செல்வீர்கள். ஏனென்றால் நடப்பது என்னவென்றால், எப்பொழுது அந்த மாதிரி நிலை வருகிறதோ என்றால் அந்த நேரம் நேரடியாக தந்தையிடமிருந்து உதவி பெறுவதற்கான தைரியம் இருப்பதில்லை. எனவே ஸ்தூலமாக மற்றவர்களிடமிருந்து கொஞ்சம் உதவியைப் பெற்றார்கள் என்றால், பிறகு நேரடியாகப் பெறுவதற்கு உதவி கிடைத்து விடும்.

**கேள்வி: சங்கமயுக பிராமண குழந்தைகள் எப்பொழுதும் எந்தக் காரியத்தில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும்?**

பதில்: சக்திசாலி ஆக வேண்டும். மேலும் மற்றவர்களையும் சக்திசாலி ஆக்க வேண்டும். இந்தக் காரியத்தில் எப்பொழுதும் முழுமையாக ஈடுபட்டிருங்கள். ஏனென்றால் வீணானதையோ அரைக் கல்பம் செய்தீர்கள். இப்பொழுது நடக்கும் நேரமோ சக்திசாலி ஆவதற்கும் மற்றும் ஆக்குவதற்குமானது. எனவே வீணான எண்ணம், வீணான வார்த்தை, வீணான காரியம் அனைத்திற்கும் முடிவு கட்டி, முற்றுப்புள்ளி இட வேண்டும். பழைய கணக்கு முடிந்தது. எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பது என்பது தான் சேமிப்பு செய்வதற்கான சாதனம். ஏனென்றால் வீணானவை மூலம் நேரம், சக்திகள் மற்றும் ஞானத்தின் நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது.

**கேள்வி: பாப்தாதாவின் கழுத்தில் எந்தக் குழந்தைகள் மாலை ரூபத்தில் அணியப்பட்டிருப்பார்கள்?**

பதில்: யாருடைய கழுத்து அதாவது வாய் மூலம் தந்தையின் குணம், தந்தையால் கூறப்பட்ட ஞானம் மற்றும் தந்தையின் மகிமை வெளியாகிக் கொண்டே இருக்கிறதோ, என்ன பாபா கூறினாரோ அதுவே வாயிலிருந்து வெளியாகிக் கொண்டிருக் கிறதோ, அந்த மாதிரிக் குழந்தைகள் கழுத்தில் மாலையாகி, உருண்டு கொண்டிருப்பார்கள். நல்லது ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்